# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பதினொன்று

## (VOLUME ELEVEN)

**1952 - 1953**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்தவர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

**ஸ்ரீ பாவ் கல்சூரி**.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரீட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு**:

கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
பூனா, அக்டோபர் 2022
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

# கல்கி அவதாரம்

## (முன்னுரை: லாறன்ஸ் ரீட்டர் - பாகம் 01/02)

இறை உணர்வை அடைந்தவர்களைத் தவிர, வேறு எவராலும் இறைவனை அறிய முடியாது. பூமியில் வாழும் 56 இறை நிலையை அடைந்த மஜ்ஜூப்களுக்கு மட்டுமே இறைவனின் இறுதி உறுதிப்பாட்டின் அர்த்தம் தெரியும்; ஆனால், பெரும்பாலும் அவர்கள் மனித குலத்திலிருந்து விலகி, இறைவனின் ரகசியத்தை மூடி மறைக்கின்றனர். இறை நாட்டம் மிக்கவர்கள் இறைவனைத் தேடினாலும், இறைவன், மனதிலிருந்து மறைக்கப்பட்ட ஒரு மர்மமாகவே இருக்கிறார். அனைத்திற்கும் அப்பாற்பட்ட இறைவனின் முன்னால் மனம் விரக்தியடைகிறது. எந்த எண்ணமும் அவரை ஊடுருவ முடியாது. எந்த வார்த்தையும் அவரை விவரிக்க முடியாது. ஆழ் இதயத்திலிருந்து எழும் வார்த்தைகளைத் தவிர, வேறு எதுவும் அவரைச் செவிமடுக்கச் செய்யாது. எனவே, ஆன்மாவைப் பற்றிய அறிவைப் புகட்ட, இறைவன் தன்னை மனிதனுக்கு வெளிப்படுத்த வேண்டும். இறைவன் தன்னை அவதார புருஷர் அல்லது நபியின் வடிவத்தில் வெளிப்படுத்துகிறார்; இறைவன் மனித நிலைக்கு இறங்கி வந்து, மனிதன் புரிந்துகொள்ளும் மொழியில் பேசுகிறார். ஆனால், பின்னர் அவர் மனித உருவத்தை நிராகரிக்கும்போது, அவர் பேசிய அல்லது பேசாத வார்த்தைகள் மேலும் அதிக இரக்க உணர்வைத் தூண்டும் விதத்திலும், மர்மமாகவும் இருக்கும்.

படைப்பு என்பது மனதின் விளைவு என்றால், மேலும் படைப்பில் அனைத்தும் கனவின் ஒரு பகுதியாக இருந்தால், கனவில் தோன்றும் அனைத்தும் ஓர் அடையாளச் சின்னமாக இருப்பதோடு, ஒவ்வொரு சின்னத்திற்கும் சில ரகசிய அர்த்தமும் இருக்கும். அப்படியென்றால், அவதார் மெஹர் பாபாவின் இந்த வாழ்க்கை வரலாறு போன்ற மிகப்பெரிய படைப்பு எதைக் குறிக்கிறது? மனித சிந்தனையின் வரலாற்றில் அது அடையாளச் சின்னமாக எதைக் குறிக்கிறது? கடவுள் மகத்தானவர் என்பதால் இது கடவுளின் மகிமையை அடையாளப்படுத்துகிறது. இது பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றுமோர் அம்சம் என்னவென்றால், தனிப்பட்ட, நெருக்கமான நிலையில் பலவிதமான வெவ்வேறு ஆன்மாக்கள் கடவுளுடன் நேரடித் தொடர்பில் இருப்பது. இருந்தாலும், காலப்போக்கில், ஒருமுறை-மனித-வாழ்வின் சம்பவங்களும் சந்திப்புகளும் கதைகளாகவும், கதைகள் உவமைகளாகவும், உவமைகள், கடவுளைத் தேடுவதில் துன்பப்படும் ஆன்மாக்களுக்கு ஆறுதல் சொல்லும் பாடங்களாகவும் மாறுகின்றன. அவதார புருஷர் ‘**கற்பிக்க வரவில்லை**, **விழிப்புறச் செய்ய**’ வருகிறார் எனும்போது, ஒவ்வொரு நிகழ்வும்

மனிதனில் தெய்வீகத்தை எழுச்சியுறச் செய்வதற்கான தூண்டுதலின் மற்றுமோர் அடையாளச் சின்னமாகும், தனிமனித ஆத்மா தனது நித்திய அடிமைத்தனத்திலிருந்தும், பிரபஞ்சத்தின் பொறுப்பிலிருந்தும் எழுகிறது - இது அவதார புருஷர் சிலுவையில் அறையப்படுவதன் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது.

மானிடனின் நலன் கருதி மெஹர் பாபா, அவர் தம் எலும்புகளை, தன்னிச்சையாக முன்வந்து உடைத்து, இரத்தம் சிந்தியதன் மூலம், அவர் சிலுவையில் அறையப்பட்டதற்கு நிகரான சோதனைகள், இங்கு அதிகாரபூர்வமான சான்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவரது உடற்காயம் ஓர் ஆழமான மற்றும் வேதனைக்குரிய விஷயத்தைக் குறிக்கிறது, ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அது, அவரது அன்பைக் குறிக்கிறது. உலகில் வாழும் மனிதகுலத்தின் அனைத்து மன மற்றும் உடல் ரீதியான துன்பங்களின் முழு தாக்கத்தையும் அவர் தாங்கிக்கொள்கிறார், ஏனென்றால் அவர் கடவுள் நேசிப்பதைப் போல நேசிக்கிறார். ஒவ்வொரு உயிரையும் நேசிப்பவர் அவர் ஒருவரே என்பதால், ஒவ்வொரு உயிரின் துன்பத்தையும் அவர் தானே ஏற்றுக்கொள்கிறார், மேலும் அது, மனித இயல்புக்கு அப்பாற்பட்ட தியாகச் செயல்களால் அடையாளப்படுத்தப்படுகிறது. அவர் தனது சொந்த இரத்தத்தை சிந்த வேண்டும். ஒவ்வொருவரின் துன்பத்தை உணரவும், சரிசெய்யவும், அவர் தனது எலும்பை உடைக்க வேண்டும், எனவே அவை அனைத்தும் நல்ல பலனை அளிக்க வல்லது. எல்லா உயிர்களின் நலனுக்காகவும், அவரது பணிக்காகவும் தனது உடல் மற்றும் ஆரோக்கியத்தை தியாகம் செய்தது, அவரை சிலுவையில் அறைவது போன்ற கடினமான சோதனையாகும், ஆனால் இந்த நேரத்தில் அவர் கலங்கவோ, எவரையும் கண்டிக்கவோ இல்லை. அவர் நம்மை நேசிக்கவில்லை என்றால், பிரபஞ்சத்தில், சிலுவையில் அறையப்படுவது போன்ற சோதனையை அவர் தாங்க மாட்டார். அவர் நம்மை நேசிக்கவில்லை என்றால், இத்தகைய சிரமங்களையும், சோதனைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டிய தேவையுமில்லை. அவர் நம்மை நேசிக்கவில்லை என்றால், அவர் நமது நிலைக்கு இறங்கி வந்து, பரிணாம வளர்ச்சியின் விளைவுகளையும், அதன் துணை விளைவான நமது மிருகத்தனமான அறியாமையின் மனப்படிவங்களையும் தம் மீது எடுத்துக் கொள்ள மாட்டார்.

நாம் வாழும் இந்த யுகம் **கலியுகம்** என்று அழைக்கப்படுகிறது. இது அழிவு, நோய் மற்றும் துன்மார்க்கத்தின் நீண்ட நெடிய காலம். மனிதன் அறிந்த ஒவ்வொரு தீமையும் உலகை அழிக்கிறது. இயற்கைக்கு மாறான ஒவ்வொரு அநாகரீகமான செயல்முறையும் தொடர்கிறது. அறியாமை மேலோங்கி நிற்கிறது. உந்துணர்வு ஒரு குழப்பமான பிரச்சினையாகத் திகழ்கிறது. மனித

உணர்வு செயற்கைத் தன்மை மிக்கதாகத் தெரிகிறது. போதைப்பொருள் மனதின் அறிவுத்திறனை சிதைக்கிறது. மனித மனம் வசியப்படுத்தபட்டு இயந்திரத்தனமாகச் செயல்படுகிறது. உண்மைப்பொருள் தவறாகச் சித்தரிக்கப்படுகிறது. ஊழல் நிறைந்த அதிகாரம், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல சமரசம் செய்துகொள்ளத் தூண்டுகிறது. பொய்யும் புரட்டும் வரலாற்றுக் கதைகளாகக் கற்பிக்கப்படுகிறது. சடங்கு சம்பிரதாயங்கள் உண்மைப்பொருளாக பாவிக்கப்படுகின்றன. மாயைகள் உருப்பெற்று பின்னர் அதன் மதிப்பை நிர்ணயிக்கும் காரணி ஆகின்றன. உண்மையை அறிந்தவர்கள், அது (உண்மைப்பொருள்) கேலிக்கூத்தாக மாறுவதைத் தடுக்க அதை வெளிப்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்கிறார்கள். உண்மைப்பொருள் வெளிப்படும் போது, அதை அழிக்க வன்முறை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் உண்மைப்பொருள் இல்லாமல், மனிதனின் சுய இயல்பு சிதைந்து, உண்மையில், அவன் தனது அர்த்தத்தை இழக்கிறான், அவன் பிரபஞ்சத்தில் தனது வரையறுக்கும் பங்கை இழக்கிறான். உலகில், நடைமுறையில் கடவுளைக் கண்டுகொள்ள முடியாத பட்சத்தில், கடவுள் உலகில் அவதரிக்க வேண்டும், உண்மையை நிலைநாட்ட அவதார புருஷர் அவரது தெய்வீகத்தை வெளிப்படுத்த வேண்டும். ‘தசாவதாரங்களில்’ (பத்து அவதாரங்கள்) பல ஆண்டுகளுக்கு முன்பே மொழியப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள்:

"கல்கி அவதாரத்தை வணங்குகிறேன்.
இந்த பயங்கரமான பாவம் நிறைந்த கலி யுகத்தில்
யார்தான் இன்னும் வராதவர்,
நிவேதனங்கள் போன்ற எல்லா மத சடங்கு
சம்பிரதாயங்களும் இல்லாத ஒருவர்,
வெள்ளைக் குதிரையில் சவாரி செய்பவர்,
கொடிய வாளை கையில் கொண்டிருப்பவர்,
மேலும் துன்மார்க்க விசுவாசிகள் நிறைந்த கூட்டத்தின்
அழிவை வேறு யார்தான் ஏற்படுத்துவார்!”

# நிகழ்வுகளின் காலவரிசை

1952
- பிப்ரவரி **13,** பாபா, 'புது வாழ்வு' தொடங்கியதிலிருந்து முதல் முறையாக மெஹராபாத்திற்கு விஜயம்,

1952
- பிப்ரவரி **17 - 22,** அமெரிக்க விஸா தொடர்பாக மும்பை பயணம்
- மார்ச் 21, 'சிக்கலான சுதந்திர வாழ்வின்' முதல் நாள் - சுற்றறிக்கை வெளியீடு

1952
- ஏப்ரல் **18 - 21,** மெஹர் பாபா, 6 பெண் மண்டலி, தொடர்ந்து **ஏப்ரல் 20**, 5 ஆண் மண்டலி அமெரிக்கா பயணம் - **மர்டில் பீச், தெற்கு கரோலினா** வருகை

,

1952
- மே 9, **'மர்டில் பீச் மெஹர் ஆன்மீக மையம்'** அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

1952
- மே **20,** மெஹர் பாபா பெண் மண்டலியுடன் இரண்டு கார்களில் - **ஜூன் 6** அன்று ஸான் ஃபிரான்சிஸ்கோ சென்று, **ஜூன் 10**ஆம் நாள் மர்டில் பீச்சிற்குத் திரும்பி....

..... வரும் பயணத்தைத் தொடங்கப் போவதாகத் திட்டம் வகுக்கப்பட்டது.

1952
- மே **21 - 23,** கொலம்பியா, மர்ஃபி, டென்னசி - மெம்ஃபிஸ், க்ளீவ்லேண்ட், சட்டனூகா, ஆர்கன்ஸாஸ் - ஸெர்சி வழியாக ஓஸர்க் வருகை.

1952
- மே **24,** **ஒக்லஹோமா** - லிங்கன் கவுண்டி, சாலை எண் 62, **பிராக்** நகரில் கார் விபத்து.

1952
- ஜூன் **4 - 8,** மெஹர் பாபா, மர்டில் பீச், **யூபான் டுன்ஸ்** வருகை.

1952
- ஜூன் **17,** **'மறுசீரமைக்கப்பட்ட ஸுஃபியிஸம்'** குறித்த சுற்றறிக்கை வெளியீடு

1952
- ஜூலை **2**, மெஹர் பாபா மர்டில் பீச் மையத்திற்கு இறுதி விஜயம்

1952
- ஜூலை **14 - 15**, மெஹர் பாபா மண்டலியுடன் ஃபுளாரன்ஸ் நகரிலிருந்து ரயிலில் **ஸ்கார்ஸ்டேல் & நியூயார்க்** பயணம்.

1952
- ஜூலை **30 - 31,** மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் **நியூயார்க்** நகரத்திலிருந்து வான்வழி **லண்டன்** பயணம்.

1952 • ஆகஸ்ட் 6, லண்டன் - ஸூரிச் பயணம், லோகார்னோ வருகை

1952 • ஆகஸ்ட் 21 - 23, பாரிஸிலிருந்து கராச்சி வழியாக மும்பை, மெஹராஸாத் வருகை.

1952 • ஆகஸ்ட் 31, மெஹராபாத், அஹமதுநகர் மண்டலியுடன் பாபாவின் சந்திப்பு அக்டோபர் 5, ஆந்திரா, ஹமீர்பூர் சுற்றுப்பயண நிர்வாகிகளுடன் சந்திப்பு.

1952 • அக்டோபர் 6, பாபாவின் மண்டலி **ஜால் கேரவாலா** இறைவனடி சேர்ந்தார். நவம்பர் 1, பாபா மெஹராபாத் விஜயம், மண்டலியுடன் சந்திப்பு.

1952 • நவம்பர் 1 - 6, '**அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு**' குறித்த மெஹர் பாபாவின் விளக்கங்களும் பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகளும்.

1952 • நவம்பர் 5, மெஹராவின் தாயார் **தௌலத்மாய்**, 76 வயதில், நாசிக் நகரில் காலமானார்.

1952 • நவம்பர் 6 - 8, மெஹர் பாபாவின் மண்டலி மற்றும் அன்பர்களுடன் '**அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு**' குறித்த **மூன்று நாள் சிறப்புக் கூட்டம்**.

1952 • நவம்பர் 14 - 16, 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' பயணம் - ஸக்கோரி, ஷிர்டி, பூனா, மும்பை, கான்பூர் வழியாக **ஹமிர்பூர்** வருகை

1952 • நவம்பர் 18 - 27, அனல் பறக்கும் **ஹமிர்பூர் சிறப்பு தரிசனம்**.

1952 • நவம்பர் 28 - டிசம்பர் 5, ஹமிர்பூரிலிருந்து ஜான்சி வழியாக **டெல்லி** பயணம், தரிசனம் நிறைவு செய்து மெஹராஸாத் வருகை.

1952 • டிசம்பர் 12 - 24, **குல்தாபாத்** பயணம் - மன்மாட் வழியாக ரயிலில் பயணித்து **பத்னேரா**, **அம்ராவதி** தரிசன நிகழ்ச்சி - மெஹராஸாத் வருகை.

1952 • டிசம்பர் 29 - ஜனவரி 2, **ஸாவ்னேர்** பயணம் - பிரம்மாண்டமான தரிசன நிகழ்ச்சியைத் தொடரந்து **நாக்பூர்** வருகை

1953
• ஜனவரி 2 - 4, **நாக்பூர்** கீதா கோயில் தரிசன நிகழ்ச்சி - **ஜால் கேரவாலா** சமாதி மற்றும் **தாஜுதீன் பாபா** சமாதி விஜயம்.

1953
• ஜனவரி 4 - 11, இரகசிய **அலஹாபாத்** பயணம் - **'மஸ்த்' தொடர்பு** - **கும்பமேளா**வில் சாதுக்கள் மற்றும் மஹான்களுக்குத் தலைவணங்குதல்.

1953
• ஜனவரி 11 - 14, அலஹாபாத்திலிருந்து ரயில் வழியாக **மதராஸ்** வருகை- '**மஸ்த்**' தொடர்பு.

1953
• ஜனவரி 16 - 30, **ஆந்திர பிரதேஷ் பயணம்** - விஜயவாடா - தாடேபள்ளிக்கூடம் - பெண்டபடு - பிப்பரா - பெனுகொண்டா - கப்பாவரம் - நிடாடவோலே - கொவ்வூர் -

ராஜமுந்திரி - தௌலேஸ்வரம் - ஏலூரு ஆகிய இடங்களில் அனல் பறக்கும் சிறப்பு தரிசன நிகழ்ச்சிகளை நிறைவு செய்து மெஹராஸாத் வருகை.

1953
பிப்ரவரி 11, மெஹர் பாபாவின் 59ஆவது பிறந்தநாள்; 14ஆம் நாள் குஷ்ரு குவார்ட்டர்ஸில் தரிசன நிகழ்ச்சிவருகை

1953
• பிப்ரவரி 16 - 18, பாபா, பெண் மண்டலியுடன் மும்பை வழியாக ரயிலில் **டெஹ்ரா டூன்** பயணம்.

1953
• மார்ச் 1 - 2, ரிஷிகேஷ் ‘கோகல் காட்’டில் அமைந்த ஷாந்தி கோட்டியில் தங்கினர் - சுவாமி சிவானந்தாவுடன் சந்திப்பு.

1953
• மார்ச் 2 - 5, ரிஷிகேஷ், ஹரித்வார், கன்கல், நஜிதாபாத், முஸாஃபர்நகர், ஸஹாரன்பூர் மஸ்த், மஹான்கள் தொடர்பு - டெஹ்ராடூன் வருகை.

1953
• மார்ச் 7, 1924 முதல் யு.எஸ்.எஸ்.ஆர். அதிபராக இருந்த, ரஷ்ய சர்வாதிகாரி ஜோஸப் ஸ்டாலின் மாஸ்கோவில் தற்செயலாகக் காலமானார்.

1953
• மார்ச் 23, ராம நவமி பொது விடுமுறை நாள் - தரிசன நிகழ்ச்சி விளம்பரப்படுத்தப்பட்டது - 2500 நபர்கள் பங்கெடுத்தனர்.

1953
• மார்ச் 24, **ஸஹாரன்பூர் ‘கம்பெனி பாக்’ (தோட்டம்) - 1001 ஏழை எளிய மக்களுக்கு நுழைவுச் சீட்டுகள் வழங்கி சிறப்பு தரிசனம்.**

1953
• **தொடரும்....**

# பொருளடக்கம்

பூனா & மும்பை ........ 3

மர்டில் பீச், தெற்கு கரோலினா ........ 19

பிராக், ஒக்லஹோமா ........ 88

ஸ்கார்ஸ்டேல் & நியூயார்க் ........ 108

லண்டன் & லொக்கார்னோ ........ 132

அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' மெஹராபாத் கூட்டங்கள் ........ 147

ஹமிர்பூர் தரிசனம் ........ 223

டெல்லி தரிசனம் ........ 257

அம்ராவதி, ஸாவ்னேர் & நாக்பூர் ........ 268

இரகசிய பயணம் - அலஹாபாத் & மதராஸ் ........ 297

ஆந்திர பிரதேஷ் தரிசனம் ........ 304

மெஹராஸாத், டெஹ்ராடூன் & ரிஷிகேஷ் ........ 337



மெஹர் பாபா - மும்பை தரிசன நிகழ்ச்சி

# பூனா & மும்பை

**(Poona & Mumbai)**

1952, **பிப்ரவரி** 13 புதன்கிழமை அன்று, பாபா, பெண் மண்டலியுடன், புது வாழ்வு தொடங்கியதிலிருந்து முதல் முறையாக, மெஹராபாத்திற்கு விஜயம் செய்து, தொடர்ந்து அடுத்த நாளும் சென்றார். அங்குத் தங்க அனுமதிக்கப்பட்டவர்கள் பாபாவைப் பார்த்து ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் ஆகிவிட்டன. பிப்ரவரி 15ஆம் தேதி, பாபா, மெஹராபாத்தின் மேலாளராக பாதிரியை நியமித்த அதேவேளையில், மெஹராஸாத்தின் மேலாளராக காக்கா பாரியா மீண்டும் நியமிக்கப்பட்டார். புது வாழ்வின் காலகட்டத்தில், பாதிரி மெஹராஸாத்தில் இருந்தபோது, சிது, மெஹராபாத்தின் மேலாளராக இருந்தார்.

ஏற்கனவே அறிவித்தபடி, பாபாவின் ஏகாந்தவாசம் பிப்ரவரி 16ஆம் நாள் முற்றிலுமாக முடிவடைந்த நிலையில், அவர் பிரதான வீட்டில் அமைந்த தனது அறையில் மீண்டும் தங்கத் தொடங்கினார். பிப்ரவரி 17 அன்று, மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் ஆகியோருடன் பாபா, நரிமனின் காரில் மெஹராஸாத்திலிருந்து மும்பைக்குப் புறப்பட்டார். மெஹர்ஜியின் காரில் மெஹர்ஜி, நரிமன், கிட்டி, ரானோ ஆகியோர் பயணம் செய்தனர். வழியில், பூனாவில் பிந்த்ரா ஹவுஸில் சிறிது நேரம் நின்ற வேளையில், ஒரு சிறிய தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. பாபாவும் பெண்மணிகளும் அமெரிக்க பயணத்திற்கான விஸாவைப் பெறும் நோக்கத்தில் மும்பைக்குச் சென்று கொண்டிருந்தனர். பாபாவுடன் மேற்கு நோக்கிச் செல்லவிருந்த டாக்டர் டான், டாக்டர் நீலு, ஆதி சீனியர், குஸ்தாஜி ஆகியோரும் ஸரோஷுடன் அவரது காரில் மும்பைக்குச் சென்றனர்.

பாபா தரிசன நிகழ்ச்சியை நிறைவு செய்து, காரில் புறப்பட்ட வேளையில், திடீரெனக் காரை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார். சிறிது நேரத்தில், இரண்டு பக்தர்கள் காரை நோக்கி, மூச்சிரைக்க ஓடி வந்து, தரையில் விழுந்து வணங்கினர். தரிசனத்திற்கு வர சற்று காலதாமதமானதால், பாபா வெளியேறியதைக் கண்டதும், அவர்கள் எப்படியேனும் பாபாவைக் கண்டுகொள்ளும் நம்பிக்கையில் அவரது காரை நோக்கி விரைந்தனர்; அவர்களுக்காகத்தான் பாபா காரை நிறுத்தினார்.

மும்பையில், பாபாவும் பெண் மண்டலியும் ஆஷியானாவிலும், நரிமன், ஆதி சீனியர் இருவரும் நௌரோஜியின் இல்லத்திலும் தங்கினர்; தீனா தலாட்டியின் இல்லத்தில் குஸ்தாஜி, மெஹர்ஜியுடன் டாக்டர் டான் மற்றும் டாக்டர் நீலு தனது உறவினர்களுடன் தங்கினர். அனைவரும் அமெரிக்கத் தூதரகத்திற்குச் சென்று, விஸாவுக்கான ஏற்பாடுகளை முறையாகச் செய்து

முடித்தனர். ஜுஹு கடற்கரையில் அதிகாலை நடைப்பயிற்சி மேற்கொண்டதோடு, அவர்கள் மீன் கண்காட்சியத்திற்கும் சென்று, மூன்று திரைப்படங்களையும் பார்த்தனர். பாபா, விஸாக்களுக்காகக் காத்திருந்த வேளையில், ஆஷியானாவில் அவரைப் பின்பற்றும் 50 பெண்மணிகளுடனான நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். விஸா கிடைக்கப்பெற்ற 22ஆம் நாள் காலை பாபாவும் பெண் மண்டலியும் மெஹராஸாத் திரும்பினர்.

பாபா இன்னும் மூலநோய் மற்றும் வெடிப்புகளால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார், எனவே பிப்ரவரி 26 அன்று காலை 11:00 மணிக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அஹமதுநகர் பொது மருத்துவமனையில் நடத்தப்பட்ட அறுவை சிகிச்சைக்காக டாக்டர். ஜோக்லேக்கர் மும்பையிலிருந்து பிரத்யேகமாக வரவழைக்கப்பட்டார். ஒருமுறை, அறுவைசிகிச்சை வேளையில், பாபா அவசரப்பட்டுக் கொண்டிருந்ததால், மருத்துவர் தற்செயலாக ஒரு சூடான ப்ராக்டோஸ்கோப்பை பாபாவின் ஆசனவாயில் வைக்க நேர்ந்தது. மயக்க மருந்து எதுவும் கொடுக்கப்படாமல் இருந்தும், பாபா சிறிதளவு சத்தம் கூட எழுப்பாததால், டாக்டர் ஜோக்லேக்கர் மிகவும் நெகிழ்ந்து போனார்; மேலும் அவரது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. எரச்சின் இதயமும் நெகிழ்ந்தது, பாபாவின் சகிப்புத் தன்மையைக் கண்டு எரச் பெரிதும் வியந்தார்.

மருத்துவமனையில் இருந்த டாக்டர் கோஹெர், டாக்டர் டான் இருவரும் வாயடைத்து திகைப்பில் ஆழ்ந்தனர். பாபா அவரது தனிப்பட்ட அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் (அந்த அறையை முந்தைய நாள் விலூ, ஃபிரீனி இருவரும் சிறப்பாக சுத்தம் செய்திருந்தனர்). மாலை 4:00 மணிக்கு, ஆதி சீனியர் ஓட்டிச்சென்ற மருத்துவ ஊர்தியில் பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்; அங்கு, டாக்டர் கோஹெர் கீழே படுக்கையறையில் அவருக்குச் சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். பாபாவுக்கு உதவ டாக்டர் டான் இரவு முழுவதும் உடனிருந்தார், பாதிரியும் சில நாட்கள் உதவியாக இருந்தார்.

பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்து கால்களை நீட்டியிருந்தாலும், அடுத்த நாள், பிப்ரவரி 28 அன்று, ஆதி ஜுனியர் விஜயம் செய்தபோது, வலி அதிகரித்தது. பாதிரி, 1952, மார்ச் 2 அன்று ஆதி சீனியருக்கு கீழ்வரும் குறிப்பைத் தெரிவிக்கிறார்:

பாபா மிகவும் அமைதியற்ற இரவைக் கழித்து, காலையில் அவர் மிகுந்த நரம்பு சோர்வை உணர்ந்ததாகக் கூறினார்; மேலும் கைக்கோபாத்திடம் '**திரும்பிச் செல்ல வேண்டும்**' என்று தோன்றுவதாகக் குறிப்பிட்டார். அவர் (குஜராத்தி மொழியில்) கூறிய வார்த்தைகளின் தொனியில் கீழே வழங்குகிறேன்: "**நான் இப்போது எனது இல்லத்திற்கு** (அவரது நிரந்தர இருப்பிடம்) **திரும்புவேன் என்று நினைக்கிறேன்**."

இது ஒரு வகையான பதட்டம் நிறைந்த பயம், ஆனால் இதற்கு அறுவை சிகிச்சையும், மூல நோயும் முக்கிய காரணமாக இருக்க வாய்ப்பில்லை, ஏனெனில் அந்த நோயால் அவருக்கு (அவ்வளவு) வலியில்லை. அவரது பொதுவான உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது.

அவர் விரைவாக குணமடைய, பாபாவுக்கு ஆட்டுக்கால் சூப் பரிந்துரைக்கப்பட்டதால், மெஹரு தமானியா குஷ்ரு குவார்ட்டர்ஸிலிருந்து தயார் செய்து அனுப்பி வந்தார்.

இந்த நேரத்தில் அஹமதுநகரைச் சேர்ந்த பகீரத் திவாரி, பாபாவைப் பார்க்க மனைவி கோகிலாவுடன் மெஹராஸாத் வந்தபோது, பாபா, கோகிலாவிடம், **"இன்று நீங்கள் என்ன சமையல் செய்தீர்கள்?"** என வினவினார்.

"சாதம், சப்பாத்தி, பருப்பு மற்றும் காய்கறிகள்" என்று அவர் பதிலளித்தார்.

**"எத்தனை சப்பாத்தி செய்தீர்கள்?"**

"ஏறக்குறைய 30."

**"என்ன! உங்கள் இருவருக்கு மட்டும் ஏன் இத்தனை சப்பாத்திகள்?"**

“பகீரதின் மைத்துனர் தனது மகள்களுடன் வந்துள்ளார், ஆதலால் அதிக உணவு தேவைப்படுகிறது” என்று விளக்கினார்.

**"அந்தப் பெண்கள் உங்களுக்கு சமையலில் உதவுகிறார்களா?"** என்று பாபா கேட்டார்.

"இல்லை, அவர்கள் உதவுவதில்லை," என்று பதிலளித்தார்.

பாபா உடனே பகீரத் பக்கம் திரும்பி, **"உங்கள் உறவினர்களை இன்றே திருப்பி அனுப்பிவிடுங்கள்! கோகிலாவுக்கு உடல்நிலை சரியில்லை என்பதை அவர்களால் பார்க்க முடியவில்லையா?"** என்றார்.

ஆதலால் அவர்கள் வீடு திரும்பியதும், பகீரத் தனது மைத்துனரிடம், "நீங்கள் இன்று புறப்படுவது நல்லது" என்று கூறினார்.

"ஆனால் நாங்கள் பதினைந்து நாட்கள் தங்க வந்துள்ளோம், திரும்பிச் செல்வதற்கு எந்த அவசரமும் இல்லை" என்று அவர் பதிலளித்தார்.

"இல்லை, இன்று நீங்கள் தயவு செய்து கிளம்பினால் நல்லது."

"ஆனால் என்ன அவசரம்?" மைத்துனர் வினவினார்.

"மன்னிக்கவும், இது பாபாவின் கட்டளை" என்று பகீரத் விளக்கினார்.

பகீரத் ஒரு வாடகைக் காரை வரவழைத்து, அவர்களின் பெட்டி, பைகளை அதில் எடுத்து வைத்து, அவர்களை அனுப்பி வைத்தார். மெஹர் பாபாவைப் பின்பற்றியதற்காக பகீரத் மற்றும் அவரது மனைவியை உறவினர்கள் கேலி செய்தது பின்பு தெரியவந்தது. இந்த வலுக்கட்டாயமான புறப்பாடு பாபாவின் சர்வ ஞானத்தை அவர்களுக்கு உணர்த்தியது, படிப்படியாக அவர்களும் பாபாவின் பக்கம் சாயத்தொடங்கினர்.

மார்ச் 7ஆம் நாள் பாபாவுடன் அமெரிக்க பயணத்தில் இணையும் அனைவருக்கும் சின்னம்மை தடுப்பூசி போடப்பட்டது. தடுப்பூசியின் தாக்கத்தால் உடல்நிலை சரியில்லாமல், பாபாவின் கை வீங்கியது. பாபா, இந்தத் தொலைத்தந்தியை மெஹர்ஜிக்கு அனுப்புமாறு பாதிரியிடம் கேட்டுக்கொண்டார்: "பாபாவுக்கு வழங்கிய தடுப்பூசியின் எதிர்வினை கடுமையாக உள்ளது; கை மற்றும் அக்குள் சுரப்பி வீக்கமடைந்து, உடல் வலியுடன் ஜுரமும் உள்ளது."

பாதிரி, ஆதி சீனியருக்கு எழுதிய ஒரு குறிப்பில் இவ்வாறு கூறியிருந்தார்: "கடவுள், பாபாவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் உதவட்டும்!"

1952, மார்ச் 14 அன்று, ஆதி சீனியர், குல்மாய் இருவரும் மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தபோது, அவர் மும்பை 'சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா'வில், பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்திற்காக, ஸரோஷிடம் தொடர்ந்து பணம் செலுத்துமாறு அறிவுறுத்தக் கூறி, ஆதிக்குத் தெரிவித்தார். **1925-26ஆம் ஆண்டுகளில் மெஹராபாத்தில் பாபா எழுதிய புத்தகத்தின் அசல் நகல் அந்தப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்தது**.

மனோநாஷ் பணிக்குப் பிறகு பாபாவின் உடல் நிலை, பொதுவாக பலவீனமாகவே இருந்தது. மார்ச் 17 அன்று, அமெரிக்காவில் எலிஸபெத், நோரினா இருவருக்கும் அனுப்பிய தொலைத்தந்தியில்: **"பாபாவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது, ஆனால் அவர் இன்னும் கூறுகிறார், 'முற்றிலும் முடியாது என்ற நிலைமை வந்தாலொழிய', வருவேன், ஏனென்றால் இந்த முறை இல்லையென்றால், ஒருபோதும் இல்லை."**

இந்த நேரத்தில் எரச், பைதூல் இருவரும் பூனாவில் இருந்தனர்; மார்ச் 15 அன்று எரச் மெஹராஸாத் திரும்பி வந்தபோது, பைதூலும் 18ஆம் தேதி மதியம் வருமாறு அறிவுறுத்தப்பட்டார்.

1952, **மார்ச்** 21 வெள்ளிக்கிழமை, பாபாவின் '**சிக்கலான சுதந்திர வாழ்வின்**' (COMPLICATED FREE LIFE) முதல் நாள். அன்று அவர் நரிமன், மெஹர்ஜி, ரானோ, கிட்டி ஆகியோருடன் ஆதி சீனியர் காரில் மெஹராபாத் சென்றார். டாக்டர் நீலு, விஷ்ணு, பாதிரி ஆகியோர் எரச்சுடன் ஜீப்பில் பின்தொடர்ந்து செல்ல, நரிமனின் காரில் பெண் மண்டலி, அர்னவஸ் ஆகியோர் சென்றனர். பாபா தனது குடிலில் ஓய்வெடுத்துக்கொண்டே, கீழ்கண்ட சுற்றறிக்கையை ஆதி சீனியர், எரச் இருவருக்கும் எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்தார்:

**எனது 'சிக்கலான சுதந்திர வாழ்வின்' முதல் நாளான இன்று, இந்த சுற்றறிக்கையின் மூலம் பின்வருவனவற்றை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

அ) வாழ்க்கை மற்றும் அதன் மூன்று கட்டங்கள் பற்றிய தெளிவான 'விளக்கம்'.

ஆ) எனது வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 1ஐ நம்புபவர்களுக்கு ஒரு 'செய்தி'.

இ) ஏப்ரல் 1 முதல் அக்டோபர் இறுதி வரை (1952) ஏழு மாதங்களுக்கு எரச், பெண்டு இருவருக்கான 'வழிமுறைகள்'.

அ. <u>விளக்கம்:</u>

1) இன்றைய வாழ்க்கை என்னை வலிமையாகவும் பலவீனமாகவும் காண்கிறது. வலிமை என்பது இறை ஞானம் மற்றும் பழைய வாழ்க்கை மெஹர் பாபா நிலை இவற்றின் திடமான நம்பிக்கையாகும்; அதே நேரத்தில் சாதாரண மனித பலவீனங்கள் மற்றும் பிணைக்கக்கூடிய ஆசைகள் என்னை முற்றிலும் பலவீனமாக உணர வைக்கிறது.
2) நான் ஏற்கனவே அதிகாரபூர்வமாக அறிவித்தபடி, என்னையும், எல்லோரையும் பொறுத்தவரையில், எனது மனோநாஷ் பணியின் இறுதி விளைவை கடவுளின் ஆணை, அதிகாரம் மற்றும் அனுமதிக்காக விட்டுவிட்டேன். இந்தப் பணியின் பலன் எங்கே, எப்படி, எப்போது வெளிப்படும் என்பதை நான் முழுவதுமாக இறைவனின் விருப்பத்திற்கே விட்டு விடுகிறேன்.
3) எனது 'சிக்கலான சுதந்திர வாழ்வு' (COMPLICATED FREE LIFE), 'முழுநிறை சுதந்திர வாழ்வு' (FULL FREE LIFE) மற்றும் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின்' (FIERY FREE LIFE) காலகட்டத்தில், என்னுடன் இந்த வாழ்வை வாழத் தயாராக இருப்பவர்களின் உதவியுடன், கடவுளின் வழிகாட்டுதலின் கீழ், எனக்கென வெளிப்படுத்தப்பட்ட பணியை நான் செய்வேன்.

எனது 'சிக்கலான சுதந்திர வாழ்வில்', 'பிணைப்பு', சுதந்திரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் என்று நான் உணர்கிறேன். எனது 'முழுநிறை சுதந்திர வாழ்வில்', 'சுதந்திரம்', பிணைப்பின் மீது ஆதிக்கம் செலுத்தும். எனது 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில்', 'சுதந்திரம்', 'பிணைப்பு' இரண்டும், கடவுளின் அருளால், தெய்வீக வாழ்வில் சங்கமமாகும்.

ஆ. <u>செய்தி:</u>

என்னை நேசிப்பவர்களுக்கும், என் இறை வாழ்வில் நம்பிக்கை உள்ளவர்களுக்கும், இன்று நான் வழங்கும் செய்தி என்னவென்றால், இந்தப் பிரபஞ்சம் எனும் மாயையிலிருந்து விடுபட, உன்னதமான உண்மைப்பொருளை உணர்ந்து, அடையப்பெற வேண்டுமாயின், பின்வருவனவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

முதலாவதாக, இறை-மனிதனிடம் முழுமையாக சரணடையும் வேளையில், இறைவன், அவரது முழு மகிமையிலும், எல்லையற்ற சக்தியிலும், அளவிறுதியற்ற அறிவிலும், விவரிக்க முடியாத பேரின்பத்திலும், நித்தியமாக நிரந்தரமாக இருக்கும் தன்மையிலும் இறை-மனிதன் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

இந்த முழுமையான சரணாகதி சாத்தியமில்லை என்றால், பின்வருவனவற்றில் ஒன்று அல்லது சிலவற்றை உண்மையாக நிறைவேற்றினால், கடவுளின் அருளைப் பெறலாம்:

1) கடவுள் மீது இதய பூர்வமான அன்பு. அவரைக் காணத்துடிக்கும் தாகம், அவரை அறிந்து கொள்ளும் ஏக்கம், அவருடன் ஐக்கியமாவதற்கான கொழுந்துவிட்டெரியும் ஆர்வம் ஆகியவை அனைத்தையும் தன்வயப்படுத்தும் இந்த அன்பை உருவாக்குகின்றன, அதற்காக, காதலன் தன்னையும் உட்பட அனைத்தையும் துறக்கிறான்.
2) துறவிகள் மற்றும் இறைப் பிரியர்களுடன் இடைவிடாமல் இணைந்திருந்து அவர்களுக்கு முழு மனதுடன் சேவை செய்தல்.
3) காமம், பேராசை, கோபம், வெறுப்பு, அதிகாரம், புகழ் மற்றும் குறை காணல் போன்ற சபலங்களுக்கு எதிராக மனதைக் கட்டிக்காத்தல்.
4) முழுமையும், அறுதியுமான வெளிப்புற துறவு, இதன் மூலம் ஒருவர் அனைத்தையும் அனைவரையும் விட்டுவிட்டு, தன்னந்தனிமையில், பிரார்த்தனை, உபவாசம், தியானம் போன்றவற்றில் தன்னை அர்ப்பணிக்கிறார்.
5) உலகில் வாழ்ந்து முழுமையான, உள்ளளவிலான துறவை நடைமுறை படுத்தல். இதன் அர்த்தம் என்னவெனில், உலகக் கடமைகள் அனைத்தையும் பற்றின்றி, எல்லாம் மாயை, எல்லாம் வல்ல இறைவன் ஒருவரே உண்மையானவர் என்பதை அறிந்து, தூய்மையான இதயத்துடனும், அப்பழுக்கற்ற மனத்துடனும் உலக விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்தி, தீவிரமான செயல்களுக்கு மத்தியிலும் ஒதுங்கி வாழ்வதாகும்.
6) தன்னலமற்ற சேவையில் தன்னை அற்பணிக்கும் ஒருவன் தன்னைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல், பிறரின் மகிழ்ச்சியைக் கருத்தில் கொள்கிறான்; ஆதாயம், வெகுமதி எதையும் எதிர்பாராமல் பிறருக்கு சேவை செய்கிறான்; மனதில் வருத்தம், ஏமாற்றம் எதையும் ஒருபோதும் அனுமதிக்காமல், எல்லா இடர்பாடுகளையும், கஷ்டங்களையும் மகிழ்ச்சி மற்றும் முகமலர்ச்சியுடன் எதிர்கொண்டு,

பிறரின் நன்மைக்காக, தனது நலனைத் தியாகம் செய்கிறான். இதுதான் தன்னலமற்ற சேவகனின் வாழ்க்கை.

இ. <u>வழிமுறைகள்:</u>

1) நவம்பர் 15 முதல் தொடங்கும் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு'க்கான எனது பணிக்கு, மக்களையும், அடிப்படை சூழலையும் தயார்படுத்தும் நோக்கத்தில் ஏழு மாதங்களுக்கு இந்தியா, பாகிஸ்தான் முழுவதும் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுடன் எரச்சை அனுப்ப உள்ளேன்.
2) 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு', என்னையும், அதற்கான தயார் நிலையில் இருப்பவர்களையும் தெய்வீக அன்பின் நெருப்பில் சுதந்திரமாக எரியச் செய்யவேண்டும், மேலும் '(ஆ) செய்தி'யில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளிலும் நம்மை அழைத்துச் செல்ல வேண்டும்.
3) 1952, மார்ச் 21 அன்று, அவருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவது தவிர, எரச் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்:
   I. இந்த ஏழு மாதங்களில் செலவுக்காக அவருக்கு ரூ 2,000 வழங்கப்பட்டுள்ளது.
   II. எந்த சூழ்நிலையிலும் அவர் யாரிடமிருந்தும் பணத்தைப் பெறக் கூடாது.
   III. அவர் உணவு மற்றும் பயணச் சீட்டுகளை விரும்பி, மகிழ்ச்சியுடன் வழங்கினால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்.
   IV. நாம் நமது வாழ்நாள் முழுவதும் செய்து வருவதை போல், அவர் அரசியலிலிருந்து விலகி இருக்க வேண்டும்.
   V. அவர் காமச் செயல்களிலிருந்து விலகி இருக்க வேண்டும், அவ்வாறு அவர் இருக்கிறார் என்று நான் நம்புகிறேன்.
   VI. அவர் புகழ்ச்சியால் பொய்யான பாராட்டுகளை ஏற்றுக்கொள்ளவோ, ஏளனம் மற்றும் வசைமொழிகளால் மனச்சோர்வடையவோ கூடாது.
   VII. எல்லா சிரமங்களையும் தைரியமாகவும் அன்பாகவும் எதிர்கொண்டு, கடவுளின் பெயரால் பணியை உண்மையாகச் செய்ய வேண்டும்.
   VIII. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் அரசாங்க விதிமுறைகளை அவர் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

IX. **இந்த ஏழு மாத கால பணியில், பெண்டு, முழு மனதுடன் எரச்சுக்கு உதவுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.**

X. **பெண்டுவுக்கும் ரூ 2,000 வழங்கப்பட்டுள்ளது.**

XI. **மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து வழிமுறைகளும் பெண்டுவிற்கும் பொருந்தும்.**

இந்த உத்தரவுகளை எடுத்துரைத்த பிறகு, காலை 11:00 மணிக்கு மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் குடும்பத்தை சந்திக்க ஆதி, பாபாவை மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து அவர் மெஹராஸாத் திரும்பினார். 1948 முதல் பாபா, மெஹராபாத்தில் இரவில் தங்கியதில்லை. மெஹராபாத்திற்குச் செல்லும் போதெல்லாம், பகலில் சென்று, மாலையில் மெஹராஸாத் திரும்புவது வழக்கம்.

1952, மார்ச் 22 சனிக்கிழமையன்று, பாபா, பெண்டு, டாக்டர் நீலு மூவரையும், பூனாவில் கணேஷ்கிந்த் தோட்டத்திற்கு ஆதியின் காரில் எரச் அழைத்துச் சென்றார். தாதி கேரவாலா அங்கு விவசாய அதிகாரியாக பணிபுரிந்ததால், தோட்டத்தில், ஒரு பெரிய பங்களாவில் பாபா தங்குவதற்கு அவரால் ஏற்பாடு செய்ய முடிந்தது. தாதி அவரது பணியில் சோர்வாக இருந்து, வேலையை விட்டுவிடுவது என்று தீர்மானித்திருந்தும், பாபா அவரிடம் வேலையைத் தொடரும்படி, வினோதமான முறையில் தெரிவித்தார். பிந்த்ரா ஹவுஸில் 'பிலூ மாமா ஸட்டா'வுடன் தாதி தனது முடிவைப் பற்றி பேசிக்கொண்டிருந்த வேளையில், பாபா திடீரென உள்ளே நுழைந்து, உரையாடலின் நடுவே, தாதியிடம் கூறினார், **"கணேஷ்கிந்தின் சுற்றுப்புறச்சூழலும், தட்பவெப்பநிலையும் மிகவும் நன்றாக உள்ளது. இது மிகவும் இனிமையான இடமாகும், மேலும் அங்குள்ள பால் செழுமையாகவும் ஆரோக்கியத்திற்கு ஊக்கமளிப்பதாகவும் உள்ளது. கணேஷ்கிந்த் எனக்கு மிகவும் பிடித்த இடம், நீங்கள் அதை விட்டுவிடக்கூடாது."**

தாதி மனதில் நினைத்தார்: "என்ன ஒரு துரதிர்ஷ்டம். எனக்கு வேறு வேலையில் நல்ல ஊதியம் கிடைக்குமானால், நான் ஏன் இங்கிருந்து வெளியேறக்கூடாது? இந்த குருநாதருடனான சகவாசம் நல்லதல்ல, ஏனென்றால் அவருடைய கட்டளைகளால் ஒருவரைப் பிணைக்கிறார்." இத்தகைய எண்ணங்கள் மனதில் அலைபாய்ந்தாலும், தாதி விவேகத்துடன் பாபாவிடம் எதுவும் கூறவில்லை.

அவரைப் பார்த்து சிரித்துக் கொண்டே பாபா, **"கணேஷ்கிந்தில் இருந்துகொண்டு, எனது சகவாசத்தின் பலனைப் பெறுவதால், நீங்கள் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி"** என்று எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்.

டாக்டர் டான், எரச் இருவரின் வற்புறுத்தலின் பேரில், பாபா, செயற்கை பற்களைப் பொருத்துவதற்காக பூனா வந்திருந்தார், அதற்காக, பப்பா ஜெஸவாலா அவர்களின் குடும்ப பல் மருத்துவர் டாக்டர் பரூச்சாவைத் தொடர்பு கொண்டார். எரச், முதற்கட்ட பரிசோதனைக்காக, டாக்டர் பரூச்சாவை, 16ஆம் தேதி, மெஹராஸாத்துக்கு அழைத்து வந்திருந்தார். இப்போது செயற்கைப் பற்கள் பொருத்தப்பட வேண்டும். டாக்டர் பரூச்சா 600 ரூயாய்க்கு பிளாட்டினம் பல்வகையை வழங்க ஒப்புக்கொண்டார். ஆனால் அதற்கு பதிலாக, தரம் குறைவான பொருளால் செய்யப்பட்ட பற்களை அவர் வழங்கியபோது, பப்பா சீற்றமடைந்து பல் மருத்துவரிடம் முறையிட்டார், "இப்படி ஏமாற்றுவது நல்லதல்ல, பிளாட்டினத்திற்கு ரூ 600 வழங்க சம்மதித்தோம், சாதாரண பற்களுக்கு அல்ல" என்று வாதாடினார். கடைசியாக, விலையைக் குறைத்து பிரச்சினையை முடித்து, டாக்டருக்கு ரூ 450 வழங்கப்பட்டது.

பப்பா இதை பாபாவிடம் தெரிவித்ததும் பாபா, **"உடனடியாகப் போய் மீதிப் பணத்தை அவருக்குக் கொடுத்து வாருங்கள்"** என்று கூறினார்.

"என்ன சொல்கிறீர்கள் பாபா?" பப்பா ஜெஸவாலா நம்பமுடியாமல் கேட்டார். "அவருடைய தந்திர செயலுக்கு ஏன் வெகுமதி அளிக்க வேண்டும்?"

பாபா பதிலளித்தார், **"அவர் செய்த வஞ்சகத்தை நினைவு படுத்துவதற்காக, அவருக்கு ரூ 150 வழங்கவேண்டும். அது அவர் செய்ததை நினைவுபடுத்தும். எனது வழிகள் உலக வழிகளிலிருந்து முற்றிலும் மாறானவை."**

பாபா பூனாவில் இருந்தபோது, ஒரு சிறுநீர் கழிப்பறைக்கு அருகில் தங்கியிருந்த '**ஜோஷி புவா**' என்று அழைக்கப்பட்ட ஒரு பருமனான மஸ்தைத் தொடர்பு கொண்டார். லக்ஷ்மிகாந்த் தாடே பின்னர் இந்த மஸ்தைப் பார்க்கச் சென்றபோது, அவரிடம் பாபா அமெரிக்கா செல்லவிருப்பதாகக் குறிப்பிட்டார். மஸ்த் உடனே ஆத்திரமடைந்து மராட்டி மொழியில், "அவர் ஏன் போகிறார்? இங்கே இருந்து அவரால் தனது வேலையைச் செய்ய முடியாதா? அவர் கால் உடைந்துவிடும்!" என்றார்.

பாபா, மார்ச் 24 அன்று, மெஹர்ஜியின் காரில் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, ஆஷியானாவில் தங்கியபோது, டாக்டர் ஜோக்லேக்கர், பாபாவின் மூல நோயின் தற்போதைய நிலையைப் பரிசோதித்தார்; அடுத்த நாள் பாபா மெஹராஸாத் திரும்பி வந்தார். பாபா பலவீனமாக உணர்ந்ததால், அவர்களின் மேற்கத்திய பயணம் ஏப்ரல் 18ஆம் நாள் வரை ஒன்பது நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பாபாவின் மூல நோய் குணமான பின்னர், 29ஆம் நாள், மீண்டும் பெண் மண்டலியுடன் '**ஹேப்பி வேலி**'க்குச் சென்று, மதிய உணவுக்குப் பிறகு திரும்பி

வந்தார். 1923ஆம் ஆண்டு முதல், பாபா இந்த இடத்திற்கு விஜயம் செய்ததன் விளைவாக அவரது வருகையில் இது ஒரு சிறப்பு முக்கியத்துவத்தைப் பெற்றது.

மும்பையிலிருந்து திரும்பி வந்ததும், பாபா நாக்பூரில் வாழ்ந்த ஜால் கேரவாலாவை உடனடியாக மெஹராஸாத்துக்கு அழைத்து அவசரத் தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார். அந்த நேரத்தில் அவருக்கு சில முக்கியமான அரசாங்க பணிகள் இருந்தும், பாபாவின் செய்தி வந்ததும், ஜால் உடனடியாகப் புறப்பட்டு, 1952, மார்ச் 30 அன்று மெஹராஸாத்திற்கு வந்து சில மணி நேரம் தங்கினார். பாபா அவரிடம், **"எனக்கு ரூ 400 வேண்டும். அதைத் தர முடியுமா?"** எனக் கேட்டார்.

சிறிதும் தயங்காமல், ஜால், பாபாவிடம் பணத்தைக் கொடுத்து மனதில் நினைத்தார்: "பாபா ஏன் இந்தச் சிறிய விஷயத்திற்காக என்னை இத்தனை தூரம் அழைத்தார்? அவர் அதை எனக்குத் தெரியப்படுத்தியிருந்தால், நான் நாக்பூரிலிருந்து அஞ்சல் மூலமாக அந்தத் தொகையை அனுப்பியிருப்பேன்." அதன் பின்னணியில் உள்ள உண்மையான காரணம் ஜாலுக்குத் தெரியவில்லை. அவர் பாபாவைக் காண்பது இதுவே கடைசி முறை என்பது பின்பு தெரிய வந்தது.

மார்ச் 31ஆம் தேதி, பாபா தனது நெருங்கிய அன்பர்களை சந்திக்க அஹமதுநகர் வந்தார். பாபா, நீலு, பாதிரி ஆகியோரை ஆதி முதலில், ஸரோஷின் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு பாபா, ஸரோஷ், விலூ, ஆதி ஜூனியர், ஃபிரீனி ஆகியோரை சந்தித்தார். அடுத்து அவர் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு விஜயம் செய்து, அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும், ருஸ்தம் காக்கா, தத்து மெஹந்தர்கே ஆகியோரின் குடும்பத்தினருக்கும் தரிசனம் வழங்கினார். குல்மாய், பிரோஜா, மெஹரு, ஸவக் ஒவ்வொருவரும் அவரவர் தனிப்பட்ட கவனத்தைப் பெற்றனர். பாபா தொடர்ந்து விலூவின் சகோதரர் கேக்கி மற்றும் அக்பர் பிரஸ் இல்லங்களுக்குச் சென்று, மதியம் 11:30 மணிக்கு மெஹராஸாத் திரும்பி வந்தார்.

ஆதியின் மருமகன்களான ஃபாலூ, பெஹராம், மெஹ்லு ஆகியோர் அன்றைய தினம் மெஹராஸாத்தில் பாபாவைப் பார்த்தபோது, பாபா மெஹ்லுவிடம், **"என் மீது உங்களுக்கு சிறிதளவேனும் அன்பிருந்தால், உங்கள் நிலைமை சிறப்பாகும்"** என்று கூறினார்.

ஏப்ரல் 6, ஞாயிற்றுக்கிழமை அன்று பாபா, பெண்மணிகளுடன் மெஹராஸாத்திலிருந்து மும்பைக்கு மெஹர்ஜி மற்றும் நரிமனின் கார்களில் புறப்பட்டனர். குஸ்தாஜி, டாக்டர் நீலு, விஷ்ணு ஆகியோர் பேருந்திலும், இரயிலிலும், அவர்களின் சில சாமான்களுடன், பின்தொடர்ந்தனர். இந்தியா, பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் எரச்சுடன் இணைய, அதே நாளில் பெண்டு,

பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். மேற்கத்திய பயணத்தில் எரச் தன்னுடன் செல்வதை பாபா விரும்பினார், அவர் புது வாழ்வின் இடர்பாடுகளால் உடல் ரீதியாக (மன ரீதியாகவும்) சோர்வாக இருப்பதாகக் கூறி, பயணத்திலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்; எனவே அதற்கு பதிலாக, பாபா அவரது 'பழைய வாழ்க்கை', 'புது வாழ்வு' மற்றும் 'மனோநாஷ்' கட்டத்தின் மூலம் பாபா எதைக் குறிக்கிறார் என்பதை விளக்கி, 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு'க்கு மக்களை ஆயத்தப்படுத்துவதற்காக, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு, 'சொற்பொழிவு' சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் எண்ணத்தில் பெண்டுவையும் உடன் அனுப்பினார். பாபா இப்போது அவரது 'சிக்கலான சுதந்திர வாழ்வை' நடத்திக் கொண்டிருந்தார், அது 1952ஆம் ஆண்டு ஜூலை 10 வரை நீடித்தது.

மும்பையில், பாபாவும் பெண்மணிகளும் ஆஷியானாவில் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர், தொடர்ந்து மும்பை புறநகர்ப் பகுதியான 'பாந்த்ரா'வில் அமைந்த 'நார்மன்ஸ் பங்களா' என்று அழைக்கப்படும் வேறொரு வீட்டின் முதல் தளத்தில் தங்கினர். நரிமனும் மெஹர்ஜியும் அங்குத் தங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்திருந்தனர். பாந்த்ராவில் பாபாவுடன் மெஹரா, மணி, கோஹெர், மெஹரு, அர்னவாஸ் ஆகியோரும், ரானோ, கிட்டி இருவரும் ஆஷியானாவிலும் தங்கினர். ஆஷியானாவில் சத்தம் மிகவும் அதிகமாக இருப்பதாக, பாபா கூறியதால், மிக்க சிரமத்துடன், அவசரமாக, மாடி வீடு ஒன்றைக் கண்டுபிடித்து அங்குச் சென்றனர். வீடு மிகவும் சிறியது, அதன் சொந்தக்காரரான ஒரு கிறிஸ்தவ பெண்மணி கீழே வாழ்ந்து வந்தார்.

பாந்த்ரா பங்களாவில் ஒரு சந்தர்ப்பத்தில், பாபா 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வை'ப் பற்றி விளக்கினார்:

**உண்மையான இறை வாழ்வை வாழும் ஒருவர் அளவிலா ஆனந்தக் கடல். பூஜ்யத்திலும் பூஜ்யமான மாயை துன்பத்தின் கடல். இது அனைவருக்கும் பெரும் வேதனையை விளைவிப்பதோடு, தொல்லை கொடுத்துத் துன்பத்தில் ஆழ்த்துகிறது. 'அனல் பறக்கும்' வாழ்வில், கடவுளின் அருளால், இந்தப் பூஜ்ஜியமான வாழ்க்கை, நெருப்பால் எரிக்கப்பட வேண்டும்! 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' என்பது புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றல்ல; நேரில் கண்டு அனுபவிக்க வேண்டிய ஒன்று.**

அன்றிரவு பாபா அமைதியற்றவராகத் தென்பட்டார். மெஹரு, கோஹெர், அர்னவாஸ் ஆகியோர் பகிர்ந்துகொண்ட அறையில் வந்து, அவர்களை வராந்தாவில் ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினார். இரவுக் கண்காணிப்பாளராக இருந்த எரச், பாபாவின் படுக்கையை எடுத்துவந்து அந்த அறையில் வைத்தார். பாபா உள்ளே சென்றாலும், சிறிது நேரத்தில் வராந்தாவில் வெளியே வந்து மூவரையும் அவர்களின் அறைக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறினார். ஆனால் பாபா, மேலும் அமைதியற்ற நிலையில், முன்னும் பின்னுமாக நடந்து, பின்னர்

அவரது அறைக்குச் சென்றார். பாபா இரவு முழு நேரமும் அவரது இடத்தை மாற்றிக் கொண்டே, அமைதியின்றி காணப்பட்டதன் காரணம், கீழே வாழ்ந்து வந்த கிறிஸ்தவப் பெண்மணி சிரமத்தில் இருந்ததாகவும், பாபா அவருக்காகப் பணிபுரிந்தார் என்றும் பின்னர் யூகிக்கப்பட்டது.

மறுநாள் காலை, 'புனித வெள்ளி', 1952, ஏப்ரல் 11 அன்று, பாபா மிகவும் களைப்பாக, உடல்நலம் குன்றி காணப்பட்டார். அஹமதுநகர், மெஹராபாத், மெஹராஸாத் ஆகிய இடங்களில் வாழும் அன்பர்களுக்கு, பின்வரும் செய்தியை, தொலைபேசி மூலம் தெரிவிக்குமாறு அவர் எரச்சிற்கு அறிவுறுத்தினார்:

**உடல்நிலை சீரானபாடில்லை. தங்குமிடம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பெரும் பரபரப்பு நிலவுகிறது. இரவு நேரங்களிலும் போக்குவரத்து நெரிசல் துன்புறுத்துவதாக உள்ளது. மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வது இன்றியமையாதது எனினும், அங்குச் செல்வது நிச்சயமற்றதாகத் தோன்றுகிறது. இதை அனைவருக்கும் தெரிவிக்கவும்.**

அந்த வீடு பரபரப்பான சாலைக்கு அருகில் அமைந்திருந்ததால், பாபா அங்குத் தங்க விரும்பவில்லை, மேலும் அவர் பெண்மணிகளுடன் ஆஷியானாவிற்குச் செல்ல முடிவு செய்தார். பாபா வந்ததும், நரிமன், மெஹர்ஜி இருவரையும் கடிந்து கொண்டார், "**உங்களுக்கு என்னைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை! நீங்கள் என்னைப் பற்றி கவலைப்படவுமில்லை. நான் ஒரு அமைதியான இடத்தை விரும்பினேன், நீங்கள் என் விருப்பத்தைக் கண்டுகொள்ளாமல் கவனக்குறைவாக இருந்தீர்கள். நேற்று இரவு நான் சிலுவையில் அறையப்பட்டேன்!**"

எனவே மெஹர்ஜி, நரிமன், ஸரோஷ் ஆகியோர் உடனடியாக வேறு இடத்தைத் தேடத் தொடங்கினர். நரிமனும், மெஹர்ஜியும் 'மார்வே' கடற்கரையில் 35 மைல் தொலைவில் புதிதாகக் கட்டப்பட்ட மூன்று அறைகளைக் கொண்ட ஒரு குடிசை வீட்டைக் கண்டுகொண்டனர். அன்று மாலை பாபா, பெண் மண்டலியுடன் அங்குச் சென்றார். பாபாவிற்கு அந்த இடம் மிகவும் பிடித்திருந்தது. அது அமைதியாகவும், அவரும் பெண்மணிகளும் காலையிலும் மாலையிலும் கடற்கரையில் நீண்ட நடைப்பயிற்சி மேற்கொள்ளவும் வசதியாக அமைந்தது. உள்ளூர்வாசி மீனவர்கள், மீன்பிடி படகுகளில் செல்வதைப் பார்த்துக் கொண்டு, அழகிய சுற்றுப்புற சூழலில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.

பாபாவின் உணவு மும்பையிலிருந்து அர்னவாஸின் தம்பி ஹோமாவால் கொண்டுவரப்பட்டது. ஒரு நாள் பாபா, ஹோமாவிடம் குறிப்பாகக் கூறினார், "**இங்கிலாந்துக்குச் செல்லுங்கள், எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். நான் உங்களுடன் இருக்கிறேன், உங்களுக்காக அனைத்தையும்**

**செய்வேன். இங்கிலாந்தில் வாகனங்கள் பழுதுபார்க்கும் பயிற்சியைக் கற்றுக்கொள்ளுங்கள்."**

ஆனால் ஹோமா இங்கிலாந்து செல்லுவதற்கான ஒரு சிறப்புக் காரணமும் இருந்தது. ஹோமாவின் முழங்கால் மூட்டில் சில பாதிப்புகள் ஏற்பட்டதால், அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது, ஆனால் அவர் அந்த வலியைப் பற்றி பாபாவிடம் கூறியதில்லை, பாபா, அவரிடம் கேட்கவுமில்லை. மேலும், எல்லாம் அறிந்தவரிடம் மறைந்திருப்பதுதான் என்ன? இதனால்தான் கவலைப்பட வேண்டாம் என்று பாபா உறுதியளித்தார், பின்னர் ஹோமாவின் அறுவை சிகிச்சை இயற்கையான வழியில் நடந்தது.

1952, ஏப்ரல் 15ஆம் நாள், டி.எம். ஷிண்டே, கேஷவ் வி. நேனே குடும்பத்தினர் உட்பட அவரது பழைய மும்பை அன்பர்கள் சுமார் 200 பேருக்கு பாபா தரிசனம் வழங்கினார். ஷிண்டே, காடேக்கர் மூலமாகவும், நேனே அவரது மைத்துனர் அஹமதுநகரைச் சேர்ந்த ருஸ்தம் காக்கா ஹதிதாரு மூலமாகவும் பாபாவின் தொடர்பில் வந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், **டாலி இன்ஜினியர்** (20 வயது), பாபாவின் தரிசனத்திற்காக வந்தார், ஆனால் அவரது வருங்கால கணவர் **ஜால் ஃபிரோஸ் தஸ்தூர்** (22 வயது), பாபாவைக் கடவுள் என நம்பாததால் அவர் வரவில்லை. டாலி சிறுவயதிலிருந்தே பாபாவின் தொடர்பில் இருந்தார், ஏனெனில், அவருடைய தாயார் ஸூனா இன்ஜினியர் (அர்னவாஸின் தாயாரின் சகோதரி) அடிக்கடி பாபாவை சந்திக்கச் செல்வதுண்டு. அன்று, வீடு திரும்பிய டாலி, ஜால் கண்ணீருடன் இருப்பதைக் கண்டு, காரணத்தை வினவியபோது, அவர், "என்னிடம் எதுவும் கேட்காதே. பாபாவின் தரிசனத்திற்குச் செல்லாமல், என் வாழ்வின் மிகப் பெரிய தவறை இழைத்துவிட்டேன். நான் ஒரு முட்டாள்! நான் இப்போது அவரை அவதார புருஷராக ஏற்றுக்கொள்கிறேன்" என்று பதிலளித்தார்.

மும்பையில் வளர்ந்துவந்த ஜால் தஸ்தூர், ஆச்சாரமான ஸொராஸ்ட்ரிய பாதிரியார் வகுப்பைச் சார்ந்தவர். டாலி தரிசனத்தில் கலந்து கொள்ளச் சென்ற பின்பு, பாபா மீது நம்பிக்கை இல்லாவிடிலும், ஜால் எங்கு நோக்கினாலும் பாபாவைப் பார்க்கத் தொடங்கினார்! டாலி புறப்பட்டுச் சென்ற உடனேயே இந்தக் காட்சி தொடங்கியது. ஜால், இதைத் தவிர்க்கும் நோக்கத்தில் வீட்டை விட்டு வெளியேறியபோதும் அவர் பாபாவையே பார்க்க முடிந்தது! நிராதரவாக உணர்ந்த அவர், வீடு திரும்பியதும், அந்தக் காட்சியிலிருந்து எப்படித் தப்பிப்பது என்று யோசித்தபோது, அவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அந்தக் கண்ணீர் அனைத்து சந்தேகங்களையும் துடைத்து, அன்று முதல் மெஹர் பாபாவின் பாதங்களைப் பற்றிக்கொள்ள வழிவகுத்தது.


தாமதமாக வந்த ஒருவருக்கு இரண்டு நிமிடம் தரிசனம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. அவரது பெயர் **ஹோஷங் ஃபெரோஸ் பருச்சா** (25 வயது), இறுதியாண்டு மருத்துவ மாணவர். 1949ஆம் ஆண்டு ஸக்கோரியில் உபாஸனி மஹாராஜின் ஆசிரமத்திற்குச் சென்றிருந்தபோது, ஹோஷங் முதன்முதலில் மெஹர் பாபா என்ற பெயரைக் கேள்விப்பட்டார். மெஹர் பாபா தனது ஆசிரமங்களை மூடிவிட்டு, ஒரு சிலருடன் வெளியேறி, இந்தியா முழுவதும் எப்படி அலையப் போகிறார் என்று இரண்டு பேர் விவாதித்ததை அங்கே அவர் கேட்க நேர்ந்தது. 1952ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்த தரிசனம், பாபாவை சந்திக்க ஹோஷங்கிற்குக் கிடைத்த முதல் வாய்ப்பு.

ஆஷியானாவில் தரிசனம் ஓர் அற்புதமான சந்தர்ப்பமாக அமைந்தது, 1949ஆம் வருடம் புது வாழ்வு தொடங்கியதிலிருந்து முதன்முறையாக குருநாதரின் பழைய மற்றும் நெருங்கிய அன்பர்களுக்கு அவரது சகவாசத்திற்கான வாய்ப்பை வழங்கியது. கோஹெரின் சகோதரி கேட்டி புது வாழ்வு தொடக்கத்திலிருந்தே நரிமன் - அர்னவாஸின் குடியிருப்பில் வாழ்ந்து வந்தார். ஸூனாமாசி, கோர்ஷெத் இருவரும் இப்போது 'தஃப்டி' மேன்ஷனில் தங்கியிருந்தனர், அங்கு பாபா 1923ஆம் ஆண்டில் தங்கியிருந்தார். இந்தப் பெண்மணிகளையும் தொடர்ந்து அங்கே வாழ பாபா அறிவுறுத்தினார்.

இந்தக் காலகட்டத்தில், பாபா, பைதூலுடன் மும்பையில் தீனா தலாட்டியின் இல்லத்திற்குச் சென்றார். தீனாவுக்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன் - மகள்களில் ஒருவர் 'ஜெரூ' மட்டுமே அப்போது வீட்டில் இருந்தார். பாபா அவரிடம், "**நான் இங்கு ஒரு மஸ்தை அழைத்துவர விரும்புகிறேன். நீங்கள் ஓர் அறையைத் தயார் செய்ய முடியுமா?**" என்று கேட்டு, பாபா அறைக்குத் தனி நுழைவாயிலும், குளியலறையும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தார். தலாட்டியின் இல்லத்தில் அந்த வசதிகளுடன் ஓர் அறை மட்டுமே இருந்தது; முழு குடும்பமும் ஒன்றாக பாபாவிடம் பிரார்த்தனையை மொழியும் வகையில் அமைந்த தனி இடத்தை உள்ளடக்கிய அறை.

ஜெரூ அறையை நன்றாக சுத்தம் செய்த வேளையில், பாபா இல்லத்தின் எல்லா இடங்களுக்கும் சென்று, அறைக்கு மாற்ற வேண்டிய தளபாடங்களைத் தேர்ந்தெடுத்தார். ஜெரூவின் படுக்கையைத் தவிர, இதர அனைத்தையும் நகர்த்தினார், படுக்கை மிகவும் பாரமாக இருந்ததால் அவரால் நகர்த்த முடியவில்லை. பிற குடும்ப உறுப்பினர்கள் அவருக்கு உதவி செய்யும் வரை காத்திருக்குமாறு பாபா அறிவுறுத்தினார். "**பைதூல் ஓரிரு நாட்களில் மஸ்தை அழைத்து வருவார்**," என்று கூறி, "**படுக்கை ஒன்று குறைவாக இருப்பதை நீங்கள் எப்படிச் சமாளிப்பீர்கள்?**" என வினவினார்.

ஜெரூ, "நானும் என் சகோதரியும் படுக்கையைப் பகிர்ந்து கொள்வோம்" என்றார். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, பைதூல் வந்து, மஸ்துடன் பாபாவின் பணி முடிந்துவிட்டதாகவும், மஸ்த் எவரும் இப்போது வரப்போவதில்லை என்றும் ஜெரூவிடம் தெரிவித்தார்.



மெஹர் பாபா - மர்டில் பீச்,
தெற்கு கரோலினா - மே **1952**

# மர்டில் பீச், தெற்கு கரோலினா
**(Myrtle Beach, South Carolina)**

**1944ஆம் ஆண்டு மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, நோரினா மாட்சபெல்லி, எலிஸபெத் பேட்டர்சன் இருவரும் தெற்கு கரோலினாவின் மர்டில் பீச் பகுதியில், ஆன்மீக மையம் ஒன்றை நிறுவினர்.** இந்த மையம் மெஹர் பாபாவின் அன்பின் செய்தியை உலகெங்கும் பரவச்செய்யும் சிறப்பிடமாகவும், தகவல்களின் ஆதாரக் களஞ்சியமாகவும் அமைந்தது. பல அமெரிக்க அன்பர்கள் நோரினா, எலிஸபெத் இருவருக்கும் உதவியாக இருந்தனர்; அவர்களில் முக்கியமானவர்கள் **டார்வின் ஷா**, **ஃபிராங்க் ஈட்டன்** மற்றும் **ஜான் பாஸ்**. 1948இல் நோரினாவும் எலிஸபெத்தும் இந்தியாவில் இருந்தபோது, டார்வின் அவரது குடும்பத்துடன் ஒரு வருடம் மையத்தை கவனித்துக்கொள்வதற்காக மர்டில் பீச்சிற்குக் குடிபெயர்ந்தார்.

நோரினா, எலிஸபெத் இருவரும் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்று, பாபாவின் வருகையை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருக்கத் தொடங்கினர். பாபாவுக்காக ஓர் இல்லம், கிட்டத்தட்ட முழுவதுமாக, '**ட்ரூமன் மூர்**' என்ற உள்ளூர் ஒப்பந்தக்காரரால், பெண்மணிகளுக்கான விருந்தினர் மாளிகை மற்றும் அவரது அன்பர்களுக்கான பல அறைகள் கட்டப்பட்டன. சாலைகள் உருவாக்கப்பட்டு, பாபா தரிசனம் வழங்குவதற்கென ஒரு பெரிய பண்ணை கட்டிடமும் அந்த நிலத்தில் மாற்றியமைக்கப்பட்டது.

முதலில் '**மெஹர் சென்டர் ஆன் தி லேக்ஸ்**' (MEHER CENTRE ON THE LAKES) என்று பெயரிடப்பட்ட மையம், வனச்சூழலில் இரண்டு நன்னீர் ஏரிகளை உள்ளடக்கியது. இந்த இடம் இயற்கை மற்றும் ஆன்மீக சூழலில் ஓய்வெடுக்க உகந்ததாக அமைந்தது. தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பின்னர், எலிஸபெத்தும் நோரினாவும் பாபாவுக்கு அழைப்பு விடுத்தனர்; பலமுறை ஒத்திவைக்கப்பட்ட இந்தப் பயணம், இறுதியில் 1952 ஏப்ரல் மாதத்தில் இந்தியாவிலிருந்து புறப்படுவார் என உறுதி செய்யப்பட்டது. ஒரு கட்டத்தில், மார்ச் 31ஆம் நாளுக்கு பதிலாக, ஏப்ரல் 10 அவர் புறப்படுவதற்கு ஏற்றதா என்பதைத் தொலைத்தந்தி மூலம் தெரியப்படுத்துமாறு டானுக்கு பாபா அறிவுறுத்தினார். மர்டில் பீச் மையத்திலிருந்து வந்த பதில் அஞ்சலில் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருந்தனர்: "பாபா கேட்கிறார் ஏப்ரல் 10ஆம் தேதி எங்களுக்கு ஏற்றதா என்று! – எதுவாக இருந்தாலும், அவர் வரும் வரை எல்லாமே எங்களுக்கு ஏற்றது."

பாபாவின் அமெரிக்க பயணத்தை மீண்டும் ஒருமுறை தள்ளிவைத்த பிறகு, டான் இவ்வாறு தகவல் தெரிவித்தார்: **"பாபா, என்னை மீண்டும் மீண்டும் சொல்லத் தூண்டுகிறார், மேற்குலக மக்களின் விருப்பத்தினால் மட்டுமின்றி,**

**கடவுளால் விதிக்கப்பட்ட காரணத்தாலும், அவர் வரவேண்டும் என்பது நிச்சயமானது**." பல ஆண்டுகளாக பாபா '**அமெரிக்காவில் அவரது இரத்தம் சிந்தப்படும்**' என்று குறிப்பிட்டிருந்தார், மேலும் இதைத்தான் அவர் இப்போதும் குறிப்பிடுகிறார், இருந்தும் அந்த நேரத்தில் அவர் கூறியதன் அர்த்தத்தை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

டாக்டர் டான்கினின் தாயார் உடல்நலம் குன்றி இருந்ததால், பாபா, அவரை மார்ச் மாத இறுதியில் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார். அவர் உயிரைத் துறந்தபோது, பாபா, டானுக்கு அனுப்பிய தொலைத்தந்தியில், அவருடைய தாயாரை பாபா நேசித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். நோரினா மற்றும் எலிஸபெத்திற்கான சிறப்பு அறிவுரைகளுடன், பாபாவின் வருகைக்குத் தயாராகி உதவுவதற்காக ஏப்ரல் 1ஆம் நாள் அமெரிக்கா செல்லுமாறு டானுக்கு அறிவுறுத்தப்பட்டது.

1952, **ஏப்ரல்** 18 வெள்ளியன்று இரவு 11:00 மணிக்கு, மெஹர் பாபா, மெஹரா, மணி, மெஹரு, கோஹெர், ரானோ, கிட்டி ஆகியோருடன் மும்பை 'ஸாந்தா குரூஸ்' விமான நிலையத்திலிருந்து '**டிரான்ஸ் வோர்ல்ட் ஏர்லைன்ஸ்** (TWA) **விமானம்** 905' மூலமாக பயணத்தைத் தொடங்கினார். 1937இல், பதினைந்து நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு, '**கேன்ஸ்**' நகருக்குச் சென்றதிலிருந்து அவர் மேற்கு நோக்கிப் பயணம் செய்யவில்லை. டாக்டர் தேஷ்முக், அவரது குடும்பத்தினர், காடேக்கர், அவரது மனைவி மற்றும் பிற நெருங்கிய அன்பர்கள், பாபாவுடன் பெண் மண்டலிக்கு விமான நிலையத்தில் பிரியாவிடை அளித்தனர். ஏறக்குறைய 100 அன்பர்கள் பாபாவிற்கு மலர்மாலை அணிவித்தனர். இரண்டு நாட்களுக்குப் பின்னர், ஆதி சீனியர், ஸரோஷ், மெஹர்ஜி, குஸ்தாஜி, டாக்டர் நீலு ஆகியோர் 'டிரான்ஸ் வோர்ல்ட் ஏர்லைன்ஸ் (TWA)' வழியாக நியூயார்க்கிற்குப் பயணம் செய்தனர்.

விமானத்தில், கோஹெர், ரானோ இருவரும் பாபா மற்றும் மெஹராவை எதிர்நோக்கி அமைந்த இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். பாபா ரானோவின் இருக்கையின் மீது கால்களை நீட்டி, அவரை, குறுகிய இடத்தில் ஒடுங்கிய நிலையில் அமரச் செய்தார். விமான பணிப்பெண் விண்ணப்பம் ஒன்றை ரானோவிடம் பூர்த்தி செய்யக் கொடுத்ததும், அவர் எழுத முனைந்தபோது உடல் சற்று அசைந்தது. பாபா உடனே, "**நீங்கள் ஏன் நகர்ந்தீர்கள்?**" என்று குறிப்பாக, பணிப்பெண்ணின் முன்னிலையில் கேட்டதும், ரானோ வெட்கத்தில் தலைகுனிந்தார்; ஆனால் பாபாவின் நோக்கமும் இதுதான்!

விமானத்தில் இரண்டு குழந்தைகள் பாபாவைப் பார்த்த நேரத்திலிருந்து அவர் அருகில் அடிக்கடி வந்து சென்றனர். அவருடைய அன்பான வருடலால் ஈர்க்கப்பட்ட குழந்தைகள் பாபாவுக்குத் தொந்தரவாக இருந்ததை நினைத்து

தாயார் மன்னிப்புக் கோரினார்.

1952, **ஏப்ரல்** 20 காலையில், மெஹர் பாபா மற்றும் குழுவினர் **நியூயார்க்கின் ஐடில்வைல்ட்** (JFK) விமான நிலையத்தில் தரையிறங்கிய வேளையில், அங்கு எலிஸபெத், மார்கரெட், டிலியா, ருவானோ, டாக்டர் டான் ஆகியோர் அவர்களை சந்தித்தனர். அவர்கள் '**பென்**' ரயில்நிலையத்திற்கு எதிரே அமைந்த 'ஹோட்டல் ஸ்டாலரில்' அன்றைய தினம் தங்கினர். அன்று ஞாயிற்றுக்கிழமை, பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டிருந்ததால், 'டபிள்யூ. 49' வீதியில் இந்திய உணவகமான 'சிலோன் இந்தியா விடுதி'க்குச் செல்வதில் திருப்தி அடைய வேண்டியதாயிற்று. டாக்டர் கோஹெர் உடல் நலக் குறைவாக உணர்ந்ததால் பாபா, சிறிதளவு எதையேனும் உண்ணுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த நேரத்தில் நியூயார்க் நகரைச் சார்ந்த **ஜான் பாஸ்** பாபாவை ஐந்து நிமிடங்கள் சந்தித்தார். பின்னர் அவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபாவின் முன்னிலையில் இவ்வளவு சிறப்புமிக்க தெய்வீகத்தை உணர்ந்த எனக்கு, அதை எப்படி விவரிப்பது என்று தெரியவில்லை. இது, இதற்கு முன்னரும் பின்னரும் நான் உணராத ஒன்று: பாபாவின் அதீத சக்தி மற்றும் ஆற்றலின் உணர்வு. அதே நேரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அமைதி என்னில் ஊடுருவியதால், நான் அந்த நேரத்தில் அறைக்கு வெளியே இருந்த எலிஸபெத்திடம், 'ஆனால், எலிஸபெத், பாபா மிகவும் உன்னதமானவர், அற்புதமானவர்!' என்று கூறியதற்கு எலிஸபெத், 'ஆமாம், பாபா, அவர் என்னவாக இருக்கிறாரோ அவரேதான்' என்று பதிலளித்தார்.

எலிஸபெத், மார்கரெட், டிலியா, ருவானோ ஆகியோருடன் பாபாவும் பெண்மணிகளும் நியூயார்க் 'பென்' ரயில் நிலையத்திலிருந்து தெற்கு கரோலினாவின் **ஃபுளோரன்ஸ்** நகருக்கு நள்ளிரவில் ரயிலில் புறப்பட்டனர்; டாக்டர் டானும் அவர்களுடன் இணைந்தார். பாபாவை எவரும் பார்க்கக்கூடாது என்பதால், **ஃபிலிஸ் ஃபிரடெரிக், அடீல் வோல்கின்** இருவரும் தவிர்க்க முடியாத ஆர்வத்தால், ரயில் நிலையத்திற்குச் சென்று, மூன்றாம் மாடி பால்கனியில் சில பெரிய தூண்களுக்குப் பின்னால் மறைந்து நின்று, அவரைப் பார்க்க முயன்றனர். அவர்கள் வெகு தொலைவில் இருந்தாலும், பாபா சிரித்துக்கொண்டே ஃபிலிஸ், அடீல் இருவரையும் நோக்கி கையை அசைத்தார், அவருடைய எழுத்துப்பலகையில் அவர்களின் புதிய புனைப்பெயரான '**ஃபிலாடில்**' என்று உச்சரித்தார்.

1952, **ஏப்ரல்** 21 அன்று காலை ஃபுளோரன்ஸ் சென்றடைந்ததும், பாபாவும் குழுவினரும் காரில் '**மர்டில் பீச்**'சிற்குப் புறப்பட்டனர். ஆன்மீக மையத்தில் அமைந்த அவரது இல்லத்தில் பாபாவுக்காக **நோரினா** காத்திருந்தார். நோரினாவின் சமீபத்திய இதயக் கோளாறு காரணமாக, அவரால் நியூயார்க் செல்ல முடியவில்லை.

நோரினா, எலிஸபெத் இருவரும் பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, ஆன்மீக மையத்தில் அனைத்தையும் தயார் செய்வதில் தங்கள் இதயபூர்வமான முழு ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அவர்களின் ஆழ்ந்த பக்தியையும் சேவையையும் பாபா அங்கீகரித்தார். நோரினாவை அன்புடன் அரவணைத்து, அவர் குழுவிடம் கூறினார், "**நீங்கள் எனக்காகச் செய்த அனைத்திலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் - இந்த இல்லம், ஏரி, கடல், சுற்றுப்புறங்களின் அற்புதமான காட்சிகள். அனைத்தும் என் விருப்பத்திற்கு இணங்கினார் போல் உள்ளது.**

"**நான் இங்கு இருப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், அனைத்திற்கும் மேலாக, எனது பணி மற்றும் வசதிக்காக இத்தகைய தனித்துவமான இடத்தைத் தயார் செய்வதில், கடந்த பல ஆண்டுகளில் எலிஸபெத், நோரினா இருவரும் காட்டிய அன்பும், பக்தியும் என்னை ஆழமாகத் தொட்டுள்ளது. என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றும் முயற்சியில், எந்த ஒரு விவரமும் விடுபடவோ, செலவும் மட்டுப்படுத்தவோ படவில்லை - அனைத்தும் உண்மையான அன்பின் உழைப்பு - இதயத்திலிருந்து நேரடியாக, தங்குதடையின்றி செலுத்தப்பட்ட அன்பு. ஆகையால் நான் இந்தப் பரிசை ஏற்றுக்கொள்கிறேன்.**"

பாபா, மீண்டும் எலிஸபெத், நோரினா இருவரையும் தழுவி, தொடர்ந்து, "**இந்த முறை எனக்குப் பல இல்லங்கள் உள்ளன. நான் அரண்மனைகளிலும், எளிமையான இல்லங்களின் கான்கிரீட் தளங்களிலும் எனது தலையைத் தரையில் வைத்தேன்.**" பின்னர், ஆன்மீக மையத்தை நோக்கி சைகையால் சுட்டிக்காட்டி, "**ஆனால் நான் விஜயம் செய்த அனைத்து இல்லங்களிலும், இது என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான ஒன்று, ஏனென்றால் இது, அத்தகைய அன்புடன் எனக்காகக் கட்டப்பட்டது.**"

ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு, "**நான் ஒருபோதும் வெளியேற மாட்டேன், நினைவில் கொள்ளுங்கள், நான் ஒருபோதும் வெளியேறப் போவதில்லை, ஏனென்றால் இது எனது இல்லம்**" எனக் குறிப்பிட்டார்.

மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் ஆகியோர் விருந்தினர் மாளிகையிலும், ரானோ, கிட்டி, மார்கரெட், டிலியா ஆகியோர் வேறு அறை ஒன்றிலும் தங்க வைக்கப்பட்டனர். எலிஸபெத், நோரினா இருவரும் அருகாமையில் 'லாக்' கேபினிலும் (LOG CABIN) தங்கினர். எலிஸபெத் அடுத்த நாள் காலை, பாபா மற்றும் பெண்மணிகளை ஒரு சுற்றுப்பயணத்தில் அழைத்துச் சென்று, முழு நிலத்தையும் பார்வையிட்டார். சுற்றுப்பயணத்தின் முடிவில், பாபா இருவரிடமும் (எலிஸபெத், நோரினா) கூறினார், "**நான் மிக்க மகிழ்ச்சியடைவது மட்டுமில்லாமல், எனக்காக இதையெல்லாம் செய்யத்**

**தூண்டுதலாக இருந்த உங்கள் அன்பினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்."**

பாபா மற்றும் பெண் மண்டலிக்கான உணவுகளை ருவானோவின் மேற்பார்வையில் **பெஸ்ஸி கிரஹாம்** தயார் செய்தார். பிற அனைவருக்கும் தேவையான உணவைத் தயார் செய்ய வேறொரு சமையல்காரர் (கருப்பர்) நியமிக்கப்பட்டிருந்தார். முற்றிலும் முரண்பாடான விஷயம் என்னவெனில், சமையல்காரர்கள் காலை, மதிய உணவுகளில் முட்டை, கோழி போன்ற அசைவ வகைகளை உண்டு மகிழ்ந்தாலும், பாபாவின் கட்டளைப்படி பெண் மண்டலி சைவ உணவில் திருப்தி அடைய வேண்டியிருந்தது. இருப்பினும், பிற அன்பர்களுக்கு, அவர் இவ்வாறு எடுத்துரைத்தார்: "**சைவ உணவு உண்பவர்கள், தாம் விரும்பிய சைவ உணவைப் பின்பற்றவும், அசைவ உணவு உண்பவர்கள் மாமிசம் உண்ணவும் நான் அனுமதிக்கிறேன்; நான் எந்தவிதமான பழக்கவழக்கத்திலும், மதச்சடங்குகளிலும் தலையிடுவதில்லை. கடவுள் மீதான அன்பு ஒன்றைத் தவிர இந்த விஷயங்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. கடவுள் மீதான அன்பு என்பது சுய நிராகரிப்பு, மனக் கட்டுப்பாடு மற்றும் அகந்தையை அழித்தல்.**"

ஐந்து ஆண் மண்டலி ஏப்ரல் 24 அன்று மர்டில் பீச் வந்து சேர்ந்தனர், அவர்கள் வெளி உணவகங்களில் உண்டாலும், அறிவுறுத்தியபடி சைவ உணவை மட்டுமே உண்டனர். குஸ்தாஜி நீண்ட காலமாக சைவ உணவு உண்பதை வழக்கமாகக் கொண்டாலும், அவர் ஐஸ்கிரீம் மீது தீராத நாட்டம் கொண்டிருந்தார். அமெரிக்காவில் ஐஸ்கிரீம் தாராளமாகக் கிடைத்ததால், குஸ்தாஜி காலை, மதியம் மற்றும் இரவு உணவு வேளைகளில் ஐஸ்கிரீம் உண்டு மகிழ்ந்தார்!

பாபா தினமும் காலை 5:00 மணிக்கு எழுந்து, விருந்தினர் மாளிகையில் பெண் மண்டலியுடன் தேநீர் அருந்திவிட்டு, தனது அன்பர்களை சந்திக்க 'அசல் சமையலறைக்கு (ORIGINAL KITCHEN) நடந்து செல்வது வழக்கம். அதைத் தொடர்ந்து, பெண்மணிகளுடன், கடலுக்கு நடந்து செல்வது அல்லது ஏரியின் மீது வெனிஸ் கோண்டோலாவில் சவாரி செய்வதை வழக்கமாகக் கொண்டார்.

படகு என்றாலே டிலியாவுக்கு பயம், ஆதலால் பதட்டத்துடன் அதில் நுழைந்தார். அவருடைய படபடப்புடன் கூடிய நகர்வுகளும், பதற்றத்தில் எழுப்பும் உரத்த குரலும் படகை உலுக்கிய காட்சி, பாபாவை மிகவும் ரசிக்கச் செய்தது. இதர இரண்டு கறுப்பின தொழிலாளர்கள், ஃபிராங்க் டிங்க்ஸ், ஜார்ஜ் ஃப்ரிங்க்ஸ், மர்டில் பீச் மையத்தில் பணிபுரிந்தனர், மேலும் பாபா, அவர்களைத் தனது

நடைப்பயணத்தில் கடந்து செல்லும்போதெல்லாம், அவர்களை அணைப்பது, கைகுலுக்குவது அல்லது தட்டிக் கொடுப்பது வழக்கம்.

கடந்த வருடம் 1951ல், பாபா, எலிஸபெத், நோரினா இருவருக்கும் எழுதினார்:

(1951) **அக்டோபர் 16 முதல் 1952 பிப்ரவரி 16 வரையிலான எனது பணியின் முடிவுகள் மேற்கத்திய உலகில் முழுமையாக வெளிப்படுவதற்கு - முழு வெற்றியுடன் அல்லது முழு தோல்வியாக - முதல் இரண்டு வாரங்கள், நான் அமெரிக்காவில் தங்கும் நேரத்தில் ஏகாந்தவாசம் மேற்கொள்ள வேண்டும். எனவே நான் இந்தியாவிலிருந்து புறப்படும்போதோ அல்லது அமெரிக்கா வந்துசேரும்போதோ எந்தவிதமான விளம்பரத்தையும் விரும்பவில்லை. இந்த முதல் இரண்டு வார ஏகாந்தவாசத்திற்குப் பிறகு, நான் எங்கும் எல்லோரையும் சந்திப்பேன், ஏனென்றால் இறுதியில் நான் எனது நான்கு மாத உழைப்பின் முடிவுகளை உலகுக்கு வழங்க வேண்டும்.**

அதற்கேற்ப, பாபா சில சமயங்களில் தனது பணியின் நிமித்தம் மையத்தில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். அவர் தங்கியிருந்த முதல் இரண்டு வாரங்களில் தனிப்பட்ட நேர்காணல்கள் எதையும் வழங்கவில்லை என்றாலும், அவர் தனது அன்பர்களுக்குச் சில விஷயங்களை விளக்கினார்.

1952, ஏப்ரல் 25 வெள்ளிக்கிழமை, பாபா கேள்விகளுக்குப் பதிலளித்த வேளையில், பல்வேறு விஷயங்களை விளக்கினார், அவற்றில் '**அற்புதங்கள்**' குறித்த விளக்கம் கீழ்வருமாறு:

**"ஏற்கனவே உருவாக்கப்பட்ட சக்திவாய்ந்த, எல்லையற்ற மாயையில் நாம் ஏன் சின்னஞ்சிறிய போலி மாயைகளை உருவாக்க வேண்டும்? ஆன்மீக நோக்கத்திற்காக இறைவனை நோக்கி, மனிதகுலத்தை, பொதுவாக அழைத்துச் செல்வதற்கு முற்றிலும் தேவைப்பட்டாலொழிய, இயற்கைக்கு மாறான அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் புரிவது கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட பரிணாம செயல்முறையில் தலையிடுவதாகும்."**

"மோசமான உடல்நிலையிலிருந்து குணப்படுத்துவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார்.

**"உண்மையில் குணப்படுத்துவது என்பது ஆன்மீக ரீதியில் அதை சீராக்குவதாகும்; இதன் மூலம் ஆன்மா, ஆசைகள், சந்தேகங்கள், பொய்த் தோற்றங்கள் போன்றவற்றிலிருந்து விடுபட்டு, கடவுளின் நித்திய பேரின்பத்தை அனுபவிக்கும். உரிய நேரத்தில் அல்லது பொருந்தாத வேளையில் வழங்கும் உடல் சிகிச்சை ஆன்மீக சிகிச்சையைத் தாமதப்படுத்தலாம். உடல் மற்றும் மன துன்பங்களை முழு விருப்பத்துடன் தாங்கிக்கொண்டால், ஆன்மீக பலனைப் பெறுவதற்குத் தகுதியுடையவராக**

**மாறலாம். உடல் மற்றும் மன கஷ்டங்களை, கடவுளின் பரிசுகளாகக் கருதி, மனதார ஏற்றுக்கொள்வது, நித்திய மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.**"

மேலும் ஒருவர், "இந்த மேற்கத்திய பயணத்தின் போது உங்கள் மௌனத்தைக் கலைப்பீர்களா பாபா?" என வினவினார்.

பாபா பதிலளித்தார், "**கடவுள் தனது எல்லையில்லா, அவருக்கே உரித்தான மௌனத்தை அனுபவிப்பவர்களைத் தவிர, எப்பொழுதும் மௌனமாக, பிறரால் கவனிக்கப்படாமல், கேட்கப்படாமல் பணிபுரிகிறார். எனது மௌனம் பேச முடியவில்லை என்றால், நாவால் பேசப்படும் வார்த்தைகளால் என்ன பலன்? நான் பேசுவதை இறைவன் விரும்பும் அந்தத் தருணத்தில் எனது மௌனத்தைக் கலைக்கச் செய்து, உலகளவில் கேட்கச் செய்வார்.**

"**பெரும்பாலான நபர்கள், தமது கர்ம வினையின் காரணமாக பாதிக்கப்படுகின்றனர். சிலர் பிறருக்காகத் துன்பப்படுகிறார்கள். குருநாதர்கள் முழுப் பிரபஞ்சத்திற்காகவும் துன்பங்களை அனுபவிக்கிறார்கள்.**"

பாபா, "**கடவுள், கற்றறிந்து, ஆராய்ந்து, கருத்தார்ந்து பேசவோ, விவாதிப்பதற்கோ அல்ல. அவரை, சிந்தனை செய்யவும், உணரவும், நேசிக்கவும், வாழவும் வேண்டும்**" என்று எழுத்துப்பலகையில் எடுத்துரைத்து முடித்தார்.

ஜீன் அட்ரியல் 1948ஆம் ஆண்டு கலிஃபோர்னியாவிலிருந்து பாபாவை சந்திக்க இந்தியா வந்தபோது, '**மெஹர் மவுண்ட்**' என்று அழைக்கப்படும் கலிஃபோர்னியாவின் '**ஓஹய்**' (OJAI) பராமரிப்பு, 45 வயதான **ஆக்னஸ் பேரொனின்** பொறுப்பில் இருந்தது. மார்கரெட் க்ராஸ்கே, கோடையில் ஆக்னஸை சந்தித்து, பாபாவைப் பற்றி மேலும் கூறினார். ஆக்னஸ், மெஹர் மவுண்டில் வாழ்ந்து வந்த ஆறு வருடங்களில், ஓஹய் தோட்டத்தை நிர்வகிப்பதிலும், தன் வசம் வைத்து, அதைப் பேணி பாதுகாப்பதிலும் ஒன்றன் பின் ஒன்றாக பல சிரமங்களை எதிர்கொண்டார். ஜீன் புறப்படுவதற்கு முன்னர், அவர் ஒரு புதிய குழுவை உருவாக்கி, அடமானத்தைச் செலுத்த முன்வந்த ஒரு நபரை அதில் அறிமுகப்படுத்தினார். பின்னர் அந்த நிலத்தில் ஹோட்டல் ஒன்றை எழுப்பி, அதை ஒரு மனநல மையமாக மாற்றத் திட்டமிட்டுள்ளதை ஆக்னஸ் கண்டுபிடித்தார்.

ஆக்னஸ், பாபாவிற்காக ஓஹய் தோட்டத்தைப் பேணி பாதுகாக்க, கடுமையாகப் போராடினார், மேலும் இதுகுறித்த இக்கட்டான சூழ்நிலைகளை விவரித்து பாபாவுக்கு எழுதினார், "உங்களுக்கு மெஹர் மவுண்ட் வேண்டுமாயின், எப்பாடுபட்டேனும், எந்த நரகம் மற்றும் சாபத்தை சம்பாதிக்க வேண்டியிருந்தாலும், உங்களுக்காக அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பேன்!"

பாபா அதை எல்லா வகையிலும் பாதுகாக்க வேண்டும் என்று பதிலளித்து, ஆக்னஸ் மீதான அவரது அன்பை வெளிப்படுத்தினார்.

இதற்கிடையில், 'ஜான் குக்' என்ற இளம் ஆங்கிலேய செல்வந்தர் இதில் தலையிட்டார். அவர் பல ஆண்டுகளுக்கு முன்னர், ஐரோப்பாவில் பாபாவை சந்தித்து அவரை நேசித்தார். அவரது உதவியுடன், ஆக்னஸ் தான் எதிர்கொண்ட பயங்கரமான நிதிச் சிக்கல்களைச் சமாளித்து, நேர்மையற்ற நில உருவாக்குநரிடமிருந்து சொத்தின் கட்டுப்பாட்டை மீட்டெடுத்தார்.

மர்டில் பீச் மையத்தில் தங்கிய பின்பு, பாபா, மெஹர் மவுண்டிற்குச் செல்ல ஒப்புக்கொண்டார். '**அக்னி**'யை (ஆக்னஸுக்கு பாபா வைத்த சமஸ்கிருத செல்லப்பெயர், அதன் அர்த்தம் நெருப்பு) சந்திக்க விரும்பினார். பாபா அமெரிக்காவிற்கு வரும் நாளை மார்கரெட், ஆக்னஸுக்குத் தெரிவித்திருந்தார். அவர் அமெரிக்கா வந்ததும், ஏப்ரல் 26ஆம் நாள், மர்டில் பீச்சில் பாபாவை சந்திக்குமாறு ஆக்னஸுக்குத் தொலைத்தந்தி அனுப்ப மார்கரெட்டிற்கு அறிவுறுத்தினார். இதற்கிடையில், ஆக்னஸ் ஏற்கனவே வீட்டை விட்டு வெளியேறியதால் தொலைத்தந்தியைத் தவறவிட்டார், ஆனால் ஒரு விசித்திரமான சூழ்நிலையால் மிகவும் தாமதமாக இருப்பதை உணர்ந்து, அவர் 25ஆம் தேதி மர்டில் பீச்சிற்குத் தாமதமாகத்தான் வந்துசேர இயலும் என்று நினைத்தார். அங்கு வந்ததும், மெஹர் ஆன்மீக மையத்தைப் பற்றி கேட்டபோது எவருக்கும் எதுவும் தெரியவில்லை. தற்செயலாக, அன்றிரவைக் கழிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்த ஹோட்டலில் பணிபுரிந்த பெண்மணி, தனது கணவர், திருமதி எலிஸபெத் பேட்டர்ஸனின் கட்டிடக் கலைஞர் என்று கூறினார். ஆக்னஸ் மையத்திற்கான தொலைபேசி எண்ணைப் பெற்றுக்கொண்டு எலிஸபெத்தை அழைத்தார். எலிஸபெத் பதிலளித்து, மறுநாள் காலை அவரை அங்கிருந்து அழைத்துச் செல்வதாக ஆக்னஸிடம் கூறினார்.

அடுத்த நாள், 1952, ஏப்ரல் 26, ஆக்னஸ் மர்டில் பீச் மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் மார்கரெட்டை சந்தித்தபோது, பாபாவின் தொலைத்தந்தியைப் பெறவில்லை என்றாலும், அவர் தாமதமின்றி, 'சரியான நேரத்தில்' வந்ததைத் தெரிந்துகொண்டார். காலை உணவுக்குப் பிறகு, பாபா ஏற்கனவே காத்திருந்த 'லகூன் கேபினுக்கு' (LAGOON CABIN, நேர்காணல் அறை) ஆக்னஸ் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது ஆண் மண்டலி எவரும் உள்ளே அவருடன் இல்லை. ஆக்னஸ், பாபாவுடன் அவரது முதல் தருணங்களை இவ்வாறு விவரிக்கிறார்:

அதை விவரிக்க வார்த்தைகள் இல்லை. அது மிகவும் அருமையான தருணம். எனது சந்தேகங்கள் அனைத்தும் ஜன்னலுக்கு வெளியே பறந்தன. பாபா செய்த முதல் காரியம், அவர் கைகளைத் திறந்து, எனது தலையை அவர் தோளில் வைத்ததுதான். பாபா உங்களைக் கைகளால் தழுவும் போது, இந்த

உலகத்திற்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று உங்களுக்கு நிகழ்வதைப் போல் உணர முடியும். இது விவரிக்க முடியாதது. நான் சோஃபாவில் அமர்ந்து பார்த்ததும், உணர்ந்ததும் இரு வெவ்வேறு விஷயங்கள். மேலும் எந்தப் பகுத்தறிவுக்கும் இடம் தராமல், நான் அவரை 100 சதவிகிதம் ஏற்றுக்கொண்டேன். (பின்னர்) அவர் ஏதேனும் தவறிழைக்கிறாரா என்று நான் விழிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தேன், ஆனால் ஆழ் இதயத்தில் நான் ஏற்கனவே அவரை ஏற்றுக்கொண்டேன்.

உலகின் எல்லா பெரிய மஹான்களும் உபதேசித்ததையே பாபா நடைமுறைப்படுத்தினார் என்பதை, நான் பல வருடங்களாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தபோது உணர்ந்தேன்: நீங்கள் ஒருமுக நோக்குடன் இருக்க வேண்டும். கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மறந்துவிட்டு நிகழ்காலத்தில் கவனம் செலுத்துங்கள். பாபா அதை நூறு சதவிகித அளவிற்கு நடைமுறையில் செய்ததை நான் உணர்ந்தேன். அவர் என்ன செய்தாலும் - ஒரு நாயைத் தட்டிக் கொடுத்தாலும் அல்லது ஆன்மீக அறிவுரை வழங்கினாலும் அல்லது பிரபஞ்சத்தைக் காப்பாற்றினாலும் - அவர் அதை ஒரே கவனத்துடன் செய்தார். இது முற்றிலும் அற்புதமாக இருந்தது! அவர் உங்களுடன் பேசும் போது, நீங்கள் அதே கவனத்தை உணர முடிந்தது. வேறு எதையும் பொருட்படுத்தாதது, அவரது மகத்துவத்தின் சான்றாக இருந்தது.

மார்கரெட் மொழிபெயர்ப்பாளராக செயல்பட அழைக்கப்பட்டார். பாபா கூறினார், "**இந்த ஆறு வருடங்களில் 'மெஹர் மவுண்ட்' மனையை எனக்காகப் பேணி பாதுகாக்க அவர் என்ன செய்தார் என்பது, 'அக்னி', கடவுள், பாபா மூவருக்கு மட்டுமே தெரியும் என்பதை முதலில் அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.**"

ஆக்னஸ் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்து, "இது ஒரு பொருட்டே இல்லை, பாபா, இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை" என்றார். பாபாவின் முன்னிலையில் தனது அனைத்து பிரச்சினைகளையும் ஆக்னஸ் முற்றிலும் மறந்துவிட்டார்! அவர் மேலும் தொடர்ந்தார், "பாபா, நான் இங்கு வரும் வேளையில் கிட்டத்தட்ட கொல்லப்பட்டேன் என்று உங்களுக்குத் தெரியுமா?"

பாபா கைகளைத் தட்டி சைகையால், "**அற்புதம், அற்புதம்!**" என்றார்.

பாபா ஆறுதலை வெளிப்படுத்துவார் என எதிர்பார்த்து, ஆக்னஸ் குழப்பமடைந்து, பின்னர் அவர் கடுமையான மழையில் 'மர்டில் பீச்'சிற்கு வேறொரு பெண்மணியுடன், நாட்டின் முழு தூரத்தையும் வாகனத்தில் கடந்தபோது, மரணத்தின் விளிம்பை எட்டிய அனுபவத்தை விவரித்தார். பாபா கூறினார், "**மாயா தனது, மிகப்பெரிய அளவிலான தீய செயல்களைச் செய்யும்போது, கடவுள் கடினமாக உழைத்து, தன்னால் இயன்றவரை சிறப்பான ஒன்றைச் செய்ய வேண்டும்.**"

மெஹர் மவுண்டில் பத்து நாட்கள் தங்குவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பாபா அவரிடம் **"இப்போது எந்தச் சிக்கலுக்கும் உள்ளாகாதீர்கள்"** என்று திரும்பத் திரும்பக் கூறினார்.

"சிக்கல்!" என ஆக்னஸ் ஆச்சரியத்தில் கூறினார். "இத்தனை வருடங்களாக நீங்கள் வருவீர்கள் என நான் காத்திருந்தேன். எல்லாமே சுரண்டி, சுண்ணாம்பும், வண்ணமும் பூசியாகிவிட்டது."

**"இல்லை, இல்லை, இதற்கெல்லாம் எந்தத் தேவையும் இல்லை"** பாபா தொடர்ந்தார், **"நான் மரத்தடியிலோ அல்லது தரையிலோ தூங்கலாம், எந்தப் பிரச்சினைக்கும் இடம் தர வேண்டாம்."**

அதன் பின்னர் ஆக்னஸ் விவரித்தார்: "பாபாவின் 'பெருந்தன்மை' அவரது சின்னஞ்சிறிய அடக்கமான குறிப்புணர்த்தும் சைகைகளில் தென்பட்டது. அதுதான் என்னை எல்லாவற்றிலும் அதிகமாகக் கவர்ந்தது. ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு செயலிலும் நான் அதைக் கவனித்தேன். அது உங்களை முற்றிலுமாக வென்றுவிடும். எவ்வளவு மகத்தான அவர், தமது நிலைக்குக் கீழே இறங்கி வந்து 'சிறியதாக'த் தோற்றமளிக்கும் அளவுக்குத் தைரியம் வாய்ந்தவர்."

டாக்டர் டான், ஆதி இருவரும் வரவழைக்கப்பட்டனர்; பாபா அவர்களிடம், **"நீலு, குஸ்தாஜி, மெஹர்ஜி ஆகியோருடன் கலிஃபோர்னியாவுக்குச் சென்று, ஆக்னஸ் எனது வருகையை எதிர்நோக்கித் தயார் நிலையில் இருக்க உதவுமாறு நான் விரும்புகிறேன்"** என்று அறிவுறுத்தினார்.

"ஆனால் பாபா, எல்லாம் தயாராக உள்ளது. எல்லாம் ஏற்கனவே முடிந்துவிட்டது" என்றார்.

ஆயினும்கூட, பாபா, அவருக்கே உரித்தான காரணங்களைக் கூறி, மண்டலி, மர்டில் பீச்சிலிருந்து நேராக வழியில் நிற்காமல், அங்குச் சென்று, அவருடைய வருகைக்காகக் காத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். அவர் ஆக்னஸுக்கு, அடுத்த நாள் மெஹர் மவுண்டிற்குத் திரும்பும்படி கட்டளையிட்டார்.

'மர்டில் பீச்' மையத்திற்கு வருகை தந்த மற்றுமொரு நபர், டார்வின் ஷாவின் 20 வயது மகன் '**லோவெல்**'. பாபா, அந்த இளைஞன் தனது இரவு பாதுகாவலராகப் பணிபுரிய வேண்டும் என்று விரும்பினார், எனவே பாபாவின் விருப்பத்தைத் தெரிவிக்க மணி, நியூயார்க்கின் 'ஸ்கெனக்டெடி'யில் வாழும் ஷா குடும்பத்தினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். லோவெல் இரவு முழுவதும் ஸ்கெனக்டெடியிலிருந்து மர்டில் பீச் வரை பயணம் செய்து 26ஆம் தேதி வந்தார்.

மறுநாள் காலை வேளையில் ஃபிராங்க் ஈட்டனின் 'கெயர்டேக்கர் கேபினில்' சவரம் செய்துகொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் தோளில் கை

வைத்துத் தட்டியதை உணர்ந்த அவர், திரும்பிப் பார்த்ததும் அங்கு, பாபாவின் கண்களை நேராக பார்க்க நேர்ந்தது. அன்றிரவு அவர் பாபாவின் இல்லத்திற்குச் சென்று இரவு காவலராகப் பணிபுரிந்தார். மையத்தில் அமைந்த இதர கேபின்களில் அவர்கள் தங்கியிருந்ததால், மண்டலியில் எவரும் அருகில் இல்லை. பாபா, லோவெலிடம் மின் ஒலியெழுப்பியைச் சுட்டிக்காட்டி, முன் அறையின் குறுக்கே அமைந்த படுக்கையறைக்குள் சென்று ஓய்வெடுக்குமாறு சைகையால் தெரிவித்தார்.

லோவெல் கூறினார், "ஆனால் பாபா, நான் பயணத்தால் மிகவும் சோர்வாக உள்ளேன், நான் தூங்கிவிட்டால், அந்த ஒலி எனக்குக் கேட்காது."

பாபா வலியுறுத்தி கூறியபோது லோவெல் அங்கிருந்து வெளியேறினார், ஆனால் அவரது கணிப்பு உண்மையாகிவிட்டது. அவர் படுக்கையில் சாய்ந்ததும், ஆழ்ந்து தூங்கினார், இரவு முழுவதும் பாபா தன்னை வருமாறு கைதட்டி அழைத்தது அவருக்குக் கேட்கவில்லை.

அடுத்த நாள் காலையில், பாபா, லோவெல் தூங்குவதைப் பற்றி கேலி செய்தார். அவர் மெஹர்ஜி, ஸரோஷ் இருவரையும் அழைத்து, அவர்கள் மூலமாக லோவெலுக்கு, "**இரவு பாதுகாவல் பணி உங்களுக்கு ஒத்துவராது. இல்லத்திற்குச் சென்று உங்கள் படிப்பில் கவனம் செலுத்துங்கள். உங்கள் பெற்றோர் வற்புறுத்தினால், அவர்களுடன் மர்டில் பீச்சுக்கு வாருங்கள்**" என்று தெரிவித்தார்.

டார்வினும் ஜீன் ஷாவும் தங்கள் மகன் இந்த முறையில் பாபாவுக்கு சேவை செய்ய அழைக்கப்பட்டதில் மகிழ்ச்சி அடைந்தனர். லோவெல், பாபாவுக்கு சேவை செய்ய ஆர்வமாக இருந்தார், ஆனால் அந்தக் கடமையை அவரால் செய்ய முடியவில்லை. பாபாவுடனான இந்தக் குறுகிய தொடர்பு, லோவெல் மீது ஆழமான மற்றும் அற்புதமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் வீடு திரும்பியபோது, பாபாவின் அன்பால் நிரம்பிய தோற்றத்துடன் காணப்பட்டதாக, அவரது பெற்றோர் பின்பு தெரிவித்தனர், இது அவரிடமிருந்து மிகையாக வெளிப்பட்டதை ஸ்கெனக்டடியில் உள்ள அவர்களது நண்பர்களும் உணர்ந்தனர்.

ஏப்ரல் 27, ஞாயிற்றுக்கிழமை அன்று, ரானோ மற்றும் ஆக்னஸுடன் லோவெல் மர்டில் பீச்சிலிருந்து நியூயார்க்கிற்குப் புறப்பட்டார். ரானோ, ஏறக்குறைய பதினாறு வருடங்களுக்குப் பிறகு, தனது சகோதரர் கிளிஃபின் குடும்பத்தினரைப் பார்க்க நியூயார்க்கிற்குச் சென்று கொண்டிருந்தார்; ஆக்னஸ் கலிஃபோர்னியாவுக்குத் திரும்பிச் சென்றார்.

மர்டில் பீச் மையத்தில் பணிபுரியும் ஒரு கறுப்பினத்தைச் சார்ந்த இளைஞருக்கு, இரவுக் கண்காணிப்புப் பணி வழங்கப்பட்டது; ஆனால் ஓர் இரவுக்குப் பின்னர், அவர் தனது வருங்கால மனைவியைப் பிரிந்து இருக்க விரும்பாததால், வீட்டிலேயே தங்கி தனது வழக்கமான கடமையைச்

செய்வதாகக் கூறினார். எனவே டாக்டர் நீலு, மெஹர்ஜி, ஆதி மூவரும் இரவு நேரக் கண்காணிப்புப் பணியைப் பகிர்ந்துகொண்டனர்.

பாபா மண்டலியுடன் இருந்தபோது, '**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) என்ற புத்தகத்திற்கான டாக்டர் கனியின் கையெழுத்துப் பிரதியை, மெஹர்ஜி வாசிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். ஐவி டியூஸ் மற்றும் ஃபிரான்சிஸ் பிராபஸனின் வருகைக்கான தயாரிப்பில், ஆதி சீனியரிடம் ஸுஃபி தத்துவ நூல்களைப் படிக்குமாறு அறிவுறுத்தினார்.

மே 6ஆம் தேதி, டாக்டர் டான், ஆதி சீனியர், ஸரோஷ் ஆகியோர் 'கான்வே'க்குச் சென்று ஓட்டுநர் உரிமங்களைப் பெற்றுக்கொண்டனர்.

டிலியாவுக்கு, பாம்பு என்றால் பயம், மேலும், மர்டில் பீச் மையம் பாம்புகளால் நிரம்பியிருந்தது, அவற்றில் சில விஷம் நிறைந்தவை. லண்டனிலிருந்து வந்த பழைய, பரிச்சயமான நண்பர் என்பதால், ஒரு நாள் டாக்டர் டான் அவரை ஏமாற்ற முயன்றார். அவர் ஒரு சிறிய பாம்பைக் கொன்று, அதை வட்டமாகச் சுற்றி, டிலியாவின் தட்டில் வைத்து, வெள்ளை துணியால் மூடிவைத்தார். டிலியா மதிய உணவிற்காக அமர்ந்து, துணியை அகற்றியபோது, அவர் கண்ட காட்சியால் பெரிதும் திகிலடைந்த வேளையில், இதர அனைவரும் அடக்கமுடியாத சிரிப்பு ஆரவாரம் செய்தனர்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், கிட்டி, உண்மையான பாம்பு என்று நினைத்ததை ஒரு கழியால் அடித்துக் கொண்டிருந்தார். நண்பர்களில் ஒருவர் அவரைத் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து, யாரோ அவரை ஏமாற்றுவதற்காக அவர் பாதையில் வைத்த போலி ரப்பர் பாம்பு என்பது தெரியவந்தது. மெஹர் பாபாவின் சீடர்களின் குறும்புத்தனமும், நகைச்சுவையும் அப்படித்தான் இருந்தது.

எலிஸபெத் பாபாவின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்ததால், '**மெஹர் ஆன்மீக மையம்**' இன்னும் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்படவில்லை. அவர் இங்குத் தங்கியிருந்த காலத்தில், மெஹர் பாபா 1952, மே 9 அன்று மையத்தைத் திறந்து வைத்து, அன்று முதல் அவரது அமெரிக்க அன்பர்கள் சிலரை சந்திக்க அனுமதித்தார். காலை எட்டு மணி முதல் '**லகூன்**' கேபினில் தனிப்பட்ட மற்றும் கூட்டு நேர்காணல் நடைபெற்றது. ஐவி டியூஸ், அவரது மகள் சார்மியன் இருவரும் பாபாவை முதலில் சந்தித்தனர். அவர்களுடன் 45 வயதான '**பெர்னார்ட் ஃபிரான்சிஸ் பிராபஸன்**,' என்று அழைக்கப்பட்ட, ஆஸ்திரேலிய கடற்பரப்பிலிருந்து வந்த முக்கியமாக, குறிப்பிடத்தக்க 'பெரிய மீன்' ஒன்றும் இருந்தது.

ஃபிரான்சிஸ் பிராபஸன் பல வருடங்களாக, பாபாவை சந்திக்க முயன்று வந்தார். ஒரு கலைஞர், கவிஞர் மற்றும் எழுத்தாளர், ஃபிரான்சிஸ் ஆன்மீக

நாட்டம் மிக்கவர், மனோதத்துவ இலக்கியம் பயின்றவர். அவர் பாரசீக ஸுஃபிகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, பின்னர் ஆஸ்திரேலிய ஸுஃபி தலைவர் 'பரோன் வான் ஃபிராங்கன்பெர்க்' மூலம் ஸூஃபி தத்துவம் மற்றும் மெஹர் பாபா பற்றி அறிந்து கொண்டார். மெஹர் பாபாவை சந்திக்க முர்ஷிதா ரபியா மார்ட்டினுடன் 1946 செப்டம்பர் மாதத்தில் இந்தியாவுக்குச் செல்ல அவர் ஸான் ஃபிரான்சிஸ்கோவிற்கு அனுப்பப்பட்டார். ஆனால் ரபியா மார்ட்டின் புற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டு, 1947ல் அவர் காலமாவதற்கு முன்னர் இந்தியாவுக்குப் பயணம் செய்ய இயலாத சூழ்நிலை. பிராபஸோனால் தனியாகச் செல்லவும் முடியவில்லை. அடுத்ததாக நியமிக்கப்பட்ட ஸுஃபி முர்ஷிதா, ஐவி டியூஸ், ஜனவரியில் இந்தியாவில் பாபாவை சந்தித்து, திரும்பி வரும் வரை, அவர் அமெரிக்காவில் இருந்தார். 1948ல் ஐவி டியூஸ் திரும்பி வந்ததும், ஸான் ஃபிரான்சிஸ்கோவில் இருந்த ஃபிரான்சிஸிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 'மெஹர் பாபா அனைத்து ஸுஃபிகளின் குதுப் (தலைவர்)' என்று உறுதியளித்தார். ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிச்சென்று, கடினமாக உழைத்து, பணத்தைச் சேமித்து, பாபாவின் அழைப்புக்காகக் காத்திருக்கும்படி பிராபஸோன் அறிவுறுத்தப்பட்டார். அவர் அதே ஆண்டு பாபாவுக்கு இதயம் நிறைந்த கடிதம் ஒன்றை எழுதினார். 1950ல், வான் ஃபிராங்கன்பெர்க் காலமான பின்பு, ஃபிரான்சிஸ் பிராபஸன், ஐவியால் ஆஸ்திரேலிய ஸுஃபிகளின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பிரான்சிஸ் பிராபஸோன் ஆஸ்திரேலியாவில் மிகவும் மதிக்கப்பட்டவர், மேலும் ஒரு காலத்தில் மஞ்சள் நிற அங்கியை அணிந்து 'ஷேக்' எனக் குறிப்பிடப்பட்டார். அவரே **ஸிட்னி** நகரில் '**பீக்கன் ஹில்**'லில் பாபாவுக்காக வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தார். 1952ஆம் ஆண்டில், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக ஃபிரான்சிஸ் ஆஸ்திரேலியாவிலிருந்து நியூயார்க்கிற்குச் சென்றபோது, பாபாவின் வருகை ஒத்திவைக்கப்பட்டதால் வாரக்கணக்கில் அங்கேயே இருக்க வேண்டியதாயிற்று.

ஐவி டியூஸ், சார்மியன் ஆகியோர் பாபாவை மே 9ஆம் நாள் காலை 8:00 மணிக்கு மர்டில் பீச் மையத்தில் சந்தித்தபோது, கண்ணீர் சிந்தி அழுதனர். ஐவி அந்தத் தருணங்களை விவரித்தார்:

நாங்கள் வந்ததும், மண்டலி, சார்மியனையும், என்னையும், பாபாவைப் பார்க்க நேரடியாக அழைத்துச் சென்றனர். அவருடைய தோற்றத்தைக் கண்டு, சொல்ல முடியாத அளவுக்கு அதிர்ச்சியடைந்தோம், ஏனென்றால் நான்கு வருடங்களுக்கு முன்பு, நல்ல உடல் நலத்துடன், திடகாத்திரமாகவும், சுறுசுறுப்பாகவும் தோட்டங்கள் வழியாக ஒரு சிங்கம் போல நடந்து சென்றதை நினைவுகூர்ந்தோம்; இப்போது சில தலை முடிகள் நரைத்து, மெல்லியதாகவும், கால்கள் வலுவற்று, இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர் போலத் தென்பட்டார்.

நாங்கள் கண்ணீர் விட்டு அழுதோம். "**நான் நன்றாக இருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கவில்லையா? நான் நன்றாக இருப்பதாக எல்லோரும் கூறுகிறார்கள்**" என்று எங்களைப் பார்த்து பிரகாசமாகச் சிரித்து, தைரியப்படுத்த முயன்றார்.

ஆனால் நாங்கள் ஆறுதல் அடையாதபோது, அவர் எங்களுக்கு நினைவூட்டும் வகையில் தீவிரமாகத் தோன்றி, "**இது புது வாழ்வின் விளைவு; நான் மிகவும் சிரமப்பட்டேன், ஆனால் ஜூலை மாதத்திற்குப் பிறகு, நான் முன்பை விட வலுவாக இருப்பேன்**" என்று ஒப்புக்கொண்டார்.

பாபா, பின்னர் ஃபிரான்சிஸ் பிராபஸனை அழைத்து, "**உங்களை நான் பலகாலமாக அறிவேன்**" என்று குறிப்பிட்டு, "**ஆனால் அது உங்களுக்கு நினைவில் இல்லை, அப்படித்தானே?**" என்றதும் 'இல்லை' என்று ஃபிரான்சிஸ் ஒப்புக்கொண்டார். "**அது உண்மை என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்**" என்று பாபா உறுதியளித்தார்.

பின்னர் அவர்கள் ஸூஃபி அமைப்பு மற்றும் அதன் எதிர்காலத்திற்கான பாபாவின் திட்டங்களைப் பற்றி நீண்ட நேரம் உரையாடினர். ஆஸ்திரேலியாவில் தனது பணியை ஃபிரான்சிஸிடம் ஒப்படைக்குமாறு ஐவிக்கு பாபா அறிவுறுத்தினார்:


**நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். நினைவில் கொள்ள வேண்டிய முதன்மையான விஷயம் என்னவென்றால், கடவுள் உண்மையையும் நேர்மையையும் விரும்புகிறார்; நீங்கள் கடவுளுக்கும், எனக்கும் பணிபுரிய வேண்டுமாயின், நீங்கள் கடவுள், பாபா, பிற அனைவருக்கும் மற்றும் உங்களுக்கும் நேர்மையாக இருக்க வேண்டும். அதாவது, நாம் அறிவுரை வழங்குவதையும், கற்பிப்பதையும் அனுபவத்தால் உணர்ந்தால் மட்டுமே, நாம் ஸூஃபி தத்துவத்திற்கும், வாழ்க்கைக்கும் நேர்மையானவர்களாக இருக்கிறோம். நாத்திகனாக, கடவுளை நம்பாமல், தீயவவனாக இருப்பது, பாசாங்குத்தனத்துடன் கபடதாரியாக இருப்பதை விட மேலானது. எனவே, அந்த அடிப்படையில் நாம் செயல்பட வேண்டும். இதைப் புரிந்துகொண்டீர்களா? மேலும் நான் சொல்வது எனக்குத் தெரியும், அதை நான் உணர்கிறேன். எனவே, நான் செய்ய விரும்புவது அனைத்தும் எனது தெய்வீக அறிவின் அதிகாரத்தால் நிகழ்வதாகும்.**

**இப்போது, உலகளாவிய குழப்பம் ஆரம்பமாகும் நேரம் வந்துவிட்டது, நான் விரைவில் அதற்காகப் பணிபுரிய வேண்டும். அதனால்தான் நான் இந்தியாவை விட்டு வெளியேறும் முன், 1952 நவம்பரில் தொடங்கவிருக்கும் பணிக்கான தளத்தைத் தயார் செய்வதற்காக, இந்தியா, பாகிஸ்தான் முழுவதும் எனது நெருங்கிய சீடர்களை அனுப்பினேன். நவம்பர் மாதத்திலிருந்து, எனது 'அனல் பறக்கும் வாழ்வு' தொடங்கும். மேலும் அந்த**

**அனல் பறக்கும் வாழ்வு என்னவாக இருக்கும், அது எப்படி முடிவடையும் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் கவலைப்படமாட்டேன்; நான் எனது வேலையை செய்தாக வேண்டும். நான் திட்டமிடும் எனது பணி ஐந்து வெவ்வேறு அம்சங்களை உள்ளடக்கியது.**

ஸூ.:பி தத்துவத்தைப் பற்றி, அவர் தொடர்ந்து கூறினார்:

**இன்று காலை நானே இந்தச் சித்திரத்தை வரைந்தேன்** (**மேலும் ஆதி சீனியருக்கு வார்த்தைகளை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தேன்**):




**இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பாவில், நான் செய்ய விரும்பும் இந்தப் பணி, தயாராகி வருகிறது. ஆனால் இப்போது உங்களுடன், நான் ஸூ.:பி அமைப்பைக் குறித்து முடிவு செய்ய விரும்புகிறேன். பாபா, மையத்தில் இருக்கிறார், ஸூ.:பி அமைப்பிற்காக நீங்கள் செய்ய வேண்டிய பணியை நான் விரும்பியபடியே செய்ய வேண்டும். இதுவே உண்மையான ஸூ.:பி தத்துவம்; உண்மையான பணி எனது வழிகாட்டுதலால் செய்யப்படும்.**

**அதனால்தான், 100 சதவிகிதம் நீங்கள் அதைச் செய்ய தயாராக இருக்கிறீர்களா என்று நான் கேட்டேன்; நீங்கள் ஆமாம் என உறுதியளித்தீர்கள், ஏனென்றால் கடவுள், பாபா, மற்றும் பிரபஞ்சத்திற்காக இந்தப் பணி முழுவதும் 100 சதவிகிதம் மனம், இதயம் மற்றும் ஆன்மாவுடன்**

செய்யப்படவேண்டும். அதாவது, என் தலையைத் துண்டிக்கச் சொன்னால், நீங்கள் அதைச் செய்ய வேண்டும்!

முஸ்லீம்களுக்கு, மதுபானம் தடைசெய்யப்பட்டுள்ளது - ஒரு துளி உடலில் விழுந்தால் கூட, அந்தப் பகுதியைத் துண்டிக்க வேண்டிய அளவுக்குத் தீவிர தன்மையுடையது! ஆனால் ஸூஃபி தத்துவம் என்பது ஹாஃபீஸ் கூறுவது போல, மதுபானம் தோய்ந்த கம்பளத்தில் தொழுகை நடத்தும்படி உங்கள் குருநாதர் உங்களுக்குக் கட்டளையிட்டால், நீங்கள் அதைச் செய்ய வேண்டும். எனவே, நான் உங்களிடம் எதைச் செய்யச் சொன்னாலும், நீங்கள் அதைச் செய்ய வேண்டும்.

இப்போது, பிரியமான பிராபஸோனைப் பற்றி, எனக்காகவும், ஸூஃபி இயக்கத்திற்காகவும், கடவுளுக்காகவும் செய்ய வேண்டியதோடு, நீங்கள் மேலும் பெரிய அளவில் செய்யவும் தயாராக இருக்கிறீர்கள். எந்த அளவுக்கு, எவ்வளவு நீண்ட நெடிய காலத்துக்கு என்று எனக்குத் தெரியும். அதாவது உங்கள் உயிரை அர்ப்பணம் செய்து நான் சொல்வதைச் செய்வீர்களா?

"நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்," என்று ஃபிரான்சிஸ் கூறியதும் பாபா தொடர்ந்தார்.

அதனால்தான் உங்களைப் பார்ப்பது, இது முதல் முறையல்ல என்றேன். மேற்கில் நிலைநாட்டப்படும் ஸூஃபி அமைப்புக்கு நான்கைந்து தூண்கள் தேவை. 99 சதவிகித மக்களால் புரிந்து கொள்ளப்பட்ட ஸூஃபி தத்துவம், உண்மையான ஸூஃபி பாரம்பரிய தத்துவம் அல்ல. ஷேக், முர்ஷித், முரீத் போன்ற சொற்கள் மிகவும் இலகுவாக, வெறுமனே கையாளப்பட்டதால், உண்மையான ஸூஃபி தத்துவம் கண்ணில் தென்படுவதில்லை. ரூமி சொல்வது போல: "ஸூஃபி தத்துவத்தை அறிந்து கொள்வதற்கான ஒரே வழி வெறும் வார்த்தைகள், பயிற்சி அல்லது ஒழுக்கமுறை ஆகியவற்றால் அல்ல, குருநாதரின் கால்களின் தூசியாக மாறுவதில்தான் உள்ளது."

உண்மைப்பொருள் மறைக்கப்பட்டுள்ளது. ஒருவர் 'ஃபனா' (நிர்மூலமாகுதல்) நிலையை அடைந்து, 'பக்கா' (அழிவிலா) நிலையை அடையாதவரை, ஒருவரால் பிறரை பரிபூரண இறை நிலைக்கு எடுத்துச் செல்ல முடியாது. எனவே, அந்த நிலையை நாமே அனுபவிக்காதபோது பிறரிடம் நம்மைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்வது, நாம் ஸூஃபி பாரம்பரியத்தை அவமதிக்கிறோம் என்று அர்த்தம்; கிழக்கு மற்றும் மேற்கு எங்கும் இதுதான் செய்யப்படுகிறது.

கடவுளின் விருப்பத்திற்கிணங்க, நான் முழு அமைப்பையும் மாற்ற விரும்புகிறேன், முழு விஷயத்தையும் மறுசீரமைக்க விரும்புகிறேன், ஏனென்றால் நான் ஸூஃபி பாரம்பரியத்தை மனமார விரும்புகிறேன். இந்த

அம்சங்கள் அனைத்தும் எனக்குச் சொந்தமானது, ஆனால் ஸூ.:.பி தத்துவம் என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது. எனவே, நான் அதை மாற்றியமைக்க விரும்புகிறேன், அதற்காக நான் உங்களுக்குச் சொல்வதை நீங்கள் செய்ய வேண்டும். எந்த ஒரு விஷயத்திலும் நாம் தெளிவற்றவர்களாக இருக்கக்கூடாது; துல்லியமாக இருக்க வேண்டும்.

கடவுளின் பத்து நிலைகள் அடங்கிய எனது விளக்கப்படத்தைப் பார்த்தீர்களா? எல்லா கருத்துகளையும் டாக்டர் கனிக்கு எடுத்துரைத்தேன். அவர் அதில் பணிபுரிந்தார், ஆனால், இப்போது அதில் பாதிக்கு மேல் குறிப்பிடப்படவில்லை, பாதிதான் நான் விரும்பியபடி அமைந்துள்ளது.

எனது கையெழுத்துப் பிரதியை நான் இங்கு கொண்டு வந்துள்ளேன், எனக்கு வேளை கிடைக்கும் போது, முழு விஷயத்தையும் சரிபார்த்து தேவையான மாற்றங்களைச் செய்வேன். இந்தப் புத்தகம் அந்த வகையில் முதல் மற்றும் கடைசி புத்தகமாக இருக்கும். இன்று நான் அதை (புத்தகத்தை) அடிப்படையாக கொண்ட விளக்கப்படத்தை மட்டும் உங்களுக்குக் காட்டுகிறேன்; அது தயாரானதும், வெளியீட்டிற்காக உங்கள் வசம் ஒப்படைக்கலாம். இந்தப் புத்தகம் பாபாவின் குரான், பைபிள், அவெஸ்தாவாக இருக்கும். மிகவும் தனித்துவமானது.

பாபா, மூன்று வகையான ‘நம்பிக்கை’களைப் பற்றி விளக்கியபோது ஐவி, .:.பிரான்சிஸ் இருவரும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டனர், "எங்களுக்கு எதுவும் தெரியாது... நாங்கள் சூன்யமாக இருக்கிறோம்."

பாபா கூறினார்:

உங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொல்லும்போது, தெரிந்துகொள்ளும் நம்பிக்கை அதில் மறைந்திருக்கிறது. நான் விரும்புவது என்னவெனில்:

1) கிழக்கிலும் மேற்கிலும் ஸூ.:.பி இயக்கம் எனது வழிகாட்டுதலின் கீழ் இருக்க வேண்டும்;
2) சேவகர்கள் நான் சொல்வதைப் போலவே செய்ய வேண்டும்; மற்றும்
3) சேவகர்கள், முதலாவதாக, ஒன்பது மாதங்களுக்கு, தாங்களாகவே ஒளியூட்டத்தை அடைவதற்கு நான் வழங்கும் அறிவுரைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். அப்போது ஸூ.:.பி தத்துவம் பிறரை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்ல முடியும்; அவர்களை அறியாமையில் மட்டும் வழிநடத்த முடியாது. அதனால்தான் நான் ஐரோப்பாவுக்குச் செல்கிறேன், மேலும் அல்ஜீரியா சென்று அங்கு நான் நேரடியாகப் பார்க்காத, ஆனால் எனக்குத் தெரிந்த இரண்டு அல்லது மூன்று நபர்களைத் தொடர்புகொள்கிறேன்.

**ஃபிரான்சிஸ் ஜூலை 10ஆம் தேதிக்கு முன்னர் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும், அதற்குள் அங்குப் பணியைத் தொடங்க வேண்டும். மேலும், முடிந்தால், நவம்பர் 15க்குள் அமெரிக்காவுக்குத் திரும்பி வாருங்கள். இதற்கிடையில், நான் உங்களை நவம்பரில் இந்தியாவுக்கு வருமாறு கட்டளையிட்டால், நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டும், ஏனென்றால் நவம்பர் மாதம், நான் எனது 'அனல் பறக்கும் வாழ்வை'த் தொடங்க உள்ளேன். கண்களை மூடிக்கொண்டு நான் சொல்வதைச் செய்யுங்கள். நீங்கள் குருடனைப் பின்பற்ற மாட்டீர்கள்! எனக்குத் தெரியும்! நான் சொன்னபடிச் செய்யுங்கள்.**

**நான் இப்போது உங்களுக்குச் கூறுவதை நீங்கள்** (ஐவியை சுட்டிக்காட்டி) **ஜூலை 10 முதல் செய்யத் தொடங்குங்கள்...**

பாபா, அவர்கள் இருவருக்கும் இரவு 11:30 மணி முதல் ஒரு மணி நேரம் 12:30 வரை, 1952, ஜூலை 10 முதல் அடுத்த ஒன்பது மாதங்களுக்கு, தியானத்தில் அமருமாறு அறிவுறுத்தினார். மேலும் ஜூலை 10ஆம் நாள் மௌனம் அனுஷ்டிக்குமாறும் கட்டளையிட்டார்.

ரபியா மார்ட்டின் மறைந்த பிறகு, ஸூஃபி இயக்கத்தை வழிநடத்த ஐவி டியூஸ் நியமிக்கப்பட்டதால், 1948ல் இந்தியாவில் நடந்த தனது முதல் சந்திப்பில், அவர் பாபாவின் வழிகாட்டுதலை நாடினார், மேலும் அவர் இறை நிலையை அடையாத ஆத்மா என்பதை அறிந்திருந்தார். ஐவி, அவரது வரம்புகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று உறுதியளித்தார்; பாபா, ஸூஃபி இயக்கத்தின் நலனைக் கவனத்தில் கொண்டு, அதன் தலைவராக அதனை மறுகட்டமைப்பார் என்றும் கூறினார்.

மர்டில் பீச்சில், ஐவியும் ஃபிரான்சிஸூம் மே 9 அன்று லகூன் கேபினை விட்டு வெளியேறிய பிறகு, பாபா ஆதியை அழைத்து, இந்த ஸூஃபி அமைப்புக்கு ஒரு புதிய பெயரைத் தேர்ந்தெடுக்க முயற்சிக்குமாறு கூறினார்.

ஆதி அருகிலிருந்த ஓர் அறைக்குள் சென்று, கண்களை மூடிக்கொண்டு எண்ணங்களை ஒருமுகப்படுத்தியபோது, **'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்'** (SUFISM REORIENTED) என்ற பெயர் அவரது சிந்தனைக்கு எட்டியது. அவர் திரும்பிச் சென்று பாபாவிடம் எடுத்துரைத்த போது அவர் அதை மிகவும் விரும்பினார். மேலும் பாபா, ஸூஃபியிஸத்தைப் பற்றி மேலும் சில விஷயங்களை விளக்கினார்; ஆதி அவரது குறிப்பேட்டில் எழுதிக்கொண்டார்.

1952, மே 10 சனிக்கிழமை அன்று காலை 7:00 மணிக்கு பாபாவுடன் மால்கம் ஸ்க்லோஸின் சந்திப்பு முதலில் நிகழ்ந்தது. அவர் ஆதிக்கு எடுத்துரைத்த 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' குறித்த கருத்துக்களைப் புரட்டிப் பார்க்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

ஃ**பிலிஸ் ஃபிரடெரிக்**, நியூயார்க்கிலிருந்து மர்டில் பீச்சிற்கு, ஃ**ப்ரெட் & எல்லா வின்டர்ஃபெல்ட்**, **அடீல் வோல்கின்**, **ஆக்னஸ் பார்ன்** (1932ல் பாபாவை சந்தித்தார்) ஆகியோருடன் காரில் வந்தார். 37 வயதான ஃ**பிலிஸ்**, கிழக்கத்திய ஆன்மீக தத்துவத்தில் எப்போதும் அதீத ஆர்வம் கொண்டிருந்தார், குறிப்பாக கல்கத்தாவின் ராமகிருஷ்ணாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். 1943 மே மாதத்தில், நியூயார்க் நகரில் 'ஹோட்டல் மார்டினிக்'கில் பாபாவைப் பற்றி நோரினா வழங்கும் சொற்பொழிவில் கலந்துகொள்ளுமாறு தபால் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக நோரினாவை 'அங்கீகரித்தார்', மேலும் கிழக்கு 67ஆவது வீதியில் அமைந்த அவரது இல்லத்திற்கு அழைக்கப்பட்டார்; அங்கு அவர் எலிஸபெத், நதீன் இருவரையும் சந்திக்க நேர்ந்தது, முதல் முறையாக பாபாவின் புகைப்படத்தைப் பார்த்தார். இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு, ராமகிருஷ்ணாவைப் பற்றிய விரிவுரை ஒன்றில் கலந்துகொண்டபோது, 'இயேசு'வின் அற்புத காட்சியை தரிசனம் செய்ய முடிந்தது, இப்போது, அவர், அன்று பார்க்க நேர்ந்தது, மெஹர் பாபா என்பதை உணர்ந்தார். "எல்லாமே முடிவுக்கு வந்தது," தொடர்ந்து ஃபிலிஸ் நினைவு கூர்ந்தார். "என் இதயம் பாபாவிற்குச் சொந்தம். நான் அவரை ஆழ் இதயத்திலிருந்து கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்டேன்."

மர்டில் பீச் பயணம் பற்றி, ஃபிலிஸ் நினைவு கூர்ந்தார்:

மர்டில் பீச் மையத்தை நெருங்க நெருங்க, பிரபஞ்சத்தின் மையத்தை நெருங்கிக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது! இது ஒரு விண்கலத்தில் பயணிப்பது போல் இருந்தது, 180 லட்சம் ஒளியாண்டுகள் பயணம் செய்த பின்னர், இறுதியாக இந்தப் பயணம் நிறைவுக்கு வந்தது போல் உணர்ந்தேன். மெஹர் ஆன்மீக மையத்தின் வாயிலைக் கடந்ததும், ஃப்ரெட் காரை மெதுவாக ஓட்டிச் செல்ல, ஏதோ அன்பின் ஆனந்த தென்றல் என்னை சூழ்ந்துகொண்டது.

ஹோட்டலில், எலிஸபெத் தொலைபேசி வழியாக தொடர்புகொண்டு, அடுத்த நாள் காலை ஒன்பது மணி என்பதை உறுதிசெய்து, 'பாபா உங்களுக்காகக் காத்திருக்கிறார்' என்றதும் தொலைபேசியை, கிட்டத்தட்ட கையிலிருந்து நழுவவிட்டேன். இது எனக்கு நம்பமுடியாததாகத் தோன்றியது: அவர் எனக்காகக் காத்திருக்கிறார்? நான் கிட்டிக்கு கடிதம் எழுதியிருந்தேன், பாபாவுக்கு நீல நிறத்தில் பிரியம் அதிகம் என்று கண்டுபிடித்தேன், அதனால் பாபாவைப் பார்க்க நீல நிற ஆடையைத் தயார் செய்து கொண்டிருந்தேன்.

டார்வின் ஷா, மே 10ஆம் நாள் காலையில் ஃபிலிஸ், அடீல், ஜான் பாஸ் ஆகியோரை மர்டில் பீச் மையத்திற்கு காரில் அழைத்துச் சென்றார். இந்தத் தருணத்திற்காக அவர்கள் ஒன்பது வருடங்கள் காத்திருந்தனர்.

ஃபிலிஸ் அந்த முதல் சந்திப்பை இவ்வாறு விவரித்தார்:

காலை 9:30 மணி. லகூன் கேபினின் படிகளில் நின்று கொண்டிருந்த டிலியா, 'ஸ்ரீ மெஹர் பாபா, இவர் ':ஃபிலிஸ் :ஃபிரடெரிக்' என்று அறிமுகப்படுத்தியபோது, பாபா, எப்படி இருப்பார் என்பதை நான் அறியவில்லை. நான் இயேசுவை என் மனக்கண்களில் நினைவு கூர்ந்தேன், ஆனால் பாபாவின் முதல் பார்வையில் அவர் ஓர் எகிப்தியராக இருக்கலாம் என்ற எண்ணம் எனது புத்தியில் பளிச்சிட்டது! நீண்ட புருவங்கள், கருமையான பாதாம் கண்கள், தங்க நிற தோல். அவர் என்னைத் தழுவினார், என் இதயம் வேகமாக துடித்தது: '**அவர் என்னுடையவர், அவர் என்னுடையவர்**' என்று கூறி, அருகிலிருந்த நாற்காலியை சைகையால் காட்டினார்.

பாபா, ஆதி மூலமாகக் கேட்டார், "**நான் எப்படி இருக்கிறேன்?**" நான் ஆதியிடம் (புது வாழ்வில் பாபாவிடம் நேரடியாகப் பேச முடியாது என்று யாரோ தவறான தகவல் கொடுத்ததால்), 'அவர் உடல் நலம் குன்றி தோன்றுகிறார்' என்று கூறியதும், அவர் அவ்வாறு இல்லை என்பதை உணர்ந்து உடனடியாக 'அவர் அழகாக இருக்கிறார்' என்றேன்.

கருப்பு வைரம் போன்ற கண்கள், என் கண்களை அன்புடன் உற்றுநோக்கின. என் இதயம் அவரது அன்பால் நிரம்பி வழிவதை உணர்ந்தேன். அவர் மிகவும் பரிச்சயமானவராகவும், நெருக்கமானவராகவும் தெரிந்தார்.

"**நான் உங்களைப் பற்றி நோரினா, எலிஸபெத், டான், மார்கரெட் ஆகியோரிடமிருந்து கேள்விப்பட்டேன்,**" என்று பாபா கூறினார், "**ஆழ் இதயத்திலிருந்தும் நான் உங்களைக் கேட்டேன். நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?** (ஆம், பாபா.) **என்னை நேசிக்கும் இதுபோன்ற ஆத்மாக்களைப் பார்க்கும்போது, நான் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு வலிமையாகவும் உணர்கிறேன். ஃபிலிஸ் போன்றவர்கள் எனக்கு நெருக்கமானவர்கள். நீங்கள் என்னை மிகவும் நேசிப்பதால் நான் உங்களை நேசிக்கிறேன்.**"

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, ஃபிலிஸ் 'இரட்டையரில்', 34 வயதான '**அடீல் வோல்கினை**' அழைத்தார். "**அவருக்கு பாபாஜானைப் போன்ற கண்கள் உள்ளன,**" என்று பாபா குறிப்பிட்டார், "**மிகப் பெரியது, சாம்பல்-நீலம்.**"

அவர், இருவருக்கும் எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்: "**உங்கள் இருவரையும் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டேன், கடைசியாக நான் உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் என்ன பதற்றமாக உணர்கிறீர்களா?**"

"இல்லை" என்றனர்.

"**நான் உங்களை சந்தித்ததில் பூரிப்படைகிறேன், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**"

"மிக்க மகிழ்ச்சியாக உள்ளோம்."

**"உங்களைப் பார்த்ததில் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விட வேறில்லை. நீங்கள் என்னை அறியும் வேளையில், என்னை ஒரு சிறு குழந்தையைப் போல நேசிப்பீர்கள். நான் ஒரு குழந்தை ஆனால் வளர்ந்தவன்!**

**"எனக்கு நகைச்சுவை மிகவும் பிடிக்கும், இங்கும், பல்வேறு இடங்களிலும், இப்போது உங்களுடன் பேசும் போதும், கேலி, கிண்டல் செய்யும் அதேவேளையில், கடினமாக உழைக்க விரும்புகிறேன். தூய்மையான, எளிமையான அன்புடன் என்னை நேசிக்கும் போது, எந்தத் தடங்கலுக்கும் இடமில்லை; அனைத்து சந்தேகங்களும் விலகிவிடும். அதுவரை மனம் சந்தேகத்தில் துடித்துக்கொண்டிருக்கும். அன்பு இருந்தாலும், அது சரியா, தவறா என்று எண்ணி மனம் இயந்திரத்தனமாக இயங்கிக்கொண்டே இருக்கும். ஆனால் அன்பு கவலைப்படுவதில்லை, அனைத்தையும் அன்புக்குரியவரிடம் இழந்துவிடுகிறது. நீங்கள் பாபாவை நேர்மையுடன் நேசிக்கிறீர்களா?"**

"ஆம், பாபா!" அவர்கள் பதிலளித்தனர்.

"உங்களுக்காக நான் என்ன செய்ய முடியும்?" என்று அடீல் கேட்டார்.

**"அன்பிற்குரியவருக்காக நீங்கள் இன்னும் என்ன செய்ய முடியும்? எனக்கு அன்பு வேண்டும், வேறு எதுவும் இல்லை! என்னை நேசிக்கவும், கடவுள் நம்மை நேசிக்கட்டும்.**

**அதுதான் எனக்கு வேண்டும். நீங்கள் பாபாவை நேசித்தால், கடவுள் உங்களை நேசிப்பார், கடவுளின் அன்பு என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கியது. அதனால், பாபா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். உண்மையில் பணிவுநயம் மிக்கவர்களில் பணிவானவர், மேன்மையிலும் மேன்மையானவர். ஆனால் அது எல்லா நேர்மையிலும், உண்மையிலும் இருக்க வேண்டும். எனவே, நாம் அன்பாக இருப்போம், நேசிப்போம்… நேசிப்போம்… அனைவரையும் நேசிப்போம்…; இதர அனைத்தும் மாயை. எனவே, அடீல், நீங்கள் உண்மையிலேயே என்னை நேசித்தால் இன்னும் என்ன செய்ய முடியும்? நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?"**

"ஆம்."

**"அந்த அன்பு எங்கிருந்து வருகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் பாபாவை நேசிக்கும்போது, 'கடவுளின் அன்பு ஒன்றுதான் எல்லாமே' என்று அர்த்தம்."**

ஃபிலிஸ் பின்பு நினைவு கூர்ந்தார்: "அந்த நேரத்தில், அவரது இதயத்திலிருந்து எங்கள் இதயங்களுக்குள் நுழைந்த அன்பின் சுழற்சியை நான் உணர்ந்தேன், அதுபோல், எங்கள் அன்பின் சுழற்சி அவர் இதயத்தை நோக்கியும் விரைந்தது; மிகவும் வலுவாக, 'நான் கடவுளை நேசிக்கிறேன்' என்று என்னால்

மீண்டும் சொல்ல முடியாது. அந்த அன்பு அவருடைய பரிசு, என்னுடையது என்று சொல்வது, பனித்துளி பிரகாசிக்கும் போது, 'நான் சூரியன்' என்று சொல்வது போல் இருக்கும்."

அதற்குப் பிறகு ஃபிலிஸ், அடீல் இருவரும் விருந்தினர் மாளிகையில் பெண் மண்டலியை சந்திக்கச் சென்றனர்.

இரண்டு பெண்மணிகளும் மறுநாள் காலை லகூன் கேபினில் பாபாவுடன் இரண்டாவது தனிப்பட்ட நேர்காணலில் பங்கெடுத்தனர். எழுத்துப்பலகையை வாசித்துக் கொண்டிருந்த ஆதியைக் கூட பாபா வெளியே இருக்குமாறு பணிந்தார். ஃபிலிஸ் காலை 9:45 மணிக்கு நிகழ்ந்த நேர்காணலை நினைவு கூர்ந்தார்:

நான் கடவுளுடன் தனியாக இருந்தேன்! நான் மிகவும் கூச்சமாக உணர்ந்தேன், ஆனால் மகிழ்ச்சியாக இருந்தேன். அவருடைய அழகில் நான் மயங்கிப் போனேன். அவர் எழுத்துப்பலகையில் மெதுவாக உச்சரித்தார், **"ஏதேனும் கேள்விகள்?"** நான் இல்லை எனத் தலையசைத்தேன். ஆனால் நிச்சயமாக, என் இதயத்தின் ஆழத்திலிருந்து கேள்வி ஒன்று எழுந்தது: ஏன் அந்தத் துன்பம்? நான் ஏன் அத்தனை துன்பத்தையும் கடந்து சென்றேன்? பாபா எனக்கு அமைதியாக பதிலளித்தார். அவர் எனது கையைப் பற்றியபோது அது ஒரு குழந்தையின் கையைப் போல், அல்லது ஒரு ரோஜா மலரைத் தொட்டது போல் இருந்தது; சதை தூய்மையானதாகவும், கிட்டத்தட்ட ஊடுருவும் தன்மை படைத்ததாகவும் தோன்றியது. அவரது இரத்தம் என்னுள் பாய்வதை நான் உணர முடிந்தது - இரத்தமாற்றம் செய்வது போல் - அப்போது நான் அவரது துன்பத்தை உணர்ந்தேன். அவர் எனது மணிக்கட்டை தனது கையில் எடுத்தபோது, அவருடைய துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதை நான் உணர்ந்தேன், அவர் என்னுடையதை பகிர்ந்து கொண்டார். அது வார்த்தையில்லா பதிலாக இருந்தது.

பிறகு, நான் மௌனமாக அவரிடம், பாபா, நீங்கள் எப்போதும் எனது குருநாதராக இருப்பதை விரும்புகின்றேன் - இறுதிவரை. அதற்கு பாபா தலையசைத்தார், **"நான் இறுதிவரை உங்களுடன் இருப்பேன்."**

உடனே பாபா கைகளைத் தட்டி ஆதியை அறைக்குள் அழைத்தார். தொடர்ந்து எழுத்துப்பலகையில், **"எதையும் கேட்காத ஒருவன் எல்லாவற்றையும் அடையப்பெறுகிறான்"** என்று உச்சரித்தார். மீண்டும், **"கடவுள் மீதான அன்பு மட்டுமே உண்மையானது"** என்று கூறி முடித்தார்."

அன்று காலை 10:00 மணிக்கு, அடீல் பாபாவை சந்தித்தபோது அவர் கூறினார்:

**நீங்கள் கூற விரும்பும் அனைத்தும் எனக்குத் தெரியும். எனக்குப் புரிகிறது. சில நேரங்களில், அதீத சக்தியுடன் உங்களைத் தாக்கும் பலவீனங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். என் மீதான உங்கள் அன்பு**

**மிகவும் உயர்ந்தது, அது உங்கள் பலவீனங்கள் அனைத்தையும் அகற்றிவிடும். மனமும், இதயமும் தூய்மை அடைந்தால் இறைவனைக் காணலாம். தூய்மையின் மூலம் நாம் அவரைக் காணமுடியும், ஆனால் தூய்மைக்கும் மேலான அன்பு, எல்லா பலவீனங்களையும் அழித்துவிடும்.**

**எனவே, நீங்கள் பாபாவை உங்கள் குருநாதராகவும், தந்தையாகவும், உங்கள் சகோதரராகவும் நேசிப்பீர்களானால், வேறு எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. 100 சதவிகிதம் அன்பு இருக்கும் போது தூய்மை, அசுத்தம் அனைத்தும் மறைந்துவிடும். எனவே, கவலைப்பட வேண்டாம். பாபா உங்களை அறிந்திருக்கிறார், உங்களை நேசிக்கிறார், எதுவானாலும், பாபா உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார். நினைவில் கொள்ளுங்கள். புரிந்து கொண்டீர்களா?**

"ஆம், புரிந்துகொண்டேன்," அடீல் கூறினார்.

**"இது நம்பமுடியாத அளவுக்குத் தெளிவாக உள்ளது அப்படித்தானே!"** பாபா கூறினார், **"எனக்கு நீங்கள் மணி மாதிரி."**

அடீல் 'மணி' (பணம்) போன்றவர் என்று பாபா கூறியதாக அவர் நினைத்து, சோகமும், ஏமாற்றமும் அடைந்ததாக விவரித்தார் - ஏனென்றால் இது எதிர்மறையான ஒன்றைக் குறிக்கும்! ஆனால் பாபா நிச்சயமாக அவரது சகோதரி மணியைக் குறிப்பிடுகிறார்.

டார்வின், ஜீன் ஷா இருவரும் 1934ஆம் ஆண்டு நியூயார்க்கில் பாபாவை சந்தித்திருந்தாலும், அவர்களது இரண்டு இளம் வயது மகள்களான **'ரெனே'** (17 வயது), **'லீட்ரைஸ்'** (18 வயது) இருவருக்கும் இதுவே முதல் சந்திப்பு. முழுக் குடும்பமும் (டார்வினின் மருமகள் டோலோரஸ் உட்பட) மர்டில் பீச் மையத்திற்குச் சென்று, 10ஆம் தேதி காலை 10:00 மணிக்கு லகூன் கேபினில் பாபாவை சந்தித்தனர். பாபா, வெள்ளை நிற நீண்ட காலுறை மற்றும் மெரூன் நிற பட்டு மேலங்கி அணிந்திருந்தார். அவர் குடும்பத்தின் ஒவ்வொருவரையும் அரவணைத்த வேளையில் பெண்மணிகள் கண்கலங்கி அழுதனர்.

பாபா கூறினார்: **"சொர்க்கத்தின் கடவுள், நீங்கள் இங்கே இருப்பதால் மகிழ்ச்சியாக இருக்கிறார். உங்களைப் பார்த்ததில் நான் எவ்வளவு மகிழ்ச்சியாக உணர்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? கடந்த இரண்டு வருடங்களாக நான் ஏகாந்தவாசத்தில் அமர்ந்து, மஸ்த் மற்றும் ஏழைகளுக்காக பணிபுரிந்து, பல கஷ்டங்களை சந்தித்தேன், ஆனால், இந்த மையத்திற்காக மிகவும் கடினமாக உழைத்த அன்பர்களாகிய உங்களை இன்று பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த இடத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் நோரினா, எலிஸபெத் மற்றும் இரண்டு ஷாக்களின்** (கணவன், மனைவி) **அன்பு நிரம்பி வழிகிறது. நான் உங்கள் தாய், தந்தையரை** (டார்வின் & ஜீன்) **6ஆம் தேதி சந்தித்தேன்.**

**"கடந்த ஏழு இரவுகள் நான் தூங்கவில்லை, ஆனாலும் என் அன்பானவர்களின் அன்பினால் நான் புத்துணர்வைப் பெற்றுள்ளேன், அது என்னை வலிமையாக்குகிறது. கடவுள் அன்பை விரும்புகிறார் - நேர்மையான, தூய அன்பு. எனவே அன்பு ஒன்றுதான் அனைத்திலும் முக்கியம்."**

"உங்களுக்கு நாங்கள் சேவை செய்வோம் என்று நம்புகிறோம்," என்று டார்வின் கூறினார்.

**"எனக்குத் தெரியும், நீங்கள் உண்மையிலேயே நேசிக்கிறீர்கள். அவர்களும்** (குழந்தைகளும்) **என்னை நேசிக்கிறார்கள், ஏனென்றால் பாபா உங்கள் அனைவரையும் நேசிக்கிறார். என்னுடைய அன்புதான் உங்களை என்னை நேசிக்கச் செய்கிறது."**

ஒரு கட்டத்தில் பாபா, இரண்டு இளம் மகள்களிடம், **"நான் கூறும் எதையும் நீங்கள் செய்வீர்களா?"** எனக் கேட்டதற்கு, இருவரும் 'ஆம்' என்று தலையசைத்தனர்.

**"உறுதியாக 'ஆமாம்' என்கிறீர்களா? அல்லது வெறுமனே 'ஆமாம்' என்கிறீர்களா?"** என்று பாபா கேட்டார்.

"என் இதயத்தில் மிகையான அன்பை உணர்கிறேன், ஆனால், பாபா என்ன சொல்கிறார் என்று எனக்கு புரியவில்லை!" என்ற எண்ணம் ரெனே மனதில் எழுந்தது.

"எதுவாக இருந்தாலும் 'சரி' என்று நான் கூறுவேன், அதைப் பற்றி பிறகு யோசிப்பேன்" என்று லீட்ரைஸ் முடிவு செய்தார்.

இருவரும் உறுதியாக பதிலளித்தனர், "ஆம்!"

**"நீங்கள் இருவரும் தயக்கமின்றி எனக்குக் கீழ்ப்படிவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்,"** என்று பாபா கூறினார், மேலும் அவர்களின் தந்தையிடம், **"அவர்கள் நான் கூறுவதைத் தயக்கமின்றி செய்வார்கள், அப்படித்தானே, டார்வின்?."**

பாபா தொடர்ந்தார்: **"நீங்கள் ஏரியில் குதிப்பீர்களா?"**

அவர்கள் அதைச் செய்வதாகக் கூறினார்கள்.

**"அதில் இருக்கும் எல்லா முதலைகளுடன்?"**

"ஆம்."

**"நல்லது. நான் அனைத்திலும் - பாம்புகள், மான்கள் - அனைத்திலும் இருக்கிறேன்."**

பாபா மீண்டும் ஒவ்வொருவரையும் தழுவி, லீட்ரைஸைப் பற்றிக்கொண்ட வேளையில் அவர் பாபாவின் கண்களை ஆழமாக உற்று நோக்கினார்.

லீட்ரைஸ் அந்த அனுபவத்தை தெளிவாக நினைவு கூர்ந்தார்:

அவர் என்னை ஆழமாக உற்று நோக்க அனுமதித்தார், நான் அறியாத ஒன்றை ஆழமாகப் பார்ப்பது போலத் தோன்றியது. நான் அங்கும் இங்கும் திரும்பாமல் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன், அளவிறுதியிற்ற அவரது கண்களை, வெகு தொலைவில், முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டிருந்தேன். அதன் விளைவாக, பாபாவை ஒளியின் ஆழமற்ற, நிறமற்ற அழகாக நான் உணர்ந்தேன்; சற்று பதற்றமாகவும் இருந்தது. நாட்டியம், நடனம் போன்ற அனைத்து வடிவங்களிலும் நான் எப்போதும் அழகை விரும்பினேன், இப்போது பாபா எனக்கு உண்மையான அழகைக் காட்டினார், அதனால் நான் ஒவ்வொன்றையும் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க முடியும்.

அவர் மர்டில் பீச் மையத்தில் தங்கியிருந்த காலத்தில், பாபாவின் கண்களைப் பார்க்க மேலுமொரு வாய்ப்பு கிடைக்குமா என்று ஏங்கினேன். மறுநாள் காலை 10:15 மணியளவில், பாபா அனைவரையும் லகூன் கேபினுக்கு அழைத்தார், மக்கள் வெளியே வருவதை நான் கவனித்தேன், அவர்கள் மகிழ்ச்சியாகவும், பிரகாசமாகவும் இருந்தனர். நாங்கள் உள்ளே சென்றதும், பாபா என் தந்தையைப் பற்றிக் கொண்டு சிரித்து, உற்சாகம் பொங்க, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார். அந்த நாள் அவர் உற்சாகத்துடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார், அதனால் நானும் அந்தக் குழுவுடன் கலந்துகொண்டு, மகிழ்ச்சியின் அற்புதங்கள் என்று நான் விவரிக்கக்கூடிய ஒன்றை உணர்ந்தேன்.

நாங்கள் உள்ளே அழைக்கப்பட்டபோது, பாபா, அனைவரும் அவருடைய கையை முத்தமிட அனுமதித்ததை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு கணம் இதற்குத் தயாராக இல்லாத நிலையில், நான் பாபாவைத் தழுவ விரும்பியதால், அவர் என்னை அணைத்துக்கொள்ள அனுமதித்தார், ஆனால் அவ்வாறு செய்வதன் மூலம் நான் அவரது கையை முத்தமிடும் தருணத்தைத் தவறவிட்டேன் என்பதை உணர்ந்தேன். கிடைத்த வாய்ப்பை என்னால் தக்கவைக்க முடியாததை எண்ணி வருந்தினேன். சிறிது நேரத்தில், எதிர்பாராத நிகழ்வால், எனக்கு முன்னால் பாபாவின் கை இருந்தது. அப்போது செய்யவேண்டியது என்ன என்பதை நான் அறிந்திருந்தேன்.

அவர்களின் நேர்காணல் தொடரும் வேளையில், பல முறை பாபா, **"ஜீன் என்னை நேசிக்கிறார்"** என்று குறிப்பிட்டார்.

பின்னர் அவர்கள் அனைவரும் எப்படி உணர்ந்தார்கள் என்பதை ஜீன் ஷா விவரிக்கிறார்:

“அன்பின் உணர்வலைகள் நாள் முழுவதும் எங்களில் நிரம்பி வழிந்தன, உள்ளுக்குள் ஒளி போல் எங்களுடன் தங்கி, வெதுவெதுப்பில், தெய்வீக அன்பின் அலைகளில் எங்களை மூழ்கடித்தது; எங்கள் மனம் அமைதியில் ஆழ்ந்தது, மேலும் இந்த உலகிற்கு அப்பாற்பட்ட ஒருவித அமைதியையும் இனிமையையும்

உணர முடிந்தது. எதுவும் முக்கியமானதாகத் தெரியவில்லை - கடற்கரை, அலைமீது சவாரி, நகரத்தின் எந்த இடங்களும் எங்களை ஈர்க்கும் விதத்தில் இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் மற்றும் அனைவரிடமும் கனிவாகவும், அன்பாகவும், பொறுமையாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்ந்தோம், மேலும் எங்களுக்கு வந்த தனிப்பட்ட செய்திகளின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆச்சரியமடைந்தோம். நாங்கள் அவ்வப்போது எடுத்துரைத்த இனிமையான, அன்பான விஷயங்களை மீண்டும் ஆய்வு செய்தோம் (பாபா, எழுத்துப்பலகை வழியாகச் சுட்டிக்காட்டியதை ஆதி எடுத்துரைத்தார்). எங்களிடம் கேட்க எந்தக் கேள்வியும் இல்லை. நாங்கள் பாபாவுடன் இருப்பதிலேயே திருப்தி அடைந்தோம் - வேறு எதுவும் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. 'இவை அனைத்தும் இத்தனை சிறப்பாக இருக்கிற அளவுக்கு உண்மையா?' எனக் கேட்கத் தோன்றியது. 'கனவு காண்கிறோமா?' என்று எங்களை நாங்களே கிள்ளிப்பார்க்கவும் தோன்றியது. நாங்கள் எதிர்பார்த்து காத்திருந்தது, மீண்டும் பாபாவை நேரில் சந்திக்க வேண்டும் என நினைத்தது அனைத்தும் விரைவில் நிறைவுக்கு வந்தது. நாங்கள் உண்மையில் அவரைப் பார்த்தோம், உரையாடினோம் என்று எங்களால் நம்ப முடியவில்லை."

மர்டில் பீச் மையத்தில் விநியோகிக்கப்பட்ட தெய்வீக மதுபானத்தின் களிப்பைக் காணத் தவறியவர் நோரினா, மே 10 அன்று மீண்டும் மாரடைப்பால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால், பாபா தனது மதுபான சத்திரத்தை அவர் மூலம் நிறுவினார், மேலும் காலம் குறிப்பிட்டது போல, நோரினா அவரது பணியில் மிக முக்கியமான பங்கை வகித்தார். "அவர் எங்கிருந்தாலும், மதுபான சத்திரத்தின் அதிபதி எப்போதும் அவருடன் இருப்பார்!"

எனிட் கோர்ஃப், மார்கரெட் ஸ்காட், எலிஸபெத்தின் மருமகன் ஹாரி ஹர்ட்ஷோன் (34 வயது, விஸ்கான்சின் பகுதியில் வாழ்ந்தவர்), கான்ஸிலோ ஸைட்ஸ் ஆகிய அனைவரும் 10ஆம் நாள் காலையில் பாபாவுடன் தனிப்பட்ட சந்திப்புகளை நடத்தினர். **எனிட்** பல ஆண்டுகளாக பாபாவைப் பார்க்கவில்லை, இரண்டாம் உலகப் போரின்போது இத்தாலியில் அமைந்த அரசியல் கைதிகள் முகாமில் அடைக்கப்பட்டிருந்தார். **"என்னுடன் நெருக்கமானவர்களில் நீங்களும் ஒருவர்"** என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். **"17ஆம் தேதிக்குப் பின்னர், உங்கள்** (போர்க்கால அனுபவங்களைப் பற்றிய) **குறிப்புகளைக் கேட்க எனக்கு நேரம் கிடைக்கும்"** என்றார்.

**ஹாரி**யின் கோழிப்பண்ணைக் குறித்து எலிஸபெத் பாபாவிடம் கூறியிருந்தார். **"எனக்கு, கோழிகளை விட ஆடு பிரியம்"** என்று பாபா குறிப்பிட்டார். தன்னிடம் நிறைய செம்மறி ஆடுகள் இருப்பதாக ஹாரி கூறினார். பாபா அவரை விரும்பி, **"ஹாரி, எனக்கு நகைச்சுவை பிடிக்கும், உங்களுக்கு**

**நகைச்சுவை உணர்வும் உண்டு. ஒருவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கவும், பிறரை மகிழ்விக்கவும் முயற்சி செய்ய வேண்டும்; இல்லையெனில், வாழ்க்கை சலிப்பாக இருக்கும். நேர்மையான வாழ்க்கையும் மிக முக்கியம் - இதன் மூலம் நாம் கடவுளையும், பிறரையும், நம்மையும், உலகையும் ஏமாற்றவில்லை என்பதை நாம் அறிவோம். நம்மிடம் எதிர்பார்க்கப்படுவது எல்லாம் இந்த நேர்மையும், பிறரை மகிழச் செய்வதும், மகிழ்ச்சியாக இருக்க முயற்சிப்பதும்தான்"** என்று கூறினார்

ஹாரியின் அத்தையான எலிஸபெத்தைப் பற்றி பாபா குறிப்பிட்டார், **"எலிஸபெத் அன்பின் மூலம் எனக்கு என்ன செய்திருந்தாலும் அது கற்பனைக்கு அப்பாற்பட்டது."**

**மார்கரெட் ஸ்காட்** 1935ஆம் ஆண்டிலிருந்து பாபாவை சந்திக்கவில்லை. "நான் உங்களைத் துன்பப்படுத்தியதற்காக வருந்துகிறேன், பாபா, நீங்கள் எனக்காகத் துன்பப்பட்டதை நான் அறிவேன்," என்று அவர் கூறினார்.

**"ஆனால் உங்கள் அன்பு, அனைத்து துன்பங்களையும் ஈடுசெய்தது"** என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். **"நீங்கள் என்னை ஆழ் இதயத்திலிருந்து நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். பாபாவும் உங்களை நேசிக்கிறார்."**

மார்கரெட், "சில நேரங்களில் எனக்குப் புரியாத காரணத்தால் நான் மிகவும் குறும்பு செய்கிறேன், இப்போது எனக்குப் புரிகிறது என்று நினைக்கிறேன்" என்றார்.

**"புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் கடவுளுக்கும், பாபாவுக்கும், நமக்கும் மற்றும் மனிதகுலத்திற்கும் நேர்மையாக இருக்க வேண்டும். கடவுளை நேசிப்பதில் எந்த சமரசமும் இருக்கக்கூடாது என்ற அர்த்தத்தில் நேர்மையாக இருக்க வேண்டும். நீங்கள் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?"**

"எனக்குத் தெரியவில்லை... நான் மிகவும் அமைதியாக உணர்கிறேன்."

**"கேட்க வேண்டிய தேவை எதுவும் இல்லை. உங்களுக்கு உதவியாக எனது அன்பு இருப்பதில் உறுதியாக இருங்கள். கேட்க வேண்டிய தேவையில்லை, ஆனால் பாபா அவரது அன்பின் மூலம் உங்களுக்கு உதவுவார். கடவுளையும் பாபாவையும் நேசிக்கவும், பிற அனைத்தையும் தெய்வீக விருப்பத்திற்கு விட்டுவிடுங்கள்."**

மார்கரெட் ஸ்காட் மறுநாள் காலை 10:40 மணிக்கு பாபாவை மீண்டும் சந்தித்த வேளையில், அவர், "நான் மாறவில்லை என்று ஏன் நேற்று நீங்கள் சொன்னீர்கள்?" என வினவினார்.

பாபா பதிலளித்தார்: **"நீங்கள் என்னைக் கடைசியாகப் பார்த்தபோது, என்னை நேசித்தீர்கள், இப்போதும் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள், அதனால்**

**நீங்கள் மாறவில்லை என்று கூறினேன்! நீங்கள் முயற்சி செய்யவில்லை, என் அன்புக்கு நேர்மையாக இருக்கவில்லை, பாபாவின் அன்பில் வளரவில்லை என்று நான் பொருள்படக் கூறினேன் என்று நினைத்தீர்களா?"**

"நான் உங்களைத் தோல்வியுறச் செய்தேன், கஷ்டப்படுத்தினேன்" என்று நினைத்ததாக மார்கரெட் ஒப்புக்கொண்டார்.

பாபா விளக்கினார்:

**துன்பத்தைப் பொறுத்தவரை, நான் எனக்காகவும், முழு உலகத்திற்காகவும், பெரும்பாலும் என்னுடைய நெருங்கிய அன்பர்களுக்காகவும் துன்பப்பட்டேன்; எனவே, நிச்சயமாக, நான் உங்களுக்காகக் கஷ்டப்பட்டேன். ஆனால் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள். எனவே இந்தத் துன்பம் அதனால் ஈடு செய்யப்பட்டுள்ளது.**

**நீங்கள் எவ்வளவு சரியாக முயற்சி செய்தீர்கள், உங்களுக்கு எழுந்த சந்தேகங்கள், இந்தக் குழப்பத்தை எப்படிக் கடக்க முயன்றீர்கள், கடைசியில் எப்படி என்னிடம் வந்தீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், நீங்கள் என்னைத் தோல்வியுறச் செய்யவில்லை என்று அர்த்தம்.**

**ஒருவர் பரிபூரணமாகவும், கடவுளுடன் ஐக்கியமாகாமல் இருக்கும் வரையிலும் அனைவரும் தவறிழைக்கிறார்கள், ஆனால் பாபா மீதான அன்பு அந்தத் தவறுகளைத் துடைத்துவிடுகிறது. எல்லா உண்மையும், எல்லா அழகும் கடவுள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் கடவுள் மீதும், பாபா மீதும் கொண்டுள்ள அன்பில், நாம் 100 சதவிகிதம் நேர்மையாக இருக்க வேண்டும். தூய்மை, நேர்மை, அன்பு - கடவுள் இந்த மூன்று விஷயங்களையும் விரும்புகிறார். மேலும் நீங்கள் பாபாவை நேசிக்கிறீர்கள்; ஆகையால், எதற்கும் கவலைப்பட வேண்டாம்.**

**அன்பினால் ஒவ்வொரு பலவீனத்தையும், ஒவ்வொரு தவறையும் போக்க முடியும். நீங்கள் பாபாவை 100 சதவிகிதம் நேசிக்கும்போது, உங்களுள் நிலைகொண்டுள்ள கடவுள் அன்பை அறிவார், அதுவே அவருக்குப் போதுமானது.**

**அவர் அனைத்திலும், அனைவரிடத்திலும் புனிதர்களிலும், பாவிகளிலும், விலங்குகளிலும், உயிரற்ற ஜடப் பொருட்களிலும் இருக்கிறார். அவர் இப்போது இங்கேயே, உள்ளேயும் வெளியேயும் இருக்கிறார்; நாம் பேசுவது அவருக்குத் தெரியும். அவர் அற்புதமானவர், அளவிறுதியற்றவர், அவர் மட்டுமே உண்மையானவர். நீங்கள் பாபாவை நேசிக்கிறீர்கள் என்பது அவருக்குத் தெரியும்.**

**பலவீனங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அவை மறைந்துவிடும், குறைகள் மறைந்துபோகும். அவற்றில் சில, காலம் கடந்து தொற்றிக் கொண்டிருந்தாலும், அன்பு ஒரு நாள் அவற்றை**

**உட்கொண்டுவிடும். அன்பெனும் ஆனந்தப் பெருங்கடலில், எல்லாம் மறைந்துவிடும். நம் மனம் எவ்வளவு அசுத்தமாக இருந்தாலும், நாம் கொண்டிருக்கும் அன்பு அதை முற்றிலும் அப்பழுக்கற்றதாக்கிவிடும். தினமும் உங்கள் முகத்தை இந்த ஏரியில்** (மர்டில் பீச் மையத்தில்) **கழுவினால், அனைத்து அசுத்தங்களும் ஏரிக்குள் மூழ்கிவிடும், ஆனால் ஏரி தெளிவாக இருக்கும். அதேபோல், உங்களுக்குள், பாபாவின் மீதான அன்பின் ஏரி ஒன்று உள்ளது. எனவே ஒவ்வொரு சிரமத்திற்கும், ஒவ்வொரு பலவீனத்திற்கும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அதிலிருக்கும் அசுத்தம் அகற்றப்பட்டு வருகிறது. நீங்கள் முழு மனதுடன், நேர்மையாக நேசிக்க வேண்டும். உங்களைப் பற்றி அல்ல, அன்பானவரைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று அன்பு கோருகிறது.**

**எனவே, கவலைப்பட வேண்டாம், நான் உங்களுக்குச் சொல்கிறேன், சில சமயங்களில் உங்களுக்கு சந்தேகம் வந்தாலும், நீங்கள் குழப்பமடைந்தாலும், நான் விரும்பியபடி என்னை நேசிக்க முடியாவிட்டாலும், கவலைப்பட வேண்டாம். பாபா உங்களை நேசிக்கிறார், அதுவே முக்கியம்.**

மர்டில் பீச் மையத்திற்கு விஜயம் செய்த வேளையில், பாபாவை முதன்முதலில் சந்தித்த ஒரு பக்திமிக்க ஜெர்மன் தம்பதியர், '**ஃப்ரெட்**' & '**எல்லா**' **வின்டர்ஃபெல்ட்** இருவரும் நியூயார்க் நகரில் சந்தித்து, திருமணம் செய்து கொண்ட பின்னர் அங்கேயே குடியேறினர். இருவரும் ஆன்மீக குருநாதரைக் கண்டுகொள்வதில் அதீத ஆர்வம் காட்டினர். ஃபிரெட் (54 வயது), பல ஆண்டுகளாக முழு முனைப்புடன் தேடிக்கொண்டிருந்தார், மேலும் 55 வயதான 'எல்லா', குழந்தை பருவத்திலிருந்தே 'பூமியில் தெய்வம் இருப்பதை' உணர்ந்தார். கப்பல் அல்லது விமானம் வழியாகப் பயணம் செய்து, இமயமலை அல்லது தென் கடல் தீவுகளுக்குச் செல்லத் தேவையான பணத்தைச் சேமிக்க முடிவு செய்தனர், அங்கு அவர்கள் தங்கள் குருநாதரைத் தேடத் தொடங்குவார்கள்.

1948ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், ஃப்ரெட் மேற்பார்வையாளராக இருந்த அடுக்குமாடி கட்டிடத்திற்கு, நன்கு உடையணிந்த ஒரு பெண்மணி வருகை தந்து, மாடி வீடு ஒன்றைக் குத்தகைக்குக் கையெழுத்திட்டார். அந்தப் பெண்மணி அணிந்திருந்த கம்பளி கோட்டின் இடைவெளி வழியாகத் தென்பட்ட ஒரு லாக்கட் அவரை வெகுவாக ஈர்த்தது: "அவர் ஆன்மீக குருநாதரா அல்லது யோகியா?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண்மணி, "அவர் ஒரு மகத்தான, பரிபூரண குருநாதர்" என்று பதிலளித்தார்.

ஃப்ரெட் ஆர்வமாக இருந்ததை அறிந்த அந்த பெண்மணி, தான் குடிபெயர்ந்த பின்னர், 'ஒரு நாள் அதைப் பற்றி பேசலாம்' என்று கூறினார்.

அந்தப் பெண்மணி வேறு எவருமல்ல, ஐவி டியூஸ்தான். பாபாவைப் பற்றி அவர் கூறியபோது ஃப்ரெட் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர் ஜீன் அட்ரியலின் 'அவதார்' என்ற புத்தகத்தை இரவல் வாங்கி, எல்லாவுடன் பகிர்ந்து கொள்ள தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றார்.

'எல்லா', நேர் மாறாக, அந்தப் புத்தகத்தை வெளியளவில் உற்றுநோக்கி, பாபா ஒரு போலி கிறிஸ்து என்று உணர்ந்தது மட்டுமின்றி, அவ்வாறே எடுத்துரைக்கவும் செய்தார். ஆனால் அவர் அதைத் திறந்து, மெஹர் பாபாவின் புகைப்படத்தைப் பார்த்து, அவருடைய அன்பின் வார்த்தைகளைப் படிக்கத் தொடங்கிய வேளையில், அவை ஆழமாக அவரது இதயத்தைத் தொட்டு, பாபாவைப் பற்றி மட்டுமே நினைக்கவும், அவரை நேசிக்கவும் செய்தது. பின்னர், ஐவியின் வழிகாட்டுதலின் கீழ் இருவரும் ஸூஃபி இயக்கத்தின் உறுப்பினர்களாயினர்.

நாட்கள் செல்லச் செல்ல, படிப்படியாக 'எல்லா' தன் இதயம் பாபாவுடையது என்று உணர்ந்தார். அவர் இனயத் கான் மீது மரியாதை கொண்டிருந்தாலும், மெஹர் பாபாவை மட்டுமே தனது குருவாக விரும்பி ஏற்றுக்கொண்டார். அதனால், யாரிடமும் எதுவும் சொல்லாமல், பதிலையும் எதிர்பாராமல், இந்தியாவில் பாபாவுக்கு ஒரு குறிப்பை எழுதி அனுப்பினார். ஆனால் விரைவில் பாபாவிடமிருந்து பதில் கடிதம் வந்தது: **"உங்கள் அன்பு என்னை ஆழமாகத் தொட்டது. நீங்கள் எனக்கு நேரடியாக சேவை புரியும் நேரம் இன்னும் வரவில்லை, ஆனால் விரைவில் அது வரும்"** என்று பாபா அதில் குறிப்பிட்டிருந்தார். 'எல்லா' பாபாவின் பதிலைப் பார்த்து, மெஹர் பாபா அவரை ஏற்றுக்கொண்டதாகப் பரவசம் அடைந்தார். அவர் இப்போது ஸூஃபி இயக்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று அவருக்குத் தெரியும்; அவர் இதை ஐவியிடம் கூறியபோது, அவர் உறுதிமொழியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இறுதியாக, இந்த நாள், ஃபிரெட், எல்லா இருவரும் தங்கள் குருநாதரை சந்திக்க மர்டில் பீச்சிற்கு வந்தனர். 1952, மே 10 பிற்பகல் 3:10 மணிக்கு, அவர்கள் லகூன் கேபினில் அழைக்கப்பட்டனர். இருவரும் உள்ளே நுழைந்ததும், பாபா அவர்களை வரவேற்று, தனது கைகளை விரித்து எழுந்து நின்றார். அவர் முதலில் 'எல்லா'வைத் தழுவினார். 'எல்லா' ஒரு சோர்வான குழந்தை அல்லது சிறிய பறவையைப் போல பாபாவின் தோளில் தலையை சாய்த்தார், அவர் முழுமையான சமர்ப்பணத்துடன், நிதானமாகப் பெருமூச்சு விட்டு "ஓ பாபா..." என்று மட்டுமே சொல்ல முடிந்தது.

பகுத்தறிவால் பிரிக்கப்பட்ட சக்திகளில் தன்னைப் பெருமையாகப் பார்த்த ஃப்ரெட், என்ன நடக்கிறது என்பதைக் கூர்ந்து ஆராய முயன்றார்.

அங்கு நடந்ததை பின்னர் ஃப்ரெட் விவரித்தார்:

பாபா, ‘எல்லா’வின் தோளுக்கு மேலாக என்னைப் பார்த்து, கண் சிமிட்டி, காதுக்கு எட்டும் வரை குறும்புத்தனத்துடன் சிரித்தார். அந்த நேரத்தில், பகுத்தறிவு - நான்கு வருட கால பகுத்தறிவு - வெடித்த பலூன் போலக் கதவுக்கு வெளியே சென்றது. இந்தப் பகுத்தறிவானது, நொடிப்பொழுதில் அடையப்பெற்ற அறிவு, அங்கீகாரம் மற்றும் நான் எதிர்கொண்ட பரிபூரண உண்மைப்பொருளின் மீதான திடமான நம்பிக்கையால் மாற்றப்பட்டது. அந்த உணர்வுதான் என் வாழ்நாள் முழுவதும் என்னைத் தாங்கிக்கொண்டது.

அப்போது பாபா என்னை அரவணைத்தார். பாபா உங்களை அரவணைக்கும்போது, நீங்கள் அன்பின் இதமான நீரில் நீராடுவதைப் போல் உணர்கிறீர்கள். மிகுந்த பரவசத்தால், உற்சாகமடைகிறீர்கள் - வலிகள், கவலைகள், வாழ்க்கையின் கசிவுகள் அனைத்தும் அர்த்தமற்றவையாக உங்களிடமிருந்து விலகிச் செல்கின்றன. அவரைத் தவிர வேறு எதுவும் இல்லை, ஒரே மெய்ப்பொருள், ஒரே யதார்த்தம், ஒரே அர்த்தமுமாகத் திகழும் ஏக இறைவன்.

அவர்களின் கைகளைப் பற்றிக்கொண்டு, பாபா அவர்களை, அவருக்கு இருபுறமும் அமரச்செய்தார். தொடர்ந்து அவர்களின் கைகளைப் பற்றிக் கொண்டிருந்தார். மெஹர்ஜி எழுத்துப்பலகை வழியாக விளக்கிக் கொண்டிருந்தார். அன்பர்களும், அன்பிற்குரியவரும் இறுதியில் மீண்டும் இணைந்தனர். அவர்கள் தங்கள் இதயங்களை பாபாவிடம் கொட்டி, பாபாவின் அறிவுறுத்தல்களை வேண்டினர்.

பாபா அவர்களிடம் கூறினார்: "**எலினோரினா** (எலிஸபெத் மற்றும் நோரினா) **இருவரிடமிருந்தும், உங்கள் இதயத்தின் குரலிலிருந்தும் உங்களைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டேன். நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அன்பின் மூலமாக நீங்கள் எனக்காகச் செய்ததெல்லாம் எனக்குப் புரிகிறது, எனக்குத் தெரியும்.**”

"எங்களைத் தவிர உங்களுக்கு வழங்க எங்களிடம் வேறு எதுவும் இல்லை" என்று ஃப்ரெட் கூறினார். "நாங்கள் உங்களிடம் சரணடைந்தோம், ஆனால் நாங்கள் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழவில்லை."

**"நீங்கள், என் இதயத்தை ஆழமாகத் தொட்டதாக உணர்கிறேன்,"** என்று பாபா பதிலளித்தார். **"முழுமனதான அன்பைத் தவிர ஒருவரால் வேறு என்ன வழங்க முடியும்? மேலும், அதை நீங்கள் எனக்காக வைத்துள்ளீர்கள்.**

**"எனவே உங்கள் தவறுகள் அனைத்தும் எனக்கு அற்பமானவை. அன்பின் நெருப்பில், அனைத்து அசுத்தங்களும் தானாக எரிந்துவிடும். நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், அவர் நம்முடன் இருப்பதைப் போலவே, நாமும் கடவுளிடம் முற்றிலும் நேர்மையாக இருக்க வேண்டும்.**

**அவர் எல்லாவற்றையும் தெய்வீக நேர்மையுடன் கவனித்துக் கொண்டிருக்கிறார், நாம் அவரை இதயப்பூர்வமான நேர்மையுடன் நேசிக்க வேண்டும். அவரை நேசிப்பதில் எந்த சமரசமும் இருக்க முடியாது. நீங்கள் என்னை நேசிப்பது போல, கடவுள் உங்களுக்கு அவரை நேசிக்கவும், அவரில் என்னை அறிந்து கொள்ளவும் உதவுவார் என்பதை உறுதியாக நம்புங்கள்."**

பாபா, இருவருக்கும் ஸூஃபி பாரம்பரியத்தை எவ்வாறு மாற்றியமைத்தார் என்பதை விளக்கினார், மேலும் கருத்து தெரிவிக்கையில்:

**நோரினா எனது விலைமதிப்புமிக்க அணிகலன். திருமதி டியூஸ் மற்றொரு மாணிக்கக் கல். எலிஸபெத் தனித்துவமானவர்.**

**இப்போது, நீங்கள் புரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால், நான் ஸூஃபி தத்துவத்தில் மட்டுமல்ல, வேதாந்தம், ஸொராஸ்ட்ரியனிஸம், பௌத்தம் ஆகியவற்றிலும் அக்கறை கொண்டவன். எனவே, நீங்கள் ஸூஃபியிஸத்தைப் பின்பற்றுகிறீர்களோ இல்லையோ, அது அனைத்தும் இறுதியில் என்னிடம் வருகிறது. ஆனால், நீங்கள் ஸூஃபி தத்துவத்தில் ஆர்வமாக இருந்தால், அதற்கான எனது திட்டத்தின் அடிப்படையில், உங்கள் ஆர்வத்தைத் தொடருங்கள், அதைப் பின்பற்றுங்கள்.**

**உங்களுக்கு எந்த 'இஸமும்' தேவையில்லை என்று நான் நினைக்கிறேன், உண்மையில், திருமதி டியூஸ், பிராபஸோன் மற்றும் இந்தியாவில் வாழும் பிற தலைவர்களுக்கு ஸூஃபியிஸம் தேவையில்லை, ஏனென்றால் அவர்களிடம் நான் உள்ளேன். ஆனால், யதார்த்தத்தின் இந்த ஐந்து அம்சங்களுக்காக, வெவ்வேறு நபர்கள், எனக்காக, வித்தியாசமாகப் பணிபுரிய வேண்டும் என்று நான் விரும்புவதால், இப்போது, தனிப்பட்ட முறையில் மற்றும் நேரடியாக, ஸூஃபி இயக்கத்தை திருமதி டியூஸ் மற்றும் பிராபஸோனிடம் ஒப்படைக்கிறேன். எனவே ஸூஃபி இயக்கத்தின் இந்தப் பணி அவர்களுக்காக அல்ல, எனக்காகவே இருக்கும்.**

**உதாரணமாக, ஒரு நாள் என்னுடைய கிறிஸ்தவ மறைபொருள் சம்பந்தப்பட்ட பணியைச் செய்வதற்கும், அதை உங்களிடம் ஒப்படைப்பதற்கும் நீங்கள் பொருத்தமானவர்களாக நான் கருதலாம். உங்களுக்கு இது தேவை என்று அர்த்தமல்ல; ஆனால் எனது பணிக்காக நான் அதைச் செய்யும்படி கட்டளையிடலாம், அப்போது நீங்கள் அதைச் செய்ய வேண்டும். ஸூஃபியிஸத்தின் இந்தப் பணிக்கு உதவுமாறு நான் உங்களிடம் கேட்கலாம்; வேறு எந்த 'இஸத்திலும்' அல்லது அம்சத்திலும் எனது பணிக்கு உதவுமாறு நான் உங்களிடம் கேட்கலாம். நீங்கள் அதைச் செய்ய தயாராக இருக்கிறீர்களா?**

இருவரும் "ஆம்" என்றனர்.

**அப்படியானால் நீங்கள் பாபாவுக்குச் சொந்தமானவர்கள், மேலும் குறிப்பிட்ட 'இஸம்' எதுவும் தேவையில்லை. நான் சொல்வதை மட்டும் செய்யவேண்டும்.**

**எல்லாமே கடவுள், எல்லாமே யதார்த்தம், எல்லாமே ஒரே உண்மைப்பொருள் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த யதார்த்தத்தை ஒருவர் சுயமாக அனுபவிக்கும் போது, ஆரம்பமும் முடிவும் இல்லாத விழிப்புணர்வில், தொடக்கத்திலிருந்து இறுதி வரை, அனைத்தும் தெளிவாகும்! அப்போது கடவுளும், கடவுள் மட்டுமே உண்மையானவர். நாம் அனைவரும் ஒன்று.**

**உங்கள் மீது எனக்குள்ள அன்பும், என் மீதான உங்களின் அன்பும், நான் சொல்வதைச் செய்யும் உங்களின் தயார் நிலையும், அந்த உண்மைப்பொருளை நோக்கி உங்களை விரைவில் கொண்டு வரட்டும். கடவுள் இதை ஒரே நொடியில் செய்ய முடியும்.**

**எனது திட்டத்தைப் பற்றி நான் நாளை உங்களுக்குச் சொல்கிறேன், இதன் மூலம் நீங்கள் எங்கு உதவலாம் என்பதை நாம் பார்க்க முடியும். உங்களால் நிதி உதவி செய்ய முடியாது என்று எனக்குத் தெரியும், ஆனால் உங்களுடைய எல்லா அன்பும் எனக்கு உதவும். நீங்கள் எப்படி உதவ முடியும், நாளை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.**

தம்பதியர் இருவரும் தங்கள் பண்ணையை பாபாவுக்கு வழங்கத் தயாராக இருந்தனர். பாபா உடனே, **"உங்களிடம் இருக்கும் ஒரே உடைமையை எனக்குக் கொடுக்கிறீர்கள், இருந்தும் நீங்கள் எனக்கு எதுவும் செய்யவில்லை என்று சொல்கிறீர்கள்! நீங்கள் என்னை மிகவும் நேசிக்கிறீர்கள்!"**

மறுநாள் மாலை 4:00 மணிக்கு மீண்டும் வருமாறு பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். அந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:

**நீங்கள் செல்வந்தர் இல்லை என்று எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு பண்ணை வைத்திருக்கிறீர்கள், அதை நீங்கள் எனக்குக் கொடுத்தீர்கள். என் மீதான இந்த அன்பின் வெளிப்பாடு, முழு பிரபஞ்சத்தின் மதிப்புக்கும் இணையானது. நீங்கள் எந்த அளவுக்கு உண்மையான அன்புடன் எனக்கு உடைமையை வழங்கினீர்கள், எந்த அளவுக்கு உண்மையான அன்புடன் நீங்கள் எனக்காக உழைக்கிறீர்கள், எனக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்.**

**பல மேற்கத்தியர்கள் கடவுளை நேசிப்பதில் முன்னோடிகளாக உள்ளனர். இப்போது அவர்களுக்கு ஓர் உந்துதல் வழங்கும் நேரம் வந்துவிட்டது. உச்சக்கட்டம் வெகு தொலைவில் இல்லை. நவம்பர் 15ஆம் நாள், எனது 'அனல் பறக்கும் வாழ்வு' தொடங்குகிறது. எனவே, கடவுள் விரும்பினால், இந்த உச்சக்கட்ட ஆன்மீக உலகில் கிழக்கும்,**

**மேற்கும் ஒருமைப்பாட்டைக் கொண்டுவரும். இது அனைத்தும் முடிவடையும் தருவாயில் உள்ளது. கடவுள் எல்லாவற்றையும் செய்கிறார், இதில் பாபா மிகப்பெரிய பங்கை வகிக்க வேண்டும். உங்களைப் போன்ற கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்களின் உதவியுடன் இது இயக்கப்பட வேண்டும். அதனால் எதற்கும் கவலைப்பட வேண்டாம். எதிலும் குழப்பமடைய வேண்டாம். நான் சொன்னபடியே செய்யுங்கள்.**

மர்டில் பீச் மையம் தொடர்பான பணிகளுக்கு வேண்டிய வருமானத்தைத் திரட்ட விளைநிலங்களை விற்பது குறித்து மேலும் விவாதிக்கப்பட்டது. ஃப்ரெட் அவர்களின் காரையும் அன்பளிப்பாக வழங்க ஆயத்தமானபோது, பாபா அதை அவர்களிடமே வைத்திருக்குமாறு அறிவுறுத்தினார். கணவன், மனைவி இருவரும் பத்து நாட்களுக்கு மர்டில் பீச்சில் தங்கியிருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் பாபா, அவர்கள் மறுநாள் முடிந்தவரை விரைவில் நியூயார்க்கிற்குச் செல்லும்படிக் கட்டளையிட்டார். எனவே, அவர்கள் சோக உணர்வுடன், ஆனால் அவரது விருப்பத்தை நிறைவேற்றும் உறுதியுடன் பாபாவைப் பிரிந்து சென்றனர். அன்றிரவு அதிகாலை 2:00 மணிக்கு விழித்தெழுந்து, மர்டில் பீச் மையத்திலிருந்து புறப்பட்டு, மாலையில் நியூயார்க்கை வந்தடைந்தனர்.

நியூயார்க் நகரில் வாழும் மற்றுமொரு நபர் **ஹாரி ஹெட்கர்**, பேருந்தில் மர்டில் பீச் மையத்திற்கு வந்திருந்தார். அன்று, மே 10ஆம் நாள், பிற்பகல் 3:40 மணிக்கு, பாபா, அவருடன் நிகழ்த்திய ஒரு குறுகிய சந்திப்பின்போது இவ்வாறு கூறினார்: "**உங்கள் வருகை உங்களுக்கும் எனக்கும் நல்லது, ஏனென்றால் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள்; நானும் உங்களை நேசிக்கிறேன். மேலும், நான் உங்களை நேசிப்பதால் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள். எனவே இது நம் இருவருக்கும் சிறப்பானது. இந்த ஐந்து நிமிட தொடர்பு, கடவுளின் அருளால், என்றென்றும் நிலைத்திருக்கும்! கடவுள் உண்மையானவர், நித்தியமும் நிரந்தரமுமானவர், அனைத்து அன்பும் நிறைந்தவர். அதாவது அன்பால் உருவாக்கப்பட்ட அனைத்தும் - உண்மையான அன்பு - ஒருபோதும் அழிவதில்லை. எனவே, இந்தத் தொடர்பு எப்போதும் இருக்கும்.**"

ஹெட்கர் சக மனிதர்களை, மேலும் மேலும் தனது சகோதரர்களாகப் பார்க்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார், "சில நேரங்களில், அனைவரையும் சகோதரர்களாகப் பார்ப்பது கடினம்" என்று கூறினார்.

பாபா அறிவுரை வழங்கினார்: "**அவர்களிடத்தில் பாபாவைக் காண முயற்சி செய்யுங்கள்; அப்போது நீங்கள் அவர்களைச் சகோதரர்களாகக் காண்பீர்கள். இறுதியில் நாம் அனைவரும் ஒன்றுதான். நாம் அனைவரும் கடவுளில் ஒன்று என்பதை அனுபவத்தால் அறிந்தவர்கள் அறிவார்கள்.**

**அறியாமை நீங்கி ஒருமைத்தன்மை பற்றிய அறிவு தானாகவே வரும். அதுவரை அவர்களில் பாபாவைக் காண முயற்சி செய்யுங்கள், உங்கள் சுயத்தில் இந்த சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்."**

பாபா தொடர்ந்து கூறினார், **"நீங்கள் அதை எப்படிச் செய்வீர்கள்? பிறரிடமிருந்து விலகி தனிமையில் இருக்கும் ஒருவரைப் பார்க்கும்போது, அவரிடம் சகோதரத்துவ உணர்வு உருவாகாமல் இருந்தால், 'பாபா அவருக்குள் இருக்கிறார்' என்று நீங்களே உங்களுக்குள் சொல்லும் வேளையில், நீங்கள் அவரை ஒரு சகோதரராக உணர்கிறீர்கள்."**

"நீங்கள் என்னுடன் இருப்பதை உணர்கிறேன், இந்த உணர்வு தொடர வேண்டும் என விரும்புகிறேன்" என்று ஹெட்கர் கூறினார்.

**"என்ன ஒரு சிந்தனை! இப்போது நீங்கள் என்னைப் பார்த்தீர்கள், என்னைத் தொடர்பு கொண்டீர்கள், என்னைத் தழுவினீர்கள், நீங்கள் பரிபூரண உணர்வு நிலையை அடையும் வரை மேலும் மேலும் கடவுள் உங்களில் என்னை உணர வைப்பார்."**

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாபா சில நெருங்கிய அன்பர்களுடன், 1952, மே 11 ஞாயிற்றுக்கிழமை அன்று, லகூன் கேபினில் தனிப்பட்ட சந்திப்புகளை நிகழ்த்தினார். அன்று காலை 8:00 மணிக்கு மால்கம், பாபாவை சந்தித்தபோது, பாபா அவருடைய சில செய்திகளைச் செய்யுளாக உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார், மால்கம் உடனடியாக அந்தப் பணியைச் செய்துமுடித்தார். மெஹர் மவுண்டில் பாபாவின் வருகைக்கான ஏற்பாடுகளை முடிக்க இருந்த அவர், அதே நாளில் கலிஃபோர்னியாவுக்குத் திரும்பிச் சென்றார். மேற்கத்திய உலகில் தனது பணிக்காக அவர் சொல்வதைச் செவ்வனே செய்யும் ஏறக்குறைய பதினேழு வயதான ஏழு இளைஞர்கள் அல்லது இளம் பெண்கள் வேண்டும் என்றும் பாபா அவரிடம் கூறியிருந்தார். **"பல எண்ணிக்கையிலான இளைஞர்களை என்னிடம் கொண்டு வர வேண்டாம்; கடவுள் மீது நாட்டம் உள்ளவர்களை மட்டுமே அழைத்து வாருங்கள், அவர்களை நான் தலைவணங்குவேன்; இல்லையேல் நான் என்னையே தலைவணங்குவேன்"** என்று பாபா கூறினார்.

ஐவி, சார்மியன், ஃபிரான்சிஸ் ஆகியோர் மே 11 அன்று காலை 8:45 மணிக்கு மீண்டும் பாபாவை சந்தித்தனர், மேலும் அவர்கள் 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' (SUFISM REORIENTED) என்ற பெயரை பெரிதும் விரும்பினர். பாபா அவர்களுக்கு அறிவித்தார்:

**பரிபூரண ஒளியூட்டம் அடையப்பெறும் வரை, எனது பணிக்கு நீங்கள் கருவிகளாக இருப்பீர்கள். அப்போது, தானாக என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' என்ற பெயர் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், ஆனால்**

**தற்போதைக்கு அது தனித்தனியாக இருக்கட்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறேன், அதை நான் விரும்பியபடி நடைமுறைப்படுத்தியதும், வெவ்வேறு நாடுகளில் உள்ள அனைத்து வேறு வேறு கிளைகளையும் ஒன்றாக இணைக்கப் பார்க்கிறேன். இந்தப் புள்ளிவிபரங்கள் அனைத்தையும் துல்லியமாகவும், நடைமுறைக்கு உரியதாகவும் மாற்றிய பின்னர், அவை வெளியிடப்பட வேண்டும். அனைத்தையும் ஒன்றுதிரட்டி, சரிபார்த்து, ஜூலையில் நான் புறப்படுவதற்கு முன்பு வெளியிடுவேன்.**

'**முர்ஷித்'துகள்** (**முர்ஷித்** - ஸுபியிஸத்தின் தலைவர், **முர்ஷிதா** - பெண் தலைவர்) சிறப்பு மேலங்கி அணிவதைப் பற்றி பாபா இவ்வாறு கூறினார்: **"நீங்கள் உண்மையான 'முர்ஷித்'துகளாக மாறும் வரை, அத்தகைய மேலங்கிகள் தேவையில்லை. அதற்குப் பிறகு நீங்கள் அந்த ஆடைகளை அணியலாம். ஸுஃபியிஸத்தின் அடிப்படை, கம்பளி ஆடை அணிவதாகும், ஏனெனில் அது பிற நபர்களின் இருள் நிறைந்த மனப்படிவங்களை ஈர்த்துவிடும். தெய்வீக ஒளியூட்டம் இருக்கும் வேளையில் ஒருவர் அணியும் மேலங்கி, மனப்படிவங்களை ஈர்க்கும் தன்மையுடையது. முஹமது மேலங்கி அணிந்திருந்தார்; கிருஷ்ணரும் அணிந்தார்; இப்போது பாபா கம்பளி ஆடையை அணிந்துள்ளார்."**

இந்த விஜயத்தின் போது, முதல் முறையாக, பாபாவை சந்தித்த மற்றுமொரு பெண்மணி கலிஃபோர்னியாவை சேர்ந்த **ஈவ்லின் பிளாக்ஷா** ஆவார். 1941ஆம் ஆண்டில், **ஐரீன் கோனிபியர்** இந்தியாவிலிருந்து அமெரிக்க தேசத்திற்குக் குடிபெயர்ந்த அவர், 1947ல், இங்கிலாந்துக்குச் செல்வதற்கு முன்பு, கலிஃபோர்னியாவின் 'ஓஷன்ஸைட்' கடலோர நகரத்தில் அமைந்த ரோசிக்ரூசியன் ரிட்ரீட்டில் சில நாட்களைக் கழிக்கச் சென்றார். அந்த நேரத்தில் ஈவ்லின் அங்குப் பணிபுரிந்துக் கொண்டிருந்தார்; ஐரீன் அவரிடம் சில நகல்களைக் கொடுத்து, தட்டச்சு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். ஐரீனின் அலமாரியில் பாபாவின் பல புகைப்படங்கள் இருந்ததைப் பார்த்து, ஈவ்லின் இயல்பாகவே அவர் யார் என வினவினார். ஐரீன் அவருக்கு '**பெர்ஃபெக்ட் மாஸ்டர்**' மற்றும் '**அவதார்**' ஆகிய புத்தகங்களைக் கொடுத்த அதே இரவில் அவற்றைப் படித்த பின்னர், ஈவ்லின், மடை திறந்த வெள்ளம் போல கண்ணீர் சிந்தி அழுதார். அன்று இரவு அவர் மெஹர் பாபாவின் ஒரு காட்சியைக் காண நேர்ந்தது:

பாபா ஒரு வெட்டவெளியில் குதிகாலில் அமர்ந்திருந்தார்; அவருக்கு முன்னால் சில நபர்கள் அடங்கிய ஒரு குழுவும் அதுபோல, குதிகால்களில் அமர்ந்திருந்தனர்... நான் அவரைப் பார்த்த அந்த நிமிடம், ஓடிச் சென்று அவரது அன்பான காலடிகளில் அடிபணிய விரும்பினேன். 'எனது கிருஷ்ணா, எனது

கிருஷ்ணா, நீ திரும்பி வந்து இங்கே இருக்கிறாய்,' என்று எனது மனமும் இதயமும் சொல்லிக்கொண்டே இருந்தது. மேலை நாட்டில் பிறந்தாலும், கிருஷ்ணா என்ற பெயரை நான் எங்கேயோ கேட்டிருந்தேன், அதைக் கேட்டதும், ஏன் என்று தெரியாவிடிலும், என் உள்ளம் வினோதமான களிப்பில் துள்ளியது; ஆனால் இப்போது நான் அறிந்துகொண்டேன், இங்கே என் அன்பான இறைவன் இருக்கிறார்.

நான் அதிவேகத்தில் வெளியேற விரும்பினேன், ஆனால், பாபா அவரது கையால் என்னைத் தடுத்து, அவருடைய அன்பான இதயத்தைத் தொட்டபோது, நான் அவரிடம் வர விரும்புகிறேன் என அவருக்குத் தெரியும் என்று நினைத்தேன், மேலும் அவரது இதயத்திலிருந்து ஒரு சிறிய தங்க இழை என்னுடைய இதயத்தை நோக்கிப் பாய்ந்து, வெளிப்படுத்திய மகிழ்ச்சியும், பேரின்பமும், அன்பும் ஏதோ இனம்புரியாத ஒன்று. நான் விழித்தெழுந்த பின்னரும், ஆனந்தம் என்னில் நிலைகொண்டிருந்ததை உணர்ந்தேன். அடுத்த நாள், பாபாவை எல்லா இடங்களிலும், சுவரில், தரையில், என் தட்டச்சு இயந்திரத்தில், புதர்களில், பாதைகளில் - எல்லா இடங்களிலும் பார்த்தேன்.

நவம்பர் 1947ல், ஈவ்லின், மால்கம் ஸ்க்லோஸையும், தொடர்ந்து ஜீன் அட்ரியலையும் தொடர்பு கொண்டார். அவர் இந்தியாவில் பாபாவின் முகவரியைப் பெற்று அவருக்குக் கடிதம் எழுதினார். இதற்கிடையில் அவர் தனது அன்புக்குரிய இறைவனைப் பற்றிய பல காட்சிகளைக் காண நேர்ந்தது, ஆனால் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, மர்டில் பீச்சில் அவர் பாபாவை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தது.

ஈவ்லின் பிளாக்ஷா மே 11 அன்று காலை 10:30 மணிக்கு லகூன் கேபினுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது சந்திப்பின் குறிப்புகள் இங்கே:

கிட்டி என்னை பாபா இருந்த குடிலுக்கு அழைத்துச் சென்று, உள்ளே நுழைந்ததும் என்னை அறிமுகப்படுத்தினார். ஆனால் அங்கு, பாபாவுக்கு பதிலாக, நான் பார்த்த, அதுபோன்ற உருவத்தை, உள் ஆன்மீக தளங்களில் பார்த்தேன்; அங்கே, ஓர் அழகான இளஞ்சிவப்பு மேகத்தின் மீது, நான் பார்த்த, மிகவும் அற்புதமான சிறுவன் மிதந்துக் கொண்டிருந்தான். முற்றிலும் தெய்வீக அழகு, பதினாறு அல்லது பதினேழு வயதுக்கு மேல் இருக்காது. நான் பாபாவை உண்மையில் அறிந்தது போலவே அவரைப் பார்க்கிறேன் என்று எனக்குத் தெரியும்; அத்தகைய பாசம் என் ஆழ் இதயத்தில் மூழ்கியது, நான் கிட்டத்தட்ட அடக்கமுடியாத களிப்பில் ஆழ்ந்தேன்.

பாபா என்னைத் தனது அருகில் அமரச் செய்து, என்னைத் தட்டிக்கொடுத்து, அருகில் அழைத்தார் என்று எனக்குத் தெரியும், ஆனால் அவர் இன்னும் அந்த அழகான இளைஞனின் தோற்றத்தில் இளஞ்சிவப்பு மேகத்தின்

மீது நிலைகொண்டிருந்தார். நியூயார்க்கில் பாபாவை மீண்டும் பார்க்கும் வரை அவர் எப்படி இருந்தார் என்பதை நான் அறிந்ததே இல்லை.

என் அன்பான கிருஷ்ணா மீண்டும் எங்களுடன் இருந்தார், இருக்கிறார்!

**"எனது குழந்தைகள் என்னை விட்டு விலக மாட்டார்கள்"** என்று பாபா, ஈவ்லினிடம் கூறினார், அனைவரும் அவருடைய குழந்தைகள் என்பதை அவர் அறிந்தார்!

ஜீன் அட்ரியலைப் பற்றி குறிப்பிட்டு, பாபா பின்னர் அறிவுறுத்தினார், **"ஜீனின் நண்பரை நான் ஜீனைப் போலவே அன்பாகக் காண்கிறேன். நீங்கள் என்னை உண்மையாக நேசிக்கிறீர்கள். அன்பினால் என்ன செய்ய முடியும் என்பதை உங்களால் நிரூபிக்க முடியும். நான் உங்களை நேசிக்கிறேன், இவை அனைத்தும் அன்பை அரவணைக்கும் அளவுக்கு சிறப்பானவை என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன். எனவே, நீங்கள் விரும்பினால் தவிர, 17ஆம் தேதி** (பொது தரிசன நாள்) **ஐந்து நிமிடம் என்னைப் பார்க்க, நீங்கள் இங்கே காத்திருக்கவும், பின்னர் ஹோட்டல் பணியைத் தேடிக் கண்டுகொள்ளவும் வேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன்.**

**"நான் உங்களை இங்கிருந்து போகுமாறு கூறுவதாக நினைக்காதீர்கள். நான் உங்களை நேசிக்கிறேன், எனக்குச் சொந்தமானவர் என்று சொல்கிறேன். ஆதலால் ஒரு வேலையின் நிமித்தம் வாஷிங்டன் சென்று, உங்களுக்கு அது கிடைத்த முதல் நாளே எனக்கு கடிதம் எழுதுங்கள். என்னை நேசிக்க முயற்சி செய்யுங்கள். நான் உங்களை விட்டு விலகுவேன் என்று நினைக்காதீர்கள், நான் உங்களுடன் இருப்பேன் - அன்புடன், நேர்மையான, தூய அன்புடன், அதுவே கடவுளின் இதயத்திற்கு நெருக்கமாக இருப்பது, அவர் பரிசுத்தமானவர், எனவே, பாபாவின் அன்புடன், தைரியமாக, எல்லாவற்றையும் எதிர்கொள்ளுங்கள். எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்."**

**டோனி ரூத்பெர்ட்** என்ற பெண்மணிக்கு மர்டில் பீச்சில் ஒரு வீடு இருந்தது, ஒரு நாள் மெஹரா இதர பெண் மண்டலியுடன் தேநீருக்காக அங்குச் சென்றார். டோனி, தேசிய அளவில் புகழ்பெற்ற ஒரு புகைப்படக் கலைஞர், அவர் பாபாவைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்பு, நியூயார்க் நகரில் நோரினா, எலிஸபெத், நதீன் ஆகியோர் மூலமாகத் தெரிந்துகொண்டார். டோனி முதலில் 11ஆம் தேதி பிற்பகல் 3:00 மணிக்கு பாபாவை, கான்ஸூலோ ஸைட்ஸூடன் சந்தித்த வேளையில், பாபா, டோனியிடம், **"நீங்கள் என்னை இதற்கு முன் பார்த்திருக்கிறீர்களா?"** என்று கேட்டார்.

"இல்லை," அவர் பதிலளித்தார்.

**"நான் உங்களைப் பார்த்தேன்!"** என்று கூறி, பின்னர் அவருக்கு விளக்கினார்:

நீங்கள் இப்போது இங்கே (மர்டில் பீச்சில்) மகிழ்ச்சியாக உணர்கிறீர்கள், நானும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்கள் ஏன் இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இரண்டு காரணங்களுக்காக - என்னுடன் தொடர்பில் இருப்பவர்கள் இங்கே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், ஏனென்றால் இந்த இடம் (மர்டில் பீச் மையம்) பல காலங்களுக்கு முன்பு நான் விஜயம் செய்து, வாழ்ந்து உலாவிய இடம். இரண்டாவதாக, ஏரி, கடல், காடுகள் இந்தக் கலவையானது ஒரு தனித்துவமான சூழ்நிலையை வழங்குகிறது.

டோனி, "மக்களுக்காக ஏதாவது செய்யும்போதுதான் எனக்கு மகிழ்ச்சி. இங்கு ஒரு மருத்துவமனை கூட இல்லை..." என்றார்.

ஆம், நாம் ஏதாவது செய்ய வேண்டும், ஆனால் உண்மையில் மக்களை மகிழ்ச்சியடையச் செய்வது - 'வெளியளவில் விரைந்தோடும் தற்காலிக மகிழ்ச்சி' அல்ல, 'உண்மையான நிரந்தர மகிழ்ச்சி'. இரண்டையும் விளக்குகிறேன்: கான்ஸுலோ, உங்களுக்கு என்னுடன் தொடர்பு உண்டு, மேலும் கான்ஸுலோ என்னுடன் நீண்ட காலமாகத் தொடர்பில் இருக்கிறார். எனவே இந்தத் தன்னலமற்ற பணியை விளக்குகிறேன். வாழ்க்கை என்பது ஒரு நீண்ட, முடிவில்லாத இணைப்புச் சங்கிலி, மேலும் உண்மையான மகிழ்ச்சி என்பது கடவுளை நேசிப்பதிலும், நித்திய மகிழ்ச்சியையும் அமைதியையும் அடையும் நோக்கத்தில் அவருடன் ஐக்கியமாவதிலும் மட்டுமே உள்ளது. எனவே, இந்த யதார்த்தத்தை அவர்களுக்கு உணர்த்துவதே மனித குலத்திற்கு ஒருவர் ஆற்றக்கூடிய மிகப்பெரிய சேவையாகும்.

மக்களுக்கு உதவ பல வழிகள் உள்ளன: தொண்டு செய்தல், உணவு, உடை, தானம் வழங்குதல், அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சேவை செய்தல், அவர்களைக் கவனித்துக் கொள்ளுதல், மருத்துவமனைகளில் பணிபுரிதல், பராமரித்தல் போன்றவை. ஆனால் இதெல்லாம் உடலளவில் செய்யப்படும் உதவி. அது செய்பவருக்கு நன்மை பயக்கும், ஆனால் அதே நேரத்தில், பரிணாம வளர்ச்சியின் செயல்பாட்டிற்குள் ஒருவரை கடமைக்குள்ளாக்கிறது. ஏன்?

உதாரணமாக, எனக்கு உணவு இல்லை, பசியால் வாடுகிறேன். நான் உங்களிடம் வந்து உணவு கேட்கிறேன்; நீங்கள் எனக்கு சிறிதளவு உணவு வழங்குகிறீர்கள், நான் உண்டு திருப்தி அடைகிறேன்.

இது மிகவும் நுட்பமான நிகழ்வு. நடப்பது என்னவென்றால், நீங்கள் என்னை பசியிலிருந்து விடுவிக்கிறீர்கள், நீங்கள் ஒரு நல்ல திருப்பத்திற்குக் காரணமாக இருந்தீர்கள் என்று உணர்ந்தால், அது உங்கள் அகங்காரத்திற்கு ஊட்டமளிப்பதாகப் பார்க்கப்படுகிறது, அவ்வேளையில் நான் உங்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தைத் தானாகவே பெறுகிறேன், அதை நான்

உங்களுக்கு ஏதாவது ஒரு வழியில் திருப்பிச் செலுத்த வேண்டும். (இதன் விளைவாக), அதிக அளவிலான மனப்படிவங்கள் உங்களை வந்து சேரும்.

தன்னலமற்ற சேவை எனும் கர்ம யோகா, கடினமான இரண்டு விஷயங்களைக் கோருகிறது. பிறருக்கு உதவுவது, பிறருக்கு சேவை செய்வது, ஆனால் நீங்கள் அவர்களுக்கு உதவி அல்லது சேவை செய்ததாக ஒரு கணம் கூட உணராமல் இருக்கும் விதத்தில் அவற்றைச் செய்யவேண்டும். 100 சதவிகிதம் உங்களை மறந்து, சேவையில் தொலைந்தால் மட்டுமே இது சாத்தியம். அதனால்தான் குருநாதர்கள் கூறுகிறார்கள், மானிடர்களுக்கு உதவ ஒரே வழி, அவர்களின் பௌதீக உடலளவிலான தேவைகளை மட்டும் கவனித்துக் கொள்ளாமல், ஆன்மீக எழுச்சியை அளிப்பதும் ஆகும்; இதன்மூலம், வாழ்க்கையின் நோக்கம், கடவுளை முழுமையான நேர்மையுடன் அறிந்து கொள்வதே தவிர, வெற்றுப்பேச்சுகளுக்குச் செவிமடுப்பதில் அல்ல என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, தேவைப்படுபவர்களுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று நீங்கள் உணர்கிறீர்கள். பிறருக்கு உதவுங்கள்; அது மிகவும் நல்லது. ஆனால் அதை எப்படி செய்வது என்று உங்களுக்குத் தெரியாவிடில், எப்போதும் குழப்பத்தில் சிக்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

அதைத் தொடர்ந்து பாபா தனது எதிர்கால திட்டங்களைப் பற்றி கூறினார்:

இப்போது இங்கே என்னிடம் ஒரு திட்டம் உள்ளது. ஜூன் 15 முதல் ஜூலை 15 வரை, நான் இதர பணிகளிலிருந்து விலகி, மக்களை சந்திக்காமல் இருக்கும் வேளையில், நான் இரண்டு விஷயங்களில் ஈடுபடுவேன்: கடவுளின் பத்து நிலைகள் குறித்த புத்தகத்தை (கடவுள் பேசுகிறார்) நிறைவு செய்தல் மற்றும் இங்கே மையத்திற்கான திட்டங்களை வகுத்தல், இது, கடவுளுக்கான பாதையின் நான்கு அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்தப் பிரதான மையத்தில் நான்கு வெவ்வேறு பிரிவுகள் தேவை:

1) ஸூஃபியிஸம்
2) ஒளியூட்டத்தைப் பெற விரும்புவோருக்கு முழுமையான துறவு
3) நான் விளக்கிய விதத்தில் மக்களுக்குத் தன்னலமற்ற சேவை
4) உலகில் வாழ்ந்து, தியானம் மற்றும் பிற விஷயங்களில் பற்றின்மையைக் கடைப்பிடிப்பது.

ஒவ்வொரு ஆன்மீக ஆர்வலரும் உண்மைப்பொருளை அடையப்பெறும் விதத்தில் நான்கு மையங்கள் எனது வழிகாட்டுதலின் கீழ், இங்கு உருவாக்கப்படும்.

இதற்கு ஏராளமான பணம் தேவை. நான் ஏழைகளில் மிகவும் ஏழ்மையானவன்; ஆனால், நான் கடவுளையும், முழு பிரபஞ்சத்தையும் என் உள்ளங்கையில் வைத்துள்ளேன். பணம் என்னிடம் வந்து செல்கிறது. நான் மௌனம் தொடங்கிய நாளிலிலிருந்து பணத்தைத் தொடுவதில்லை. எலிஸபெத் இந்தச் சொத்தில் மிகப்பெரிய அளவில் செலவு செய்ததோடு, இப்போது குறைந்த அளவில் நிதியையும் வைத்திருக்கிறார். ஆனால் கடவுள் நான் விரும்பும் அனைத்தையும் ஏற்பாடு செய்வார் என்று எனக்குத் தெரியும். நான் நான்கு மையங்களை உருவாக்குவேன்: ஒன்று - தியானம், இரண்டு - சேவை, மூன்று - துறவு, நான்கு - பாபாவின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் ஞானத்தை வழங்குதல்.

ஜூலையில் பாபா திரும்பிச் செல்வார்; நவம்பர் 15 அன்று எனது 'அனல் பறக்கும் வாழ்வு' ஆரம்பமாகும். இது வாழ்வின் உச்சக்கட்டம், அதில் எனது பௌதீக உடலைக் கொடூரமான முறையில் கைவிடுவதில் முடியலாம் என எனக்குத் தோன்றுகிறது; இந்த வேலையைச் செய்தாக வேண்டும்.

கடவுள் அனைத்து தூய்மையும், அனைத்து நேர்மையும் மிக்கவர், மேலும், அவர் மீதான நம் அன்பில், எந்த சமரசத்திற்கும் இடந்தராமல், மிகவும் நேர்மையாக இருக்க வேண்டும். எனவே பிறருக்கு உதவி, அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்காக நீங்கள் எதைச் செய்தாலும், அவ்வாறு செய்ததாக உங்களில் எந்த உணர்வும் இருக்கக்கூடாது. அப்போது, நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள், அவர்களும் பாதுகாப்பாக இருக்கிறார்கள்; நீங்கள் மகிழ்ச்சியாக உணர்கிறீர்கள், அவர்களும் மகிழ்ச்சியாக உணர்கிறார்கள். இது மிகவும் அரிதானது. கீதை மற்றும் வேதாந்தத்தின் முழு அடிப்படையும் தன்னலமற்ற சேவையாகும். பிறரை மகிழ்ச்சியடையச் செய்யுங்கள், ஆனால் வெகுமதியை நாடாதீர்கள், முடிவைப் பற்றி கவலைப்படாதீர்கள், அவர்களுக்கு உதவி செய்ததாக ஒருபோதும் நினைக்காதீர்கள்.

மே 11ஆம் நாள் மதியம் பாபா பலரை சந்தித்தார். முந்தைய நாள் தவறுதலாக ஆக்னஸ் பார்னின் பெயர் விடுபட்டுவிட்டது. பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், "நேற்று, தவறான புரிதலால் உங்கள் பெயர் இடம்பெறவில்லை. ஆனால் நீங்கள் அதைப் பற்றி வருந்த வேண்டாம். நான், குறிப்பாக உங்களை அழைப்பது என்பது உங்களுடனான எனது தொடர்பைக் குறிக்கிறது. நீங்கள் உண்மையில் நேற்று என்னை சந்தித்தீர்கள். நீங்கள் மிகவும் மோசமாக உணர்ந்ததாக அவர்கள் என்னிடம் கூறினார்கள். எலினோரினா கூறினார், நீங்கள் எனக்காக எவ்வளவு சிறப்பாகப் பணிபுரிகிறீர்கள், மேலும், மௌனம் கடைபிடிக்கும் நானும், மௌனத்தை வெளிப்படுத்தும் நாமும், பேசாத மௌன மொழிகளை நன்கு அறிவோம்."

அப்போதுதான் மழை நின்று சூரியன் தோன்றியது. பாபா கேலி செய்தார், **“இந்த அன்பான ஆத்மா பாபாவைப் பார்க்க வருவதால், கடவுள், மழைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, மேகங்களை அகற்றி, சூரிய ஒளியை வரவழைத்தார் என எனக்குத் தோன்றுகிறது.”**

எலிஸபெத்தைப் பற்றி கூறுகையில், **"எலிஸபெத் பாபாவுக்குக் கடவுள் கொடுத்த அன்பளிப்பு. அதை நான் முழு மனதுடன் கூறுகிறேன்"** என்று பாராட்டினார்.

அன்று மாலை 4:00 மணி சந்திப்பில், லியோனோரா நிக்கோலஸிடம் நோரினாவைப் பற்றி பாபா கருத்து தெரிவித்தார், **"நோரினா பாபாவின் இதயத்தில் இருக்கிறார்; அவரால் பாபாவை விட்டுப் பிரியவோ, பாபாவால் நோரினாவை விட்டுப் பிரியவோ முடியாது."** அந்தப் பெண்மணி, சந்தேகப் பேர்வழியாக மிகவும் அவதிப்பட்டார். பாபா அறிவுரை கூறினார், **"சில நேரங்களில் நீங்கள் சந்தேகப்பட்டாலும், நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள். உங்களுக்கு சந்தேகம் எழும் போது, நீங்கள் சொல்லுங்கள்: 'பாபா என்னிடம், நான் அவரை உண்மையாக நேசிக்கிறேன் என்றும் அவர் என்னை நேசிக்கிறார் என்றும் கூறினார், எனவே நான் அவரை சந்தேகிக்கக்கூடாது. நான் ஒருபோதும் சந்தேகிக்க மாட்டேன்!'"**

லகூன் கேபினில் மாலை 5:05 மணிக்கு, பாபா **மைக்கேல் & ஆன் கோஹனோவ்** தம்பதியரை (ஏறக்குறைய 40 வயதுகளை நெருங்கிக் கொண்டிருந்தனர்) சந்தித்து, அவர்களுக்கு மூன்று வகையான நம்பிக்கைகளை விளக்கி, பின்னர் இவ்வாறு கூறி முடித்தார்: **"இறுதி இலக்கை அடைய பாதுகாப்பான வழி, இந்த இலக்கை அடைந்த ஒருவரிடம் அன்பின் மூலம் அடிபணிவதே ஆகும். அதற்குப் பிறகு நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம், அவரால் இலக்கை நோக்கி வழிநடத்தப்பட வேண்டிய ஒன்றுதான். இந்த உறுதியான உணர்வு பின்னர் அவசியமில்லை. "என்னைப் பார்த்து, என்னைத் தொடர்பு கொண்ட பின்னர், இன்று முதல் நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், கடவுளைக் காண வேண்டும், கடவுளுடன் ஒன்றிணைய வேண்டும் என்ற தீவிர எண்ணம்: 'பாபா, நான் கடவுளைப் பார்க்க வேண்டும், அதற்குப் பிறகு நான் பிறருக்கு ஒளியூட்டத்தையும் மகிழ்ச்சியையும் வழங்க வேண்டும்.' நீங்கள் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும், இந்த எண்ணம் உங்களுடன் தொடர்ந்து இருக்க வேண்டும்: 'கடவுளை அறியவும், கடவுளைக் காணவும், பிறருக்கு ஒளியூட்டம், மகிழ்ச்சி இரண்டையும் வழங்கவும் பாபா எனக்கு உதவுகிறார்.' இதை நான் முதன்முதலில் உங்களுக்குதான் விளக்கியுள்ளேன். நான் பலரைப் பார்த்தேன் ஆனால் இதுபோன்ற அறிவுரைகள் உங்களுக்கு முதலில்**

**கொடுக்கப்பட்டுள்ளன. அதை நேர்மையாகவும், உண்மையாகவும் செய்யுங்கள்."**

தம்பதிகள் இருவரும் ஒப்புக்கொண்டனர், பாபா தொடர்ந்து அவர்களுக்கு உள்ளுணர்வைப் பற்றி விளக்கினார்: **"நீங்கள் ஒன்றை உள்ளூர உணர்ந்து, அதைக் குறித்து சந்தேகம் கொள்ளாமல் இருந்தால், அது உண்மையானது என்பதை அறிந்து கொள்ளுங்கள். சந்தேகத்திற்கு வழிவகுக்கும் எண்ணங்களுக்கும், தற்காலிக உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. அது உங்கள் இதயத்தைத் தொடுவதை உணரும் தருவாயில், அதைப் பின்பற்றுங்கள். அது மனதில் இருந்து வரும்போது, அது உள்ளுணர்வு அல்ல, உள்ளுணர்வு என்பது இதயத்திலிருந்து வருவது. தெய்வீகப் பாதையில், முதலில் உள்ளுணர்வு, பின்னர் உத்வேகம், தொடர்ந்து ஒளியூட்டம், இறுதியாக இறையுணர்வு.**

**"உங்கள் உள்ளத்தைத் தொடுவதைப் பின்பற்றுங்கள். மேலும், இறைவன் அருளால், இன்றிலிருந்து, அது உள்ளுணர்வு என்றால் அது சரி என்று நீங்கள் அறிவீர்கள். எது சரி என்பதைப் புரிந்து கொள்ள எனது அன்பு, உங்களுக்கு உதவும், உங்களுக்கு வழிகாட்டும். பாபாவை நேசியுங்கள். கடவுள் நேர்மையான அன்பை விரும்புகிறார். அவர் முற்றிலும் நேர்மையானவர் மற்றும் நேர்மையான அன்பை மட்டுமே விரும்புகிறார். எனவே பாபாவை நேசியுங்கள். சத்தியத்திற்கான உங்கள் தேடலில் கடவுள் உங்களுக்கு உதவுவார்."**

'**ஃபிராங்க் ஈட்டன்**' 1944ஆம் ஆண்டு முதல் எலிஸபெத்துக்கு மர்ட்டில் பீச் மையத்தை உருவாக்க உதவி புரிந்து வந்தார். 1940 ஆண்டுகளின் முற்பகுதியில் மெஹர் பாபாவைப் பற்றி ஃபிராங்க் கேள்விப்பட்டிருந்தார். மே 11 அன்று மாலை 5:30 மணிக்கு, முதல் முறையாக, பாபாவை சந்தித்தார்.

**"இறுதியாக ஃபிராங்க் வந்திருக்கிறார்"** என்று பாபா கூறினார். **"எலினோரினா உங்களைப் பற்றி பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மையத்தில் மிகவும் அன்பு நிறைந்த இதயத்துடன் பணிபுரிந்தீர்கள், நான் உங்களைப் பார்க்கும் அதீத ஆர்வத்தில் இருந்தேன். இப்போது, கடவுளின் விருப்பப்படி, நீங்கள் வேண்டுவதைப் பெறுவீர்கள்."**

"பாபா, என் மனைவி (ஐரீன்) நீங்கள் கடவுள் என்பதை நம்பவில்லை" என்று ஃபிராங்க் கூறினார்.

**"அவர் என்னை நம்பாவிடிலும் அவரிடம் அன்பாக இருங்கள். கடவுள் விரும்பினால், ஒரு நாள் அவர் அந்த ஒளியூட்டத்தைப் பெறுவார். எனக்கு எல்லாம் தெரியும், கவலைப்படாதீர்கள். அனைத்தையும் என்னிடம்**

**விட்டுவிடுங்கள். நீங்கள் இப்போது நேசிப்பது போல் என்னைத் தொடர்ந்து நேசியுங்கள், கடவுள் சித்தம், அனைத்தும் சீராகிவிடும்.**"

பிற்பகலில் திருமதி ஓர் என்ற ஸூஃபி உறுப்பினருடன் பாபா உரையாடினார்.

1952, மே 12 அன்று, வின்டர்ஃபெல்ட் தம்பதியினர் மூலமாகக் கேள்விப்பட்ட, நியூயார்க் நகரில் வாழந்த பேராசிரியர் **டாக்டர் ஜி.டி.வினோத்**, காலை 8:15 மணிக்கு பாபாவை சந்திக்க நேர்ந்தது. அவரது நேர்காணலின் ஒரு பகுதியை இங்கே காணலாம்:

"போர் மற்றும் அமைதி தொடர்பாக, உலகின் உளவியல் நிலை குறித்து நான் ஒரு புத்தகத்தை எழுதுகிறேன்," என்று கூறி அவர் தொடர்ந்தார், "நான் ஆஸ்திரேலியா, ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்தேன்; மேலும் சங்கராச்சாரியாரின் (தலைமை இந்து மத குரு) சகவாசத்தைப் பெற்றுள்ளேன். எனக்கு உங்கள் ஆசீர்வாதம் வேண்டும். இவை தற்காலிகமானவை மற்றும் பாரம்பரியமானவை என்று எனக்குத் தெரியும். அவற்றில் பெரிதாக அர்த்தம் எதுவுமில்லை..."

பாபா அவரை குறுக்கிட்டு, "**அவற்றில் ஒன்றும் இல்லை. அறிவுத்திறன் மூலம் அடையப்பெறும் நம்பிக்கையானது ஒரு வரையறுக்கப்பட்ட நோக்கத்தை மட்டுமே கொண்டுள்ளது மற்றும் ஒருவரை பொய்யும் போலியுமான பாசாங்குத்தனத்தின் குழப்பத்தில் தள்ளக்கூடும்.**

"**கடவுள், முழுநிறை நேர்மையும் தூய்மையும் உடையவர், அவரை அறிவதில் எந்த சமரசமும் இருக்க முடியாது. அறிவார்ந்த நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட உணர்வின் மூலம் அறிந்து, கடவுளை நீங்கள், என்னைப் பார்ப்பது போலான நம்பிக்கையைத் தருவது. உண்மைப்பொருளாகிய கடவுளுடன் ஐக்கியமாகும் ஒன்றுதான் திட நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். ஆகவே கடவுளோடு ஒற்றிணைவதால் ஏற்படும் உறுதிப்பாடு வராத வரையில் எல்லா பேச்சுகளும் நேர்மையற்றவையே.**"

"கடவுளோடு ஐக்கியம் எவ்வாறு நிறுவப்படுகிறது?" வினோத் வினவினார்.

"**சுயநல ஏக்கங்களும், விருப்பங்களும் மறையும் போது, இது நிலைநாட்டப்படுகிறது. ஆசைகளும், ஏக்கங்களும் இருக்கும் இடத்தில் கடவுள் இல்லை. ஆனால் இந்த யதார்த்தத்தை ஒருவர் அனுபவிக்க வேண்டும். நான் எப்பொழுதும் கூறுவது போல, கடவுளை நம்பாமல் இருப்பது கபட வேடதாரியாக இருப்பதை விடச் சிறந்தது!**"

"சுயநல ஆசைகள், பந்தங்கள், ஏக்கங்கள் போன்றவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது?" வினோத் கேட்டார்.

**"அதற்காக, பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன, ஆனால், அதை ஒரே நொடியில் அடையலாம் அல்லது பல பிறவி காலங்கள் எடுக்கலாம். எனவே ஆசைகளை வெல்வது எப்படி, அவற்றைக் கட்டுப்படுத்துவது எப்படி என்று கேட்பது, 'நான் எப்படி வாழ்ந்து கொண்டே சாக முடியும்? ஆழ்ந்த தூக்கத்தில் சுயநினைவை எப்படி அடைய முடியும்?' என்று கேட்பதுபோல் இருக்கிறது.**

**"மனம், அது இருக்கும் வரை, உங்களைப் பொருட்படுத்தாமல் அதன் பணியைச் செய்துகொண்டே இருக்கும். எனவே, நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் தெரிந்து கொள்ள விரும்புவதாகவும், உங்களுக்கு இது தேவை என்றும், நீங்கள் அத்தகைய புத்திசாலித்தனம் உள்ளவர் என்றும் நான் உணர்கிறேன்; இதை நீங்கள் உண்மையிலேயே அடையப்பெற்றால், அதன் உண்மையான அர்த்தத்தில் கடவுள் மற்றும் பிரபஞ்சத்திற்காக வேலை செய்ய முடியும்."**

பாபா அவருக்கு, தியானத்திற்கான சில அறிவுரைகளை வழங்கி முடித்தார்: **"அப்படியானால் இப்போதே தொடங்குங்கள். பாபா உங்களுக்கு பல விஷயங்களை விளக்கியுள்ளார். கடவுளின் வேலை என் வேலை. நீங்கள் என் வேலையைச் செய்வீர்கள். உங்களுக்குள் கடல் இருந்தால், நீங்கள் ஒரு சில நீர்த்துளிகளுக்காக ஏங்க வேண்டாம்! காரண காரணிகளால் மட்டுமல்லாமல் உண்மையான அனுபவத்தின் மூலமும் நீங்கள் அதைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.."**

"நான் வெற்றி பெறுவேனா?"

**"நீங்கள் அதை நேர்மையாகச் செய்தால், தினமும் இரவு 12 மணிக்கு பாபா உங்களுக்கு உதவுவார். நேர்மையாகச் செய்யுங்கள், மீதியை என்னிடம் விட்டுவிடுங்கள்."**

மே 12ஆம் நாள், ஃபிரான்சிஸ், ஐவி, சார்மியன் மூவரும் பாபாவை மீண்டும் காலை 10:00 மணிக்கு சந்தித்தனர். (அவர்களுடன் 'ரீட்டா ஸ்பார்க்கி லூக்ஸ்' என்ற சார்மியனின் 22 வயது பள்ளி நண்பரும் இருந்தார்.) ஐவி, ஃபிரான்சிஸ் இருவரிடம், பாபா தனிப்பட்ட முறையில் கூறினார்:

**எனவே மீண்டும் சந்திப்போம். அப்படித்தான் இருக்கவும் வேண்டும்.**

**இப்போது நீங்கள் இருவரும் மிகவும் கவனமாகக் கேளுங்கள், ஏனென்றால் முதல்முறையாக நான் ஸூஃபியிஸத்தில் தனிப்பட்ட ஆர்வம் காட்டுகிறேன். மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தைப் பற்றி நான் மிகவும் தீவிரமாக இருக்கிறேன், அதன் விளைவு, உலகம் முழுவதும் வெளிப்படுவதற்கு நாம் மிகவும் நேர்மையாக இருக்க வேண்டும்.**

**உண்மைக்கு எப்போதும் தடையாக மூன்று விஷயங்கள் உள்ளன. முதலில் சபலம். மிக மிகச் சிலரே இந்த சோதனையை வெல்ல முடியும்; பணம், புகழ், அதிகாரம், காமம் மற்றும் தலைமையின் ஆசை ஆகியவைப்**

**பேரழிவைத் தரக்கூடியவை, மிகவும் பிணைக்கக்கூடியவை, மேலும் வெகு சிலரே அதிலிருந்து தப்பிக்கின்றனர். இரண்டாவதாக, விஷயங்களைப் பற்றிய தெளிவற்ற தன்மை. மூன்றாவது, நேர்மையின்மை.**

**எனவே முதல் விஷயம் என்னவென்றால், உங்கள் வாழ்க்கையே அதைச் சார்ந்தது போல, நீங்கள் எனது அறிவுறுத்தல்களை நிறைவேற்ற உண்மையாகச் செயல்பட வேண்டும். இரண்டாவதாக, நான் சொன்னதை நீங்கள் ஓர் ஆவணமாக்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பாபா அதில் கையொப்பமிட்டு நகல்கள் அச்சிடப்படும். உலகெங்கிலும் உள்ள அனைத்து ஸூஃபி மையங்களுக்கும் இது பொதுவானதாக இருக்கும்.**

ஃபிரான்சிஸ் நேராக ஆஸ்திரேலியாவுக்குச் சென்று, அங்குள்ள ஸூஃபி குழுவிடம், பாபா அவர்களின் தீட்சைகளைக் கலைத்துவிட்டார் என்று தெரிவிக்கும்படியும் மேலும் அவர்கள் சுவாசப்பயிற்சி, மந்திரங்களை உச்சரிக்கும் அனைத்து நடைமுறைகளையும் நிறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டார், அவர் அன்றே ஆஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றார்.

ஃபிரான்சிஸ் பிராபஸன், பாபாவை சந்திக்கும் வாய்ப்புக்காக, பல வருடங்கள் காத்திருந்தார்; பாபாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே அவரது இதயம் மெஹர் பாபாவை ‘ஆதி புருஷர்’ என ஏற்றுக்கொண்டது. அவர் பாபாவுடன் நிரந்தரமாகத் தங்க விரும்புவதாக அறிவித்தார், ஆனால் அவரை மூன்று நாட்கள் மட்டுமே மர்டில் பீச் மையத்தில் தங்க அனுமதித்து, குறிப்பிட்ட உத்தரவுகளை வழங்க பாபா அவரை உடனடியாகத் திருப்பி அனுப்பி, பின்னர் அழைப்பதாக உறுதியளித்தார்.

பாபாவுடனான தனது ஆரம்ப தொடர்பைப் பற்றி ஃபிரான்சிஸ் எழுதினார்:

இந்த சந்திப்பு, பத்து வருட ஆன்மீக ஆய்வு மற்றும் ஆன்மீக பாதையில் வழிநடத்தும் முழுநிறை குருநாதரைத் தேடிக் கண்டுகொள்வதன் உச்சநிலையாக இருந்தது; நான், அவரிடம் தயக்கமின்றி நம்பிக்கை வைக்க முடியும் என்றும், நான் எதிர்கொண்ட ஒவ்வொரு சிரமத்தையும் தடைகளையும், வெற்றிகரமாகக் கடந்து வந்து தேர்ச்சி பெற்ற குருநாதர் என்பதையும் உணர்ந்தேன். கடந்த பத்து ஆண்டுகளில், நான் சிறந்த ஸூஃபி பள்ளிகளின் வழிமுறைகளைக் கற்றுக்கொண்டதோடு வேதாந்தம், பௌத்தம் மற்றும் தாவோயிஸம், கன்ஃபூசியனிஸம் உள்ளிட்ட பிற அமைப்புகளில் மிகவும் பரவலாகப் பயிற்சி பெற்றேன். மெஹர் பாபாவில் நான் அந்த நபரைக் கண்டேன், அவர் இந்த முழு விஷயங்களையும் அறிந்திருந்தது மட்டுமின்றி, அனைத்து அமைப்புகள் மற்றும் அறிவுகளின் மொத்த உருவாகத் திகழ்ந்தார்.

நிச்சயமாக, பாபா, இறைநிலையை அடைந்தவர் என்று பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருவதை நான் அறிவேன்; ஸூஃபியிஸத்தைப் பின்பற்றுபவர்கள் மற்றும் பல இடங்களிலும் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள்

இந்தக் கூற்றை அங்கீகரித்துள்ளனர் என்பதை நான் அறிவேன். ஆனால், ஜீஸஸின் தாமஸைப் போல, நானும் இதைப் பார்க்க வேண்டியிருந்தது.

சரி, இப்போது நான் பார்த்தேன்; எனது உணர்வின் ஆழமான பாகங்களின் அழுகைக்கு பதில் கிடைத்தது.

இந்த பூமியில் கடவுளை எப்போதேனும் காண முடிந்தால், நான் அவரைப் பார்த்தேன் என்ற திருப்தியை அடையப்பெற்றேன். மேலும், காலம் செல்லச் செல்ல, இது வெறும் உணர்ச்சிப்பூர்வமான மாற்றம் அல்ல என்பதற்கான ஆதாரம், பாபாவை சந்தித்த சில நாட்களுக்குப் பின்னர், என்னுள் ஓர் உண்மையான ஆக்கத்திறன் உருவாகி, அன்றிலிருந்து தொடர்கிறது என்ற எளிய உண்மையின் மூலம் காட்டப்பட்டது. இவரைப் போல நான் எவரையும் சந்தித்ததில்லை, அல்லது எந்த அனுபவமும் பெற்றதில்லை, இது என் இதயத்தை உருக்கியது அல்லது என் புத்தியைக் கூர்மைப்படுத்தியது.

மர்டில் பீச்சில் பாபாவை விட்டுப் பிரிந்து சென்ற ஏழு நாட்களுக்குப் பிறகு, ஃபிரான்சிஸ் தொடர்ந்து அழுதார்; அவரது இதயம் கொந்தளிப்பில் தவித்தது. ‘அவரது கண்ணீர் இறுதியாக வற்றியது, ஆனால் அவரது இதயம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருந்தது. அவர் தெய்வீக மீனவரின் வலையில் சிக்கித் தந்தளித்தார், மேலும் மெஹர் பாபாவின் பாதங்களில் அவர் சரணடைந்தது முழுமையானது.’ ஆனால் ஃபிரான்சிஸ் பாபாவுடன் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்படுவதற்கு முன்பு, தெய்வீக மீனவர் ஏழு நீண்ட ஆண்டுகள் இந்த விலைமதிப்பற்ற மீனுடன் விளையாடினார்.

இதற்கிடையில், ஐவி, சார்மியன் இருவரும் மே 18 வரை மர்டில் பீச்சில் தங்க அனுமதிக்கப்பட்டனர், ஆனால் ஜூன் 6ஆம் நாள் கலிஃபோர்னியாவில் பாபாவின் வருகைக்காகக் காத்திருக்க ஜூன் 3 அல்லது 4ஆம் தேதிக்குள் ஸான் பிரான்சிஸ்கோ செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

ஷா குடும்பத்தினர் 1952, மே 14 புதன்கிழமை காலை 9:00 மணிக்கு லகூன் கேபினில் பாபாவுடன் மற்றுமொரு நேர்காணலில் பங்கெடுத்தனர். பாபா, தான் அமைதியாக உணர்வதாகக் கூறினார். 1927ஆம் ஆண்டு, மேல் மெஹராபாத்தில் உபவாசத்துடன் ஏகாந்தவாசம் இருந்தபோது வேலைக்கார சிறுவன், பாபாவுக்காக எடுத்து வந்த காஃபியில் பாதியை அருந்தி மீதியை அவருக்கு அளித்த லாஹுவைப் பற்றிய நகைச்சுவையான சம்பவத்தை அவர் விவரித்தார்.

அதற்குப் பிறகு, பாபா திறந்த காரில் ஷா குடும்பத்தைச் சேர்ந்த ஐவருடன் பாபாவின் இல்லத்திற்குச் சென்றார், ஆதி அவர்களை ஓட்டிச் சென்றார். பாபா, தனிப்பட்ட முறையில் அவர்களை அங்கு அழைத்துச் சென்று அனைத்தையும் காட்டினார். அவர்கள் சமையலறையில் இருந்தபோது, அங்கிருந்த நவீன வசதிகளை ரசிக்குமாறு ஜீனுக்கு சைகையால் தெரிவித்தார்.

வீட்டு வராந்தாவிலிருந்து அட்லாண்டிக் பெருங்கடலின் காட்சியையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மையத்திற்குத் திரும்பும் வழியில், கடல் அமைதியாக (CALM) இருப்பதாக ஜீன் குறிப்பிட்டு, தெற்குவாசிகள் அந்த வார்த்தையை 'காம்' என உச்சரிக்கிறார்கள்" என்று கூறினார். பாபா சிரித்துக் கொண்டே, அதுபோன்ற உச்சரிப்புகளில் வேறு எதையேனும் எடுத்துரைக்குமாறு டார்வினிடம் கூறினார்; அதை டார்வின் முயற்சித்த போது அனைவரும் நன்றாக சிரித்து மகிழ்ந்தனர்.

ஃபிலிஸ், அடீல் இருவரும் பாபா மற்றும் 'சிறுமிகள்' (கிழக்கத்திய பெண் மண்டலியை இப்படி அழைப்பது பழக்கம்) ஆகியோருடன் ஒரு வாரத்தை மையத்தில் கழிக்க அனுமதிக்கப்பட்டனர். மாலை 6:00 மணிக்கு பாபா புறப்பட்டுச் செல்வதற்கு முன்பு, இருவரும் விருந்தினர் மாளிகையில் அவருடன் இருப்பதை வழக்கமாகக் கொண்டனர். 14ஆம் தேதி மாலை, பாபா அவர்களிடம் ஒரு கதை சொல்லுமாறு கேட்டார்.

மிகவும் பதட்டமாக உணர்ந்த அடீல், ஸெயிண்ட் பீட்டரின் கதையில் தடுமாறினார்.

ஒரு கட்டத்தில், பாபா தலையைத் தாழ்த்தி கூறினார், "**பீட்டர் என்னை மிகவும் நேசித்தார் - ஆனால் அவர் என்னை மறுக்கவும் செய்தார்.**"

டிலியா, "அது ஓர் உணர்வுப்பூர்வமான செயலா அல்லது அவர் அறியாமல் செய்தாரா?" என வினவினார்.

"**பீட்டரைப் போல்** (அப்போஸ்தலர்களில்) **எவரும் இயேசுவை நேசிக்கவில்லை**" என்று பாபா கூறினார். "**அது அப்படியாக வேண்டும் என்பது கடவுளின் சித்தம். அவர் உணர்வுடன் இருந்தார். பின்னர் அவர் என்னை உணர்ந்தார்.**"

டிலியா கூறினார், "கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தபோது, யூதாஸ் சுயநினைவின்றி இருந்தார் என்பதை நான் எப்போதும் புரிந்துகொண்டேன்."

பாபா அவருக்கு விளக்கினார், "**யூதாஸின் துரோகம் மிகப்பெரிய சேவை, அவர் கிறிஸ்துவின் கன்னத்தில் முத்தமிட்டபோது, அவர் அதைச் செய்யவில்லை, கடவுளே அனைத்தையும் செய்தார்; அவர் முகத்திரைக்குப் பின்னால் அவ்வாறு நடந்து கொண்டார்; குருநாதர் என்ற முறையில் அனைத்து சீடர்களுக்காகவும் மிகவும் கடினமான பணியை செய்ய வேண்டியிருந்தது.**" யூதாஸுக்கும் இறையுணர்வு வழங்கப்பட்டதாக பாபா சுட்டிக்காட்டினார்.

ஃபிலிஸ், அடீல் பக்கம் திரும்பிய பாபா, "**கடவுள் மீதான அன்பைத் தவிர வேறெதுவும் முக்கியமல்ல. மஸ்துகளுக்கு கடவுள் மீது இந்த அன்பு உண்டு. கடவுளை அடைய ஒருவர் நெருப்பால் நிறைந்த ஏரியில் மூழ்கி, காயமின்றி வெளியே வர வேண்டும்**" என்று குறிப்பிட்டார்.

**"இன்னும் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் இங்கே என்ன செய்தோம், நான் இருந்தபோது என்ன நடந்தது என்று மக்கள் பேசுவார்கள். அதன் பின்பு நான் மீண்டும் மீண்டும் வருவேன் - நீங்களும் வருவீர்கள்.**

**"ஃபிலிஸ், அடீல் இருவரும் என்னை நேசிக்கிறார்கள். நீங்கள் என்னுடன் இதற்கு முன்னரும் இருந்தீர்கள். நான் உங்களை பல யுகங்களாக அறிவேன்; எவ்வளவு காலமாக என்பது உங்களுக்குத் தெரியாது! எனவே எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். மேலும் மேலும் நேசிக்கவும், மேலும் தொடர்ந்து நேசிக்கவும். இந்த வார்த்தைகள் உங்கள் இதயங்களில் பொறிக்கப்படட்டும்: 'கடவுளைத் தவிர வேறு எதுவும் உண்மை அல்ல, கடவுள் மீதான அன்பைத் தவிர வேறு எதுவும் முக்கியம் அல்ல!'"**

பாபா தன் இதயத்தை சுட்டிக் காட்டி இதைக் கூறினார், அவருடைய விரல்கள் அங்கிருந்த அன்பர்களின் இதயங்களில் அதை 'எழுதுவது போல'த் தோன்றியது.

**"நான் எனது வாளை மிக விரைவில் கையில் எடுப்பேன்"** என்று பாபா முடித்தார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா தனக்குப் பிரியமான நான்கு கிறிஸ்தவ புனிதர்களைக் குறித்து ஃபிலிஸ் மற்றும் அடீலுக்கு வெளிப்படுத்தினார்: **"எனக்குப் பிரியமான இரண்டு பெண் புனிதர்கள், அவிலாவின் புனித தெரேஸா மற்றும் சியனாவின் கேத்தரின்; இரண்டு ஆண் புனிதர்கள், அஸிஸியின் ஃபிரான்சிஸ் மற்றும் ஸெயிண்ட் அகஸ்டின்."** பாபா கிண்டலாக மேலும் கூறினார், **"ஃபிலிஸ் ஸெயிண்ட் தெரேஸாவைப் போலவும், அடீல் செயிண்ட் கேத்தரினைப் போலவும் இருக்கிறார்கள்"** என்று.

1952, மே 15 வியாழன் அன்று காலை 9:00 முதல் 11:00 வரை பாபா, டார்வின் ஷா, ஜான் பாஸ் இருவரையும் லகூன் கேபினில் சந்தித்தார்.

திங்களன்று (12ஆம் தேதி) ஐவியுடன் எதிர்வரும் கலிஃபோர்னியா பயணத்திற்கான நிதி ஏற்பாடுகள் குறித்து பாபா விவாதித்தார். பாபா ஒரு வாரமாகத் தூங்காமல் சோர்வாகக் காணப்பட்டார். இறுதியில், பாபா, பணம் ஏற்பாடு செய்தால், நிச்சயமாகச் செல்வேன் என்றார்.

ஸான் ஃபிரான்சிஸ்கோவைச் சேர்ந்த ஐவியின் ஸூஃபி உறுப்பினர்களில் ஒருவரான **'லுட் டிம்ப்ஃபில்'**, 4,500 டாலரை வசூலித்து, பாபாவின் பயணத்திற்கான காசோலையுடன் மர்டில் பீச்சிற்குச் சென்றார். அவர் மே 16ஆம் தேதி பாபாவை சந்தித்து அவரிடம் அந்தப் பணத்தைக் கொடுத்தார். ஐவி விமானத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் செல்ல பாபாவை வற்புறுத்த முயன்றார், ஆனால் பாபா காரில் பயணம் செய்வதை விரும்பினார்.

ஐவியின் கணவர் ‘**ஜேம்ஸ் டெர்ரி டியூஸ்**’ என்பவரும் மே 16 அன்று மர்டில் பீச் வந்து பாபாவை, காலை 9:00 மணிக்கு சந்தித்தார். **டெர்ரி** அரேபியாவின் ‘அராம்கோ’ எண்ணெய் நிறுவனத்தில் மூத்த நிர்வாகியாகவும், அனுபவம் வாய்ந்த உலகப் பயணியாகவும் இருந்தார், எனவே மேற்குக் கடற்கரைக்கு செல்லும் பாதையைத் திட்டமிடுமாறு பாபா அவரைக் கேட்டுக் கொண்டார் - முதலில் செல்ல வேண்டிய ஆண் மண்டலிக்கான ‘விரைவு நேரடிப் பாதை’யும், தனக்கும் பெண் மண்டலிக்கும் ‘இயற்கை வனப்பு மிக்க சாதாரண பாதை’யையும் தேர்ந்தெடுக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபா, டெர்ரியிடம் கூறினார், "**நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன், நீங்கள் குழப்பமடையாமல் இருக்க, விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது தற்செயலாக நிகழ்ந்ததாக நீங்கள் நினைக்கலாம், ஆனால் உங்கள் வருகை ஏற்கனவே விதியால் நிர்ணயிக்கப்பட்டது. கடவுள் ஒருவரே உண்மையானவர். எல்லாவற்றையும் அவரே செய்கிறார். அவருடைய விருப்பத்திலிருந்து நாம் தப்பிக்க முடியாது. அவர் நம்மை நேசிக்கிறார், மேலும் அவரை நேசிப்பதும், முழுமையான நேர்மையுடன் அவரை அறிந்துகொள்வதும், அனைத்து சபலங்களையும் தவிர்த்து, அவருடன் ஐக்கியமாக இருப்பதுதான் வாழ்க்கையின் குறிக்கோள்.**"

பாபா தொடர்ந்தார், "**இப்போது எனது பணி உலகளாவியதாக இருக்க வேண்டும். பொருள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த இரண்டிலும் ஒரு பெரிய எழுச்சி ஏற்படும் நேரம் நெருங்குகிறது. உலகம் முழுவதும் தலைகீழாக மாறும். அனைத்தும் ஓர் உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நவம்பர் முதல், எனது ‘அனல் பறக்கும் வாழ்வு’ இந்த எழுச்சியில் மிகப் பெரிய பங்காக இருக்கும். எனவே, எனது திட்டம், கடவுளின் விருப்பப்படி, நான் 20ஆம் தேதி கலி:ஃபோர்னியாவுக்குப் பத்திரமாகச் சென்று, திரும்பி வந்து ஒரு மாதம் இங்கேயே இருக்கப் போகிறேன், அப்போது நான் எவரையும் பார்க்க மாட்டேன். கடவுளின் அருளால் ‘உலகளாவிய மையமாக’ இருக்க வேண்டும் என்று நான் விரும்பும் இந்த மையத்திற்கான திட்டத்தை வரைய நான் சுதந்திரமாக இருப்பேன். அதைத் தொடர்ந்து ஜூலை இறுதியில் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவுக்குச் சென்று, நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்குப் புறப்படுகிறேன்.**

"**ஜூலையில் (1953) நான் இங்குத் திரும்பி வந்து, ஒரு வருடம் தங்கியிருந்து, மிகப் பெரிய அளவில் இந்த மையத்தை உருவாக்கப் போகிறேன். அதில் நீங்கள் உதவ முடியும் என்று எனக்குத் தெரியும், மேலும் நான்கு கிளை மையங்களை உருவாக்கும் திட்டத்தில் நீங்கள் என்னுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த உலகளாவிய ஆன்மீக மையத்தில் எனக்கு இது தேவை. எனவே,**

**நீங்களாகவே முடிவு செய்து, இந்தப் பணியில் எனக்கு உதவுவீர்களா என்பதைத் தெரியப்படுத்துங்கள்."**

"எனது கடமைகள் என்னவாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் என்னால் முடிந்ததைச் செய்வேன்" என்று டெர்ரி உறுதியளித்தார்.

**"அதாவது, முயற்சி செய்யுங்கள், அதைச் செய்ய கடவுள் உங்களுக்கு உதவுவார். வாழ்க்கையில் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும், மேலும் கடவுளிடமிருந்து உங்களுக்கு ஏதாவது பெரியதாக வரலாம்... இது ஒரு பெரிய உலகளாவிய மையமாக இருக்க வேண்டும், அதற்கு நீங்கள் உதவலாம்."**

"என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். உங்களிடம் என்ன திட்டங்கள், யோசனைகள் உள்ளன?" என டெர்ரி கேட்டார்.

பாபா விளக்கமாகப் பதிலளித்தார்: **"நான் ஜூன் 15ஆம் நாள் திரும்பி வந்து, ஒரு மாதம் தங்குவேன், யாரையும் பார்க்க மாட்டேன். இந்த இடத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் நான் பார்த்து, 'சேவை', 'துறவு', 'பக்தி', 'கடவுள் மீது அன்பு காட்டும் விதத்தில் உலக வாழ்க்கை' ஆகியவற்றை அடையாளப்படுத்தும் நான்கு மையங்களைத் திட்டமிடுவேன். சேவைக்கான அம்சத்தில் மருத்துவமனை, தொழுநோயாளி புகலிடம் போன்ற பிற விஷயங்கள் இருக்கும். கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்கு ஒரு கோடி டாலர்கள் செலவாகும் என்று நான் மதிப்பிட்டுள்ளேன்.**

**"நான் ஏழைகளில் ஏழை, பணக்காரர்களில் பணக்காரன், நான் மௌனம் தொடங்கிய நாளிலிருந்து பணத்தைத் தொடுவதில்லை. ஆனால் இதை மனிதகுலத்திற்கு நேர்மையாகச் செய்ய வேண்டுமானால், அதற்கு ஒரு கோடி டாலர்கள் தேவைப்படும், கடவுள் அதை எனக்குத் தருவார். அதனால்தான் உங்களுடைய பண உதவி தேவைப்படாது என்று நான் கூறினேன்.**

**"இது மிகவும் பெரிய அளவில் இருக்கும், உங்களைப் போன்ற ஒருவர், இதை நான் விரும்பியபடி நிர்வகிக்க வேண்டும். திட்டங்களுக்கும் கட்டுமானத்திற்கும் எனக்கு உங்கள் உதவி தேவைப்படும். எனவே ஒரு வருடம் நீங்கள் இங்கே தங்கி உதவ வேண்டும் என்று நான் சொன்னேன். நான் மிகவும் தெளிவாக, ஒளிவுமறைவின்றி, உங்களை எனது சொந்த மனிதர்களில் ஒருவராக இதை விளக்குகிறேன். எனவே நீங்களே முடிவு செய்யுங்கள். ஆனால், முதலாவதாக, நீங்கள் அரேபியாவுக்கு உடனடியாகச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஜூலை 1953 முதல், எனது திட்டங்களில் ஒரு வருடத்திற்கு எனக்கு உதவ வேண்டும்."**

நியூயார்க்கிலிருந்து ஐவியின் ஸுஃபி முரீதுகளில் (ஆரம்ப உறுப்பினர்) சிலர், மே 17 அன்று, 'பார்ன்' கொட்டகையில் நடைபெறவிருக்கும் தரிசனத்திற்காக, 16ஆம் நாள் மதியம் மர்டில் பீச் மையத்திற்கு வந்து, பாபாவை சந்தித்தனர்.

கொரியப் போரில் மாலுமியாகப் பங்கெடுத்த தனது பத்தொன்பது வயது ஒரே மகனைப் பாதுகாக்குமாறு பாபாவிடம் 'ஸ்டெல்லா டு ஃப்ரெஸ்னே' என்ற பெண்மணி கேட்டுக் கொண்டார். பாபா, மெஹர்ஜியிடம் நேர்காணல்களின் குறிப்புகளை எடுக்கப் பயன்படுத்திய நோட்டுபுத்தகத்தின் ஒரு சிறிய மூலையைக் கிழிக்கச் சொன்னார். பாபா அதை மடித்து, கைகளில் பிடித்து, சிறிது நேரம் தனது கவனத்தைச் செலுத்திய பின்னர், அதை ஸ்டெல்லாவிடம் கொடுத்து, "'**சரியாக ஒரு வருடத்திற்கு, எப்பொழுதும் இதை அணியட்டும்**', **உங்களால் முடிந்தால் மேலும் அதிகமாக என்னை நேசிக்கவும்**, **கடவுள் உங்களுக்கு சிறப்பான அனைத்தையும் வழங்குவார்**" என்று கூறி முடித்தார்.

எட்வர்ட் ஜேம்ஸ் என்ற ஆப்பிரிக்க-அமெரிக்க முரீத், நன்கு கற்றறிந்த அறிவுஜீவி. பாபா அவரிடம், "**இந்தப் புத்தகங்கள் அனைத்திலிருந்தும் நீங்கள் கற்றுக்கொண்டதை சரியாக ஐந்து வார்த்தைகளில் சொல்ல முடியுமா?**" என்று கேட்டார். அந்த இளைஞன் என்ன சொல்வதென்று தெரியாமல் திக்குமுக்காடி, பாபாவைப் பார்த்தபோது, பாபா அவருக்குப் பதிலளித்தார்: "**நான்-எதையும்-கற்றுக்-கொள்ள-வில்லை" - ஐந்து வார்த்தைகள், அப்படித்தானே?**"

திருமதி 'ஜரோன்ஹி பஹ்ஜெஜியன்' என்பவரிடம், பாபா கூறினார், "**அன்பின் மொழி இதயம். அன்பர் பேச வேண்டிய அவசியமில்லை, அன்பிற்குரியவர் கேட்க வேண்டிய தேவையுமில்லை, ஆனால் இருவரும் ஒருவரையொருவர் அறிவர். எனவே நீங்கள் சொல்ல விரும்புவதை நான் அறிவேன் என்பதை நம்பலாம்; பயப்படத் தேவையில்லை.**"

'எடித் டபிள்யூ. பிராட்பரி' (நியூயார்க் நகரத்தைச் சேர்ந்தவர்) மாலை 3:05 மணிக்கு பாபாவை சந்தித்தார். அதைத் தொடர்ந்து பாபா, பேராசிரியர் 'டாக்ரே' என்பவரிடம் கூறினார்: "**புரிந்துகொள்வது அனைத்தும் அறிந்துகொள்வது அல்ல. புரிந்து கொள்ள முடிவது அனைத்தும் கடவுள் அல்ல... நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன் - பல காலங்களாக நான் சொல்லி வருகிறேன்: வாழ்வில் தகுதி வாய்ந்தது, கடவுளுக்காக மட்டுமே வாழ்வதும், உயிரை விடுவதும் ஆகும்.**

"**எந்த ஒரு வடிவத்திலும், எந்த ஒரு முறையிலும், நீங்கள் அவரை நேசிக்கலாம். உருவமில்லா அல்லது தனிப்பட்ட மனித உருவில் வரும் கடவுளை நேசிக்கவும். பாபாவை நேசிக்கவும் அல்லது உங்களுக்குள்**

**குடிகொண்டிருக்கும் கடவுளை நேசிக்கவும். எல்லாமே ஒன்றுதான், ஆனால் அன்பின் உணர்வு ஆழ் இதயத்திலிருந்து உதயமாக வேண்டும். இப்போது நீங்கள் பாபாவைப் பார்த்தீர்கள், கடவுள் உங்களை அவரை நேசிக்க வைப்பார், என் அன்பு உங்களை வழிநடத்தும், எனவே இப்போது உறுதியான தீர்மானத்தை எடுங்கள்: கடவுளை நேசிக்கவும், பாபாவை நேசிக்கவும்."**

'ஓட்டிலியா டி தெஜெய்ரா' என்ற பெண்மணி பாபாவை சந்திப்பதற்காக பனாமாவிலிருந்து மர்டில் பீச் மையத்திற்கு விமானத்தில் வந்தார். 1948ஆம் ஆண்டு டிலியா டிலியோன் வழியாக பாபாவைப் பற்றி அவர் கேள்விப்பட்டார். பாபா, அந்தப் பெண்மணியை மே 16ஆம் நாள், மாலை 4:00 மணிக்கு சந்தித்தார். பனாமாவில் தனது குழுவில் உள்ள ஒவ்வொருவருடனும் பாபாவின் சார்பில் கைகுலுக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபாவை சந்தித்த மேலும் இரண்டு பெண்மணிகள், 'மேட்டி பெரோன்' மற்றும் 'மியுரியல் ஹூஸ்டன்' (பாபாவின் வருகையின் போது மையத்தில் உதவியவர்கள்). மியுரியல் பாபாவிடம், "நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என வினவினார்.

பாபா கூறினார், **"உங்கள் உலகக் கடமைகள் அனைத்தையும் இப்போது போலவே கவனித்துக் கொள்ளுங்கள், ஆனால் இந்த வித்தியாசத்துடன் - கடவுளை நேசிப்பதற்காக உங்கள் உள் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறீர்கள். நீங்கள் எதையும் விட்டுவிடக்கூடாது. ஆனால் கடவுள் மட்டுமே உண்மையானவர் என்பதை உங்கள் ஆழ் இதயத்தில் அறிந்து கொள்ளுங்கள்."**

முன்னதாக, 1938 நவம்பரில், **கான்ஸுலோ ஸைட்ஸ்** இந்தியாவில் பாபாவைப் பார்க்க வந்திருந்தபோது இதர குருக்களையும் சந்தித்தார். இத்தகைய ஆன்மீக பிரமுகர்களைத் தரிசிக்கும் பழக்கத்தைப் பற்றி பாபா அவருக்கு மே 16ஆம் நாள் மாலை 4:10 மணிக்கு அறிவுரை வழங்கினார்:

**நீங்கள் எனக்கு மிகவும் நெருக்கமானவர்களில் ஒருவர், எனது உலகளாவிய ஆன்மீக மையத்தின் ஐந்து அறங்காவலர்களில் ஒருவர், எனது தொடர்புக்காக நீங்கள் ஏங்குகிறீர்கள். எனவே, எனக்கு மிகவும் பிரியமானவர்களில் ஒருவராக, நேர்மையாக உங்களுக்கு ஆலோசனை ஒன்றை வழங்க விரும்புகிறேன். பல இடங்களில் தோண்ட வேண்டாம். நீர் தென்பட நீண்ட நேரம் எடுத்தாலும், ஒரே இடத்தில்தான் தோண்ட வேண்டும். இறுதியில், நீங்கள் அதைப் பெறுவீர்கள்.**

**குழுக்களில் ஈடுபட வேண்டாம்; இது ஒரு குழப்பமான விஷயம். உண்மையான அனுபவத்தின் மூலம் நீங்கள் உணர வேண்டும் என்று நான்**

விரும்புகிறேன். நான் தனிப்பட்ட முறையில் ஒரு காரியத்தைச் செய்யச் சொல்கிறேன். நீங்கள் இப்போது செய்து கொண்டிருப்பது போல், உங்கள் உலகக் கடமைகளில் நீங்கள் கலந்து கொள்ளலாம், ஆனால் அதற்கிடையே சில மணிநேரங்களைக் கண்டுபிடித்து - ஒரு நாளைக்கு ஒன்று, இரண்டு அல்லது மூன்று மணிநேரம் - உங்களால் முடிந்தால், இப்போது நான் சொல்ல இருப்பதில் நீங்களே உங்களை அர்ப்பணிக்கவும்.

**மௌனமாக, தனிமையில், ஒரே அறையில், முழு மனதுடன், உங்கள் ஆழ் இதயத்திலிருந்து குரல் எழுப்புங்கள், 'பாபா, என்னுள் இருக்கும் கடவுளை நான் பார்க்க வேண்டும்! பாபா, என்னுள் நான் கடவுளைக் காண வேண்டும்!' இவ்வளவு ஏக்கத்துடன் கதறுங்கள், இந்த நேரத்தில் நீங்கள் கடவுளைக் காண்பதைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை. மேலும், அன்பான கான்ஸுலோ, நீங்கள் அவரைக் காண்பீர்கள். நான் கூறும் இதை நீங்கள் செய்வீர்களா? அப்போது நீங்கள் கடவுளைக் காண்பீர்கள்.**

**உங்கள் வாழ்க்கையே அதைச் சார்ந்தது போல நேர்மையாகச் செய்யுங்கள். அதிகமாகவும் வேண்டாம், குறைவாகவும் வேண்டாம். நீங்கள் கடவுளைக் காண வேண்டிய விதத்தில் காண விரும்பினால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், இதைச் செய்யுங்கள். நீங்கள் எனக்கு மிகவும் அன்பானவர், நான் உங்களுக்கு உதவுவேன், ஆனால் அதை மிகவும் நேர்மையாகச் செய்யுங்கள். கதறுங்கள், கதறி அழுங்கள்! நாம் அவரைப் பார்க்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார், நாம் அவருக்காக ஏங்குவதை விட அதிகமாக அவர் நமக்காக ஏங்குகிறார். அதுதான் உண்மை. எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் அவரைக் காண்பதை அவர் விரும்புகிறார். எப்படி? மிகுந்த ஏக்கத்துடனும் ஆசையுடனும். முயற்சிக்கவும். நீங்கள் நேர்மையாக முயற்சி செய்தால் வேண்டிய ஏக்கத்தை நீங்கள் அடையப்பெறுவீர்கள். இந்தப் பௌதீக உடலிலேயே நாம் அவரைப் பார்க்க வேண்டும். எனவே, நீங்கள் முயற்சி செய்வீர்களா?**

கான்ஸுலோ, அதைச் செய்வதாகக் கூறினார்.

1952, மே 14 அன்று, டோனி ரூத்பர்ட் பாபாவுடன் இரண்டாவது நேர்காணலில் கலந்துகொண்டார்; பாபா அவருக்கு இவ்வாறு விளக்கினார்:

**எனக்கு எல்லாம் புரிகிறது. நீங்கள் எதுவும் சொல்லாவிடிலும், எல்லாம் எனக்குத் தெரியும். எனவே நான், குறிப்பாக உங்களுக்கு விளக்குவதை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு மிகத் தெளிவாக விளக்குகிறேன், நீங்கள் அதை முழுமையாகப் புரிந்து கொண்டால், மீண்டும் ஒருபோதும் குழப்பமடைய மாட்டீர்கள். மனம் உற்சாகத்துடன் உச்ச நிலைக்குச் சென்று, பின்பு கீழே இறங்கும் பழக்கத்தைக் கொண்டது - சில சமயங்களில் நம்பிக்கையுடனும், சில சமயம் சந்தேகங்கள்**

நிறைந்தும் காணப்படும். எனவே, நாம் உண்மைப்பொருளைத் தேட முயற்சித்தாலும், ஒருவர் சில நேரங்களில் குழப்பத்தில் ஆழ்ந்து, இதயம் மிகவும் வறண்டு போவதாக உணர்கிறார்.

நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், கடவுளும், கடவுளை நேசிப்பதும் குழந்தைகளின் விளையாட்டு அல்ல. அக்னிக் கடலில் ஆழமாக மூழ்குவது போன்றது! கடவுளின் அவதாரமான இயேசு, கடவுளைத் தவிர, வேறு எதிலும் தீவிரமாக இருந்ததில்லை. அவர் தன்னைப் பற்றியும், தான் ஒன்றாக இணைந்திருந்த கடவுளைப் பற்றியும் தீவிரமாக இருந்தார். அதைத் தவிர, அவர் மிகவும் இலகுவான மனநிலையில் இருந்தார்! இயேசு பிறருக்காக சிலுவையில் அறையப்பட்டது கூட இந்த இலகுவான இதயத்துடன் இருந்ததால்தான். ஏன்? ஏனென்றால் அவருக்கு எந்த ஆசையும் இல்லை. அவர் எதையும் விரும்பி தனக்கென எடுத்துக் கொள்ளாமல் பிறருக்குக் கொடுக்கும் மனநிலையில் இருந்தார்.

ஆக, கடவுள் விரும்புவது எல்லாம் சடங்கு சம்பிரதாயங்கள் அல்ல, யோகாக்கள் அல்ல, பிரார்த்தனைகள் அல்ல; அவர் அன்பு ஒன்றைத்தான் விரும்புகிறார் - உங்களை அவரில் மறக்க வைக்கும் அன்பு. அனைத்து 'இஸம்களும்' ஒன்றே. கடவுளை நேசித்துக் கடவுளாக மாறுங்கள் - சடங்கு சம்பிரதாயங்களினால் அல்ல, ஆனால் கடவுளுக்காக உயிரை விடுவதன் மூலம் கடவுளாக மாறுங்கள். பாபாவுக்குக் கொள்கை, கோட்பாடுகளில் நம்பிக்கை கிடையாது. சமூகங்கள், குழுக்கள், எதுவும் அவருக்கு இல்லை. பாபா இந்த நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் 'இஸம்கள்' அனைத்திற்கும் மேலானவர். எனக்கு 'இஸம்' இல்லை, எதிலும் பற்று இல்லை என்பது இந்தியாவில் அனைவருக்கும் தெரியும். நான் ஸூஃபியிஸம், வேதாந்தம், பௌத்தம் ஆகியவற்றை மறுசீரமைத்துள்ளேன், அதனால் அவற்றில் உள்ள உண்மை என்றென்றும் உயிருடன் இருக்கும். கொழுப்பை உறிஞ்சி எடுக்க வேண்டும், எலும்புகளை தூக்கி எறிய வேண்டும்!

இயேசு தம் சீடர்களிடம் என்ன சொன்னார் தெரியுமா? "எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்." இப்போது இதை நான் உங்களிடம் சொன்னால், உங்கள் மனம் அலைபாயும். அது நினைக்கும்: "இது உண்மையா? இவர் இயேசுவைப் போலவா? பாபா சரியா தவறா?" எனவே, இயேசுவைப் போல நீங்கள் உண்மையாகக் கருதும் ஒருவரைப் பின்பற்ற நீங்கள் முழு மனதுடன் தயாராக இருக்கும் வரை - நீங்கள் வேறு எவருக்கும் அடிபணியாமல் இருப்பதே உங்களுக்குச் சிறந்தது. பாபா உட்பட யாருடனும் எந்த தொடர்பும் இல்லாமல், உங்கள் உள் குரலை மட்டும் பின்பற்றிச் செல்லுங்கள். ஆனால் பாபாவிடம் முழுமையாக சரணடைய

**முடியுமா? உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள், ஆழ் இதயத்தின் குரலுக்கு மட்டும் செவிமடுத்து நேர்மையாக இருங்கள். நோரினா, எலிஸபெத், ஐவி டியூஸ் ஆகியோரைப் போல நீங்கள் முழு மனதுடன் சரணடைய முடியுமா? அதை நீங்களே கண்டுகொள்ளுங்கள்.**

**ஒரு கணம் கூட உங்கள் கணவரை நீங்கள் வருத்தமுறச் செய்ய நினைக்கக்கூடாது. அது எந்த வகையிலும் தகாது. பாபாவிடம், முழு மனதுடன் சரணடைவதன் மூலம், நீங்கள் உங்கள் கணவரை வருத்தத்தில் ஆழ்த்துவீர்கள் என்று நினைத்தால், நீங்கள் அதைச் செய்யக்கூடாது. அனைவரும் கிறிஸ்துவே. இதில் என்ன புதுமை இருக்கிறது? எப்படியிருந்தாலும், அவரை மகிழ்ச்சியடையச் செய்ய நான் உங்களுக்கு அறிவுரை வழங்குகிறேன், அவரை எக்காரணத்திற்காகவும் விட்டுவிடாதீர்கள், உங்கள் இதயத்தில் நீங்கள் பாபாவை நேசித்தால், கடவுளை எப்படி நேசிக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். உங்கள் இதயத்தில் பாபாவை நேசிக்கவும். முடிந்தால், புதிய ஸுஃபியிஸத்தைப் பின்பற்றுங்கள். இல்லையென்றால், அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். உங்கள் இதயத்தில் என்னை நேசியுங்கள், உங்கள் கணவரை சந்தோஷப்படுத்துங்கள், நீங்கள் பாபாவை எப்படி நேசிக்கிறீர்கள் என்பதை கடவுள் பார்த்துக்கொள்வார்.**

பாபா, **"நான் இப்போது கூறியதை நினைவில் கொண்டு, அதைச் செய்யுங்கள்"** என்று முடித்தார்.

மே 16 அன்று மாலை 4:35 மணிக்கு, டோனி மூன்றாவது முறையாக பாபாவைப் பார்த்தபோது கூறினார், "உங்களுக்கு நன்றாகத் தெரியும், நீங்கள் அமெரிக்க தேசத்தில் அசாதாரணமான பணியைச் செய்வீர்கள் என்று நான் நினைக்கிறேன்."

பாபா பதிலளித்தார், **"அமெரிக்கா இப்போது பிரபஞ்சத்தின் பொருளுலகப் பக்கத்தை வழிநடத்துகிறது, மேலும், விழிப்புறச் செய்தால் உலகத்தை ஆன்மீக ரீதியில் வழிநடத்தும் அளவுக்கு எல்லையற்ற வாய்ப்புகள் உள்ளன."**

டோனி கூறினார், "வெளியளவில் தெரிவதை விட, உள்ளளவில் ஆன்மீகத்திற்கான அதீத ஏக்கம் மறைந்துள்ளது."

பாபா பதிலளித்தார், **"இந்த விழிப்புணர்விற்குத் தேவையான இன்றியமையாத ஒன்று என்னவென்றால், ஒருவர் எந்தக் கடவுளை விரும்புகிறாரோ, அந்தக் கடவுள் மீது ஆழமான அன்பு செலுத்துவதாகும். அந்தக் கடவுள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் வடிவத்தில் அல்லது வேறொருவராக இருக்கலாம். கடவுள் அதைச் செய்வார். அவரால் அதைச்**

**செய்ய முடியும். இப்போது நேரம் நெருங்கிவிட்டது, மிக அருகாமையில் உள்ளது. இந்த ஆன்மீக எழுச்சி உருவாக வேண்டும். ஆம், நிச்சயமாக. அப்படியே ஆகவேண்டும், நடந்தாக வேண்டும்."**

"அதனால் உலகத்தை ஆட்டிப்படைக்கும் பயங்கரமான பேரழிவைத் தவிர்க்க முடியுமா?" டோனி கேட்டார்.

**"அது, இப்போது, அதன் உச்சக்கட்டத்தை எட்டுகிறது; அப்படியானால், ஒரு மாற்றம் நிச்சயமாக இருக்கும்"** என்று பாபா பதிலளித்தார்.

"அந்த உச்சக்கட்டம் என்பது போராக இருக்குமா, அல்லது போரைத் தவிர்க்க முடியுமா?"

**"எனக்கு இதைப் பற்றி எல்லாம் தெரியும், ஆனால் ஒன்றில் மட்டும் உறுதியாக இருங்கள்: அமெரிக்கா உலகை ஆன்மீக ரீதியில் வழிநடத்த வேண்டும் என்பது விதி."**

"கடவுளை நேசிப்பவர்கள் இதற்கு இரையாவார்கள்" என்று டோனி கருத்து தெரிவித்தார்.

**"உண்மை ஒருபோதும் தோல்வியடையாது, கடவுளை நேசிப்பவர்கள் விரைவில் வெற்றி காண்பார்கள்"** என்று பாபா அறிவித்தார். **"நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், நீங்கள் கடவுளின் உண்மையான அன்பர் என்பதை நான் காண்கிறேன்."**

"இந்த நாட்டில், துரதிர்ஷ்டவசமாக, இளைஞர்களுக்கு ஆன்மீகம் பற்றி போதிக்கப்படவில்லை, மேலும், நெறிமுறைக் கல்வி கூட கிடையாது!" என்று டோனி கூறினார்.

**"ஆம், இப்போது கடவுளைப் பற்றி சிறிதும் அறியாமல், உண்ணவும், மதுபானம் அருந்தவும், மகிழ்ச்சியாக இருக்கவும், காமச் செயல்களைச் செய்யவும் மட்டுமே தெரிந்த இந்த இளைஞர்கள், விரைவில் தங்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய அதிர்ச்சியை சந்திப்பார்கள், மேலும் கடவுளை நேசிப்பது ஒன்றுதான் உண்மையான வாழ்க்கை என்பதை அறிவார்கள்!"** என்று பாபா கூறினார்.

1952, மே 17 சனிக்கிழமை காலை 7:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை, மீண்டும் மாலை 4:00 முதல் 6:00 மணி வரை, 'பார்ன்' கொட்டகையில் திறந்தவெளி தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. கிட்டத்தட்ட 700 பேர், பலர் குறு நகரமான மர்டில் பீச் மற்றும் பலர் தொலைதூர இடங்களிலிருந்தும் வந்து கலந்துகொண்டனர். எலிஸபெத், பாபாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருந்தார். ஒவ்வொரு பார்வையாளரும் தனித்தனியாக உள்ளே நுழைந்து, பாபாவை சந்தித்து, அவரது கையைத் தொட்ட பின்பு, கொட்டகையை விட்டு வெளியே செல்லுமாறு பாபா அறிவுறுத்தியிருந்தார். ஸரோஷ், டான் இருவரும் பார்வையாளர்களின் வருகையை ஒழுங்குபடுத்தும் வேளையில், ஆதி சீனியர்,

பாபாவின் அருகில் நின்று எழுத்துப்பலகையை வாசித்துக் கொண்டிருந்தார்; டாக்டர் நீலு, மெஹர்ஜி இருவரும் எந்த ஓர் உதவிக்காகவும் அங்கேயே தயார் நிலையில் நின்றனர்.

ஒரு கட்டத்தில், எலிஸபெத் பாபாவிடம் கேட்டார், "மக்கள் இவ்வளவு விரைவாகக் கடந்து செல்லும் போது நீங்கள் அவர்களுக்கு எப்படி உதவ முடியும்?"

**"அவர்கள் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தால், மனம் வேலை செய்யத் தொடங்குகிறது, நான் இதயத்தைத் தொட விரும்புகிறேன்"** என்று பதிலளித்தார்.

பாபாவின் 'மௌனம்', 'அற்புதங்கள்' மற்றும் பலவற்றைப் பற்றிய அச்சிடப்பட்ட செய்தியைப் பார்வையாளர்களுக்கு வழங்கியபடி, கொட்டகையின் நுழைவாயில் ஒன்றில் நின்று கொண்டிருந்த ஃபிலிஸ் ஃபிரடெரிக் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பாபாவை சந்தித்த பிறகு, பலர் தங்கள் சுற்றுப்புறங்களை அறியாமல் கண்கலங்கி, திகைப்பில் ஆழ்ந்தனர்."

உள்ளூர் கறுப்பின சமூகத்தைச் சார்ந்தவர்கள் உட்பட, கிட்டத்தட்ட 1,000 பேர் அழைக்கப்பட்டனர். கருப்பினப் பார்வையாளர் ஒருவர் கொட்டகைக்குள் நுழையும் போதெல்லாம், பாபா எப்போதும் தனது இருக்கையிலிருந்து எழுந்து, அவர்களை வரவேற்கச் செல்வதை அங்கிருந்தவர்கள் கவனித்தனர். இந்த சந்தர்ப்பத்தில் பாபாவை முதன்முதலில் சந்தித்த ஒரு கறுப்பினப் பெண் நியூயார்க்கைச் சேர்ந்த '**பெரில் வில்லியம்ஸ்**' ஆவார்.

பெரில், பாபாவைப் பற்றி முதன்முதலில் 1951 நவம்பரில் நெருங்கிய நண்பரான ஃபிலிஸ் மூலமாகத் தெரிந்துகொண்டார். 'தெய்வீக அன்பே அனைத்துக்கும் தீர்வு' (DIVINE LOVE IS THE SOLUTION) என்ற தலைப்பில் பாபாவை மையமாகக்கொண்ட நோரினாவின் விரிவுரையைக் கேட்பதற்காக, பெரிலை 'கார்னெகி' ஹாலுக்கு அழைத்தார். ஆன்மீகத்தில் எப்போதும் அதீத நாட்டம் கொண்டிருந்த பெரில், நோரினாவின் உரையால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். வசந்த காலத்தில் பாபா மேற்கு நோக்கி வர இருப்பதாகப் பார்வையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது, மேலும் பாபாவின் வருகையை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்பினால், அவர்கள் தங்கள் பெயரையும் முகவரியையும் விட்டுச்செல்ல வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டபோது, பெரில் அவ்வாறே செய்தார்.

பாபாவுடனான தனது முதல் சந்திப்பைப் பற்றிய பெரில் வில்லியம்ஸின் விளக்கம் பின்வருமாறு:

டிலியா எனக்காகக் கதவைத் திறந்து, "பாபா, இது பெரில்" என்றார். நுழைவாயிலில் நான் தயங்கியபடியே நின்றபோது, பாபா நாற்காலியிலிருந்து எழுந்து என்னிடம் கைகளை விரித்து நின்றார். இறுதியாக எனது இல்லத்தைக் கண்டுகொண்ட மகிழ்ச்சியில், அந்தப் பிரியமானவரின் தோளில் சாய்ந்து, என்

இதயத்தின் கண்ணீரை சிந்தினேன். அவரது அன்பான வரவேற்பில் நான் எங்கிருந்து வந்தேன் என்ற சந்தேகத்திற்கு பாபா இடமளிக்கவில்லை. பாபா அவருக்கே உரித்தான வழியில் என்னை, அவரை நோக்கி ஈர்த்தார் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்தேன், குறிப்பாக உரையாடலின் போது "**இதற்கு அவர் தகுதி வாய்ந்தவர்**" என்று பாபா எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்ததை ஆதி கூறிய வேளையில், நான் மகிழ்ச்சியுடன் தலையசைத்து முட்டாள்தனமாக உளறினேன்."

நான் என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்பினார் என்பதற்கான சில தனிப்பட்ட வழிமுறைகளை எனக்கு வழங்கிய பின்னர், "**எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிடுங்கள்**" என்ற எளிய கட்டளையை வழங்குவதற்கு முன்பு, பாபா என் இதயத்தை ஆழமாகப் பார்த்தார். மிகவும் எளிமையானது, ஆனால் விடாப்பிடியான குணம் படைத்த என்னைப் போன்ற ஒருவருக்கு எவ்வளவு கடினம். ஆயினும்கூட, என் இதயத்திலிருந்து ஒரு பெரிய சுமை நீக்கப்பட்டதை உணர்ந்தேன், அதுவரை நான் அந்த சுமையைக் கூட அறியாமல் இருந்தேன். ஒருவர் தன்னுடன் சமாதானமாக இருப்பது என்றால் என்னவென்று அப்போது நான் தெரிந்து கொண்டேன்.

நியூ ஜெர்சியைச் சேர்ந்த '**ஹரோல்ட் ஜஸ்டின் ரூட்**', 37, சில மாதங்களுக்கு முன்புதான் நோரினா மூலமாக பாபாவைப் பற்றி கேள்விப்பட்டிருந்தார். அன்று பாபாவுடனான தனது முதல் சந்திப்பை அவர் நினைவு கூர்ந்தார்:

நான் என் மனைவி விர்ஜீனியாவுடன் இரவு முழுவதும் நியூ ஜெர்சியிலிருந்து காரில் மர்டில் பீச்சிற்குப் பயணம் செய்தேன். அன்பான பாபாவைப் பற்றி என் மனைவிக்கு எதுவும் தெரியாது. பாபாவுடனான எனது சந்திப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. நான் டிலியாவால் 'பார்ன்' கொட்டகைக்குள் அழைத்து வரப்பட்டேன். எனது பெயரைக் கூறியதும், பாபா தனது நாற்காலியிலிருந்து எழுந்து எனக்காகக் காத்திருந்தார். குருநாதர்களைப் பற்றி எனக்கு நிறைய முற்புனைவான, தவறான, அறியாமையால் உருவான கருத்துகள் இருந்தன. எனது பின்னணி இறையியல் என்ற நிலையில் எனது வயிறு முழுக்க முழுக்க குருநாதர்களால் நிரம்பி, அந்தக் குறிப்பிட்ட பாதையைப் பின்பற்றுவதில் என் வாழ்க்கையை மொத்தமாகத் தொலைத்துவிட்டேன். எனவே, அன்பிற்குரிய பாபாவின் கண்களை உற்றுநோக்கி, மெஹர் பாபா ஒரு குருநாதர் என்பதை நானே கண்டுபிடிப்பேன் என்று முடிவு செய்தேன்.

நான் அவரை அணுகியதும், அவர் என்னைச் சுற்றி கைகளை வீசிய அந்த நேரத்தில், முதலில் எனக்கு நினைவுக்கு வந்தது, நான் ஒரு குழந்தையைப் போல் அழுதேன். பாபா, மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தி எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்: "**அவர் பாபாவை மிகவும் நேசிக்கிறார்**

**என்று அவரிடம் சொல்லுங்கள்.**" இதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தொடர்ந்து பாபா கூறினார்: "**ஆனால், பாபா அவரை மிகவும் நேசிக்கிறார் என்பதையும் அவரிடம் சொல்லுங்கள்.**" இது என்னை மேலும் மகிழ்வித்தது.

பாபா சில நிமிடங்களுக்கு ஹரோல்டுடன் சில தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி விவாதித்தார், மேலும் அவரது இறுதிக் குறிப்பு: "**கடவுள் உங்களுக்காக என்ன நிர்ணயித்திருக்கிறார் என்று நான் பார்க்கிறேன். நான் உங்களை அழைத்தால், உடனடியாகப் புறப்படத் தயாராக இருங்கள்.**"

என் மனைவி விர்ஜீனியா (36 வயது) உள்ளே நுழைந்ததும், பாபாவும் எழுந்து நின்று, அவர் கைகளைப் பற்றிக் கொண்டு அன்புடன் வருடினார். ஆனால் விர்ஜீனியா இதைப் பற்றி எதுவும் அறியவில்லை. "நான் உள்ளே சென்றேன், முழுப் பிரபஞ்சமும் மறைந்துவிட்டது," என்று அவர் கூறினார். "நான் முற்றிலும் உணர்வற்ற நிலையில் இருந்தேன். நான் பாபாவைப் பார்த்ததுமில்லை. அறையிலிருந்த எவரையும் அல்லது வேறு எதையும் நான் பார்க்கவில்லை. நான் 'வெளியேற்றப்பட்டேன்.' நான் திகைத்துப் போனேன், மயக்கமானேன், மிகவும் மங்கலான தங்க நிறத்தால் சூழப்பட்ட ஒளி போன்ற ஏதோ ஒன்றை நான் உணர்ந்தேன் - அது ஒளி அல்ல, அது ஓர் அழகான சூழல். அதுதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆனால் நான் மகிழ்ச்சியாக இருந்தேன், மிக்க மகிழ்ச்சியாக இருந்தேன்."

மார்கரெட் க்ராஸ்கேயின் பாலே நடனக் கலைஞர்களில் ஒருவரான **பார்பரா மஹோன்**, எல்லா மாஸி, மிர்னா பெய்லின், மேட்லின் கேவர்ஸ் ஆகியோருடன் பாபாவை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். பார்பரா மஹோன் பின்வருவதை நினைவுகூர்ந்தார்:

பாபா 'பார்ன்' கொட்டகையில் அமைந்த தனது வழக்கமான இடத்தில் அமர்ந்திருந்தார். அவர் வெள்ளை நிறத்தில் உடை அணிந்திருந்தார், அவரது தலைமுடி கீழே தொங்கிக்கொண்டிருந்தது. நான் நினைத்ததை விட அவர் சிறியவராகத் தோற்றமளித்தார்; மகிழ்ச்சி பொங்க சிரித்துக் கொண்டிருந்தார். நான் எப்படி உணர்ந்தேன்? முழுவதுமாக உணர்ச்சியற்ற, ஊமையாக, மிகவும் கூச்ச சுபாவத்துடன் இருந்தேன். சொல்வதற்கு என எதுவும் தோன்றவில்லை. பாபாவைப் பற்றி எனது கடந்த இரண்டு வருட கால சிந்தனையில், அவர் கடவுள் என்பதாலும், கடவுள் நம் அனைவருள்ளும் குடியிருப்பதாலும் - கேட்பதற்கும் சொல்லுவதற்கும் எதுவும் இல்லை என்று நான் நீண்ட காலமாக முடிவு செய்தேன். எனது உள்ளார்ந்த எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் மூலமாக, பாபா உண்மையில் என்னை அறிந்திருக்க வேண்டும் என்று நான் நெடு நாட்களாக உணர்ந்திருந்தேன். அவரிடம் வருவதற்கு நாங்கள் பல தியாகங்களைச் செய்துள்ளோம், அவர் எங்களை நேசித்தார், எங்களுக்காகத் துன்பப்பட்டார்

என்றும் பாபா கூறினார். பாபா கூறியது தீவிரமாகத் தோன்றினாலும், அவரது கண்களில் சிரிப்பும், மிகையான மென்மையும், அன்பும் நிரம்பியிருந்தது.

**டெட்ராய்ட்** நகரைச் சேர்ந்த **லாரா டெலாவிக்னே** (63 வயது), அமெரிக்காவில், 1926ஆம் ஆண்டில் இனயத் கானால் தனிப்பட்ட முறையில் தீட்சை வழங்கப்பட்ட சில ஸுஃபி உறுப்பினர்களில் ஒருவர். அவர் 1948ல் நியூயார்க் நகரில் நோரினாவை சந்தித்த பின்பு, பாபாவுக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவரும் அவரது கணவர் '**லீ**'யும் பாபாவை 'பார்ன்' கொட்டகையில் சந்தித்ததை, அவர் நினைவு கூர்ந்தார்:

பாபா அங்கே நிற்பதைக் கண்டதும், நான் எனது இறுதி இலக்கை அடைந்தது போல் உணர்ந்தேன். அவர் மிகவும் அழகாகத் தோற்றமளித்தார். உண்மையில் ஓர் அழகான நபர். நான் அவரிடம் சென்றதும், அவர் என்னைத் தழுவினார். இனி எதுவும் இல்லை என்று நான் உணர்ந்ததால், "எல்லாவற்றின் முடிவுக்கும் வந்துவிட்டேன்" என்றேன். பாபா பதிலளித்தார், "**எல்லாவற்றின் முடிவும், ஆரம்பம் ஆகும்**." ஒரு விதத்தில் அது எனக்கு அவ்வாறே இருந்தது - ஒரு முடிவு மற்றும் ஒரு புதிய ஆரம்பம்.

**ஆன்ட்ரூ முயர்**, 38, வாஷிங்டன், டி.சி. விண்வெளி நிறுவனத்தில் வடிவமைப்பு வரைவாளராக பணிபுரிந்தார், மேலும் அவரது மனைவி **மவுட் அன்னா பெக்கி முயர்**, 54, சிகையலங்கார நிலையத்தை நிர்வகித்து வந்தார். இருவரும் 1940 ஆண்டுகளின் முற்பகுதியில், ஐவி டியூஸ் மூலமாக மெஹர் பாபாவைப் பற்றி அறிந்த அவ்வேளையில், ஸுஃபி போதகர்களாக மாறினர். 'பெக்கி' உண்மையில் 1932ல் ஒரு செய்தித்தாளில் மெஹர் பாபாவின் புகைப்படத்தைப் பார்த்து, தனது தாயாரிடம், "ஒரு நாள், நான் இந்த மனிதனை சந்திக்கப் போகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

1952, மே 17, விதி அவர்களை மெஹர் பாபாவிடம் அழைத்து வந்த நாள்; அவர்கள் தேவாலயத்திற்கு செல்வது போல் உடையணிந்து, மர்டில் பீச் மையத்திற்கு வந்தனர்; **ஆன்டி** (ஆன்ட்ரூ) ஜாக்கெட் மற்றும் டை அணிந்திருந்தார், **பெக்கி** அழகு ஜொலிக்கும் அலங்காரத்தில் இருந்தார். அவர்கள் இருவரும் பாபாவை சந்திப்பதற்காகக் கொட்டகைக்கு வெளியே நின்று கொண்டிருந்த வேளையில், ஆன்டிக்கு எந்த பயமோ பதட்டமோ ஏற்படவில்லை. பெக்கி முதலில் கொட்டகைக்குள் அழைக்கப்பட்டார். அவர் அடிக்கடி ஆன்டியிடம் சொல்லிக்கொண்டிருந்தார்: "ஓர் ஆன்மாவையேனும் கடவுளிடம் நெருங்கி வர நான் உதவியிருக்கிறேன் என்று நினைத்தால், நான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பேன்." பெக்கி பாபாவிடம் சென்றதும், பாபா முதலில் சைகையால் வெளிப்படுத்திய வார்த்தைகள்: "**நீங்கள் பல ஆன்மாக்களை என்னிடம் கொண்டு வந்துள்ளீர்கள்**." பெக்கிக்கு இதைவிட மகிழ்ச்சி தரும்

பாபாவின் வேறு எந்த வார்த்தையும் இருக்க முடியாது. அவரிடமிருந்து வந்த வார்த்தைகள், பெக்கியின் உள்ளளவிலான ஏக்கத்தின் தெய்வீக உறுதிப்படுத்தல் என்றே கூறவேண்டும். பாபாவின் இனிய வார்த்தைகள் அவருக்கு அனைத்தையும் உணர்த்தியது.

அடுத்து ஆன்டி அழைக்கப்பட்டார். அவரது சந்திப்பைப் பற்றி ஆன்டி கூறியதாவது:

நான் வாசல் வழியாக உள்ளே சென்றேன்; நுழைந்ததும், பாபா அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டேன். அறையில் வேறு எவரும் தென்படவில்லை. அவருடைய அழகில் மயங்கி நான் அவரிடம் ஓடினேன்; அவரை என் கைகளால் பற்றிப் பிடித்தேன். என் அரவணைப்பு கிட்டத்தட்ட வன்முறைச் செயலாக இருந்ததால் 'நான் அவரைக் காயப்படுத்தி விட்டேனோ' என்ற பயத்தில் இருந்ததாக பெக்கி பின்பு கூறினார்.

நான் பாபாவை மிக நெருக்கமாகப் பற்றிக்கொண்டிருந்த வேளையில், இரு முகங்களும் அங்குலங்கள் இடைவெளியில் இருந்தன; நான் அவரது கண்களை உற்று நோக்கினேன், நான் அளவு கடந்த நிம்மதியையும் மகிழ்ச்சியையும் உணர்ந்தேன். நான் சிறுவனாக இருந்தபோது, கிட்டத்தட்ட எனது வீட்டிற்கு அருகாமையில் தொலைந்து போனது போன்ற, என் உணர்வுகளை மட்டுமே என்னால் விவரிக்க முடியும். பொழுது சாய்ந்து விட்டதால், இருளில் நான் மிகவும் பயந்தேன். வீட்டை நோக்கிச் செல்லும் பாதை புரியாமல் திக்குமுக்காடி பயத்தில் ஆழ்ந்தேன். நான் நடந்து செல்லும்போது, சில தெருவண்டித் தடங்களைக் கவனித்தேன்; உடனடியாக, இதுவே எனது வீட்டிற்குச் செல்லும் பாதை என்பதை நினைவில் கொண்டேன். நான் அழுகையை நிறுத்தினேன். அன்று இரவு நான் எனது வீட்டில் படுக்கையில் இருப்பேன் என்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். பாபாவின் கைகளில் எனக்குக் கிடைத்த, நான் உணர்ந்த நிம்மதி இதுதான். நான் வீட்டிற்கு வருவேன், ஆனால் இப்போது நான் எனது வீட்டில் இருக்கிறேன் என்பது போன்ற உணர்வு. இது எனது புகலிடம், இது எனது அடைக்கலம்.

அந்த அரவணைப்பில், மிகுந்த நிம்மதியுடன், நான் அவருடைய கண்களைப் பார்த்தேன், மண்டலியில் ஒருவர் கூறுவதைக் கேட்டேன்: "**அவர் பாபாவை மிகவும் நேசிக்கிறார்**." அதைக் கேட்டதும், நான் பாபாவை மிகவும் நேசித்தேன் என்பதை உணர்வுபூர்வமாக அறிந்தேன். என் இதயம் என்னிடம் அவ்வாறு கூறியது, ஆனால் அந்த வார்த்தைகளைக் கேட்கும் வரை எனக்கு அது தெரியாது. பின்னர் அழ ஆரம்பித்தேன். என்னால் அழுகையை நிறுத்த முடியாத அளவுக்கு மகிழ்ச்சியாக உணர்ந்தேன். ('நான் அவருடைய வெண்ணிற சத்ராவை, கண்ணீரால் நனைத்துவிடப் போகிறேன்!' என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.)

பாபா அப்போது கூறினார்: "**பாபா அவரை மிகவும் நேசிக்கிறார்**."

எனவே, நான் மீண்டும் பாபாவின் வேறொரு வார்த்தையைக் கேட்காது போகநேர்ந்தால், (பாபா கூறியதன் காரணமாக) நான் போதுமான அளவு கேட்டிருக்கிறேன் என்றுதான் கூறவேண்டும். அப்போதிலிருந்து, நான் பல முறை பாபாவுக்குக் கீழ்ப்படியவில்லை, பல முறை நான் அவரை மறந்துவிட்டேன், பல முறை நான் செய்யக்கூடாத அனைத்தையும் செய்திருக்கிறேன் - ஆனால் அவருடைய அன்பின் உணர்வை நான் ஒருபோதும் இழக்கவில்லை.

பிரியமான குருநாதருக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்த பின்பு, முயர் தம்பதிகள் 'பார்ன்' கொட்டகையை விட்டு வெளியேறி வாஷிங்டன் டி.சி.க்கு திரும்பிச் சென்றனர்.

நாள் முழுவதும் புயல் மேகங்கள் திரண்டிருந்தன. 'பார்ன்' தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பெண்மணிகளைப் பார்க்க பாபா விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது பாதங்கள் தரையைத் தொட்டபோது, 'லாங் ஏரி'யின் மேற்பரப்பை ஒரு பெரிய மின்னல் தாக்கியது, மழை பெய்யத் தொடங்கியது. ஃபிலிஸ் நினைவு கூர்ந்தார்: "அவர் தனது பணியை நிறைவு செய்வது வரை, புயலைத் தடுத்து நிறுத்தி, அதற்குப் பிறகு, மழை பொழிய அனுமதித்து 'பொத்தானை அழுத்தியது' போலத் தோன்றியது."

ஐவியும் சார்மியனும் விருந்தினர் மாளிகையில் விடைபெற்றுக் கொண்டிருந்தனர். பாபா அவர்களிடம், "**ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, மக்கள் இந்த நாளை 'பார்ன்' கொட்டகையில் பாடி மகிழ்வார்கள், ஆனால் அதில் பங்கெடுத்த உங்களால் நிச்சயமாக அதன் நறுமணத்தை முழுவதுமாக நுகர முடியாது**" என்று கூறினார்.

நோரினாவின் உடல்நிலை இன்னும் சீராகாத நிலையில் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள முடியவில்லை. அன்று இரவு ஆதி சீனியர் இந்தியாவில் மண்டலிக்கு எழுதினார்:

நள்ளிரவில் நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நோரினாவின் உடல்நிலை சீராகாததால் பாபாவின் திட்டங்களை, அவர் விரும்பியபடி நிறைவேற்ற முடியவில்லை. எனவே நாங்கள் வந்ததிலிருந்து பாபாவைச் சுற்றி ஒரு கலகலப்பான, மகிழ்ச்சியான சூழல் இல்லை. நோரினா விரைவில் குணமடைவார் என்றும், பாபாவின் திட்டங்களின்படி, நியூயார்க்கில் ஜூலை நடுவிலிருந்து இறுதி வரை நடக்கும் நேர்காணல்களில் அவரால் பங்கேற்க முடியும் என்றும் நம்புகிறேன்.

அடுத்த நாள், மே 18, ஃபிலிஸ், அடீல் இருவரும் நியூயார்க்கிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். "அவர்களின் முதல் சந்திப்பு மகிழ்ச்சியாக

இருந்ததைப் போலவே, பாபாவிடமிருந்து அவர்களின் முதல் பிரிவும் மிகவும் வேதனையானதாக இருந்தது" என்று காலம் கண்டுகொண்டது.

ஃபிலிஸ் இவ்வாறு குறிப்பிட்டார், "ஆதாம், ஏவாள் இருவரும் சொர்க்கத்தை விட்டு வெளியேறுவது போல் உணர்கிறீர்கள்." ஆனால், மர்டில் பீச் பேருந்து நிலையத்தில், அவர் சோகமாக இருந்ததால், அவருக்கு ஆறுதல் சொல்லும் விதத்தில், ஜூக் பாக்ஸ், கோல் போர்ட்டரின் கவி நயத்தில் பாபாவின் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான பாடல் '**பிகின் தி பிகீன்**' (BEGIN THE BEGUINE) பாடத் தொடங்கியது!

கொட்டகையில் 'திறந்த வெளி' கூட்டம் ஒரு நாள் மட்டுமே நீடித்தது, ஆனால் தவறான தகவல்தொடர்பு காரணமாக, 'மெட்ரோபொலிட்டன் ஓபரா' நிறுவனத்துடன் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்த நான்கு நடனக் கலைஞர்களை மறுநாள் காலை 9:00 மணிக்கு, பாபாவைப் பார்க்க அனுமதிக்குமாறு மார்கரெட், பாபாவிடம் வேண்டினார். அவர்கள் மினியாபோலிஸ் நகரில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அதைத் தொடர்ந்து மர்டில் பீச் மையத்திற்கு விமானத்தில் வந்து கொண்டிருந்தனர், இதுவே அவர்கள் விரைவில் வந்து சேரமுடிகிற நேரமாக இருந்தது. **"ஐந்து நிமிடங்களுக்கு மட்டும்"** என்று பாபா ஒப்புக்கொண்டார். ஆனால் 1952, மே 18 அன்று காலை 9:00 மணிக்கு, பாபா லகூன் கேபினுக்கு வந்தபோது, நடனக் கலைஞர்கள் எவரும் அங்கு வரவில்லை. அவர் மார்கரெட்டை அழைத்து, அனைவரும் ஒன்றாகக் காத்திருந்தனர், நெடு நேரம் காத்துக்கொண்டே இருந்தனர்.

"**17ஆம் தேதிக்கு பிறகு யாரையோ பார்க்க வேண்டும் என்று நீங்கள்தானே சொன்னீர்கள்?**" பாபா சீற்றமடைந்தார். "**இப்போது எந்த நேர்காணலையும் வழங்கும் மனநிலையில் நான் இல்லை. அவர்கள் எங்கே?**" என வினவினார்.

பாபா மிகவும் அமைதியற்றவராக இருந்தார்; அவர் பிற அனைவரையும் அழைத்து, அதையே பல முறை திரும்பத் திரும்பக் கேட்டார். "**அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர்கள் ஏதேனும் விபத்துக்குள்ளானதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் ஏன் வரவில்லை? அவர்கள் எத்தனை மணிக்கு வந்திருக்க வேண்டும்?**" என்று அவர் கூறி, லகூன் கேபினுக்குள் முன்னும் பின்னும் வேகமாக நடந்து கொண்டிருந்தார். அவர் விமான நிலையத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ள ஒருவரை அனுப்பினார், ஆனால் எந்தத் தகவலும் இல்லை.

பாபா மதிய உணவை முடித்துவிட்டு திரும்பி வந்தார். நாள் முழுவதும் விவாதம் முழுக்க முழுக்க காணாமல் போன நான்கு நடனக் கலைஞர்களை மையமாகக் கொண்டே நிகழ்ந்தது. கிட்டி நினைவு கூர்ந்தார், "சில சமயங்களில்

பாபா அவர்கள் வருவதைப் பற்றி மிகவும் எரிச்சலடைந்தார், பின்னர் என்ன நடந்தது என்று மீண்டும் ஆழ்ந்த கவலையில் இருந்தார்." மாலையில் பாபா புறப்படவிருந்த நேரத்தில், மீண்டும் விமான நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளுமாறு கூறினார். வானிலை மிகவும் மோசமாக இருந்ததால், விமானங்கள் ரத்து செய்யப்பட்டதாகவும், பல விமானங்கள் தாமதமாக வந்ததாகவும் தகவல் வந்தது. **"நான் இப்போது செல்கிறேன்; அவர்கள் வந்தால், காலை ஏழு மணிக்கு நான் அவர்களை ஐந்து நிமிடங்கள் சந்திப்பேன் என்று சொல்லுங்கள்"** என்று கூறிச் சென்றார்.

பாபா லகூன் கேபினை விட்டு வெளியே வந்ததும், தொலைபேசி மணி ஒலித்தது. மர்டில் பீச் விமான நிலையத்திலிருந்து நடனக் கலைஞர்கள் அழைத்தனர். வழக்கமான விமானங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டதால், அவர்கள் ஒரு தனியார் விமானத்தை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது. அந்த தூரத்தைக் கடக்கப் போதுமான எரிவாயுவோடு, புயலின் வழியாக அவர்கள் பறந்து வந்தது, மொத்தத்தில் குடலைப் பிடுங்கி எடுக்கும் திகிலூட்டும் அனுபவமாக இருந்தது. ஆனால் தெய்வீக அன்பானவரை சந்திக்கும் இந்த வாய்ப்பை இழக்கக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

பாபாவின் உதவி மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் நிச்சயமாக அழிந்திருப்பார்கள். பாபா அவர்களின் பாதுகாப்பான வருகையைப் பற்றிய செய்தியைக் கேட்டதும், அவரது முகம் அன்பில் மலர்ந்தது, மேலும் ஐவியின் பக்கம் திரும்பி, **"நான் நாளை பணிபுரியத் திட்டமிடவில்லை, ஆனால் அன்பு என்னை அடிமைப்படுத்துகிறது"** என்று கூறினார். அவர் இந்தக் கருத்தை எடுத்துரைத்தபோது, நடனக் கலைஞர்கள் அவருக்கு அனுப்பிய ஒரு தொலைத்தந்தியை வைத்திருந்த தனது சட்டைப் பாக்கெட்டைத் தட்டினார்.

மறுநாள் காலை நான்கு நெஞ்சுரம் படைத்த நடனக் கலைஞர்களை பாபா பார்த்தார் - **ஸெப்ரா நெவின்ஸ், ஸூரா கெஸ்பென், கேத்ரின் ('குழு தலைவர்') டாமன் மற்றும் சார்லஸ் லோரன் ('டெக்ஸ்') ஹைடவ்வர்** - முதலில் தனித்தனியாகவும், பின்னர் குழுவாகவும் சந்தித்தார். ஆதியும் மெஹர்ஜியும் ஏற்கனவே கலிஃபோர்னியாவுக்குப் போய்விட்டதால், ரானோ பாபாவின் எழுத்துப் பலகையை வாசித்தார். டிலியாவும் உடனிருந்தார். ஒரு கட்டத்தில், பாபா, **"உங்களை நீங்கள் எப்போதும் நேசிப்பதை விட அதிகமாக நான் உங்களை நேசிக்கிறேன்"** என்று குறிப்பிட்டு, மேலும் **"நீங்கள் அறிந்ததை விட நான் உங்களை அதிகமாக நேசிக்கிறேன்"** என்று கூறினார். பாபாவுடனான அவர்களின் சந்திப்பு நான்கு நடனக் கலைஞர்களுக்கும் ஒரு மிகப்பெரிய அன்பின் அனுபவமாக இருந்தது.

நான்கு நடனக்கலைஞர்களும் ஒன்றாக உள்ளே வந்தபோது, பாபா அவர்களை சோஃபாவில் அமர வைத்து, சிறிது நேரம் முன்னும் பின்னும்

வேகமாக நடந்தார், சில நேரங்களில் ஜன்னலுக்கு வெளியே பார்ப்பது போல் இடையிடையே நின்றார். அவரைச் சூழ்ந்து ஒரு தீவிர சக்தி இருப்பதை அனைவரும் கவனித்தனர். பாபா அவர்கள் முன் அமர்ந்து, எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்: "**நேற்று நான் உங்களுடன் விமானத்தில் இருந்தேன்**; **இப்போது நீங்கள் என்னை உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும்**." அவர் ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவிக்கொண்டார், பாபாவின் இந்தக் கூற்று அவர்களை வெகுவாக நெகிழச் செய்தது. அனைவரும் அடுத்த விமானத்தில் பயணம் செய்ய புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பு, பாபா, தனது நெருங்கிய அன்பர்களை அழைத்து, "**அவர்கள் பயணம் செய்த விமானம் மிகுந்த சிரமத்தில் இருந்தது**, **பயணம் முழுவதும் அவர்கள் பல முறை ஆபத்தில் சிக்கினர்**" என்று கூறினார். பாபாவின் கருணை மிகு பார்வையால் அவர்கள் காப்பாற்றப்பட்டதை நினைத்து டிலியா அழுதுகொண்டே இருந்தார்.

மர்டில் பீச் விஜயத்தின் போது பாபாவின் அன்பின் ஓட்டத்தைக் கண்டு காலமும் நெகிழ்ந்தது. "அன்பிற்குரியவர் தனது இறை அன்பினால் மெஹர் மையத்தை நனைத்தார், மேலும் அங்குள்ள ஒவ்வொரு துகள்களும் அவதார புருஷரின் உண்மை மற்றும் அழகு குறித்த, காலத்தால் அழியாத செய்தியைப் பரப்புவதற்கான அதிகாரத்தைப் பெற்றன. பாபாவின் பிரசன்னம் அந்த மண்ணைப் புனிதப்படுத்தியது, அவருடைய பாதச்சுவடுகள் அதன் சுற்றுப்புற சூழலை ஒளிரச் செய்தன. அவை எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக இருக்கும். காலங்காலமாக இறைவனைத் தேடி அலைபவர்கள், அவற்றைத் தலைவணங்குபவர்கள், தங்கள் இதயத்தின் உண்மையான அன்பிற்குரியவரைக் கண்டுகொள்ள வாய்ப்பாக அமையும்.

"மர்டில் பீச் மெஹர் மையம் என்பது பாபாவின் அமெரிக்க மதுபான சத்திரம் ஆகும், ஆன்மீக பாதையில் தாகத்துடன் பயணிக்கும் அனைவருக்காகவும் பாபா, அதன் கதவுகளைத் திறந்து வைத்தார். யாத்ரீகர்கள் அவரது மதுபானத்தை அருந்தி, இறை போதையில் முடிவில்லா வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பை இந்த மையம் வழங்கும்."

மெஹர் பாபாவின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் எலிஸபெத், நோரினா இருவரின் அன்பும், சேவையும், பற்றற்ற தன்மையும் அவரது வழியில் பணியாற்ற விரும்புவோர் பின்பற்ற வேண்டிய கலங்கரை விளக்கங்களாகும்.

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, எலிஸபெத்திடம், இந்த மையத்தை பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்: **ஆன்மீக கல்விக்கூடம்**; **மேம்நிலை ஆத்மாக்களுக்கான வாழ்விடம்**; **புனிதர்களின் உறைவிடம்**; **மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான புகலிடம்**; **தியான**

**மையம்; அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான ஓய்விடம்**. பல ஆண்டுகளாக, எலிஸபெத்தின் அதிநுட்பமான மேற்பார்வையின் கீழ், இந்த மையம் பாபாவை நேசிப்பவர்களுக்கும், அவரைப் பற்றி அறிந்தவர்களுக்கும் ஒரு தனிச்சிறப்புமிக்க ஓய்விடமாக மாறியது.

காலம் இதை இப்படிக் கூறி முடித்தது: "**மெஹர் மையம் கண்ணீரால் முழுமையாக நனைந்திருந்தது, இறை-மனிதனின் கடைக்கண் பார்வையால் இதயம் நெகிழ்ந்து வழிந்த கண்ணீர். பாபாவின் மகிழ்ச்சி, அவரது மாட்சிமை, அவரது தந்திரம், நகைச்சுவை, அழகு, எழுத்துப்பலகையின் இசை போன்ற அனைத்தும் இதில் மறைந்திருந்தன. இந்த தெய்வீக வெளிப்பாடுகள் இறை அன்பின் போதையில் இருக்கும் அனைவருக்காகவும் என்றென்றும் நிலைத்திருக்கும். மர்டில் பீச் மையத்தைப் பார்வையிடும் ஒவ்வொருவருக்கும் ஏமாற்றம் என்பதற்கு இடமே இல்லை.**"

1952 மே 19 திங்கட்கிழமை அன்று, பாபா திட்டமிட்டபடி, டாக்டர் டான், டாக்டர் நீலு, மெஹர்ஜி, குஸ்தாஜி, ஆதி ஆகியோர், அமெரிக்க நெடுஞ்சாலை வழியாக எலிஸபெத்தின் காரில் கலிஃபோர்னியாவில் அமைந்த மெஹர் மவுண்டிற்குச் சென்று, பாபா, பெண் மண்டலியுடன் அங்குச் செல்வதற்கு முன்பு, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஆதி சீனியர் போக விரும்பவில்லை; பாபாவின் குழுவில் உள்ள கார்களில் ஒன்றை அவர் ஓட்ட விரும்பினார். ஸரோஷ் ஆண் மண்டலியுடன் செல்ல விரும்பினார், ஆனால் பாபா, ஸரோஷிடம் பெண்மணிகள் குழுவுடன் வருமாறு வற்புறுத்தினார். பெண் மண்டலி பயணம் செய்யும் காரை ஆதி ஓட்டினால் நன்றாக இருக்கும் என்று டான் கூட பரிந்துரைத்தார், ஆனால் பாபாவின் மனம் மாறவில்லை.

அனைவரும் புறப்பட்டுச் சென்ற மறுநாள், டாக்டர் டான் மூலமாக, பாபா அவர்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பினார்:

**அனைத்து சபலங்களையும், எல்லாவற்றிற்கும் மேலாக,**
**காமத்தைத் தவிர்க்கவும்;**
**நேர்மையாக, நியாயமாக, உன்னதமாக,**
**நீதி தவறாமல் இருக்கவும்.**
**தேவையற்றவற்றை பேசாதீர்கள், ஆனால்**
**பாபாவைப் பற்றி பேச வேண்டும்.**
**மையத்தில் இரவு காவலுக்காக, துகள் போல் உலர்ந்து போகாத**
**ஒரு சிறுவனைக் கண்டுகொள்ள வேண்டும்.**
**மற்றும் அதிக மேலேடு வரும் வரை**
**'கூழைக் கொதிக்கவிட' வேண்டாம்.**

**நான் உங்களை சந்தேகிக்கவில்லை,**

**ஆனால் உங்களை எச்சரிக்கிறேன்,**

**அன்பான நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்துடன்.**

**அன்புள்ள டான்,**

**இதை, இதர தோழர்களுக்கும் வாசித்துக் காட்டுங்கள். இதை, எழுத வைத்தது என்னில் எழுந்த சந்தேகம் அல்ல, ஆனால் இந்த வசனத்தை உங்களுக்கு அனுப்பும் மனநிலையில் நான் இருந்தேன், மேலும் இது தன்னுணர்வில்லாமல் இழைத்த, தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்கும் என்று நீங்கள் அனைவரும் உறுதியாக உணர விரும்புகிறேன்.**

- பாபா



மெஹர் பாபா - மர்டில் பீச் - மே 1952
அடீல் வோல்கின், ஃபிலிஸ் ஃபிரடெரிக், மணி, ஸ்பார்கீ, ஜவி டியூஸ், பாபா, மெஹரா, டிலியா, மெஹரு




மெஹர் பாபாவின் மண்டலி - மெஹர்ஜி, டாக்டர் நீலு, ஸரோஷ், ஆதி சீனியர்

# பிராக், ஒக்லஹோமா

**(Prague, Oklahoma)**

**மர்டில் பீச் மெஹர் ஆன்மீக மையத்தில் ஒரு மாதம் தங்கிய பின்னர், 1952, மே 20ஆம் நாள்** செவ்வாய்க்கிழமை, பாபாவும் பெண் மண்டலியும் மதியம் 2:30 மணிக்கு, இரண்டு கார்களில் புறப்பட்டனர். பாபாவின் பயண திட்டத்தின்படி ஒன்பது நாட்கள், முழு அமெரிக்க தேசத்தையும் காரில் கடந்து, மே 29ஆம் நாள் கலிஃபோர்னியாவின் **ஓஹய்** (OJAI) மலை நகரில் அமைந்த **மெஹர் மவுண்ட்** மையத்தைச் சென்றடைவதாகும். அவர் அங்கு 30ஆம் தேதி கேப்ரியல் பாஸ்கலையும், ஜூன் 1ஆம் தேதி மால்கம் ஸ்க்லோஸையும் சந்தித்து ஜூன் 2, 4 ஆகிய தேதிகளில் ஹாலிவுட் செல்லவிருந்தார். (பாஸ்கல், ஹாலிவுட்டில் அமைந்த தனது இரண்டு பங்களாக்களை, பாபாவின் பயன்பாட்டிற்காக வைத்திருந்தார், அதனால் பாபா, அங்கு மக்களைச் சந்திக்க முடியும்.) குழு 6ஆம் தேதி மெஹர் மவுண்ட் மையத்திலிருந்து ஸான் ஃபிரான்சிஸ்கோவிற்குச் சென்று, அங்கு மூன்று நாட்கள் தங்கி, (இதை டான் ஸ்டீவன்ஸ் ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தார்), ஜூன் 10ஆம் நாள் மர்டில் பீச்சிற்கு திரும்பி வரும் பயணத்தைத் தொடங்கப்போவதாகத் திட்டம் வகுக்கப்பட்டது.

**பாபா**, **மெஹரா**, **மணி**, **மெஹரு** ஆகியோர் **எலிஸபெத்தின் பெரிய நீல நிற 'நாஷ்' காரில் சவாரி செய்தனர்**. (சார்மியன் அந்தக் காரை ஓட்ட விரும்பினார், ஆனால் பாபா 'இல்லை' என்று கூறினார்.) **ஸரோஷ் ஓட்டிய வேறொரு சிறிய கார்**, **'ராம்ப்ளர்' ஸ்டேஷன் வேகனில்**, **ரானோ**, **கிட்டி**, **கோஹெர்**, **டிலியா** ஆகியோர் சென்றனர். மர்டில் பீச்சை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, பாபா, எலிஸபெத்திடம், **"காருக்கான காப்பீட்டு ஆவணங்கள் உங்களிடம் உள்ளதா?"** என்று கேட்க, எலிஸபெத் "இல்லை பாபா" என்று பதிலளிக்கவும், அவரை வழியில் காரை நிறுத்தி தனது '**யூபான் டூன்ஸ்**' இல்லத்திலிருந்து அவற்றை எடுத்து வருமாறு அறிவுறுத்தினார்.

எலிஸபெத்தின் காரை நெருக்கமாகப் பின்தொடருமாறு ஸரோஷை பாபா பலமுறை எச்சரித்தார், அவ்வாறு செய்யத் தவறினால் அவர் மன்னிக்கப்பட மாட்டார் என்றும் கூறினார். ஸரோஷ் அமெரிக்காவில் பாபாவுடன் இருந்தபோது, அவர் அஹமதுநகர் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி அப்போது அவருக்கு வந்தது. வெகு விரைவில் இந்த அரசாங்கப் பதவி அவருக்கு பயனுள்ளதாக இருக்கும்.

கோஹெர் அவர்களின் பயணத்தின் சுருக்கமான நாட்குறிப்பை வைத்திருந்தார். பிற்பகல் 2:00 மணிக்கு மர்டில் பீச்சை விட்டு வெளியேறிய குழு, **தெற்கு கரோலினாவின் கொலம்பியா**வுக்கு வந்து, அங்கு அவர்கள் 'ஃபாரஸ்ட் மோட்டார் கோர்ட்டில்' அந்த இரவைக் கழித்தனர். பாபா, இரவு உணவு எதுவும்

உண்ணவில்லை, தூங்கவும் இல்லை. அடுத்த நாள், மே 21 காலை 6:45 மணிக்கு அவர்கள், **வடக்குக் கரோலினாவின்**, **மர்ஃபி** நகரை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர். அவர்கள் **ப்ளூ ரிட்ஜ்** மலைகள் வழியாகப் பயணம் செய்த வேளையில், அழகான இயற்கைக் காட்சிகளால் அனைவரும் ஈர்க்கப்பட்டனர். ஸரோஷின் கார், அதன் வயது மற்றும் நிலை காரணமாக, எப்போதும் பாபாவின் காரைப் பின்தொடர்ந்து செல்ல முடியவில்லை, சில நேரங்களில் மிகவும் பின்தங்கியிருந்தது. ஸரோஷ் **லாரன்ஸ்** என்ற இடத்தில் பாபாவின் காரைத் தவறவிட்டு, **கிரீன்வில்** கிராமத்தில் அந்தக் காரைத் தேடினார். ஸரோஷ் வரும் வரை ஓரிடத்தில் பாபா தனது காரை நிறுத்தி, அவர் காரை மெதுவாக ஓட்டியதற்காகக் கடுமையாகக் கண்டித்தார். சிறிது நேரத்தில் பாபாவின் மனநிலை மாறியது, அவர் ஸரோஷை மன்னித்தார். 'ப்ளூ ரிட்ஜ்' மலைகள் வழியாகச் செல்லும் போது **ஸீஸர்ஸ் ஹெட்** என்ற இடத்தின் அற்புதமான இயற்கைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

வடக்குக் கரோலினாவின் **ப்ரெவர்ட்** பகுதியில் நின்று பாபா, குழுவினருடன் மாமிச சாண்ட்விச் மற்றும் கேக்குகளை உண்டார். பாபா நல்ல மனநிலையில் தோன்றினார். மர்ஃபி நகரத்தில், அவர்கள் அமைதியான சாலையோர தங்கும் விடுதியைத் தேடி அலைந்து, இறுதியில் '510, வேலி ரிவர் அவென்யூ'வில் அமைந்த 'மூர்லேண்ட் ஹைட்ஸ்' விடுதியில் இரவு ஓய்வெடுத்தனர். விடுதியிலிருந்த சமையலறையில் தேநீருடன் சிறிது சிற்றுண்டியைத் தயார் செய்து இரவு உணவாக உண்டனர். அன்று இரவு பாபா நன்றாக ஓய்வெடுத்தார், காலை உணவின் போது நல்ல மனநிலையில் காணப்பட்டார்.

அவர்கள் 1952, மே 22 அன்று காலை 6:30 மணியளவில் **டென்னசி**, **மெம்ஃபிஸ்** நகருக்குப் புறப்பட்டனர். வானிலை பனிமூட்டமாக இருந்தது. 'டக்டவுன்' வழியாக, அவர்கள் டென்னசியில் நுழைந்து, அங்கு **பாபா 'ஓகோயீ' ஏரியையும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களையும், தான் இதுவரை கண்டிராத மிக அற்புதமான இயற்கைக்காட்சிகளில் ஒன்றாக அறிவித்தார், மேலும் இந்த பழைய 'செரோக்கி இந்தியப் பகுதி' ஆன்மீக சூழலைக் கொண்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்**.

**க்ளீவ்லேண்ட், சட்டனூகா** நகரங்கள் வழியாகச் செல்லும் போது, பாபாவின் கார் மீண்டும் ஸரோஷின் பார்வைக்கு வெளியே சென்றது. இறுதியாக அவர்களைக் கண்டுகொண்டபோது, பாபா மிகவும் வருத்தப்பட்டார்; மேலும் இது நடந்தால் ஸரோஷை மன்னிக்க மாட்டேன் என்று எச்சரித்தார்.

அவர்கள் **ரூபி நீர்வீழ்ச்சி** (நிலத்தடியில் ஆழமான நீர்வீழ்ச்சிகளின் தொகுப்பு) மற்றும் **டென்னசி**, **லுக்அவுட் மவுண்டனில்** அமைந்த **ராக் சிட்டி**

**கார்டன்ஸ்** ஆகியவற்றைப் பார்வையிட்டனர்; அப்போது பாபா, **"இது நமது கடைசி சுற்றுலா நிறுத்தம்"** என்று குறிப்பிட்டார்.

டென்னசி, **வெய்ன்ஸ்போரோ** வழியாகச் செல்லும் '1015 ஸவன்னா நெடுஞ்சாலை'யில் ஓடும் நீரோடையில் அமைந்துள்ள 'ஸிம்ஸ் விடுதி'யில் இரவைக் கழித்தனர். பாபா சூப் மற்றும் இளங்கன்றின் மாமிசத்தை உண்டு, இரண்டு மணி நேரம் தூங்கினார்.

மறுநாள் மே 23ஆம் தேதி காலை 5.35 மணிக்கு புறப்பட்டனர். அவர்கள் நாள் முழுவதும் பயணம் செய்து, **மெம்ஃபிஸ்** வழியாகச் சென்று, மதிய உணவுக்காக **ஆர்கன்ஸாஸின் ஸெர்சி** நகரில் நின்றனர், ஆனால் பாபாவிற்கு பரிமாறப்பட்ட ஆம்லெட்டை அவர் விரும்பாததால், **கான்வே**, **அட்கின்ஸ்** மற்றும் **கிளார்க்ஸ்வில்** வழியாகச் சென்று, ஆர்கன்ஸாஸின் **ஓஸர்க்** நகரை வந்தடைந்தனர்; அங்கு அவர்கள் அன்று இரவு 'பாண்ட் க்ரீக் மோட்டார்' விடுதியில் தங்கினர். அவர்கள் சுமார் 350 மைல்களைக் கடந்து வந்தனர். அந்த இடம் அதன் இயற்கை வனப்புடன் மிகவும் அமைதியாக இருந்தது; மீண்டும் ஒரு நீரோடை நிலத்தின் வழியாகச் சென்றது. விடுதி உரிமையாளரிடம் நூற்றுக்கும் மேற்பட்ட கோழிகள் இருந்தன. பாபா தனது அறையில் பால் மற்றும் ரொட்டியை இரவு உணவாக உண்டு, காலை உணவுக்கு மீண்டும் அதையே கேட்டார். அன்று இரவு பாபா தூங்கவில்லை, தொண்டை மற்றும் வயிற்றில் வலி இருப்பதாகத் தெரிவித்தார்.

1952, **மே 24 சனிக்கிழமை**, ஓர் இனிமையான மூடுபனி நிறைந்த காலை. அனைவரும் அதிகாலை 4:30 மணிக்கு, காலை சிற்றுண்டியை முடித்து, 5:45 மணிக்குப் பயணத்தைத் தொடர்ந்தனர். பாபா மீண்டும் ஸரோஷை அவர்களுக்குப் பின்னால் வருமாறு எச்சரித்தார். அன்று காலை, பாபா தீவிர மனநிலையில், வேறு எதையோ சிந்தித்துக்கொண்டு அல்லது கவலைப்பட்டுக்கொண்டு இருப்பதாகத் தோன்றியது, மேலும் அவர் தனது வழக்கமான அவசரத்தில் இல்லை. **ஃபோர்ட் ஸ்மித்** வழியாக, அவர்கள் ஆர்கன்ஸாஸ் நதியைக் கடந்து **ஓக்லஹோமா**வில் நுழைந்தனர். ஒரு கட்டத்தில், பாபா, எலிஸபெத்திடம் காரை நிறுத்தக் கூறி, வெளியே வந்து, நெடுஞ்சாலையில் பல நிமிடங்கள் வேகமாக முன்னும் பின்னும் நடந்தார். பயணத்தைத் தொடர்வதற்கு முன்பு, பாபா மீண்டும் ஸரோஷிடம் கவனமாகவும் நெருக்கமாக இருக்கவும் அறிவுறுத்தினார். மீண்டும் ஸரோஷ் பாபாவின் காரைத் தொலையவிட்டு, **ஸல்லிஸா** குறுநகரில் அதை சந்தித்த வேளையில். பாபா ஸரோஷை முன்னால் ஓட்டிச் செல்லுமாறு அறிவுறுத்தினார். இருப்பினும், **கோர்** நகர் பகுதியில் மறுபடியும் பாபாவின் காரைத் தவறவிட்டு, **வார்னர்** வந்தபோது அதைக் கண்டுகொள்ள முடிந்தது.

அவர்கள் மீண்டும் நெடுஞ்சாலையில் வந்ததும், பாபா, எலிஸபெத்திடம் **"வேகமாக ஓட்டுங்கள்!"** என்று கூறி அவரிடம் கட்டளையிடும் தொனியில் **"வேகமாக, வேகமாக!"** என திரும்பத் திரும்ப அறிவுறுத்தினார். அதற்கு முன்தினம் இரவு மழை பெய்ததால், சாலை மென்மையாக இருந்தது. அவர்கள் கிழக்கு ஒக்லஹோமாவின் உருண்டோடும் அமைப்பில் இருந்த மலைகள் மீது ஓட்டிச் சென்றனர்.

காலை 10:15 மணியளவில், அவர்கள் ஒரு மலையின் மீது வந்தபோது, எலிஸபெத் சாலையின் தவறான பக்கத்தில் ஒரு கார் அவர்களை நோக்கி வருவதைக் கண்டார். ஓட்டுநர் எதிர்வரும் காரைக் கண்டதும், அதைத் தவிர்க்கும் விதத்தில் திரும்புவார் என்ற நம்பிக்கையில் வேகத்தைக் குறைத்தார். ஆனால் அவர் நிறுத்தத் தவறியதால், முழு வேகத்தில் எலிஸபெத் ஓட்டிச்சென்ற கார் மீது மோதினார். விபத்து நடந்த அந்த கணமே, எலிஸபெத், பாபா தனது இடது கையை உயர்த்தி, எதிரே வந்த காரைச் சுட்டிக் காட்டி, முழு நிகழ்வையும் அவரே இயக்குவது போலத் தோற்றமளித்தார்.

பாபா காரிலிருந்து தூக்கி எறியப்பட்டு, சாலையோரம் இருந்த சேறு நிறைந்த பள்ளத்தில் அவரது பின்புறம் தரையில் விழும்படி வீழ்ந்தார். நொறுங்கிய மூக்கிலிருந்து ரத்தம் வழிந்தது; ஒரு கை மற்றும் கால் முறிந்தன. மெஹரா, மெஹரு இருவரும் காரிலிருந்து தூக்கி வீசப்பட்டனர். மெஹராவின் நெற்றியில் ஆழமான காயம் ஏற்பட்டது, மேலும் மெஹருவின் மணிக்கட்டுகள் முறிந்து சுளுக்கு ஏற்பட்டது. எலிஸபெத்தின் இரண்டு கைகளும் முறிந்து ஆறு அல்லது ஏழு விலா எலும்புகள் உடைந்த நிலையில் ஸ்டீயரிங் வீலுக்குப் பின்னால் தள்ளப்பட்டார். பின் இருக்கையில் தூங்கிக்கொண்டிருந்த மணி மட்டும் காயமின்றி தப்பித்தார்.


காப்பீட்டு நோக்கங்களுக்காக அந்த நேரத்தில் தாக்கல் செய்யப்பட்ட போலீஸ் அறிக்கையின்படி, **விபத்து, ஒக்லஹோமாவின் லிங்கன் கவுண்டி, சாலை எண் 62, பிராக் நகருக்கு மேற்கே சுமார் பத்து மைல் தொலைவில், மீக்கர் நகருக்கு அருகில், கிழக்கு கவுண்டி சாலையிலிருந்து 600 அடி தொலைவில் நடந்தது.**

விபத்திற்குள்ளான இரண்டாவது காரின் ஓட்டுநர், 24 வயதான **'அந்தோனி ஜோஸப் பல்மியரி'**, விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பதை விவரித்தார்:

நான் எனது '52 மெர்குரி ஸெடானில் கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் ஒரு சரக்கு லாரி நின்றதைக் கண்டு வேகத்தைக் குறைத்தேன். ஆனால் இதைச் செய்யும்போது, பிரேக் ஒரு பக்கத்தில் உறைந்ததால், கார் இடதுபுறம் திரும்பும் போக்கை உணரமுடிந்தது. அவ்வேளையில் கார் நெடுஞ்சாலையின் குறுக்கே, சாலைக்கு வெளியே வந்த

திசையிலேயே திரும்பியது. அப்போது நாஷ் நல்ல வேகத்தில் வந்து எனது காரைப் பின்புறத்தில் தாக்கியது.

விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பதை விளக்குவதற்காக பல்மியரி இந்த வரைபடத்தை வரைந்தார்.




எலிஸபெத் விவரித்ததற்கு இணங்க:

எங்கள் குழு மர்டில் பீச், தெற்கு கரோலினாவிலிருந்து கலிஃபோர்னியாவுக்கு மோட்டார் பயணத்தை மேற்கொண்டது. நான் எனது 'நாஷ் ஸ்டேட்ஸ்மேன்' காரில் ஓக்லஹோமா நகரத்தை நோக்கி, திறந்த நெடுஞ்சாலையில் பிராக் குறுநகரைக் கடந்து, சில மைல்கள் சென்றேன். திடீரென, ஒரு கார் எனக்கு எதிராக, மிக அதிக வேகத்தில், பிராக் திசையை நோக்கி அல்லது என்னை நோக்கி வருவதைக் கண்டேன். எனக்குத் தெரியாத ஏதோ காரணத்திற்காக, அது எனது காருக்கு முன்னால் சாலையின் வலது பக்கத்திலிருந்து திடீரெனத் திசைமாறிச் சென்றது. நான் முழு பலத்துடன் எனது பிரேக்கை மிதித்து, அந்தக் காருக்கு முடிந்தவரை இடம் கொடுத்தேன், மேலும் எனது காரைப் பள்ளத்தில் செல்லாமல் என்னால் முடிந்தவரை சாலையின் வலது புறம் வைத்திருந்தேன்.

எனது கார் திசை திரும்பிய காரின் வலது பின்பக்கத்தில் மிக மோசமாக மோதியது. அந்தக் கார் செயற்கைக்கால் பொருத்தப்பட்ட முன்னாள் ஜி.ஐ.க்கு சொந்தமானது என்று தெரியவந்ததால், அது கட்டுப்பாட்டை மீறியது என்று மட்டுமே என்னால் நினைக்க முடிகிறது.

ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்த பல்மியரி கொரியப் போர் நிபுணர் என்பது உண்மைதான். அவரது இடது கால் துண்டிக்கப்பட்டதால், கையால் பயன்படுத்தும் பிரேக் மற்றும் வேகத்தை அதிகரிக்கும் கருவியுடன் கூடிய ஒரு சிறப்புக் காரை ஓட்டிக்கொண்டிருந்தார். மேலும், அவர் காரைப் பயன்படுத்திய முதல் நாள் இது. அவருடன் ஓக்லஹோமா நகரத்தைச் சேர்ந்த அவரது மனைவி பில்லி மற்றும் தாயார் திருமதி ஜேன் ஹேன்சன் இருவரும் இருந்தனர்.

(ஓக்லஹோமாவில் தனது தாயார் மற்றும் பாட்டியுடன் கோடை விடுமுறையைக் கழித்த, முந்தைய திருமணத்தின் மூலம் பிறந்த பில்லியின் மகனை அழைத்து வருவதற்காக அவர்கள் ஆர்கன்ஸாஸுக்குச் சென்று கொண்டிருந்தனர்.)

செக்கோஸ்லோவாக்கியா நாட்டிலிருந்து குடிபெயர்ந்த '**ஸ்டான்லி ஜே. மௌக்கா**' என்பவருக்குச் சொந்தமான சிறிய பண்ணைக்கு எதிரில் இந்த விபத்து நடந்தது. தபால்காரர், தபால் பெட்டியில் அஞ்சலைப் போட்டுக்கொண்டிருந்த வேளையில், (இந்தத் தபால் வாகனத்தைதான் பல்மியரி நெடுஞ்சாலையில் நிறுத்தப்பட்டிருந்த சரக்கு வாகனம் எனக் குறிப்பிட்டிருந்தார்) விபத்து நடந்த சத்தத்தைக் கேட்டு மௌக்கா விரைந்து வெளியே வந்தார். மௌக்கா, தனது இல்லத்திலிருந்து போர்வைகளை எடுத்து வந்து மெஹரா, பாபா இருவர் மீதும் போர்த்தினார். பல்மியரியின் காரில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை. திருமதி. ஹேன்சன் காரிலிருந்து விரைந்து வந்து மெஹராவின் அருகில் சென்று கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தார்.

எலிஸபெத்தின் கார் சாலையை விட்டு மௌக்காவின் தனியார் பாதையில் சென்றது. 'இது ஒரு பயங்கரமான காட்சி,' மௌக்கா நினைவு கூர்ந்தார். திருமதி ஹேன்சன் மேலும் கூறினார், "எங்கும் இரத்தம் சிந்தியிருந்தது. அது மிகவும் பயங்கரமானது."

இதற்கிடையில், ஒரு நபர் தனது கர்ப்பிணி மனைவியை, பரிசோதனைக்காக, பிராக் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஊரில் ஒரே ஆம்புலன்ஸ் இருந்ததால், அதையும், ஒரு சவப்பெட்டி ஊர்தியையும் திருப்பி அனுப்பிவைத்தார்.

ஸரோஷின் கார் இன்னும் கண்ணில் தென்படவில்லை. வெயிலின் காரணமாக ஸரோஷ் வழியில் நின்று குளிர்பானம் அருந்திக் கொண்டிருந்தார். அவருடைய தாமதம் வாழ்நாள் முழுவதும் வருத்தப்பட வேண்டிய ஒரு சம்பவமாக அமைந்தது. 15 அல்லது 20 நிமிடங்களுக்குப் பிறகு, பாபா பயணம் செய்த கார் விபத்துக்குள்ளான அந்தக் காட்சியைக் கண்டு அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். ரானோ, கோஹெர், டிலியா, கிட்டி ஆகியோர் காரிலிருந்து குதித்து, விரைந்து பாபாவை நோக்கி ஓடினர். கோஹெர் திகைத்துப்போய் மெஹராவிற்கும் பாபாவிற்கும் இடையே பதட்டத்தில் முன்னும் பின்னுமாக செல்ல ஆரம்பித்தார். பாபா, ரானோவிடம் கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டிருந்ததை, கை சைகைகள் மூலம் சுட்டிக்காட்டினார். டிலியா தனது சிறிய தலையணையை அவிழ்த்து பாபாவின் தலைக்கு அடியில் இதமாக வைத்தார்.

"அந்தத் தருணத்தின் வேதனை மறக்க முடியாதது," என்று டிலியா பின்பு கூறினார். "பாபாவின் தலையிலிருந்து ரத்தம் வழிந்தோடிய முகம் - அவரது

கண்கள் தொலைதூரத்தை உற்று நோக்குவது போலத் தெரிந்தன. அவரிடம் எந்த சத்தமும் இல்லை; பெருமூச்சும் விடவில்லை, அப்படியே அசையாமல் தரையில் கிடந்தார். ஸ்டீயரிங் வீலுக்குப் பின்னால் தூக்கி எறியப்பட்ட எலிஸபெத்தின் முதல் கேள்வி, 'அவர் உயிருடன் இருக்கிறாரா?'"

**பாபா இரத்தத்தில் நனைந்தபடி மென்மையான மண்ணின் மீது படுத்திருந்தார். அமெரிக்காவின் மண் அவரது இரத்தத்தை விரும்புவதாகவும், தனது எல்லையற்ற கருணையில், அவர் அதை அங்கே சிந்துவதாகவும் ஏற்கனவே அறிவித்திருந்தார்.**

மிட்வெஸ்டர்ன் சாலையில் இரத்தம் சிந்திக்கொண்டிருந்த இக்கால கிறிஸ்துவைப் பார்த்தபோது 'காலம்', ஒரு கூர்மையான கத்தியால் அதன் இதயத்தைத் துளைத்தது போல் உணர்ந்தது. "ஓ அமெரிக்கா! நீங்கள் அவருடைய இரத்தத்திற்காகத் தாகமாக இருந்தீர்கள், இப்போது உங்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ளுங்கள்! ஆனால், எதிர்கால சந்ததியினருக்கு நினைவூட்டுங்கள், அவருடைய இரத்தத்துடன் அவர் கொண்டுவந்த தெய்வீக பொக்கிஷத்தையும் இங்கு விட்டுச் சென்றார்" என்று காலம் கதறியது.

காலம் தனது அன்பிற்குரியவரின் பதிலில் இந்த மௌனமான செய்தியைக் கேட்டது: "நான் சிந்திய இரத்தம், அதை என்றும் நினைவில் வைத்திருப்பவர்களுக்காகவும், அன்பிற்குரியவருக்காக அன்பை அனுபவிப்பவர்களுக்காகவும் மட்டுமே. எனது துன்பம் அவர்களின் வலியாக இருக்கும், அது அவர்களை எப்போதும் என்னுடன் வைத்திருக்கும். இரத்தம் என்பது உலகின் மீதான எனது அன்பின் அடையாளம். அமெரிக்கா என்னுடையது, அதற்காகத் துன்பப்படுவதன் மூலம், நான் அதற்கு அன்பை வழங்குகிறேன், அதனால் அது எனக்கு என்றென்றும் தலைவணங்கும்."

ஆம்புலன்ஸ் மற்றும் சவப்பெட்டி ஊர்தி வந்தபோது, பாபா, எலிஸபெத் ஆகியோர் டாக்டர் கோஹெர், ரானோ இருவருடன் ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு விரைந்தனர்; அதே நேரத்தில் மணி, மெஹரு, மெஹரா மூவரும் சவப்பெட்டி ஊர்தியில் பின்தொடர்ந்தனர். அஹமதுநகரின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸரோஷின் அந்தஸ்து இப்போது கைகொடுத்து உதவியது. அமெரிக்காவில், ஒரு மேயர் மரியாதைக்குரிய அரசாங்க அதிகாரி, எனவே இந்த 'அரசாங்க பிரமுகருக்கு' உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு காவல்துறையும் முழுமையாக ஒத்துழைத்தது.

பிராக் நகரில் அமைந்த சிறிய தனியார் மருத்துவமனை மிகவும் நன்றாக இருந்தது, டாக்டர் **நெட் பர்ல்ஸன்** மற்றும் அவரது மனைவி ஜூலியா ஆகியோரால் நடத்தப்பட்டது. எலிஸபெத் முதலில் உள்ளே அழைத்து

வரப்பட்டாலும், மெஹரா மிகவும் மோசமாகக் காயமடைந்திருப்பதைக் கண்டு, மருத்துவர் அவருக்கு விரைவாக சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். டாக்டர் பர்ல்ஸன் இந்த விபத்துக் குறித்து குறிப்பிட்டிருந்ததாவது:

விபத்துக்குள்ளானவர்களை ஆம்புலன்ஸ் காலை 11:00 மணியளவில் மருத்துவமனைக்குக் கொண்டு வந்ததும், ஒரே குழப்பமாக இருந்தது. காயங்களிலிருந்து உடைந்த கண்ணாடி, மண் மற்றும் புல் துண்டுகளை அகற்றி, தைக்கத் தொடங்குவதற்கு முன்பு பல மணிநேரம் பிடித்தது. அது மிகவும் இரத்தம் தோய்ந்ததாக இருந்தது. மெஹரா உயிர் வாழ்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் இதுவரை பார்த்திராத மிக மோசமாக உடைந்த மண்டை ஓடு, முட்டை ஓடு தரையில் விழுந்தது போலக் காயப்பட்டிருந்தது.

நான் உடனடியாக அவரைக் கவனிக்கச் சென்றேன், அவருடைய உயிரைக் காப்பாற்ற முயற்சித்தேன். சிறிது நேரத்தில், பாபாவின் குழுவைச் சேர்ந்தவர்கள் என்னிடம் பாபாவைப் பார்க்கக் கூறி அறைக்குள் வரத் தொடங்கினர்.

நான் அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருக்க முயற்சித்து, மெஹராவின் சிகிச்சையில் கவனம் செலுத்தினேன், ஆனால் அவர்கள் மிகவும் வற்புறுத்தினர். 'பாபா இது, பாபா அது' என்றனர். டாக்டர் கோஹெர், பாபாவை உடனடியாக வந்து பார்க்கும்படி வற்புறுத்தத் தொடங்கினார். நிச்சயமாக, எனக்கு பாபா யார் என்று தெரியாது, நான் செய்து கொண்டிருந்த பணியில் கவனம் செலுத்தியதால் அவர் கூறியது எனது செவிகளில் விழவில்லை. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றும் எனக்குப் புரியவில்லை, ஆனால் இறுதியில் அங்கே என்ன கூச்சல் குழப்பம் என்பதைப் பார்க்க முடிவு செய்து, பாபா இருந்த பக்கத்து அறைக்குள் நுழைந்தேன்.

ஆனால் நான் வாசலில் வந்ததும், பாபா என்னைப் பார்த்து சிரித்தார், அதனால் அவர் மிகவும் மோசமாகக் காயப்பட்டிருக்க முடியாது என்று நான் நினைத்தேன் - ஆனால் அவரது காயத்தின் கடுமையை நான் பின்னரே அறிந்தேன்.

இறுதியாக நான் பாபாவைப் பார்க்கச் சென்றபோது, ஒரு நபர், இந்த அளவுக்கு மோசமாகக் காயமடைந்த நிலையிலும் சிரித்துக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அவர், அசௌகரியத்தைக் குறிக்கும் வகையில் ஒரு வார்த்தையும் பேசாமல், எந்த சத்தமும் எழுப்பாமல் இருந்ததைக் கண்டு நானும் வியந்தேன். அவரால் பேச முடியாது என்று நான் கருதினேன், ஆனால் அவர் தன்னிச்சையாக செய்த செயலால் அவர் பேசவில்லை என்று டாக்டர் கோஹெர் ஈரானியால் தெரிவிக்கப்பட்டது.

அவரது எலும்பு முறிவுகளை சீரமைக்க அவருக்கு பொது மயக்க மருந்து (பென்டோதல்) கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும், அந்த நேரத்தில்

அவர் ஏதாவது பேசலாம் என்ற எதிர்பார்ப்பு, ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

அந்த முதல் நாள், அவரது ஆளுமையின் மிகவும் அற்புதமான குணம் என்னவென்றால், அவர் அந்தப் பெரிய பழுப்பு நிற கண்களால் எனது மனதை ஆராய்வது போல் என்னைப் பார்க்கும் விதம். பல சிறந்த கற்றறிந்தவர்களிடமிருந்து அவர் அத்தகைய ஆழ்ந்த பக்தியையும் நம்பிக்கையையும் பெறுவதை சாத்தியமாக்கியதுதான் மிகவும் பிரமிக்க வைக்கும் குணம் என்று நான் தீர்மானித்தேன். அந்தத் தரமான குணத்தைக் கட்டாயப்படுத்த முடியாது. அத்தகைய பக்திக்கு அவர் தகுதிவாய்ந்தவராக இருந்தால் அல்லது அதை சுயமாக சம்பாதித்ததால் மட்டுமே சாத்தியமாகும்.

பாபாவின் கீழ் இடது காலின் இரண்டு எலும்புகள், தோளில் இடது கை மற்றும் மூக்கின் இடைப்பகுதி ஆகியவை உடைந்தன. விபத்தின் போது அவரது மேல் ஈறுகளில் காயம் ஏற்பட்டு, அவர் செயற்கையாக அணிந்திருந்த கீழ்ப் பற்களிலிருந்து ரத்தம் வழிந்தது. பாக்டர் டான், எரச் இருவரும் மேற்கத்திய பயணத்திற்கு முன்னர் அவற்றை சரி செய்யுமாறு அவரை வற்புறுத்தினார்கள், ஆனால் விபத்துக்குப் பின்னர் அவர் அவற்றை மீண்டும் அணியவில்லை.

பாபா, முழு விழிப்புணர்வோடு இருந்து, அறிவுரைகளை வழங்கினார். **உதாரணமாக, மருத்துவரும், ஆண் மருத்துவ ஊழியர்களும் சிகிச்சைக்காக மெஹராவைத் தொடுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்**. பாபா, டாக்டர் பர்ல்ஸனின் அலுவலகத்தில் தங்க வைக்கப்பட்டார்; கோஹெர் அவர் அருகில் உதவியாக இருந்தார். தனி அறையில் இருந்த மெஹரா, எலிஸபெத் இருவரையும் கிட்டியும் ரானோவும் கவனித்துக் கொண்டனர். மெஹரு காத்திருப்பு அறையில் தனியாக சிகிச்சை அளிக்கப்பட்டார்.

ஸரோஷ் கீழ்வரும் தொலைத்தந்தியை மே 24 அன்று இந்திய அன்பர்களுக்கு அனுப்பினார்: "பாபாவும் பெண்மணிகளும், எலிஸபெத் ஓட்டிச்சென்ற காரில், சாலை விபத்தில் காயமடைந்தனர். இப்போது ஓக்லஹோமா, பிராக் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விவரங்கள் பின்தொடர்கின்றன." அடுத்த நாள் மீண்டும் ஒரு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது: "பாபாவும் பெண்மணிகளும் நன்றாக முன்னேறி வருகின்றனர். அனைவருக்கும் எலும்பு முறிவுகள் காரணமாக, கட்டுகள் போடப்பட்டுள்ளன. ஏறக்குறைய இரண்டு வாரங்கள் இங்கு இருக்க வேண்டும்."

ஹமிர்பூரில் இருந்த எரச், பெண்டு இருவருக்கும் செய்தி கிடைத்தது. அவர்கள் உடனடியாக மெஹராபாத் திரும்பி வந்தபோது, அங்கு பாபாவிடமிருந்து மற்றுமொரு தொலைத்தந்தி அவர்களுக்காகக் காத்திருந்தது;

**அவர்கள் தங்கள் பயணத்தைக் கைவிட வேண்டாம், ஆனால் திட்டமிட்டபடி அதைத் தொடருமாறு அறிவுறுத்தப்பட்டனர்.**

பாபா முதலில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பாபாவுடன் மேற்கத்திய பயணத்தில் செல்லாததற்காக எரச் வருந்தினார். அவர் உடனிருந்திருந்தால், ஒருவேளை பாபாவின் துன்பத்தைத் தடுத்திருக்கலாம் அல்லது தணித்திருக்கலாம் என்று நினைத்தார். எரச், பாபாவிடம் புது வாழ்வு நிறைவடைந்த நாளிலிருந்து, மேற்கத்திய நாடுகளுக்குப் பயணம் செய்ய முடியாத அளவுக்கு சோர்வாக இருப்பதாகக் கூறியிருந்தார், ஆனால், இப்போது ஆந்திரா மற்றும் ஹமிர்பூர் சுற்றுப்பயணம் அமெரிக்காவுக்குச் செல்வதை விட மிகவும் கடினமான பயணமாக இருந்ததை அவர் கண்டுகொண்டார்.

டாக்டர் டான், மெஹர்ஜி, குஸ்தாஜி, டாக்டர் நீலு, ஆதி ஆகியோர் கலிஃபோர்னியா ‘மெஹர் மவுண்ட்’ மையத்தை மே 25ஆம் தேதி மாலை சென்றடைந்தனர். மால்கம் ஸ்க்லோஸ் முகவரிக்கு அனுப்பிய தொலைத்தந்தி மூலம் செய்தி வந்ததும், (அவ்வளவு குறுகிய நேரத்தில் விமானப் பயணச் சீட்டைப் பெறுவது கடினம் என்றாலும்) டாக்டர் டான் மறுநாள் காலை ஓக்லஹோமாவுக்கு விமானத்தில் செல்ல முடிவு செய்தார். இதர நான்கு மண்டலி அன்றிரவே புறப்பட்டு நேராக பிராக் நகரை மே 28 மாலை வந்தடைந்தனர்.

ஐவி, சார்மியன், மார்கரெட் ஆகியோரும் உடனடியாக மே 25ஆம் தேதி வந்தனர். பின்வருபவை ஐவியின் தனிப்பட்ட குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி:

டிலியாவுடன் மருத்துவமனை வாசலில் மால்கம் ஸ்க்லோஸ் எங்களை சந்தித்தார். அவர்கள் கவலையுடன், களைப்புற்று, உருகுலைந்து காணப்பட்டனர். ஸரோஷ் கண்ணீர் விட்டு அழுதார்: "நான் என்னையே கொன்றுவிட வேண்டும் - என்னால் இந்தியாவில் எவரையும் மீண்டும் எதிர்கொள்ள முடியாது, ஏனென்றால் அங்குள்ள ஆயிரக்கணக்கான அன்பர்கள் நான் பாபாவைச் சிறப்பாக கவனித்திருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்!"

நான் அவரது அழுகையைத் தொடர அனுமதித்து, விபத்துக்குள்ளான காரில் அவர் இல்லாததால், அவர் அந்தப் பொறுப்பை ஏற்க முடியாது என்பதை சுட்டிக்காட்ட முயற்சித்தேன். விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவரையும் பார்க்கச் சென்றோம், பயங்கரமான அதிர்ச்சி. பாபாவின் இடது கை தோள்பட்டைக்குக் கீழேயும், இடது கீழ் காலில் இரண்டு எலும்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் உடைந்திருந்தன. கீழே விழுந்ததில் அவரது முகம் மற்றும் மூக்கு காயத்தால் வீங்கி இருந்தது.

மெஹராவின் மண்டை ஓடு உடைந்தது, மூடிய கண்கள் பெரிய செங்கிழங்குகளைப் போலத் தெரிந்தன, அவர் நெற்றியில் அச்சுறுத்தும் காயம் ஒன்று ஏற்பட்டது. எலிஸபெத்தின் இரு கைகளிலும் சில விலா எலும்புகள் உடைந்தன, ஏனெனில் அவர் ஸ்டீயரிங் வீலுக்குப் பின்னால் தள்ளப்பட்டார்.

மெஹருவின் மணிக்கட்டில் ஒரு முறிவு, சுளுக்கு, பல்வேறு வெட்டுக் காயங்களும் இருந்தன. மணியின் உடலில் மிகக் குறைவான காயங்களே இருந்தாலும், அவரது முழங்கால்கள் மோசமாக கீறப்பட்டது, மேலும் நடக்கும் வேளையில் கோலூன்ற வேண்டியிருந்தது. அவர் பல நாட்களாக உண்ணாமல், துக்கத்தில் ஆழ்ந்து, பிற அனைவரையும் போல, கடவுள் தனக்குத் தரவில்லை என்று வேதனைப்பட்டார் (சமீபத்தில் கடுமையான அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்).

பாபா எனது கையைப் பற்றிக்கொண்டு, பின்னர் அவரது எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்: "**இது கடவுளின் விருப்பம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும், மேலும் இது முழு உலகத்திற்கும் நன்மை விளைவிக்கும்**."

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும் வேளையில், திரு. டியூஸ், சாலை வரைபடத்தில், முதல் கார் இந்த வழியிலும், பாபாவின் கார் ‘கிராண்ட் கேன்யன்’ சாலை வழியாகச் செல்லவும் வேறு வேறு திட்டங்களை வகுத்ததற்கும், விபத்து நடந்ததில் பாபாவும், மெஹராவும் காரின் வலது புறத்திலிருந்து தூக்கி எறியப்பட்டாலும், அவர் இடது புறம் விழுந்ததற்கும், அமெரிக்க தேசத்தின் நடுப்பகுதியில் அது நடந்ததற்கும் ஒரு காரணம் இருப்பதை என்னால் காண முடிந்தது.

‘பாபா அப்படித்தான் திட்டமிட்டிருக்க வேண்டும்’ என்று மக்கள் கூறுவதை நான் கேள்விப்பட்டேன், ஆனால் மெஹராவையும், பிற அனைவரையும் காயப்படுத்த குருநாதர் திட்டமிடுவார் என்று என்னால் உணர முடியவில்லை. மனித குலத்தின் பொருட்டு, அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு இணையான சோதனையை சந்திக்கச் சென்றதாக நான் நினைக்கிறேன்.

… அப்பாவி பாபா, டாக்டரின் அலுவலகத்தின் பக்கத்து அறையில் அனுமதிக்கப்பட்டிருந்தார், மேலும் அவர் வலியில் இருந்ததோடு மட்டுமல்லாமல், கீழே விழுந்ததால் ஏற்பட்ட சிறிய இரத்தக் கட்டிகளுடன் அவரது தலை வீங்கியதால் மூச்சு விடவும் முடியவில்லை. ஒவ்வொரு முறை நாங்கள் உள்ளே நுழையும் போதும், அவர் எங்களது உணர்வுகளைத் தணிக்கும் விதத்தில், முகத்தில் ஒரு கைக்குட்டையை வீசி எறிந்து, கண்களை மட்டும் காட்டினார். தலையில் அலைபோல் தவழ்ந்த முடியுடன் அவர்கள் உண்மையில் கிறிஸ்துவின் கண்களைப் பார்த்தார்கள். ரானோ, ஸரோஷ், கோஹெர் மூவரில்

ஒருவர் தலைமாட்டில் அமர்ந்து அவர்களின் முதுகைத் தலையணையாகப் பயன்படுத்தி வந்தனர்.

டிலியாவும் நானும் தொலைத்தந்திகளை அனுப்பினோம், மணியைக் கவனிக்க முயற்சித்தோம், நோயாளிகளுக்கு உணவளிக்க உதவினோம், ஆனால் எலிஸபெத், மெஹரா இருவரும் இருந்த அறையிலிருந்து கிட்டி, நீராடச் செல்வதைத் தவிர வேறு எதற்காகவும் அறையை விட்டு நகரவில்லை. அவர் இரவும் பகலும் தனது கடமையில் கண்ணாக இருந்து, நள்ளிரவில் படுக்கைகளுக்கு இடையில் சிறிது நேரம் தரையில் சாய்ந்து ஓய்வெடுத்தார். டிலியாவும் நானும் உணவளிப்பதில் உதவி செய்தோம், கா஀பி மற்றும் ஸாண்ட்விச்களுக்காக விரைந்தோம். தனது மற்றும் மெஹராவின் உடைகளை சலவை செய்யும்படி பாபா, சார்மியனிடம் கேட்டுக் கொண்டார். எல்லா துணிமணிகளும் இரத்தக் கறையால் நிரம்பியிருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு, ஐவி, சார்மியன் இருவருக்கும் பாபா வேறு அறிவுரைகளை வழங்கினார். மிகுந்த சிரமத்துடன் (ஒரு கை முற்றிலும் பயனற்றதாக இருந்தபோதும்), அவர் எழுத்துபலகையில் எடுத்துரைத்தார்:

**"இப்போது உங்கள் இருவருக்கும், எனக்காகச் செய்யவேண்டிய இந்த முக்கியமான பணி உள்ளது: நீங்கள் இருவரும் உடனடியாக ஸான் ஃபிரான்சிஸ்கோவிற்குச் செல்லுங்கள், உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரையும் நேரடியாகப் பார்த்து, இந்த விபத்து முற்றிலும் கடவுள் மற்றும் பாபாவின் விருப்பப்படியே நடந்தது என்பதை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள்... இது கடவுளின் (பாபாவின்) விருப்பப்படி விதிக்கப்பட்டது, கடவுள் விரும்பியபடி நடந்ததன் விளைவு உலகிற்கு நற்பயனை அளிக்கும். எனவே உங்கள் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இதை விளக்குங்கள்."**

இதை மால்கம், ஆக்னஸ் பரோன், மில்ட்ரெட் கைல், ஜான் பாஸ் ஆகியோருக்குத் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கவும், அதற்குப் பிறகு, ஜூலை 10ஆம் தேதி மர்டில் பீச் மையத்திற்குத் திரும்புமாறும் ஐவி, சார்மியன் இருவரும் அறிவுறுத்தப்பட்டனர். மேலும் மேற்கு கடற்கரையில் வாழும் அன்பர்களுக்குத் தெரிவிக்கையில்: **"பாபா நிச்சயமாக 1953 ஜூலை மாதத்தில் வருவார். இந்த காலத்திற்காகக் காத்திருப்பது நல்ல பலனைத் தரும்"** என்றும் எடுத்துரைத்தார்.

எப்பொழுதும் போல, பாபா, மெஹராவைப் பொறுத்தவரை மிகவும் கவனத்துடன் இருந்தார்; டாக்டர் கோஹெரிடம் சிறப்பு கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். மெஹர்ஜி காலை 7:00 மணி முதல் இரவு 7:00 மணி வரை, டாக்டர் நீலு மாலை 7:00 மணி முதல் காலை 7:00 மணி வரை பாபாவுடன் இருந்தனர்; ரானோவும் இரவில் பாபாவுடன் இருந்தார். வெளியே சோ஀பாவில் ஓய்வெடுத்த ஆதியை பாபா அவ்வப்போது அழைத்தார். பிற அனைவரும்

மணியுடன் உள்ளூர் நெடுஞ்சாலை விடுதியில் தங்கினர். மெஹரா எலிஸபெத் இருவரையும் கிட்டி கவனித்துக் கொண்டிருந்தார், மார்கரெட் நோயாளிகளுக்கு தினசரி மஸாஜ் செய்து வந்தார்.

மருத்துவமனை சிறியதாக இருந்தாலும், டாக்டர் பர்ல்ஸன் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார். அவர் ஓக்லஹோமா நகரத்திலிருந்து சில அயலூர் நிபுணர்களை வரவழைத்து மெஹராவை பரிசோதித்து, எக்ஸ்-ரேக்களைப் பார்வையிடச் செய்தார். பாபா அவ்வப்போது டாக்டர் நீலுவை டாக்டர் பர்ல்ஸனிடம் அனுப்பி, ஏதேனும் சிறு புகார்களை முன்வைத்து, அவரை வரவழைப்பதை வழக்கமாகக் கொண்டார். அவருடன் இனிமையாகப் பேசினார், புன்னகைத்தார். கடுமையான காயங்கள் இருந்தபோதிலும் பாபா மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு டாக்டர் பர்ல்ஸன் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், மேலும் முழு மனதுடன் பாபாவை கவனித்துக் கொண்டார்.

பாபாவின் காலில் பிளாஸ்டர் போடப்பட்டிருந்தது, அவரது கை கவணிலும், முகத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. பாபா, காலிலிருந்த கட்டைப் பற்றி பலமுறை புகார் கூறினார், ஆனால் மருத்துவர் அதை அகற்றத் தயாராக இருந்தபோது, பாபா அதைத் தொடருமாறு வலியுறுத்தினார்.

பாபா, மர்டில் பீச் மையத்திற்குத் திரும்புவதற்கு முன்பு, பிராக் மருத்துவமனையில் பன்னிரண்டு நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார். டாக்டர் டான், ரானோ இருவரும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய உடனடியாக விமானத்தில் சென்றனர். ஆதி, குஸ்தாஜி, மணி, மெஹரு, டிலியா ஆகியோர் 1952, ஜூன் 4 புதன்கிழமை அன்று அதிகாலையில் காரில் புறப்பட்டனர்; அதே நாளில் பாபாவும் பிற மண்டலியும் சென்றனர்.

பிராக் நகரிலிருந்து 1500 மைல்கள் தொலைவில் அமைந்த மர்டில் பீச் மையத்திற்கு பாபா ஆம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டார். தூக்குப்படுக்கையில் இருந்த மெஹரா, பாபாவுடன் ஆம்புலன்ஸில் பயணம் செய்தார்.

கோஹெர், மெஹர்ஜி இருவரும் அவர்களுடன் இருந்தனர். கிட்டி, டாக்டர் நீலு மற்றும் மருத்துவமனையைச் சேர்ந்த செவிலியர் சார்லின் கிமெரி ஆகியோருடன் எலிஸபெத் வேறு ஆம்புலன்ஸில் அழைத்துச் செல்லப்பட்டார். ஸரோஷும், மார்கரெட்டும் மற்றுமொரு காரில் அவர்களைப் பின்தொடர்ந்தனர். பாபாவின் கால் பிளாஸ்டரிலும், அவரது கை ஒரு கவணிலும், பாபா, சோர்வடையச் செய்யும் இந்த நீண்ட நெடிய தூரத்தை கிட்டத்தட்ட இடைவிடாது கடந்தார். 8ஆம் தேதி அவர்கள் மர்டில் பீச் வந்தடைந்து, அங்கு பாபா, மையத்திலிருந்து எட்டு மைல் தெற்கே அமைந்த '**யூபான் டூன்ஸ்**' என்ற

எலிஸபெத்தின் இல்லத்தில் தங்கினார். ஜூன் 6ஆம் தேதி மாலையில் ஆதியும் அவரது குழுவினரும் வந்து சேர்ந்தனர்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, டாக்டர் பர்ல்ஸன், பாபாவால் மிகவும் ஈர்க்கப்பட்டார், மேலும் 1952, ஜூன் 3ஆம் நாள் பாபாவுக்கு எழுதிய கடிதத்தில் அவரது சில எண்ணங்களைப் பதிவு செய்திருந்தார்:

...உங்களிடமிருந்தும் உங்கள் குழுவிடமிருந்தும் கிறிஸ்துவின் பெரும்பாலான போதனைகளின் நடைமுறை சான்றுகளை நாங்கள் கண்டோம். பல அமெரிக்கர்கள் இந்த விஷயங்களை அறிவுரைகளாக வழங்குகின்றனர், ஆனால் அவற்றை இவ்வளவு நெருக்கமாக நடைமுறையில் பயன்படுத்துவதை நாங்கள் ஒருபோதும் கவனித்ததில்லை. உங்கள் குழுவினர் அனைவரும் உங்கள் மீது காட்டும் ஆழ்ந்த பக்தி, நீங்கள் அனைத்திற்கும் தகுதியானவர் என்பதை எங்களுக்கு உணர்த்துகிறது. அத்தகைய பக்தியைக் கட்டாயப்படுத்த முடியாது, அன்பினால் மட்டுமே அடைய முடியும்; பல அற்புதமான மனிதர்கள் அந்தப் பாசத்தை வெளிப்படுத்துவது கிட்டத்தட்ட நம்பமுடியாதது. உங்களைப் போல், எங்களின் முயற்சிகளைப் பாராட்டும் நபர்களுடன் எங்களுக்குப் பழகி பழக்கமில்லை, அந்தப் பாராட்டு எங்களை மிகவும் பணிவுடன் இருக்கத் தூண்டுகிறது, ஏனென்றால் நாங்கள் எங்கள் வரம்புகளையும் தவறுகளையும் உணர்ந்ததால் அதற்கு நாங்கள் தகுதியற்றவர்கள் என்று கருதுகிறோம். எனவே, முயற்சிகள், பணி என்று வகைப்படுத்தப்படுவதற்கு பதிலாக, அவை மகிழ்ச்சியாகத் தோன்றின.

பிராக் நகரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா, டாக்டர் பர்ல்ஸனுக்கு ஒரு வெள்ளி சிகரெட் பெட்டியை வழங்கினார் (அதை ஸரோஷ் ஓக்லஹோமா நகரில் வாங்கினார்). ஸரோஷ், டாக்டர் பர்ல்ஸனுக்கு சிறுத்தையின் தோலையும் அனுப்பி வைத்தார், சில வருடங்களுக்குப் பிறகு பாபா, டாக்டருக்கு 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை அனுப்பினார். டாக்டர் பர்ல்ஸனின் மனைவி ஜூலியா ஒவ்வொரு வருடமும் மணிக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை அனுப்பி கடிதங்களும் எழுதினார்.

பாபா அவர்களின் இதயங்களை வென்றார். அவர் இரவு நேரங்களில் டாக்டர் பர்ல்ஸனுக்குத் 'தொல்லை' தருவது வழக்கம், உதாரணமாக, டாக்டர் நீலு மூலமாக, அவர் மிகவும் வேதனைப்படுவதாகச் செய்திகளை அனுப்புவதும், தூக்கத்திலிருந்து டாக்டர் எழும்பி வருவதும், வந்த பின்னர் இப்போது வலி மிகவும் குறைந்துவிட்டது என்று பாபா கூறுவதும் இரவில் பல முறை நடந்து வந்தது, ஆனால் பாபா, எந்த அளவுக்குக் 'குறும்புகள்' செய்தாரோ, அந்த அளவுக்கு அதிகமாக டாக்டர் பர்ல்ஸன் அவரிடம் ஈர்க்கப்பட்டார். சில சமயங்களில், மருத்துவர் வெளியேறிய பின்னர், அவர் நன்றாக உணர்கிறார் என்று பாபாவால்

உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டே நிமிடங்களில் டாக்டர் நீலு வலி திரும்பி வந்ததாகக் கூறி அவரை அழைக்க அனுப்பி வைத்தார். இவ்வாறு டாக்டர் மீண்டும் வருவதும், அப்போது, நிச்சயமாக, பாபா அவரிடம் அவர் நன்றாக இருப்பதாகக் கூறுவதும் தவறாமல் என்றும் நிகழ்ந்தது!

'பாபாவின் வழிகளும் முறைகளும் நம் புரிதலுக்கு அப்பாற்பட்டவை' என்று காலம் கருத்துரைத்தது. 'அவரது எல்லையற்ற அறிவிலிருந்து அவர் அனைவருக்காகவும் பணிபுரிந்தார் மற்றும் ஒவ்வொருவரின் தேவைகளுக்கு ஏற்ப வழிமுறைகளைப் பயன்படுத்தினார். இறை-மனிதனுக்கும் அவரது நெருங்கிய வட்டத்து சீடர்களுக்கும் சிகிச்சை அளிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் பர்ல்ஸன் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி.'

மர்டில் பீச்சில் உடல்நலத்தை மீட்டெடுக்கும் வேளையில், பாபா, யூபான் டூன்ஸில் குளிரூட்டப்பட்ட அறையில் தங்கியிருந்தார். பெண்மணிகள் அவருடன் அந்த வீட்டிலும், ஆண் மண்டலி மர்டில் பீச் மையத்திலும் தங்கினர். டாக்டர் நீலு பாபாவை இரவிலும், பிற மண்டலி பகலிலும் கவனித்துக் கொண்டனர். மெஹர்ஜியின் உதவியுடன் ஆதி அவருக்கு வழக்கமான ஸ்பாஞ்ச் குளியல் வழங்கினார். மெஹர்ஜி புத்திசாலித்தனமாக எதையாவது கூறி எப்படியாவது பாபாவை உணவு உண்ண வைத்தார். கிட்டி பாபாவுக்கு வேண்டிய உணவைத் தயார் செய்தார், எலிஸபெத்தின் சமையல்கார பெண்மணி பெஸ்ஸி, ருவானோவின் உதவியுடன் பெண்களுக்குத் தேவையான உணவைத் தயார் செய்ய, ஆண்கள் வெளியே உணவு உண்டனர்.

மெஹராபாத்தில், கிட்டி நாஜாவுக்கு சமையலறையில் உதவுவது வழக்கம், அதனால் அவருக்கு சில பார்சி உணவு வகைகள் தெரியும். ஒருமுறை, பெஸ்ஸிக்கு அறிவுறுத்தும் போது, மதிய உணவிற்காக வறுத்த இறால்களைத் (PRAWNS) தயார் செய்யக் கூறினார். ஆனால் அவர்கள் உண்ண அமர்ந்தபோது, அவர்களால் உணவை மென்று சாப்பிட முடியவில்லை. கிட்டி, பெஸ்ஸியிடம் அவர் என்ன செய்தார் என்று கேட்க, பெஸ்ஸி பதிலளித்தார், "ஆமாம், நீங்கள் உலர்ந்த கொடிமுந்திரிகளைத் (PRUNES) தயார் செய்ய சொன்னீர்கள், மிஸ் டேவி!" பாபா, அந்த நகைச்சுவையை மிகவும் ரசித்தார்.

மர்டில் பீச் மையத்தில் தங்கியிருந்த டிலியா, மார்கரெட் இருவரும் பெரும் உதவியாக இருந்தனர். பாபா விபத்தின் பின்விளைவுகளால் அவதிப்பட்டாலும், அவரைப் பார்க்க வந்த பார்வையாளர்கள் அவரது மகிழ்ச்சியான, புன்னகையுடன் கூடிய முகத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். துன்பத்திலும் பாபா அவர்களின் முறையீடுகளுக்கு செவிமடுத்து அவர்களின் இடர்பாடுகளைத் தீர்த்து வைத்தார்.

1952, ஜூன் 13 வெள்ளிக்கிழமை அன்று உலகம் முழுவதும் உள்ள தனது அன்பர்களுக்கு, பாபா பின்வரும் செய்தியை வழங்கினார்:

**சில ஆண்டுகளாக நான் கூறிவந்த எனது தனிப்பட்ட பேரிடர், இறுதியாக அமெரிக்கா கண்டத்தை கடக்கும் போது நடந்தது - முகத்தில் காயங்கள், உடைந்த கை, கால்கள், மனம் மற்றும் உடல் ரீதியான பல துன்பங்களை ஏற்படுத்தியது. இது அமெரிக்காவில் நடக்க வேண்டியது அவசியம். கடவுள் இதைத்தான் விரும்பினார்.**

**ஜூலை 10 வரை, 'சிக்கலான சுதந்திர வாழ்வில்', பலவீனம் வலிமையையும், பிணைப்புகள் சுதந்திரத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் என்று கூறிய சுற்றறிக்கையின் முதல் பகுதியை இது செயல்படுத்துகிறது; ஆனால் ஜூலை 10 முதல், எனது 'முழு சுதந்திர வாழ்வில்', வலிமை பலவீனத்தையும், சுதந்திரம் பிணைப்புகள் மீதும் ஆதிக்கம் செலுத்தும்; அதைத் தொடர்ந்து நவம்பர் 15 முதல், எனது 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில்', வலிமை மற்றும் பலவீனம், சுதந்திரம் மற்றும் பிணைப்புகள் இவை இரண்டும் தெய்வீக அன்பின் நெருப்பில் எரிக்கப்படும்.**

சிகிச்சைக்காக நியூயார்க் செல்வது பற்றி பாபா விவாதித்துக் கொண்டிருந்தார், ஆனால் அதற்குப் பதிலாக, 13ஆம் தேதி டாக்டர் டான், 'பால்டிமோர்' நகரில் உள்ள மருத்துவமனையில் பாபாவுக்கு சிகிச்சை அளிப்பது குறித்த விபரங்களை அறிந்துவர அனுப்பப்பட்டார்.

பாபாவின் கால் பிளாஸ்டரில் இருந்ததால், இந்த யோசனையும் இறுதியில் கைவிடப்பட்டது. ஜூன் 16ஆம் தேதி, டாக்டர் டான், வடக்குக் கரோலினா, 'டர்ஹாம்' நகரில் அமைந்த டியூக் மருத்துவமனைக்குச் சென்று சோதனை செய்யப் பரிந்துரைத்தார், அதற்கு பாபா ஒப்புக்கொண்டார்.

1952, ஜூன் 17 செவ்வாய் அன்று, பாபா '**மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்**' குறித்த இந்த சுற்றறிக்கையை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**மெஹர் பாபா இஸ்லாம் மற்றும் அதன் ஸூஃபி தத்துவம், கிறிஸ்தவம் மற்றும் அதன் இறை தத்துவம், கிழக்கத்திய இந்து அறநெறியும் அதன் வேதாந்தமும், பல்வேறு தத்துவங்களை உள்ளடக்கிய பௌத்தம், நடைமுறை ஸொராஸ்ட்ரியனிஸம், ஜெயினிஸம் மற்றும் இதுபோன்ற பல 'இஸம்கள்' அனைத்துடனும் சமமாக இணைக்கப்பட்டுள்ளார், இவை அனைத்தும் ஒரே தெய்வீக உண்மையை எடுத்துரைக்கின்றன, ஒரே தெய்வீக இலக்கை நோக்கி வழிநடத்திச் செல்கின்றன. மெஹர் பாபா இவற்றிலிருந்து தனித்து நின்று, அனைத்து தெய்வீக பாதைகளுக்கும் மேலாக நிற்கிறார். இந்தப் பாதைகளைப் பின்பற்றும் அனைவரையும், மேற்கூறிய அனைத்து**

**'இஸம்'களை மறுசீரமைப்பதன் மூலம், அவர்களின் உண்மையான உணர்வில் 'இஸம்'களின் உண்மையான அர்த்தத்திற்கு விழித்தெழச் செய்ய வேண்டும், மேலும் அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் விதத்தில், அவர் உலகளவிலான சாசனத்தில் ஸூ:ஃபியிஸத்தை மறுசீரமைத்துள்ளார்.**

1952, ஜூலை 5 தேதியில் வரையப்பட்ட கடிதத்தில் ஆதி சீனியர், ஐவிக்கு சில விஷயங்களைத் தெளிவுபடுத்தினார்:

**(பாபா), நீங்கள் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் அனைத்தையும் அவரிடம் விட்டுவிட வேண்டும் என்று விரும்புகிறார். இதற்கிடையில் நீங்கள் இதை கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்: "ஸூ:ஃபியிஸம் மறுசீரமைக்கப்பட்ட அமெரிக்க மையத்திற்கும், மர்டில் பீச் மெஹர் மையத்திற்கும் நேரடித் தொடர்பு எதுவும் இல்லை."**

**'மர்டில் பீச் மெஹர் மையம்' என்பது ஸூ:ஃபி, சைவ, பௌத்த, கிறிஸ்தவ அல்லது ஸொராஸ்ட்ரிய பிரிவுகளின் மையமும் அல்ல. இது உலகளாவிய தன்மையை அடிப்படையாகக் கொண்ட 'பாபா' மையம். இந்த 'பாபா' மையத்தில் பக்தி, சேவை, துறவு, ஞானம் ஆகிய நான்கு வெவ்வேறு மையங்கள் இருக்கும்.**

ஜூன் 13 அன்று உள்ளூர் செய்தித்தாளில் மர்டில் பீச் மையத்திற்கு பாபாவின் வருகை குறித்த விவரம் வெளிவந்தது, மேலும் அது இந்தியாவில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டும் என்று பாபா விரும்பினார். பாபா கூறியபடி, ஜூன் 20ஆம் தேதி டெல்லியில் வாழ்ந்த வாஸ் தேவ் கெய்னுக்கு மெஹர்ஜி கடிதம் எழுதியுள்ளார்.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்', 'நேஷனல் ஸ்டாண்டர்ட்' மற்றும் வடமொழி இந்தி பத்திரிகைகளில் இந்தச் செய்தியும் (ஜூன் 13ஆம் தேதி) அவரது மர்டில் பீச் பயணம் பற்றிய செய்தியின் மதிப்புரையும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட வேண்டும் என்று பாபா விரும்புகிறார். சுருக்கமாகச் சொன்னால், இவை, முடிந்தவரை பல செய்தித்தாள்களில் வெளிவர வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.

பாபாவும் மண்டலியும் படிப்படியாகக் குணமடைந்து வருகின்றனர், அவர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக, பாபா இன்னும் படுக்கையில் இருக்கிறார். இன்று, நாங்கள் பாபாவை இங்கிருந்து 215 மைல் தொலைவில் அமைந்த 'டர்ஹாம்' நகரின் புகழ்பெற்ற டியூக் பல்கலைகழக மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அழைத்துச் செல்கிறோம், மேலும் காலில் பொருத்தப்பட்ட பிளாஸ்டர் தளர்வாக இருப்பதால் அதையும் மாற்ற வேண்டும். ஜூன் 25 அன்று மர்டில் பீச்சிற்குத் திரும்புவோம் என்று நம்புகிறோம்.

அடுத்த நாள், 1952, ஜூன் 20 வெள்ளிக்கிழமை, பாபா ஆம்புலன்ஸில் டியூக் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு, பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். பாபாவுடன் மெஹராவும் பரிசோதிக்கப்பட வேண்டி இருந்ததால், டாக்டர் கோஹெர், டாக்டர் டான், மெஹர்ஜி ஆகியோரும் ஆம்புலன்ஸில் உடன் சென்றனர். ஸரோஷ், டாக்டர் நீலு, மெஹரு, மணி ஆகியோர் வேறொரு காரில் பின்தொடர்ந்தனர்.

டியூக் மருத்துவமனையில், பாபாவின் காலில் பிளாஸ்டர் மாற்றப்பட்டது, ஆனால் புதிய பிளாஸ்டர் பயங்கரமான அரிப்பை ஏற்படுத்தியதால், டாக்டரிடம் அதை அகற்றச் சொல்லி பாபா, டானிடம் புகார் செய்தார். எனவே வேறொரு பிளாஸ்டர் பொருத்தப்பட்டது. மருத்துவர், லெனாக்ஸ் டி. பேக்கர், மருத்துவமனையில் பாபாவுடன் இரவைக் கழிக்க யாரையும் அனுமதிப்பது மருத்துவமனை கொள்கைக்கு எதிரானது என்றார். ஆனால் ஸரோஷின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர் விதிவிலக்கு அளித்தார். பிற அனைவரும் அருகிலமைந்த டச்சு விடுதியில் தங்கினர்.

மெஹரா, பாபா இருவரையும் முழுமையாகப் பரிசோதனை செய்து, எக்ஸ்ரே எடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் ஜூன் 24ஆம் தேதி யூபான் டூன்ஸுக்குத் திரும்பினர். மறுபடியும், ஜூலை 8ஆம் நாள், கான்வே மருத்துவமனையில் பாபாவின் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது, இது அவரது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு குணமாகியதைக் காட்டியது. ஆயினும்கூட, பாபா, மெஹரா இருவருக்கும், நியூயார்க் நகரில் நிபுணர்களுடன் கலந்து ஆலோசனை செய்யுமாறு ஐவி அறிவுறுத்தப்பட்டார். டாக்டர் டான் ஜூலை மாத தொடக்கத்தில் லண்டன் நகரில் புகழ்பெற்ற எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரைக் கலந்தாலோசிக்கவும், அவருடைய உறவினர்களை சந்திக்கவும் சென்றார்.

இதற்கிடையில், 1952, ஜூலை 2 அன்று, பாபா மர்டில் பீச் மையத்திற்கு இறுதி விஜயம் செய்தார். பாபா, மெஹரா, மணி மூவரையும் திருமதி ஹூஸ்டன் காரில் அழைத்துச் சென்றார். டாக்டர் கோஹெர், மெஹரு, ஸரோஷ், மெஹர்ஜி, ஆதி சீனியர், குஸ்தாஜி ஆகியோர் வேறொரு காரில் பின்தொடர்ந்தனர். அவர்கள் விருந்தினர் மாளிகையில் அனைவரையும் சந்தித்தனர்; பாபாவுக்கு அவரது அன்பர்களால் வழங்கப்பட்ட அனைத்து பரிசுகளும் மூட்டையாக கட்டி யூபான் டூன்ஸுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தத் தருணத்தில் பாபாவால் முன்மொழியப்பட்ட ஸூஃபி சாசனத்தை ஆதி சீனியர் வாசித்தார். சாசனத்தில் இணைப்பதற்காக ஐவிக்கு அனுப்ப வேண்டிய நகலில் சில திருத்தங்களையும் கருத்துக்களையும் பாபா எடுத்துரைத்தார். பாபாவால் அழைக்கப்பட்ட சார்மியன் ஜூலை 8ஆம் நாள் மர்டில் பீச்சிற்கு வந்து யூபான் டூன்ஸில் தங்கினார்.

மால்கம் ஸ்க்லோஸும் மர்டில் பீச்சிற்கு அழைக்கப்பட்டார். ஜூலை 11 அன்று நடந்த நேர்காணலில் பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அவர் சேகரித்த கவிதைகளின் தொகுப்பை பாபாவிடம் காட்டியபோது, பாபா, அவரைப் பாராட்டி, கவிதைகளை ஹ∴பீஸின் கவிதைகளுடன் ஒப்பிட்டு, அவற்றை வெளியிடும்படி கேட்டுக் கொண்டார், அதை அவர் 'உண்மைப்பொருளை அடைவதற்கான வழிகள்' (WAYS TO ATTAIN THE SUPREME REALITY) என்ற தலைப்பில் வெளியிட்டார்.

மெஹர் பாபாவின் 'சிக்கலான சுதந்திர வாழ்வு' 1952, ஜூலை 10 வியாழன் அன்று முடிவுக்கு வந்தது; பாபா மௌனம் தொடங்கி 27 ஆண்டுகள் நிறைவடைந்த நாள்; அன்று பாபாவே பின்வரும் வரிகளை இயற்றினார்:

**காயமும் உருகுலைந்த நிலையும், ஆனால்**
**வீழ்ந்தும் வெற்றியை நிலைநாட்டினார்,**
**பாபா ஜூலை 10 அன்று அனைவரையும் வாழ்த்துகிறார்.**
**சுதந்திரம் பிணைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது,**
**பலவீனம் வலிமையால் முழுமையாக வெல்லப்படுகிறது.**

காலம் குறிப்பிட்டது போல், "அமெரிக்காவில் பாபாவின் வாழ்க்கையை, பிணைப்புகள் முறியடித்ததால், 'சிக்கலான சுதந்திர வாழ்வு' (COMPLICATED FREE LIFE) அமெரிக்காவில் முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிணைப்புகள் அமெரிக்க தேசத்தைச் சார்ந்தவை, அவை அவதார புருஷரைத் தாக்கி காயப்படுத்தியது, மேலும் 'மெஹர் பிரபு' காயங்களை அவர்தம் தோளில் தாங்கிக்கொண்டு, பிணைப்புகளை வேரோடு பிடுங்கி எறிந்தார். இந்தப் பிணைப்புகள்தான் பாபாவின் சுதந்திர வாழ்வை 'சிக்கலாக்கியது.' அமெரிக்கா, கடவுளின் காலடியில் தலை வணங்கும் போது, உலகம் அதன் பலனை அறியும். அதை நிறைவு செய்யும் நோக்கத்தில், பாபா வேண்டுமென்றே இத்தனை கஷ்டங்களையும், இந்தப் பிணைப்புகளின் தாக்குதலையும் தம் மீது தாங்கிக்கொண்டார், ஏனென்றால் அவர் அமெரிக்காவிற்கான சிறப்புப் பணியை நிறைவேற்ற வேண்டியது விதி. இந்தப் பணி அங்கு விரிவாக, செவ்வனே செய்யப்பட்டது; அதன் கதிர்கள் அடிவானத்தில் உதிக்கும் சூரியனிலிருந்து வரும் மகிழ்ச்சிபொங்கும் கதிர்களைப் போல் அமெரிக்க தேசத்தின் மீது பிரகாசிக்கும்!"

1952, **ஜூலை** 14 திங்கட்கிழமை அன்று, பாபா, ஆண், பெண் மண்டலியுடன், தெற்கு கரோலினாவின் **∴புளாரன்ஸ்** நகருக்கு மர்டில் பீச்சிலிருந்து காரில் புறப்பட்டு, ரயிலில் நியூயார்க் சென்றார். எலிஸபெத், அவரது செவிலியர் ஸாடி மார்ட்டின், ருவானோ, சார்மியன் ஆகியோரும் உடன் சென்றனர். டிலியா, மார்கரெட் இருவரும் ஜூன் 26 அன்று நியூயார்க்கிற்குப் புறப்பட்டுச் சென்றனர். அங்கிருந்து டிலியா லண்டனுக்குச் சென்று, சார்லஸ் பர்டம், வில், மேரி பேக்கெட் ஆகியோரின் உதவியோடு உரிய ஏற்பாடுகளைச்

செய்து, பாபாவையும் மண்டலியையும் வரவேற்க ஆயத்தமாயினர். ஓக்லஹோமாவில் விபத்து நடந்த சாலையோரம் பாபாவின் தலைக்கு இதமாக வைத்த தலையணை அவரது இரத்தத்தால் நனைந்தது. அமெரிக்க தேசமும் அதன் மக்களும் மெஹர் பாபாவின் மீது வைத்த அன்பு மற்றும் தியாகத்தின் நினைவாக டிலியா அதை மர்டில் பீச் மையத்திற்கு வழங்கினார்.

# ஸ்கார்ஸ்டேல் & நியூயார்க்

**(Scarsdale & New York)**

1952, **ஜூலை** 15 காலை 8:50 மணிக்கு **நியூயார்க்** ரயில் நிலையத்தில் பாபாவை வரவேற்க ஐவி டியூஸ் காத்திருந்தார். நியூயார்க், ஸ்கார்ஸ்டேல், 14 கோஹாவ்னி சாலையில் அமைந்த **கேட் ஃபெரிஸ்** என்பவரின் இல்லத்தில், பாபாவும் மண்டலியும் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஜீன் அட்ரியலுக்கு அறிமுகமான கேட் ஃபெரிஸை, ஃபிலிஸ் சந்தித்து அவரிடம், "ஸ்கார்ஸ்டேலில் அமைந்த உங்கள் இல்லத்தை மெஹர் பாபாவும் குழுவும் இரண்டு வாரங்களுக்குப் பயன்படுத்த அனுமதிப்பீர்களா?" என்று தைரியமாகக் கேட்டபோது, அவர், "நிச்சயமாக" என்று பதிலளித்தார்.

திருமதி ஃபெரிஸ், ஃபிலிஸ் இருவரும் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். விபத்துக்குப் பிறகு ஃபிலிஸ், பாபாவைப் பார்ப்பது இதுவே முதல் முறை. பேச வார்த்தையின்றி ஃபிலிஸ், பாபாவின் கையைப் பற்றிக்கொண்ட வேளையில், அவர், **"மனம் தளராதீர்கள்"** என்று சைகையால் தெரிவித்தார். ஆதியும் மெஹர்ஜியும் அவரது இரு சக்கர நாற்காலியை அவிழ்த்தபோது, மீண்டும் ஃபிலிஸ் தொண்டையில் ஒரு கட்டியை உணர்ந்தார். பாபா அவருடைய துக்கத்தைத் தணிக்கும் விதத்தில், மர்டில் பீச் மையத்தில் அவர் கூறியது போல: **"சிலுவையில் அறையப்பட்டாலும் கடவுள் எப்போதும் எதையும் எளிதாக எடுத்துக்கொள்பவர்"** என்றார்.

பாபாவும் பெண் மண்டலியும் வீட்டுத் தோட்டத்தில் சுதந்திரமாக நடமாட முடிந்தது, ஏனெனில் திருமதி. ஃபெரிஸின் அண்டை வீட்டார் மூவரும் எதிர்பாராமல் விடுமுறையில் சென்றதால், அவர்களுக்கு முழு உரிமை உறுதி செய்யப்பட்டது.

விபத்தைப் பற்றி பாபா ஃபிலிஸுக்கு விவரித்து எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், **"அமெரிக்கா நீண்ட காலமாக எனது இரத்தத்தின் பின்னால் இருந்து வந்தது."** தாம் விரும்பியபடியே அனைத்தும் நடந்தன என்பது போல பாபா பெருமிதத்துடன் புன்னகைத்து இதைத் திரும்பத் திரும்பக் கூறினார்.

பாபா வந்ததும், ஃப்ரெட் & எல்லா விண்டர்ஃபெல்ட் அவரைப் பார்க்கக் காரில் சென்றனர். மண்டலி (ஆதி சீனியர், டாக்டர் நீலு மற்றும் குஸ்தாஜி) அருகிலமைந்த 'ஒயிட் பிளெயின்ஸ்' விடுதியில் தங்கினர்; அவர்கள் ஸ்கார்ஸ்டேலுக்கு முன்னும் பின்னும் பயணிக்க விண்டர்ஃபெல்ட் அவருடைய காரை மண்டலியுடன் விட்டுச் சென்றார். மெஹர்ஜியும் ஸரோஷும் நியூயார்க் நகரில் சில தனியார் வணிகம் மற்றும் குடும்பம் தொடர்பான பணிகளில் கலந்து கொண்டனர்.

நியூயார்க் நகரில் டாக்டரை சந்திப்பது குறித்த விரிவான வழிமுறைகள் தொடர்பாக ஜூன் மாத இறுதியில் மர்டில் பீச்சில் இருந்த டாக்டர் கோஹெர், நியூயார்க் நகரில் ஐவி இருவருக்கும் இடையே கடிதப் பரிமாற்றம் தொடங்கியது:

(1952, **ஜூன்** 30)... நீங்கள், பாபா, மெஹரா இருவருக்கும் பல்வேறு மருத்துவ நிபுணர்களுடன் சந்திப்புகளைத் தீர்மானிக்கும் போது, செலவுகள் குறித்த கேள்வியைக் கருத்தில் கொள்ளாமல், பாபாவிற்கும், மெஹராவுக்கும் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த மற்றும் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிய விரும்புகின்றார். பாபா, மெஹரா இருவரையும் தனிப்பட்ட முறையில் பார்க்கப்படுவதையும் நீங்கள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும், அவர்கள் இதர நோயாளிகளுடன் வரிசையில் காத்திருந்து, நீண்ட வழக்கமான பரிசோதனை, பதிவு போன்றவற்றைச் செய்ய வேண்டிய தேவையைத் தவிர்க்க வேண்டும், இந்தக் காத்திருப்பு நேரங்கள் அனைத்தும் அவரை சோர்வடையச் செய்வதால் பாபா அதை விரும்பவில்லை. எனவே அறுவை சிகிச்சை நிபுணர்கள் பாபாவையும் மெஹராவையும் அவர்களின் மருத்துவமனைகளிலோ அல்லது தனியார் அலுவலகங்களிலோ அவர்களுக்குப் பொருத்தமான விதத்தில், முறையான சிகிச்சை, ஆலோசனைகள் போன்றவற்றை வழங்கும் வகையில் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.

பாபாவிற்கு மேலும் எக்ஸ்-ரே எடுக்க வேண்டும், மீண்டும் பிளாஸ்டரில் கட்டு போட வேண்டும். மெஹராவின் எக்ஸ்-ரே புகைப்படங்கள் என்னிடம் உள்ளன, ஆனால் ஒரு சிறந்த கண் அறுவை சிகிச்சை நிபுணர், அவரது கண்களை பரிசோதித்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மெஹராவால் இன்னும் அவரது வலது கண்ணை முழுமையாக திறக்க முடியவில்லை, ஏனெனில் அதில் இன்னும் வீக்கமும் வலியும் உள்ளது.

(1952, **ஜூலை** 4)... பாபாவின் மூக்கு வீங்கியிருப்பதாலும், மேல்வாய் வலிப்பதாலும் 'காது-மூக்கு-தொண்டை' நிபுணரை ஜூலை 21ஆம் தேதி பார்க்க விரும்புகிறார். காது-மூக்கு-தொண்டை நிபுணர் வீட்டிற்கு வந்து பரிசோதனை செய்வதாக இருந்தால், ஒரே வருகையில் மருத்துவர் பாபாவையும் மெஹராவையும் பரிசோதிக்க வேண்டும் அல்லது அவர்கள் மருத்துவரின் அலுவலகத்திற்குச் செல்வார்கள் என்று பாபா தெரிவித்தார். மருத்துவரை அலுவலகத்தில் சந்திப்பதாக இருந்தால், பாபாவுக்கு ஜூலை 21ஆம் தேதியும், மெஹராவுக்கு ஜூலை 16 அல்லது 17ஆம் தேதியும் உரிய நேரத்தை முடிவு செய்யலாம். எல்லா விபரங்களும் தெளிவாக இருக்கும் என்று நம்புகிறேன்.

எனவே ஐவி பின்வரும் ஏற்பாடுகளைச் செய்தார்:

மெஹராவிற்கு: ஜூலை 16, காலை 11:00 மணி: டாக்டர். மெக்வாய்க் (காது-மூக்கு-தொண்டை நிபுணர்) 660, மேடிசன் அவென்யூவில் அமைந்த அவரது

அலுவலகம்; பிற்பகல் 2:30 மணி: நரம்பியல் கல்வி வளாகத்தில் டாக்டர். ஜே. லாரன்ஸ் பூல் (நரம்பியல் நிபுணருடன்).

ஜூலை 17, காலை 11:00 மணி. டாக்டர். மேனார்ட் வீலர் (கண் மருத்துவர்) 30, மேற்கு 59வது; மதியம் 1:00 மணி. டாக்டர். எமர்சன் கோனர் (பல் மருத்துவர்).

பாபாவிற்கு: ஜூலை 21, மதியம் 12:00 மணி. டாக்டர். மெக்வாய்க்; பிற்பகல் 4:00 மணி. டாக்டர். ஃப்ரெடெரிக் ஸ்மித் (எலும்பியல் நிபுணர்), ஹார்க்னஸ் பெவிலியன் (168வது வீதி, செயின்ட் பிரஸ்பைடிரியன் மருத்துவமனை).

1952, ஜூலை 16 புதன்கிழமை, ஐவி, சார்மியன் இருவரும் ஸ்கார்ஸ்டேலுக்கு சென்று, மெஹரா, கோஹெர் இருவரையும் சார்மியன், மருத்துவரிடம் அழைத்துச் செல்லவும், ஐவி, பாபாவுடன் ஒரு மணி நேரம் உரையாடலில் கலந்துகொள்ளவும் திட்டமிடப்பட்டது. டாக்டர் கனியின் மறைவுக்கு முன்பு, பாபா வழங்கிய குறிப்புகளின் அடிப்படையில், கனி பணிபுரிந்து கொண்டிருந்த புத்தகத்தைப் பற்றியும், அதை வெளியிட பாபா விரும்பியதாகவும் ஐவியிடம் தெரிவித்தார். டாக்டர் கனியின் தட்டச்சு செய்யப்பட்ட கையெழுத்துப் பிரதி இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது.

பாபா, ஐவியிடம், **"நான் கனியிடம் கொடுத்த அனைத்து குறிப்புகளையும் அவர் என்ன செய்தார் என்று எனக்குப் புரியவில்லை. இப்போது நான் இந்தக் கையெழுத்துப் பிரதியை என்னுடன் எடுத்துச் செல்கிறேன், மேலும், நான் இந்த முழுப் புத்தகத்தையும் மீண்டும் எழுதியாக வேண்டும்"** என்று கூறினார் (இது இறுதியில் **'கடவுள் பேசுகிறார்'** - 'GOD SPEAKS' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டது.)

பாபா, தீவிரமாக ஐவியை உற்றுநோக்கி, **"நீங்கள் சோர்வாக இருக்கிறீர்கள்; உங்களுக்கு ஓய்வு தேவை. நான் எல்லையில்லா சோர்வுடன் இருக்கிறேன் - நித்திய காலத்திலிருந்து நான் இந்த அளவுக்கு சோர்வாக இருந்ததில்லை - மேலும் உலக சூழ்நிலைகளால் சலிப்பாக உள்ளேன். நான் எனது நித்திய பேரின்ப நிலைக்குத் திரும்ப விரும்புகிறேன். ஆனால் நான் எனது பணியைச் செய்தாக வேண்டும், நீங்கள் உங்கள் பணியைத் தொடர வேண்டும்; நான் ஐரோப்பாவுக்குச் சென்ற பிறகு, நீங்கள் எங்கேனும் சென்று ஓய்வெடுக்க வேண்டும், இதனால் நீங்கள் குளிர்காலத்தில் அனைத்தையும் எதிர்கொள்ளத் தேவையான பலத்துடன் இருக்க முடியும்.**

**"நவம்பர்** 15 **முதல், எனது 'அனல் பறக்கும் வாழ்வு' தொடங்கும் வேளையில், உலகம் தலைகீழாக மாறும்** (பாபா தலைகீழாக, சைகையால் தெரிவித்தார்) - **எங்கும் குழப்பம் நிலவும்."**

மேலும் கூறியதாவது: **"பேரிடர் எல்லா கோணங்களிலிருந்தும்**

**தாக்கும், அதில் ஒரு சிலரே தப்பிக்க வாய்ப்புள்ளது. உலகம் விரைவில் கடவுளுக்காகக் கதறி அழும்.**"

அதைத் தொடர்ந்து, பாபாவும் பெண் மண்டலியும் நியூயார்க் நகரத்தில் ஐவியின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதற்கிடையில், பாபா, நியூயார்க் நகரில் இருந்தபோது பதினாறு முதல் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட ஓர் இளைஞன் இரவு பாதுகாவலராகப் பணிபுரிவதை விரும்பினார் - அந்த இளைஞன், பாபாவின் அன்பர் ஒருவரின் குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்கக் கூடாது, ஆனால் அவரை, சக்கர நாற்காலியில் அமர்த்தி சுற்றி வரும் அளவுக்கு வலிமையானவராக இருக்க வேண்டும்; திறமையான, புத்திசாலி இளைஞன். அனைவரும் அவரவருக்குத் தெரிந்தவர்களை அழைத்து வந்தனர். ஃபிலிஸ் இரண்டு ஹார்லெம் சிறுவர்களை அழைத்து வந்தார், ஒருவர் பெட்டோ என்று அழைக்கப்பட்ட கரீபியன் தீவிலிருந்து வந்த புவேர்ட்டோ ரிக்கன், வேறொருவர் ஐரிஷ் கத்தோலிக்கர். பீட்டோ, ஃபிலிஸ் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த வேளையில், ஒரு நாள் பாபாவின் சித்திரத்தைப் பார்த்து, "அதுதான் கடவுள், இல்லையா?" என வினவினான்.

அவர்கள் இருவரும் பாபாவைச் சந்திக்க அழைத்துச் செல்லப்பட்டபோது, பாபா, கத்தோலிக்க சிறுவனின் மார்பில் சிலுவையை விரலால் வரைந்தார். "இது ஆசீர்வதிக்கப்பட்ட சின்னம்" என்று சிறுவன் முணுமுணுத்தான். பாபா ஆமாம் எனத் தலையசைத்தார். இரு சிறுவர்களையும் பாபா மிகவும் இளமையாகவும் பலவீனமாகவும் கண்டதால் அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தார்.

ஜூலை 17 அன்று, ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் ஒரு சிறுவனை இரவுக் கண்காணிப்புக்குத் தகுதியானவராக நிரூபிப்பார் என்ற நம்பிக்கையில் அனுப்பி வைத்தார், ஆனால், பாபா அவரை அதே நாளில் திருப்பி அனுப்பினார். பாபாவின் அருகாமையில் அமர்ந்து கண்காணிப்பது மிக முக்கியமான கடமையாக இருந்தது, ஆனால் பாபாவின் சைகைகளைப் புரிந்துகொள்ளவோ அல்லது அவரது எழுத்துப்பலகையை வாசிக்கவோ முடியாமல், சிறுவர்களால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. தவிர, இரவு முழுவதும் விழித்திருப்பது பாபாவின் ஒவ்வொரு விருப்பத்திற்கும் நடனமாடும் மண்டலியால் மட்டுமே முடியும்.

இறுதியாக, ஃபிலிஸ், கோல்கேட் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு பயிலும் நியூயார்க்கின் பிங்காம்டன் பகுதியைச் சேர்ந்த பதினெட்டு வயதான **கீத் மேக் கஃபே** என்ற சிறுவனை அழைத்தார். “கை, கால் முறிந்த நிலையில் மிகவும் நோய்வாய்ப்பட்ட ஒருவரைக் கவனித்துக் கொள்ள உதவுங்கள்” என்று கெஞ்சிக் கூத்தாடி, 17ஆம் தேதி டார்வின் ஷாவுடன் அனுப்பி வைத்தார். அந்த இளைஞனுக்கு குறைந்த கட்டணமே வழங்க வேண்டும். கீத் அந்தப் பணிக்குப் பொருத்தமானவராக மாறினார்; பாபாவின்

எழுத்துப்பலகையைக் கூட படிக்க முடிந்தது. ஒருமுறை, ஐவியின் இல்லத்தில், கீத் 'இறை-உணர்தல்' என்றால் என்ன என்பதை விளக்குமாறு பாபாவிடம் கேட்டார். பாபா அவருடைய நெற்றியைத் தொட்டு, "**இது, தலைவலி போன்றது. உங்களுக்கு ஒரு தலைவலி வரும் வரை, அது என்னவென்று உங்களால் புரிந்து கொள்ள முடியாது**" என்று பதிலளித்தார்.

கீத் வந்த முதல் நாள் காலை, பாபா அவரிடம், "**நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?**" என்று கேட்டதற்கு, கீத் "ஆம்" என்றார்.

"**உங்களை நான் ஏதேனும் தீய செயலில் ஈடுபடச் சொன்னாலும்?**"

"ஆம்," அவர் பதிலளித்தார். கீத் இதையெல்லாம் தனது தாயாருக்கு எழுதினார்; அவர் இங்கிலாந்து கிறிஸ்தவ திருச்சபையின் கடுமையான ஆங்கிலிகன். முழுக் குடும்பமும் வருத்தமடைந்து, தங்கள் மகன் யாருக்காகப் பணிபுரிகிறான் என்பதைக் கண்டறிய ஸ்கார்ஸ்டேலுக்குச் சென்றனர். ஆனால் அவர்கள் பாபாவை சந்தித்தபோது அனைத்து சந்தேகங்களும் மறைந்தன.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா, "**நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?**" எனக் கேட்டதற்கு...

"எனக்கு உறுதியாக எதுவும் தெரியவில்லை," என்று கீத் பதிலளித்தார்.

"**டாக்டராக விரும்புகிறீர்களா?**" என்று பாபா கேட்டார். பின்னர் அவர் ஒரு மருத்துவரானார். பாபா, கீத்தை தன்னுடன் வைத்திருந்தாலும், இரவுக் கண்காணிப்புப் பணியில் அவர் அனுமதிக்கப்படவில்லை.

மெஹர் பாபாவுடனான நேரடி சந்திப்புகள் 1952, ஜூலை 18 வெள்ளிக்கிழமை அன்று நியூயார்க் நகரத்தில் ஐவியின் இல்லத்தில் (33 மேற்கு 67வது தெரு) தொடங்கியது. டார்வினின் காரில் ஆதி சீனியர், குஸ்தாஜி, கீத் ஆகியோருடன் சார்மியன் தினமும் பாபாவை அங்கு அழைத்துச் சென்றார். மார்கரெட்டும் உடனிருந்தார். பாபாவின் காலில் இன்னும் பிளாஸ்டர் இருந்ததால், கீத் அவரை சக்கர நாற்காலியில் அழைத்து வந்தார். பாபா, முழு ஆரோக்கியத்தில் இல்லாத போதும், மக்களைப் பார்க்க ஒப்புக்கொண்டார். பலர் அவரைச் சந்திக்க வந்தனர், ஐவி, ஜான் பாஸ் இருவரும் அவர்களை பாபாவிடம் அறிமுகப்படுத்தினர்.

முதல் நாள், பாபா காலை 6:00 மணிக்கு வந்தார். அது கோடையின் நடுப்பகுதி மற்றும் குளிரூட்டப்படாத அறையில் வெப்பம் திணறடித்தது. பல இரவுகள் சரியான ஓய்வு இல்லாமல், கால் மிகுந்த அசௌகரியம் தந்ததால், பாபா மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். ஆனால் முதல் ஓரிரு நேர்காணல்களுக்குப் பின்னர் அவருடைய தோற்றத்தில் மிகையான மாற்றம் தென்பட்டது: "**இதோ பாருங்கள், உங்களின் அன்பு என்னை உயிர்ப்பித்துள்ளது**" எனக் கூறி ஒளிர்ந்தார்.

**கென்னத் ரோஸ்**, அவரது மனைவி **ஜோஸஃபின்** மற்றும் அவர்களது மூன்று மகள்கள் நியூ ஜெர்சியிலிருந்து பயணம் செய்து, காலை 7:00 மணிக்கு வந்து சேர்ந்தனர். ஐவியின் இல்லத்தில் ஒரு பெரிய படுக்கையறையில் பார்வையாளர்களுடன் இருந்த பாபாவை அவர்கள் முதலில் சந்தித்தனர். பாபாவின் கால் பிளாஸ்டரில் இருந்ததைப் பார்த்ததும் கென்னத் கதறி அழுதார். குடும்பத்தினர் பாபாவின் முன்னால் மண்டியிட்டு நின்றனர்; பாபா அவர்கள் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார். இந்த அமெரிக்க பயணத்தின் போது, பாபாவை சந்தித்தவர்களில் **மரியன் ஃப்ளோர்ஷெய்ம்** என்ற பெண்மணி பாபாவிடம் எப்பொழுதும், "பாபா, எனது 'ஆற்றலை' நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்றதால் அவருக்கு '**எனர்ஜி**' என்ற செல்லப்பெயரைச் சூட்டினார்.

பாபா பழங்கள் நிரப்பிய ஒரு கிண்ணத்தை அவர் படுக்கைக்கு அருகில் வைக்குமாறு கூறினார். அவர் வந்தவர்களுக்கு ஒரு திராட்சை அல்லது செரியைப் பிரசாதமாக வழங்கினார். ஜான் பாஸ் அவர் அருகில் அமர்ந்திருந்தார். கேள்விகள் கேட்க வேண்டாம் என்று அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டது, ஆனால் சில சந்தர்ப்பங்களில் பாபா அதை அனுமதித்தார்.

காலை 11:00 மணி வரை பாபா, மக்களை வரவேற்றார். பின்னர் அனைவரும் வெளியே சென்று மதியம் 1:00 மணிக்கு திரும்பி வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஐவி இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபாவை இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் சந்திப்பதற்காக மக்கள் - எல்லா இடங்களிலிருந்தும், எல்லா தரப்பிலிருந்தும் - வருவதைப் பார்ப்பது ஓர் அற்புதமான காட்சியாக இருந்தது. சிலர் கிட்டத்தட்ட உயிரிழந்தவர் போலத் தோன்றினர், ஆனால் அவர்கள் உருமாறி, புத்துயிர் பெற்றவர் போல வெளியேறினர். சிலர் சிரித்தனர், சிலர் மனம் உடைந்து கதறினர். அது மூன்று நாளைய அன்பின் விருந்தாக இருந்தது.

முதல் நாள் பிற்பகல், பாபா, ஐவியிடம் எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், "**உங்களுக்குத் தெரியுமா**, **ஜான்** (பாஸ்) **சிறிது நேரமாக**, '**நாம் எப்போது தேநீர் அருந்தப் போகிறோம்?**'" என்று நினைத்துக்கொண்டே இருக்கிறார்.

ஐவி, பாபாவிடம் 7-அப் பாட்டிலைக் கொடுத்ததும், அவர் தனது தலைக்கு மேல் கையை உயர்த்தி, "**நான் ஏற்கனவே ஸெவன்-அப்!**" என்று கிண்டல் செய்தார்.

பாபா மாலை 6:00 மணிக்கு ஸ்கார்ஸ்டேலுக்குத் திரும்பிச் சென்றார்.

மார்கரெட் 18ஆம் நாள் ஸ்கார்ஸ்டேலுக்கு வந்து, ஜூலை 19 அன்று ஐவி, பாபாவுடன், ஸரோஷ், மெஹர்ஜி இருவரும் காத்திருந்த இடத்திற்குக் காரில் சென்றார். **கரோலின் ஃப்ரே**யும் அப்போது பாபாவைப் பார்த்தார்.

**டொனால்ட் யூஜின் ஸ்டீவன்ஸ்**, (33 வயது) ஐவியின் முரீதுகளில் ஒருவரும், அந்த நாட்களில் அவரது முக்கிய உதவியாளருமாக இருந்தவர், அன்று மதியம் வந்தார். ரபியா மார்ட்டின் ஸான் ஃபிரான்சிஸ்கோவில் தனது குழுவினரிடம் பாபாவைப் பற்றி கூறியபோது, டான் ஸ்டீவன்ஸின் மனதில் சந்தேகங்கள் எழுந்தன; அவர் இனயத் கானிடம் தன்னை அர்ப்பணித்திருந்ததால் பாபாவை சந்தேகக் கண்களால் பார்த்தார். ஆனால், ரபியா மார்ட்டினுடனான சந்திப்பிற்குப் பின்னர் அவர் தனது முற்புனைவான எண்ணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மெஹர் பாபாவின் வழிகாட்டுதலின்கீழ் அவரைப் பின்பற்ற முடிவு செய்தார்.

மே 17 தரிசனத்திற்காக அவர் மர்டில் பீச் மையத்திற்கு வர இயலவில்லை, ஆனால் பிராக் நகரில் பாபாவை சந்திக்க முடியுமா என்று தொலைத்தந்தி மூலம் வினவியபோது, பாபா அதை அனுமதிக்கவில்லை.

ஐவி, டானை நூலகத்திற்குள் அழைத்து வந்தபோது, காயத்தால் சிரமமாக உணர்ந்தாலும், பாபா அவரைத் தழுவ எழுந்து நின்றார். ஐவி, "பாபா, இதோ என் பையன்!" என்றார்.

பாபா புன்னகைத்து பதிலளித்தார், **"நீங்கள் அவரை உங்கள் பையன் என்று சொல்கிறீர்கள், ஆனால் நான், 'அவர் என் பையன்' என்று சொல்கிறேன்!"** என வார்த்தைகளால் விளையாடி, **"டான்** (DON), **நாம் காலம் உதயமானதிலிருந்து** (DAWN) **ஒன்றாக இருக்கிறோம்"** என்று கூறினார்.

டான் நினைத்தார்: "கடவுளே, எவ்வளவு மகிழ்ச்சி பொங்கப் பேசுகிறார்! இதோ, இந்த அவதார புருஷர் சிலேடைகளுடன் உரையாடுகிறார்."

பாபா, மதியம் தேநீருக்காக இடைவெளி விடுத்து, எனிட் கோர்ஃப், மார்கரெட், ஷா குடும்பத்தினர், ஜான் பாஸ் ஆகியோரை அழைத்தார். தேநீர் பரிமாறப்பட்டபோது, பாபா **ஜனக்** மாமன்னனின் (ஒரு சத்குரு மற்றும் ஸ்ரீ ராமின் மனைவி சீதாவின் தந்தை) கதையை விவரித்தார். டார்வின் குடும்பத்தினர் ஒவ்வொரு நாளும் அங்கு வந்து அனைத்து ஏற்பாடுகளிலும் ஐவிக்கு உதவினர். ஒவ்வொருவருக்கும் தொலைபேசியில் பதிலளிப்பது, பாபாவுடன் சந்திப்பதற்காக வரும் பார்வையாளர்களை வழிநடத்துவது போன்ற குறிப்பிட்ட பணிகள் வழங்கப்பட்டன.

லீட்ரைஸ் ஷா, பாபாவின் காலடியில் அமர்ந்து பாபா, கதை சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த அவர் மனதில் இந்த எண்ணம் தோன்றியது: "நான் பாபாவை நேசிக்க வேண்டும், மாறாக நான் அவரை வணங்குகிறேன், வழிபடுகிறேன்." பாபா, திடீரென இடையே நிறுத்தி, எழுத்துப்பலகையில் **"நான் வழிபடத்தக்கவர், அபிமானமானவர்"** என்று உச்சரித்தார், இது லீட்ரைஸை ஆச்சரியத்திற்குள்ளாக்கி மனதை லேசாக்கியது.

ஜனக் மன்னரைப் பற்றிய பாபாவின் கதையின் முடிவில், டான் தனது கட்டைவிரல் மற்றும் ஆள்காட்டி விரலால் ('பரிபூரணம்' என்பதைக் குறிக்கும்) வட்டத்தை உருவாக்கி சைகையால் தெரிவித்தார் ('கிட்டத்தட்ட தன்னிச்சையாக,' என்று பின்னர் அவர் கூறினார்). உடனடியாக பாபா, இருந்த இடத்திலிருந்து அப்படியே திரும்பி, அவரைப் பார்த்து, அதே சைகையைச் செய்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, டான் மீண்டும் கையை உயர்த்தி, இந்தமுறை பாபா பதிலளிப்பாரா என்பதை உறுதி செய்ய வேண்டுமென்றே அதையே சைகையால் தெரிவித்தார். அவர் விரல்களை மூடுவதற்கு முன்னால், பாபா மறுபடியும் அதே அடையாளத்தைக் காண்பித்தார். அதைத் தொடர்ந்து, ஸரோஷ் சக்கர நாற்காலியில் பாபாவை அழைத்துச் செல்லும்போது, டான், ஸரோஷின் பின்னால் மறைந்து, மூன்றாவது முறையாகக் கையை உயர்த்தி அதே சைகையைச் செய்தார். பாபா சக்கர நாற்காலியின் கைப்பிடியில் சாய்ந்து, மிகுந்த வலியை உணர்ந்தபோதிலும், டானை நேரடியாகப் பார்த்து, சைகையை ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்தார். டான் அவருடைய வார்த்தைகளில் விவரித்தபடி:

கடவுள் என் முன்னிலையில் ஒருபோதும் பேசவில்லை, ஆனால் அவர் மனித வடிவில் செயல்படுவதை நான் பார்த்திருக்கிறேன் என்று உறுதியாக நம்புகிறேன். நியூயார்க் நகரில் ஒரு சனிக்கிழமை மதியம், நான் முதன்முதலில் மெஹர் பாபாவின் செயல்பாடுகளைப் பார்த்தபோது, அவரின் குணாதிசயமான செயல் மற்றும் எதிர்வினையின் நம்பமுடியாத உணர்திறனை நான் விளக்குவது இதுதான்: ஒருவருடைய இதயத்தை நெகிழச் செய்யும் பிரியத்துடன் கூடிய நேசம், ஒருவேளை வேறு எந்த உயிரினமும் செய்ய முடியாத ஒரு விஷயம்.

அன்றைய நிகழ்வுகள் ஆதி சீனியர் மீதும் அதீத தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அவர் தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டிருந்தார்: "இன்று நேர்காணல்களின் மிகவும் சுவாரஸ்யமான நாட்களில் ஒன்றாகும், ஆண்களும் பெண்களும் அன்பினால் கண்ணீர் சிந்துகிறார்கள்... பாபா ஒளிரும் தோற்றத்தில், மகிழ்ச்சியாகவும், மிகவும் அழகாகவும் இருந்தார்."

1952, ஜூலை 20 ஞாயிற்றுக்கிழமை அன்று, டான், ஐவி, சார்மியன் ஆகியோரை பாபா, ஸ்கார்ஸ்டேலில் காலை 9:00 முதல் 11:00 வரை சந்தித்தார். பாபா அவர்களுக்கு ஸுஃபியிஸம் மற்றும் அதன் சாசனத்தின் மறுசீரமைப்பைப் பற்றி விளக்கி, மேலும் கூறினார்: "**நவம்பர் 15 மற்றும் அதற்குப் பின்னர் எனது 'அனல் பறக்கும் வாழ்வாக' இருக்கும். முன்னெப்போதும் இல்லாத ஒரு பெரிய குழப்பம் நிலவும். நான் என் உடலைத் துறக்காவிட்டால், 1953, ஜூலை 9அம் நாள் மீண்டும் அமெரிக்காவிற்கு வருவேன். உடலைத் துறந்து விட்டால், நான் 700 வருடங்களில் திரும்பி வருவேன்.**

**"டிசம்பர் மாதத்திற்குள் எனது புத்தகம் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **வெளியிடுவதற்கு சுமார் 500 தட்டச்சுப் பக்கங்களையும் 1,000 டாலரையும் பெறுவீர்கள். அதை எப்படி வெளியிடுவது என்பதை ஐவி, டான் இருவரின் விருப்பத்திற்கு விட்டுவிடுகிறேன்.**

**"நவம்பர் 15ஆம் தேதிக்கு முன்பு, நான் எனது கையொப்பத்துடன் மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தின் முழு சாசனத்தையும் அனுப்பி வைப்பேன். இது, பிற அனைத்து பிரிவினருக்கும் பொருந்தும் விதத்தில் உலகம் முழுவதும் சமமாக இருக்கும்."**

டான் தனிப்பட்ட முறையில் கேட்ட கேள்விக்கு, பாபா பதிலளித்தார். ஒரு கட்டத்தில் பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார், **"உணர்வுகளால் முழுமையாக ஆதரிக்கப்படும் ஒருவருடைய 'பகுத்துணரும் திறமையும், அறிவாற்றலும்' தொடர்பான அறிவு, 'மூளைத் திறன்' சார்ந்த நம்பிக்கை ஆகும்."** டானும், ஐவியும் ஸ்கார்ஸ்டேல் நகரத்திற்குத் திரும்பி வந்த போது, டான் கலிஃபோர்னியா புறப்பட்டுச் சென்றார்.

டான் ஸ்டீவன்ஸ் பாபாவுடன் நேருக்கு நேர் சந்தித்தது, மெஹர் பாபாவை தனது ஆன்மீக குருநாதராக ஏற்றுக்கொண்ட ரபியா மார்ட்டினின் உதாரணத்தை ஏற்றுக்கொள்வதன் ஞானத்தை உறுதிப்படுத்தியது, கலிஃபோர்னியாவிற்கு வீடு திரும்பியதும் அவர் எழுதிய பின்வரும் கடிதத்தில் இவ்வாறு விவரித்திருந்தார்:

அன்புள்ள பாபா, மனித மனம், நிகழ்காலத்தில் உள்வாங்கிக்கொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை எப்போதும் எதிர்கொள்ளும் போது, அது தேவையற்ற, அற்பமான விவரங்களில் சிந்தனையைச் செலுத்தி உள்வாங்குவதன் மூலம் தப்பித்துக் கொள்கிறது.

'எனது டான், எனது பையன்' என்ற உங்களின் முதல் அல்லது முதல் வார்த்தைகளில் ஒன்றாக எனக்கு நினைவிருக்கிறது. அதற்குப் பிறகு, கடவுள் உங்கள் தந்தை, எனவே அவர் எனது தாத்தாவாக இருக்க வேண்டும் என்று என் மனம் முட்டாள்தனமான, அதே நேரத்தில், மகிழ்ச்சியான தர்க்கத்தில் செல்கிறது. அதை நினைத்துப் பார்க்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது, ஏனென்றால் அவர் திருமணத்தால் மூன்று முறை நிராகரிக்கப்பட்ட ஒரு தூரத்து உறவில் மாமாவாகக் கூட இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை!

பாபா, நீங்கள் ஒரு கதையைச் சொல்வதை நான் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தபோது, உங்கள் நடவடிக்கைகளையும், எளிதில் புரிந்துகொள்ள முடியாத தத்துவங்களையும் நீங்கள் கையாளுவதை மெல்லிய எதிர்பார்ப்புடனும், மகிழ்ச்சியுடனும் கேட்டேன். இதயத்தில் ஆழமாகப் புதைந்திருந்த விஷயங்கள் அனைத்தும் என் மனதையும் கவனத்தையும் ஆக்கிரமித்தபோது, எனது ஆத்மாவின் வேகங்களிலும் அமைதியிலும் நீங்கள்

நழுவி, அழுதுகொண்டிருக்கும் குழந்தையின் கையைப் பிடித்து, இடைஞ்சலாக இருந்த சிறுவனுடன் பந்து விளையாடினீர்கள்; அவனோ, தன் மீது தானே விழுந்து ஒவ்வொன்றையும் கணக்கிட்டு பார்க்கும் வேளையில், கணிதவியலாளர் தொடர்ந்து வேறு விதத்தில் கூட்டிக் கழித்துக் கொண்டிருந்தார்.....

நன்றி, பாபா. ஒருவர் உங்களுக்கு உண்மையிலே நன்றி சொல்ல முடியுமா?

உங்கள் அன்பு மகன், டான்.

இதர ஸூஃபிக்கள் ஜூலை 20ஆம் நாள் ஐவியின் இல்லத்தில் பிற்பகல் 2:00 மணிக்குக் கூடியிருந்தனர். சார்மியன் ஸ்கார்ஸ்டேலில் தங்கியிருந்து, மதிய உணவுக்குப் பிறகு, பாபாவை மண்டலியுடன் நகரத்திற்குத் திரும்ப அழைத்துச் சென்றார்.

ஜூலை 7 அன்று, பாபாவால் எடுத்துரைக்கப்பட்ட ஒரு சிறப்புச் செய்தி, அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட்டது. அனைவரையும் அதைப் படிக்கச் செய்யும் பொறுப்பு ஜீன் ஷாவுக்கு வழங்கப்பட்டது. அதில் கூறியிருந்ததாவது:

**பெரியவர், சிறியவர் அனைவரும் சமமாக என்னை அணுகலாம்.**
**எழுந்தருளும் புனிதர்களுக்கும், வீழ்ந்து போகும் பாவிகளுக்கும்,**
**தெய்வீக அழைப்பை வழங்கும் பல்வேறு**
**பாதைகள் வழியாக என்னை அணுகலாம்!**

**நான் வணங்கும் துறவி, நான் ஆதரிக்கும் பாவி இருவரும்**
**ஒரே விதத்தில் சமமாக என்னை அணுகலாம்,**
**மற்றும் சமமாக, ஸூஃபிஸம், வேதாந்தம், கிறிஸ்தவம்,**
**அல்லது ஸொராஸ்ட்ரியனிஸம், பௌத்தம் போன்ற**
**பிற 'இஸம்கள்' எந்த வகையாயினும்,**
**நேரடியாக 'இஸம்களின்' ஊடகம்**
**மூலமாக என்னை அணுகலாம்!**

பாபா தொடர்ந்து தனது செய்தியை விளக்கினார்:

**என்னை நேரடியாகவோ மறைமுகமாகவோ அணுகலாம் என்பதை இந்த அறிவிப்பு அனைவருக்கும் தெளிவாக உணர்த்தியிருக்க வேண்டும். அதாவது வெவ்வேறு இஸம்கள், பிரிவுகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் மூலம்; அல்லது தனிப்பட்ட முறையில் நேரடி தொடர்பின் மூலம்; அல்லது கிழக்கத்திய வழக்கப்படி சகவாசம், அதாவது, குருநாதரின் அருகாமையில் இருந்து சேவை புரிவதன் மூலம். ஆனால் இன்று நாம் ஸூஃபியிஸத்தில் அக்கறை கொண்டுள்ளோம், எனவே நான் நேரடி அணுகுமுறையைப் பற்றிய விவரங்களுக்குச் செல்லாமல் அன்பு அல்லது சேவை மூலம் என்னுடன்**

தனிப்பட்ட தொடர்பில் இருக்கும் ஒவ்வொருவரும், அவர்களின் நேரடி அணுகுமுறையால் இறை உணர்வை அடைய முடியும் என்று சொல்லலாம்.

நீங்கள் பாபாவைப் பரிபூரணமானவர், இறை நிலையை அடைந்தவர் என எடுத்துக் கொண்டால், பாபா ஒரு பெருங்கடல் என்றும் இந்த வெவ்வேறு பாதைகள் - ஸூஃபியிஸம், வேதாந்தம், ஸொராஸ்ட்ரியனிஸம், பௌத்தம், ஜைனம், கிறிஸ்தவம் - கடலை நோக்கிப் பயணிக்கும் நதிகள் என்றும் கூறலாம். ஆனால் இப்போது இந்த நதிகள் ஏறக்குறைய வறண்டு போகும் காலம் வந்துவிட்டது. இந்த வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுபவர்கள் அதை, அதன் உருவளவில், சடங்கு சம்பிரதாயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதால், உண்மையான நோக்கம் அதன் தாக்கத்தை இழந்துவிடுகிறது.

ஒற்றுமை, உறுதிப்பாடு இவற்றை அடிப்படையாகக் கொண்ட வேதாந்தம், 'அஹம் பிரம்மாஸ்மி' அதாவது 'நான் கடவுள்' என்ற நிலையில் அதன் இலக்கைக் கண்டுகொள்கிறது. நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்ட பௌத்தம், நிர்வாணத்தில் தனது இலக்கைக் காண்கிறது. தூய எண்ணங்கள், தூய வார்த்தைகள் மற்றும் தூய செயல்களை அடிப்படையாகக் கொண்ட ஸொராஸ்ட்ரியனிஸம், அஹுரமஸ்தாவில் அதன் இலக்கைக் கொண்டுள்ளது. குறிப்பாக, இறை கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கிறித்தவம், பரமபிதாவுடன் ஐக்கியமாவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அன்பை அடிப்படையாகக் கொண்ட ஸூஃபியிஸம், 'ஃபனா' நிலையில் (நிர்மூலமாகி) 'பக்கா' நிலையில் (இறையுணர்வை அடைவதோடு) முடிவடைகிறது.

மேலும் வெவ்வேறு யோகாக்கள் - பக்தி யோகா, தியான யோகா, கர்ம யோகா மற்றும் ராஜ யோகா - அவற்றின் முடிவு 'நிர்விகல்ப சமாதி'யில் அடங்கியுள்ளது.

இந்த அனைத்து முடிவுகளும் இறைவனுடன் ஐக்கியமாவதையும், இறைவனின் வாழ்க்கையை வாழ்வதையும் குறிக்கிறது - சுருக்கமாகச் சொன்னால், இறையுணர்வை அடைவது!

ஆனால், நான் கூறுவது போல், இந்த நதிகள் வறண்டுவிட்டதால், பெருங்கடலே வெளியேறி, இந்த நதிகளில் வெள்ளப்பெருக்கை ஏற்படச் செய்யும் நேரம் இது. ஆகவே, ஒரே ஏக இறைவனில் நிறைவடையும் இந்த வெவ்வேறு அமைப்புகளை நான் மறுசீரமைக்க வேண்டிய நேரம் இது.

இந்த மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தைப் பற்றிய தனித்துவமான சாசனம் ஒன்றை உருவாக்கி, அதை நவம்பர் மாதம் இந்தியாவிலிருந்து ஐவி டியூஸுக்கு எனது கையொப்பத்துடன் அனுப்பி, அமெரிக்க ஸூஃபியிஸத்தின் பணியை அவரிடம் ஒப்படைக்க விரும்புகிறேன். இந்த சாசனம் முற்றிலும்

**புதிய அம்சத்தைக் கொண்டிருக்கும் ஆனால் அதன் முதன்மையான தன்மையை இழக்காது.**

**அதுபோலவே, வெவ்வேறு இஸம்களை மறுசீரமைத்து, பொறுப்புள்ள சேவகர்கள் மற்றும் தகுதி வாய்ந்த நபர்களிடம் அந்தப் பணியை ஒப்படைக்க விரும்புகிறேன். இப்போது நான் சாசனம், அதன் அடிப்படை விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களை அனுப்பும்போது, அது முழு ஸூ:ஃபி உலகிற்கும் பொருந்தும் - மேலும், இறைவன் அருளால், அதன் விளைவும் ஆதிக்கமும் பலகாலம் நீடித்திருக்கும்.**

**இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதவர்கள் உட்பட அனைவருக்கும் எனது அன்பை வழங்குகிறேன்.**

பாபாவின் நியூயார்க் விஜயத்தின் போது, ஜோஸப் ஹார்ப் மற்றும் அன்னரோஸா கர்ராஷ், 47, (அவரது குடும்பத்தினருடன் பாபாவை மர்டில் பீச்சில் சந்தித்தவர்) உட்பட ஸூஃபிகள் பலர் அவரது நெருங்கிய தொடர்பில் வந்தனர்.

ஜீன் அட்ரியல் (அவர் உடல்நிலை சரியில்லாததால், மர்டில் பீச்சிற்கு வரமுடியவில்லை), பார்பரா மஹோன், பெரில் வில்லியம்ஸ், ஹரோல்ட் & விர்ஜீனியா ரூட், லாரா டெலாவிக்னே மற்றும் ஈவ்லின் பிளாக்ஷா போன்றவர்களுடனும் பாபா தொடர்பை மேற்கொண்டார். 1940 ஆண்டுகளின் பிற்பகுதியில், நியூயார்க் நகரத்தில் நோரினா மூலம் பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்ட டாக்டர் ஆட்ரி கார்கெரே, தனது வருங்கால மனைவி மற்றும் இளவரசர் ராபர்ட் வான் பிராங்கோவனுடன் வந்தார்.

**மில்ட்ரெட் கைல்** என்ற 90 வயது பெண்மணி நியூயார்க்கில் பாபாவை சந்தித்தார். இவரது நெருங்கிய தோழி **நதீன் டால்ஸ்டாய்** மூலம் பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்ட இவருடைய புகைப்படத்தை இந்தியாவில் ஒரு நாள் பாபாவிடம் நதீன் காண்பித்தார். பாபா அந்தப் புகைப்படத்தை கையில் எடுத்து, எழுத்துப்பலகையில் '**ஒரு மேன்மையான ஆத்மா**' என்று உச்சரித்து, பின்னர் அதைத் தனது பாக்கெட்டில் வைத்தார். மில்ட்ரெட், அல்லது 'மதர்' கைல் என்று அழைக்கப்படும் அவர், பாபா மேற்கு கடற்கரைக்கு வருவார் எனக் காத்திருந்தார். ஆனால் ஐவி கார் விபத்தைக் குறித்து அவரிடம் தெரிவித்த பின்பு, பாபாவை சந்திக்கும் இரண்டாவது வாய்ப்பைப் பெற அவர் நீண்ட காலம் உயிர் வாழ மாட்டார் என்ற அச்சத்தில், மில்ட்ரெட் ஒரு நண்பருடன் நியூயார்க்கிற்கு விமானத்தில் வந்தார்.

அவருடைய வயதைக் குறிப்பிட்டு, பாபா, மில்ட்ரெட்டிடம் மென்மையாகக் கூறினார், "**நானும் வயதானவன், பூமியை விட வயதானவன், நான் வயதானவர்களில் மூத்தவன், நான் ஆதிகால புருஷன்!**" மில்ட்ரெட் தனது 'தியோஸபி லாட்ஜின்' தலைவராக கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் இருந்தார்,

ஆனால் அவர் மெஹர் பாபாவை அவதார புருஷராக முழுமையாக ஏற்றுக்கொண்டார்.

'பார்னம் & பெய்லி சர்க்கஸ்' நிறுவனத்துடன் பயணம் செய்த ஒரு பெண்மணியை 'ஷார்ப்ஷூட்டர்' ஃபிரான்சிஸ் (துப்பாக்கி சுடுவதில் வீராங்கனை) என்று ஃபிலிஸ் அறிமுகப்படுத்தினார்.

**"நானும் அப்படித்தான்!"** பாபா கேலி செய்தார். **"நான் அன்பின் அம்புகளை இதயத்தில் ஏவுகிறேன்."**

**எல்லா மாஸ்ஸி** உட்பட மார்கரெட் க்ராஸ்கேயின் நடனக் கலைஞர்கள் சிலர் நியூயார்க்கில் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். இந்த அன்பர்களில் பலர், ஜான் பாஸ், ஃபிலிஸ், அடீல் ஆகியோருடன் திங்கள் இரவுகளில் வின்டர்ஃபெல்ட்டின் இல்லத்தில் சந்திப்பது வழக்கம். ஜூலை 20ஆம் நாள், மாலை 4:00 மணிக்கு, பாபா இந்தக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான **மேகன் பிலி ஈற்றன்**, (39 வயது) மற்றும் அவரது துணைவர் பிலிப் டுபுயிஸ் ஆகியோரை தனிப்பட்ட முறையில் சந்தித்தார். பாபாவின் அறைக்குள் நுழைந்தபோது என்ன நடந்தது என்பதைப் பற்றிய **பிலி**யின் விளக்கம் பின்வருமாறு:

நான்கு மணியளவில் பாபாவைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தவர்கள் அல்லது அவரைச் சந்தித்தவர்கள் அமர்ந்திருந்த முன் அறைக்குள் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்; காத்திருக்காமல், உடனடியாக உள்ளே நுழைந்தோம். நான் முதலில் சென்றேன், எனக்குப் பின்னால் என் துணைவர். நான் வாசலில் நுழைந்து பார்த்தபோது, அங்கே பாபா இருந்தார். அவர் ஒரு நீண்ட வெள்ளை நிற சத்ரா உடையணிந்து, பாதி சோஃபாவில் சாய்ந்த வண்ணம், காலில் பிளாஸ்டருடன் அமர்ந்திருந்தார், அவரைச் சுற்றி பலர் இருந்தனர். பாபாவைப் பார்த்த அடுந்த கணமே மின் கம்பியை மிதித்தது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. அது என் உடலில், கால்களிலிருந்து தலை வரை உள்ள ஒவ்வொரு நரம்பிலும், பளிச்சிடுவது போலத் தோன்றியது. முன்னோக்கிச் செல்ல வேண்டியிருந்ததால், நின்று யோசிக்க நேரமுமில்லை.

அவரது பெரிய, இருண்ட ஒளிரும் கண்கள் என்னைப் பார்த்தபோது, பாபாவிடமிருந்து ஒரு மிகப்பெரிய அன்பின் அலை என் மீது பாய்ந்து, உடைந்து, சிதறுவதுபோல் உணர்ந்தேன். அது வெறும் உணர்வு அல்ல, ஆனால் உடல்ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தியது. பாபா எங்களைப் பார்த்ததும், அப்படியொரு வியப்புக்குரிய புன்னகையுடன் சிரித்தார். நான் இதுவரை அனுபவித்த எந்த அன்பையும் விட, அவர் என்னை மிகவும் அன்புடன் பார்த்தார். இது விவரிக்க முடியாதது. நான் சொல்லக்கூடியது என்னவென்றால், யாரும் என்னை இவ்வளவு அன்புடன் பார்த்ததில்லை அல்லது என்னைப் பார்த்து

சிரித்ததில்லை. என்னைச் சுற்றிலும் மூடுபனியாக இருந்தாலும், பாபா மட்டும் தெளிவாகத் தோற்றமளித்தார். மகிழ்ச்சியை அடக்க முடியாமல் தலையை லேசாக ஒரு பக்கம் திருப்பினார்.

எங்களைப் பார்த்து அவர் ஏன் இவ்வளவு மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும்? ஏன் நான்? நீங்கள் அவரை சந்தித்த பின்னரும் இந்தக் கேள்விகள் உங்கள் மண்டையில் நீண்ட நேரம் சுற்றித் திரிகின்றன, அவற்றின் தாக்கம் என்னில் இன்னும் உள்ளது. கொட்டும் இந்த அன்பு ஓர் அலை போலத் தெளிவாகத் தெரிந்தது, ஆனால், அலை போலல்லாமல், அது உங்களை, காந்தமாக ஈரக்கிறது. பாபா, எல்லாமே அன்பு, தெள்ளத் தெளிவான அன்பு மற்றும் என் பரிதாபமான அறிவுக்கு அப்பாற்பட்ட அன்பு. இந்த அதிகப்படியான அன்பு என்னை சிறு அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

பாபாவை அணுக சில வினாடிகள் மட்டுமே எடுத்திருந்தாலும், நேரம் அப்படியே நின்றது; இருந்தாலும் பல மணி நேரங்கள் கடந்தது போன்ற உணர்வு. இந்தத் தருணங்கள் என்றென்றும் நிலையாக, நித்தியமாக இருப்பவை. பாபாவுடனான தருணங்கள் மிகக் குறுகியவை, ஆனால் பல உணர்ச்சிகளும் எண்ணங்களும் அவற்றில் குவிந்துள்ளதால், அவை எல்லையற்ற தன்மையைக் கொண்டுள்ளன.

பாபா பேசுவதில்லை, ஆனால் எழுத்துப்பலகையைப் பயன்படுத்துகிறார் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. விலைமதிப்பற்ற ஆபரணங்களைப் பார்க்க குறுகிய நேரங்களே அனுமதிக்கப்படுவது போல, விரைவாக அவரைக் கடந்து செல்ல வேண்டியது வரும் என்ற எண்ணத்தில் நான் இருந்தேன், எனவே அவர் எங்களிடம் நீட்டிய கையை எடுக்க நான் முற்றிலும் தயாராக இல்லை, அப்போது நான் கையுறைகளை அணிந்திருந்தேன்! பாபா அவரது எழுத்துப்பலகையில், **"எனக்கு அவர்களைத் தெரியும், ஆனால் அவர்களுக்கு என்னைத் தெரியாது"** என எடுத்துரைத்தார். (நான் இப்போது திரும்பிப் பார்க்கும்போது, அது எவ்வளவு உண்மை!) தொடர்ந்து அவர், கடவுள் மீது நமக்குள்ள அன்பு, கடவுள் மீதான அவரது அன்பு மற்றும் நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி வேறு எதையோ கூறினார். ஆனால், அதற்குள், என் தலை தடுமாறத்தொடங்கியது, எனக்கு அதிகம் புரியவில்லை.

நான் என்ன ஒரு குழப்பத்தில் இருந்தேன்... பாபாவின் அன்பின் முன்னிலையில், அனைத்து போதாமைகளும் காயப்பட்ட கட்டைவிரல்களைப் போல நிற்கின்றன. சாதாரண நபர்களின் முன்னிலையில், ஒருவன் குறைபாடுடையவனாக உணர விரும்புவதில்லை. ஆனால் பாபாவிடம் அது வேறு. நீங்கள் எவ்வளவு முட்டாள்தனமாகவும், தடுமாற்றத்துடனும் இருப்பது போலத் தோன்றினாலும், நீங்கள் பாபாவுடன் இருப்பதால் அதையும்

விரும்புகிறீர்கள். அதைத் தெரிந்து கொள்ள ஒருவர் அதை அனுபவிக்க வேண்டும். பாபா புரிந்து கொள்கிறார்; பாபா நேசிக்கிறார். அதுதான் முக்கியம்.

பாபா, பிலி, பிலிப் டுபுயிஸ் இருவருக்கும் கூறினார்:

**நினைவில் கொள்ளுங்கள், என் அன்பும் ஆசீர்வாதமும் உங்களுடன் எப்பொழுதும் இருக்கும். உங்கள் பணி எனது பணி, உங்களிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு நீங்கள் செய்வது எனக்கும் செய்யப்படுகிறது. தன்னலமற்ற சேவையே எனது குறிக்கோள், உங்களுக்குத் தெரியும், அனைத்து மனிதகுலத்திற்கும் நான் சேவை செய்வதன் மூலம் நான் உங்களுக்குப் பாடம் கற்பிக்கிறேன். கொடுப்பதற்கும் தெரிவிப்பதற்கும் அன்பைத் தவிர வேறு எதுவும் என்னிடம் இல்லை. எதற்கும் மனம் தளராதீர்கள்; நீங்கள் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், இதர அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள்.**

எஞ்சியிருந்த 'திங்கள் இரவு குழு'வின் உறுப்பினர்கள் அன்று மாலை 4:30 மணிக்கு பாபாவின் முன்னால் கூடியபோது, அவர் ஆனந்தத்தைப் பற்றி விளக்கினார்:

**ஆனந்தமே வாழ்க்கையின் குறிக்கோள். அந்த ஆனந்தம் தொடர்ச்சியானது, மாறாதது, நித்தியமானது மற்றும் தெய்வீகமானது. அந்தப் பேரின்பத்தில் சக்தி, அன்பு, அறிவு மற்றும் எல்லையற்ற ஞானம் அடங்கியுள்ளது, கடவுள் இவை அனைத்தையும் ஒன்றாகத் தன்னுள் கொண்டுள்ளார்.**

**'ஆனந்தம்' என்ற இந்தியச் சொல்லுக்கு ஏழு நிலைகள் உள்ளன. ஏழாவது நிலையைச் சார்ந்த ஆனந்தம் 'பரமானந்தம்' என்று அழைக்கப்படுகிறது - இதுவே கடவுளின் பேரின்பம் - இது அடையப்படும்போது, கடவுளுடன் ஐக்கியமாகும் நித்திய உறுதிப்பாட்டை அடைகிறோம்.**

**இன்று நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன், ஆனால் இந்த மகிழ்ச்சி தனிப்பட்டது. என்னை மிகவும் நேசிக்கும் உங்களைப் பார்க்கும்போது அது என்னை மேலும் மகிழ்ச்சியடையச் செய்து, என் இதயத்தைத் தொடுகிறது. நோரினா, எலிஸபெத் இருவரும் இத்தனை ஆண்டுகளாக எனக்காக உழைத்திருக்கிறார்கள், அவர்கள் என்னை முழு இதயத்துடன் நேசிக்கிறார்கள். இந்த முறை அவர்களால்தான் நான் இங்கு வர முடிந்தது. இன்று அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்காமல் இருந்தாலும், என் இதயத்தில் வீற்றிருக்கும் விலைமதிப்பற்ற, மிகவும் புனிதமான பெண்மணிகள்.**

**நான் வலியுறுத்த விரும்பும் ஒரே விஷயம் என்னவென்றால், அனைவரும் கடவுளுக்காக கதறும் நேரம் நெருங்கிவிட்டது. நவம்பர் 15**

**முதல், சுற்றறிக்கையில் வெளியிடப்பட்டதற்கு இணங்க, இந்தியா முழுவதும் எனது 'அனல் பறக்கும் வாழ்வு' ஆரம்பமாகிறது. கடவுள் சித்தத்தில், இந்த 'வாழ்விலிருந்து' நான் உடலளவில் உயிர் பிழைத்தால்**, 1953, **ஜூலை மாதத்தில் நிச்சயமாக அமெரிக்காவிற்கு வருவேன். இது உறுதி. இந்த 'அனல் பறக்கும் வாழ்வு' எனது பௌதீக உடலைத் துறக்கச் செய்தால், கிட்டத்தட்ட** 700 **ஆண்டுகளுக்குப் பிறகு கடவுள் என்னை மீண்டும் இப்பூவுலகில் வரச் செய்வார்**.

பாபா, மில்ட்ரெட் கைலின் பக்கம் திரும்பி, கீழ் தாடையில் மெதுவாக வருடி, "**மில்ட்ரெட், ஒருவேளை நீங்கள் என்னுடன் இருப்பீர்கள்**" என்று கூறினார், அதற்கு அவர், "மிக்க மகிழ்ச்சியுடன், பாபா!" என்றார்.

"**நான் சொல்ல விரும்புவது எல்லாம், ஆரம்பம் முதல் முடிவில்லா முடிவு வரை, எல்லா உயிர்களின் லட்சியமும், கடவுளை நேசிப்பதும், அவருடன் ஒன்றாக இருப்பதும்தான். நான் உங்களுக்கு அத்தகைய அன்பைத் தருவதன் மூலம், கடவுளின் அருளால், அவர் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நீங்கள் அவரை நேசிப்பீர்கள்**."

வெப்பம் காரணமாக, பாபா இடுப்புவரைத் தனது ஆடையை அகற்றிவிட்டு, மின்விசிறியின் முன்னால் படுக்கையில் அமர்ந்திருந்தார். விசிறியின் முன் ஒரு பெரிய உலோகத் தொட்டியில் வைக்கப்பட்டிருந்த பனிக்கட்டி ஒரு தற்காலிக குளிரூட்டத்தைத் தந்தது.

ஐந்து வயது சிறுவன் ஒருவன் தனது தந்தையின் முதுகில் அமர்ந்து, பாபாவின் அறையிலிருந்து வெளியே வந்தான். ஃபிலிஸ் அந்தச் சிறுவனிடம், "நீங்கள் யாரை இப்போது சந்தித்தீர்கள்?" என வினவினார்.

"கடவுள்!" சிறுவன் பதிலளித்தான்.

ஒரு சிறுமி பாபாவிடம், "நான் எப்படிப் பிறருக்கு சேவை செய்ய முடியும்?" என்று கேட்டதற்கு...

"**உண்மையை அறிந்தவர்களுக்கு தாங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை என்பது தெரியும்**" என்று பாபா பதிலளித்தார்.

மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணியின் கணவரிடம், பாபா, ஏழு செரி பழங்களைக் கொடுத்து, அதை அவர் தனது மனைவிக்கு, ஒரு நாளைக்கு ஒன்று வீதம் கொடுக்குமாறு அறிவுறுத்தினார். பின்னர் அந்தப் பெண்மணி முழுமையாக குணமடைந்தார்.

ஓய்வுபெற்ற மாண்டஸாரி ஆசிரியையான ஒரு பெண்மணி, பயங்கரமான தலைவலியால் அவதிப்பட்டார், ஆனால் அதைப் பற்றி அவர் ஒருபோதும் புகார் கூறியதேயில்லை. பாபா, தனது கையை அவர் தலையில் வைத்தார், வருடங்கள் பல கடந்தும் அவருக்குத் தலைவலி வரவில்லை.

ஆர்வத்தால் தூண்டப்பட்ட, ஃபிலிஸ், அடீல் இருவரின் தந்தைகளும் பாபாவைப் பார்க்க வந்தனர்; ஃபிலிஸின் தந்தை மிகுந்த சந்தேகக் கண்களால் பார்த்தார். ஆனால், பாபாவை சந்தித்த பின்னர், அவர் தலையை அசைத்து, "அவர் மிகவும் உண்மையும், நேர்மையும் வாய்ந்த மனிதர், நம்பிக்கைக்குரிய ஆன்மீக நபர்" என்று கூறினார். அடீலின் தந்தையும் அதையே எதிரொலித்தார், "அவர் அற்புதமான மனிதர்... மிகவும் உன்னதமானவர்! நல்லவர்!"

ஒரு நாள் ஐவியின் இல்லத்தில், பாபா, லீட்ரைஸ், ரெனே ஷா இருவரையும் தனது அறைக்கு அழைத்து, அவர்களிடம் ஒரு பழக்கலவை ஸாலட் தயாரிக்குமாறு கூறினார். "**மென்மையாக இருக்கட்டும்**" என்று அறிவுறுத்தினார், "**விபத்தின் காரணமாக, என்னால் எதையும் மென்று உண்ண முடியவில்லை**." அவர்கள் சமையலறைக்குச் சென்று பாபாவுக்குப் பரிமாறும் வாய்ப்புக் கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தனர், அவர்கள் பழக்கலவையைப் பிசைந்தபோது அவர்களின் கண்ணீர் ஸாலடில் விழுந்தது - இறுதியில் அது உப்பு கலந்த ஸாலடாக மாறியது!

மற்றுமொரு தருணத்தில், பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார்; டார்வின், ஜீன் அவர்களது மூன்று குழந்தைகளுடன் தரையில் பாபாவின் பாதங்களின் அருகில் வட்டமாக அமர்ந்தனர். லீட்ரைஸ் நினைவு கூர்ந்தார்: "பாபாவின் அன்பின் சகவாசத்தில் காலமற்றதாகத் தோன்றிய காலத்தை நாங்கள் கழித்தோம். இது நித்தியத்தில் ஓர் அற்புதமான தருணம். இது பாபாவை முழுமையாகவும், வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் நேசிக்கும் முற்றிலும் அற்புதமான தருணம். பாபா இந்தத் தருணத்தை, '**இதுவே எனது உணவு**,' என்றும், அதைத் தொடர்ந்து, '**டார்வின் ஒரு விலைமதிப்பற்ற ஆபரணம்**' என்றும் எடுத்துரைத்தார். இது சொர்க்கத்தின் இனிமையான தருணமாக இருந்தது.

மர்டில் பீச் மையத்தில் பாபாவை சந்தித்த பிறகு, லீட்ரைஸின் கனவில் தோன்றி பாபா அவரிடம், "**என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?**" என்று கேட்டதற்கு, மனதளவில் மகிழ்ச்சியை உணர்ந்த அவர், வாழ்க்கை நன்றாக இருப்பதாக பாபாவிடம் தெரிவித்தார். கனவில், பாபா அன்புடன் பதிலளித்தார், "**நீங்கள் என்னிடம் அவ்வாறு சொல்லியிருக்கக் கூடாது, 'நான் உங்களுக்காக வாழ்ந்தால் மட்டுமே, மகிழ்ச்சியாக இருப்பேன்' என்று நீங்கள் கூறியிருக்க வேண்டும்**." இது அவரை மிகவும் திடுக்கிடச் செய்தது, அவர் படுக்கையிலிருந்து எழுந்து குறிப்புப் புத்தகத்தில் இதை எழுதி வைத்தார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 1956-ல் கலிஃபோர்னியாவில், பாபாவுடன் தேநீர் அருந்திய பிறகு, ஷா குடும்பத்தினர் மீண்டும் அவரைச் சுற்றி அமைதியாக அமர்ந்திருந்தனர். சிறிது நேரம் கழித்து, யாரும் எதுவும் பேசாததை லீட்ரைஸ்

கவனத்தில் கொண்டார். உடனே பாபா, "**நாம் பேச வேண்டியதில்லை**" என்று கூறினார். பின்னர், அனைவரையும் உற்று நோக்கி, "**அவர்கள் அனைவரும் எனக்காகவே வாழ்கின்றனர்**" என்று அவர் மேலும் கூறினார், இது லீட்ரைஸின் கனவை உறுதிப்படுத்தியது.

1952, ஜூலை 21 திங்கட்கிழமை அன்று, பாபா, மாலை 3:30 மணிக்கு அவரது உடைந்த காலைப் பரிசோதிக்க மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் அவர் '**சென்ட்ரல் பார்க் உயிரியல் பூங்கா**'வையும், 25ஆம் நாள் '**இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தையும்** பார்வையிட்டார். மற்றொரு நாளில் டார்வின், ஃபிலிஸ், ஐவி, சார்மியன், கெய்த் ஆகியோர் பாபாவுடன் பெரிய '**பிராங்க்ஸ் மிருகக்காட்சிசாலை**'க்குச் சென்றனர். பாபா, பெண் மண்டலியுடன் சார்மியனின் காரிலும், கோஹெர், ரானோ, கெய்த் ஆகியோர் டார்வினின் காரிலும் பின்தொடர்ந்தனர்.

'பிராங்க்ஸ் மிருகக்காட்சிசாலை'யில், சார்மியன் பாபாவின் இரு சக்கர நாற்காலியைத் தள்ளிச் செல்ல வேண்டும், ஆனால் அவரது காலணிகளில் நாடாக்களை இறுக்க முயலும்போது, இரண்டும் அறுந்துபோனதால் சற்று காலதாமதமானது. பாபா உடனே கெய்த், டார்வின் இருவரையும் மாறி மாறி சக்கர நாற்காலியைத் தள்ளுமாறு சைகையால் தெரிவிக்க, அவர்கள் வெவ்வேறு காட்சிக்கூடங்களில் நின்றனர். பாபா விலங்குகளைப் பார்த்து மகிழ்ந்தார், கொரில்லா குரங்குகளில் குறிப்பாக ஆர்வம் காட்டினார். பெங்குவின் தொட்டியில், ஒரு பெரிய பெங்குவின் (மிகவும் ஆடம்பரமான தோன்றத்தில்) பாபாவிடம் ஆடி அசைந்து வந்தது. பாபா, டார்வினிடம், "**அதைப் பாருங்கள்!**" என்று கூறுவது போல் அவரை நிமிர்ந்து பார்த்தார்.

டார்வின், "ஆமாம், பெங்குவின் குழுத் தலைவர்" என்று தலையசைத்து, இருவரும் சிரித்தனர்.

திரும்பி வரும் வழியில், டார்வின், கெய்த் இருவராலும் தங்கள் காரைக் கண்டுகொள்ள முடியவில்லை, ஏனெனில் அவர்கள் கார் நிறுத்தப்பட்ட இடம் எது என்பதை கவனிக்கவில்லை. பாபா ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கிச் செல்லுமாறு சுட்டிக்காட்டினார், ஆனால் இதற்கிடையில் மழை பொழியத் தொடங்கியது. பாபாவின் பிளாஸ்டர் நனைவதை அவர்கள் விரும்பாததால் ஒரு கூரையின் கீழ் ஒதுங்கி நின்றனர். அவ்வேளையில், சார்மியன் அங்கு வந்து அவர்களை காரில் அழைத்துச் சென்றார்.

ஜூலை 22ஆம் தேதி மதியம், சார்மியன் பாபாவையும் பெண் மண்டலியையும் '**ரேடியோ சிற்றி மியூசிக் ஹாலுக்கு**' அழைத்துச் சென்று, 'வொயர் இஸ் சார்லி?' என்ற திரைப்படத்தைப் பார்த்தனர்.

ஐவி அவரது நாட்குறிப்பில் விவரித்தபடி: பாபா, பெண் மண்டலிக்கு சிறிது வித்தியாசமான சூழ்நிலையை விரும்பினார், நிச்சயமாக அவர்கள்

மூலமாக எல்லா இடங்களிலும் பாபா, தனது பணியைச் செய்ய முடியும். சார்மியன் அவர்களையும் பாபாவையும் 'ரேடியோ சிற்றி மியூசிக் ஹாலுக்கு' அழைத்துச் சென்றார். அத்தகைய ஒரு எளிய, குறுகிய பயணத்திற்குக் கூட துல்லியமாகத் திட்டமிடவேண்டியது அவசியம் - சரியான நேரத்தில் ஒருவரை சக்கர நாற்காலியில் அமரச் செய்து கவனித்துக் கொள்ளும்படி தியேட்டரை எச்சரிப்பது; காரை ஓட்டிச் சென்று அதன் இடத்தில் நிறுத்தும் நேரத்தில் திரையரங்கில் எனர்ஜி (மேரியன்) இருப்பது; அந்த இடத்தில் கார் நிறுத்த அனுமதிக்கப்படாததால், சரியான நேரத்தில் 'எனர்ஜி' காரைத் திரையரங்கிற்குத் திரும்பப் பெறுவது போன்றவை... ஓரிரவு அவர்கள் 'யுல் ப்ரென்னர்' (ஸெலஸ்டெ ஹோம்) நடித்த - 'ஆனா அண்ட் தி கிங் ஆஃப் ஸியாம்' என்ற தியேட்டர் பதிப்பான திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர். பாபா சக்கர நாற்காலியில் நடைவழிப் பாதையில் இருப்பதை 'தீ அபாய சட்டங்கள்' தடை செய்ததால் அனுமதிக்கப்படவில்லை.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், ஐவி, பாபாவைப் பார்க்க ஸ்கார்ஸ்டேலுக்கு காரில் சென்றார்; ஒரு கட்டத்தில், "பாபா, இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி நாம் எப்போதாவது அதிகம் தெரிந்து கொள்ளப் போகிறோமா? அவருடைய 12 வயதிலிருந்து 30 வயதிற்குள் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது" என்றார்.

பாபா புன்னகைத்து, **"ஆம், அது புத்தகத்தில் உள்ளது"** என்றார்.

"அந்தப் புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பு எப்போதாவது கிடைக்குமா?" ஐவி கேட்டார்.

பாபா தலையசைத்தார். ஆனால் ரானோ, "இந்த வாழ்க்கையில், பாபா?" என்று ஒரு துல்லியமான பதிலை எதிர்பார்த்து அவரிடம் தொடர்ந்து கேட்க முயன்றார். மீண்டும் பாபா **"ஆம்"** என்று தலையசைத்தார்.

1952, ஜூலை 23 அன்று, எகிப்தில் ஒரு திடீர் வன்முறைப் புரட்சி உருவானது. பாபா ஒரு மஸ்தைத் தொடர்பு கொள்ள கெய்ரோ நகரில் தரையிறங்க விரும்புவதாக தொடர்ந்து வலியுறுத்தி வந்தார், ஆனால் இப்போது அவர் தனது திட்டத்தை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் ஜான் பாஸின் பக்கம் திரும்பி, **"எகிப்தில் நிகழ்ந்த புரட்சிக்கு ஜானின் தவறுதான் காரணம்"** என்று குறிப்பிட்டார்.

திரைப்படத் தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கல் 1952 ஜூலை 25 வெள்ளியன்று ஸ்கார்ஸ்டேலில் பாபாவை சந்திக்க வந்தார். பாபா அவரைப் பார்த்து மகிழ்ந்தார், மேலும், மகாத்மா காந்தியைப் பற்றிய ஒரு திரைப்படம் எடுக்க பாஸ்கலின் விருப்பத்தைக் குறித்தும், இந்தியாவில் படத் தயாரிப்பு

மற்றும் விநியோகத்தில் ஸரோஷ், மெஹர்ஜி, நரிமன் ஆகியோரை ஈடுபடுத்த வேண்டும் என்றும் அவர்கள் பேசிக்கொண்டனர்.

28ஆம் தேதி மதியம், பாபா கான்ஸிலோ ஸைட்ஸின் குடியிருப்பிற்கு (125 ஈ. 57ஆவது வீதி) விஜயம் செய்து, அங்கு அவரது நண்பர்கள் மற்றும் சமூக அறிமுகமானவர்கள் 40 பேரை சந்தித்தார்.

வேறொரு நாள், பாபா, பெண் மண்டலியுடன் 200 ஈ. 66வது வீதியில் அமைந்த 'மன்ஹாட்டன் ஹவுஸில்' ஃப்ரெட் மற்றும் எல்லா விண்டர்ஃபெல்ட் இல்லத்திற்குத் தேநீர் அருந்த அழைத்துச் செல்லப்பட்டார். பாபா தேநீரைப் பாராட்டி, "**'எல்லா' ஒரு தேவதை**" என்று கூறினார்.

தொடர்ந்து பாபா, "**தேவதைகளுக்குக் கூட கடவுள் மீது இத்தனை அன்பு கிடையாது. அவை, இறை உணர்வை அடைய வேண்டுமாயின் முதலில் மனிதர்களாகப் பிறவி எடுக்க வேண்டும். ஒரு நபர் இறை உணர்வை அடைந்த ஒன்றிலிருந்து மூன்று நாட்களில் பௌதீக உடலைக் கைவிடுகிறார்.**"

மார்கரெட்டை பாபா கேலி செய்தார், இறை உணர்வை அடைவது பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை. "பாபா, நான் மாயாவை நேசிக்கிறேன், மாயா அழகாக இருக்கிறாள் என்று நினைக்கிறேன்! அதுமட்டுமல்ல, நான் மீண்டும் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்" என்று நகைச்சுவையாகப் பேசினார்.

அப்போது அங்கிருந்த ருவானோ மனதிலும் ஏதோ எண்ணங்கள் அலைமோதின. அவர் பாபாவிடம், "சில பொருட்கள் தம்முள் வினைப்பதிவங்களை வைத்திருப்பது உண்மையா?" என்று கேட்டார். பாபா தோள்களைக் குலுக்கியபோது ருவானோ தொடர்ந்தார், "1936-ல் நீங்கள் என்னை இந்தியாவுக்கு வருமாறு அழைத்தபோது, என்னிடம் போதிய பணம் இல்லை. ஆனால் ஒரு நண்பருடன், நான் ஒரு ஜோதிடரைப் பார்க்கச் சென்றேன், அவர் நான் அணிந்திருந்த பழைய சீன வளையலைக் கழற்றினால் நிலைமை சீராகும் என்று கூறினார். அது வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்த ஒருவருக்குச் சொந்தமானது என்று அவர் கூறியதால் நான் அதைச் செய்தேன். 'நான் ஏன் அதைச் செய்யக்கூடாது?' என்று நினைத்த அதே நேரத்தில், ஒருவர் எனக்கு 500 டாலர் காசோலையை அனுப்பினார். அது, இந்தியாவிற்குக் கப்பலில் பயணம் செய்யப் போதுமானதாக இருந்தது!"

பாபா எழுத்துப்பலகையில் உச்சரித்ததை, மணி எடுத்துரைத்தார்: "**உண்மைதான், பரிணாம வளர்ச்சியின் நான்கு திருப்பங்களில், சில பொருட்கள் அல்லது உயிரினங்கள் இத்தகைய வினைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் - சில உலோகங்கள், ரத்தினங்கள், கருப்பு கம்பளி,**

**பூனைகள், நாய்கள் போன்றவை. இதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் அது மூடநம்பிக்கைக்கு இடமளிக்கிறது."**

"நான் இந்தியாவில் மீண்டும் உங்களுடன் இருப்பேனா?" ருவானோ கேட்டார்.

**"இருக்கலாம்"** என்று பாபா பதிலளித்தார்.

அதற்குப் பிறகு, ஃபிரெட் ஸ்கார்ஸ்டேலுக்குத் திரும்புவதற்காக பாபாவை, காரை நோக்கி, சக்கர நாற்காலியில் அழைத்துச் சென்ற வேளையில், பாபாவை அந்த நிலையில் பார்த்து, "பாபா, அவதார புருஷர் ஏன் இவ்வளவு துன்பங்களைச் சுமக்க வேண்டும்?" என்று கேட்டார்.

பாபா பதிலளித்தார், **"அப்படியே இருந்தது, இப்போதும் இருக்கிறது, அப்படியே இருக்கும்."**

ஆப்பிரிக்க-அமெரிக்க-இந்தியரான **ஆல்பர்ட்டா** என்ற 'சிடு சிடு' சுபாவமுள்ள சமையல்கார பெண்மணி, ஸ்கார்ஸ்டேலில் பாபா மற்றும் பெண் மண்டலிக்கு உணவு தயார் செய்தார். முன்பு, நியூயார்க்கில் எலிஸபெத்திடம் பணிபுரிந்த அவருக்கு, ஃபிலிஸ், பாபாவின் உணவு தயார் செய்யும் கடமையை வழங்கினார். பாபா, அவரது உணவை எடுத்து வருமாறு ரானோவை அனுப்பிய அவ்வேளையில் உணவு தயாராக இல்லை, ஆதலால், அவர் சமையல்கார பெண்மணியிடம், "இது பாபாவின் உணவு நேரம்; ஏன் இன்னும் அவருடைய மதிய உணவு தயாராகவில்லை? பாபாவின் உணவு இப்போது தயாராக இருந்திருக்க வேண்டும். பாபா அவரது உணவு நேரத்தில் மிகவும் குறிப்பாக இருக்கிறார், சமீபத்தில் இதைப் பற்றி அவ்வப்போது புகார் கூறுகிறார். பாபா காலதாமதத்தை விரும்பாததால், நீங்கள் சரியான நேரத்தில் செய்து முடிக்க முயற்சிக்க வேண்டும்."

சமையல்கார பெண்மணி ரானோவின் வார்த்தைகளை 'அதிகாரத்துவம்' என நினைத்து, கோபமாக பதிலளித்து (ரானோ உண்மையில் பாபாவின் அதிருப்தியைத் தவிர்க்க அவருக்கு உதவ மட்டுமே முயன்றார்), கடுமையான வார்த்தைகளால் திட்டினார். இது ரானோவின் கோபத்தைக் கிளறியது, அவர் கண்ணீருடன் பாபாவிடம் வந்து நடந்ததைக் கூறினார்.

பாபா ரானோவிடம் கேட்டார், **"நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?"**

ரானோ ஆம் என்றதும், **"அப்படியானால் அவரிடம் போய் மன்னிப்புக் கோருங்கள்."** என்றார்.

ரானோ, "இதில் எவரேனும் மன்னிப்புக் கோர வேண்டும் என்றால், அது...." என்று கூறத் தொடங்கியதைத் திடீரென நிறுத்தி, "நான் மன்னிப்பு கேட்கிறேன், பாபா" என்றார். ஆனால் மிகவும் காலதாமதமாகிவிட்டது.

**"வேண்டாம்"** என்று பாபா ஏமாற்றமடைந்த தோரணையில் கூறினார். **"நான் கூறிய அந்த கணமே சென்றிருந்தால் அதற்கு ஏதேனும் அர்த்தம்**

**இருந்திருக்கும். இப்போது உங்கள் மன்னிப்புக்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது; வாய்ப்பை இழந்துவிட்டீர்கள். இப்போது கேட்பதில் என்ன பலன்?"** இவ்வாறு கீழ்ப்படிதலில் ரானோ ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

ஃபிலிஸ் இந்த சம்பவத்திற்கு சாட்சியாக இருந்தார், ஒருவேளை இந்த வார்த்தைப் பரிமாற்றத்திற்கும் அமெரிக்காவில் நிலவும் இன பாகுபாட்டிற்கும், பாபாவின் பணியுடன் ஏதாவது தொடர்பு இருக்கலாம் என்று நினைத்தார்.

பாபா, ஐவியுடன் தனியாக அமர்ந்து விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்த வேளையில் ஸ்கார்ஸ்டேலில் மற்றுமொரு சம்பவம் நடந்தது. ஐவி இது தொடர்பாகக் குறிப்பிட்டிருந்ததாவது:

அப்போதுதான் நீக்ரோ சமையல்கார பெண்மணி ஆல்பர்ட்டா, கைகளில் ஒரு கடிதத்துடன் அறைக்குள் நுழைந்து, உரையாடலுக்கு நடுவே, "பாபா, நான் என் குழந்தைகளை உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்" என்று கூறி சில 'கோடாக்' புகைப்படங்களை வெளியே எடுத்தார். திடீரென பாபா, அந்தப் பெண்மணியிடமும், என்னிடமும் ஒரே சைகையை, மாறி மாறி தெரிவித்ததைப் புரிந்துகொள்ள முடியாமல் யோசித்தபடி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். பின்னர் அவர் மறுபடியும் எழுத்துப்பலகையில் எடுத்துரைத்ததை ரானோ விளக்கினார்: **"பாபா, நீங்கள் இருவரும் கைகளைக் குலுக்க விரும்புகிறார்."**

இது மிகவும் விசித்திரமாகத் தோன்றியது, ஏனென்றால் 'கிராமர்சி பார்க்' நாட்களில் எலிஸபெத்துக்கு அவர் சமையல் செய்து வந்ததிலிருந்து நாங்கள் ஒருவரையொருவர் அறிந்திருக்கிறோம். இருப்பினும், நாங்கள் அன்புடன் கைகளைக் குலுக்கினோம், பாபா திருப்தியடைந்தார். சில வருடங்களுக்குப் பின்னரே, ஒரு வெள்ளை நிற நபர் ஒரு கருப்பு இனத்தவரின் கைகளைப் பற்றிக்கொண்டது, இனங்களின் சகோதரத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்திய பாபாவின் தெய்வீக இயல்புடைய செயலைக் குறிப்பதாக எனக்குத் தோன்றியது.

ஒருமுறை, ஸ்கார்ஸ்டேலில், பாபா, தனது அன்பர்களுக்கு வரவிருக்கும் பேரழிவை வெளிப்படுத்தி, அதில் பலர் உயிரை இழக்க நேரிடும் என்று கூறினார். இதை அறிந்த ஒருவர், பேரழிவிலிருந்து தன்னையும் தனது குடும்பத்தையும் பாதுகாக்கும் நோக்கத்தில், மலைகளின் உச்சியில் வீட்டைக் கட்டி, அங்குத் தேவையான பொருட்களை சேமித்து வைக்க விரும்பிய ஒருவரைப் பற்றி ஃப்ரெட் குறிப்பிட்டார்.

பாபா குறுக்கிட்டு, **"எந்த இடமும் பாதுகாப்பாக இருக்காது, இமயமலையின் உச்சியில் கூட இருக்காது! கடவுளின் அருளால் மட்டுமே ஒருவர் இரட்சிக்கப்பட முடியும்"** என்று கூறினார்.

"இந்த அழிவு மனிதனால் உருவாக்கப்பட்டதா அல்லது இயற்கையானதா?" ஃபிரெட் வினவினார்.

**"இரண்டும்"** என்று பாபா பதிலளித்தார்.

சிலர் பாபாவைப் பார்க்கும் வாய்ப்பைத் தவறவிட்டதாக ஃபிலிஸ் வருத்தமாக உணர்ந்தார். அவருடைய எண்ணங்களை அறிந்த பாபா, தலையை அசைத்து, **"நான் வர விரும்பியர்கள் அனைவரும் வந்தனர், கவலைப்படாதீர்கள்"** என்று விளக்கினார்.

குழுவிடம், அவர் கூறினார்: **"உங்கள் அன்பு ஒன்றுதான் என்னை மீண்டும் மேற்கு நோக்கி ஈர்க்கும்."**

மணி, கலகலப்பான, உற்சாகம் மிக்க ஒரு வாயாடி என்று கூறலாம். ஆனால் அவர்கள் நியூயார்க்கிலிருந்து புறப்படுவதற்கு முந்தைய நாள், பாபா அவரை, இந்தியா சென்றடையும் வரை மௌனமாக இருக்கும்படி கூறி அமைதிப்படுத்தினார். இருப்பினும், அவர் தன்னுடன் பேச மட்டும் அனுமதித்தார்.

ஜூலை 29 அன்று ஸ்கார்ஸ்டேலில் அவர்களது கடைசி இரவு, ஃபிலிஸ் பெண் மண்டலியுடன் இரவைக் கழிக்க அனுமதிக்கப்பட்டார். மறுநாள் அதிகாலை 6:00 மணியளவில் ஒரு பெண்மணி வந்து கதவைத் தட்டியதும் ரானோ பதிலளிக்க விரைந்தார். “இனி 700 வருடங்களுக்கு என்னைப் பார்க்க மாட்டேன் என்று பாபா கூறியதால் நான் அவரை தவறாக நிரூபிக்க வந்துள்ளேன்” என்று பாபாவின் வார்த்தைக்கு சவால் விட்டார் அந்தப் பெண்மணி.

மூன்று முறை ‘பாபா, அவரைப் பார்க்க மாட்டார்’ என்ற செய்தியை அந்தப் பெண்மணிக்குத் தெரிவித்து, ரானோ, அவரிடம் திரும்பிச் செல்வது நல்லது என்று கூறினார். இறுதியாக, அவர் மறுத்தபோது, பாபா, இரண்டு நிமிடங்கள் அவரை சந்திப்பதாகவும், ஆனால் அவர் மௌனமாக இருக்க ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். அந்தப் பெண்மணியின் விருப்பம் நிறைவேறியது, ஆனால், துரதிர்ஷ்டவசமாக, பாபாவை இவ்வாறு எதிர்கொண்டதற்காக அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய சோதனையை சந்திக்க நேர்ந்தது.

அடுத்த நாள், ‘எனர்ஜி’ பாபாவையும் பெண் மண்டலியையும் விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். ஆண் மண்டலி அனைவரும் டார்வினின் காரில் வந்தனர். ஒரு பறவை மரியானின் முன் கண்ணாடியின் குறுக்கே பறந்தது, அவர் அதை, கிட்டத்தட்ட தாக்க நேர்ந்தது. பாபா உடனே, **"நீங்கள் அதைக் கொன்றிருந்தால், அதன் பரிணாம வளர்ச்சியில் உதவ மறுபடியும் ஒரு பிறவியில் நீங்கள் திரும்பி வர வேண்டியதாக இருந்திருக்கும்"** என்று சைகையால் தெரிவித்தார்.

பறவைக் கதையின் மாறுபட்ட பதிவு ஒன்று சார்மியனிடமிருந்து வந்தது (நியூயார்க் குழுவுடனான உரையாடலின் போது - செப்டம்பர் 1952):

பாபாவும், பெண் மண்டலியும் ஸ்கார்ஸ்டேலில் தங்கியிருந்த வேளை, அவர் நியூயார்க்கில் எங்கள் இல்லத்தில் தரிசனம் வழங்கிய தருணத்தில், மரியான் ஃப்ளோர்ஷெய்முடன் (எனர்ஜி) இணைந்து, நான் ஒவ்வொரு நாளும் பெண் மண்டலியுடன் நகரத்திலிருந்து முன்னும் பின்னுமாகக் காரை ஓட்டிச் சென்றேன். ஒரு நாள் மாலை, சாலையில், ஒரு பறவை காரில் மோதியதை கவனித்து, காரை நிறுத்திவிட்டு பறவையை நோக்கி விரைந்தேன். நான் அதைத் தொட்டு, பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிந்த அவ்வேளையில் அது உயிரைவிட்டது. அதன் பிறகு பாபாவிடம் கேட்டேன், ஒருவருடைய கார் ஒரு மிருகத்தையோ அல்லது பறவையையோ தாக்கிக் கொன்றால், கர்மாவைப் பொறுத்தவரை என்ன நடக்கும். பாபாவின் பதில் என்னவென்றால், கார் ஓட்டுநர் கர்மாவை ஏற்றுக்கொள்கிறார், அதில் விதிவிலக்கான ஒரு விஷயம் என்னவென்றால், அந்தக் காரில் பாபா சவாரி செய்தால் மட்டுமே கர்ம வினையின் விளைவுகளை அவர் தன்மீது எடுத்துக்கொள்கிறார். இது குறித்து எனக்குத் தெரியாது என்றாலும், அதே பதில் எந்தவொரு பரிபூரண குருநாதருக்கும் பொருந்தும் என்று நான் கருதுகிறேன்.

விமானம் புறப்படுவதற்கு ஒன்றரை மணிநேரம் முன்னதாக, பாபா விமான நிலையத்திற்கு வந்து, அங்கு, அவர் சந்திக்க வேண்டிய '**யாரோ ஒரு நபர்**' இருப்பதாக விளக்கினார். ஜான் பாஸ் பாபாவை நோக்கி நின்றுகொண்டிருந்த வேளையில் அவர் கவனித்ததை விவரித்தார்:

சக்கர நாற்காலியின் முன் நின்று கொண்டிருந்த போது, ஒரு மனிதன் ஏறக்குறைய ஏழடி தூரத்தில் வந்து, திரும்பி பாபாவை, சில கணங்கள் உற்று நோக்கி, வந்த வழியே சென்று, மீண்டும் ஒருமுறை பாபாவைத் திரும்பிப் பார்த்து, இறுதியாக நடந்து சென்று மறைந்தார். முன்பு, பாபா எங்களிடம் 'யாரையோ' சந்திக்க விரும்புவதாகவும், அவர் அருகில் எவரும் நிற்க வேண்டாம் என்றும் கூறியிருந்தார். அப்போது அருகில் நின்றவர்களை, அவர் அங்கிருந்து அனுப்பி வைத்தார். சந்தேகத்திற்கு இடமின்றி, ஆன்மீக தளத்தில் பாபா கணிசமான அளவில் உள் பணிகளைச் செய்தார்.

அந்த மர்ம மனிதன் அமெரிக்காவில் ஆன்மீக உள் தளங்களில் பணிபுரிந்த குருநாதரின் முகவர்களில் ஒருவராக இருக்கலாம்.

# லண்டன் & லொக்கார்னோ

**(London & Locarno)**

**மெஹர் பாபா**, பெண் மண்டலியுடன் நியூயார்க் நகரத்திலிருந்து 'பான் ஆம் 50' விமானத்தில் 1952, ஜூலை 30 புதன்கிழமை அன்று மாலை 3:00 மணிக்குப் புறப்பட்டுச் சென்றார். சார்மியன் அவர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஐந்து பேர் பாபாவை ஒரு நாற்காலியில் தாங்கிய வண்ணம் விமானத்தின் படிக்கட்டுகளில் ஏறினர். பாபா, டார்வினின் சட்டையின் கழுத்துப் பாகத்தைப் பிடித்தார், இதையெல்லாம் பாபா பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஐந்து பேர் அவரை மூன்று இருக்கைகளில், கைத்தாங்கிகளை அகற்றிய பின்பு, நீள் வாக்கில் அமர வைத்தனர். புதிதாக முடிசூட்டப்பட்ட 18 வயது 'மிஸ் யுனிவர்ஸ்' (ஃபின்லாந்தைச் சேர்ந்த அர்மி குஸேலா) மற்றும் 25 வயதான 'பிரிட்டிஷ் எம்பயர்' 'ஹெவிவெயிட்' வீரரான ஜானி வில்லியம்ஸ் ஆகியோர் ஒரே விமானத்தில் இருந்ததால் செய்தித்தாள் நிருபர்கள் எல்லா இடங்களிலும் இருந்தனர்.

'மிஸ் யுனிவர்ஸ்' போட்டி நடத்தப்பட்ட முதல் வருடம் அது; காலம் அதன் முரண்பாட்டை வேடிக்கையாகப் பார்த்து சிரித்தது: பிரபஞ்சத்தை உருவாக்கியவர் கண்டுகொள்ளப்படாத போது, 'மிஸ் யுனிவர்ஸ்' பொதுமக்களால் கொண்டாடப்பட்டார்! 1931ஆம் ஆண்டில் லண்டனில் மக்கள் கூட்டம் மஹாத்மா காந்தியைப் பார்ப்பதற்காகத் தெருக்களில் வரிசையாக நின்ற அதே நேரத்தில் அவதார புருஷர் அமைதியாக வீதிகளில் கடந்து சென்றார்.

மறுநாள் காலை 10:00 மணிக்கு லண்டன் வந்து சேர்ந்த பாபா மற்றும் பெண் மண்டலியை, **வில் & மேரி பேக்கெட்**, **டிலியா**, **டாக்டர் டான்** ஆகியோர் சந்தித்து, அவர்களை பக்கிங்ஹாம் அரண்மனை சாலையில் அமைந்த 'ரூபன்ஸ்' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர்; அங்கு அவர்கள் ஒரு வாரம் தங்கியிருந்தனர். டிலியா, சார்லஸ் பர்டம், வில் & மேரி பேக்கெட் ஆகியோர் அவர்களின் தங்குமிடங்களை ஏற்பாடு செய்திருந்தனர். ஆண் மண்டலி 31ஆம் தேதி மாலை 4:00 மணிக்கு நியூயார்க் நகரத்திலிருந்து புறப்பட்டாலும், அவர்கள் பயணித்த விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டதால் நியூஃபவுண்ட்லாந்தில் இரவு முழுவதும் அவர்கள் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டனர். மிகவும் தாமதமாக, மண்டலி அதிகாலை 2:00 மணிக்கு லண்டனை வந்தடைந்தனர். ஆகஸ்ட் 2 அன்று வில் பேக்கட் அவர்களை விமான நிலையத்தில் தவறவிட்டதால், பாபா தங்கியிருக்கும் இடம் தெரியாமல், காலை முழுவதும் பாபாவைத் தேடவேண்டியிருந்தது.

டாக்டர் டான் பாபாவின் கால் குறித்து பிரபல எலும்பு அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் ரெஜினால்ட் வாட்சன்-ஜோன்ஸிடம் ஆலோசனை

கேட்டிருந்தார். ஆகஸ்ட் 2ஆம் தேதி டாக்டர் கோஹெர், டாக்டர் டான் ஆகியோருடன் பாபா அழைத்துச் செல்லப்பட்டார். அன்று அவரது பிளாஸ்டர் அகற்றப்பட்டு, அவரது கால் துணியால் கட்டுப்போடப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு, நியூயார்க் மருத்துவ நிபுணர்கள் அவர் அடுத்த இரண்டு மாதங்களுக்கு பிளாஸ்டர் அணிய வேண்டும் என்று கூறியபோதும், டாக்டர் வாட்சன்-ஜோன்ஸ், ஒரு வாரத்திற்குப் பிறகு, பாபா எடையைத் தாங்கும் பயிற்சிகளைத் தொடங்கலாம் என்று அறிவுறுத்தினார்.

பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க, இங்கிலாந்து வந்த அர்னவாஸின் சகோதரர் ஹோமா தாதாச்சாஞ்சி, அவர்களுடன் மருத்துவர் அலுவலகத்தில் இருந்தார். பாபா, ஹோமாவிடம் கேட்டார், "**எனக்கு, கால் எப்படி வலிக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?**"

"ஆம், நான் அறிவேன்," ஹோமா பதிலளித்தார்.

ஆச்சரியமடைந்த பாபா, "**உங்களுக்கு எப்படித் தெரியும்?**"

"எனது காலும் வலிக்கிறது," என்று ஹோமா பதிலளித்தார்.

இக்காரணத்திற்காகத்தான் பாபா அவரை லண்டனுக்கு வருமாறு அறிவுறுத்தினார்.

இந்த நேரத்தில், பாபா, "**டாக்டரிடம் காண்பித்து ஆலோசனை கேளுங்கள், தேவைப்பட்டால், அறுவை சிகிச்சை செய்யுங்கள். பயப்பட வேண்டாம்; நானே உங்கள் அறுவை சிகிச்சையைச் செய்கிறேன்!**" என்று ஹோமாவிடம் கூறினார்.

பாபா, ஹோமாவை டாக்டர் டானுடன் மீண்டும் மருத்துவரிடம் அனுப்பினார், ஆனால் மருத்துவமனையில் அனுமதிக்க இன்னும் பல நாட்கள் ஆனது. பாபா, ஹோமாவிற்கு அறிவுரை வழங்கினார், "**அறுவை சிகிச்சை செய்து கொள்ளுங்கள், நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அனைத்தையும் நானே செய்வேன்; நீங்கள் தனியாக இல்லை.**" பாபா இந்தியாவுக்குத் திரும்புவதற்கு முன்பு, ஹோமா அறுவை சிகிச்சை செய்து நான்கு மாதங்கள் மருத்துவமனையில் இருக்க வேண்டியிருந்தது. இது அவரது முழங்காலில் ஒரு தீவிர அறுவை சிகிச்சை, அது முற்றிலும் சிதைந்துபோன எலும்பு, ஆனால் ஹோமா, பாபா அவருடன் இருப்பதை எப்போதும் உணர்ந்தார்.

லண்டனில், மெஹரா ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரையும் சந்தித்தார். 1952, செப்டம்பர் மாதத்தில் நியூயார்க் குழுவுடன் சார்மியன் உரையாடியதிலிருந்து ஒரு பகுதி:

...மெஹரா நெற்றியில் ஏற்பட்ட காயத்தைப் பரிசோதனை செய்ய, ஒரு சிறந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரிடம் அழைத்துச்

செல்லப்பட்டார். நாங்கள் புறப்படுவதற்கு முன்பு, நியூயார்க்கில் எங்களுக்குக் கிடைத்த அதே மருத்துவ ஆலோசனையை அறுவை சிகிச்சை நிபுணர் இப்போதும் வழங்கினார்: "முக்கோண வடிவ காயத்தின் தோல் மீண்டும் வளரப் போவதில்லை. அவருக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்து திசுக்களை வளரவிட்டு, தோல் ஒட்டுதல் முறையைக் கையாள வேண்டும்." அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியது தவிர்க்க முடியாததாகத் தோன்றியதால், என்ன செய்வது என்று ஒரு நீண்ட விவாதம் நடைபெற்றது. இறுதியில், நாங்கள் லோகார்னோ நகரைச் சென்றடையும் வரை காத்திருக்க முடிவு செய்து, அங்கு மீண்டும் ஒரு மருத்துவரைக் கலந்து ஆலோசிக்கும் வேளையில், அவர் எவ்வளவு நேரம் பிடிக்கும், அது என்னவாக இருக்கும் என்று எங்களுக்குச் சில யோசனைகளை வழங்க முடியும்; அதற்கிணங்க, சுவிட்சர்லாந்த் செல்லும் வேளையில் சிகிச்சை செய்ய வேண்டுமா அல்லது இந்தியா திரும்பும் வரை, ரானோ, கோஹெர் மற்றும் இன்னும் சிலருடன் அவர் தங்க வேண்டுமா, என்று முடிவு செய்யலாம். அவ்வாறு செய்ய முடியாவிடில், பாபா குழுவைப் பிரிக்க விரும்பாத பட்சத்தில் அது சாத்தியமில்லை என்று தோன்றினால், சிகிச்சையை இந்தியாவில் கவனித்துக் கொள்ள வேண்டும்.

1952, ஆகஸ்ட் 3, 4ஆம் தேதிகளில், பாபா காலை 8:00 முதல் 11:00 வரையிலும், மதியம் 3:00 முதல் 5:00 வரையிலும் '**சேரிங் கிராஸ்**' ஹோட்டலின் 46வது அறையில் மக்களை சந்தித்தார். அவரது பழைய பிரிட்டிஷ் அன்பர்கள் தவிர, கிட்டத்தட்ட 200 புதிய இறை நாட்டம் மிக்கவர்கள் பாபாவின் தொடர்பில் வந்தனர். **மிலிசென்ட் டீக்ஸ்** இங்கிலாந்து திரும்பிச் சென்று பாபாவைப் பார்த்தார்.

ஆகஸ்ட் 3ஆம் நாள் காலை 8:30 மணிக்கு, அவரைச் சந்தித்த முதல் தம்பதியர் **ஹாரி தாமஸ் ஹாப்கின்ஸன்**, 47, மற்றும் அவரது மனைவி **டோரதி ஹாப்கின்ஸன்**, 49. ஒன்பது வருடங்களுக்கு முன்னர், 1943ல், டோரதி பாபாவிடம் வந்திணைவதில் ஒரு சுவாரஸ்யமான ஆரம்பம் அடங்கியுள்ளது; அவர் அசாதாரண அனுபவங்களைப் பெறத் தொடங்கிய நேரம் அது.

டோரதியின் பார்வையில் 'என்னுடைய பாரசீக இளவரசர் என்று நான் குறிப்பிட்ட இந்தக் கதாபாத்திரம்' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. டோரதி தனது வாழ்நாள் முழுவதும் தத்துவத்தைக் கற்றறியும் தீவிர வாசகராக இருந்தார், மேலும் இந்த மர்ம மனிதன் திடீரென அவருக்கு அற்புதமான, ஆச்சரியத்திற்குரிய போதனைகளை வழங்கத் தொடங்கினார், இது முற்றிலும் புதிய பரிமாணமாக உருவெடுத்தது.

அவர் அதைப் பற்றி தனது ஆய்வாளரிடம் (மருத்துவர்) கூறிய ஒரு வார இறுதியில் அந்த மனிதர், "நீங்கள் கண்டுகொண்ட இந்த 'ஆமாம்' மனிதனைக் கைவிடாத வரை, நான் எனது ஆய்வைத் தொடர மாட்டேன். நீங்கள் பொய்

சொல்வதோடு, உங்களை நீங்களே முக்கியமானதாக மாற்றிக்கொள்ள முயற்சிக்கிறீர்கள்" என்றார்.

டோரதி, அவர் புதிதாகப் புரிந்துகொண்டதைப் பற்றி மிகவும் உற்சாகமாக இருந்தார், "இதோ பாருங்கள், நான் பொய் சொல்கிறேன் என்றால், மனோதத்துவ ஆய்வில் ஈடுபட எனக்கு எதுவும் இல்லை - நான் ஒரு முனிவர், ஞானி அல்லது அதுபோன்ற ஏதோ ஒன்றாக இருக்கவேண்டும்!" ஆய்வாளர் மேலும் சீற்றமடைந்து கடுமையான வாதத்தில் ஈடுபட்டார். அதற்குப் பிறகு டோரதி பயங்கரமான ஒற்றைத் தலைவலியுடன் வீடு திரும்பினார்.

அவர் படுக்கைக்குச் சென்ற அவ்வேளையில், அவரது முதல் கணவர், ஹக் கிங்ஸ்மில் (நன்கு பிரபலமான எழுத்தாளர்) அவரிடம், "நான் நூலகத்திற்குச் செல்கிறேன்; உங்களுக்கு ஏதேனும் புத்தகத்தை எடுத்து வர வேண்டுமா?" என்று கேட்டார்.

டோரதி, "ஆமாம், அது ஒரு நாவலாக இருக்கட்டும். எனக்கு மனோதத்துவம் அல்லது மனோ பகுப்பாய்வு பற்றி எதுவும் வேண்டாம்" என்றார்.

தேநீர் நேரத்தில், ஹக் திரும்பி வந்து, டோரதியின் படுக்கையில் **சார்லஸ் பர்டம்** எழுதிய '**தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்**' என்ற புத்தகத்தை வைத்தார். 'எனது எரிச்சல் மற்றும் பொதுவான மன உளைச்சலில், நான் அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்து தரையில் வீசி எறிந்தேன்' டோரதி நினைவு கூர்ந்தார்:

புத்தகம் கீழே விழுந்ததில் பாபாவின் புகைப்படம் இருந்த பக்கம் திறந்து எனது பார்வையில் பட்டது. ஹக் அதைக் கைகளில் எடுத்து, அவரது தகாத நடத்தைக்காக டோரதியை கண்டித்து, புத்தகத்தை அவரிடம் கொடுத்தார். டோரதி பாபாவின் புகைப்படத்தைப் பார்த்து கத்தினார். "இவர்தான் என் பாரசீக இளவரசர், என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் அந்த மனிதர் இவர்தான்!" என்று கூச்சலிட்டார்.

அவரது தலைவலியை மறந்து, புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினார். "எனது அனுபவம் உண்மையானது என்று இப்போது எனக்குத் தெரியும்," என அவர் பின்பு கூறினார். வில் பேக்கெட்டின் முகவரி புத்தகத்தின் பின்புறம் இருந்தது; டோரதி அவருக்கு எழுதியதும், அவர் உடனடியாக வந்தார், டோரதி தனக்கு நடந்ததை விவரித்தார். "எனது ஆய்வாளர் என்னுடைய சிகிச்சையைத் தொடர மாட்டார்," என்று அவர் கூறி முடித்தார்.

"சரி, இதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் உங்கள் அனுபவம் மிகவும் உண்மையானது. பாபா இப்படித்தான் பணிபுரிகிறார். பாபா உங்களை அழைக்கிறார்; அவர் உங்களை அவரிடம் அழைக்கிறார்" என்று வில் ஆலோசனை கூறினார்.

டோரதி நேரடியாக பாபாவுக்குக் கடிதம் எழுதிய வேளையில், அவர், தனது மருத்துவரிடம் மன்னிப்பு கோருமாறும், அவருக்கு மேலும் அனுபவங்கள்

ஏதேனும் இருந்தால், அவரிடம் எடுத்துக் கூற வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்.

1949ஆம் வருடம் ஹக் கிங்ஸ்மில்லின் மறைவுக்குப் பிறகு, டோரதி, டாம் ஹாப்கின்சனை மணந்தார், டோரதி பாபாவைப் பற்றி அவருக்கும் கொஞ்சம் எடுத்துச் சொன்னார்.

ஆனால் டாம் மதம், ஆன்மீகம் எதிலும் ஒரு தனிப்பட்ட ஆர்வம் காட்டியதில்லை. ஒரு நாள், டோரதி, மறு நாள் காலையில் மெஹர் பாபாவைச் சந்திக்கப் போவதாகத் தெரிவித்தார். ஆர்வத்தின் காரணமாக, டாம் அவருடன் சென்றார். அவர் சுயமாக தொழில் புரியும் ஒரு பத்திரிகையாளர் மற்றும் மக்களை சந்திப்பதில் ஆர்வம் மிக்கவர். "ஓர் எழுத்தாளரையோ, சிற்பியையோ அல்லது அரசியல்வாதியையோ சந்திக்கச் செல்வதைப்போல நானும் பாபாவை சந்திக்கச் சென்றேன்" என்று டாம் கூறினார். அவர்களது சந்திப்பின் விவரம் பின்வருமாறு:

நாங்கள் நடைபாதையில் சிறிது நேரம் காத்திருந்தோம், அங்கே கூடியிருந்த மிகவும் விசித்திரமான வகையைச் சார்ந்த கதாபாத்திரங்கள், முற்றிலும் தனிப்போக்குடைய மீன்களின் கூட்டம் என்று நான் நினைத்தேன். சிறிது நேரத்தில், டோரதியும் நானும் ஒன்றாக அழைக்கப்பட்டோம். எனது நினைவில் இருந்தது - மிகவும் சாதாரண தோற்றத்துடனான அறை, அங்கே வணிக மேலாளர்கள், தங்கள் விற்பனை அதிகாரிகளுடன் புதிய மாற்றத்தின் அடிப்படையில் மாதிரிகளைக் காண்பிப்பதற்கும், அவர்களின் பொருட்களைப் பற்றி விவாதிப்பதற்கும் சந்திக்கும் வகையில் அமைந்ததாகத் தோன்றியது. ஆனால், அங்கே விற்பனை அதிகாரிகளுக்கு பதிலாக, பல இந்திய முகங்கள் வரிசையாகத் தென்பட்டன; ஒரு மூலையில், இந்த நடுத்தர வயது மனிதர், மிகவும் முனைப்பான தோற்றத்துடன், வெள்ளை அங்கியில், ஒரு படுக்கையில் அமர்ந்திருந்தார், ஏனெனில் அவரது காலில் கட்டு போடப்பட்டிருந்தது.

அவர் எங்களை வரவேற்று டோரதியை தனக்கு எதிரே அமரச் சொன்னார். அவர் பக்கத்தில் அமரும்படி என்னை அழைத்தார். நான் அங்கே அமர்ந்தேன். பாபா உடனே டோரதியின் பக்கம் திரும்பி, **"எதற்காக வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

டோரதி பதிலளிக்க முயன்றார், ஆனால் அவரால் பேச முடியவில்லை, எவ்வளவோ முயற்சித்தும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாத நிலையில் ஏதோ உளறி, "பாபா... என்னால்... பேச முடியவில்லை!" என்று மட்டும் தடுமாற்றத்துடன் கூறினார்.

பாபா உடனே, **"நானும் பேசுவதில்லை"** என்றார்.

"ஆமாம், ஆனால் நீங்கள் உங்கள் சுய விருப்பத்தால் பேசவில்லை, நான் பேச விரும்புகிறேன் ஆனால் முடியவில்லை."

பாபா அவரை மிகவும் நெருக்கமாக உற்று பார்த்து, தனது கைகளை மேல்நோக்கி வீசினார் (டோரதி அவர் அதிகமும் அறிவாற்றலுடன் வாழ்ந்தார் என்ற அர்த்தத்தில் அதைப் புரிந்துகொண்டார்). பாபா அவரை மிகவும் இனிமையாகப் பார்த்து, கையைப் பற்றிக்கொண்டு, **"நான் உங்களுக்கு உதவுகிறேன்"** என்றார்.

பாபா, இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த டாம் பக்கம் திரும்பினார்; அவர் தனிப்பட்ட முறையில் ஈடுபாடு காட்டாமல், ஒரு பத்திரிக்கையாளர் என்ற கோணத்தில் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் அந்தக் காட்சியால் பெரிதும் கவரப்பட்டார், ஆனால் டோரதி மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

பாபா அவரைக் கூர்ந்து நோக்கி, **"ஏன் இங்கு வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

பாபா இவ்வாறு கேட்டதும், அவருடைய வெளியுலக சிந்தனையிலிருந்து, டாம் திடீரென தற்போதைய நிகழ்வுக்கு ஈர்க்கப்பட்டதாக உணர்ந்தார். அவர் மேலும் நினைவு கூர்ந்தார்:

என் தலையில் உதித்த முதல் விஷயத்தை நான் கூறினேன்: "நான் உங்களைப் பார்க்க விரும்பினேன்." ஆழ்ந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த, ஒருவர் வழங்கக்கூடிய மிக அற்புதமான பதில் இது என்பது போல, பாபா தனது கரங்களை உயர்த்தினார்.

பின்னர் என்னைப் பார்த்து, **"உங்களுக்கு என்னைப் பிடிக்குமா?"** என வினவினர்.

இது இதயத்தை முற்றிலுமாகத் துளைக்கும் ஓர் அம்பாக இருந்தது. நான் திடீரென, 'நான் உங்களை நேசிக்கிறேன், நான் உங்களை நேசிக்கிறேன் பாபா' என்று சொல்ல விரும்பினேன். ஆனால், நிச்சயமாக, உள்ளார்ந்த தயக்கம், சம்பிரதாயம் மற்றும் அகங்காரத்தால் இதைச் சொல்ல முடியாத அளவுக்கு முடங்கிப் போனேன். மிகவும் சிரமப்பட்டு, கடைசியில், "ஆமாம், பாபா, எனக்கு உங்களைப் பிடிக்கும்" என்று கூறி சமாளித்தேன்.

பாபா புன்னகைத்து, **"எனக்கும் உங்களைப் பிடிக்கும்"** என்று கூறிவிட்டு, என்னைத் தொட்டார்.

அன்று முதல், டாம் & டோரதி ஹாப்கின்சன் இருவரும் தம்மை பாபாவுக்கு அர்ப்பணித்து, எப்பொழுதும் பாபாவின் பாதங்களைப் பற்றிக்கொண்டிருந்தனர்.

பாபாவைப் பற்றி லண்டனில் பலரிடம் டோரதி கூறியிருந்தார். அவர்களில் **கென்னத் & ஆலிஸ் லாட்டன்** என்ற இளம் தம்பதியினர் தங்கள் மூன்று குழந்தைகளான செட்ரிக் பீட்டர், (6), எட்வின், (3) குழந்தை டேவிட் ஆகியோருடன் சேரிங் கிராஸ் ஹோட்டலுக்கு வந்தனர். பாபாவை, அவதார

புருஷராக ஏற்றுக்கொள்வது கடினமாக இருந்ததால், ஆலிஸ் முதலில் அங்குச் செல்லத் தயங்கினாலும், மொத்த குடும்பமும் ஒன்றாக உள்ளே நுழைந்தது. கென் பாபாவின் முன் மண்டியிட்டு நின்றார்: 'அவர் பேசவில்லை என்ற உண்மையை நான் உணரவில்லை,' என்று நினைவு கூர்ந்தார். 'அப்போது எனது ஒரே உணர்வு என் இதயம் உருகுவது போல் இருந்தது.'

ஆலிஸ் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தார், பாபா குழந்தையின் தலையில் கைகளை வைத்து அவர்களிடம், **"உங்கள் இதயத்தைத் திறந்துவிடுங்கள், உங்கள் இதயத்தைத் திறந்துவிடுங்கள்!"** என்றதும் ஆலிஸின் மனக்கசப்புகள் அனைத்தும் மறைந்துவிட்டன, அவர் எப்போதும் 'அவருடையவராக' மாறிவிட்டார்.

ஆஸ்திரேலியாவில் வாழும் ஸ்வீடன் நாட்டுப் பெண்மணி **மே லண்ட்கிஸ்ட்** ஒரு நாள் பாபாவைப் பார்க்க வந்தார். சுதந்திரமான இயல்புடையவர், அவர் தனது சுய கருத்துப்படி பாபாவின் பணியைச் செய்ய விரும்பினார், ஆனால், அதே நேரத்தில், அவர் பாபாவுக்குக் கீழ்ப்படியத் தயாராக இருந்தார். பாபா அவரை மீண்டும் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று ஃபிரான்சிஸ் பிரபாஸனின் கீழ் பணிபுரியுமாறு அறிவுறுத்தியதும், அதைச் செய்ய அவர் இணக்கம் தெரிவித்தார்.

காப்பீட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த **டக்ளஸ் எச். ஈவ்** இறை நாட்டம் மிக்கவர்; 1930ஆண்டுகளில் சார்லஸ் பர்டம், வில் பேக்கெட் ஆகியோரிடமிருந்து பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார். பாபாவுடனான தனிப்பட்ட நேர்காணலுக்குப் பின்னர், அவர் தனது மனைவி **மோலி**, 41, மற்றும் மகள் ஆன், 16 ஆகியோரை அழைத்து வந்தார். இந்த நேரத்தில், மோலி பாபாவிடம் முழு ஈடுபாடு காட்டவில்லை.

பாபா, மோலியிடம், **"என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**

"ஆமாம் கொஞ்சம்" என்றார்.

**"சரி, கடவுளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?"**

"ஓ தெரியும்."

**"அப்படியானால் என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும், அப்படித்தானே?"** என்றார்.

ஐம்பத்திரண்டு வயதான **ஃப்ரெட் மார்க்ஸ்** என்பவர் முதலில் செய்தித்தாள் மூலமாக, பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார், மேலும் 1938இல் அவர் வில் பேக்கெட்டை சந்தித்தார். அவர் தனது வாழ்நாளில் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மரணத்திலிருந்து அதிசயமாகக்

காப்பாற்றப்பட்டதாகவும் - பாபாவால் அவருக்கு இப்போது கிடைத்த அதிர்ஷ்டம் என்றும் கருதினார்.

பாபாவுடனான நேர்காணலைக் குறித்து அவர் கூறியதாவது: நான் அவருடன் நேருக்கு நேர் அமர்ந்திருந்தாலும், எனது முகத்திரை காரணமாக, அவருடைய உண்மை நிலையைப் பற்றிய ஒரு பார்வை கூட எனக்கு இல்லை என்பதை நான் அறிவேன். காந்தம் இரும்பை ஈர்ப்பது போல நான் அவரிடம் தவிர்க்க முடியாமல் ஈர்க்கப்பட்டதாக உணர்ந்தேன். பாபாவைப் பார்ப்பது, அறிவது அல்லது உணர்வது என்பது மனிதனின் அனைத்துத் தேடல்களுக்கும் ஒரு முடிவாகும். அவரில், விரும்பி அடைவதற்கு என்று வேறு எதுவும் இருக்க முடியாது, அவருக்கு வெளியேயும் எதுவும் இல்லை.

42 வயதான **ஜாய்ஸ் பர்ட்** பத்து வருடங்களாக பாபாவை சந்திக்கக் காத்திருந்தார். அவர் கணவருடன் வந்ததை இவ்வாறு நினைவு கூர்ந்தார், "பாபாவின் கண்கள்... அன்பின் இருள் நிறைந்த குளங்கள். புரிந்து கொள்ள முடியாதது, ஆனால் மிகவும் உண்மையானது. அவரது வெளிப்பாடு எல்லையில்லா இரக்கம் நிறைந்திருந்தது, நான் இப்போது நினைவு கூர்ந்தால், அவர் மிகவும் கவலை தோய்ந்து காணப்பட்டார். அமெரிக்காவில் நடந்த விபத்துக்குப் பின்னர் அவர் கால் முறிவால் அதீத கஷ்டங்களை அனுபவிப்பதாக நான் நினைக்கிறேன்."

டிலியாவின் சகோதரி மின்டா, பல வருடங்களுக்குப் பிறகு பாபாவைப் பார்க்க வந்தார். மிகவும் கலகலப்பான 'ஷாலிமார்' என்று அழைக்கப்பட்ட அவர், ஒரு காலத்தில் இருந்ததைப் போல தன் மீது பாபா அக்கறை காட்டவில்லை என்பதை கவனித்தார். அவர் இதைப் போலித்தனத்துடன் புகாராக முறையிட்ட போது, பாபா எழுத்துப்பலகையில், **"என்னை விட்டுப் பிரிந்தது நீங்கள்தான், உங்களை விட்டு நான் ஒருபோதும் போகவில்லை"** என்று எடுத்துரைத்தார்.

பாபாவை முதன்முதலில் சந்தித்த மற்றுமொரு நபரிடம் அவர் கூறினார்:

**நீங்கள் பல ஆண்டுகளாக என் அன்பைக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும், அதனால்தான் நான் இதைச் சொல்கிறேன், என் அன்பை உங்களுக்குத் தருகிறேன். உங்கள் மனசாட்சியைப் பின்பற்றுவதே உங்களுக்கு உதவுவதற்கான சிறந்த வழி, உங்கள் அன்பைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அன்பு எனக்கு விலைமதிப்பற்றது.**

ஒரு குழுவிடம் பாபா இவ்வாறு கூறினார்:

**இன்று உங்களைப் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த உண்மையை நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கவலைப்படுவதற்கென எதுவுமில்லை, மனமுடைந்துபோகவும்**

**ஒன்றுமில்லை. நாம் ஒவ்வொருவரும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டியவர்கள். நம் அனைவருள்ளும் இருக்கும் இறைவனை, அளவிறுதியற்ற மகிழ்ச்சியாக அனுபவிக்க வேண்டும், அது இறைவன் மீதான அன்பின் மூலம் மட்டுமே செய்ய முடியும். உண்மையைக் கண்டறிய, ஒருவர் பகுத்தாய்வு மற்றும் புத்திசாலித்தனத்தை மட்டும் சார்ந்திருக்காமல் இதயத்தைச் சார்ந்திருக்க வேண்டும். அறிவார்ந்த புரிதல் என்பது இதயத்தின் அனுபவத்தைப் போல முக்கியமானதல்ல. கடவுள் மட்டுமே உண்மையானவர், அவரைப் பகுத்தாய்வு செய்ய முடியாது. முகாந்தரத்துடன் நியாயப்படுத்தி அவரை அடைய முடியாது. ஒருவர், அன்பின் மூலமாக அவரைக் கண்டறியும் போது, ஒவ்வொருவரிடமும் அவரைக் காண்கிறார்.**

**நம் அன்றாட வாழ்வில் கடவுளை நாட வேண்டும். கடவுளைத் தேடிக் கண்டுகொள்ள வேண்டும்; கடவுள், தன்னைத் தேடுபவர்களை நேசிக்கிறார், நாம் அவரை முழு மனதுடன் தேடும்போது, அவரை நம்மில் காண்கிறோம். அன்றாட வாழ்வில் எல்லையற்ற இறைவனை அறிந்துகொள்வதே வாழ்க்கையின் குறிக்கோள். பாபா தனது அன்பை உங்களுக்கு வழங்குகிறார், அந்த அன்பே இறுதியில் கடவுளைக் கண்டுகொள்ள உதவியாகவும், உறுதுணையாகவும் இருக்கும்.**

**கவலைப்படாதீர்கள். என் அன்பு உங்களுக்கு வேண்டிய வலிமையையும் நம்பிக்கையையும் வழங்கும், நீங்கள் கடவுளுக்கு சொந்தமானவர் என்பதை உணர வைக்கும். முழு மனதுடன் உண்மைப்பொருளைத் தேடுங்கள், பாபா உங்களுக்கு உதவியாக இருப்பார் - மக்கள் கடவுளைத் தேடவும், அவரைக் கண்டுகொள்ளவும், அவரைக் காணவும் உதவுவதற்காகவே நான் இந்த உலகில் இருக்கிறேன்.**

**உங்கள் பணியைத் தன்னலமின்றி செய்யுங்கள், நீங்கள் அதைக் கடவுளுக்காக செய்யுங்கள். என் அன்புடன் நான் உங்களுக்கு உதவுவேன், நீங்கள் இதைச் செய்ய முடியும்.**

**காலில் காயம் ஏற்பட்டதைப் பற்றிய கவலைக்கு பதிலளித்த பாபா, எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:**

**விபத்து முக்கியமல்ல, கடவுளை எல்லா இடங்களிலும், எல்லாரிடமும் பார்த்து, அவருடன் ஒன்றிணைவது மட்டுமே முக்கியம். அன்றாட வாழ்வில் எல்லையற்ற கடவுளை அறிவதே வாழ்க்கையின் குறிக்கோள், அனைவரும் உயிர்வாழ்வதே அந்த இலக்கை அடைவதற்காகும்.**

இந்தக் காலகட்டத்தில், பாபா தனது ‘முழுநிறை சுதந்திர வாழ்வில்’ இருந்தார், அதாவது, சுதந்திரம் பிணைப்புகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் கட்டம்; பாபா, லண்டனில் ஆகஸ்ட் 3, 4 மாலைகளில் திரைப்படங்களுக்குச் சென்றார், பிற நிகழ்ச்சிகளிலும், பொழுதுபோக்குகளிலும் பங்கேற்றார்.

எலிஸபெத், நோரினா இருவரையும், மர்டில் பீச் மையத்தையும் கண்காணித்து, கவனித்துக் கொள்வதில் உதவுவதற்காக, கிட்டி டேவியை லண்டனிலிருந்து மீண்டும் மர்டில் பீச்சிற்கு பாபா அனுப்பி வைத்தார். எலிஸபெத் கார் விபத்திலிருந்து படிப்படியாக குணமடைந்து வந்தார். ஒரு நாள் யூபான் டூன்ஸில், அவர் குணமடைந்து வரும் காலத்தில், பாபா, கிட்டி மற்றும் ரானோவிடம், **"நீங்கள், எங்களுடன் இந்தியாவுக்குத் திரும்பி வராமல், மர்டில் பீச் மையத்தில் தங்கியிருந்து, எலிஸபெத்துக்கு உதவுவீர்களா?"** என்று கேட்டார்.

"ஏன் 'ஆமாம்', நிச்சயமாக, பாபா," கிட்டி தயக்கமின்றி பதிலளித்தார். பாபா, **"ஒரு வருடம்... நான் திரும்பி வரும்வரை"** என்று குறிப்பிட்டார். எலிஸபெத்திடம் அவர் விருப்பத்தை, பாபா கேட்டதற்கு, அவர் 'கிட்டி' என்று பதிலளித்தார். இவ்வாறு, தனது பிரியமானவருடன் 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்கிய பிறகு, கிட்டி அவரது உத்தரவைப் பின்பற்றி, பாபாவின் சகவாசத்திலிருந்து பிரிந்தார். கிட்டி அவரது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் மர்டில் பீச் மையத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

1952, ஆகஸ்ட் 6 புதன்கிழமை அன்று, சார்மியன் பாபாவையும் மெஹராவையும் விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். டாக்டர் டான், ஸரோஷ், ஆதி சீனியர் மூவரும் வேறு காரில் சென்றனர். ரானோ, டிலியா, கோஹெர், மெஹரு, மணி ஆகியோர் வாடகைக் காரில் பின்தொடர்ந்தனர். லண்டனிலிருந்து, சுவிஸ் எயர் 11இல், குழு காலை 11:30 மணிக்கு ஸூரிச் சென்றது. டிலியாவும் சார்மியனும் உடன் சென்றனர். இரண்டரை மணி நேரத்திற்கு பின்னர் அவர்கள் தரையிறங்கிய போது **ஐரீன் பில்லோ** அவர்களை எதிர்நோக்கி, விமான நிலையத்தில் காத்திருந்தார். பாபாவின் வருகைக்காக அவர் வேறொரு காரையும் ஏற்பாடு செய்திருந்தார். அவர்கள் **லோகார்னோ**வுக்குச் சென்று, அங்கு அவர்கள் 'ஸோல்டுனோ'வின் புறநகர்ப் பகுதியில் அமைந்த ஹெடி மெர்டென்ஸின் இல்லமான 'ரோன்கோ டீ ஃபியோரி'யில் தங்கினர். பக்கத்து வீட்டின் சொந்தக்காரர் வெளியூரில் இருந்ததால் பாபா இங்கே தங்கியிருந்தார். ஐரீன், ஹெடி இருவரும் பாபாவுடன் மெஹராபாத் ஆசிரமத்தில் தங்கியிருந்தனர், மேலும் சுவிட்சர்லாந்தில் அவரது விருந்தோம்புநர்களாக இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

மெஹர்ஜி, டாக்டர் நீலு, குஸ்தாஜி மூவரும் அடுத்த நாள் வந்தனர். பாபாவின் தரிசனத்திற்காக லோகார்னோவிற்கு வந்த பலரில் அனிதா, ரோஜர் வைலார்ட் இருவரும் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர்; **மேக்ஸ் அடோல்ஃப் ஹேஃபிலிகர்**, 40, மற்றும் அவரது மனைவி, கிஸிலா ஸோஃபியா, 42, ஹெடி மெர்டன்ஸ் இல்லத்தில் தங்கி அவர்களுக்கு உதவியாக இருந்தனர். மேக்ஸ், 1941ஆம் ஆண்டில் மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, சில மண்டலியுடன்

கடிதங்களைப் பகிர்ந்து கொண்டார், ஆனால் இது அவரது முதல் சந்திப்பு. பாபா அவர்களின் மூன்று மகள்களுடன் விளையாடினார்: ரோனா, (12); மோனிகா, (11); மற்றும் வெரீனா, (8) , அவர்கள் அனைவரும் பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர்.

ஒரு நாள் மேக்ஸ் பாபாவையும் டாக்டர் டானையும் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். ('பாபா ஒரு படைத் தளபதியைப் போல் இருந்தார்' என்று அவர் நினைவு கூர்ந்தார்.) மருத்துவர் பாபாவின் கை, கால்களுக்கு மஸாஜ் மற்றும் சிறிது உடற்பயிற்சி அளிக்கவும் அறிவுறுத்தினார். எனவே, உள்ளூர் மஸாஜ் நிபுணர் தினமும் பாபாவுக்கு மஸாஜ் செய்ய வரவழைக்கப்பட்டு, பாபாவை ஊன்றுகோலுடன் நடக்க வைத்தார். காலில் வலி அதிகமாக இருந்தாலும், டாக்டர் டானின் உதவியுடன் சில அடிகளை எடுத்து வைக்கத் தொடங்கினார்.

மெஹெரா சுவிட்சர்லாந்தின் லோகார்னோவில் ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரையும் சந்தித்தார். சார்மியன் அவரது நாட்குறிப்பில் பதிவு செய்ததற்கு இணங்க:

லோகார்னோவை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, மெஹரா மீண்டும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அறுவை சிகிச்சை நிபுணர் காயத்தின் மீது உறைந்த குருதிப் பொருக்கையை எடுத்துவிட்டு, தோல் சரியாகிவிட்டதாகவும், நாளடைவில் சீராக வளரும், மேலும் அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவையில்லை என்றும் உடனடியாக அறிவித்தார். லோகார்னோவிலிருந்து புறப்படுவதற்கு முந்தைய நாள் பாபா, என்னை உள்ளே அழைத்து, மெஹராவின் காயத்தைப் பார்க்கக் கூறினார். அவர்கள் கட்டுகளைக் கழற்றி, பல நாட்கள் களிம்புகளால் மூடி வைத்திருந்தனர், ஒரு கண்ணில் சிறிது வீக்கத்தைத் தவிர, காயம் முற்றிலும் குணமாகிவிட்டது. அதனால் அவர் அப்போது நன்றாக இருப்பதாகத் தோன்றியது.

பாபா, மெஹெராவிடம் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தார், சார்மியன் இது குறித்து கூறியதாவது:

தற்செயலாக, இந்த மக்கள் அனைவருடனும் அவர் மும்முரமாக இருந்ததைப் போலவே, நாங்கள் அனைவரும் எங்கள் பணிகளில் மும்முரமாக இருப்பதையும், மேலும் செய்ய வேண்டிய விஷயங்கள் என்ன என்பதை எடுத்துரைக்க பாபா, அவருடைய நேரத்தைக் கண்டுகொண்டார். ஒவ்வொரு நாளும் அனைவரும் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதைத் தெரிந்துகொள்ள, மெஹராவை அவர் அழைக்காமலோ அல்லது மெஹரா அவரை அழைக்காமலோ இருந்த நாளே இல்லை. அவர்கள் அமெரிக்காவில் அல்லது ஐரோப்பாவில் இருந்த நாட்களில், நான் அங்கு இருந்த வேளையில்,

ஒருவரையொருவர் விட்டு விலகியிருந்த அல்லது ஒருவரையொருவர் நலம் விசாரிக்காமல் இருந்த நாளே கிடையாது என்றுதான் கூறவேண்டும்.

சிறந்த சிறுவனைத் தேடும் பணியை மீண்டும் தொடங்கும்போது, பாபா இரவுப் பாதுகாவலர் பணியைச் செய்யக்கூடிய ஒரு சிறுவனைத் தனதருகில் வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினார். ஐரீன் அவரது மருமகன், (14 வயதைத் தாண்டியவர்), **கொன்ராட் பெனடிக்ட் கோத்னர்** என்ற இனிமையான சிறுவனை அழைத்து வந்தார். பாபா அவரை விரும்பினார்; அவரை தன்னுடன் வைத்து, ரானோ, டாக்டர் நீலு இருவருடன் ஒவ்வொரு இரவும் அவருக்கு இரண்டு மணி நேரம் பாதுகாவல் பணியை வழங்கினார்.

ஒரு நாள் இரவு **கொன்ராட்**டின் கண்காணிப்புப் பணி முடிந்ததும், பாபா படுக்கை அருகில் இருந்த மணியை அடித்தார்; எவரும் பதிலளிக்காததால், அவர் மணியை வேகமாக ஒலிக்கச் செய்தார். கடைசியில் ரானோ ஓடி வந்த போது, பாபா அவரிடம், **"நீங்கள் எங்கே இருந்தீர்கள்? நீங்கள் இப்போது கண்காணிப்புப் பணியில் இருக்க வேண்டிய நேரம்! அதனால்தான் நான் மணியை ஓசையாக அடித்துக் கொண்டிருந்தேன்!"** என்றார்.

ரானோ, "ஆனால், பாபா இது எனது நேரமில்லை. கொன்ராட் எங்கே? அவனுக்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது" என்று பதிலளித்தார்.

பாபா தனது அறையிலிருந்த கடிகாரத்தைப் பார்க்கும்படி ரானோவிடம் சைகையால் தெரிவித்தார்; அவர் கண்காணிப்பில் இருக்கும் நேரம் கடந்துவிட்டதைக் கண்டு ரானோ திடுக்கிட்டார்; பாபாவிடம் மன்னிப்பு கோரி அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்தார்.

ஆனால் சில இரவுகளுக்குப் பின்னர், அதே சம்பவம் மீண்டும் நிகழ்ந்தது; பாபா அழைத்தார், யாரும் வரவில்லை. ரானோ தோன்றியபோது அவர் வருவதற்கு இன்னும் நேரம் ஆகவில்லை என்றார். ஆனால் அவர் கைக்கடிகாரத்தை பாபாவின் அறையிலிருந்த கடிகாரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், பாபாவின் கடிகாரம் ஒரு மணி நேரம் முன்னதாக இருப்பதைக் கண்டார். கொன்ராட் தனது கடமையை முடித்துவிட்டு தூங்குவதற்காக, கடிகாரத்தை ஒரு மணிநேரம் முன்னே வைத்துக் கொண்டது அப்போது தெரியவந்தது. பாபாவிடம் சிறுவனது தந்திரத்தை எடுத்துக் கூறியதும், அவனுடைய புத்திசாலித்தனத்தை எண்ணி நன்றாக சிரித்துவிட்டு, அந்த சிறுவனின் கடமையை ஒரு மணிநேரம் குறைத்துக்கொண்டார்.

ஆகஸ்ட் 14 அன்று, குஸ்தாஜி, மெஹர்ஜி, ஸரோஷ், ஆதி, டாக்டர் நீலு ஆகியோரை பாபா இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். ஆண் மண்டலியில், டான் மட்டுமே அவருடன் இருந்தார். பாபா, பெண் மண்டலியுடன் உல்லாசப்

பயணங்களுக்குச் சென்றார், 18ஆம் நாள் அனைவரும் காரில் ஜெனிவா புறப்பட்டுச் சென்றனர்.

பாபாவும் குழுவும் அடுத்த நாள் காலை ஜெனிவாவிலிருந்து விமானத்தில் புறப்பட வேண்டும், எனவே அவர்கள் அன்றிரவு 'கார்னவின்' ஹோட்டலில் தங்கினர். மும்பையில் தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாக, தங்கள் விமானம் ரத்து செய்யப்பட்டதாக 'ஏர் இந்தியா' அறிவித்ததால், அடுத்த நாள் இந்தியாவுக்குச் செல்லும் விமானத்தில் இருக்கைகளை முன்பதிவு செய்ய முயற்சித்து, இறுதியாக ஆகஸ்ட் 21 வியாழன் மதியம் மாலை 5:40 மணிக்கு பாபாவும் பெண் மண்டலியும் 'ஏர் ஃபிரான்ஸ் 437' வழியாக, பாரிஸுக்குச் சென்று, அன்று இரவு 11:00 மணிக்கு 'ஏர் ஃபிரான்ஸ் 189' விமானம் வழியாக, கராச்சி வந்தடைந்தனர். சில நாட்களுக்குப் பின்னர் இங்கிலாந்து வழியாக டான் திரும்பிச் சென்றார். டிலியா முந்தைய நாள் லண்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார், மேலும் சார்மியன் ஒரு வாரம் சுவிட்சர்லாந்தில் தங்கியிருந்தார்.

அவர்களின் விமானம் அடுத்த நாள் இரவு 9:00 மணிக்கு, கராச்சியில் தரையிறங்கியது. மினூ காரஸ் மட்டுமே கராச்சி விமான நிலையத்திற்கு அழைக்கப்பட்டார், ஆனால் அவருடன் ஆதி துபாஷ் மற்றும் மினூவின் வருங்கால மனைவி ஃப்ரீனி பட்டேலும் வந்திருந்தனர். மினூ மட்டுமே பாபாவை வரவேற்க முன் சென்றார். பாபா மற்றும் குழுவிற்கு இந்தியா புறப்பட முன்பதிவு செய்வது கடினமாக இருந்தது, ஆனால் மினூ கப்பல் துறையில் பணிபுரிந்ததால், ஆதியால் அதை ஏற்பாடு செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

பாபா அவரை அழைத்து, **"ஏன் ஒளிந்திருக்கிறீர்கள்? ஏன் முன்வரவில்லை?"** என்று கேட்டார்.

அதற்கு ஆதி, "நீங்கள் அதை அனுமதிக்கவில்லை" என்றார்.

பாபா மகிழ்ச்சியடைந்தார். பாபாவும் பெண்மணிகளும் விமான நிலைய அறைகளில் தங்க வைக்கப்பட்டனர். மினூ இரவில் பாபாவின் வாசலுக்கு வெளியே கண்காணித்து வந்தார். மறுநாள் காலை, ஆதி, மீண்டும் அழைக்கப்பட்டு அவர்களின் விமான டிக்கெட்டுகளை ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டார். அவரது தாயார் நெய்ஸ், மனைவி ரோடா மற்றும் இரண்டு சிறு மகன்கள், பீலாமாய் ஆகியோரும் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். எப்படியோ, ஆதியால் இந்தியாவிற்குச் செல்ல ஒரு சிறிய விமானத்தில் நான்கு இருக்கைகளை ஏற்பாடு செய்ய முடிந்தது; மெஹரா, மணி, கோஹெர் ஆகியோருடன் பாபா, மும்பைக்குப் புறப்பட்டார். அடுத்த நாள் புறப்பட்ட விமானத்தில் மெஹரு, ரானோ இருவரும் பின்தொடர்ந்தனர். பாபா மாலை 6:10 மணிக்கு மும்பை வந்து இறங்கினார். 1952, ஆகஸ்ட் 23 அன்று,

மெஹராஸாத்துக்கு, நேரடியாகப் புறப்பட்டுச் சென்று, அடுத்த நாள் அதிகாலை 1:30 மணிக்கு வந்தடைந்தார்.

மெஹராஸாத் வந்ததும் பாபா மகிழ்ச்சியாக இல்லை. அவர், மேல் மாடியில் தனது வழக்கமான அறையைப் பயன்படுத்த விரும்பினாலும், கீழே அமைந்த படுக்கையறை அவருக்காக தயார் செய்யப்பட்டிருந்ததால் அவர் வருத்தமடைந்தார். இரண்டாவதாக, பாபா அவரை நவம்பர் மாதத்தில் திரும்பி வருமாறு கூறியிருந்தும், கிருஷ்ணா இரவு கண்காணிப்புப் பணிக்காகக் காத்திருந்தார். மறுநாள் பாபா கிருஷ்ணாவிடம் ஒரு சிறுவனைத் தேடி அழைத்து வருமாறு அனுப்பிவைத்தார். ஏக்நாத், டாக்டர் நீலு இருவரும் இரவு நேரக் கண்காணிப்புப் பணியை பகிர்ந்து கொண்டனர்.



மெஹர் பாபா - பூனா, செப்டம்பர் 1952

# அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' மெஹராபாத் கூட்டங்கள்

**(Meherabad Fiery Free Life Meetings)**

மெஹர் பாபா திரும்பி வந்த மறுநாள், அஹமதுநகரிலிருந்து வாடகைக் கார் ஒன்று மெஹராஸாத்தில் வந்து நின்றது. அதில் பூனாவைச் சேர்ந்த ரங்கோலே, லக்ஷ்மிகாந்த் தாடே, சுபத்ரா பண்டெலு ஆகியோர் இருந்தனர். சுபத்ரா, தோற்றத்தில் எலும்பும் தோலுமாக இருந்தார். அவர் காசநோயின் மூன்றாவது கட்டத்தில் இருந்ததாகக் கூறி, அவருடைய மருத்துவர்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர். பெற்றோருக்கும் தெரியாமல், அமைதியாக வீட்டை விட்டு வெளியேறி, பூனாவிலிருந்து தனியாகப் பயணம் செய்தார். வாசலுக்கு வெளியே காவல் புரிந்த பைதூல், பாபாவின் கட்டளைப்படி, அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். பாபா, மக்களைப் பார்ப்பதை நிறுத்திவிட்டதால், எவரும் உள்ளே நுழையாமல் இருப்பதை உறுதிப்படுத்த பைதூலுக்கு உத்தரவிடப்பட்டது. தாடே, ரங்கோலே இருவரும், அவர்கள் வந்ததை, பாபாவிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்ட பின்னரும், அவரது கட்டளையை பின்பற்றி, பைதூல் மீண்டும் அவர்களை வெளியேறுமாறு கூறினார்.

கார் சத்தத்தைக் கேட்டு, பாபா, காக்காவை அனுப்பி வைக்க, அவர் காரிலிருந்தவர்களைப் பற்றி பாபாவுக்குத் தெரிவித்ததும், பாபா மூவரையும் அழைத்தார்; தாடே, ரங்கோலே இருவரும் பாபாவை அணுகும் வேளையில் சுபத்ராவையும் அழைத்துச் செல்ல உதவினர். பிரதான வீட்டின் வராந்தாவிலிருந்து அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்த பாபா, சுபத்ராவைத் தனியாக விடுமாறு சைகையால் தெரிவித்தார். மிகுந்த தயக்கத்துடன் அவர்களும் அப்படியே செய்தனர். சுபத்ரா மிகவும் பலவீனமான நிலையில் இருந்தபோதிலும், எப்படியோ பாபாவிடம் சிறிது தூரம் நடந்து சென்று, அழுதுகொண்டே பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார். சில கணங்களுக்குப் பிறகு, பாபா அவரிடம், **"ஏன் வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

"உயிரைத் துறப்பதற்கு முன் உங்கள் தரிசனத்திற்காக," அவர் பதிலளித்தார். "என்னைக் காப்பாற்ற முடியாது என்று டாக்டர்கள் கூறினாலும், இப்போது நான் உங்களைப் பார்த்துவிட்டதால் நான் இனி நிம்மதியாக உயிரை விடமுடியும்."

**"என்னை யார் என்று நினைத்தீர்கள்?"** பாபா கடுமையான தொனியில் கேட்டார்.

"பரமாத்மா!"

**"எனவே பரமாத்மாவாக நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் சாக மாட்டீர்கள்! என் மீது நம்பிக்கையுடன் இருங்கள்!"**

பாபா அவரிடம் பூனாவிற்குச் செல்லும் முதல் பேருந்தில் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தி, அவர் முதலாவதாக சந்திக்கும் மருத்துவரிடமிருந்து இரண்டு மாதங்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்டார்: **"பூனாவுக்குத் திரும்பிச் சென்றதும், வேறு ஒரு மருத்துவமனைக்குச் சென்று, மருத்துவரின் அறிவுறுத்தல்களை அப்படியே பின்பற்றுங்கள். நீங்கள் மருந்து உண்ணும் ஒவ்வொரு வேளையும் என் பெயரை நினைவில் கொள்ளுங்கள். நான் உங்களுடன் இருப்பேன். நீங்கள் நலம் பெறுவீர்கள். எவரேனும் உங்களைத் தூக்கிக் கொண்டுபோய்** (சலவைத் தொழிலாளி துணிகளைத் துவைப்பது போல) **கல்லில் அறைந்தாலும் நீங்கள் இறக்க மாட்டீர்கள் என்று தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன்!"**

பூனாவில், சுபத்ராவால் படுக்கையை விட்டு வெளியே வரக்கூட முடியவில்லை. அவர் அங்குத் திரும்பி வந்து, பாபாவின் கட்டளைப்படி சிகிச்சை எடுத்து பூரண குணமடைந்தார்.

மெஹராஸாத்தில், பாபா தனது காலுக்கு தினசரி பயிற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினார். இதற்கிடையில், அமெரிக்காவில் பாபாவின் விபத்து குறித்த ஒரு செய்தி 'டைம்ஸ் ஆ∴ப் இந்தியா' பத்திரிகையில் வெளிவந்தது. இதன் விளைவாக, மெஹராவின் மறைவு குறித்த தவறான வதந்தி, பாபாவின் கடுமையான எதிர்ப்பாளரான கர்னல் எம்.எஸ். ஈரானியின் காதுகளை எட்டியது. மெஹரா கர்னலின் மருமகள். எனவே, பாபா விரும்பியபடி, அவருக்குப் பின்வரும் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது: **"மெஹரா உயிருடன் இருக்கிறார், அன்பு ஆசீர்வாதம், மெஹர் பாபா."**

கர்னல், பாதிரியின் தாய்வழி மாமாவும் என்பதால், பாபா, பாதிரியைப் பூனாவுக்கு அனுப்பி, மெஹராவின் நல்வாழ்வை உறுதிப்படுத்தினார். பாதிரி பிற்பகல் மூன்று மணியளவில் அவரது இல்லத்திற்கு வந்தார், கர்னல் தூங்கிக் கொண்டிருந்ததால் அவரைப் பார்க்க ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. நான்கு மணிக்கு அவரை சந்தித்து, பாதிரி, "மாமா, மெஹரா நலமாக இருக்கிறார். அவர் இறந்துவிட்டதாக வெளிவந்த வதந்தி உண்மையல்ல" என்றார்.

"அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" கர்னல் கோபத்தில் வெடித்தார்.

"இந்தச் செய்தியை உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கவே நான் வந்துள்ளேன்" என்று பாதிரி விளக்கினார்.

மேலும் சீற்றமடைந்த கர்னல், "உங்கள் செய்தி எனக்குத் தேவையில்லை! மெஹர் பாபா தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்?

அவருடைய 'அன்பு ஆசீர்வாதங்களை' எனக்கு அனுப்ப அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? அவர் எனது அன்பு ஆசீர்வாதங்களையும் ஏற்க வேண்டும்!"

"நீங்கள் அவருக்கு உங்கள் ஆசீர்வாதங்களை வழங்கினால், அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார் என்று நான் நம்புகிறேன்," என்று ஏளனத்துடன் எடுத்துரைத்தார், "ஆனால் ஆசீர்வாதத்தை வழங்குவது உங்களைப் பிணைக்கும், எனவே அதை வழங்குவதற்கு முன் நீங்கள் இருமுறை யோசிப்பது நல்லது."

கர்னல் மிகவும் எரிச்சலடைந்தார், பாபாவிடமிருந்து பெறப்பட்ட தந்தியில் சில வார்த்தைகளால் குறிப்பிட முடியாதவற்றை எழுதி, அதை மீண்டும் பாதிரியிடம் ஒப்படைத்தார். "என்ன ஓர் அன்பின் ஆசீர்வாதம்" என்று பாதிரி மனதில் நினைத்துக்கொண்டார்.

கர்னலுடன் சிறிது நேரம் பேசிவிட்டு, பாதிரி மெஹராஸாத்துக்குத் திரும்பிச் சென்று, கர்னலின் மடலை பாபாவிடம் கொடுத்தார். கர்னலின் இரு சகோதரிகளான தௌலத்மாய் (மெஹராவின் தாயார்) மற்றும் ஃப்ரீனி மாசி (பாதிரியின் தாயார்) ஆகியோர் இறுதிவரை பாபாவின் பாதங்களில் முழு அர்ப்பணிப்புடன் இருந்தனர். ஆனால் பாபா, கர்னல் ஈரானியை தனது பணிகளுக்கான ஓர் ஊடகமாகப் பயன்படுத்தினார், கர்னல் தனது கடைசி நாட்கள் வரை விரோதப் போக்கையே கடைப்பிடித்து வந்தார்.

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்கு முன்பு, பாபா இந்தியாவின் பல்வேறு இடங்களான தெற்கில் ஆந்திரா, வடக்கே ஹமிர்பூர், டெல்லி, அலஹாபாத், நாக்பூர், மத்திய மாகாணங்களில் உள்ள ஸாவ்னேர் மற்றும் பிற இடங்களுக்கு 'சொற்பொழிவு' பயணமாக எரச், பெண்டு இருவரையும் அனுப்பி வைத்தார். அவர்கள் மெஹர் பாபாவின் அன்பின் செய்தியை, பாகிஸ்தான் நாட்டில் கராச்சிக்கும் எடுத்துச் சென்றனர். கூட்டங்கள் பொது மக்களுக்காக நடத்தப்படவில்லை, ஆனால் பாபாவின் அன்பர்களுக்கும் ஆன்மீகத்தில் உண்மையான ஆர்வமுள்ளவர்களுக்கும் மட்டுமே நடத்தப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்திலும் உரையாற்றுவதற்கு முன்பு, பாபா, எரச்சிடம் முதலில் இதைக் கூறும்படி அறிவுறுத்தினார்: "கடவுளே, பாபா எங்கள் (எரச் மற்றும் பெண்டு) இருவரையும் உமது பெயரில் அனுப்புகிறார், மேலும் பாபாவும், நாங்களும் இந்தப் பணியில் உமது சித்தம் நிறைவேறுமாறு கேட்டுக்கொள்கிறோம்."

ஆந்திராவில், **டாக்டர் தனபதி ராவ்** ஏற்கனவே சில அடிப்படை பணிகளைச் செய்திருந்தார், எனவே, காலம் குறிப்பிட்டது போல், எரச், பெண்டு இருவரின் வருகைக்குப் பின்னர், 'அங்குள்ள மண் குறிப்பாக வளமானதாகவும், ஆதிகால புருஷரை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கும் வகையிலும் இருந்தது.'

பாபா திரும்பி வந்ததும், எரச், பெண்டு இருவரும் பூனாவிலிருந்து வந்தனர் (பெண்டு சமீபத்தில் குடல் அழற்சியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்). அவர்கள் தங்கள் பயணத்தின் முழு விவரத்தையும் வழங்கினர். எரச், பாபாவிடம் அவர்கள் பயணம் செய்த இடங்கள், தங்குவதற்கு இடமளித்தவர்கள் மற்றும் அவர்களின் செலவுகளுக்கு நன்கொடை வழங்கியவர்களின் பட்டியலைக் காட்டினார். பாபா, அவர்கள் கூறியதில் மிகுந்த ஆர்வம் கொண்டு, அவர் நேரில் சென்று பார்க்க விரும்பிய சில இடங்களைச் சுட்டிக்காட்டினார்.

1952, ஆகஸ்ட் 31 திங்கட்கிழமை, பாபா மெஹராபாத் மற்றும் அஹமதுநகரிலிருந்து மண்டலியை அழைத்தார். பிரதான வீட்டின் முன் வராந்தாவில் அமர்ந்து அவர்களை சந்தித்தார். பாபா, ஆதி சீனியர், டாக்டர் நீலு, டாக்டர் டான் ஆகியோர் தங்கள் மேற்கத்திய பயணத்தைக் குறித்த விபரங்களை வழங்கச் செய்தார். விபத்தால் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையையும், அதைத் தொடர்ந்து அவர் அனுபவிக்க வேண்டிய துன்பங்களையும் பாபா குறிப்பிட்டார். பாபா, அவருடைய வெளிப்பாடு மற்றும் அவரது பணிக்காக நிதி திரட்டுவதில் உள்ள குறைந்த அளவிலான வாய்ப்புகள் பற்றி பேசினார். நீலுவின் அயராத இரவு கண்காணிப்புப் பணிக்காகவும், ஸரோஷ் மற்றும் பிறரைப் பாராட்டி, **"நான் எனது மண்டலியை மிகவும் சிறப்பாகக் கண்டேன்"** என்று கூறி, ஒரு சில கணங்களுக்கு அமைதியாகி பின்னர், அவர் வருத்தம் கலந்த புன்னகையுடன், **"மற்றும் அவர்களின் மோசமான நிலையையும் கண்டேன்!"** என்று முடித்தார். பின்னர் எரச், பெண்டு இருவரும் தங்கள் இந்திய சுற்றுப்பயணம் பற்றி எடுத்துரைத்தனர்.

செப்டம்பர் 4ஆம் நாள் பாபாதாஸ் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார், மேலும் பாபா அவரை 7ஆம் தேதி மௌனமாக இருக்கவும், ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உண்ணவும், எழுதுவதைத் தவிர்க்கவும் அறிவுறுத்தினார். அவர் நவம்பர் 1 அன்று மெஹராஸாத் திரும்ப இருந்தார்.

செப்டம்பர் 10ஆம் தேதி பிற்பகல், ஆதி சீனியர், பாபாவை அவரது இடுப்புக்கு மின்வெப்ப சிகிச்சை வழங்குவதற்காக, சிவில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். துரதிர்ஷ்டவசமாக, அன்று மருத்துவ உபகரணங்கள் சரியாக வேலை செய்யாததால், பாபா மெஹராஸாத் திரும்ப வேண்டியதாயிற்று.

13ஆம் நாள், ஸக்கோரியின் யஷ்வந்த் ராவ், மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார். பாபா அவருக்கு வெகுஜன தரிசன சுற்றுப்பயணத்தைக் குறித்து அறிவித்தார், மேலும் நவம்பர் 5 முதல் ஒரு மாதத்திற்கு அவர் பாபா மற்றும் மண்டலியுடன் இணையுமாறு அறிவுறுத்தினார்.

செப்டம்பர் 15, திங்கட்கிழமை, பாபா, பெண் மண்டலியுடன் நரிமனின் பச்சை நிற ஓல்ட்ஸ்மொபைல் காரில் பூனாவுக்குச் சென்ற வேளையில், ஆதி சீனியர் அவரது காரில் நாஜா, கோஹெர், டாக்டர் டான், கிருஷ்ணா ஆகியோரை அழைத்துச் சென்றார். பாபாவும் பெண்மணிகளும் கர்வே சாலையில் அமைந்த, திரு. பட்டன்கருக்குச் சொந்தமான 'அமர் ஜோதி வில்லா'வில் தங்கினர். முதலில் எரச்சால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வில்லா, பப்பா, மெஹர்வான் ஜெஸவாலா ஆகியோரால் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களின் உணவு பிந்த்ரா ஹவுஸிலிருந்து வந்தது. பூனா ராணுவ மருத்துவமனையில் டாக்டர் கபிலா, பாபாவுக்கு மின்வெப்ப சிகிச்சை அளிக்க டாக்டர் டான் ஏற்பாடு செய்து, அவர் தினமும் பாபாவை அங்கு அழைத்துச் சென்றார். சிகிச்சைக்காக பாபா பூனாவில் தங்கியிருந்த இரண்டு வாரங்களில், சில நேரங்களிலும், மேலும் செப்டம்பர் 21, ஞாயிற்றுக்கிழமை தரிசனம் வழங்க பாபா, பிந்த்ரா ஹவுஸிற்குச் சென்றார். கிட்டத்தட்ட 500 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். காடேக்கர் சில அறிமுகக் குறிப்புகளை வழங்கினார்.

நவம்பர் மாதம் மெஹராபாத்தில் நடக்கவிருக்கும் சிறப்புக் கூட்டத்திற்கு அழைக்கப்படுபவர்களின் பட்டியலை ஆதி சீனியர், எரச், பெண்டு ஆகியோருடன் பாபா விவாதித்து வந்தார். அலோபாவை மும்பையிலிருந்து வரவழைத்து, பாபாவுடன் வெகுஜன தரிசன பயணத்தில் கலந்துகொள்ளும்படி அவர் அறிவுறுத்தப்பட்டார். அக்டோபர் 1ஆம் தேதி, மெஹராஸாத் திரும்புவதற்கு முன்பு, பாபா, ஜால்பாய் மற்றும் பெஹராமின் குடும்பத்துடன் 'பாபா இல்லத்திற்கு' விஜயம் செய்தார்.

இதற்கிடையில், பாபாவின் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில்' முழு சரணாகதியில் பங்கெடுக்க, சம்பந்தப்பட்டவர்கள் தயாரா என்று விசாரிக்கும் சுற்றறிக்கைக் கடிதங்களை ஆதி சீனியர் அனுப்பியிருந்தார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

**கடவுளின் பொருட்டு, ஆன்மீக வாழ்வின் முழு நலனையும் கருத்தில்கொண்டு, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடித நகலை நீங்கள் நிரப்பி, கையொப்பமிடும் குறிப்புகள் மீது நீங்கள் செயல்பட முடியுமா, சாத்தியமா, இல்லையா என்பதை பாபா அறிய விரும்புகிறார். கையொப்பமிட்ட நகலை 1952, அக்டோபர் 1ஆம் தேதிக்குள் மெஹர் பாபா, ஆதி கே. ஈரானி கவனத்திற்கு, கிங்ஸ் ரோடு, அஹமதுநகர் என்ற முகவரிக்கு அனுப்பவும்.**

**இத்துடன் இணைக்கப்பட்ட நகல் கடிதத்தை அவர்கள் பூர்த்தி செய்து திருப்பி அனுப்ப வேண்டும்.**

அன்புள்ள பாபா,

1952, செப்டம்பர் 1ஆம் நாள், நீங்கள் எழுதிய கடிதத்தின்படி, ஆன்மீக வாழ்வின் நலனுக்காக, முழுவதுமாக, ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டு அல்லது அனைத்தையும் எந்தக் கேள்விக்கும் இடமில்லாமல், உங்களுக்கு அர்ப்பணிப்பதன் மூலம், உங்களைப் பின்பற்றுவதற்கான எனது சுய விருப்பத்தில் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்:

1. எனது பணம் _____ ஆம்/இல்லை
2. எனது சொத்து _____ ஆம்/இல்லை
3. எனது சேவை _____ ஆம்/இல்லை
4. எனது வாழ்க்கை _____ ஆம்/இல்லை

மேலே உள்ள எனது கருத்துக்கள் (ஏதேனும் இருந்தால்) ______

ஒவ்வொரு நாளும், ஆதி, ஒன்றன்பின் ஒன்றாக வந்த பதில்களை பாபாவுக்குத் தெரிவித்தார். ஒரு சிலர் மட்டுமே தங்களுடைய பணத்தையும் சொத்துக்களையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தபோதிலும், பெரும்பாலானோர் உறுதியுடன் பதிலளித்தனர்.

1952, அக்டோபர் 5 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, ஆறு ஆந்திரா மற்றும் ஆறு ஹமிர்பூர் சுற்றுப்பயண ஒருங்கிணைப்பாளர்களுடன் மெஹராஸாத்தில் ஒரு கூட்டத்தை நிகழ்த்தினார். காலை 8:00 முதல் 10:00 மணி வரை, பாபா அவர்களை, நீலப்பேருந்தின் பின்னால் சந்தித்தார். பாபா அவரது திட்டங்களை விளக்கிய பின்னர், அனைவரும் தத்தமது இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஆந்திராவைச் சேர்ந்த ஆறு அன்பர்களில் டாக்டர் தனபதி ராவைத் தவிர அனைவரும் புதியவர்கள். பாபாவுடனான முதல் சந்திப்பில் அவர்கள் வெகுவாக நெகிழ்ந்து போயினர். குடும்ப சாஸ்திரி, பாபாவின் அன்பில் ஈர்க்கப்பட்டாலும், பாபாவை அவதார புருஷராக அங்கீகரிக்க முடியவில்லை. ஹமிர்பூரைச் சேர்ந்த பழைய அன்பர்கள், அவர்கள் தங்கள் குருநாதருக்கு முழுமையாகத் தம்மை அர்ப்பணித்து, அவருக்காக மட்டுமே வாழத் தயாராக இருந்தவர்கள்.

காலம் இதை இவ்வாறு பதிவு செய்தது: இந்த 'உணர்ச்சி ததும்பும்' விவாதங்களுக்குப் பின்னர், 'இந்தியாவில் இந்த இரண்டு மாநிலங்களிலும் கொழுந்துவிட்டு எரியும் அன்பை வியாபிக்கச் செய்யும் வழிமுறைகள் இப்போது திட்டமிடப்பட்டு வந்தன!"

பாபா, அக்டோபர் 6ஆம் நாள் மெஹராபாத் சென்று, பெண்டு மற்றும் பாதிரியுடன் நவம்பர் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் பற்றி விவாதித்தார்.

ஜால் கேரவாலா இதயப் பரிசோதனைக்காக மும்பைக்குச் சென்றிருந்தார், அதே வேளையில் மெஹராஸாத்துக்கு வருவதற்கான பாபாவின் அனுமதியையும் பெற்றிருந்தார். ஆனால் பாபா அவரை அக்டோபர் 2 வியாழன்

அன்று மும்பையிலிருந்து நாக்பூருக்கு செல்லுமாறு கட்டளையிட்டார். அவரது மருத்துவ ஆலோசனைகளுக்கான தேதிகளை மாற்ற முடியாததால், ஜால் தாமதமாகச் செல்ல முடிவு செய்தார்; மூன்று நாட்களுக்குப் பின்னர் அவரது சகோதரி கோர்ஷெத்துடன் ரயிலில் பயணம் செய்யும் வேளையில், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதால், நாக்பூர் சென்றடைந்ததும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 1952, அக்டோபர் 6ஆம் நாள் நள்ளிரவில் சுயநினைவு திரும்பாமல் உயிரைத் துறந்தார்.

அவரது மறைவைக் கேள்விப்பட்ட பாபா, மறுநாள் மெஹர்ஜிக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"நான் வியாழன் அன்று ஜால் வெளியேற வேண்டும் என்று விரும்பினேன்; அவர் அன்று சென்றிருந்தால், உயிர் பிழைத்திருப்பார். ஆனால் கடவுளின் கட்டளை நிறைவேற வேண்டும், ஜால் இப்போது நித்தியமாக என்னிடம் வந்துவிட்டார்."**

பாபா அமெரிக்கா செல்வதற்கு முன்னர், ஆதி சீனியர், எரச் இருவரிடமும் இவ்வாறு குறிப்பிட்டார்: **"நாக்பூருக்குச் செல்லும் எனது திட்டத்தை நான் ஜாலுக்கு மட்டும்தான் முதன்முதலில் தெரிவித்தேன். நாக்பூர் நிகழ்ச்சியில் பங்கேற்க ஜால் வாழ்ந்திருக்க வேண்டும்."**

பாபா மேலும் கூறினார், **"ஜால் எனக்கு மிகவும் பிரியமான மண்டலியில் ஒருவராக இருந்தார், இப்போது, தெய்வீக பேரின்பத்தை நித்தியமாக அனுபவிக்க என்னிடம் வந்துள்ளார்."**

பப்பா, கெய்மாய் ஜெஸவாலா இருவரையும் பாபா, தொலைந்தந்தி மூலமாகத் தொடர்பு கொண்டார்: **"ஜால் முன்பை விட வாழ்ந்துகொண்டும், மகிழ்ச்சியுடனும் என்னில் இருக்கிறார் என்பதை அறிந்து தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள். எனவே அதை தெய்வீக சித்தமாக எடுத்துக் கொண்டு, வருத்தப்பட வேண்டாம்."**

தேஷ்முக் மெஹராஸாத்துக்கு வருகை தந்து, அங்கு அவர் பாபாவின் செய்திகளைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். 1952, அக்டோபர் 8 அன்று, பாபா ஐந்து ஏழைகளுக்குத் தலைவணங்கி, தலா ஐந்து ரூபாய் வழங்கி, கீழ்வரும் வாக்கியத்தை தேஷ்முக் உரத்த குரலில் மொழியுமாறு அறிவுறுத்தினார்: **"கடவுளே, ஜால் கேரவாலாவின் நினைவாக இந்த ஏழைக்கு ஐந்து ரூபாய் வழங்குகிறேன்."**

பப்பா, எரச், மெஹர்ஜி ஆகியோரை நாக்பூருக்கு அனுப்பி, ஜாலின் மறைவுக்குப் பின்னர் அவர் பாபாவுக்காக எதையேனும் விட்டுச் சென்றிருந்தால், மேலும் அவருடைய விஷயங்கள் ஏதேனும் இருந்தால் அதையும் பார்க்குமாறு அறிவுறுத்தினார். 1952, அக்டோபர் 10 அன்று பாபாவின் கீழ்வரும் 'வாழ்க்கைச் சுற்றறிக்கை' வெளியிடப்பட்டது:

தற்பொழுது, எனக்கு மிகவும் பிரியமான சீடர்களில் ஒருவர் ஜால் டி. கேரவாலா, 1952, அக்டோபர் 6ஆம் நாள், நாக்பூரில் அவரது பௌதீக உடலைத் துறந்தார். என்னுடனான அவரது தொடர்பு தனித்துவமானதாக இருந்தது, இருக்கிறது. என்மீது அவர் வைத்திருந்த அன்பு எல்லையற்றது, என்மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை முழுமையானது; என்னுடைய கட்டளைகளுக்கு அவர் கீழ்ப்படிந்தது ஐயுறவுக்கு இடமற்றது, மற்றும் எனது விருப்பத்திற்கு சரணடைந்தது முழு நிறைவானது, தனிப்பட்டது.

'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வை'த் திட்டமிடும் பணியில், ஜால் மிக முக்கியமான பங்கை வகிக்க இருந்தார். அதற்காக, நான் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வதற்கு முன்பு, நவம்பர் 1 முதல் அடுத்த பதினைந்து நாட்கள் மெஹராபாத்தில் இருக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். நான் மேற்கிலிருந்து திரும்பும் வரை, ஜாலைத் தவிர வேறு எவருக்கும் இந்தத் திட்டம் குறித்த விபரம் தெரியாது. இதனால் அவர் என்னுடன் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின்' நுழைவாயிலில் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். இருப்பினும், நவம்பர் மாதத்தில் பதினைந்து நாட்களுக்கு மெஹராபாத்திற்கு அழைக்கப்பட்ட குறிப்பிட்ட நபர்களுக்கு மத்தியில் அவர் உடல் ரீதியாக இருக்க மாட்டார் என்று கடவுள் விரும்புகிறார்.

ஜால் மறைந்த சம்பவத்தின் மூலம், மாயா எனது பணிக்கு கடும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இப்போது என்னுடைய இந்தச் செயற் திட்டம் மிகவும் கடினமாகிவிட்டதால், அது மேலும் வலுவுடையதாக மாறிவிட்டது. என்னை எதிர்நோக்கி இருக்கும் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில்' முற்றிலும் மூழ்கிவிட நான் முன்னெப்போதையும் விட உறுதியாக இருக்கிறேன்.

அனல் பறக்கும் சுதந்தர வாழ்வில், நான் மக்களுக்கு வெகுஜன தரிசனம் வழங்குவேன்; புனிதர்கள், ஏழைகள் மற்றும் பொதுஜனங்களுக்கு நான் தலைவணங்குவேன்; அனல் பறக்கும் சுதந்தர வாழ்வின் விளைவு, பாபா மற்றும் அனைவரும் இறைவனுடன் ஒன்றே என்பதை உலகிற்கு புரிய வைக்கும்.

என் அன்பிற்குரிய ஜால் நித்தியமாக என்னிடம் வந்துவிட்டார். அக்டோபர் 17ஆம் நாள், ஜால் நினைவாக பிம்பல்காவ்மில் ஏழைகளுக்கு உணவு வழங்கப்படும்.

1952, அக்டோபர் 14ஆம் நாள் செவ்வாய்க் கிழமை, டாக்டர் டான், மேலும் எக்ஸ்ரே எடுப்பதற்காக பாபாவை, கேட்கர் மருத்துவமனைக்கு ஸரோஷின் காரில் அழைத்துச் சென்றார். பாபாவின் உடல் பொதுவாக குணமடைந்து வந்தது, ஆனால் அவர் இடது கால், கணுக்கால் மூட்டு மற்றும் கைகளில் இன்னும் வலியை உணர்ந்தார்.

பாபா ஒரு சமமான மேற்பரப்பில் நடக்கவும், வழக்கமான எடை தாங்கும் பயிற்சிகளைத் தொடரவும் மருத்துவர் பரிந்துரைத்தார், அதை அவர் மெஹராஸாத்தில் டாக்டர் டானின் மேற்பார்வையில் செய்ய ஒப்புக்கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பின்னர், 16ஆம் நாள், விபத்துக்குப் பிறகு முதல் முறையாக, பாபா ஊன்றுகோலுக்கு பதிலாக மூங்கில் கழிகளைப் பயன்படுத்தி சுதந்திரமாக நடக்கத் தொடங்கினார்.

அக்டோபர் 16ஆம் நாள் முழுவதும் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் இருந்த பாபா, மறுநாள், தான் கூறியபடி ஜால் கேரவாலாவின் நினைவாக பிம்பல்காவ்ம் ஏழைகளுக்கு உணவு வழங்கினார்.

அக்டோபர் 19 அன்று, காக்கா, எல். எஸ். ஷெர்லேகர், நானா கேர், போ:ஃபலி, தேஷ்முக் (ஏற்கனவே மெஹராஸாத் வந்துள்ளார்) ஆகியோர், நாக்பூர் மற்றும் ஸாவ்னேரில் நடக்கவிருக்கும் தரிசன நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்க அழைக்கப்பட்டனர். பாபாதாஸ், எரச், பெண்டு, ஆதி சீனியர் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் கவனிக்கும் பொறுப்பு ஷெர்லேக்கருக்கு வழங்கப்பட்டது. காடேக்கர் 26ஆம் தேதி வந்து பாபாவிடம் இதர நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதித்தார்.

அக்டோபர் 30 அன்று, பாபா, டாக்டர் நீலுவுடன், விலூ வில்லாவுக்கும் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கும் விஜயம் செய்தார். விலூ வில்லாவில், விலூவிடம் முழுமையாக சரணடைவதாக இருந்தால் அவரது குடும்ப நலனுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதாக அவர் உறுதியளித்தார். குஷ்ரு குவார்ட்டர்ஸில், அவர் குல்மாய் மற்றும் பிற குடியிருப்பாளர்களுடன் கலந்துரையாடினார், மேலும் ஆலு கம்பட்டாவுக்கு ஒரு நேர்காணலை வழங்கினார். பைய்யா பாண்டே, பாபாவின் இரண்டு புகைப்படங்களை எடுத்தார்; அதன் பின்னர் ஆதி சீனியர் பாபாவை மீண்டும் மெஹராஸாத்துக்கு அழைத்துச் சென்றார்.

நரிமன், மெஹர்ஜி, மினூ காரஸ் மூவரும் அக்டோபர் 31ஆம் நாள் மெஹராஸாத்துக்கு வந்து இரவைக் கழித்தனர்.

"மெஹர் பாபாவின் பணியின் வேகமும், சக்தியும் அதிகரிக்கத் தொடங்கியது," என்று காலம் கண்டுகொண்டது. "பாபா சமீபத்தில், ஒரு நேரத்தில் ஓர் அடி மட்டும் எடுத்துவைத்து நடக்கத் தொடங்கியிருந்தாலும், படிப்படியாக, வெளியளவிலான உதவிகள் அனைத்திலிருந்தும் விடுபட்டாலும் - அவர் தனது நெருப்புப் பெருங்கடலில் உலகை இணைக்க தேவையான அனைத்தையும் மின்னல் வேகத்தில் செய்து கொண்டிருந்தார்!"

மூன்று நாட்களுக்கு, 1952, நவம்பர் 7 முதல் 9 வரை, இந்தியா முழுவதிலுமிருந்து 300க்கும் மேற்பட்ட ஆண்கள் தத்தமது இடங்களில் வெகுஜன

தரிசனத்தைத் திட்டமிடுவதற்காக மெஹராபாத்திற்கு அழைக்கப்பட்டனர்; நவம்பர் 1ஆம் தேதி முதல் சுமார் 50 நெருங்கிய அன்பர்கள் அதே நோக்கத்திற்காக பதினைந்து நாட்களுக்கு அழைக்கப்பட்டனர்.

மெஹர் பாபாவின் 'கடுமுனைப்பான' திட்டங்கள் பௌதீக உலகில் அவற்றின் இணையான நிகழ்வுகளைக் கொண்டிருந்தன. அக்டோபர் தொடக்கத்தில், பிரிட்டன் தமது முதல் அணுகுண்டை வெடித்தது, நவம்பர் 1 அன்று, அமெரிக்கா, பசிஃபிக் பகுதியில் ஹைட்ரஜன் குண்டை வெடிக்கச் செய்தது. (இந்த பிரமாண்டமான குண்டுவெடிப்பு பத்து சூரியன்களை விட பிரகாசமானது என்று கூறப்படுகிறது.)

நவம்பர் 1, சனிக்கிழமை முதல், பாபா தினமும் காலையில் மெஹராபாத்துக்குச் சென்று, மாலை ஆறு மணிக்கு மெஹராஸாத் திரும்பினார். பாபா அன்று காலை, 7:30 மணிக்கு, நரிமன், மெஹர்ஜி, மினூ, குஸ்தாஜி ஆகியோருடன் நரிமனின் காரில் வந்தார். மண்டபத்தில் அன்பர்கள் கூடியிருந்தபோது, **"உங்கள் அனைவரையும் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இது மிக முக்கியமான காலகட்டம். இப்போது நீங்கள் வந்துவிட்டீர்கள், உங்கள் குடும்பம், பணம் மற்றும் பிற பொறுப்புகள் பற்றிய எல்லா எண்ணங்களையும் துரத்திவிடுங்கள்"** என்று கூறினார்.

பாபா சைகையால் தெரிவித்ததற்கு இணங்க, சிது, மஸ்த் அலி ஷாவை அழைத்து வர எழுந்தார். பாபா கூறினார், **"இன்று அதிகாலையில் நான் என்ன முடிவெடுத்தேன் என்பதை மறந்துவிட்டேன், நான் ஒரு மஸ்தின் பாதங்களை வணங்கி இன்றைய தினத்தைத் தொடங்குகிறேன். இங்கு முஹமது, அலி ஷா என்று அழைக்கப்படும் இரண்டு மஸ்துகள் உள்ளனர். முதலாவது மஸ்தை அழைத்து வரும் கேள்விக்கு இடமில்லை; அவர் ஒருமுறை பார்த்துவிட்டால் எளிதாக என்னைத் தனியாக விடமாட்டார். அவர் குறும்புத்தனம் அல்லது தந்திரமான வகையைச் சார்ந்தவர். எனவே, மென்மையான ஜமாலி வகையைச் சார்ந்த அலி ஷாவை அழைப்பது நல்லது."**

சிது, பாப்ஜியை (இவ்வாறு அலி ஷா அன்புடன் அழைக்கப்பட்டார்) முன் அறைக்கு அழைத்து வந்தார். பாபா ஊன்றுகோல் இல்லாமல் நடக்கத் தொடங்கியதால், அவர் மஸ்தைக் குனிந்து தலைவணங்குவதை நினைத்து டாக்டர் நீலு கவலைப்பட்டார். பாபா தனது நெற்றியால் பாப்ஜியின் பாதங்களைத் தொட்டு, பின்னர் எழுந்து அமரும் வரை, அவர் கவலையுடன் பாபாவைப் பற்றிக் கொண்டார்.

அறையிலிருந்து மஸ்தை அழைத்துச் சென்றபோது, பாபா இவ்வாறு கூறினார்:

**என்னை நேருக்கு நேர் பார்ப்பதாகவும், என்னிடமிருந்து வழிகாட்டுதல் மற்றும் உதவியை அடைவது போன்ற அனுபவங்களைப் பெறுவதாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மேற்கத்திய நாடுகளிலிருந்தும் எனக்குக் கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன. உண்மையாக, இதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒன்று கடவுள் அவர்களுக்காக இதைச் செய்திருக்க வேண்டும், அல்லது சம்பந்தப்பட்ட நபர்களின் நம்பிக்கையும் பக்தியும்தான் இதை விளைவித்திருக்க வேண்டும். ஆனால் நவம்பர் 15 முதல், கடவுள் என்னை நேரடியாக, தேவைப்படும் போதெல்லாம், அப்படியான விஷயங்களைச் செய்ய வைப்பார். அதனால்தான், மக்கள் என்னைத் தொடர்பு கொள்ளவும், விரும்பினால் எனது ஆரத்தியை எடுக்கவும் அனுமதிப்பேன்.**

வரவிருக்கும் '**அனல் பறக்கும் சுதந்திர வாழ்வை**'ப் பற்றி, பாபா விளக்கினார்:

**இந்த இரண்டு வார இறுதிகட்ட பணியைத் தொடர்ந்து எனது 'அனல் பறக்கும் வாழ்வு' தொடங்கும். இந்தக் காலகட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், அனல் பறக்கும் வாழ்வுக்கான எனது ஆரம்பப் பணிகளில் பங்கேற்க, தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரை என்னுடன் இருக்கும்படி அழைக்க வேண்டியிருந்தது.**

**ஏறக்குறைய பன்னிரெண்டு வருடங்களாக பிளீடர் என்னைப் பார்க்கவில்லை, ஆனால் என்னுடனான அவரது பழைய தொடர்பின் காரணமாக, இந்தப் பெரிய வாய்ப்பை அவர் இழக்கக்கூடாது என்பதற்காக, உள்ளளவிலான நிர்பந்தத்தின் பேரில், அவரை இங்கு அழைத்து வந்தேன். மானேக் மேத்தாவும் திரும்பி வந்தால் அதிர்ஷ்டசாலி என்று நிரூபிக்க வாய்ப்புள்ளது** (அவர் பாபாவை 'விட்டுவிட்டு' மும்பையில் தங்கியிருந்தார்). **ஜால் கேரவாலா இந்த அனல் பறக்கும் வாழ்வுக்குப் பின்னர் உயிரைத் துறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், நான் அவரிடமிருந்து ஒரு மகத்தான பணியை எதிர்பார்த்தேன்.**

பாபா தொடர்ந்து விளக்கினார்:

**உள்ளளவில் செய்ய வேண்டியதை நானே செய்வேன். ஆனால், நான் அனல் பறக்கும் வாழ்வின் வெளியளவிலான அம்சங்களையும் பார்க்க வேண்டும். இவை அனைத்தும் ஒன்றிணைந்துதான் நவம்பர் 15ஆம் நாள் ஆரம்பமாகும் அனல் பறக்கும் வாழ்வுக்கான ராகம், தாளம், பல்லவியாக அமையும்.**

**நான் உங்களுக்கு ஏதேனும் வேலை கொடுத்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உங்களைத் தனியாக விட்டாலும் அல்லது உங்களை**

**எதிலேனும் ஈடுபடுத்திக் கொண்டாலும் சரி, உங்கள் தனிப்பட்ட விஷயங்களைப் பற்றிய எல்லா எண்ணங்களையும் நிறுத்திவிட்டு, என்னைப் பற்றி மட்டுமே அதிக நேரம் சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் எதையும் செய்யத் தயாராக இருக்க, இதுவே சிறந்த வழியாகும். நான் சொல்வதை மட்டும் செய்து, உங்கள் கவலைகள் மற்றும் சொந்த திட்டங்களிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இருங்கள்.**

**நான் பல, பல விஷயங்களைச் செய்ய வேண்டும். உங்களில் பலர் எனக்காகவும், என் சார்பாகவும், உங்கள் இதயங்களின் ஆழ் பகுதியிலிருந்து மிகுந்த நேர்மையுடன் கடமைகளைச் செய்வதன் மூலம் சிலவற்றைச் செய்ய முடியும்.**

பாபா முடிவு செய்தபடி, குழுவிலிருந்து பதினொரு பேர் பாபாவின் சார்பாக, கடவுளின் பெயரை நவம்பர் 2ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி காலை வரை அவரது குடிலில் அமர்ந்து திரும்பத் திரும்ப மொழிய வேண்டும். அடுத்த பன்னிரெண்டு நாட்கள் முழுவதும் 24 மணிநேரமும் இடைவிடாமல் மீண்டும் மீண்டும் அதைச் செய்ய வேண்டும். பின்வரும் அட்டவணை தயாரிக்கப்பட்டது, அப்துல்லா ஜாஃபர் மட்டுமே இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்:

காலை 9:00 முதல் காலை 11:00 வரை - பப்பா ஜெஸவாலா, ஒரு ஸொராஸ்ட்ரியராக, '**யா எஸ்தான்**' என மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்.

காலை 11:00 முதல் மதியம் 1:00 வரை - அலோபா, ஒரு முஸ்லிமாக, '**அல்லா ஹு**' என்று மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்.

பிற்பகல் 1:00 முதல் 3:00 மணி வரை - முரளி, ஒரு கிறிஸ்தவராக, '**சர்வவல்லமையுள்ள கடவுளை**' மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்.

பிற்பகல் 3:00 முதல் மாலை 5:00 வரை - ஸூலே, ஒரு இந்துவாக, '**பரபிரம்ம பரமாத்மா**' என்று மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்.

மாலை 5:00 முதல் மாலை 7:00 வரை - மினூ கராஸ், '**யா எஸ்தான்**'

மாலை 7:00 முதல் மாலை 9:00 வரை - அப்துல்லா ஜாஃபர், '**அல்லா ஹு**'

இரவு 9:00 முதல் இரவு 11:00 வரை - சிது, '**எல்லாம் வல்ல கடவுள்**'

இரவு 11:00 முதல் நள்ளிரவு 1:00 வரை - பண்டோபா, '**பரபிரம்ம பரமாத்மா**'

நள்ளிரவு 1:00 முதல் அதிகாலை 3:00 வரை - ஸவக் கொத்வால், '**யா எஸ்தான்**'

அதிகாலை 3:00 முதல் காலை 5:00 - அப்துல்லா ஜாஃபர், '**அல்லா ஹு**'

காலை 5:00 முதல் காலை 7:00 வரை - காடேக்கர், '**எல்லாம் வல்ல கடவுள்**'

காலை 7:00 முதல் காலை 9:00 வரை - மாதவ் ராவ் மிஸல் (அஹமதுநகர்) **'பரபிரம்ம பரமாத்மா'**

நவம்பர் 1 முதல் 4 வரை நான்கு நாட்கள், நான்கு நிலையான நேரங்களில், மண்டபத்தில் தனியாக அமர்ந்து புனித நூல்களிலிருந்து வாசகங்களை உரத்த குரலில் வாசிக்குமாறு பாபா நான்கு அன்பர்களுக்குக் கட்டளையிட்டார்.

காலை 7:00 முதல் காலை 7:30 வரை - **அவெஸ்தா**விலிருந்து கைக்கோபாத்

காலை 7:30 முதல் காலை 8:00 வரை - **பைபிளிலிருந்து** முரளி

காலை 8:00 முதல் காலை 8:30 வரை - **ஞானேஸ்வரி**யிலிருந்து காளேமாமா

காலை 8:45 முதல் காலை 9:45 வரை - **குரானிலிருந்து** ராம்ஜூ

நோய்வாய்ப்பட்ட எவருக்கும் மாற்றாக நானா கேர் தயாராக இருந்தார்.

அந்தந்த பொறுப்புகளை வழங்கிய பிறகு, பாபா '**இறை ஞானம்**' பற்றிய பின்வரும் சொற்பொழிவை வழங்கினார்:

**எண்ணிலடங்கா பரிணாம வடிவங்களுக்குப் பின்னரும், இறை ஞானம் என்ற ஒன்றை அடையப்பெறுவது மிகவும் கடினமாயினும், அதை ஒரே கண நேரத்தில் அடைய முடியும்; அத்தகையது இறை ஞானம்.**

**கற்பனை என்பது அத்தனை வலுவானது, மேலும் அதன் வாய்ப்பும் அந்த அளவுக்கு எல்லையற்றது, நீங்கள் எதை வேண்டுமானாலும் கற்பனை செய்யலாம். லட்சக்கணக்கான தலைகள் கொண்ட எலியை நீங்கள் கற்பனை செய்யலாம். ஒருவன் தன்னை மாமன்னனாகக் கற்பனை செய்து கொள்ளலாம். பிரபஞ்சம் என்பது கற்பனையின் விளைவு. ஆனால் அதற்கும் இறுதியில் ஒரு தடை உள்ளது. கற்பனை நித்தியமும், நிரந்தரமுமான ஒன்றை எட்ட முடியாது. நித்தியத்தில் நேரம் பற்றிய கேள்விக்கு இடமே இல்லை. ஆதியும் அந்தமும் இல்லாத ஒன்றை, காலத்தால் எப்படி மட்டுப்படுத்த முடியும்?**

**ஆரம்பத்தில் என்ன இருந்தது? ஆனால் ஆரம்பம் என்ற ஒன்றே இல்லாத போது, எப்படி ஓர் ஆரம்பம் இருக்க முடியும்? எந்த ஓர் அளவிலான கற்பனையும் எல்லையில்லா ஒன்றைப் பற்றி சிந்திக்க முடியாது. இந்த இறை ஞானம் மிகக் குறுகிய கண நேரத்தில் அடையப்பெறுகிறது; எண்ணற்ற வடிவங்களுக்குப் பிறகும், அதைக் கையகப்படுத்த முடியாது. வரும்போது ஒரே நொடியில் வரும்.**

**இறை ஞானம் என்றால் என்ன? இறை ஞானத்தை எட்ட முடியாத வேதாந்தம் அதை இப்படி விளக்குகிறது. நாம் கடவுளை எல்லையற்ற, கரையில்லாத கடலுக்கு ஒப்பிடலாம். நாம் அனைவரும் கடலில் உள்ள**

துளிகள். துளிகளையும் கடலையும் நம்மால் கற்பனை செய்ய முடியும், ஆனால் ஞானத்தைக் கற்பனை செய்ய முடியாது. நம்மால் கற்பனை செய்ய முடியாதது என்ன? இது ஆரம்பமும் முடிவும் இல்லாத ஒரு 'பொருள்'. இதுவே ஞானம். ஆரம்பத்திற்கு அப்பாற்பட்டது அதுபோல முடிவுக்கும் அப்பாற்பட்டது என்பது நாம் கற்பனை செய்ய முடியாத ஒரே விஷயம். இதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ரிஷிகளும் முனிவர்களும் கூட குழப்பத்தில் திகைத்துப்போகிறார்கள்.

ஹபீஸ் கூறுகிறார்:

இறை ஞானம் எனும் பருந்து கற்பனையின் வலையில் சிக்கவே முடியாது.

எனவே இந்த வலையை மடித்து வைத்து விடுங்கள், ஏனென்றால் அதில் நீங்கள் வெறுமையைத் தவிர வேறு எதையும் பிடிக்க முடியாது.

சத்குருக்கள் மட்டுமே இந்த இறை ஞானத்தை ஒரே நொடியில் வழங்க முடியும். ஹபீஸ் கூறியதைக் கருத்தில் கொண்டு, ஆரம்பமில்லாத ஆரம்பத்தைப் பற்றி எவ்வளவு ஆழமாக சிந்தித்தாலும், அதை அடையவோ, புரிந்துகொள்ளவோ, விளக்கவோ முடியாது என்ற முடிவுக்கு வருகிறோம்.

ஆதியில் கடவுள் இருந்தார், கடவுளுக்கு முன்பாகக் கடவுள் இருந்தார்; கடவுளுக்கு முன்பாகக் கடவுள் ஒருவரே இருந்தார்! இறுதியில் என்ன? கடவுள். அதன் பிறகு? கடவுள்.

புத்தியை ஊடகமாகப் பயன்படுத்தி இதை விளக்க முடியாது, ஏனென்றால் அங்குக் கற்பனை குழப்பமடையும்போது, மனமும் புத்தியும் எதையும் செய்ய முடியாது. கற்பனையில் மனம் வலிமையானது, மனதின் கற்பனையின் மூலம், உலகம் முழுவதும் படைக்கப்பட்டு வழி நடத்தப்படுகிறது.

ஆனால் எங்கு மனதின் கற்பனை தடைபடுகிறதோ, அங்கே இறை ஞானம் உதயமாகும்! மேலும் கற்பனை இல்லாமலாக, மனம் மறைய வேண்டும், அதே வேளையில் உணர்வு தக்கவைக்கப்பட வேண்டும். அப்படியானால் இறை ஞானம் எங்கே? கற்பனையின் சக்தி எங்கு முடிவடைகிறதோ, அங்கு இறை ஞானம் இருக்கும். அதைத்தான் 'சுயம்பு' அதாவது தானாக உருவானது என்று கூறலாம். அது தமது சொந்த விருப்பப்படி கடவுளிடமிருந்து வருவது. கடவுளைப் பற்றிய ஞானம் என்பது எல்லையற்ற சக்தி, பேரின்பம், அழகு மற்றும் அனைத்தையும் குறிக்கிறது. பின்னர், உடனடியாக, கண் இமைக்கும் நேரத்தில் எல்லாம் முற்றிலும் தெளிவாகிறது.

உங்களின் சொந்த 'சுயம்பு' ஞானம் (தானாக உருவான அறிவு) என்பது என்ன? இது என்னவென்றால், நீங்கள் ஒரு மனிதர் என்பதை நீங்கள்

அறிவீர்கள். இந்த அறிவு அறிவுசார்ந்ததல்ல. நீங்கள் ஒரு மனிதர் என்பது உங்களுக்குத் தெரியும். மேலும், நீங்கள் இதைப் பற்றி சிந்திக்கவில்லை, இதை நீங்கள் சந்தேகிக்கவில்லை. ஒரு பெண் தான் ஒரு பெண் என்பதை அறிவார். இது பெண்மை குறித்த சுய அறிவு. அத்தகைய அறிவை 'சுயம்பு' என்ற வார்த்தையால் குறிப்பிடலாம்.

அவ்வாறே 'தெய்வீக சுயம்பு' உள்ளது. இந்த ஞானம் உண்மையான இறை ஞானம். இந்த இறை ஞானம் உள்ள ஒருவன் எல்லாவற்றிலும் எல்லா இடங்களிலும் தன்னைப் பார்ப்பது மட்டுமின்றி, கடவுளின் ஒரே வாழ்க்கையை வாழ்கிறான். ஒரு சத்குருவின் உதவியின்றி லட்சக்கணக்கான வருடங்கள் மற்றும் வாழ்க்கைப் பிறவிகளில் 'சாதனா' பயிற்சியில் ஈடுபட்டாலும், இந்த இறை ஞானத்தை அடைய முடியாது. ஒரு சத்குருவின் சகவாசம் இல்லாமல், ஐக்கியம் சாத்தியமில்லை; ஆனால், அதுவும் மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே சாத்தியமாகும். எதுவாயினும், இது இறைவனுடனான ஐக்கியம் மட்டுமே, இறை ஞானம் அல்ல.

இயல்பாகவே ஐயத்திற்கிடமின்றி, கடவுள் மட்டுமே உண்மையானவர். பிற அனைத்தும் கடவுளில் அமைந்துள்ளது. நாம் அவருடன் ஒன்றாக இருக்கிறோம், ஆனால் அறியாமையால், நாம் பிரிவை அனுபவிக்கிறோம். ஆனால், அவருடனான நமது ஐக்கியத்தை உணர இந்தப் பிரிவினை இன்றியமையாதது. இப்போது, நாம் ஏற்கனவே இந்த 'சுயம்பு' இறை ஞானத்துடன் ஒன்றாக இருப்பதால், அதைக் கடவுளால் வழங்க முடியாது. 'சுயம்பு' தனிமனிதனாக விளங்கும் இந்த இறைவனைப் பற்றிய ஞானத்தை அடையப்பெற்றதும், அந்த அறிவை எவருக்கும் வழங்க முடியும். ஞானம் ஏற்கனவே எல்லோரிடமும் உள்ளது, ஆனால் அதை யார் வழங்குவது? அந்தக் காரணத்திற்காகத்தான், ஒரு சத்குரு தேவைப்படுகிறார். ஆனால் ஒரு சத்குரு அதை யாரொருவருக்கேனும் வழங்க மாட்டார். தன்னை முழுவதுமாக அழித்துக் கொள்ளாதவருக்கு ('நான்' எனும் அகந்தையை அழிக்காதவருக்கு) அவரால் வழங்க முடியாது. 100 சதவிகிதம் தன்னை சரணடைய செய்த ஒருவருக்கு அல்லது அவருடன் மிக மிக நெருக்கமான அல்லது ஆழமான தொடர்பைக் கொண்ட ஒருவருக்கு அவர் அதை வழங்குகிறார். சத்குருக்கள் இந்த ஞானத்தை ஒரு நொடியில் வழங்க முடியும். ஆனால் இந்த ஞானத்தை அடைய விரும்பும் ஒருவர் தேவையான தயார்நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் சத்குரு உதவுகிறார். ஆயத்தமில்லாதவர்களுக்கு அவர் இந்த ஞானத்தை வழங்குவதில்லை; ஏனென்றால், அவர்கள் விஷயத்தில், அது பன்றியின் முன் முத்துக்களை வீசுவது போல் பொருள்படும். அதுவே சட்டமாகச் செயல்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், உங்களால் கற்பனை செய்ய இயலாதது, ரிஷி, முனிவர்கள் கூட நினைத்துப் பார்க்க முடியாதது தெய்வீக ஞானம். தெய்வீக 'சுயம்பு' ஞானத்தை ஒருவர் புரிந்து கொள்ளத் தவறினால், அந்த தெய்வீக ஞானம் உள்ளவரை எப்படி கிரகிக்க முடியும்? ஆனால் அதை விளக்கத் தொடங்கும் ஒரு ஞானியுடன் நீங்கள் தொடர்பில் வரும்போது, நீங்கள் அந்த தெய்வீக ஞானத்தை நோக்கிப் போகிறீர்கள் என்று அர்த்தம். ஞானத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியாது; அப்படியானால் ஞானியை எப்படி முடியும்? ரிஷிகளால் தெய்வீக ஞானத்தைக் கற்பனை செய்ய முடியாதபோது, தெய்வீக ஞானியின் நிலையைக் குறித்து அவர்களால் என்ன கற்பனை செய்ய முடியும்?

வாலிகள் (துறவிகள்) தொடுவதன், நோக்குவதன், அல்லது அவர்கள் விரும்பும் ஒருவரின் தலையில் கை வைப்பதன் மூலம் அந்த ஞானத்தின் சாயலை வழங்க முடியும். தலையில் கை வைப்பதன் காரணம் என்ன? ஏனென்றால் தலை ஞானத்தின் இருப்பிடம். ஆகவே, வாலிகள், ஆன்மீக சக்தி அல்லது ஆக்கத்திறன் மூலம், எந்தவொரு நபரின் தலையிலும் தங்கள் கைகளை வைக்கும் தருணத்தில், அவர்கள் ஆன்மீக ஞானத்தின் சாயலைப் பெறுகிறார்கள். அந்த நிலையிலும், உடல் அதன் சுய உணர்வை இழந்தாலும், இதை இறை ஞானம் எனக் கூற முடியாது. ஞானேஸ்வரியில், ஒரு சத்குருவின் தலையீடு இல்லாமல் இந்த இறை ஞானத்தைப் பெற முடியாது என்று எழுதப்பட்டுள்ளது.

இவை அனைத்துமே இறை ஞானத்தைப் பற்றியது. என்னைப் பொறுத்தவரை, கடவுள் மீதான அன்பு உண்மையான அறிவுக்கான சிறந்த வழி என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் கடவுள் ஒருவரே நேசிக்கத் தக்கவர்.

காலை விளக்க உரையின் இறுதியில், பாபா பின்வரும் குறிப்புகளுடன் நிறைவு செய்தார்:

இறை ஞானம் எப்பொழுதும் தெரியாமல் வருவது. இறைவன் மிகவும் இரக்கமுள்ளவர், அவருடைய அளவிறுதியற்ற கருணையை கற்பனை செய்து பார்க்க முடியாது! சிலர், தாங்கள் நிறைய துன்பங்களை அனுபவித்ததாகவும், கடவுள் தம்முடைய கருணையை அவர்கள் மீது இன்னும் பொழியவில்லை என்றும் நினைக்கிறார்கள். ஆனால் அதற்குத் தேவையான தயார்நிலையை அடையவில்லை என்பதுதான் உண்மை. ஹபீஸ் கூறியதுபோல:

மயிரிழையின் ஒரு நுனி என் கையிலும் மற்றொன்று இறை-நண்பனின் கையிலும் உள்ளது.

எங்கள் இழுபறிப்போர் பல்லாண்டு காலங்களாக நடந்து வருகிறது.

**ஆனால் தக்க தருணமும், தயார் நிலையும் வரும்போது, அந்த நபர் என்ன செய்கிறார் என்பதைக் கூட பொருட்படுத்தாமல், இறை ஞானம் அவரை நாடி வருகிறது.**

மதிய உணவிற்கு முன்பு, பாபா, அடுத்த நாள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நேர்காணல் வழங்குவதாகக் குறிப்பிட்டு, மேலும் கூறினார்: **"நான் எனது சொந்த பணிக்காக இதைச் செய்வேன், தனிப்பட்ட இடர்பாடுகளை நினைத்து 'அழுது புலம்புவதற்கு'ச் செவி மடுப்பதற்காக அல்ல. இடர்பாடுகள் இருக்கத்தான் செய்யும், அதில் எந்த சந்தேகமும் இல்லை, ஆனால் அவை, ஏறக்குறைய எல்லா நேரத்திலும் இருந்து கொண்டிருப்பதும் உண்மை; மேலும், இதில் உண்மை என்னவென்றால், ஒருவர் உடலைத் துறக்கும் நேரத்தில், எல்லாவற்றையும், செய்த அல்லது செய்யாத, முக்கியமான அல்லது முக்கியமற்ற அனைத்தையும் அங்கேயே விட்டுவிட வேண்டும். என்ன ஒரு நகைச்சுவை!"**

இறுதியில், பாபா தனது மௌனத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்:

**இந்த மௌனத்தால் நான் மிகவும் சோர்ந்து போயிருக்கிறேன் தெரியுமா? அதைக் கைவிட்டு என் மனதில் உள்ளதை உங்கள் அனைவரிடமும் எடுத்துரைக்கும் தருணத்திற்காக ஏங்குகிறேன். நீங்கள் அனைவரும் உங்கள் இடர்பாடுகளையும், குறைகளையும் என் முன் வைக்கிறீர்கள், ஆனால் என்னுடையவற்றை யார் கேட்பார்கள்?**

**நீங்கள், "பாபா, உங்களுக்கு அனுபவம்** (கடவுளின் அளவிறுதியற்ற தன்மையின் அனுபவம்) **உள்ளது" என்று கூறுகிறீர்கள். ஆனால், எனது இடர்பாடுகளும், குறைகளும் அதுபோல் எல்லையற்றவை! கடவுள் ஒருவரே உண்மைப்பொருளாக இருப்பவர், இதர அனைத்தும் மாயை. நாம் அவரில் இருக்கிறோம், அவருடன் ஐக்கியமாக இருக்கிறோம் என்ற அனுபவம் வேண்டும். படைப்பின் நோக்கம் அதுதான். இந்த அனுபவத்தை அடையப்பெறவே இத்தனை இழுபறி சண்டையும் போராட்டமும்.**

**இறை-மனிதர்கள், இந்த இலக்கை அடைய உதவியாக இருக்கிறார்கள். மனிதன் கடவுளாக மாறும்போது, அவருக்கென ஒரு வம்சாவழி உள்ளது; ஆனால் இறை-மனிதனுக்கு அத்தகைய பாரம்பரியம் இல்லை. என்னைப் பொறுத்தவரை, நான் மீண்டும் மீண்டும் உலகில் மனித உருவில் வந்து, எல்லையற்ற இன்ப துன்பங்களை ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும். அதில் மகிழ்ச்சியும் ஒருவித சிறைவாசமும் உள்ளது.**

அதைத் தொடர்ந்து பாபா தனது மதிய உணவிற்காக மண்டபத்தை விட்டு வெளியேறினார். அன்று மதியம் சுமார் மூன்று மணிக்குத் திரும்பி வந்து கூறினார்: **"நவம்பர் 14ஆம் தேதி முதல், 25 பேர் என்னுடன் இரண்டு மாத சுற்றுப்பயணத்தில் பங்கெடுக்க உள்ளனர். நான் சொல்வதைச் செய்யத்**

**தயாராக இருக்கும் அன்பர்கள், குறைந்தபட்சம் ஏப்ரல் மாதம் இறுதிவரையாவது உயிரைப் பணயம் வைத்தேனும் என்னுடன் இருக்கவேண்டும். அனல் பறக்கும் வாழ்வு என்பது புது வாழ்விலிருந்து வேறுபட்டது. முழுமையாகக் கீழ்ப்படிதல் ஒன்றுதான் நான் எதிர்பார்ப்பதும் விரும்புவதும் ஆகும்."**

அதன் பின்னர் அவர் கூறியதாவது: **இப்போது இரண்டு மாதங்களுக்கு அதாவது ஜனவரி இறுதி வரை பணியைப் பகிர்ந்தளிக்க உள்ளேன். பின்னர் 25 பேரின் பணிகளையும் நானே செய்வேன்.**

எரச் பாபாவின் தனிப்பட்ட உதவியாளராக இருக்கும் வேளையில், சகன் அவருக்கு உதவ வேண்டும். விஷ்ணு பணத்தைக் கையாளவும், கணக்குகளை வைத்திருக்கவும், கடிதப் பரிமாற்றங்களிலும் ஈடுபடுவார். அலோபாவின் உதவியோடு பெண்டு, சாலை மற்றும் ரயில் பயணத்திற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். சதாஷிவ் அவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்தை ஏற்பாடு செய்யும் நேரத்தில், ஸவக் கொத்வால் அவருக்கு உதவியாக இருப்பார். பைதூல் மஸ்துகளைத் தேடி கண்டுபிடிக்கவும், காடேக்கர் மருத்துவ தேவைகளைக் கையாளவும் வேண்டும். விஷ்ணு, எரச், ஜால்பாய் ஆகியோர் பாபாவின் எழுத்துப்பலகையை வாசிக்க வேண்டும். அண்ணா 104 இரவு நேர கண்காணிப்புப் பணியைச் செய்யவேண்டியதாக இருந்தது.

சுற்றுப்பயணத்தின் போது பாபாவிற்குப் பணமாகவோ அல்லது பொருளாகவோ வழங்கப்படும் அன்பளிப்புகளை என்ன செய்ய வேண்டும் என்று ஒருவர் கேட்டதற்கு, பாபா பதிலளித்தார், "**முழுவதுமாக ஒன்றுதிரட்டி மக்களுக்காக உள்ளூர் குழுவின் வசம் வைக்கப்படும்.**"

அவர் விளக்கினார்:

**நானாகவே நெருப்பை வைக்க வேண்டும், நான் எல்லா இடங்களிலும் இருப்பதால், அனைத்தும் என்னுடைய அந்த நெருப்பில் இருக்கும். அதில் இப்போது எந்த சந்தேகமும் இல்லை. முழு உலகமும் என்னுடன் எரிய வேண்டும். நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக உங்கள் அனைவரையும் அழைத்துச் செல்லவில்லை, ஆனால் எனது ஆன்மீக வாழ்வின் மிக நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் என் அருகாமையிலேயே இருக்க வேண்டும். என்னுடன் செல்பவர்கள் அனைவரும் இப்போது என்னைப் பற்றியும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளைப் பற்றியும் மட்டுமே சிந்திக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.**

அதைத் தொடர்ந்து பாபா எதிர்வரும் பயண திட்டத்தைப் பற்றி விவாதித்தார். சிது சில பாடல்களைப் பாடினார். அதன் பிறகு தீவிரமான

முகபாவனையுடன், பாபா சில கஸல் பதிவுகளைக் கேட்டார். இசையின் முடிவில், அவர் 'இறை உணர்வு' குறித்த சொற்பொழிவை வழங்கினார்:

**இறை உணர்தல் என்பது எவருக்கும் கைக்கு எட்டாத ஒன்று. ஒரு பரிபூரண குருநாதரை நாம் சந்திக்க நேர்ந்தால் மட்டுமே, அதை அடைய முடியும். இறை உணர்வை அடைவது மிகவும் கடினம், ஏனென்றால் இங்கே நாம் உள் மற்றும் வெளியளவில் இருப்பது போல் அல்லாமல் நாம் என்னவாக இருக்கிறோமோ அவ்வாறே மாறுகிறோம். இது எவ்வளவு கடினம் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள், ஏனென்றால் நாம் ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் கபட வேடதாரி! சரியோ தவறோ எல்லா வகையிலும் நம்மை நாம் நியாயப்படுத்துகிறோம். இப்போது, வெவ்வேறு மார்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கு இது எவ்வளவு கடினம் என்பதைப் பார்ப்போம்:**

**<u>ஞான மார்கம்</u>: வேதாந்திகள் கூறுகின்றனர், "நல்லதோ கெட்டதோ இதையெல்லாம் கடவுளே செய்கிறார். உண்மையில் நாம் ஒன்றும் செய்வதில்லை. ஒன்று கடவுள் செய்கிறார், அல்லது அது கர்ம வினையின் விளைவாக இருக்கலாம்." எனவே, வேதாந்திகளுக்கு ஒரு குறைபாடு உள்ளது: அவர்கள் எந்த இறை அனுபவமும் இல்லாமல் கடவுளுடன் தங்கள் ஐக்கியத்தை உறுதிப்படுத்துகிறார்கள். நல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் அது கடவுளால் செய்யப்படுகிறது என்று சொல்வது சரிதான்; ஆனால் இந்த (கடவுளுடன் ஐக்கியம் எனும்) அனுபவமின்மை அவர்களை வழிதவறச் செய்கிறது.**

**இறை பக்தர்கள் சரியானதை சரி என்றும், தவறானதைத் தவறு என்றும் கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் இந்தப் பழக்கத்தில் சிக்கி, துகள் போல காய்ந்து விடுகிறார்கள். எனவே அவர்கள் 'சரி', 'தவறு' என்ற இருமைத்தன்மையில் உறுதியாகவும் ஆழமாகவும் உறைந்துவிடுகிறார்கள்.**

**<u>யோகா மார்க்கம்</u>: யோகிகள் சமாதியில் ஒருவிதமான பேரின்பத்தை அனுபவிக்கும் போது, அவர்கள் அதைக் கட்டுப்படுத்தி அதற்கு அடிமைகளாக மாறுகின்றனர். அவர்கள் உண்மையான இறுதி இலக்கை, இறை உணர்தலை மறந்து விடுகிறார்கள். மீண்டும், யோகிகள் ஏமாற்றமளிக்கும் சில சக்திகளை அடையப் பெறுகிறார்கள். கடவுளின் பெயரை மௌனமாகத் திரும்பத் திரும்ப உச்சரித்து ஜபத்தில் ஈடுபடுபவர்களும் சில சக்திகளை அடையப்பெறுகிறார்கள். அவற்றை தவிர்ப்பது மிகவும் கடினம், அவற்றை சரியாகப் பயன்படுத்துவது அதைவிடக் கடினம்.**

**இறை உணர்வை அடைவது மிகவும் கடினம், ஏனெனில் நாம் நாமாக இருப்பதன் மூலம் நம்மைப் பார்க்க வேண்டும். எனவே, இதற்கு ஒரே ஒரு பரிகாரம் மட்டுமே உள்ளது, அதுவே சத்குருவின் சகவாசத்தில் வருவது.**

அப்படி வந்தாலும், உங்களை நீங்களே அழித்துக் கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், உங்களை நீங்களே நிர்மூலமாக்க வேண்டும்; அதுவரை, உங்களால் இறை உணர்வை அடைய முடியாது.

எனவே, உங்களுக்காக அல்லாமல், பிறருக்காக அத்தகைய செயல்களில் ஈடுபட்டு, உங்களை மறக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் முழுமையான நிர்வாண நிலையை அடையும் அளவுக்கு இதைப் பின்பற்றுங்கள். முரண்பாடாகத் தோன்றினாலும், இத்தகைய செயல்களைச் செய்யுங்கள் - கடவுளை இழப்பதற்காக அல்ல, கடவுளில் உங்களை - இழப்பதற்காக!

மிகவும் உன்னதமான 'ஃபனா' நிலையில் (நிர்மூலமாகும் நிலை), தெய்வீக வெற்றிடம் உள்ளது. இங்கே, ஃபனா என்பது கடவுளை முழுமையாக இழப்பது, இது முழுமையான வெற்றிடத்தை குறிக்கிறது. இந்த நிலையில், நீங்கள் இல்லை, கடவுள் இல்லை, எதுவும் இல்லை; ஆனால் கடவுள் இல்லை, தனிப்பட்ட ஒருவர் இல்லை என்ற அடுத்த கணமே, கடவுள் எல்லா மகிமையுடன் திரும்பி வருகிறார், நீங்கள் அந்த உணர்வு நிலையை அடையப்பெறுகிறீர்கள்.

கடினமான முயற்சியால், ஒருவர் தன்னை 100 சதவிகிதம் இழந்தால், அவர் மஜ்ஜூப் நிலையை அடைகிறார். இது கடவுளை இழந்து, பின்பு கண்டுகொண்டதற்கு சமம், ஆனால் கடவுளின் வாழ்க்கையை வாழவில்லை என்று அர்த்தம். அவர் உலக உணர்வை மீண்டும் அடையப்பெற்றால், அவர் கடவுளின் வாழ்க்கையை வாழ்கிறார் என்றுதான் அர்த்தம்.

ஃபனாவின் குறு நிலைகளை அனுபவிக்கும் போதும், நீங்கள் குழப்பமடைகிறீர்கள்; ஆனால் வெற்றிடம் உடனடியாக நிரப்பப்படுகிறது. இறுதி ஃபனா நிலையை அடைய நீங்கள் பல பிறவிகளுக்குத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இறுதி மற்றும் முதிர்ந்த தருணம் வந்தவுடன், தனிநபர் தெய்வீக வெற்றிடத்தை அனுபவிக்கிறார்.

இந்த தெய்வீக வெற்றிடம் ஒரே நேரத்தில் நிரப்பப்படுகிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில், அது நிரப்பப்படுவதற்கு முன்னர், உடலுடனான இணைப்பு துண்டிக்கப்படுகிறது.

சில தருணங்களில், தெய்வீக வெற்றிடமும், தெய்வீக நிரப்புதலும் ஒரே நேரத்தில் நிகழும். ஆனால் பௌதீக உலகத்துடனான இணைப்பு தளர்ந்து விடுகிறது, அல்லது துண்டிக்கப் படுகிறது. இப்போது அவர்களுக்கு இந்த உலகைப் பற்றிய உணர்வு இல்லை. உண்மையாகச் சொன்னால் அவர்கள் என்ன உண்ணுகிறார்கள் அல்லது அருந்துகிறார்கள் என்பது கூட அவர்களுக்குத் தெரியாது; சில நாட்களுக்குப் பின்னர், அவர்கள் தங்கள் உடலைக் கைவிடுகிறார்கள்.

**மிக அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே, உலகத்துடனான இந்த இணைப்பு உறுதியாகத் தக்கவைக்கப்படுகிறது, அதாவது, திடமாக, எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருக்கும்; இப்படி இருப்பவர்களே சத்குருக்கள்.**

பாபா சுமார் 6:30 மணியளவில் மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

1962, நவம்பர் 2, ஞாயிற்றுக்கிழமை காலை, 8:00 மணிக்கு பாபா, ஆதியுடன் காரில் வந்த வேளையில், அனைத்து அன்பர்களும் முன் மண்டபத்தில் கூடியிருந்தனர். நவம்பர் 2, 3, 4 ஆகிய மூன்று நாட்கள், காலை 9:00 முதல் 11:00 மணி வரை, மற்றும் மாலை 3:00 முதல் 5:00 வரை அவரது அறையில் அமர்ந்து கடவுளின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிக்குமாறு பாபா, பிளீடருக்கு அறிவுறுத்தினார்.

**'ஜபம் புரிபவர்கள்' என்று அழைக்கப்படும், கடவுளின் பெயர்களைத் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட அந்த பன்னிரண்டு அன்பர்கள், மேலும் புனித அல்லது வேத நூல்களிலிருந்து வாசிக்கும் நான்கு ஆச்சாரியர்கள் அனைவரின் கால்களிலும் நான் காலையில் வணங்குவேன்'** என்று பாபா கூறினார். '**இன்று முதல் எதிர்வரும் 15ஆம் தேதி வரை நான் பக்தனாக இருப்பேன்.**'

அன்று காலை எட்டு மணிக்கு, டாக்டர் தௌலத் ஸிங் வருகை தந்தார். பாபா அவரிடம், "**நீங்கள் சரியான நேரத்தில் வந்துவிட்டீர்கள். வரமுடியவில்லை என்று எழுதியிருந்தீர்கள். எப்படி சமாளிக்க முடிந்தது? எனது புது வாழ்விலும், மனோநாஷ் காலத்திலும் நீங்கள் என்னுடன் இருந்ததால் நான் உங்களை இங்கு அழைத்தேன்.**" பாபா அவரை 28ஆம் தேதி வரை தன்னுடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டார், மேலும் 'குரு கிரந்த் ஸாஹேப்', சீக்கியர்களின் புனித நூலிலிருந்து மதியம் 1:00 முதல் 2:00 மணி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் வாசிக்குமாறு கட்டளையிட்டார்.

"**உண்மையில், கடவுளின் செயல் ஆழங்காண முடியாதது**" என்று பாபா கூறினார். "**என்னுடன் தொடர்பில் இருக்கும் அனைவரையும் அவர் அழைத்து வந்துள்ளார். பிளீடர், விபூதி இருவரும் பல வருடங்களுக்குப் பிறகு வந்துள்ளனர், இங்கு வந்தவர்கள் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்.**"

ஜபம் புரிபவர்களை நோக்கி, பாபா கூறினார்: "**இப்போது, நான் உங்களை வணங்குகிறேன். இன்று முதல் நவம்பர் 14 வரை, நான் உங்கள் மூலம் கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிவேன். நான் உங்கள் கால்களில் எனது நெற்றியை வைத்து வணங்கும்போது, கடவுளை நினைவு கொள்ளுங்கள், உண்மைப்பொருளாகிய அவர் ஒருவரே நம் அனைவருள்ளும் இருப்பவர். மேலும், அனைவர் மீதும் அவருடைய**

**அருளைப் பொழியுமாறு பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டிய பெயரை நினைவில் கொள்ளுங்கள்."**

பாபா கம்பளத்தின் மீது இருபுறமும் உள்ளங்கைகள் தரையைத் தொட்ட வண்ணம் மண்டியிட்டு அமர்ந்து, வணங்கத் தயாராக இருந்தார். காலை 8:50 மணிக்கு, பதினேழு அன்பர்களின் கால்களில் தலை வைத்து வணங்கினார். பாபா அவர்களின் காலடிகளில் தலை வைத்து வணங்கிய அதே வேளையில், அவர்கள் மீண்டும் மீண்டும் மொழியுமாறு கேட்டுக்கொண்ட கடவுளின் பெயரை உரத்த குரலில் எடுத்துரைத்தனர். ஐந்து ஆச்சாரியர்களும் வேத நூல்களிலிருந்து வரிகளை பாபாவின் சார்பாகக் கடவுளுக்கு ஓதினர். இது நிறைவடைந்ததும், பாபா இவ்வாறு கூறினார், **"உங்கள் வாழ்க்கையே அதைச் சார்ந்தது போல் இறை நாமத்தை திரும்பத் திரும்பச் உச்சரியுங்கள். தொடர்ச்சியாக உச்சரிப்பதில் கவனமாக இருங்கள். உங்களுக்கிடையே தேவைக்கேற்ப அனுசரித்துக் கொள்ளுங்கள். மாயா கடவுளின் வேலையில் தடைகளை ஏற்படுத்தும், எனவே கவனமாக இருங்கள்."**

பதினொரு மணியளவில், பாபா தனது மதிய உணவுக்காக மண்டபத்தை விட்டு வெளியேறினார். நண்பகலில், அவர் விபூதியைத் தனது அறைக்கு அழைத்து, துனிக்கு முன் அமர்ந்து, நவம்பர் 3 முதல் 12 வரை, ஒரு நாளைக்கு 5,000 முறை **'ஓம் பரபிரம்ம பரமாத்மா'** என்று திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபா, பால் நாத்துவை அழைத்து, நவம்பர் 3 முதல் 12 வரை ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் 1,400 முறை திரும்பத் திரும்ப, கீழ்வரும் வார்த்தைகளை மொழியுமாறு கட்டளையிட்டார்: **"கடவுளே! பாபா, அவருடைய அனல் பறக்கும் வாழ்வில் அவருக்கு வேண்டிய வலிமையை வழங்கும்படி கேட்கிறார்!"**

அதன் பின்னர், ஆண்கள் அனைவரையும் அறைக்குள் அழைத்து பாபா கூறினார்: **"நான் மீண்டும் மீண்டும் இந்தப் பௌதீக உடலில் தோன்ற வேண்டும் என விதிக்கப்பட்டதால், நான் இந்த உலகில் வர வேண்டும். ஆனால் குறைந்தபட்சம் நீங்கள் மீண்டும் மீண்டும் பிறந்து, வளர்ந்து, முதிர்ச்சியடைந்து, திருமணம் புரிந்து, அனுபவங்களைப் பெற்று, சந்ததிகளைப் பெருக்கி, வாழ்க்கையில் சிதைந்து, உயிரை விடுவது என்ற தொடரும் இணைப்புச் சங்கிலியிலிருந்து விடுபட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்."**

பாபா மேலும் கூறினார்: **"கடவுள் எவ்வளவு இரக்கமுள்ளவராக இருக்கிறாரோ, அதே அளவு கடினமாகவும் கடுமையானவராகவும் இருக்கிறார். ஆனால் நீங்கள் அவரை அழைக்கும்போது அல்லது அவரை வழிபட்டு வணங்கும் போது, ஒருமுறை அவரைத் தொடும் போது, அனைத்து**

**வேலையும் முடிந்துவிடும், சாத்தியமற்ற அனைத்தும் சாத்தியமாகிவிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**"ஆனால் மீண்டும், இது அத்தனை எளிதான விஷயம் அல்ல, மிகவும் கடினமானது. எனவே முழு மனதுடன் கடவுளின் நாமங்களை உச்சரியுங்கள். நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு நானும் கடவுளும் அதைப் பார்த்துக் கொள்வோம்."**

பாபா மேலும் அவரது உணர்ச்சிவசப்படும் இயல்பைப் பற்றி கூறினார்: **"இன்றைய நாட்களில் நான் கோபப்படாமலும், உணர்ச்சிவசப்படாமலும் இருக்க முயற்சிக்கிறேன். நான் அத்தகைய இயல்புநிலையை எதிர்கொள்ளும் போதெல்லாம், கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்து, 'சைத்தானே! என்னைவிட்டுப் போய்விடு!' என்று குரல் கொடுக்கிறேன்."**

**"எனவே, காமம், பேராசை, கோபம், பொறாமை, பணம் அல்லது குடும்ப விவகாரங்கள் பற்றிய எந்த எண்ணமும் உங்கள் இதயத்தை ஆக்கிரமிக்க முயற்சிக்கும் போதெல்லாம், 'சைத்தானே! என்னைவிட்டுப் போய்விடு!' என்று கூறி நிம்மதியாக இருங்கள்.**

**"இப்போது நான் 100 சதவிகிதம் மகிழ்ச்சியாகவும் 100 சதவிகிதம் உறுதியாகவும் இருக்கிறேன், நான் இந்த உலகளாவிய குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவருவேன், அல்லது இந்தப் பௌதீக உடலைத் துறந்துவிடுவேன். மேலும் இந்த உடலைத் துறக்கவில்லை என்றால், 'உண்மையான இறை வாழ்வை'க் குறிக்கும் ஓர் 'உண்மையான முடிவு இருக்கும்."**

1953 ஏப்ரல் இறுதி வரை, வெவ்வேறு காலகட்டங்களில் அவருடன் இணையும் நபர்களின் பட்டியல் வாசிக்கப்பட்டது. எட்டு ஆண்கள் ஏப்ரல் இறுதி வரை அவருடன் தொடர்ந்து இருக்க வேண்டும்: **அலோபா, பைதூல், எரச், குஸ்தாஜி, கைக்கோபாத், பெண்டு, விஷ்ணு** மற்றும் **ஸவக் கொத்வால்**. பாபா, ஒவ்வொருவருடைய கருத்தையும் விவாதித்து, கூறினார்: **"இன்னும் சிறிது காலத்திற்கு நான் யஷ்வந்த் ராவை என்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும். நான் ஸக்கோரியில் மிகவும் வித்தியாசமான ஆனால் தனித்துவமான உணர்வு நிலையில் இருந்தபோது, இரவும் பகலும் எனக்கு வெற்றிலை பொட்டலத்தைத் தயார் செய்து, சேவை புரிய மஹாராஜ் அவரை நியமித்திருந்தார்** (1921-22). **யஷ்வந்த் ராவ் இந்த சேவையை முழு மனதுடன் செய்தார், இதுவே யஷ்வந்த் ராவ், குஸ்தாஜி இருவரின் பொறுப்பை மஹாராஜ் என் மீது ஒப்படைத்ததற்கு மற்றொரு காரணம்.**

உபாஸனி மஹாராஜ் மராட்டி பேச்சுவழக்கு மொழியில் கூறிய அனைத்தையும் சைகை மூலமாகத் தெரிவிக்குமாறு குஸ்தாஜியிடம் பாபா

கூறினார். மஹாராஜ் அவரிடம் கூறியதற்கிணங்க: **"நான் மேர்வானை என்னைப் போலவே பரிபூரணமாக்கிவிட்டேன். எனது முழுப் பொறுப்பையும் வழங்கியதோடு, எனது திறவுகோலையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டேன். இப்போது, மேர்வானின் கட்டளைகளை உண்மையாகவும் நேர்மையாகவும் பின்பற்றுங்கள்."**

இப்படி எடுத்துரைத்து, நினைவு கூர்ந்த பின்பு, பாபா கூறினார், **"தற்போது, நான் 'செயல்படுவதில்' அல்லது 'உயிரைத் துறப்பதில்' குறியாக இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை, 'இது' அல்லது 'அது' என்னவானாலும் பரவாயில்லை. ஏப்ரல் இறுதி வரை எனது பௌதீக உடல் நிலைத்திருந்தால், அது நல்லது. தொண்ணூற்றொன்பது சதவிகிதம், எனது உடல் வீழாது என்று உணர்கிறேன், அப்படியானால், நான் நிச்சயமாக குஸ்தாஜியை நினைவில் கொள்வேன். உண்மையில், அவரது ஏக்கமும், அன்பும், பொறுமையும் எல்லைக்கு அப்பாற்பட்டவை."**

குஸ்தாஜி அனுபவித்த சில கஷ்டங்களை பாபா எடுத்துரைத்தார். **ஒருமுறை, அவர் ஆறு மாதங்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி வாழ்ந்தார். 1919ஆம் ஆண்டு பூனா, கஸ்பா பேட்டில் அமைந்த மதுபானக் கடையில் பணிபுரிந்த வேளையில், மூன்று வருடங்கள் அவருக்குத் தூக்கம் என்பதே இல்லை; பாபா அவரை இரவு முழுவதும் பாபாஜானின் அருகில் அமரச் செய்தார். காலையில் திரும்பி வரும் வேளையில், ஒரு நயா பைசா மதிப்புள்ள காய்கறிகளை வாங்கிவந்து, உப்பு கூட சேர்க்காமல் வெறுமனே கொதிக்க வைத்து உண்பதை வழக்கமாகக் கொண்டார். குஸ்தாஜியின் கடுமையான உணவுமுறை அப்படித்தான் இருந்தது. பின்னர் அவர் காலையிலிருந்து மதுபான கடையில் பணியைத் தொடர்ந்தார்.**

பாபா நாக்பூரைச் சேர்ந்த நானா கேரிடம் அவருடைய நிதி விவகாரங்களில் பலவற்றைக் கேட்டறிந்து மனதை எவ்வகையிலும் தொந்தரவு செய்யாமல் திடப்படுத்திக் கொள்ளுமாறு கூறி, **"ஆனால், அது சாத்தியமற்றது"** என்று பாபா குறிப்பிட்டார். **"உங்கள் மீது கடவுளின் கடைக்கண் பார்வை இருந்தால், அது சாத்தியமாகும். ஆனால் எந்த சூழ்நிலையிலும் ஒருவர் கவலைப்படாமல் இருப்பது நல்லது, ஏனென்றால் அனைத்தும் பூஜ்ஜியமாகும்."**

கைக்கோபாத்தின் நம்பிக்கையையும் அன்பையும் பாபா பாராட்டினார், மேலும் கடவுளின் கருணை அவரிடம் இருப்பதாக கைக்கோபாத் பாபாவிடம் கூறியதாகக் குறிப்பிட்டார். **"எனவே, கைகோபாத் பாபாவுக்கு எதையும் வழங்கும்போது, அதைக் கடவுளுக்கு வழங்குவதாக நினைக்கிறார்."** பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பல ஆண்டுகளாக உடல் உணர்வைப் பற்றி அறியாமல் இருக்க இத்தகைய கருணை போதுமானது என்று பாபா விளக்கினார்.

இந்தக் கருத்தை விளக்குவதற்கு, மினூ காரஸிடம் '**பயாஸித் மற்றும் எறும்பு**'களின் கதையை எடுத்துரைக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார்.

பாபாவின் ஹமிர்பூர் மற்றும் டில்லி பயணத்தின் போது, உடன் செல்பவர்கள் அனைவரும் போதுமான குளிர்கால ஆடைகளை எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஏப்ரல் மாதத்தின் கடைசி பதினைந்து நாட்கள் தன்னுடன் இருக்குமாறு பாபா, பிளீடர், மினூ, தௌலத் சிங் ஆகியோரை அறிவுறுத்தினார். இதைத் தொடர்ந்து அனைவரும் கலைந்து சென்றனர்.

மதிய வேளையில் மண்டபத்தின் முன் அறைக்கு வந்த பாபா இவ்வாறு கூறினார், "**நவம்பர் 6 முதல் 9ஆம் தேதி வரை, நீங்கள் உங்கள் கடமைகளை முடித்தவுடன், இங்கேயே இருக்க முயற்சி செய்யுங்கள், அப்போது எனது தேவைக்கேற்ப நான் உங்களை அழைக்க முடியும்.**"

பாபா மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார். மறைந்த டாக்டர் கனியைப் பற்றிய ஒரு கதையை அவர் நினைவு கூர்ந்தார்; அவர் பாபாவுடன் சென்ற மஸ்த் பயணம் ஒன்றில், அவர் மிகுந்த மனக்கலக்கத்தில் இருந்தார். இறுதியில், பாபா இவ்வாறு கூறினார், "**கனி, ஜால் (கேரவாலா) இருவரும் வெற்றி பெற்றனர். இதைத்தான் நான் உணர்கிறேன். ஜால் தனது இறுதி மூச்சை விடும் வேளையில் அவர் உச்சரித்த கடைசி வார்த்தை 'பாபா'. உண்மையில், இதுபோன்ற சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதானவை.**"

பாபாதாஸ் செய்த பணிக்காக, பாபா அவரைப் பாராட்டினார், மேலும் சிலர் அவருக்கு எதிராக பேசினாலோ அல்லது அவரைப் பற்றி குறை கூறினாலோ பதற்றமடைய வேண்டாம் என்று அவருக்கு அறிவுறுத்தினார்.

பாபா அவருக்கு விளக்கினார், "**எதிர்ப்புகளின் மூலம் எனது பணி வலுவடைகிறது, மேலும் மக்கள் எனக்காக அதைச் செய்பவர்களை எதிர்ப்பதால் இன்னும் பெரிதாகிறது. உங்கள் மனதின் சாந்தமான நிலை, பெரும் புயல்கள் மற்றும் அலைகளுக்கு மத்தியில் அசையாமல் இருக்கும் பாறையைப் போல் இருக்க வேண்டும். இதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அமைதியாக இருங்கள். பிறர் என்னையும் எனது பணியைப் பற்றியும் அவர்கள் விரும்பியதைச் சொல்லட்டும். கவலைப்படாமல், பயப்படாமல் இருங்கள்.**"

இதற்குப் பின்னர் இசைத்தட்டுப் பதிவுகளில் சில கஸல்களைக் கேட்க பாபா விரும்பினார். முந்தைய நாள் போலவே, இந்த நேரத்திலும் அவரது மனநிலை மிகவும் தீவிரமாக இருந்தது. அவர் மிகவும் விரும்பி கேட்ட பாடல்கள்: "ஓ இரகசியத்தைக் காப்பவரே, அந்த இரகசியம் எந்நிலையிலும் வெளிப்படுத்தப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" மற்றும் "மலர் மொட்டுகளே, தோட்டத்தில் உங்களை மலரவிடுங்கள்!"

இந்தப் பாடல்கள், கடந்த காலத்தின் வெவ்வேறு பரிபூரணமான ஆத்மாக்களை பாபாவிற்கு நினைவூட்டியது:

**மும்பையின் அப்துல் (அப்துர்) ரஹ்மான் மற்றும் பாந்த்ராவைச் சேர்ந்த மௌலானா ஸாஹேப் ஆகியோர் இறைநிலையை அடைந்த பரிபூரண ஆத்மாக்கள்; ஆனால் அவர்களில் அப்துல் ரஹ்மான் ஒரு மஜ்ஜூப்பாகவும், அதே வேளையில் மௌலானா ஸாஹேப் முற்றிலும் சாதாரண உணர்வுடனும்** (ஸலிக்காக) **இருந்தார். எனவே இயற்கையாகவே அவர்களின் உணவு உண்ணும் முறைகளில் பெரும் வேறுபாடு இருந்தது. அப்துல் ரஹ்மான் அவருக்கு முன் வைக்கப்பட்ட விதவிதமான உணவுகளில் விரல்களைத் தொட்டுத் துழாவினார். மௌலானா ஸாஹேப் நல்ல உணவை விரும்பிய அதே வேளையில், எந்நேரமும் குரானை வாசித்தார். அவர் ஒரு சாதாரண மனிதனைப் போலவே குரானை வாசிக்கும் அளவுக்கு முழு உணர்வுடன் இருந்தார்.**

**இப்போது, மஜ்ஜூப்களைப் பற்றி: மஜ்ஜூப்கள் சாதாரண மனிதர்களைப் போல் உண்ணவும், அருந்தவும் செய்வதாகக் கூறப்படுகிறது; இருந்தும், அவர்களுக்கு இதைப் பற்றிய எந்த உணர்வும் இல்லை. ஆனால் அப்துல் ரஹ்மானைப் பொறுத்தவரை அபூர்வமான ஒன்று கவனிக்கப்பட்டது. சாதாரண மனிதரைப் போலப் பேசாவிடிலும், பிறர் சொல்வதற்கேற்ப 'அல்லா' என்ற வார்த்தையை உச்சரிப்பது வழக்கம். பௌதீக உலகுடனான அவரது தொடர்பு எவ்வாறு பராமரிக்கப்பட்டது என்பதைக் கடவுள் அறிவார்!**

**இந்தப் பாதையில் நிகழும் அபூர்வங்களும், ஆச்சரியங்களும் மகத்தானவை மட்டுமின்றி மிகவும் நுட்பமானவை, அவை அறிவுபூர்வமாக புரிந்து கொள்ள முயற்சிக்கும் ஒருவரை பைத்தியக்காரனாக மாற்றுவதற்குப் போதுமானது.**

**'அக்கல்கோட் ஸ்வாமி' பரிபூரணத்தின் மொத்த உருவம். என் தாத்தா சாய்பாபாவிடம் ஒரு தனித்துவமான அனுபவ நுட்பம் இருந்தது. பாபாஜான் ஒரு பேரரசர்; ராஜாதி ராஜா. அனைவரும் பரிபூரணமானவர்கள். ஆனால் இன்று நான் எதைச் சொன்னாலும் அது எனது யூகம் மட்டுமே, ஏனென்றால் இன்றிலிருந்து 15ஆம் தேதி வரை நான் ஒரு பக்தனின் நிலையில் இருக்கிறேன்.**

**வெவ்வேறு குருநாதர்கள் வேறு வேறு முறைகளைப் பின்பற்றுகிறார்கள். இவை அனைத்தும் யூகங்களுக்கு அப்பாற்பட்டது. 'குதுப்' (சத்குரு) ஒருவரால் மட்டுமே மேல்நிலை ஆன்மா, மஸ்த், வாலி, மஜ்ஜூப் அல்லது சத்குரு யார் என்பதைச் சொல்ல முடியும். ஒரு குதுப்பைப் பொறுத்தவரை, ஒரு சாதாரண மனிதன் அவர் தன்னைப் போலவே இருப்பதாக நினைக்கிறான்; ஆன்மீக தளங்களில் நிலைகொண்ட மேல்நிலை**

**ஆன்மாக்களும் அவரை ஆன்மீக தளங்களில் ஒருவராகக் கருதுகின்றனர். ஆனால் 'குதுப்' என்பவர் பிரபஞ்சத்தின் மையம்.**

குருநாதர்களின் முற்றிலும் அசாதாரணமான மற்றும் மிகவும் பயனுள்ள வழிகளை விளக்குவதற்கு பாபா பின்னர் இரண்டு சம்பவங்களை - ஒன்று சாய்கேட் கிராமத்தின் **சத்குரு 'தாதா துனிவாலா'** மற்றும் **மௌலானா ஸாஹேபைப்** பற்றியும் எடுத்துரைத்தார்:

**ஒரு நபர், ஆன்மீக பலன்களை அடையும் எண்ணம் எதுவும் இல்லாமல், தாதா துனிவாலாவை அணுகினார்; ஆனால், அந்த மனிதரின் 100 சதவிகித ஆன்மீக தயார்நிலையை நன்கு அறிந்த தாதா துனிவாலா, துனியிலிருந்து கழி ஒன்றை எடுத்து அவரைத் தாக்கியதில், அந்த நபர் மயங்கி, தரையில் விழுந்தார். அருகில் நின்றவர்கள் அனைவரும் பயந்து ஓடினர். மூன்று நாட்கள், அந்த மனிதர் அதே நிலையில் இருந்தார், நான்காவது நாளில், அவர் முழு சுய உணர்வுடன் இருந்ததோடு மட்டுமின்றி இறை உணர்வுடனும் காணப்பட்டார்; அதைத் தொடர்ந்து அவர் அந்த நிலையிலேயே உடலைத் துறந்தார்.**

**இப்போது, மௌலானா ஸாஹேபைப் பற்றி. ஆன்மீக சிந்தனை எதுவும் இல்லாத இந்து மருத்துவர் ஒருவர் அவரிடம் சென்றார். மௌலானா ஸாஹேப், அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில், தான் வாழும் சுவரின் ஓரமாக அவரையும் அமருமாறு அறிவுறுத்தினார். மருத்துவர், மௌலானாவின் கட்டளைக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து, கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக அந்த இடத்தை விட்டு நகரவில்லை. இந்தக் காலகட்டத்தின் முடிவில், மருத்துவர் இறை உணர்வை அடையப்பெற்று, மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பின்னர் அவர் தனது பௌதீக உடலைத் துறந்தார்.**

**பரிபூரண குருநாதர்களின் வழிகளும் முறைகளும் அறிவுக்கு எட்டாதவை. சில குருநாதர்கள் 100 சதவிகிதம் ஆன்மீக தயார்நிலையை அடையப்பெற்றவர்களுக்கு இறை உணர்வை வழங்குகிறார்கள். சிலர் இந்த 100 சதவிகித ஆயத்தத்தை அடைவதுவரை அந்த நபர்களுக்கு உறுதுணையாக இருந்து இறை உணர்வை வழங்குகிறார்கள். சில குருநாதர்கள் கடந்தகால வாழ்க்கையில் அவர்களுடனான தொடர்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.**

**நான்காவது ஆன்மீக தளத்தின் மகாயோகிகள், ஐந்தாவது ஆன்மீக தளத்தில் நிலைகொண்ட வாலிகள் மற்றும் ஆறாவது ஆன்மீக தளத்தின் பீர்கள் கூட ஒரு கல்லின் மீது தங்கள் ஆன்மீக சக்தியை அல்லது ஆற்றலைச் செலுத்தி, மிகப்பெரிய ஆன்மீக உந்துதலை அளிக்க முடியும். ஒரு பரிபூரண**

**குருநாதர் விரும்பினால், அவர் எவரையும் அல்லது எதையும் இறை நிலையை உணரச்செய்ய முடியும்.**

பாபா அன்று மாலையில் மெஹராஸாத்துக்குத் திரும்பிச் சென்றார்.

1952, நவம்பர் 3 திங்கட்கிழமை காலை, ஆதியின் காரில் வழக்கம் போல பாபா மெஹராபாத் வந்தார்; வழியில் அவர்கள் ஸரோஷ் மோட்டார்ஸிலிருந்து பப்பா ஜெஸவாலாவையும் உடனழைத்து வந்தனர். முந்தைய நாள் இரவு முழுவதும் அவரால் தூங்க முடியவில்லை என்று பாபா கூறினார். மெஹராபாத்தில் அவர் அனைவரிடமும் நலம் விசாரித்தார். சளி, இருமல் போன்றவற்றால் அவதிப்படும் அன்பர்கள் பாபாவிடமிருந்து சற்று தொலைவில் அமரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். "**நீலு மிகவும் கச்சிதமாக இருக்கிறார்**" என்று கிண்டல் செய்து, "**நீங்கள் அனைவரும் அவர் அருகில் அமர்ந்து, நீங்கள் விரும்பும் அளவுக்கு தும்மலாம், இருமலாம்!**"

பாபா குழுவிடம் இந்தக் கேள்வியை எழுப்பினார்: "**உங்களில் யார் யார் கவலைப்படுகிறார்கள்?**" ஒருவரும் கையை உயர்த்தாத போது பாபா கூறினார்:

**எவரும் கவலைப்படாததைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் அனைவரும் முதிர்ந்த ஆண் பூனைகள்** (அதாவது, நல்ல இதயம் படைத்தவர்கள்). **நிச்சயமாக, நீங்கள் இரண்டு விஷயங்களைப் பற்றி தீவிரமாக சிந்திக்க வேண்டும், மேலும், மிகவும் கவனமாக இருக்க வேண்டும்: முதலில், கடவுளை நினைவில் கொள்வது, இரண்டாவதாக, நான் உங்களிடம் ஒப்படைத்த கடமையை செவ்வனே செய்வது. எனவே கவனமாக இருங்கள், ஆனால் கவலைப்டாதீர்கள். என்னைப் பொறுத்தவரை எனக்குத் தூக்கம் இல்லை. எல்லா நேரங்களிலும், நான் பெரும்பாலும் நவம்பர் 7, 8, 9 மற்றும் 14 நிகழ்ச்சிகளைப் பற்றிய கவலையில் இருக்கிறேன்.**

**ஆனாலும் இந்த நாட்களில் நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். ஏனென்று எனக்குத் தெரியவில்லை. ஸக்கோரியில் (1921-22) ஒரு குறிப்பிட்ட காலம் நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தேன். புது வாழ்வில், ஹைதராபாத் கூட்டத்தில் (1951), அது வேறு வகையாக இருந்தாலும், நான் மகிழ்ச்சியை அனுபவித்தேன். நிரந்தரமான தெய்வீக பேரின்பமும், கடவுளின் பேரானந்தமும் வேறு வேறு. பாபாஜானுடன் (1915) தொடர்பு கொண்ட சில நாட்களுக்குப் பிறகு நான் மும்பைக்குச் சென்றபோது, எல்லையற்ற துன்ப நிலையை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். அது ஒரு தனிப்பட்ட துன்பம். நான் நீள் இருக்கை ஒன்றில் பன்னிரெண்டு முதல் பதினான்கு மணி நேரம் வரை படுத்திருப்பதை வழக்கமாகக் கொண்டேன். அந்த நாட்களில் எனக்கு தூக்கமே இல்லை. 24 மணி நேரமும் ஏதோ ஒரு மின் மோட்டார் என்னுள் செயல்படுவதைப் போலவும், உலகின் அனைத்து**

**மனப்படிவங்களும் என்னுள் இயங்குவது போலவும் உணர்ந்தேன். இது மிகவும் பரிதாபகரமான மற்றும் மகிழ்ச்சியான நிலை. இது ஒரு தனிப்பட்ட அனுபவம், தனிப்பட்ட மகிழ்ச்சி மற்றும் தனிப்பட்ட துன்பம். தெய்வீக பேரின்பமும் கடவுளின் பேரானந்தமும் வேறு வேறு. இப்போதெல்லாம், நான் பெறும் மகிழ்ச்சி தனிப்பட்டது, எனக்கே உரித்தானது.**

மகிழ்ச்சியான மனநிலையில் இருந்த பாபா, புது வாழ்வின் சில சம்பவங்களை எடுத்துரைத்தார். பின்னர், அவர் ஜபத்தில் ஈடுபடுபவர்களிடம் கூறினார்:

**நான் உங்கள் மூலம் கடவுளை வணங்கிவிட்டேன், எனவே நீங்கள் அதை முழு மனதுடன் என் சார்பாக** (ஜபம் மொழிவதை) **செய்ய வேண்டும். நீங்கள் என்னை நேசிப்பதால், எனக்கு 100 சதவிகிதம் உதவ வேண்டும். எதற்கும் கவலைப்படாதீர்கள்; எந்த மன உளைச்சலுக்கும் ஆளாக வேண்டாம். இந்த வேலைக்கும் அதன் விளைவுக்கும், உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதை நீங்கள் உங்களுக்காகச் செய்யவில்லை. ஆனால், நான் அதை உங்கள் மூலம் செய்ய விரும்புவதால், முழு மனதுடன் அவரை வணங்கியதை நான் உணரவும், கடவுள் அதைப் பார்க்கவும் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்.**

பின்பு பாதிரியிடம் '**கடவுளின் பத்து நிலைகள்**' விளக்கப்பட்ட வரைபடத்தை எடுத்துவரக் கூறி, பாபா விளக்கினார்:

**இந்த அட்டவணையில், பத்தாவது நிலைக்கு 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'** (BEYOND, BEYOND STATE) என்றும், **ஒன்பதாவது நிலைக்கு 'அப்பாற்பட்ட நிலை'** (BEYOND STATE) **என்றும் பெயரிடப்பட்டுள்ளது.**

பாபா பத்து நிலைகளையும் விளக்கி, மேலும் கூறினார்:

**'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'யை இந்துக்களால் 'பராத்பர் பரபிரம்மம்' என்றும் ஸுஃபிகளால் 'வாரா-உல்-வாரா' என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை' ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது; ஆனால் நீங்கள் இதை ஆழமாக, மீண்டும் ஆழமாக, இயன்றவரை ஆழமாக சிந்தனை செய்தாலும், அந்த நிலையைப் புரிந்துகொள்ள முடியாது. இப்போது நான் ஒரு பக்தனின் நிலையில் இருப்பதால், இந்த 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'யை வழிபட்டு வேண்டிக்கொள்கிறேன்.**

பாபா, விபூதி, பால் நாத்து இருவருக்கும் அடிபணிந்து, விபூதியை துனியின் அருகில் சென்று '**ஓம் பரபிரம்ம பரமாத்மா**' என்று திரும்பத் திரும்ப மொழியுமாறு கூறி, வரைபடத்தின் விளக்கத்தைத் தொடர்ந்து கூறினார்:

**வாழ்வது எல்லாம் கடவுள்; அது போல வாழாத எல்லாமும் கடவுள். இப்போது, வேறு என்ன உள்ளது? அப்படியானால் அதுவும் கடவுள்தான். அது**

**அப்படித்தான் - ஓர் உண்மை. சிலர், "பாபா நீங்கள் எழுத்துப்பலகையில் இந்த வார்த்தைகளை உச்சரிக்கிறீர்கள், ஆனால் உண்மையான அனுபவம் என்பது என்ன?" என்று கேட்கும் அவர்களுக்கு நான் சொல்கிறேன்: "பொறுமையாக இருங்கள்!"**

பாபா, தௌலத் ஸிங்கிடம் குரு நானக்கின் பிரார்த்தனையைத் திரும்பத் திரும்ப மொழியுமாறு கேட்டுக்கொண்டார், "**நீயே இறைவன், நான் உன்னிடம் சரணடைகிறேன்** (தும் தாக்கூர் தும் பே அர்தாஸ்)." தொடர்ந்து பாபா அனைத்து ஜபம் புரியும் அன்பர்கள் ஒவ்வொருவரிடமும், உரத்த குரலில், அவர்கள் குடிலில், திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த கடவுளின் பெயரை மொழியுமாறு கேட்டுக்கொண்டார். பாபா கூறினார், "**கடவுளின் பெயரை உண்மையாகவும், நேர்மையாகவும் மொழியுங்கள், ஏனென்றால் உங்களில் எவருடைய பிரார்த்தனையும் கடவுளைச் சென்றடையலாம்.**"

மதிய உணவுக்கான சிறிது இடைவேளைக்குப் பிறகு, பாபா மீண்டும் வரைபடத்தை விளக்கத் தொடங்கினார்:

**எல்லாம் கடவுள். இந்த விளக்கப்படத்தில் ஒரு குறிப்பு உள்ளது. எல்லாமே ஏழு என்ற எண்ணைச் சார்ந்துள்ளது - இறங்கும் ஏழு நிலைகள், உயர்வின் ஏழு நிலைகள், 'மூன்றாம்' பயணத்தின் ஏழு நிலைகள். இன்று நான் பரிணாம வளர்ச்சியின் உணர்வு நிலையில் முட்டுக்கட்டை என்று எதைச் சொல்கிறேன் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.**

**சிருஷ்டி** (படைப்பு) **என்பது உணர்வற்ற 'தெய்வீகம்' உணர்வுள்ள 'கடவுளாக' மாறும் ஒரு விளையாட்டு. கடவுள் கல்லில் மிகக் குறைவான நுண்ணுணர்வுடன் இருக்கிறார், மேலும் மனிதனில் முழு உணர்வுடன் இருக்கிறார். மனிதனில் இருக்கும் அதே கடவுள், கல், உலோகம், காய்கறி போன்றவற்றிலும் இருக்கிறார். உணர்வின் வளர்ச்சி ஒரு படிப்படியான செயல்முறையாகும். மனிதனில், வெவ்வேறு வடிவத்தின் பரிணாம வளர்ச்சியும், உணர்வின் வெளிப்பாடும் முடிவுக்கு வந்துவிட்டன. ஆனால், மனிதன் தன்னை கடவுளாக இன்னும் உணரவில்லை.**

**இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம்? மனிதன் பூரண இறுதி வடிவத்தை அடையப்பெற்ற பின்னரும், தன்னை ஏன் கடவுளாக உணரக்கூடாது? அவர் பரிணாம வளர்ச்சியின் வடிவத்தை உருவாக்கிக்கொண்டே செல்லும் வேளையில், தனி ஒருவரிடம், பௌதீக உலகின் மனப்படிவங்கள், 100 சதவிகிதம் ஒட்டிக்கொண்டிருப்பதால் இந்த முட்டுக்கட்டை ஏற்படுகிறது. கடவுள் அவரை அறியத் தேவையான உணர்வை விரும்பினார்; ஆனால் அவர் பூரண உணர்வை அடையப்பெறும் தருவாயில், தன்னைத் தானே அறியாமல், உலகைப் பார்க்கிறார். அவர் பௌதீக உலகையும், பௌதீக மனப்படிவங்களையும் அறிவார்.**

**ஒரு மனிதன் தன்னை, கடவுளாக அறிந்து கொள்வது சாத்தியம் என்றாலும், அவனை அறியவிடாமல் ஈர்த்துச் செல்வது எது? இது முதல் ஆறு இறங்கும் நிலைகளைப் பற்றிக்கொண்டிருக்கும் மனப்படிவங்களின் அபார சக்தி. இந்த மனப்படிவங்கள் அனைத்தும் விரயமான பின்னரே ஒருவன் தன்னைக் கடவுள் என அறிவான். எனவே, இந்த நோக்கத்திற்காக, ஒரு மனிதன் மீண்டும் மீண்டும், மனித உருவில் பிறவி எடுக்க வேண்டும். இதைத்தான் நான் முட்டுக்கட்டை என்று சொல்கிறேன்.**

இந்த விவரங்களை விளக்கிக் கொண்டிருக்கும் போது, பாபா தனது கண்களை மூடி மெதுவாகத் திறந்தார். அவரது கண்கள் முழுவதுமாக திறக்கப்பட்டதும், பாபா எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தார், ஆனால் அவரது உடலை மட்டும் பார்க்கவில்லை. அவர் விளக்கியதை, ஒரு முழுநிறை வடிவில் முழுமையாக வளர்ச்சியடைந்து, தன்னைத் தவிர (கடவுளாக) இதர அனைத்தையும் அறிந்த மனிதனுடன் ஒப்பிடலாம்.

'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'யைச் சுட்டிக்காட்டி, பாபா விளக்கினார்:

**கடவுளின் இந்த நிலை, 'கடவுளின் அப்பாற்பட்ட நிலை'யில் கூட புரிந்துகொள்ள முடியாதது. அதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. இது எப்பொழுதும் கடவுளாக இருக்கும் ஒரே நிலை (GOD IS).**

**கடவுள் 'அப்பாற்பட்ட நிலை'யிலிருந்து, 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'யை நினைக்கத் தொடங்கும் போது, இருமைத்தன்மை அடியெடுத்து வைக்கிறது. ஆனால் முதலில், 'அப்பாற்பட்ட நிலை'யில், அத்தகைய எண்ணம் தோன்றுவது சாத்தியமற்றது. தொடக்கத்தில் கடவுள் சுயநினைவின்றி இருக்கிறார். பின்னர் அவர் உணர்வைப் பெறுகிறார். இப்போது, உணர்வற்ற நிலையில், அவரது முதல் அனுபவ நிலை என்ன என்பதை அறிய விரும்பினால், அவர் மீண்டும் உணர்வற்ற நிலையை அடைய வேண்டும், இது சாத்தியமற்றது. ஒரு முறை இறையுணர்வின் அனுபவம் அடையப்பெற்றால் அது நித்தியமானது. அத்தகைய இறை நிலையை அடையப்பெற்ற ஒருவர், கோடிக்கணக்கான பிறவிகளை மனித உருவில் எடுத்தாலும், 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'யின் உணர்வற்ற தன்மையை மீண்டும் அனுபவிக்க முடியாது. ஆனாலும், நான் சொல்கிறேன், 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை' என்பது நிதர்சனம், அதுவே நம் அனைவரின் அசலும் முதன்மையுமான நிலை. இந்த 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலை'யில் எதுவும் இல்லாத ஒன்றாக அனைத்தும் உள்ளன.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"இவை அனைத்தும் புரிந்து கொள்ள முடியாததை புரிந்து கொள்வதற்கான முயற்சியாகும். கடவுளாக மாறுவதில்**

**மட்டுமே உண்மையான மதிப்பும், அந்தஸ்தும் உள்ளது. இதற்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்வோம்."**

அப்துல்லா ஜாஃபர் தனது அனுபவத்தை பாபாவிடம் கூறினார்: "பாபா, நான் இன்று காலை 'அல்லா ஹூ' என்று திரும்பத் திரும்ப மொழிந்தபோது, நான் கிட்டத்தட்ட தூங்கிவிட்டேன். ஆனால் அந்த நிமிடமே, நீங்கள் என் படுக்கையில் அமர்ந்திருந்ததைக் கண்டேன், இது கடவுளின் பெயரைத் தொடர்ந்து உச்சரிப்பதில் ஏற்பட்ட இடையூறை நிவர்த்திசெய்தது."

பாபா தனது அறைக்கு அருகில் இரவு காவல் புரிந்த மண்டலியின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறினார்: **"மேற்கத்திய நாடுகளில், மூன்று மாதங்களாக நீலு ஒரு நாளைக்கு சில நிமிடங்கள் கூட தூங்குவது அரிது. மேலும், பாபாஜான் இரவு முழுவதும் தூங்காமல் அமர்ந்திருந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவர் காலை 5:00 முதல் 6:00 மணி வரை ஒரு மணி நேரம் மட்டுமே படுக்கையில் சாய்வது வழக்கம்."**

ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட அப்துல்லா ஜாஃபர், அமர்ந்த நிலையில் கடவுளின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதில் சிரமம் இருந்ததால், அவர் அதிகாலை 3:00 முதல் 5:00 மணி வரை நின்றுகொண்டே கடவுள் நாமத்தை உச்சரித்தார். அவர் ஏறக்குறைய தூங்கிவிட்டதால், நானா கேர், அவருக்குத் துணையாக இருந்து கடவுள் நாமத்தை உச்சரிப்பதில் எந்த இடையூறும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டார். அன்று இரவு முதல், அப்துல்லா, காடேக்கர் இருவருடனும் நானா இருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் அவரும் ஆஸ்துமாவால் அவதிப்பட்டார்.

ஒரு சந்தர்ப்பத்தில், அலோபா கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் வேளையில், உணர்ச்சி வேகத்தில் அழத் தொடங்கியதால், அதன் தொடர்ச்சியில் ஏற்பட்ட தடையைத் தவிர்க்க, நானா கேர் உடனடியாக அவரிடம் ஓடி வந்து 'அல்லா ஹு' என்று திரும்பத் திரும்ப மொழிய ஆரம்பித்தார்.

**கிருஷ்ண ஸ்வாமி** என்று அழைக்கப்பட்ட ஒருவர் வரவிருக்கும் கூட்டங்களில் கலந்துகொள்ள இருந்தார். கேரளாவைச் சேர்ந்த இவர், (22 வயது), நீண்ட முடி மற்றும் தாடியுடன், சாதுக்களின் பொதுவான உடையை அணிந்திருந்தார். மெஹர் பாபாவின் தொடர்பில் வந்த பின்னர் அவர் '**கிருஷ்ணாஜி**' என்று அழைக்கப்பட்டார். அவரைப் பற்றிய சில தகவல்களைக் கேட்ட பாபா, **"அவர் அனைவரையும் தனது அன்பினால் ஈர்க்க முயற்சிக்கிறார், என்னையும் சேர்த்து! தற்போது நான் யோகி, துறவி அல்லது மஸ்த் யாராக இருந்தாலும் அவரை வணங்குவதைப் பழக்கமாக்கிக் கொண்டேன்"** என்று குறிப்பிட்டார்.

நவம்பர் 7 முதல் 9ஆம் தேதி வரை, எவரும் பாபாவைச் சுற்றி பத்தடி தூரத்திற்குள் வர முயற்சிக்கக் கூடாது என்று பாபா கூறினார். **"அருகில்**

**அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே வர வேண்டும். இங்கு சுமார் 300 பேர் இருப்பதால், நான் அமைதியான சூழலை விரும்புகிறேன். வெகுஜன தரிசனத்தின் போது நான் இதை எதிர்பார்ப்பதில்லை, ஏனென்றால் மக்கள் எனது தலைமுடியைப் பறிக்கும் அளவுக்கு இவ்வளவு பெரிய நெரிசலை ஏற்படுத்துவார்கள்!"**

நவம்பர் 5ஆம் நாள், அவெஸ்தா, பைபிள், குரான், கீதை ஆகியவற்றைப் படிக்கும் நேரத்தை பாபா நிர்ணயித்தார். விழாவுக்குத் தேவையான பொருட்களை சேகரிக்குமாறு சம்பந்தப்பட்ட ஐவரிடமும் கேட்டுக் கொண்டார். **"பிரதிநிதித்துவம் சீராக அமையட்டும்"** என்று பாபா கருத்து தெரிவித்தார்.

அடுத்ததாக பாபா இசைத்தட்டுகளை இசைக்கவிட்டு கஸல்களைக் கேட்டார். **"ரகசியத்தைப் பாதுகாப்பவனே, தலை துண்டிக்கப்பட்டாலும், அதை வெளிப்படுத்தாதே"** என்ற பாடலை மீண்டும் மீண்டும் கேட்ட பின்பு, பாபா கூறினார், **"இரகசியத்தைப் பற்றி பேச முடியும், ஆனால் அதை அறிந்து கொள்வது முற்றிலும் மாறுபட்ட அனுபவம்; இரகசிய இறை ஞானம் அறிவுத்திறனுடன் இணைந்து செல்வதில்லை, மாறாக, அது உணர்வுகளுடன் நெருங்கிய தொடர்புடையது, மேலும் விவேகமற்ற முறையில் வெளிப்படுத்தப்பட்டால், குழப்பத்தை உருவாக்குகிறது."**

இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்த, பாபா ஒரு பட்டான் மற்றும் மார்வாரியின் கதையை எடுத்துரைத்தார்; சில வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் ஒரு மனிதனின் இயல்பை மாற்றியமைக்கும் உணர்ச்சியின் திடீர் வெளிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறார்:

ஒரு தடித்த, திடகாத்திரமான பட்டான் மற்றும் ஒரு பலவீனமான, மெலிந்த மார்வாரி இருவருக்குமிடையே சுமுகமான உறவு இல்லை. மார்வாரி, பட்டானை வெறுத்தார், ஆனால், அவரது உடல் அளவுக்கு உகந்தாற்போல் அடி அல்லது உதையை அவரால் கொடுக்க முடியவில்லை. ஒருமுறை, பட்டான் தன்னை நோக்கி வருவதை தூரத்திலிருந்து பார்த்த மார்வாரி, இந்து நண்பர்கள் சிலரைத் தனதருகில் அழைத்து, "நண்பர்களே, இந்த பட்டான் மிகவும் துரோகக்காரன். நான் அவனிடம் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டாலும், அவன் என்னிடம் மிகவும் முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறான். அதை நான் உங்களுக்கு நிரூபிக்கிறேன். தயவுசெய்து நீங்கள் எனக்கு உதவுங்கள். பட்டானுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும்" என்றார்.

இதற்குள் பட்டான் அருகில் வந்ததும், மார்வாரி சிரித்த முகத்துடன், அவருடன் கைகளைக் குலுக்கி அவரைத் தழுவினார்; ஆனால் அவ்வாறு செய்யும் வேளையில் பட்டான் காதில் எதையோ கிசுகிசுத்தார், "ஏ, பன்றியின் மகனே!" என்ற இந்த வார்த்தைகள் பட்டானின் உணர்வுகளைத் தூண்டி அவரைக் கொதிப்படையச் செய்ய போதுமானதாக இருந்தது. மார்வாரியை அடிக்க

ஆரம்பித்தார். உண்மை நிலவரம் தெரியாமல், அருகில் நின்றவர்கள் மார்வாரிக்கு உறுதுணையாக நின்று பட்டானைத் தாக்க அவர் சத்தம் போட்டார்.

மார்வாரி, பட்டான் மற்றும் அவர்களது மோதலை மிகவும் கச்சிதமாக, கை சைகைகளால் பாபா வெளிப்படுத்தியது அனைவரையும் மனதார சிரிக்க வைத்தது. இத்துடன் மாலை கூட்டம் முடிந்து பாபா மெஹராஸாத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மறுநாள், 1952, நவம்பர் 4ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 7.30 மணிக்கு திரும்பி வந்த பாபா, அங்கிருந்த அனைவரிடமும் மகிழ்ச்சியான மனநிலையில் நலம் விசாரித்தார். கைக்கோபாத், காளேமாமா, ராம்ஜூ, முரளி, தௌலத் சிங் ஆகிய ஐந்து 'பூசாரிகளை' அழைத்தார். முரளி இன்னும் வராததால் யாரோ அவரை அழைத்து வரச் சென்றார். பாபா, "**அவர் மிகவும் சோம்பேறியாக இருக்கிறார், நான் அவருக்கு இறை உணர்வை வழங்குவதாக வாக்குறுதி அளித்தாலும், அவர் சரியான நேரத்தில் வரமாட்டார்!**" முரளி வந்ததும், பாபா ஐவரில் ஒவ்வொருவரையும் ஒரு சிறிய ஜெபத்தை ஏழு முறை திரும்பத் திரும்ப மொழியுமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்த நாள் பாபாவின் சார்பாக ராம்ஜூ குரானிலிருந்து வாசிக்க வேண்டியிருந்தது, ஆனால் அவருக்குச் சளி பிடித்திருந்ததால், பாபா, "**நாளைக்குள் அவர் சளியிலிருந்து விடுபடட்டும்**" என்று குறிப்பிட்டு, பின்னர் ஆலோசனை கூறினார், "**பைதூலின் மருந்தை ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? பைதூல் ஒருவரின் அறிகுறிகளை சரிபார்ப்பது அல்லது சோதனை செய்வது போன்ற எதுவும் இல்லை. பைதூல் தனது சொந்த வழியில் மருந்தைத் தருகிறார், நோயாளி முற்றிலும் குணமாகிவிடுகிறார் அல்லது அவரது இதயத் துடிப்பு நின்றுவிடுகிறது!**"

பாபா, "**நவம்பர் 7ஆம் நாள் முதல் சிறப்புமிக்க, தீவிரமான நிகழ்ச்சி ஒன்று இருப்பதால், இன்று சற்று இலகுவான தலைப்புகளைப் பற்றி பேசலாம்**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஃபெராமுக்கு உடல்நிலை சரியில்லை, பாபா அவரிடம், "**ஏன் கவலைப்பட வேண்டும், ஃபெராம்? ஒருவேளை நீங்கள் எங்கள் அனைவரையும் விட அதிக காலம் வாழ்வீர்கள்!**" என்றார்.

பாபா தொடர்ந்து கூறினார், "**குஸ்தாஜி எப்பொழுதும் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பவர். நாங்கள் மேற்கத்திய நாடுகளில் இருந்தபோது அவர் உடல்நிலை குறித்து எந்தப் புகாரும் இல்லாமல் இருந்தார். அவருக்கு ஐஸ்கிரீம் என்றால் அலாதி ஆசை, அங்கே அது தாராளமாகக் கிடைத்ததால், அவர் நல்ல உடல்நிலை மற்றும் மனநிலையில் காணப்பட்டார். சில நேரங்களில் அவர், 'நான் 125 ஆண்டுகள் பூரண ஆரோக்கியத்துடன் வாழ்வதை விரும்பினால், தினமும் ஒரு டஜன்**

**வாழைப்பழங்களைக் கொடுங்கள்' என்றார். பைதூலுக்கு அசைவ உணவுகள் என்றால் பிரியம், அவற்றைக் கண்டதும் பிற அனைத்தையும் மறந்துவிடுகிறார்.**"

அலோபாவிடம், "**இப்போது நன்றாக உண்டு, அருந்தி மகிழுங்கள்! 15ஆம் தேதி முதல் நமது 'கர்பலா' வாழ்க்கை தொடங்குகிறது!**" என்று பாபா கூறினார்.

இதற்குள் அங்கு வந்த அண்ணா 104 அவர்களைப் பார்த்து பாபா கூறினார், "**அண்ணாவின் வித்தியாசமான உடை, நடை, பாவனையுடன் அவரைப் பார்ப்பதில் நான் எப்போதும் மகிழ்ச்சியடைகிறேன். அண்ணாவுக்கு மோர் பிடிக்கும், ஆனால் இதைவிட, அவர் புகையிலையை மெல்லுவது அதிகம் பிடிக்கும், அவர் தனது பாதி வாயில் புகையிலையை வைத்துக்கொண்டு முணுமுணுப்பதைப் புரிந்துகொள்வது கடினம்.**"

பாபா சில குறிப்பிட்ட பணிகளைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினார். 'தரிசன பயண' வேளையில் வழங்கப்படவிருந்த 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' பற்றிய அவரது ஏழு செய்திகளை ஆங்கிலம் மற்றும் இந்தியில் அச்சிடுமாறு ஆதிக்கு அறிவுறுத்தினார். பல்வேறு மண்டலிக்கு தினசரி சில அறிவுரைகளை வழங்கிய பிறகு, பாபா, நவம்பர் 8 நிகழ்ச்சியின் முக்கிய விஷயங்களைக் குறித்து எரச்சுடன் விவாதித்தார். இறுதியில் அவர் குறிப்பிட்டார், "**கொடுப்பவர் அல்லா, அதைப் பெறுபவர் பிஸ்மில்லா** (மிகவும் கருணையுள்ள கடவுள்)!"

அன்று காலை குழுவினருடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, பாபாவின் மெத்தையில் ஒரு மூட்டைப் பூச்சி இருந்ததைக் கண்டு பாபா வருத்தமடைந்தார், மேலும் கவனக்குறைவாக இருந்ததற்காக மண்டலியைக் கண்டிக்கும் விதத்தில், "**இந்தப் பிசாசுகளின் கைகளில் நான் சிக்கிக் கொண்டேன்!**" என்று குஜராத்தி மொழியில் தெரிவித்தார். மதிய உணவு இடைவேளையின் போது பாபாவின் இருக்கை மற்றும் மெத்தை வெயிலில் போடப்பட்டு மண்டபம் முழுவதும் துடைத்து சுத்தம் செய்யப்பட்டது.

அன்று பிற்பகலில் பாபா கூறினார், "**நவம்பர் 15 முதல் நான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன். ஏப்ரல் இறுதியில் எனக்கும், உங்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இறுதி முடிவாக இருக்கும்.**" தாமாகவே பாபாவைப் பின்பற்றத் தயாராக இருந்தவர்களால் பூர்த்தி செய்வதற்காக, எரச் மற்றும் பெண்டு மூலமாக அனுப்பிய நகல்களைப் பற்றி பாபா மண்டலியிடம் பேசினார். மினூ கராஸ் அவற்றை சீராக ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும். பாபா அப்போது விரிவாக எடுத்துரைத்தார்:

**இதுவரை நான் இது போன்ற கடித நகல்களை அனுப்பியதில்லை. உண்மையில், தற்போது என்னிடம் ஒரு நயா பைசா கூட இல்லை**

என்றாலும், அன்புடன் கொடுக்கவில்லை என்றால், நான் ஒரு பைசாவைக் கூட எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், இன்று, ஏழைகளில் ஏழையாக இருந்தாலும், தெய்வீக நெருப்பாகிய பெருங்கடலில் மூழ்குவதற்கு நான் தீர்மானித்தேன். இப்போது எவரேனும் பெரிய தொகை வழங்கினாலும் அதை நான் ஏற்கமாட்டேன்.

மேற்கில், நான் ஒரு விபத்தை சந்தித்தேன். எனது முகம் வீங்கி, என் கை கவணிலும், கால் பிளாஸ்டரிலும் கட்டப்பட்ட நிலையில், நான் அமைதியாக (படுக்கையில்) படுக்க வேண்டியிருந்தது. அப்போதும் மக்கள் என்னைப் பார்க்க வந்தனர். நான் அழகாகவும் பொலிவுடனும் இருப்பதாகக் குறிப்பிட்டனர். அவர்களின் அன்பு ஒன்றுதான் என்னை அழகாகப் பார்க்க வைத்தது.

தற்சமயம் மேற்கத்திய நாடுகளில் பலர் என்னைப் பற்றிய அதிசயமான அனுபவங்களைப் பெற்றுள்ளதாக கடிதங்கள் மூலம் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அங்கே என்னைப் பார்த்ததாக எழுதுகிறார்கள். ஆனால் உண்மையாகச் சொல்வதானால், எனக்கு ஒரு சதவிகிதம் கூட இது குறித்து எதுவும் தெரியாது. நான் இதைச் செய்யாதபோது இதைப்பற்றி எப்படி அறிவது? இந்த 'அதிசயங்களை' நான் உணர்வுபூர்வமாக செய்கிறேன் மற்றும் அறிந்திருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் தவறான எண்ணத்தில் இருக்கிறீர்கள். அப்படியானால் யார் இதைச் செய்தது? கடவுள் எனக்காகச் செய்தார், நவம்பர் 15ஆம் நாளுக்குப் பின்னர், அவர் என்னைச் செய்ய வைத்து, அதைத் தெரிந்து கொள்வார். நான் சொல்வது என்னவென்றால், எல்லாவற்றையும் கடவுளே செய்கிறார்.

தொடர்ந்து பாபா, தெய்வீக லீலை, திருவிளையாடல் அல்லது நகைச்சுவை உணர்வு பற்றி கூறினார்:

கடவுளின் லீலையை தெய்வீக திருவிளையாடல் எனலாம்! இது அவரது மகிமையின் தெய்வீக நகைச்சுவை உணர்வின் வெளிப்பாடாகும், மேலும், கடவுளின் திருவிளையாடலைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம்.

சாதாரண நகைச்சுவை உணர்வு ஒவ்வொரு நபரிடமும் ஏதோ ஒரு வகையில் ஏறத்தாழ உள்ளது, மேலும் அது ஆன்மீக முன்னேற்றம் அல்லது தனிநபரின் தெய்வீக அறிவொளியின் காரணமாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. நகைச்சுவை உணர்வு மட்டுமல்ல, ஒரு தனி நபர் எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும் அல்லது அறிவொளி பெற்றிருந்தாலும், அந்த நபரின் ஒட்டுமொத்த தனிப்பட்ட இயல்பு மாறாமல் இருக்கும்.

அவதார புருஷர்கள், தீர்க்கதரிசிகள், பரிபூரண குருநாதர்கள் மற்றும் புனிதர்கள் மூலம் கடவுளின் நகைச்சுவை உணர்வு வெளிப்பட்டாலும், நடைமுறை கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தந்த கடமைகளின் நோக்கம் மற்றும் வரம்பிற்கு இணங்கினாற் போல வேறுபடுகிறது. ஆனால், சாதாரண மற்றும் தெய்வீக நகைச்சுவை உணர்வின் வெளிப்பாட்டின் அமைப்பும் அளவும் கடவுளின் மகிமையின் அசல் தன்மையைப் பொறுத்தது.

நான் அவதார புருஷராக இருந்தாலும் சரி, சைத்தானாக இருந்தாலும் சரி, எனக்கு நகைச்சுவை உணர்வு அதிகம் என்பது மட்டும் நிச்சயம். அண்ணா 104ஐப் பார்த்து பெரு மகிழ்ச்சி அடைவதும், பாபாதாஸின் சம்பந்தமில்லாத பேச்சைக் கேட்டு மகிழ்வதற்கும் எனது நகைச்சுவை உணர்வே காரணம்.

அவர் எவ்வளவு அதிகமாக பேசுகிறாரோ, அவ்வளவு அதிகமாக அவரை நான் விரும்புகிறேன். பாபாதாஸ் எல்லையற்ற ஒவ்வா தன்மை மிக்கவர் என்று சொன்னால் அது மிகையாகாது. மஹா கவிஞரான காளிதாஸ் மற்றும் சிறந்த பக்தரான சூர்தாஸ் ஆகியோரை பாபாதாஸுடன் இணைத்துப் பார்க்கும்போது, குறிப்பிட்ட தலைப்புக்கும் பாபாதாஸுக்கும் இடையே, இறுதியில் 'தாஸ்' (அடிமை) என்ற வார்த்தையின் பொதுவான காரணியைத் தவிர மூன்று பெயர்களிலும் வேறு எந்த ஒற்றுமையும் இல்லை!

சாது, சன்னியாசிகளின் பொறுமையையும், ரிஷி, முனிகளின் சகிப்புத்தன்மையையும் இழக்கச் செய்ய அண்ணா 104 அவர்களின் ஆளுமை ஒன்றே போதுமானது; மேலும் இங்குள்ள அனைவரும் நடைமுறையில் அண்ணாவுக்கு எதிரும் புதிருமாக இருப்பவர்கள். அண்ணா இந்த இடத்திலிருந்து வெளியேறும் தருணத்தில் உங்களில் பெரும்பாலானோர் நிம்மதியில் பெருமூச்சு விடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். அவரையும் பாபாதாஸையும் நகைச்சுவையாகக் கையாளாமல் என்னால் இருக்க முடியாது என்பதையும், சில நேரங்களில், அவர்களை என் அருகில் வைத்துக் கொள்வதற்காக நான் எனது வழக்கமான முறையை விட்டு விலகிச் செல்கிறேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்த விலைமதிப்பற்ற ஜோடியைப் பற்றி இங்கு நம்மில் யாரும் வேறுபட முடியாத ஒன்று என்னவென்றால், அவரவர் திறமைகள் மற்றும் திறன்களுக்கு ஏற்ப, இருவரும் எனக்கு ஏறத்தாழ மிகச்சிறந்த அளவில் தனித்துவமான சேவையை வழங்கியுள்ளனர், மேலும் இருவரும் என்னை உண்மையாக நேசிக்கிறார்கள் என்பதையும் நான் அறிவேன்.

முந்தைய அவதார புருஷர்களின் வாழ்க்கையில் நடந்த பல்வேறு மனதைத் தூண்டும் சம்பவங்களை பாபா குறிப்பிட்டார்:

ஒருமுறை ரஸூல்-இ-குதா (இறைத்தூதர்) உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது, யாரோ ஒருவர் இதற்கு, தீய கண் திருஷ்டிதான் காரணம் என எடுத்துரைத்து, தலையணையின் கீழ் கத்தி ஒன்றைத் திறந்து வைத்து தூங்க வேண்டும் என்று பரிந்துரைத்ததாகக் கூறப்படுகிறது. அவரும் அவ்வாறே செய்த பின்னர், அவர் நலமாக இருப்பதாக அறிவித்தார். அதை சாதாரணமானது அல்லது தெய்வீகமானது என எப்படியும் அழைக்கலாம்; ஆனால், அது முஹமதின் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துகிறது.

அவரது பேரக்குழந்தைகளான ஹாஸன், ஹுஸைன் ஆகியோரின் சிறு பருவத்தில், நபிகள் நாயகம் தனது மகள் பாத்திமா, தியாகிகளின் தாயாருக்கு மொஹரம் கார்பலா போரைக் குறித்து முன்னதாகவே அறிவித்தார் என்பது உண்மைதான். உண்மையில், அரேபியாவின் அன்றைய காட்டுமிராண்டிகளை உலகின் மீது நம்பிக்கை, அன்பு மற்றும் சத்தியத்தின் ஜோதியாக மாற்றிய நபிகள் நாயகம், இஸ்லாமின் மிகப்பெரிய சோகத்தைத் தவிர்க்கவோ அல்லது தனக்கான மிகக் கொடூரமான முடிவைத் தடுக்கவோ முயற்சிக்காமல், இரண்டு பேரன்கள் மட்டுமே, அதற்குக் காரணம் என்று கூறுவதும், முஹம்மதின் தெய்வீக நகைச்சுவை உணர்வைக் குறிக்கிறது.

அதேபோல, கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலும் அதன் விளைவாக உருவான இரத்தக்களரியும் கிருஷ்ணரின் தெய்வீக நகைச்சுவை உணர்வால் மட்டுமல்ல, ஒரு வேட்டைக்காரனின் வில்லிலிருந்து தற்செயலாக ஒரு காலில் தாக்கிய அம்பு மூலம் கிருஷ்ணரே இறந்தபோது, அதன் உச்சத்தை எட்டியது. வண்ணமயமான, விளையாட்டுத்தனமிக்க அவதார புருஷருக்கு எந்த வகையிலும் தீங்கு விளைவிக்கும் எண்ணம் இல்லாத ஒரு சாதாரண வேட்டைக்காரன்.

தனது நெருங்கிய சீடர் தம்மைக் காட்டிக் கொடுப்பார் என்றும், அதனால் சிலுவையில் அறையப்படுவார் என்றும் கருணை உள்ளம் படைத்த இயேசுவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், தெய்வீக லீலையின் காரணமாக, கிறிஸ்துவை சிலுவையில் அறையாமல் தடுக்கும் விதத்தில் உதவ முடியவில்லை, இருப்பினும் உலகம் அவரை மனிதகுலத்தின் இரட்சகராகப் பார்க்கிறது.

புத்தர் எளிய வயிற்றுப்போக்கினால் உடலைத் துறந்தது மிகவும் வேடிக்கையான தெய்வீக நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவதாக இருந்தது, இருப்பினும் மனிதகுலத்தின் ஆன்மீக நோய்களுக்காக அவர் வழங்கியது இன்றுவரை 'அருமருந்தாக' உலகத்தில் உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், சுற்றுப்புற சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றத்தைத் தவிர, அதே பண்டைய, பழங்கால கதை மீண்டும் மீண்டும்

தொடர்கிறது, இது தெய்வீக நகைச்சுவை அல்லது கடவுளின் லீலையாக நிரூபிக்கப்படுகிறது. இருப்பினும், தெய்வீக திருவிளையாடல் அல்லது லீலையின் வெளிப்பாடு, கடவுளுடன் ஐக்கியமாகும் மேல்நிலை ஆத்மாக்களைச் சார்ந்தது. இவ்வாறு, இருமை தன்மையின் நியதிக்கு மேலாக தங்களை உயர்த்திக் கொண்டாலும், அவர்கள் இன்னும் அறியாமையின் உலகளாவிய விதியை நிலைநிறுத்துவதற்காக தெய்வீக நகைச்சுவை உணர்வைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள், இதன் மூலம் தெய்வீக ஞானமானது என்றென்றும் அடையப்படுகிறது.

**அமெரிக்காவில் நான் கார் விபத்துக்குள்ளானபோது என்னுடன் இருந்தவர்களால் மட்டுமே எனது சுய நகைச்சுவை உணர்வை - அதாவது, என் அன்பர்களுடன் இணைந்து, இரத்தக் குளத்தில், நொறுங்கிய எலும்புகளுடன், மண்ணில் அடிபட்டு, காயப்பட்டு, உண்மையில் உதவியற்றவனாக, நம்பிக்கையற்றவனாக இருந்தேன் என்பதை - நன்றாக விவரிக்க முடியும். ஆயினும் கூட, நான் எனது அமைதி மற்றும் முழு உணர்வை இந்த நெருக்கடி நேரத்திலும், குணமடையும் நீண்ட காலத்திலும் பாதுகாத்துப் பராமரித்தேன்.**

பாபா தனது மோதிர விரலைக் காட்டி, "**மஸ்துகள் விலைமதிப்பற்ற மாணிக்கங்கள். அவர்கள் எனக்காகப் பணிபுரிகிறார்கள், என்னுடைய ஆன்மீக பணிகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் எனக்குப் பெரும் உதவியாக இருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்தில் அவர்கள் தங்கள் பணிக்காகவும் எனக்கு உதவியதற்காகவும் பாராட்டப்படுவார்கள்**" என்று குறிப்பிட்டார்.

பாபா மிகவும் கடுமையான தவம் புரிந்த சில மஸ்துகளை நினைவு கூர்ந்து, தொடர்ந்தார்:

**உலகம் முழுவதும், ஒரு லட்சம் மேல் நிலை மஸ்துகள்** (மர்து-இ-குதா) **உள்ளனர். இவர்கள், தங்கள் வாழ்க்கையை கைகளில் பற்றிக்கொண்டு, மனதை முழுமையாகக் கட்டுப்படுத்தி, இறை உணர்வுக்காகப் படாத பாடுபடுகிறார்கள். பல யுகங்களுக்குப் பின்னர், அவர்களில் ஒருவர் இறை உணர்வை அடையப்பெறுகிறார். இதை தீவிர அவநம்பிக்கையாகப் பார்க்காமல் அனுகூலமானதாக எடுத்துக் கொள்ளலாம். 'நான் கடவுள்!' போன்ற கூற்றுகளால் வேதாந்தம் நிறைந்திருக்கிறது அல்லவா? நாம் அனைவரும் கடவுள்; இது உண்மை. முற்றிலும் அனுகூலமானதும், நம்பிக்கை அளிப்பதும் இல்லையா?**

பிளீடர் பக்கம் திரும்பி, பாபா சைகையால் தெரிவித்தார்:

**நம்பிக்கையை இழந்த நிலையில் பிளீடர், 'நம்பிக்கையின் உச்சத்தைப் பற்றியோ அல்லது அளவிறுதியற்ற அன்பின் கடலைப் பற்றியோ**

ஏன் பேச வேண்டும்? அதில் ஒரு கரண்டி அளவுடன் நான் திருப்தி அடைவேன்! எனக்குக் கடல் வேண்டாம்!' என்று குரல் கொடுக்கிறார். ஆனால் உண்மை என்னவென்றால், நீங்கள் ஒரு கரண்டி அளவை அடையப்பெற்றால், பெருங்கடலைப் பெறுவது மிகவும் கடினம்; ஏனென்றால், இதன் சுவையே நீங்கள் கடலில் இணைவதற்குப் பெரும் தடையாக இருக்கும். அந்த ஒரு கரண்டி அளவை ஆறாவது மற்றும் ஏழாவது ஆன்மீக தளங்களுக்கு இடையில் அமைந்துள்ள பள்ளத்தாக்குடன் ஒப்பிடலாம். அந்த நிலையில், நீங்கள் கடவுளை நோக்கி நிற்கிறீர்கள். நீங்கள் அவரை அழைக்கிறீர்கள், ஆனால் எந்த பதிலும் இல்லை, மேலும் எல்லையற்ற கடவுளுடன் ஒன்றிணைவது மிகவும் கடினமாகிறது. அதனால் நான் வழங்கும் போது, ஒரு துளி அல்ல, சமுத்திரத்தையே வழங்குகிறேன்.

ஸூஃபியிஸத்தில், வாலிகள் மற்றும் சத்குருக்களின் எண்ணிக்கை மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஒரு சத்குருவால் மட்டுமே இதுபோன்ற விஷயங்களை அறிய முடியும். இன்று நான் முற்றிலும் ஒரு பக்தனின் நிலையில் இருக்கிறேன். எனவே நான் சொல்வது எனது யூகத்தில் வருவது. ஆனால், நான் ஒன்றில் உறுதியாக உள்ளேன்: ஏப்ரல் மாத இறுதிக்குள், உலகம், உங்களுக்கும், எனக்கும் இப்போது இருப்பது போல் இருக்காது என்பதில் எனக்குள் 100 சதவிகிதம் நம்பிக்கை உள்ளது. இது ஓர் உண்மையான முடிவாக இருக்கும். அதனால் நான் சொல்கிறேன், பொறுமையாகக் காத்திருங்கள். பொறுமை உள்ளவர்களுக்கு கடவுள் உதவுகிறார். கடவுள் கூறுகிறார், "பொறுத்திருங்கள், நான் உங்களை சந்திக்கிறேன்." நான் சொல்கிறேன், "நேரம் வந்துவிட்டது; ஏப்ரல் இறுதி வரை பொறுமையாக இருங்கள்." இத்தனை வருடங்கள் என்னுடன் வாழ்ந்ததால், நீங்களும் என்னைப் போலவே நினைத்துக் கொண்டிருக்கக் கூடும் என்று நினைக்கிறேன்.

ஒரு சத்குருவின் தர்பாரில் (சபையில்) வரலாறு திரும்பத் திரும்ப வருகிறது. ஆனால் அதன் அழகு இதுதான்: குருநாதர்கள் பொறுமையிலும், பதற்றத்திலும், நம்பிக்கையிலும் சந்தேகத்திலும் சம மனநிலையை அனுபவிக்கிறார்கள். இதுவே அவர்களின் லீலை.

மீண்டும், கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆர்வத்துடனும், ஏக்கத்துடனும் நினைப்பவர்கள் அவரை ஒருபோதும் பார்க்க மாட்டார்கள் என்று கூறப்படுகிறது. அதுவும் அப்படித்தான். சிலர், தங்கள் ஏக்கம் எல்லையற்றது என்று நினைக்கிறார்கள். மேற்கூறிய கூற்றை ஏற்றுக் கொண்டாலும், அவற்றில் எப்பொழுதும் சில குறைபாடுகள் இருப்பதாகவே கூறலாம்; ஏனென்றால், நம் அனைவருள்ளும் சமமாக நிலைகொண்டிருக்கும் கடவுள், நம்மை சந்திக்க மிகவும் ஆர்வமாகவும்

**தயாராகவும் இருக்கிறார். எனவே 100 சதவிகிதம் தயார்நிலை தேவை. நீங்கள் அவர்களின் தொடர்பில் வரும்போது, இந்தத் தயார்நிலையை அடைய அவர்கள் உதவுகிறார்கள். இதற்கும் கூட, ஒரு குறிப்பிட்ட நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஸந்த் துக்காராம் கூறுகிறார், பொறுமையின்றி இருப்பதில் எந்த பயனும் இல்லை, ஏனெனில் இறுதி நேரம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனது 'கடிகாரத்தில்', மிகவும் பொருத்தமான நேரம், ஏப்ரல் மாதம் என்று நான் நினைக்கிறேன். எனவே, ஏப்ரல் மாத இறுதியில் நம் அனைவருக்கும் உண்மையான நேரமாக, கடவுளின் கிருபையால் நான் நினைப்பது நிறைவேறும் என்று ஆவலுடன் நம்புவோம்.**

ஜால் கேரவாலா பற்றி பல்வேறு செய்தித்தாள்களில் வந்த செய்தித் துணுக்குகளைப் வாசிக்குமாறு பாபா மெஹர்ஜியிடம் கூறினார். பாபா கூறினார், "**ஜால் எனக்கு 100 சதவிகிதம் எந்தக் குறைபாடும் இல்லாமல், முழுமையான நம்பிக்கையுடன் கீழ்ப்படிந்தார். உண்மையில், அத்தகைய கீழ்ப்படிதலும் நம்பிக்கையும் அரிதானது.**"

மறைந்த இசை வித்வான் அப்துல் கரீம் கானின் சில இசைப்பதிவுகளை பாபா கேட்டார், ஆனால் அந்த கஸல்கள் அவரை மகிழ்வித்ததாகத் தோன்றவில்லை, மேலும் அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில கஸல்களைக் கேட்டபோது மட்டுமே பாபா மகிழ்ச்சியடைந்தார். அவர் மன்ஸில்-இ-மீமில் நடந்த சில சம்பவங்களை நினைவு கூர்ந்தார். இது முன்பு அவர் கொண்டிருந்த கடுமையான உடல் வலிமையை வெளிப்படுத்தியது. "**எனக்கு அவ்வளவு வலிமை இருந்தது,**" என்று அவர் கூறினார், "**எனக்கு அனல் போன்ற மனநிலை இருந்தபோது, மக்கள் குளியலறையில் கூட ஒளிந்து கொண்டதுண்டு. இப்போது என்னைப் பாருங்கள்! எனது மூக்கின் எலும்பு உடைந்துவிட்டது, என் கால்கள் வீங்கிவிட்டன, என்னால் நன்றாக நடக்கவும் முடியாது. அதே வலிமை இப்போது துன்பங்களைத் தாங்கிக்கொள்வதில் வெளிப்படுகிறது. என்ன ஒரு மாற்றம்!**"

மாலையில் பாபா மெஹராஸாத்துக்குச் செல்வதற்கு முன்பு, சதாஷிவ் பாட்டீல் மறுநாள் காலை ஆலந்தி (பூனாவிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில்) சென்று, பாபாவின் சார்பாக சத்குரு ஞானேஷ்வரின் சமாதியில் மரியாதை செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார்.

1952, நவம்பர் 5 புதன்கிழமை அன்று, பாபா காலையில் மெஹராபாத் திரும்பி வந்து இவ்வாறு குறிப்பிட்டார், "**இன்று எனக்கு மிகவும் முக்கியமான நாள். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகள், உங்கள் குடிலில் அல்லது வேறு இடங்களில் இருந்தாலும், உண்மையாகவும் தீவிரமாகவும் இருங்கள்.**" பின்னர் அவர் ஐந்து 'பூசாரிகள்' மூலம் பிரார்த்தனைக்குத் தயாரானார்.

ஒவ்வொரு புனித நூலின் பிரதியும் அவரது இடதுபுறத்தில் ஒரு மேஜை மீது வைக்கப்பட்டிருந்தது. அவருக்கு உதவியாக எரச் அருகில் நின்றார். முதலில், பாபா தரையில் ஒரு மெத்தை மீது அமர்ந்து, பாரம்பரிய இந்துக்களின் முறைப்படி நெற்றியில் சிவப்பு திலகமிட்டு, இடுப்பில் ஒரு பட்டுத் துண்டைக் கட்டிக்கொண்டு, ஏழு திரிகளுடன் பிரார்த்தனை விளக்கை ஏற்றினார். காலை 8:30 மணிக்கு, ராமரைப் புகழ்ந்து பாடிய வால்மீகியின் சமஸ்கிருத ஈரடிப் பாடலை வாசித்து, அதைத் தொடர்ந்து ஞானேஸ்வரியின் பாகங்களைச் சொல்லி காளேமாமா நிகழ்ச்சியைத் தொடங்கினார். அவர் அதை நிறைவு செய்ததும் பாபா அவரை வணங்கினார்.

ஒன்பது மணியளவில் பாபா, கைக்கோபாத் அருகே நின்று (ஸொராஸ்ட்ரிய பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தி), இடுப்பில் புனித நூலையும், தலையில் கருப்பு பார்சி தொப்பியையும் அணிந்தார். கைக்கோபாத் பின்னர் அவெஸ்தாவிலிருந்து அரை மணி நேரம் வாசித்தார். கடவுளின் 101 நாமங்களையும் மீண்டும் மீண்டும் மொழியுமாறு பாபா அவரிடம் கேட்டுக்கொண்டார். இறுதியில், பாபா, தான் அணிந்திருந்த தொப்பியை பிளீடரிடமும், கஸ்தியை கைக்கோபாத்திடமும் கொடுத்து, புனித நூல்களை வாசித்த ஒவ்வொருவருக்கும் செய்தது போல், அவரையும் வணங்கினார்.

அடுத்து ராம்ஜூ. முதலில் அவர் நமாஸ் செய்தார், பாபா அமைதியாகத் தலையைத் தரையில் தொட்டு வணங்கினார். ராம்ஜூ குரானிலிருந்து காலை 10:00 மணி வரை வாசித்தார்.

முஹமதியப் பகுதி முடிந்ததும், பாபா தனது இரு சக்கர வாகனத்தை நோக்கி நடந்து சென்று, அவரது கழுத்தில் சிலுவையைத் தொங்கவிட்டார். நீளமான மேலங்கியை அணிந்து அவர் முன் நின்றார் முரளி. பாபா, **"நீங்கள் ஒரு கிறிஸ்தவ பாதிரியாரைப் போலவே இருக்கிறீர்கள்"** என்று குறிப்பிட்டார். இறைவணக்கம் மொழிந்ததும் இயேசு மலைமீது நிகழ்த்திய பிரசங்கம் நடைபெற்றது. முரளி அதை முடித்ததும், பாபா சிலுவையைக் கழற்றி அவரிடம் கொடுத்தார்.

கடைசியாக முன்வந்தவர் தௌலத் ஸிங். 10:30 மணிக்கு அவர் கிரந்த ஸாஹேபிலிருந்து வாசிக்க ஆரம்பித்தார். அவர் அதைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா தனது மணிக்கட்டில் ஒரு சீக்கியரின் இரும்பு வளையலை அணிந்துகொண்டார். பதினோரு மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இது மிகவும் புனிதமான மற்றும் தீவிரமான விழாவாக இருந்தது, பாபா முழுநிறை பக்தராக, அதீத பக்தியுடன் இருந்தார். அவர் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தாமல், நேர்காணல் அறைக்குச் (மண்டபத்திற்கு எதிரே அமைந்த கைக்கோபாத்தின் முன்னாள் குடிசை) சென்றார்.

பாபா தனது அறையில் இருந்தபோது, மெஹராவின் தாயார் தௌலத்மாய், 76 வயதில், நாசிக் நகரில் காலமாகிவிட்டதாக ஸரோஷ் அவருக்குத் தெரிவித்தார். அன்று மதியம் மண்டபத்திற்குத் திரும்பிவந்த பாபா, அனைவருக்கும் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்: "**இன்று மிக முக்கியமான நாள், நல்ல நாள். தௌலத்மாய் இன்று அதிகாலை 4 மணிக்கு இதயச் செயலிழப்பால் காலமானார் என்று ஸரோஷ் என்னிடம் கூறினார். 1933ஆம் ஆண்டு முதல் பூரண மௌனம் கடைப்பிடித்து, அமைதியான முடிவை சந்தித்ததாகக் கூறப்படுகிறது. என் அன்பான தௌலத்மாய் கடவுளின் கிருபையால் என்றென்றும் என்னில் வாழ்வார். 'கடவுளின் அருளால்' என்று கூறுகிறேன், ஏனென்றால் இன்று நான் ஒரு பக்தனின் நிலையில் இருக்கிறேன்.**"

தௌலத்மாயின் மரணம் குறித்த சுற்றறிக்கையை அவரது நெருங்கிய பெண் மண்டலிக்காக அச்சிடுவது குறித்த கேள்வி பாபாவால் விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. மெஹராபாத் மேல்மலையில் அவருக்காக எழுப்பப்பட்ட சமாதியில், 'தௌலத் - பாபாவின் பிரியமான அன்பர்களில் ஒருவர்; 20 ஆண்டுகளாக மௌனம் கடைப்பிடித்தார்" என்று பொறிக்கப்பட்டது.

"'ஒருவரின் மரணத்துடன், உலகமே மூழ்கி விடுகிறது' என்று கூறப்பட்டிருப்பதால், காலமானவர்கள் பற்றிய சுற்றறிக்கைகள் அச்சிடப்படுவதால் என்ன பயன் பாபா?" என பிளீடர் கேட்டார்.

'உண்மையான மரணத்தை' (இறை நிலை) சந்திக்கும் நபர்களையும், வெவ்வேறு ஆன்மீக தளங்களில் நிலைகொண்டிருப்பவர்களையும் பற்றி பாபா அனைவருக்கும் நல்லதோர் யோசனையை வழங்குவதற்கு, பிளீடரின் கருத்து போதுமானதாக இருந்தது. கபீரின் இந்த ஈரடிக்கவிதையை அவர் முதலில் மேற்கோள் காட்டினார்:

**உடலைத் துறந்தாலும், உடல் எஞ்சியிருக்கும்;**
**உடலைப் பாதுகாத்தாலும், அது சென்றுவிடும்.**
**வியப்பூட்டும் உண்மை, சடலம் மரணத்தை விழுங்கும்!**

தொடர்ந்து பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**மக்கள் எல்லா வகையிலும் உயிரைத் துறக்கிறார்கள், ஆனால் அதில் வருந்துவதற்கு எதுவுமில்லை; அவர்கள் வெவ்வேறு பௌதீக உடல்களில் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கிறார்கள். ஆனால் ஒருவன் தனது வாழ்நாளில், செயல்களில் எவ்வித பற்றும் இல்லாமல் நேர்மையாக நினைப்பதைச் செய்ய வேண்டும்.**

**ஆயுட்காலங்களுக்கு இடையில் பௌதீக உடல்களை மாற்றுவது ஒரு மேல் சட்டையை மாற்றுவது போன்றது. (இந்தியா-பாகிஸ்தான்) பிரிவினையின் போது உயிரைத் துறந்தவர்களைப் போல சிலர் இளம்**

வயதிலேயே இறக்கின்றனர்; சிலர் நீண்ட காலம் வாழ்கின்றனர். அவர்கள் குஸ்தாஜியைப் போல் அடிக்கடி தங்கள் மேல் சட்டைகளை மாற்ற மாட்டார்கள். ஆனால் சமீபத்திய மேற்கத்திய பயணத்தில் என்னுடன் இருந்த குஸ்தாஜி, நன்றாக உடையணிந்து நேர்த்தியாகவும் சுத்தமாகவும் இருந்தார்.

பாபா விளக்கத்தைத் தொடர்ந்தார்:

(தெய்வீக போதையில்) **மஸ்துகளின் மஸ்தி, வெப்பம், குளிர், நோய் போன்றவற்றை நடுநிலையாக்கி மட்டுப்படுத்துகிறது. இது உறுதிப்படுத்தப்பட்ட உண்மை. மஸ்துகள் தங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை, ஆனாலும், திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்டவர்கள். இது போன்ற சமயங்களில் பிரபஞ்சத்தை அதிரவைக்கும் இறை சக்தி, அவர்களின் உடல்களை நலிவுறாது நீடித்து இருக்கச் செய்து, அவர்களைக் கவனித்துக் கொள்கிறது. அத்தகைய ஆன்மாக்களுக்கு உதவும் பொருட்டு, எல்லையற்ற இறை சக்தி ஆன்மீக ஆழ்மன தளங்களுக்கு இறங்கி வருகிறது. இருப்பினும், உடலையோ அல்லது உடல் வலிமையையோ தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற சிறிதளவு எண்ணம் தோன்றினாலும், இந்த சக்தியின் வருகை நின்றுவிடும். ஒரு விதத்தில், மஸ்த் உண்மையில் இறந்துவிட்டவராகத்தான் கருத வேண்டும். இது மஜ்ஜுப் அல்லது குழந்தைத்தனமான பழக்கங்களைக் கொண்ட இறை நிலையை அடைந்த ஆன்மாவுக்கும் பொருந்தும். மஜ்ஜுப்களுக்கு இந்த உலகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை, இந்த அர்த்தத்தில் 'பிணம் மரணத்தை விழுங்குகிறது' என்று கூறலாம்.**

**இந்த சக்தியைப் பற்றி விஞ்ஞானிகள் அறிய முடியாது. அவர்கள் ஆகாயம்** (ETHER), **எதிர்மின்மம்** (ELECTRON) **நேர்மின்மம்** (PROTON) **போன்றவற்றைக் கண்டுபிடித்துள்ளனர், ஆனால் அவர்கள் நுட்பமான சூட்சும உலகின் விளிம்பைக் கூட எட்டவில்லை, எட்டவும் முடியாது.**

**வேதாந்தம் கூறுகிறது, பௌதீக தளத்தில் இருப்பவர்கள் அன்னபூமியில்** (பௌதீக உலகில்) **வாழ்கிறார்கள்; பிராண-பூமியில்** (சூட்சும உலகில்) **இருப்பவர்கள் நுட்பமான பிராண சக்தியுடன் வாழ்கின்றனர்; மனோ-பூமியில் நிலைகொண்டவர்கள் ஆழ்மன உலகில்** (ஆகாயம், சொர்க்கம், வானம், விண்வெளி போன்றவற்றில்) **வாழ்கிறார்கள்; மேலும் வித்னியான்-பூமியைச் சேர்ந்தவர்கள்** (இறைநிலையை அடைந்தவர்கள்) **'சூரியனில்'** (தேவ சூரியனில்) **வாழ்கின்றனர்.**

**யார் ஒருவருடைய ஆத்மா, பரமாத்மாவுடன் ஐக்கியம் ஆகிறதோ, அவர் தேவ-சூரியனில் வாழ்கிறார். சத்குருக்களும், அவதார புருஷரும் தேவ-சூரியனில் வாழ்கின்றனர்; இது நீங்கள் வானத்தில் காணும் சூரியன் அல்ல, முற்றிலும் வேறுபட்ட சூரியன். இது எல்லையற்ற சக்தி, எல்லையற்ற**

பேரின்பம், அழகு, ஒலி, அறிவு மற்றும் பலவற்றின் மூலாதாரமாகும். இந்த தேவ-சூரியனின் ஒவ்வொரு பண்பும் எல்லையற்றது. நித்தியமாக இருக்கும் எல்லையற்ற தெய்வீக நெருப்பின் பிரகாசம் முதலில் ஆழ்மன தளங்கள், சூட்சும தளங்கள் வழியாகச் செல்கிறது, பின்னர் அது பௌதீக தளத்தைச் சென்றடைகிறது.

தற்பொழுது சூட்சும உலகில் இருப்பவர்கள் உங்களைப் போலவே ஆடை அணிகின்றனர், அவர்களுக்கு மனைவி மற்றும் குழந்தைகளும் உள்ளனர். மனோ-பூமியிலிருந்து அவர்கள் தங்கள் சக்தியை இரவல் வாங்குகின்றனர். அவர்கள் இந்த சக்தியை நல்ல அல்லது தீய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம். ஆழ்மன தளங்களில் நிலைகொண்டவர்கள் வித்னியான்-பூமியிலிருந்து (இறை சக்தி) தங்கள் சக்தியை இரவல் வாங்குகின்றனர். ஆறாவது ஆன்மீக தளத்தில் இருப்பவர்கள் எங்கும் இறைவனையே காண்கின்றனர். அவர்கள் தங்கள் சக்தியைப் பிறரின் நன்மைக்காகவே பயன்படுத்துகின்றனர். ஒரு மஜ்ஜூப் தனக்குத்தானே ஒரு மாமன்னன்.

ஆனால் இப்போது மீண்டும் மஸ்துகளை நோக்கித் திரும்புவோம். மஸ்துகள் இறை போதையில் இருக்கும் ஆத்மாக்கள். அவர்கள் இறை அன்பின் தெய்வீக மதுபானத்தை அருந்தியுள்ளனர். அவர்கள் தங்கள் பௌதீக உடலைப் பற்றி உணர்வுபூர்வமாக உணர்வதில்லை. மனோ-பூமியிலிருந்து அதிகாரத்தைப் பெற அவர்கள் முயலுவதுமில்லை. ஆனால் கடவுள், அவரது சுய விருப்பத்தில், இந்த சக்தியை அவர்கள் மீது பொழிந்து அவர்களைக் கவனித்துக் கொள்கிறார்.

எனவே ஹபீஸ் தனது ஈரடிக்கவிதையில் கூறியது போல:

"பைத்தியம் எனும் கோப்பையிலிருந்து ஆழமாக அருந்தவும்,
அதனால் உங்கள் கவலைகள் பிறரால் எடுத்துக்கொள்ளப்படும்."

ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆன்மீக தளங்களில் நிலைகொண்டுள்ள வாலிகளின் மற்றும் யோகிகளின் (பீர்) சக்தி மிகப் பெரியது, ஆனால் அவர்கள் அதை பிறரின் நன்மைக்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள். நான்காவது ஆன்மீக தளத்தில் நிலைகொண்ட ஒருவர், தனது சக்தியை நல்ல அல்லது தீய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம். கடவுளின் வாழ்க்கையை நித்தியமாக வழிநடத்துபவர்கள் பிரபஞ்சத்தின் இரட்சகர்கள், அவர்கள் தேவ-சூரியனில் வாழ்கிறார்கள்.

பிற்பகல் 2:30 மணிக்கு, ஞானேஷ்வரின் சமாதியை வணங்கிவிட்டு, ஆலந்தியிலிருந்து வந்த சதாஷிவ் பாட்டீலின் கால்களில் பாபா தலைவணங்கினார். சதாஷிவ் கூறியதற்கிணங்க, ஆலந்தியில் காலை 8.30 மணியிலிருந்து 9 மணி வரை மஹாபூஜை (பெரிய வழிபாட்டு விழா) ஏற்பாடு

செய்யப்பட்டிருந்தது; மெஹராபாத் மண்டபத்தில் ஞானேஷ்வரி வாசிப்பதைக் கேட்பதில் பாபா ஈடுபட்டிருந்த அதே காலகட்டம் என்பது தெரியவந்தது. பாபா விளக்கினார், "**எனக்கு ஞானேஷ்வருடன் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது, அதனால் சதாஷிவை நான் ஆலந்திக்கு அனுப்பினேன்.**"

தௌலத்மாயியின் மறைவு தொடர்பான சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு எரச் அதனை பாபாவின் முன்னிலையில் வாசித்தபோது பாபா கூறினார், "**இன்று நான் ஒரு பக்தனின் நிலையில் இருப்பதால், தௌலத்மாய் என்னிடம் வந்தார் என்று நான் எப்படிக் கூற முடியும்?**"

நரிமன் உடனே குறுக்கிட்டு, "இன்று ஒரு பக்தராக இருப்பது உங்களுக்கும் கடவுளுக்கும் இடையேயான பிரச்சினை, ஆனால் சீடர்களாகிய எங்களுக்கு நீங்கள் எப்போதும் அன்பான குருவாக இருக்கிறீர்கள்" என்றார்.

பாபா பதிலளித்தார்:

**கேள்வி தெளிவாக உள்ளது; பாசாங்குத்தனம் பயனற்றது.**

**நம் ஒவ்வொருவரையும் விட கடவுள் இப்போது இங்கே இருக்கிறார். அவருக்கு எல்லாம் தெரியும். எனவே இன்று நான் சொல்வது இந்த நாளுக்கு நல்லது. நான் இத்தனை நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்தது அனைத்தும் அந்தந்த நாட்களுக்கு நன்றாக இருந்தது. ஏப்ரல் மாதத்தில் நான் சொல்வது நன்றாக இருக்கும். ஆனால் இன்று நான் 100 சதவிகிதம் பக்தன்.**

**இன்று சிலருடைய பொறுமையும், சிலருடைய அன்பும், சிலருடைய நம்பிக்கையும் என்னை விட நீங்கள் கடவுள் மீது அதிக ஈடுபாடு கொண்டவர் என்பதை உணர வைக்கிறது. இன்று நான் பார்க்கும் போது உங்கள் அனைவரின் பொறுமை, ஏக்கம், அன்பு, நம்பிக்கை, ஏப்ரல் மாதத்தில் கடவுள் நம் ஆசைகளை நிறைவேற்றுவார் என்று நான் உணர்கிறேன். எனவே இன்று நான் பக்தன் என்ற நிலைப்பாட்டை விட்டுவிடக் கூடாது. எனவே சுற்றறிக்கையில் 'கடவுளின் விருப்பம்' என்ற சொற்களைச் சேர்க்கவும்.**

சத்குரு ஞானேஷ்வர் பற்றி, பாபா தெளிவுபடுத்தினார்:

**அவர் மிகவும் இளமையாக இருந்தார். தனித்தன்மை என்னவென்றால், முழு குடும்பமும் இறை உணர்வை அடையப்பெற்றது. ஞானேஷ்வர் தனது பதின்ம வயதிலேயே இறை உணர்வு, குரு பக்தி பற்றிய மிக அழகான வரிகளை எழுதியுள்ளார். நிவ்ருத்தி, அவரது மூத்த சகோதரர், அவரது குருநாதர். ஸொப்பன், அவரது இளைய சகோதரர் மற்றும் முக்தாபாய், அவரது சகோதரி ஆகியோரும் இறை உணர்வை அடையப்பெற்ற ஆத்மாக்கள். அவர்களுக்கு எவ்வளவு ஆழமான அனுபவம் இருந்தது என்பதை கடவுள் அறிவார்!**

**ஸூஃபிகளின் தலைவர் பயாஸித், 90 வயதில் இறை உணர்வை அடைந்தார். 99 சதவிகிதம் ஆன்மீக ரீதியில் தயாராக இருக்கும் ஒருவர் உயிரைத் துறந்தாலும், மீதமுள்ள ஒரு சதவிகித தயார்நிலைக்காக அவர் மீண்டும் ஓர் உடலை எடுக்க வேண்டும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், குழந்தை பருவத்திலோ அல்லது 60 வயதிற்குப் பின்னரோ இறை உணர்வு அடையப்படுகிறது.**

**ஸூஃபியிஸத்தில், வாலிகளின் தரங்கள், வகைகள் மற்றும் பிரிவுகள், வரம்பு, பாரம்பரியம் மற்றும் ஆன்மீக பாதையில் உள்ள பிற நுட்பமான விவரங்கள் போன்ற அனைத்து புள்ளிவிபரங்களும் தெளிவாகவும் குறிப்பிடத்தக்க முறையிலும் உள்ளன. அதில் உலகத்திற்கான அவர்களின் கடமைகளுக்கு ஏற்ப பரிபூரண குருநாதர்களைக் கூட வகைப்படுத்தியுள்ளனர். 'கமில்' என்றால் பூரணமானவர்; 'அக்மல்' என்றால் பரிபூரணமானவர்; 'முக்கம்மில்' என்பது உச்சநிலை பூரணமானவர்; மற்றும் ஸாஹேப்-இ-ஸமான் (அவதார புருஷர்) முக்கம்மிலுக்கு அப்பாற்பட்ட நிலையில் உள்ளவர். நபிகள் (தீர்க்கதரிசிகள்) அல்லது சத்குருக்கள் அல்லது குதுப்களைப் பொறுத்தவரை, அவர்களை பரிபூரணமானவர்கள் என்று அழைப்பது குழந்தைத்தனமாக இருக்கும். பரிபூரணமானது, அபூரணத்தையும் உள்ளடக்கியது என்பது தெளிவாகிறது. ஆனால் ஒரு சத்குருவைப் பொறுத்தவரை ஒரே நேரத்தில் 'எல்லையற்ற பரிபூரணமும் எல்லையற்ற குறைபாடும்' இருப்பதாகக் கூறப்படுகிறது.**

துறவி 'அப்துல் ஹுஸைன் வாலி'யின் கதையைக் கூறி முடித்த பின்னர், 'எம்பயர் ஸ்டேட்' கட்டிடத்தைப் பற்றி பாபா குறிப்பிட்டார்: **"நீங்கள் கட்டிடத்தின் மேல் மாடியில் நின்று, கீழே வீதியைப் பார்த்தால், மனிதர்கள் உங்களுக்கு, புழுக்களைப் போலத் தோற்றமளிப்பார்கள். இறை உணர்வை அனுபவித்தவர்களுக்கு, மனிதன் அப்போது எவ்வளவு சிறியவனாகவும் முக்கியமற்றவனாகவும் தோன்றுவான்? உண்மையில் இறை அறிவின் மகிமை விவரிக்க முடியாதது, அளவிட முடியாதது."**

பாபா, மண்டலியிடம் வேடிக்கையான கதைகள் அல்லது கலகலப்பான நகைச்சுவைகளைக் கூறும்படிக் கேட்டுக்கொண்டார். பின்னர், அனைவரும் முகத்தையும் கைகளையும் கழுவி சுத்தம் செய்யுமாறு அறிவுறுத்தினார். அதைத் தொடர்ந்து வெவ்வேறு அமைப்புகளைச் சேர்ந்த கடவுளின் பெயர்கள், உரத்த குரலில் திரும்பத் திரும்ப மொழியப்பட்டன. அதன் நிறைவில், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**எனக்கு இப்போது உடல்நிலை சரியில்லை, ஆனால், நவம்பர் 7, 8, 9 தேதிகளில் எனது பணியைச் செய்ய நான் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். ஹைதராபாத் கூட்டத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு, நான்**

**மிகவும் பலவீனமாகவும் பதட்டமாகவும் உணர்ந்தேன். ஆனால் கூட்டத்தின் போது நான் நன்றாக இருப்பேன் என்று நீலு என்னிடம் கூறினார், அந்த நாட்களில் நான் மிகவும் கலகலப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. அந்தக் காலகட்டம் எனக்கு மன்ஸில்-இ-மீம் நாட்களை நினைவுபடுத்தியது. இது எல்லாம் இறைவனின் அருளே தவிர வேறொன்றுமில்லை. இப்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.**

இப்படியாக அன்றைய நிகழ்ச்சி நிறைவுக்கு வந்தது.

1952, நவம்பர் 6 வியாழன் காலை 9:00 மணியளவில், பாபா மீண்டும் அனைவரையும் தங்கள் முகம், கைகளைக் கழுவி சுத்தம் செய்து வருமாறு கூறினார். டாக்டர் நீலு நீராடச் சென்றவர் தாமதமாக வந்தார். அனைவரும் மண்டபத்தில் மீண்டும் ஒன்று கூடியதும், வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த கடவுளின் பெயர்கள், நீலு, பாதிரி, பைதூல், எரச் ஆகியோரால் ஏழு முறை திரும்பத் திரும்ப மொழியப்பட்டன.

அனைவரும் அமர்ந்ததும் பாபா, "**நீலு தாமதமாக வந்ததற்காக நான் அவரை மன்னிக்கிறேன், அதற்கு பதிலாக, அவருக்கு இனிப்பு எதுவும் வழங்காததை என்னுடன் பொறுத்துக்கொள்ள வேண்டும்!**" என்று கேலி செய்தார்.

பாபா, கோமா கணேஷிடம் அவர் இயற்றிய கவிதைகளை வாசிக்கச் சொன்னார். பாபாவாடியில் (நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பாபா கலந்து கொண்டார்) தனது பள்ளி குழந்தைகளின் நலனுக்காக, கோமா செய்த பணியில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். பாபா அவரிடம் கூறினார், "**நான் மும்முரமாக இருக்கிறேன், காலை 11:00 மணிக்குள் முடிக்க விரும்பினால், உங்கள் பணியின் நடைமுறைப் பக்கத்தைப் பற்றி பேசலாம். இது வரை நீங்கள் பாபாவாடி குழந்தைகளுக்கு உங்களால் இயன்றதைச் செய்தீர்கள், மேலும் நீங்கள் உங்கள் வாழ்நாளின் முழு நேரத்தை அதற்காக அர்ப்பணிக்க விரும்புகிறீர்கள். உங்கள் எதிர்கால திட்டம் என்னவென்று சொல்லுங்கள்?**"

"கிராமங்களில் கல்வி தொடர்பான பணிகளைத் தொடங்குகிறேன்" என்று கோமா கணேஷ் பதிலளித்தார். பாபா கூறினார், "**இதைக் கேட்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் எனது ஆசீர்வாதங்களை உங்களுக்கு வழங்குகிறேன். எந்தக் கவலையும் பயமும் இல்லாமல் உங்கள் பணியைச் செய்யுங்கள். அதைத் தொடரத் தயங்காதீர்கள். குழந்தைகளுக்கு சேவை செய்யும் உங்கள் நேர்மையான முயற்சியில் நான் உங்களுடன் இருப்பேன். 1952, நவம்பர் 15 அன்று தொடங்குங்கள்.**"

பாபா மேலும் கூறினார்: "**குழந்தைப் பருவம் உண்மையான கடவுளின் நிலை. ஆனால் குழந்தைகள் உணர்வுபூர்வமாக இதை அறியாமலேயே இருக்கிறார்கள். ஒரு மஜ்ஜூப்பின் நிலையில் குழந்தைப் பருவம் ஆதிக்கம்**

**செலுத்துகிறது, அது அவரிடம் உணர்வுபூர்வமான** (இறை) **உணர்வுடன் உள்ளது. முழு பிரபஞ்சமும் அவரது விளையாட்டுக்கு ஒரு பொம்மையாகச் செயல்படுகிறது."**

1952, ஜனவரி மாதத்தில் பாபாவின் மனோநாஷ் கட்டத்தில் நிகழ்ந்த பணியின் போது, இந்தூரிலிருந்து மெஹராஸாத்துக்கு அழைத்து வரப்பட்ட மஸ்த்-துறவியான விஷந்தாஸ் மஹாராஜிடமிருந்து பாபாவுக்கு வந்த கடிதத்தை ஸ்லாம்ஸன் வாசித்தார்:

அக்டோபர் 23ஆம் தேதி மாலை 3:00 மணிக்கு, 500 பேர் அடங்கிய கூட்டத்தில், உங்கள் பெயரில் (இந்தூரில்) ஆன்மீக மையம் ஒன்றைத் திறந்துள்ளேன். உங்கள் மூன்று பெரிய அளவிலான புகைப்படங்களை அங்கு வைத்துள்ளேன். நான், என்றென்றும் எரிந்து கொண்டிருக்கும் தீபம் ஒன்றை ஏற்றியுள்ளேன். கல்யாண் நகரில் ஒரு புதிய மையத்தை நிறுவவும் விரும்புகிறேன். கல்யாணில் எழுப்ப இருக்கும் மையம் கடவுளின் விருப்பப்படி நடக்கும்.

துறவி, பாபாவிடம் தனது ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தினார், மேலும் பாபாவின் பெயரும் பணியும் நாளுக்கு நாள் வேகமடைய வேண்டும் என்று வாழ்த்தினார். அவர் பாபாவின் தரிசனத்தைப் பெறும் தனது விருப்பத்தையும் தெரிவித்தார், அதற்கு பாபா, '**ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர்**' என்று கூறினார். விஷந்தாஸ் மஹாராஜுக்கு அவர் செய்து வரும் பணியைத் தொடருமாறு பாபா, ஸ்லாம்ஸன் (அவரும் இந்தூரைச் சேர்ந்தவர்) மூலமாக அறிவுறுத்தினார்.

பின்னர் அவர் கீழ்வரும் பாரசீக ஈரடிக்கவிதையை மேற்கோள் காட்டினார்:

முழுநிறை இறைவனுடன் நீங்கள் விரும்புவதைச் செய்யுங்கள்,
ஆனால் வாலிகள் மற்றும் மஸ்துகளுடன் மிகவும் கவனமாக இருங்கள்!

பாபா விளக்கினார்: **"வித்னியான்-பூமியிலிருந்து** (ஏழாவது ஆன்மீக தளம்) **சக்தியை இரவல் வாங்கும் வாலிகள்** (துறவிகள்), **அதைப் பயன்படுத்தத் தயங்க மாட்டார்கள்; சில நேரங்களில் அவர்களுடன் குறும்புத்தனத்தில் ஈடுபடும் நபர்களின் சிறப்பான மனப்படிவங்களை அகற்றிவிடுவார்கள். வாலிகள் சுதந்திரமானவர்கள், எதற்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல; நல்லது அல்லது தீயது இரண்டையும் செய்யத் துணிந்தவர்கள். இவ்வாறு அவர்களின் தொடர்பு ஒரு பெரிய ஆன்மீக உந்துதலைக் கொடுக்கலாம் அல்லது ஒருவரின் ஆன்மீக முன்னேற்றத்தைத் தடுக்கலாம்.**

**"சத்குரு ஒரு சமுத்திரத்தைப் போன்றவர். அவர் எதையும் கொடுப்பதில்லை, ஆனால் அவர் கொடுக்கும்போது, அவர் முழு**

**சமுத்திரத்தையும் கொடுக்கிறார், அப்போது நீங்கள் இறை உணர்வை அடையப்பெறுகிறீர்கள்."**

கல்கத்தாவின் ராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் அவரது சீடர் சுவாமி விவேகானந்தரின் உதாரணத்தை பாபா மேற்கோள் காட்டினார். எரச், விவேகானந்தரின் வாழ்க்கையிலிருந்து சில சம்பவங்களை விவரித்தார், இது அவர் தனது குருநாதரை எவ்வாறு பல வழிகளில் சோதித்தார் என்பதைக் காட்டுகிறது. "**ராமகிருஷ்ணர் போன்ற சத்குருவுக்கு பதிலாக, விவேகானந்தர் ஒரு வாலியுடன்** (துறவி) **தொடர்பு கொண்டிருந்தால், அவரது வாழ்க்கை பாழாகியிருக்கும்**!" என்று பாபா கூறி முடித்தார்.

அன்று மதியம் 1:30 மணிக்கு பாபாவின் முன்னிலையில் அரன்காவ்ம் பஜனை குழுவினர் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். பிற்பகல் 2:55 மணிக்கு ஒரு கவாலி நிகழ்ச்சியை அஹமதுநகரின் ஹபீப் நிஜாமி என்ற கவாலி பாடகர் நிகழ்த்தினார். பாதிரி, பால் நாத்து, மினூ காரஸ், மெஹர்ஜி மற்றும் பலரின் கண்களில் நீர் ததும்பும் அளவுக்கு உருக்கமாக இருந்தது. அலோபா மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, சுவரில் தலையை அறைந்து கொண்டதால் உடல் ரீதியாக அவரைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

பாபா கூறினார்: "**உங்களுக்குத் தெரியாமல் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். ஆனால் கட்டுப்படுத்தினால், அவை அதிக மகிழ்ச்சியைத் தரும். உங்கள் அன்புக்குரியவருடனான ஆழ்ந்த தோழமையில் நீங்கள் மேலும் அதிக மகிழ்ச்சியைக் காண்பீர்கள்.**

**"இந்த ஆன்மீக பாதை, உணர்வுகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. தூய்மையான, உணர்திறன் உள்ள இதயம் படைத்த சிலர், தங்கள் அன்பான இறைவனின் நினைவில் பல ஆண்டுகளாக கண்ணீர் சிந்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். சில நேரங்களில், ஒரு சிலர் தனது வெளியுலக சூழலைப் பற்றி அறியாமலும், சிலர் ஆண்டாண்டு காலமாக ஒரே இடத்தில் நிற்கவும், சிலர் ஒரு கையை மேலே உயர்த்திய நிலையிலும் நிற்கிறார்கள்** (ஆன்மீக தளங்களின் வசீகரத்தால் மயங்கிய நிலையில் இருக்கிறார்கள்). **இதுபோன்ற அனுபவங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்றாலும், அவை தற்காலிகமானவை. இதைத் தற்காலிகமாக அனுபவிப்பவர்கள், உணர்வுபூர்வமாக பாதுகாப்பாக உள்ளனர்.**

**"இருப்பினும், எந்தவொரு வெளிப்புற அறிகுறியும் இல்லாமல் உங்கள் இதயத்தில் ஒரு தொடர்ச்சியான மற்றும் ஆழமான ஏக்கத்தை அனுபவிக்க முடிந்தால், அது மிகவும் சிறந்தது. தொடர்ந்து உள்ளளவில் அழுதுகொண்டிருங்கள்; வெளியளவில் சாதாரணமாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள்."**

அன்று மாலை ஐந்து மணிக்கு இசை நிகழ்ச்சி நிறைவடைந்தது. பாபா அனைவரிடமும் தங்கள் முகங்களையும் கைகளையும் மீண்டும் கழுவி சுத்தம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார், மேலும் நான்கு வெவ்வேறு பிரிவுகளின் இறை நாமங்கள் மீண்டும் மீண்டும் கூறப்பட்டன. பாபா தனது இருக்கையிலிருந்து கீழே இறங்கியவுடன், நானா கேர் பக்கம் திரும்பி, **"ஏன் தாடி வளர்க்கிறீர்கள்?"** என்று கேட்டார்.

அதற்கு நானா, "எனது தாடி மிகவும் கடினமாக உள்ளது, சவரம் செய்வதை விட அதை வளர விடுவது எளிது" என்று பதிலளித்தார்.

பாபா அவரைக் கிண்டல் செய்தார், **"நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதது நல்லது, ஏனென்றால் தாடி வைத்த கணவனை உங்கள் மனைவிக்குப் பிடிக்காமல் இருக்கலாம்."**

மண்டபத்தை விட்டு வெளியேறும் வேளையில், பாபா அனைவரையும் நன்றாக ஓய்வெடுக்கவும், வரும் மூன்று நாட்களுக்கு நல்ல நலமுடன் இருக்குமாறும் அறிவுறுத்தினார்.

அடுத்த நாள் 1952, நவம்பர் 7 வெள்ளிக்கிழமை காலை, பாபா மெஹராஸாத்திலிருந்து காலை 7:30 மணிக்கு, திட்டமிடப்பட்ட மூன்று நாட்களின் முதல் நாள் கூட்டத்திற்கு வந்தார். அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இரண்டு அதிகாலை ரயில்களில் வந்தனர். காலை 9:45 மணியளவில் பாபா மண்டபத்திற்குள் நுழைந்தார்; அவர் மீண்டும் ஒருமுறை அவர்கள் மத்தியில் இருப்பதைப் பார்த்து அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். பூனா பஜன் குழுவினர் காலை 10:30 மணி வரை இசை நிகழ்ச்சியை நடத்தினர்.

இசை நிகழ்ச்சியின் போது ஒருவர் பாபாவிடம் விபத்துக்குப் பிறகு எப்படி இருக்கிறார் என்று கேட்டதற்கு பாபா பதிலளித்தார்: **"உங்கள் மற்றும் கடவுளின் ஆசீர்வாதத்தால் நான் நலமாக இருக்கிறேன். என்னுடையது கடவுளுடையது, மேலும் கடவுளுடையது என்றால் உங்களுடையது என்று அர்த்தம், எனவே இந்த ஆசீர்வாதங்களின் சுழற்சி தொடர்ந்து கொண்டேயிருக்கும்.**

**"அனைத்தும் பந்தம்; ஒரே ஏக இறைவனைத் தவிர வேறு ஒன்றுமில்லை, அவனை 'ஒருவன்' என்று அழைப்பதும் அறியாமையே. 'அவன் நானே, எல்லாமே அவனே'. அந்த 'ஒருமை'யின் அனுபவத்தை மட்டும் அடையப்பெற வேண்டும். பிற அனைத்தும் உங்கள் ஆசீர்வாதங்கள்."**

**"ஆரம்பத்திற்கு முன்பு நான் இருந்தேன், நீங்களும் அப்படித்தான்."**

**இதுவரை ருசிக்காத காயத்தை இப்போது ருசித்திருக்கிறேன்"** என்று பாபா முடித்தார்.

பஜனைகள் நிறைவடைந்த பிறகு, பாபா தேஷ்முக்கிடம், **"ஏப்ரலில் நான் சுதந்திரமாக இருப்பேன் என உணர்கிறேன்"** என்று கூறினார்.

தேஷ்முக், "பாபா, நீங்கள் நித்தியமும் சுதந்திரமானவர்" என்று பதிலளித்தார்.

பாபா பதிலளித்தார், "**நான் நித்தியமாக பிணைக்கப்பட்டிருக்கிறேன், ஆனால் அவ்வப்போது, நான் என்னை விடுவித்துக்கொள்கிறேன். கடவுள் விரும்பினால், இந்த முறை ஏப்ரல் இறுதிக்குள் இருக்கலாம். இந்தக் கருத்தை நான் நாளை தெளிவுபடுத்துகிறேன்.**"

பாபா, எழுத்துப்பலகையில் குழுவிற்கு எடுத்துரைத்தார்: "**நாளை மிகவும் முக்கியமான நாளாதலால், நீங்கள் ஒவ்வொருவரும் நாள் முழுவதும் இங்கே இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இங்கே இருப்பது என்பது உங்கள் குடும்பம் மற்றும் பிற கவலைகளை நினைவில் கொள்ளாமல், முழு இதயத்துடனும் ஆத்மாவுடனும் இங்கே இருக்க வேண்டும். எனவே, நாளை நான் கூறுவது, விளக்குவது, அறிவிப்பது, முடிவெடுப்பது போன்றவற்றில் உங்கள் மனம் இருக்க வேண்டும் என்பதை நான் மிகவும் தீவிரமாக உங்கள் மனதில் பதியவைக்க விரும்புகிறேன்.**"

புன்னகையுடன், "**தேஷ்முக் நாக்பூரில் வாழும் தனது குடும்ப உறுப்பினர்களைப் பற்றி நினைக்க வேண்டாம்**" என்று கூறினார்.

கூட்டத்தைப் பார்த்து, பாபா கூறினார்: "**நான் இப்போது உண்மையைத் தேடுபவரின்** (பக்தனின்) **நிலைப்பாட்டை எடுத்துள்ளேன். ஏன்? நாளை விளக்குகிறேன். எனவே நீங்கள் அனைவரும் நாளை முழு கவனத்துடன், நான் சொல்வதைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.**

**"பாபா, அவதார புருஷராகவோ, சத்குருவாகவோ அல்லது பரிபூரண குருநாதராகவோ பார்க்கப்படுகிறார்; ஆனால் பாபா ஒரு பக்தரின் நிலைப்பாட்டை எடுப்பதற்கு மிகப் பெரிய முக்கியத்துவம் உள்ளது. ஏன்? நான் அதை நாளை விளக்குகிறேன். எனவே நாளை நீங்கள் செய்ய வேண்டியது அனைத்தும், நான் அறிவிப்பதைப் புரிந்துகொள்வதுதான்.**

**"யுகம் யுகமாக, பல யுகங்களுக்குப் பிறகு, பிரபஞ்சத்தின் எல்லையற்ற தன்மையின் உண்மையான வெளிப்பாட்டிற்கான நேரம் இப்போது வந்துவிட்டது. எனவே நவம்பர் 15ஆம் நாள் தொடங்கி, ஏப்ரல் இறுதியில் முடிவடையும் 'அனல் பறக்கும் வாழ்வு' கடவுள் மட்டுமே உண்மையானவர், இதர அனைத்தும் மாயை என்பதை வெளிப்படுத்தும்.**

**"எனவே இப்போதைக்கு, இந்த நிகழ்ச்சி நிறைவடைந்ததும் ஓய்வெடுங்கள், மதிய வேளையில் ஒவ்வொருவரையும் நேர்காணலுக்காக அழைப்பேன். நாளைய தினத்தைப் பொறுத்தவரை, மெஹராபாத்துக்கு வெளியிலிருந்து எந்த நினைப்பும் வரக்கூடாது, அதற்காகத்தான் அவ்வளவு தூரத்திலிருந்து உங்களை இங்கே அழைத்தேன். இப்போது நீங்கள் உங்கள் கைகளையும் முகங்களையும் கழுவிவிட்டு, நான்கு வெவ்வேறு மதப்**

**பிரிவுகளின் கடவுளின் நாமங்களை, திரும்பத் திரும்ப உச்சரிக்க இங்கே வாருங்கள்."**

அனைவரும் மண்டபத்திற்குத் திரும்பியதும், பாபா இவ்வாறு தெரிவித்தார்: **"கடவுள் இப்போது இங்கேயும், உங்கள் அனைவரிலும், என்னிலும் இருக்கிறார். எனவே, நம்முள் வீற்றிருக்கும் கடவுளின் நாமத்தை உண்மையாகவும் முழு மனதோடும் உச்சரித்து, இதயபூர்வமாக அவரைத் தொடுவோம். சத்தமாகக் கூறவேண்டாம். நாமங்களை திரும்பத் திரும்ப உச்சரிக்கும்போது, அவர் நம்முள் இருக்கிறார், நம் அனைவருக்கும் செவிமடுக்கிறார் என்ற எண்ணத்தில் மௌனமாக உச்சரியுங்கள்."**

பாபாவும் அவரது முகத்தையும் கைகளையும் கழுவிவிட்டு, தமது இருக்கையில் பணிவுடன் நின்றார். அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்றனர். நீலு, பாதிரி, பைதூல், எரச் ஆகியோரால் கடவுளின் பெயர்கள் ஏழு முறை திரும்பத் திரும்ப மொழியப்பட்டன.

காலை 11:00 மணிக்கு, ஹமிர்பூர் குழுவைத் தவிர அனைவரையும் கலைந்து செல்லும்படி பாபா கேட்டுக் கொண்டார். அவர்களுடன் சிறிது நேரம் உரையாடி, பாபா, மதிய உணவுக்குச் சென்றார். பின்னர் அவர் தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார்.

பிற்பகல் 3:20 மணிக்கு பாபா மீண்டும் மண்டபத்திற்கு வந்த போது குஸ்தாஜி அவருக்கு மாலை அணிவித்தார். பாபா கூறினார்:

**நாளை எனக்கு முக்கியமான நாள். நித்தியத்தில் நேரம் என்று ஒன்று இல்லை என்றாலும், இந்தப் பௌதீக தளத்தில் நாம் நேரத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதற்கேற்ப நாளை எனக்கு மிக முக்கியமான நாள்.**

**நான் ஒரு பக்தன் எனும் முறையில் அங்கம் வகிப்பது மட்டுமின்றி, அனைத்து நேர்மையுடனும், ஆர்வத்துடனும் நான் ஒரு பக்தனாக என்னை உணர்வேன். எனவே, நம் எல்லோருள்ளும், நாம் அனைவரும் ஒன்றாக அவருள்ளும் இருக்கும் ஏக இறைவனுக்கு, எனது மிகவும் தாழ்மையான பிரார்த்தனைகளில் பங்குகொள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரை அழைத்தேன். நாளை நான் சொல்வது, விளக்குவது, முடிவெடுத்து அறிவிப்பது அனைத்திலும் நீங்கள் அனைவரும் முழு கவனம் செலுத்த வேண்டும்.**

**ஏப்ரல் இறுதியில், கடவுள் வெளிப்படுவார்; அதைத்தான் நாளை நான் சொல்லப் போகிறேன். எனவே, நாளை காலையில் நீராடவோ, அல்லது குறைந்தபட்சம் உங்கள் கைகளையும் முகத்தையும் கழுவவோ - அல்லது என் மீதான உங்கள் அன்பால் உங்கள் மனதைத் தூய்மை படுத்தவோ செய்யுங்கள்! என் பிரார்த்தனையில் முழு மனதுடன் என்னுடன் இணைந்து கொள்ளுங்கள். வேறொன்றுமில்லை. அனைத்தும் அறிந்த கடவுளுக்கு முன்பாக, பாசாங்குத்தனத்துடன் இருக்க வேண்டாம்.**

**கடந்த பல ஆண்டுகளாக, கடவுளின் மீதுள்ள அன்பினால், தம்மையே நிர்மூலமாக்கிய மஸ்துகள் மற்றும் புனிதர்களுக்கு நான் தலைவணங்கி வருகிறேன். முழு நம்பிக்கையுடனும், அன்புடனும் என்னை நேசிப்பவர்களின் அன்பிற்கு இப்போது நான் தலைவணங்குகிறேன்.**

தொடர்ந்து பஜனைகள் பாடப்பட்டன. மாலை 4:30 மணிக்கு, அனைவரும் முகத்தையும் கைகளையும் கழுவிவிட்டு மீண்டும் மண்டபத்திற்கு வருமாறு பாபா அறிவுறுத்தினார். ஸாவ்னேர் குழு வந்துவிட்டதா என்று பாபா விசாரித்தார். அனைவரும் மண்டபத்தில் தத்தமது இருக்கைக்கு வந்த பின்பு, பாபா தொடர்ந்தார்:

**இப்போது இறை நாமங்கள் காலையில் மொழிந்தபடியே உச்சரிக்கப்படும். நாளை நான் சொல்ல வேண்டியதைச் சொல்வேன், அல்லது செய்ய வேண்டியதைச் செய்வேன். இன்று நான் ஒரு பக்தனின் நிலைப்பாட்டை 100 சதவிகிதம் எடுத்துள்ளதால், அதன்படி நான் செயல்பட வேண்டும், நீங்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும். நாளை நான் எனது அனல் பறக்கும் வாழ்வைத் தெளிவுபடுத்துவேன்.**

பிற்பகல் 4:45 மணிக்கு பாபா அவரது முகத்தையும் கைகளையும் கழுவினார். இறை நாமங்கள் ஒரே வரிசையில், அதே நான்கு நபர்களால், உரத்த குரலில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டன. தொடர்ந்து காடேக்கர், தாடே, மதுசூதன் ஆகியோரின் பஜனை நிகழ்ச்சி ஒரு மணி நேரம் நடைபெற்றது.

பஜனையின் நிறைவில் பாபா கூறினார்:

**சில நிமிடங்களுக்கு, நான் 'ஞானம்'** (இறை அறிவு) **பற்றி விளக்குகிறேன், இது ஸுஃபியிஸத்தில் 'மாரேஃபத்' அல்லது 'உறுதியாக கடவுளாக மாறுவது' என்று அழைக்கப்படுகிறது. 'திட நம்பிக்கை'யில் மூன்று நிலைகள் உள்ளன: அறிவார்ந்த நம்பிக்கை, பார்வையால் விளையும் நம்பிக்கை, மற்றும் அவ்வாறாக மாறுவதன் மூலம் ஏற்படும் நம்பிக்கை.**

**சில நபர்களுக்கு அறிவார்ந்த நம்பிக்கை கூட உள்ளது. நாம் கடவுளோடு ஒன்றாக உள்ளோம் என்று வேதாந்திகள் கூறுவது கூட அறிவார்ந்த நம்பிக்கையல்ல. நாம் அனைவரும் 'ஒருவனேயான இறைவன்' என்று கேட்கும்போதும், வாசிக்கும்போதும், அதைத்தான் புத்தி, தற்காலிகமாகப் பற்றிக் கொள்கிறது. இந்தத் தற்காலிக புரிதல், அறிவார்ந்த நம்பிக்கையாக மாறும் போது, அந்த நம்பிக்கையை எதுவும் அசைக்க முடியாது, அந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பவரை எதுவும் வருந்தச் செய்யவும் முடியாது. ஒருவன் புத்தியின் மூலம் நிரந்தரமாகப் பற்றிக் கொண்டதை உண்மையில் பார்க்கும்போது, அந்த நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. ஒருவன் எதைப் பார்க்கிறானோ அதுவாக மாறினால், அது அசைக்க முடியாத திட நம்பிக்கை ஆகிறது. இதுவே**

**'ஞானம்'. ஒருவன் பார்க்கும் அனைத்துடனும் எப்பொழுதெல்லாம் ஐக்கியமாகிவிடுகிறானோ, அப்பொழுது நம்பிக்கை உறுதியானதும், அசைக்கமுடியாததும் ஆகிவிடும். இது மூன்றாவது வகையான திட நம்பிக்கை.**

**நீங்கள் ஒரு மனிதன். இப்போது ஆண்மை பற்றிய இந்த அறிவுக்கு, புத்தி தேவையில்லை, பகுத்தறிவு தேவையில்லை, ஏனென்றால் நீங்கள் ஒரு மனிதன். "நான் ஒரு பெண்ணா? நான் ஒரு நாயா?" என்று நீங்கள் நினைக்கவே மாட்டீர்கள். ஆமாம், நினைக்க மாட்டீர்கள், ஏனென்றால் நீங்கள் ஒரு மனிதன் என்ற இந்த அறிவுக்கு புத்தி தேவையில்லை.**

**நீங்கள் கடவுளோடு ஒன்றாகும் போது, நீங்கள் கடவுள்; இவ்வாறு, கடவுளாக மாறுவது இறை அறிவின் ஆதாரம். ஒரு சத்குரு கண் இமைக்கும் நேரத்தில் இந்த இறை அறிவை (ஞானத்தை) வழங்க முடியும். மேலும் பாபாவிற்கு 'இறை ஞானம்' இருப்பதாக நீங்கள் அனைவரும் நினைத்தால், அதற்கு, எனது குருநாதர்களான பாபாஜான் மற்றும் உபாஸனி மஹாராஜ் அவர்களும், நேரடியாக எனது 'பழங்கால மனிதரான' சாய்பாபாவும் காரணமாக இருக்க வேண்டும். மிகவும் அரிதான அந்த 'இறை ஞானம்' என்னிடம் இருந்தால், நான் உங்கள் அனைவரிலும் என்னைக் காண வேண்டும், நீங்கள் அனைவரும் என்னுள் இருக்க வேண்டும். எனவே, உங்கள் அன்பிற்குத் தலைவணங்குவதன் மூலம், கடவுளில் ஒன்றோடு ஒன்றான கடவுளுக்கும், குருநாதர்களுக்கும் நான் தலைவணங்குகிறேன்.**

மாலை 6:15 மணிக்கு ஸாவ்னேர் குழுவைத் தவிர, இதர அனைவரும் மண்டபத்தை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்களுடன் உரையாடிய பின்பு, பாபா மெஹராஸாத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

1952, நவம்பர் 8 சனிக்கிழமை காலை, அனைவருக்கும் தேநீருடன் இனிப்பு ரவை வழங்கப்பட்டது. பெரும்பாலான ஆண்கள் காலை 7:00 மணிக்குள் நீராடி, தயார் நிலையில் பாபாவின் வருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. சரியாக காலை 7:30 மணிக்கு, பாபா வந்து, அன்றைய கூட்டத்திற்காக (கீழ் மெஹராபாத் பழைய தர்மசாலை கட்டிடத்திற்குப் பின்னால்) அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்கு, நேரடியாகச் சென்றார். பாபா யாருடைய உதவியும் இல்லாமல் சிறிய மேடையில் தானாக ஏறினார், அனைவரும் உயர்வாக அமைக்கப்பட்ட மேடையில் ஒன்றுதிரண்டனர். பாபா சிரித்துக்கொண்டே, "**அரை மணி நேரம் இங்கிருந்து கலைந்து செல்லுங்கள்; எனக்கு மண்டலியுடன் தனிப்பட்ட வேலை இருப்பதால் மேடையில் ஒன்று திரண்டு, இந்த நேரத்தில் எனது மார்பில் அமர வேண்டாம்! நான் உங்களை அழைக்கிறேன்**" என்று கூறினார்.

காலை 8:00 மணிக்கு அனைவரும் மீண்டும் பந்தலுக்குள் அழைக்கப்பட்டனர். அவர்கள் கூடியதும், பாபாவின் விரல்கள் எழுத்துப் பலகையில் '**பேச**' ஆரம்பித்தன:

**நவம்பர் 15ஆம் நாள் தொடங்கும் அனல் பறக்கும் வாழ்வில், எனக்கும் எனது பணிக்கும், இன்று மிகவும் முக்கியமான நாள். எனவே இந்த நாளில் என்னுடன் இணைய தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரை இங்கு அழைத்துள்ளேன், உங்கள் அன்பு மற்றும் நம்பிக்கையின் பேரில் என் அழைப்புக்கு பதிலளித்த அனைவருக்கும் தலைவணங்குகிறேன்.**

பாபா எழுந்து நின்று பக்தி மற்றும் மரியாதையுடன் கூடியிருந்தவர்களை இரு கரம் கூப்பி வணங்கி, தனது இருக்கையில் அமர்ந்து மீண்டும் தொடர்ந்தார்:

**நான் சொல்வதையும், அறிவிப்பதையும், நான் எடுத்த முடிவையும் நீங்கள் அனைவரும் பொறுமையாகக் கேட்க வேண்டும். எனது 'அனல் பறக்கும் வாழ்வை' நான் தெளிவுபடுத்துவதற்கு முன்னர், இன்று நான் ஏற்றுக்கொண்ட ஒரு பக்தனின் நிலைப்பாட்டை உங்களுக்கு விளக்குகிறேன்.**

**ஒரு சாதாரண பக்தனுக்கு எல்லாவிதமான பற்றுதலும் உண்டு. அறியாமை முக்கிய காரணியாக இருப்பதால், ஆசைகள் மற்றும் இருமைத்தன்மை நிலைத்திருக்கும்; இந்த அறியாமையால், பாவம், புண்ணியம், நல்லது, கெட்டது அனைத்திற்கும் அர்த்தம் உண்டு. கவலைகள், சந்தேகங்கள், வருத்தங்கள் மற்றும் துயரங்கள் இந்த அறியாமையின் விளைவுகளாகும். பிறப்பும் இறப்பும், அனைத்தும் அறிந்த ஞானிக்கு மிதமிஞ்சியதாக இருந்தாலும், அறியாமையில் அர்த்தம் உள்ளது. ஆதலால், ஒரு பக்தனுக்கு நல்லது, தீயது போன்ற எல்லாவிதமான இருமைத்தன்மையும் இறை ஞானம் அடையப்பெறும் வரை இருக்கும்.**

**ஆதலால், தான் செய்த தவறுகளுக்காக இறைவனிடம் மன்னிப்பு கோரும் ஒரு சாதாரண பக்தனின் நிலைப்பாட்டை இன்று நான் எடுக்கிறேன்.**

இந்த விளக்கத்திற்குப் பிறகு, பாபா, டானிடம் பின்வரும் அறிக்கையை ஆங்கிலத்தில் வாசிக்குமாறு கேட்டுக் கொண்டார் (அதன் மொழிபெயர்ப்புகள் தயாராக இருந்தன, மராட்டி மொழியில் டாக்டர் தேஷ்முக் மற்றும் இந்தி மொழியில் கேஷவ் நிகம் ஆகியோர் அதை உரத்த குரலில் வாசிக்க அறிவுறுத்தப்பட்டனர்):

**இன்னும் சில நிமிடங்களில் நான் கடவுளிடம் மனமார, என்னுடைய பாவங்களுக்காகவும், என்னுடன் தொடர்புடைய அனைவரின் பாவங்களுக்காகவும் மன்னிப்புக் கோர போகிறேன்.**

**இந்த மன்னிப்புக் கோருதலிலும் பிரார்த்தனையிலும் நான் என்னைச் சேர்த்துக்கொள்வதால், தற்போதைக்கு, நான் ஒரு சாதாரண பக்தனாக - கடவுளுடன் ஐக்கியமாவதற்கான பக்தியும் ஏக்கமும் பலவீனமடைந்து,**

மீண்டும் தீய எண்ணங்கள், தீய உணர்வுகள், தீய வார்த்தைகள் மற்றும் தீய செயல்களால் சிதைந்துபோகும் ஒருவனாக என் நிலைப்பாட்டை எடுப்பேன் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

கடவுள் மட்டுமே இருக்கிறார் என்பதை நான் அறிவேன், அதே போல நன்மையும் தீமையும் கடவுளின் அம்சங்கள் அல்லது வெளிப்பாடுகள் என்பதையும் நான் அறிவேன்.

சாதாரண மனிதனுக்கும், சாதாரண பக்தனுக்கும் கூட, நன்மை தீமையின் உண்மையான இயல்பைப் பற்றிய இந்த அறிவு, நம்பிக்கை அல்லது பகுத்தறிவின் விளைவாகும். எனவே இது தத்துவார்த்தமானது (கொள்கையளவிலானது), உண்மையான அறிவு அல்ல, மேலும் அது அவரை கர்ம வினையின் விதியிலிருந்து விடுவிக்காது - இறை விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சட்டம், நித்தியமாக வியாபித்திருக்கும் சட்டம்.

இருப்பினும், இறை ஞானி, உண்மைப்பொருளின் அனுபவத்தின் மூலம் உண்மையை அறிந்திருப்பதால், இந்த பிணைப்புகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவர், எனவே அவர் ஓர் இறை ஞானியாக, கர்ம வினையின் விதியிலிருந்து விலக்கு பெற்றவர் என்பதை அறிவார். நன்மை தீமையின் தன்மையை அறிந்திருப்பதால், தான் நினைத்தாலும், உணர்ந்தாலும், சொன்னாலும், செய்தாலும் யாரையும் குற்ற உணர்வோடு பார்க்க வேண்டியதில்லை என்பதையும் அவர் அறிவார்.

சொர்க்கம் - நரகம், பிறப்பு - இறப்பு, நன்மை - தீமை போன்றவற்றின் தொடர்ச்சிகள் கர்ம விதிகளின் மூலம் 'இறை விருப்பத்தின்' விளைவாக செயல்படுகின்றன, ஆனால் அவை அறியாமையின் காரணமாக நிகழ்கின்றன என்பதையும் இறை ஞானி அறிவார். இவ்வாறு, தனது பக்தர்களுக்காகவும், மனிதகுலத்திற்காகவும் அடிக்கடி கடவுளிடம் பரிந்து பேசும் இறை ஞானி, கடவுளிடம் ஒருபோதும், தன்னைப் பற்றிய எதற்கும் மனமார மன்னிப்புக் கோருவதில்லை.

கடவுளின் மகத்தான ஆசீர்வாதத்தால், மிக உயர்ந்த வகையைச் சார்ந்த பக்தரின் முழு சிந்தனையும் செயலும் தெய்வீக அன்பானவர் மீது நிரந்தரமாகச் செலுத்தப்படுவதால், இறை ஞானியைப் போலவே பக்தருக்கும் கர்ம வினையின் விதியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படுகிறது. இருப்பினும், இறை ஞானியைப் போலல்லாமல், அத்தகைய பக்தர் இந்த விதிவிலக்கைப் பற்றி முற்றிலும் அறியாதவர். ஆனால் ஒரு சாதாரண பக்தர், எவ்வளவு நேர்மையான பக்தியுடன் இருந்தாலும், கர்ம வினையின் விதிக்குக் கட்டுப்பட்டவராக இருப்பார், அதனால் அவருடைய சிறந்த போக்கானது, நல்லொழுக்கத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும்

**தீமையிலிருந்து தொடர்ந்து விலகி இருப்பதன் மூலம் தனது சொந்த ஆன்மீக நன்மைக்காக இந்த விதியைக் பயன்படுத்துவதாகக் கூறலாம். மேலும் அவர் நல்லொழுக்கத்தில் தோல்வியுற்றால் அல்லது பாவங்களில் வீழ நேர்ந்தால், அவர் கடவுளின் எல்லையற்ற கருணையில் தன்னைத் தூக்கி எறிந்துவிட்டு அவரிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.**

**மன்னிப்புக்காக மனமிரங்கி, இப்போது எனக்காகவும், உங்களுக்காகவும், என்னுடன் தொடர்புடைய அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்யப்படும். உங்களில் சிலருக்கு, அல்லது பலருக்கு, ஆசைகள் மற்றும் பற்றுதல்களின் பிணைப்புகள் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் இன்று, நான் ஒரு பக்தன் எனும் நிலைப்பாட்டை எடுப்பதால், நீங்கள் அனைவரும் என்னுடன் இணைந்து, கடவுளின் மன்னிப்பை வேண்டி, என்னை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

பாபா எழுந்து நின்று, கீழ்வரும் நபர்களிடம், அவர்கள் இதற்கு முன்பு செய்ததைப் போலவே, பின்வரும் கடவுளின் நாமங்களை ஏழு முறை உச்சரிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர் கூட்டத்திலிருந்த அனைவரிடமும் மனதளவில், திரும்பத் திரும்ப, முழு மனதுடன் மொழியுமாறு கூறினார்: டாக்டர் நீலு '**ஓம் பரபிரம்ம பரமாத்மா**!', பாதிரி '**யா எஸ்தான்**!', பைதூல் '**லா இலாஹி இல்லல்லாஹ்**!" மற்றும் எரச் '**கடவுளே, பரலோகத்தின் தந்தை**.'

இவ்வாறு கடவுளை வழிபட்டு, வேண்டிய பிறகு, பாபா, டானிடம் மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் வகையில் பிரார்த்தனையை ஆங்கிலத்தில் வாசிக்கச் சொன்னார். பிரார்த்தனை நடந்துகொண்டிருந்த முழு நேரமும், பாபா, அவரது கன்னங்களில் லேசாக அறைந்தார், இது பாவமன்னிப்புக்காக இந்திய நாட்டில், அந்தச் செயலை மீண்டும் செய்ய மாட்டேன் என்று உறுதியளிக்கும் விதத்தில் அமைந்த வழக்கமான செயற்குறிப்பு.

வெவ்வேறு மொழிகளில் பிரார்த்தனையை மொழிந்த பின்னர், அனைவரும் அமர்ந்தனர். அப்பொழுது பாபா கூறினார்:

**எனது அனல் பறக்கும் வாழ்வை விளக்குவதற்கு முன்னர், ஓர் இறை ஞானிக்கும், அவரை நேசிப்பவருக்கும் இந்தப் பிணைப்புகளும் பிணைப்புகளுக்கான மன்னித்தலும் இல்லை என்று நான் சொல்ல வேண்டும். இறை ஞானி ஒருவருக்கு, இறைவனைத் தவிர வேறு எதுவும் இல்லை.**

**அவரைப் பொறுத்தவரை எல்லோரும் கடவுள், எல்லாமும் கடவுள், நான் நேற்று விளக்கியது போல், அறிவார்ந்த நம்பிக்கையால் மட்டுமல்ல, கடவுள் எனும் உறுதிப்பாட்டின் உண்மையான மற்றும் தொடர்ச்சியான அனுபவத்தால் அவர் அதை அறிகிறார். தொடர்ச்சியான, திடமான நித்திய நம்பிக்கையின் மூலமாகவும், ஆரம்பம் முதல் அளவிறுதியற்ற முடிவு**

வரையிலான அனுபவங்கள் மூலமாகவும், அவர் ஒருவரே 'கடவுள்' என்பதை அவர் அறிவார்.

என்றென்றும் ஒரே தன்மையைக் கொண்ட இந்த உலகத்திற்கு 'அன்பு' ஒன்றுதான் எனது செய்தி. இந்த அன்பானது இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது, இரண்டும் உண்மையானவை. அறியாமையால் நாம் அன்பு என்று அழைக்கும் வேறு எந்தப் பற்றும், பிணைப்பும் மாயாவைத் தவிர வேறொன்றுமில்லை.

உருவமுள்ள அல்லது உருவமில்லா கடவுள் மீதான அன்பு, அவருடன் ஒன்றிணையும் தணியாத ஏக்கத்துடன் கூடிய அன்பு, அதன் முதல் அம்சமாகும். அத்தகைய அன்பன் அனைத்தையும் மறந்து, அனைவரையும் கைவிட்டு, இறை அன்பின் நெருப்பில் தன்னை அழித்துக் கொள்கிறான்.

அன்பின் இரண்டாவது அம்சத்தில், ஒரு நபர், மனிதகுலத்தை கடவுளின் ஓர் இன்றியமையா அங்கமாகவும் ஒருங்கிணைந்த பாகமாகவும் நேசிக்கிறார். இங்கே, அன்பன் தனது சுய ஆர்வத்தை மறந்து, தனது சுய மகிழ்ச்சியைத் துறந்து, பிறரை மகிழ்ச்சியாக இருக்கவும், பிறர் அதை அனுகூலமாகக் காணச் செய்யவும் முயற்சிக்கிறான். இந்த அன்பு அதன் உச்சத்தை எட்டும் நேரத்தில், இங்கேயும் தெய்வீக அன்பனைப் போலவே, தன்னை முழுவதுமாக மறந்து, மனிதகுலத்தை நேசிப்பதன் மூலம் அன்பில் மட்டுமே தொலைந்து போகிறான்.

நவம்பர் 15ஆம் நாள் தொடங்கி (1953) ஏப்ரல் இறுதியில் நிறைவடையும் எனது அனல் பறக்கும் வாழ்வு, இறை அன்பின் நெருப்பில் எரிக்கப்பட்ட பின்னர், அன்பன் அன்பிற்குரியவரில் தொலைந்து போகும் இந்த அன்பை அடிப்படையாகக் கொண்டது.

இப்போது மிகவும் கவனமாகக் கேளுங்கள்:

பாபாவின் அனல் பறக்கும் வாழ்வைப் பற்றிய பின்வரும் வரிகளைப் வாசியுங்கள்:

எனது அனல் பறக்கும் வாழ்வு 1952, நவம்பர் 15ஆம் நாள் தொடங்கி, 1953, ஏப்ரல் மாதத்தில், அந்த வாழ்வின் உள் செயல்பாட்டின் உச்சக்கட்டத்தை அடைந்து, அதன் முழு உள் செயல்பாடுகளின் நிரூபணம் வெளியளவில் வெளிப்படும். அதே மாதத்தில், அனல் பறக்கும் வாழ்வின் இறுதி மற்றும் உண்மையான முடிவு, கடவுளின் அருளால் உலகம் அறியும்.

கடவுள் கூறுகிறார்:

நான் என் எதிரிகளை செழிப்படையச் செய்து, எனது நண்பர்களை வீழச் செய்கிறேன்.

அது ஏன், எதற்காக என்று கோர எவருக்கும் உரிமை இல்லை!

சொல்லப்படாத காலங்களிலிருந்து, தெய்வீக அன்பிற்குரியவருடன் இறுதியாக இணையும் வரை, கடவுளின் ஒவ்வொரு அன்பனும் எண்ணற்ற சுமைகளைச் சுமந்து, பரிவு காட்டாத எதிர்ப்பை சந்தித்து, அவமானங்கள், உடல் நோய் மற்றும் மன விரக்தியால் துன்புறுத்தலுக்கு ஆளாக வேண்டியிருந்தது.

நானும், என்னுடன் அனல் பறக்கும் வாழ்வில் இருக்கக் கூடியவர்கள் அனைவரும் இடர்பாடுகள், சிரமங்கள் மற்றும் மனதால் பாவிக்கவல்ல அனைத்து வகையான தாக்குதல்களிலும் உறுதியாக நிற்க தயாராக இருக்க வேண்டும், நமது ஒரே ஆயுதம் அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கை மற்றும் அவரது விருப்பத்திற்கு முழுமையாக சரணடைவது மட்டுமே.

அனல் பறக்கும் வாழ்வு இறைவனின் அருளால் வெற்றியடையும் அந்த இறுதி நேரம் வரை நமது துன்பங்கள் அனைத்தையும் இவ்வாறே சுமக்க வேண்டும்.

டான் படித்து முடித்ததும், பாபா கூறினார்:

இப்போது உங்கள் அனைவரையும் இங்கு நான் அழைத்து, ஒரு சில வார்த்தைகளில், முக்கியமான பிரகடனம் ஒன்றை அறிவிக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். முடிவிலா காலம் முழுவதும் அவருடைய விருப்பம் மட்டுமே செயல்படுகிறது. எனவே நான் இப்போது அறிவிக்கும் இந்த சில வார்த்தைகள் ஏப்ரல் இறுதி வரை மனதில் இருக்க வேண்டும்.

பிரகடனம்:

1953, ஏப்ரல் மாதத்தின் கடைசி பதினைந்து நாட்களில், கடவுள் எல்லாவற்றையும் முடித்து, சரிசெய்வார் - அதாவது சந்தேகங்கள், சுய அறிவு குறித்த ஐயப்பாடு, வெறுப்பு மற்றும் அழிவுகளின் தற்போதைய உலகளாவிய குழப்பங்கள் அனைத்திற்கும் முடிவுகட்டுவார். அதற்காக, கடவுள் முன்னெப்போதும் இல்லாத வகையில் வெளிப்பட வேண்டும், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குழப்பமும் ஏற்படும். இந்தக் காலகட்டத்தில் கடவுள் என்னை, இப்பூவுடலைக் கைவிடச் செய்வார். 700 ஆண்டுகளுக்குப் பிறகு நம்மில் சிலர் உடல் ரீதியாக சந்திப்போம்.

இந்த உடலைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் எப்போதும் இருந்தோம், இருப்போம் என்பது என் இறை ஞானம். உங்கள் அன்பின் காரணமாக, நீங்கள் அனைவரும் இன்று எனது குருக்களாக இருப்பதால், எனது அனல் பறக்கும் வாழ்வுக்கு உங்கள் ஆசீர்வாதங்களை வேண்டுகிறேன்.

இப்போது இங்கே இருக்கும் இறைவனிடம், ஏப்ரல் மாதத்தில் அவர் என்னைச் செய்யுமாறு பணித்த உலகளாவிய பணியைச் செய்ய எனக்கு பலம் தருமாறு வேண்டுங்கள்.

கிருஷ்ணாஜியிடம் பாபா, அவரது உலகளாவிய பணி நிறைவேற கடவுளின் ஆசீர்வாதத்தை மன்றாடிக் கேட்குமாறு கேட்டுக் கொண்டார்.

புனிதமான சூழலில் அனைவரும் எழுந்து நின்றனர். உணர்ச்சி பொங்கும் குரலில், கிருஷ்ணாஜி தனது சொந்த வார்த்தைகளில் கூறினார்: "கடவுளே! நீங்கள் எங்கும் நிறைந்தவர்! ஏப்ரல் மாதத்தில் அவர் செய்யுமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரபஞ்சத்திற்கான பணியை நிறைவேற்ற, பாபாவின் அனல் பறக்கும் வாழ்வில், வேண்டிய பலத்தை அளிக்குமாறு நாங்கள் உங்களை வேண்டிக்கொள்கிறோம். பாபா மீது உங்களின் அருள்மிகு ஆசீர்வாதங்களைப் பொழியுமாறு முழு மனதுடன் மன்றாடுகிறோம்!"

கிருஷ்ணாஜி புதியவர் ஆகையால், "...மேலும் நான் பாபா, கடவுள் என்று உணர்கிறேன்!" என்று கூறி அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்.

பிரார்த்தனை முடிந்ததும் அனைவரும் அமர்ந்தனர். பாபா மிகவும் மகிழ்ச்சியாகவும் பிரகாசமாகவும் தோற்றமளித்தார்; மேலும், டாக்டர் டானிடம் முந்தைய நாள் அவர் எடுத்துரைத்த அனல் பறக்கும் வாழ்வு குறித்த பின்வரும் செய்தியை வாசிக்கக் கூறினார்:

**இத்தனை ஆண்டுகளாக நான் ஒரு சத்குருவாகவும் அவதார புருஷராகவும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறேன். எனது புது வாழ்வில், நான் ஒரு சாதாரண எளிய மனிதனின் வாழ்க்கையை வாழ்ந்தேன்.**

**மனோ நாஷ் காலத்தில், மனதை முழுமையாக நிர்மூலமாக்கும் நோக்கத்தில் இறைவனை நாடும் ஒருவரின் வாழ்க்கையை வாழ்ந்தேன். எனது சுதந்திர வாழ்வின் போது, நான் பலம் மற்றும் பலவீனம் என்ற இரட்டை வேடத்தில், ஒரே நேரத்தில் குருநாதர் மற்றும் பக்தர் எனும் பாத்திரங்களைத் தக்க வைத்துக் கொண்டேன்.**

**எனது அனல் பறக்கும் வாழ்வில் மூழ்குவதற்கு முன்பு, முதல் மற்றும் கடைசி முறையாக, என்னுடன் தொடர்புள்ள மூன்று குருநாதர்களான சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், பாபாஜான் ஆகியோருக்கு அவரவர் பௌதீக உடல் அடங்கிய இடங்களில் அஞ்சலி செலுத்த விரும்புகிறேன்.**

**அதைத் தொடர்ந்து நான் மும்பைக்குச் சென்று, அங்கு வாழும் மஸ்துகள் மற்றும் துறவிகளின் காலடிகளை வணங்கி, ஓர் இறை அன்பனாக, அனல் பறக்கும் வாழ்வில் மூழ்கிவிடுவேன்.**

இந்தச் செய்தி நிறைவடைந்ததும், பாபா மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டார், ஏனென்றால் திட்டமிடப்பட்ட கூட்டத்தின் மிக முக்கியமான பணியை அவர் நிறைவு செய்தார். ஒளிர்ந்த புன்னகையுடன், "**இப்போது பதினைந்து நிமிடங்கள் ஓய்வெடுங்கள், அதைத் தொடர்ந்து பஜனை நிகழ்ச்சி நடைபெறும்**" என்று கூறினார்.

அனைவரும் ஒன்று கூடியதும் இசை நிகழ்ச்சி ஆரம்பமானது. பூனா குழுவினரால் இயற்றப்பட்ட இரண்டு பஜனைகளும், ருஸ்தம் காக்காவின் குரல் வளத்தில் சந்த் துக்காராம் எழுதிய பாடலுக்குப் பிறகு, டாக்டர் கனியின் சகோதரர் அப்துர் ரஹ்மான் இரண்டு கஸல்களைப் பாடினார்; ஒன்று காக் ஸாஹேப் இயற்றியது மற்றொன்று கனி. இந்த கஸல்களில் வெளிப்படுத்தப்பட்ட உணர்வின் ஆழத்தை பாபா பாராட்டினார். கனி, அவரின் சகோதரர் அப்துர், ஸெயிலர் (கொடு), பெய்லி ஆகியோர் தனது குழந்தைப் பருவ நண்பர்கள் என்று அவர் கூட்டத்தில் கருத்து தெரிவித்தார். கனி காலமாகிவிட்டார், பாபாவும் இவ்வுலகை விட்டுச் சென்றால், "**குறைந்த பட்சம்** (நம்மில்) **மூவர் எஞ்சியிருப்பார்கள்**!" என்று அவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

பாபா மேலும் கூறினார், "**நாங்கள் அனைவரும் ஒன்றாக விளையாடினோம், சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டோம், ஆனால் அனைத்திலும் சிறந்த விஷயம் என்னவென்றால், அவர்கள் அனைவரும் என்னை மிகவும் நேசித்தார்கள்.**"

பின்னர் அவர் ஸெயிலரிடம், "**இப்போது என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**" என்று கேட்டதற்கு, ஸெயிலரின் உடனடி பதில்: "மனித உருவில் கடவுள்!"

அதே கேள்வி பெய்லியிடம் கேட்கப்பட்டது, அவர் பதிலளித்தார், "நான் பாபாவை எனது எல்லாமாகப் பார்க்கிறேன்."

பாபாவின் முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது, அவர் கேலி செய்தார், "**எனது சிறு வயது நண்பர்கள் என்னைப் பற்றி மிகவும் உயர்வாக நினைப்பது போல, பல ஆண்டுகளுக்குப் பின்னரும், என்னில் அசாதாரணமான ஒன்று இருக்க வேண்டும் என்பதை நான் உணர இது போதுமானது!**"

நிகழ்ச்சி முடிந்ததும் பாபா மதிய உணவுக்காகச் செல்ல விரும்பினார். முந்தைய நாள் நேரில் சந்திக்காதவர்களை மதியம் சந்திப்பதாக அவர் கூறினார்.

மாலை 4:40 மணி வரை மண்டபத்திற்கு எதிரே அமைந்த தனது அறையில் பாபா மிகவும் மும்முரமாக இருந்தார், அவருடைய பணிகள் மற்றும் பலவிதமான வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள் தொடர்பாக பல்வேறு நபர்களுடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தார். 4:45 மணிக்கு பாபா மண்டபத்தில் நுழைந்தார். வெவ்வேறு இடங்களில் தரிசனத்திற்கான சரியான தேதிகளைத் தீர்மானிக்க விரும்புவதாக அவர் கூறினார். தத்தமது இடங்களில் வெகுஜன தரிசனங்களை ஏற்பாடு செய்யும் பொறுப்பை வகிக்கும் அனைத்து நபர்களும் (ஏற்பாட்டுக் குழுவினர்) மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டபோது, குறிப்பிடப்பட்ட மூன்று விஷயங்களை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது, அவை:

**முதலாவது**: பாபா ஓரிடத்தில் காலடி எடுத்து வைத்ததும், முதலில் அந்த இடத்தில் வாழும் மஸ்துகள் மற்றும் துறவிகளை தரிசனம் செய்வார்.

**இரண்டாவது**: பாபா ஏழு ஏழைகளைத் தலைவணங்குவார்; அதற்கு முன்னர், அவர் அவர்களின் கால்களைக் கழுவி அவர்களுக்கு உணவளிப்பார்.

**மூன்றாவது**: வெகுஜன தரிசன நிகழ்ச்சியின் போது, முதலில் பாபா பொது ஜனங்களை வணங்குவார்; அதற்குப் பிறகு மக்கள் அவரை வணங்கலாம், அவருக்கு மாலை அணிவிக்கலாம், ஆரத்தி பூஜை செய்யலாம்,.

பாபா மேலும் வலியுறுத்திக் கூறினார்: "**வெகுஜன தரிசன நிகழ்ச்சிகளின் பொறுப்பாளர்கள், இந்த விஷயங்களைக் கடைப்பிடிப்பது கடினம் என்று கருதினால், அவர்கள் அதைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் எடுத்துரைக்க வேண்டும். இந்த மூன்று விஷயங்களையும் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாதது, இல்லையெனில் இத்தகைய தரிசன நிகழ்வுகளைத் திட்டமிடுவது முற்றிலும் தவறு - அவற்றை ரத்து செய்வது நல்லது.**"

அனைவரும் பாபாவின் அறிவுரைகளைக் கடைப்பிடிக்க ஒப்புக்கொண்டனர், மேலும் தரிசனத்திற்கான தேதிகள் மீண்டும் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன. வட இந்திய பகுதியிலிருந்து ஒருவர் கேட்டார், "நீங்கள் மக்களுக்கு சிறப்பு செய்திகளை வழங்குவீர்களா?"

பாபா பதிலளித்தார்: "**ஆம், நீங்கள் ஆதியிடமிருந்து இவற்றைச் சேகரித்து, உங்கள் வசதிக்கேற்ப, பொதுமக்களுக்கு விநியோகிக்கும் விதத்தில் அவற்றை ஒரு சிறு புத்தகமாகவோ அல்லது துண்டுப் பிரசுரங்களாகவோ அச்சிடலாம். உங்களால் இந்த செய்திகளை அச்சிட முடியாவிடில், கவலைப்பட வேண்டாம்; மக்கள் என்னை தரிசனம் செய்வார்கள், அதுவே போதுமானது.**

**"ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: எவரும் என்னுடன் தனிப்பட்ட நேர்காணலைக் கோரக்கூடாது. நான் எவரையும் அழைத்தால், அது வேறு விஷயம். ஏதேனும் கூடுதல் விளக்கங்கள் அல்லது சொற்பொழிவுகளைப் பொறுத்தவரை, அது எனது 'அந்த நேர' விருப்பத்தைப் பொறுத்திருக்கும்.**"

ஹமிர்பூரைச் சேர்ந்த ஒரு குழுத் தலைவர் பாபாவிடம் சிறிய கிராமங்களுக்குச் செல்வீர்களா என்று கேட்டார். அதற்கு பாபா, "**நீங்கள் என்னை அன்புடன் எங்கு அழைத்துச் சென்றாலும் நான் வருவேன். மாட்டு வண்டியில் பயணம் செய்யவும் நான் தயங்க மாட்டேன்**" என்று பதிலளித்தார்.

புன்னகைத்து பாபா இதை நினைவு கூர்ந்தார், "**ஒருமுறை தொலைதூரப் பகுதியில் மஸ்த் பயணம் ஒன்றில், பைதூல் ஒரு பழைய மாட்டு வண்டியை வாடகைக்கு அமர்த்தினார். மண் சாலை குண்டும்**

**குழியுமாக இருந்தது, வண்டி ஓட்டுநர் மிகவும் உற்சாகத்துடன் காளைகளை ஓட்டிச் சென்றதில் நாங்கள் இலகுவாக அந்த இடத்தைச் சென்றடைந்தோம்; கீழே இறங்கிய, ஐந்து நிமிடங்களுக்கு நான் அதிர்ச்சியிலிருந்து விடுபட முடியாமல் இருந்தேன்!"**

பாபா மேலும் கூறினார், "**நீங்கள் அத்தகைய மாட்டுவண்டியையோ அல்லது ஓட்டுநரையோ அமர்த்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன்!**"

ஆந்திரா குழுவினரைப் பார்த்து, பாபா தொடர்ந்தார், "**மேற்கு கோதாவரி மாவட்டத்தில் தரிசன நிகழ்ச்சிகளுக்கு தனபதி ராவும், ரங்கா ராவும் தலைமைப் பொறுப்பை வகிப்பார்கள். அவர்கள் என்னை அழைத்துச் சென்றால், கோதாவரி நதிக்கும் நான் சென்று வருவேன்.**"

**வடிவேலு முதலியார்** என்பவர் பாபாவிடம் அவர் மதராஸுக்கும் வருவாரா என்று கேட்டதற்கு, பாபா அந்த முதியவரை அன்புடன் பார்த்து, "**அன்புள்ள வடிவேலு, மதராஸ் முழுவதையும் உங்களுடன் கொண்டு வந்திருக்கிறீர்கள்; நான் நேரில் செல்வதைப் பற்றி கவலைப்படுவானேன்?**" என்று கேட்டார்.

வெகுஜன தரிசன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தால், ஓரிரு நாட்கள் கோலாப்பூருக்குச் செல்ல வேண்டும் என்று பாபா விருப்பம் தெரிவித்தபோது, பஜனை குழுவைச் சேர்ந்த ஒருவர், பாபா, பூனாவுக்கும் விஜயம் செய்வதற்கான வாய்ப்பை வெளிப்படுத்தினார். அதற்கு பாபா, "**ஏன் இல்லை? நான் பூனாவில் பிறந்தேன். மேலும் பூனாவில் தரிசனம் தருவதாக கனிக்கு வாக்குறுதி அளித்திருந்தேன். ஆனால் தற்போது வருகைக்கான தேதி நிச்சயமற்றதாக உள்ளது. இந்த விஷயத்தைப் பற்றி சதாஷிவ், காடேக்கர் ஆகியோரிடம் பேசுகிறேன். பொறுத்திருங்கள்**" என்றார்.

பாபா தலைப்பை மாற்றி, உடன் இருந்தவர்களிடம் நன்றாக மதிய உணவு உண்டார்களா என்று கேட்டார். சகனின் பக்கம் திரும்பி, "**ராம்ஜூவுக்கு உடம்பு சரியில்லை. நீலுவின் மருந்து நாளைக்குள் அவரைக் குணப்படுத்தாவிடில், காலை உணவுக்கு ரவை தயார் செய்ய வேண்டாம். அனைவரும் உபவாசம் கடைப்பிடிக்கட்டும்**" என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து பாபா, "**1920 ஆண்டுகளிலிருந்து, எனது பணியின் பல்வேறு கட்டங்களும், சுற்றியுள்ள சூழ்நிலைகளும் குறிப்பிடத்தக்க அளவில் மாறிவிட்டன, ஆனால் அண்ணா 104 மட்டும் அவர் இருந்ததைப் போலவே இருக்கிறார். அவரது பழக்கவழக்கங்களும் உடையும் மாற்றமுடியாததாகத் தோன்றுகிறது.**"

அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த பாபாதாஸ், முரண்பாடான ஏதோ ஒன்றைச் சொன்னபோது, பாபா, "**பாபாதாஸை நான் ஒன்றுக்கொன்று**

**பொருத்தமற்றவர் என்று குற்றம் சொல்லக் கூடாது. ஏனெனில், அவருடைய கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள்!"**

வெவ்வேறு நிகழ்ச்சித் தலைவர்களிடம் உரையாடிய பாபா மேலும் தொடர்ந்தார், **"நான் வருவதற்கு ஒரு நாள் முன்னதாகவே பைதூல் ஒவ்வொரு இடத்திற்கும் வந்து, மஸ்துகள் மற்றும் புனிதர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார். பைதூல் மஸ்துகளின் 'வாசனை'யை எளிதில் நுகர்ந்து விடுகிறார்; ஒருவேளை மஸ்துகள் இல்லை என்றால், அவர் மஸ்துகளை உருவாக்கிவிடுவார்! அவர் மஸ்துகளைக் கண்டுபிடிப்பதில் நிபுணராக இருந்தாலும், வேறு எதையாவது அவரிடம் நீங்கள் கேட்க நேர்ந்தால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர் உங்களை ஒரு பள்ளத்தில் கூட இட்டுச் செல்லக்கூடும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்!"**

பாபா ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மண்டபத்திற்கு வந்ததிலிருந்து அவருக்கு அணிவித்த மலர் மாலைகளை இன்னமும் அணிந்திருந்தார். அவர் தமது விரல்களை அவற்றின் வழியாக நகர்த்தி சைகையால் தெரிவித்தார், **"அவை மிகவும் அருமை. அவற்றை அகற்ற எனக்கு மனமில்லை, இருந்தும், அவை எனது தோள்களில் பளுவாக இருப்பதால், என்னால் அவற்றை அதிக நேரம் வைத்திருக்க முடியாது. அவற்றை அணிவது என்பது, நீங்கள் மெல்வதை விழுங்கவும், உமிழவும் முடியாதது போன்றது."**

மண்டபத்தில் மக்கள் தங்களுக்குள் பேசத் தொடங்கியதும், பாபா கூறினார், **"கேளுங்கள், எனக்கு நித்திய ஓய்வு வேண்டும் என்று கடவுள் அறிவார், ஆனால் நான் நித்திய அமைதியற்ற நிலையிலும் இருக்க வேண்டும். நீங்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்தால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்."** அனைவரும் மௌனமானதும், பாபா தனது அறிவுரைகளை முடித்தார்.

வெவ்வேறு குடில்களில் கடவுளின் நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது தொடர்ந்து நடைபெற்று வந்தது. இரவு நேரங்களில் கடவுள் நாமத்தை உச்சரிப்பவர்களிடம், அவர்கள் விழித்திருக்கிறார்களா என்று பாபா விசாரித்தார்.

அவர்களில் ஒருவராக இருந்த ஸவக் கொத்வாலிடம் பாபா, **"விழிப்புடன் இருங்கள் அல்லது நாம் இருவரும் சிக்கலில் வீழ்வோம்!"** என்றார்.

ஒருவர் கேட்டார், "பாபா, மீண்டும் எப்போது எங்களை இங்கு (மெஹராபாத்திற்கு) அழைப்பீர்கள்?"

**"ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் இந்த உடல் உயிர் பிழைத்தால், நாம் அதைப் பற்றி சிந்திக்கலாம்"** என்று பாபா பதிலளித்தார்,

சிரித்துக்கொண்டே பாபா, "**சாதுக்களின் ஆசீர்வாதத்துடனும், நீலுவின் மருந்து மாத்திரைகளுடனும், நான் உடலைக் கைவிடமாட்டேன். ஆனால் இதற்காக, சகன், நீலுவுக்கு பாசந்தியைத்** (இனிப்புப் பண்டம்) **தாராளமாக வழங்க வேண்டும்!**"

இறுதியில், நிகழ்ச்சித் தலைவர்களுக்கு நினைவூட்டினார்: "**எனவே, உங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல நான் ஒப்புக்கொள்கிறேன். என்னுடன் சுமார் 25 பேர் வருவார்கள். அவர்களின் ரயில் கட்டணத்தை நீங்கள் செலுத்த வேண்டியதில்லை, ஆனால் நீங்கள் அவர்களுக்குத் தேவையான எளிய தங்கும் வசதி மற்றும் உணவு வழங்க வேண்டும்.**

"**மீண்டும் ஒரு விஷயம்: நான் தங்கும் இல்லம் அமைதியான சூழல் நிறைந்த இடத்தில் இருக்க வேண்டும், தனிமைப்படுத்தப்பட்ட இடமாக இருந்தாலும் பரவாயில்லை. நான் இரவில் ஓய்வு பெறும்போது முற்றிலும் அமைதியாக, வீட்டிற்கு வெளியே எந்தவிதமான தொந்தரவும் இல்லாமல் இருக்க வேண்டும். அனல் பறக்கும் வாழ்வு மிகவும் வித்தியாசமான ஒன்று. இதற்கும், இந்த தரிசன நிகழ்ச்சிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.**

"**நான் சொல்வதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இது வெறும் தெய்வீக கேலிக்கூத்து அல்ல. அனல் பறக்கும் வாழ்வில், பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை சரியாக பின்பற்றவில்லை என்றால், அது என்னை சிக்கலில் தள்ளும். எனவே இந்த மூன்று நிபந்தனைகளையும் கடைப்பிடிக்க நீங்கள் 100 சதவிகிதம் முயற்சி செய்ய வேண்டும்**"

மறுநாள் காலை மெஹராபாத்திலிருந்து புறப்படுவதற்கு பாபாவிடம் அனுமதி கேட்டிருந்தவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர், ஆனால் இதர அனைவரும் மறுநாள் பாபா, மெஹராஸாத் செல்லும் வரை தங்கியிருந்தனர்.

1952 நவம்பர், டிசம்பர் மற்றும் 1953 ஜனவரி மாத வெகுஜன தரிசன நிகழ்ச்சிகளின் போது பார்வையிட வேண்டிய இடங்களுக்கான அட்டவணை, அந்தந்த இடங்களின் பொறுப்பாளர்களோடு பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது:

**நவம்பர் 18 முதல் 28 வரை - ஹமிர்பூர்**; கேஷவ் நிகம், கயா பிரசாத் கரே மற்றும் பலர்.

**நவம்பர் 29 முதல் டிசம்பர் 4 வரை - டெல்லி**; ஹர்ஜீவன் லால், வாஸ் தேவ் கெய்ன்

(டிசம்பர் 5 முதல் 20 வரை மெஹராஸாத்)

**டிசம்பர் 21 முதல் 25 வரை - அமராவதி**; டாக்டர் தேஷ்முக்

**டிசம்பர் 25 முதல் 31 வரை - நாக்பூர்**; ஷெர்லேக்கர், போஃபலிக்கு உதவ பாபாதாஸ் (அங்கும் ஸாவ்னேரிலும்)

**31 டிசம்பர் முதல் ஜனவரி 1 வரை - ஸாவ்னேர்**

(ஜனவரி 2 முதல் 17 வரை மெஹராஸாத்)

**ஜனவரி 18 முதல் 28 வரை - மேற்கு கோதாவரி**; டாக்டர் தனபதி ராவ் மற்றும் ஒய். ரங்கா ராவ்.

1952, நவம்பர் 9 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா காலை சுமார் 8 மணிக்கு மெஹராபாத் வந்து, நேராக தனது அறையை நோக்கி நடந்தார். காலை 10:00 மணிக்கு மண்டபத்திற்கு வரவிருப்பதாக அவர் கூறினார்:

**நான் பலருக்கு அனுப்பியிருந்த விண்ணப்பங்களில், அவர்களின் பணம், சொத்து, சேவை மற்றும் வாழ்க்கையை எனக்காக அர்ப்பணிப்பது பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.**

**அவர்களில் பலர் விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து, பட்டியல் தயார் செய்து திருப்பி அனுப்பியுள்ளனர். இப்போது அந்தப் பட்டியல் வாசிக்கப்படும். ஆனால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள், உங்களால் முடிந்ததைச் செய்யத் தயாராக இருக்கிறீர்கள். ஆனால் நான் சொல்கிறேன், உங்களால் நிதி விஷயத்தில் எதுவும் செய்ய முடியாவிட்டால், அதைப் பற்றி சிறிதும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்புதான் எனக்குத் தேவை; இது எனது அனல் பறக்கும் வாழ்வுக்கு இன்றியமையாதது. ஒருவரால் நிதி வழங்க இயலாவிட்டால், அவர் கவலைப்படவேண்டாம். நீங்கள் வசதிக்கேற்ப முடிந்ததை வழங்குங்கள்.**

**பணமும் அதிகாரமும், அவற்றுடன் இணைந்த ஆசைகளும் ஆன்மீக வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. எனவே உங்களால் வழங்க முடியாவிட்டால், கவலைப்பட வேண்டாம். உங்கள் விண்ணப்பங்களில் நீங்கள் "ஆம்" என்று கையொப்பமிட்டிருந்தாலும், இப்போது வழங்க இயலாது என்று நீங்கள் உணர்ந்தால், இந்த வாக்குறுதியிலிருந்து நான் உங்களை விடுவிக்கிறேன். இப்போது இங்கே வாசிக்கப்படும் பட்டியலில், தங்கள் பணம் அல்லது சொத்தை அல்லது இரண்டையும் அர்ப்பணித்தவர்களின் பெயர்கள் இருக்கும். சொத்து எனக்கு வேண்டாம்; எனது பணிக்கு பணம் வேண்டும். எனவே விண்ணப்பங்களை பூர்த்தி செய்தவர்கள் மெஹர்ஜி அல்லது நரிமனிடம் பத்து ரூபாய் வழங்கலாம். சிலர் மாதத் தவணையாக செலுத்துவதாக எழுதியுள்ளனர். ஆனால் 1952, நவம்பர் 15 முதல் 1953, ஏப்ரல் இறுதி வரை, நான் பணத்தை ஏற்க மாட்டேன் என்பதால், ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு பணத்தேவை இராது! எனவே ஒருவரால் வழங்க முடியும் அனைத்தையும் நவம்பர் 15ஆம் தேதிக்கு முன் வழங்க வேண்டும்.**

**நான் உங்கள் அனைவரையும் 100 சதவிகிதம் நேசிக்கிறேன், இந்த நேரத்தில் வழங்க இயலாது என்று நினைப்பவர்கள், பின்னர் ஆதிக்குத் தொகையை அனுப்பலாம், ஆனால் மெஹர்ஜியிடம் எவ்வளவு பணம் என்பதை மட்டும் இப்போதே சொல்லிவிடுங்கள், அவர் நவம்பர் 15க்கு முன்**

தொகையை எனக்கு வழங்குவார். மேலும், வெகுஜன தரிசன நிகழ்ச்சிகளுக்காக நான் எங்குச் சென்றாலும், நான் பணத்தை ஏற்க முடிவு செய்துள்ளேன், எனது பணிக்காக அந்த குறிப்பிட்ட இடத்தின் பொறுப்பாளரிடம் பணத்தை ஒப்படைப்பேன்.

நான் பணக்காரர்களில் பணக்காரன், ஏழைகளில் ஏழை என்று அதிகாரத்துடன் சொல்ல முடியும். இது வெறும் சம்பிரதாயமான கூற்று அல்லது அறிக்கை அல்ல - இது உண்மையிலும் உண்மை.

நான் மௌனம் தொடங்கிய நாள் முதல் இன்று வரை, மஸ்துகளுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்ததைத் தவிர, பணத்தைத் தொட்டதில்லை. கடந்த 27 வருடங்களில் ரூ 80 இலட்சம் (8,000,000) எனது கை வழியாகச் சென்றுள்ளதாக, என்னுடன் இருந்து கணக்கு வழக்குகளைப் பராமரித்த மண்டலி கூறுகின்றனர்.

இப்போது என்னிடம் ஒரு நயா பைசா கூட இல்லை. எனவே, பணம் பயனுள்ளதாகவும், தீங்கு விளைவிப்பதாகவும் இருக்கலாம், ஆனால் பரிபூரண குருநாதருடன் எந்தத் தொடர்பும் இல்லாத ஆன்மீக ஆர்வலர்களுக்கு, முழுமையான துறவு முற்றிலும் அவசியம்.

வெவ்வேறு குருநாதர்கள் வேறு வேறு முறைகளைக் கையாளுகின்றனர். முழுநிறை ஆளுமை மிக்க சாய் பாபா, பணம் வசூலிப்பதில் வித்தியாசமான முறையைக் கையாண்டார். அவரது தர்பாருக்குள் நுழைபவர் அனைவரது சட்டைப் பையிலும் இருந்த பணத்தைக் கொடுக்கும்படிக் கேட்டார். இந்தப் பணம் அதே மாலையில் பிறருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது, அதில் பெரும்பாலும், நாள் முழுவதும் அவர் அருகில் அமர்ந்திருந்த பர்ரா பாபாவுக்குச் சென்றது; அவர் அந்தப் பணத்தில் தொடர்ந்து உணவு உண்டு, மிகவும் பருமனாகக் காணப்பட்டார். சில நேரங்களில், சாய் பாபா ஒரு நபரை தனது சட்டைப் பையில் சிறிதளவு பணமும் வைத்துக்கொள்ள அனுமதிக்க மாட்டார்; திரும்பி ரயிலில் பயணம் செய்யவும் கட்டணம் இல்லாத அளவுக்குத் திண்டாட்டம். ஆனால், அவரை நம்பியவர்கள் ஒருபோதும் தளர்ந்ததில்லை, சந்தேகக் கண்களால் பார்த்ததில்லை; நம்பிக்கை இல்லாதவர்களால் அவருடைய வழிமுறைகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலை.

ஒரு முறை கோவிலில், அப்போது உணவு உண்ணாமலும், தண்ணீர் அருந்தாமலும் இருந்த உபாஸனி மஹாராஜிடம், ‘சாய் பாபா ஏன் பக்தர்களிடமிருந்து பணம் சேகரித்து, அதே நாள் மாலையில் பிறருக்கு விநியோகித்ததோடு, அதில் பெரும்பாலான பாகத்தை பர்ரா பாபாவுக்கு வழங்கினார்?’ என்றும் ஒருவர் கேட்டார். உபாஸனி மஹாராஜ பதிலளித்தார்: சாய்பாபா மக்களிடமிருந்து அசுத்தத்தைத் சேகரித்து, மிகப்பெரிய வயிற்றைக்

**கொண்ட பர்ரா பாபாவின் வயிற்றில் குவித்தார். மக்கள் இந்த முறையைப் புரிந்து கொள்ளத் தவறியதால், என்றென்றும், சாய் பாபா இவ்வண்ணம் பணம் வசூலிப்பது குறித்து தேவையில்லாத சந்தேகத்தைக் கொண்டிருந்தனர்.**

**இப்போது, பூனாவில் அதே காலகட்டத்தில் வாழ்ந்துவந்த, ஆன்மீக பேரரசர் பாபாஜான் முற்றிலும் மாறுபட்ட முறையைக் கையாண்டார். இந்த இறை-பெண்மணியைப் பார்க்க வந்தவர்களுக்கு தெரியும், அவர் ஒரு மரத்தின் கீழ், கூரையும் கொட்டகையும் இல்லாமல் அமர்ந்திருந்தார். மிகவும் வயதானவராக இருந்தாலும் சௌந்தர்யமான தோற்றம் கொண்டவர். ஆனால் குளிர் மற்றும் கோடை காலம் முழுவதும், இரவும் பகலும் விழித்திருந்து, அதிகாலை 4:00 முதல் 5:00 மணிவரை மட்டுமே அவர் மரத்தடியில் சாய்ந்து ஓய்வெடுத்தார். இரவு முழுவதும் குஸ்தாஜியை அவர் அருகில் அமர வைத்தேன். எவரேனும் பணம் கொடுக்கும் நோக்கத்துடன் அங்கு வந்தால், நெருப்பிலிருந்து எரியும் குச்சியைக் கையில் ஏந்திக்கொண்டு அவர் பின்னால் ஓடுவதை குஸ்தாஜி கவனித்தார்! இதனால், இயற்கையாகவே, வந்தவர் ஓடி மறைவது வழக்கம். இதுவே பணம் தொடர்பான பாபாஜானின் முறை.**

**எனவே ஷிர்டியில் சாய்பாபா பணம் கேட்டு வாங்கிய அதே வேளையில், பூனாவில் பாபாஜான் பணம் கொடுக்க வருபவர்களை விரட்டியடித்தார்! இருவரும் பரிபூரணமான சத்குருக்கள், ஆனால், அவர்கள் பணிபுரியும் விதம் வித்தியாசமாக இருந்தது.**

**இன்று நான் மிக்க மகிழ்ச்சியாக உணர்கிறேன், ஏனென்றால், எனது ஆழ் இதயத்தில் இணைந்திருந்த, மேலும் இப்போது என்னுள் உறைந்திருக்கும் இந்த மூன்று மேன்மைமிகு குருநாதர்களை நினைவுகூரும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. என்னை நேசிப்பவர்கள் இந்தப் பரிபூரண குருநாதர்களுக்கு நான் வழங்கும் மரியாதை மற்றும் வணக்கத்தில் என்னுடன் இணைய வேண்டும்.**

பாபாவுடன் அனைத்து அன்பர்களும் எழுந்து நின்று, இந்த மூன்று குருநாதர்களையும் பயபக்தியுடன் வணங்கினர்.

பாபா, மினூ காரஸிடம், தமது பணம் அல்லது சொத்து அல்லது இரண்டையும் பாபாவிற்கு அர்ப்பணித்த நபர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வாசிக்குமாறு அறிவுறுத்தி, அதற்கு முன்பு, பாபா கூறினார், **"நேற்று, நான் ஓய்வு பெறும் அறையில்** (நேர்காணல் அறை) **மண்டலியுடன், பணத்தை ஏற்றுக்கொள்வது பற்றி விவாதித்தேன். புது வாழ்வு நிபந்தனைகளின்படி, நான் பணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆதலால், 4,000 ரூபாயை வழங்க ஹர்ஜீவான் லால் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியபோது, நான்**

**தயங்கினேன். இப்போது, பணத்தை வாங்குவதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், உங்கள் பெயர் பட்டியலில் இல்லாவிட்டாலும், இந்த அன்பளிப்பில் நீங்கள் பங்கெடுத்ததன் அடையாளமாக, குறைந்தபட்சம் நீங்கள் ஒரு ரூபாயை வழங்குவதன் மூலம் அனைவரும் இதைப் பகிர்ந்து கொண்டதாக உணரலாம்**."

இந்நிலையில், பாபா, அவர்கள் தம் இடங்களுக்குச் செல்லும் போது, அவருக்கும் அவருடன் இருப்பவர்களுக்கும் நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கும் என்ற எண்ணத்தில், மேலும் பங்களிப்புகளை வழங்க நினைக்க வேண்டாம் என்று பாபா நிகழ்ச்சித் தலைவர்களுக்கு ஒரு சிறப்பு குறிப்பை வழங்கினார். பாபா மெஹர்ஜியிடம் கூறினார், "**இப்போது நீங்கள் விரும்பும் போது உங்கள் அலுவலகத்தை முன் வராந்தாவில் திறக்கலாம்**."

இந்தப் பண விவகாரத்தை நிறைவு செய்ததும் பாபா மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றி, பூனா பஜன் குழுவினரை அரை மணி நேரம் பாடக் கோரினார். "**அனைவரும் மகிழ்ச்சியாகவும் பசியாகவும் இருக்கும் வகையில் பாடுங்கள்**!" அரை மணி நேரம், அனைவரும் அன்பிற்குரியவர் முன்பாகப் பாடிய அருமையான பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர்; பாபாவும் அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். அதன் பிறகு, பாபா தனது அறைக்குச் சென்றார்.

நண்பகலில், பாபா, அவரது எதிர்கால தரிசன நிகழ்ச்சிகள் தொடர்பாக பல அன்பர்களுக்கு பேட்டி அளித்தார். முழு நேரமும், அவருடன் தனிப்பட்ட நேர்காணலுக்காக பலர் வெளியே நின்று கொண்டிருந்தனர்.

கேஷவ் நிக்கமின் சகோதரர் முகுந்த்லால், தொழுநோயால் பாதிக்கப்பட்ட அவரும் மெஹராபாத்திற்கு வருகை தந்தார்; அவரது உடலிலிருந்து துர்நாற்றம் வீசியது. அவர் உயிர் பிழைப்பார் என்ற நம்பிக்கையை மருத்துவர்கள் கைவிட்டதால், கடைசியாக பாபாவை தரிசனம் செய்ய வந்திருந்தார். பாபா அவரை சந்தித்து, அவருடனான நேர்காணலுக்குப் பிறகு, குமாரிடம் ஒரு வாழைப்பழத்தைப் பிரசாதமாக வழங்கி, அதை முகுந்த்லாலுக்கு வழங்குமாறும், அதை 40 நாட்களுக்குப் பின்னர், உலர்ந்திருந்தாலும் (தோல் உட்பட!) உண்ணவேண்டும் என்றும் அறிவுறுத்தினார். 40 நாட்களுக்குப் பின்னர் அதை உண்ணும்படி பாபா ஏன் அவருக்கு அறிவுறுத்தினார்? அவரே தலைசிறந்த மனோதத்துவ நிபுணர், முகுந்த் ஒவ்வொரு நாளும், 40 நாட்களுக்கு அவரைத் தவறாமல் நினைவில் கொள்வார் என்பதை பாபா அறிந்திருந்தார்: 'பாபாவின் பிரசாதத்தை உண்ண இத்தனை நாட்களே உள்ளன' என்று எண்ணிக்கொண்டிருப்பார்; மேலும், அதிசயமாக, சில நாட்களில் முகுந்த் முழுமையாக குணமடைந்தார்.

நானா கேரின் மூத்த சகோதரர் **வினு** முதன்முறையாக மெஹராபாத் வந்திருந்தார். அவரைப் பார்த்ததும், பாபா, நானாவிடம், "**என்ன ஓர் அற்புதமான ஆன்மா! நானா, உங்கள் சகோதரர் மிகவும் நல்ல மனிதர், அவரை நான் மிகவும் விரும்புகிறேன்**" என்று கூறினார்.

பாபா பிற்பகல் 3:40 மணிக்கு மண்டபத்திற்குத் திரும்பிச் சென்று, அனைவரையும் ஒன்றுசேருமாறு கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சித் தலைவர்கள் தத்தமது குழுக்களுடன் அமரும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கத் தொடங்கினார்:

**எனது அனல் பறக்கும் வாழ்வு, ஒரு வேடிக்கை நிகழ்வு அல்ல. இந்தக் காலகட்டத்தில், நான் முழுப் பிரபஞ்சத்திற்காகவும் உழைக்க வேண்டும், மேலும் என்னை அல்லது இந்த உலகளாவிய குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் நான் குறியாக இருக்கிறேன். ஆங்காங்கே வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள் நடைபெறும். மக்கள் வந்து என்னை வணங்குவதில் எனக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை. மாறாக, உங்கள் அனைவரையும் வணங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வெகுஜன தரிசன நிகழ்ச்சிகளிலிருந்து அனல் பறக்கும் வாழ்வு முற்றிலும் வேறுபட்டது. இந்த நிகழ்ச்சிகள் அனல் பறக்கும் வாழ்வில் எனது பணியில் குறுக்கிடுவதானால் நான் அவற்றை ரத்து செய்யவும் தயங்கமாட்டேன்.**

**இன்று, மதியம், தனிநபர் நேர்காணலுக்கு பலர் வரிசையில் நிற்கும்போது, தரிசன நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும் இடங்களில் இதுபோன்ற இடையூறுகள் பெரிய அளவில் ஏற்படும் என்று நான் உணரத் தொடங்கினேன். இவை அனைத்தும் என் மீதான உங்கள் அன்பால் நிகழ்வது என்று எனக்குத் தெரியும்; இது இயல்பானது. ஆனால் இன்று எனது பணியின் முக்கியத்துவத்தை அறிந்த உங்களிடையே இது போன்ற குழப்பங்கள் ஏற்படும் போது, நான் உங்கள் இடங்களுக்கு தரிசன நிகழ்ச்சிகளுக்கு வரும்வேளையில் இப்படியெல்லாம் நடக்காது என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?**

**கவனமாக ஒழுங்கமைக்கும் விதத்தில் ஒரு முழுமையான உத்தரவாதம் எனக்கு வேண்டும், மேலும் எவரும் என்னுடன் தனிப்பட்ட முறையில் நேர்காணல்களை எதிர்பார்க்கக்கூடாது என்பதை அனைவருக்கும் தெரிவிப்பது நிகழ்ச்சித் தலைவர்களின் கடமையாகும். நான் நித்தியமாக பிணைக்கப்பட்டிருந்தாலும், நான் நித்தியமாக சுதந்திரமாகவும் இருக்கிறேன். நான் விரும்பியபடி நிகழ்ச்சிகள் நடக்கவில்லை என்ற தருணத்தில், நான் உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறுவேன். நான் முழுப் பிரபஞ்சத்திற்காகவும் என்னை எரிக்கப் போகிறேன், எனவே நான் அர்த்தமற்ற விஷயங்களைப் பற்றி கேட்க விரும்பவில்லை.**

ஆனால், இப்போதைய கேள்வி என்னவென்றால்: உங்களுக்கிடையில் உங்களால் நிர்வகிக்க முடியாத போது, வெகு ஜனங்களுக்கு எவ்வாறு உத்தரவாதம் அளிக்க முடியும்? எனது பிரகடனத்தில் நேற்று அறிவித்தது போல், என்னுடன் அனல் பறக்கும் வாழ்வில் இருப்பவர்கள், எல்லாவிதமான இன்னல்களையும், மன விரக்தியையும், உடல் உபாதைகளையும், தாக்குதல்களையும், ஏளனங்களையும் சந்திக்க நேரிடும் என்பதை நான் ஏற்கனவே உங்களிடம் கூறியுள்ளேன். இவை அனைத்தும் அனல் பறக்கும் வாழ்வின் பக்க விளைவுகள். அவர்கள் என் அனல் பறக்கும் வாழ்வில் தலையிட மாட்டார்கள், ஆனால் இன்று நான் உணர்ந்த இடையூறு நிச்சயமாக அனல் பறக்கும் வாழ்வுக்கான எனது பணியில் தலையிடும்.

எனவே, இந்த விஷயத்தைக் குறித்து அனைத்து நிகழ்ச்சித் தலைவர்களையும் நான் எச்சரிக்கிறேன். தனிப்பட்ட நேர்காணல்கள் மற்றும் சந்திப்புகள் வழங்கப்பட மாட்டாது. நான் உங்கள் இடங்களுக்கு வருகிறேன். நீங்கள் விரும்பும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல்லலாம். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து தரிசனம் செய்யட்டும். அவர்கள் பஜனை, கீர்த்தனை, ஆர்த்திகளை நிகழ்த்தட்டும். நான் அவ்வாறு செய்ய விரும்பும்போது சொற்பொழிவுகளையும் செய்திகளையும் வழங்குவேன். ஆனால் எனது அறிவுரைகளுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதை நான் கண்டுகொள்ளும் வேளையில், நான் அந்த இடத்தை விட்டு வெளியேறுவது, உங்களை அதிருப்திக்குள்ளாக்கும்.

இதை நீங்கள் கவனிக்க வேண்டும், 1952, நவம்பர் 15 முதல், நான் வெகுஜன தரிசன நிகழ்ச்சிகளுக்காக வெளியே செல்லவில்லை, ஆனால் எனது அனல் பறக்கும் வாழ்வுக்காகச் செல்கிறேன். ஆதலால், நான் உங்களிடம் கேட்டுக்கொண்டதை எல்லாம் உங்களால் துல்லியமாகக் கண்காணிக்க முடியுமா என்று யோசித்து இப்போது சொல்லுங்கள். ஆனால், இப்போதைய கேள்வி என்னவென்றால்: அன்பின் மூலம் இதுபோன்ற விஷயங்களில் ஈடுபடும் நபர்களுக்கு நீங்கள் எப்படி உத்தரவாதம் அளிக்க முடியும்? நீங்கள் எப்படி அவர்களுக்கு உத்தரவாதமாக நிற்க முடியும்? இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், நான் வேலை செய்ய விரும்பும் வேளையில், அன்பான உள்ளங்களே, உங்களில் எவருக்கும் அதைப் பற்றி தெரியாது. எனக்கு, தனிமை மிகவும் அவசியம். வெகு ஜனங்கள் ஒவ்வொருவராக என்னிடம் வந்து கொண்டே இருக்கும் வேளையில், நான் அவர்களுக்கு விளக்கிக் கொண்டே இருந்தால், அது வேறு விஷயம், இது அனல் பறக்கும் வாழ்வில் சாத்தியமில்லை. எனவே மீண்டும் நான் சொல்கிறேன், இதற்குத் தயாராக இருங்கள், நான் திட்டமிட்டது

**சரியல்ல என்று உணர்ந்தால், நான் உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறுவேன்.**

**எனக்குத் தெரியும், விதிமுறைப்படி, குருநாதர்கள் அன்பின் வெளிப்பாட்டைத் தடுக்கக்கூடாது. ஆம், அதுதான் விதி. ஆயிரக்கணக்கானோர் வந்து தங்கள் அன்பை வெளிப்படுத்தலாம், ஆனால் என்னுடைய இந்த அனல் பறக்கும் வாழ்வில் வேறு வழியில்லை.**

**சில இடங்களில் இந்த அறிவுறுத்தல்கள் அனைத்தையும் நிர்வகிப்பது கடினமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இது இயற்கையானது, ஆனால் அது எனது பணியைப் பாழாக்கிவிடும். இக்காரணத்தால் நான் சொல்ல நினைத்ததை சொல்லிவிட்டேன்.**

இதையெல்லாம் உன்னிப்புடன் கவனித்த நிகழ்ச்சித் தலைவர்கள், பாபா வழங்கிய அனைத்து அறிவுரைகளையும் கண்டிப்பாக, முழு மனதுடன் கடைப்பிடிப்பதாக உறுதியளித்தனர். இதைக் கேட்ட பாபா மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, "**அப்படியானால் நான் வருகிறேன்; ஆனால் எனது பணிக்காக நான் எனது வார்த்தைகளை சமரசம் செய்ய மாட்டேன்**" என்று பதிலளித்தார்.

நவம்பர் 1ஆம் நாள், பாபா வழங்கிய இறை ஞானம் குறித்த சொற்பொழிவை ராம்ஜூவிடம் வாசிக்குமாறு அவர் கூறினார். பாபாவின் விளக்கக் கருத்துக்களையும் சேர்த்து அதன் ஒரு பகுதியை ராம்ஜூ முடித்ததும், பாபா, படிப்பதை நிறுத்தக் கூறி, "**உங்கள் இடத்தில் நான் இருந்திருந்தால், 'கற்பனை எங்கு முடிவடைகிறதோ, அங்கு இறை ஞானம் தொடங்குகிறது' எனும் போது, ஏன் இந்தத் தேவையற்ற வார்த்தைகளைக் கேட்கும் தலைவலி?' என்று நான் கேட்டிருப்பேன்." இப்படிப்பட்ட தலைவலி காலங்காலமாக அதிகரித்துக் கொண்டே போனால், ஒருவர் பைத்தியமாகி விடுவார் அல்லது இறை ஞானி ஆகிவிடுவார் என்பதுதான் உண்மை!**"

சொற்பொழிவு வாசிப்பதை நிறுத்தக் கூறி, மெஹராபாத் மேல் மலையில் அமைந்த குவிமாடத்தைப் (அவரது எதிர்கால சமாதி) பார்வையிட பாபா அனைவருக்கும் அனுமதி வழங்கினார். பாபா, ஐந்து மாதங்களுக்கு மேல் தன்னை அதில் அடைத்து வைத்திருந்ததாகவும், அந்த நேரத்தில் அவர் தேநீர் மற்றும் தண்ணீர் மட்டுமே அருந்தி வந்ததாகவும் கூறினார். மேலும், "**இந்த இடம் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது, நான் எனது பௌதீக உடலைக் கைவிடும் போது, அதை அங்கேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று நான் என் மண்டலிக்கு உத்தரவிட்டேன்.**"

பாபாவின் அழைப்பை ஏற்று வந்திருந்த அனைவரின் அன்பிற்கும், மீண்டும் ஒருமுறை பாபா தலைவணங்கி, "**இப்போதைய பணி முடிந்துவிட்டது, திரும்பிச் செல்ல விரும்புபவர்கள் இன்றிரவு ரயில்களில் புறப்படலாம்**" என்று கூறி, பாபா தனது அறைக்குச் செல்ல எழுந்து நின்றார். அன்று இரவே

மெஹராபாத்தை விட்டு பெரும்பாலானோர் புறப்படவிருந்ததால், பாபாவின் நெருங்கிய சகவாசம் மீண்டும் எப்பொழுது கிடைக்கும் என்று உறுதியாகத் தெரியாததால், அனைவரும் கனத்த இதயத்துடன் பாபா புறப்படுவதைப் பார்த்த வண்ணம் நின்றனர்.

மறுநாள் காலை, 1952, நவம்பர் 10, திங்கட்கிழமை, பாபா சுமார் 8:00 மணியளவில் மெஹராபாத் வந்தார். அழைக்கப்பட்டவர்களில் பலர் அன்று காலையில் தங்கும்படி, குறிப்பாகக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். பாபா பல நேர்காணல்களை வழங்கி, பின்பு மண்டபத்திற்கு வந்து கூறினார், "**இப்போது, பிம்பல்காவ்மில் எனக்கு வேலை இருப்பதால், நவம்பர் 14ஆம் தேதி மெஹராபாத் வருவேன். கால் எலும்புகள் நன்றாக இணைந்துள்ளனவா என்பதை அறிய டான் எனது காலின் எக்ஸ்ரே எடுக்க விரும்புகிறார். மேலும், நானும் சில வேலைகளைச் செய்ய வேண்டும்.**"

மெஹர்ஜி, நரிமன், சதாஷிவ் பாட்டீல், பிளீடர், மினூ காரஸ், பப்பா ஜெஸவாலா ஆகியோர் தத்தமது இல்லங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஸுலே, பண்டோபா, மாதவ் ராவ், முரளி ஆகியோரை 14ஆம் நாள் மதியம் மெஹராபாத்திலிருந்து புறப்படும்படி பாபா அறிவுறுத்தினார். சுற்றுப்பயணத்தில் அவருடன் செல்ல இருப்பவர்களின் பெயர்களில் சில மாற்றங்களைச் செய்த பிறகு, பாபா கூறினார்:

**இப்போது, உங்கள் அனைவருக்கும் நான் கூற விரும்புவது என்னவென்றால், நவம்பர் 15 முதல் ஏப்ரல் இறுதி வரை, எனது அனல் பறக்கும் வாழ்வு என்னுள் இருக்கும் - அதாவது, உள்ளளவில் அனல் பிழம்பு மற்றும் வெளியளவில் அவமானம், அவதூறுகள், உடல் உபாதைகள், விரக்தி, தாக்குதல்கள், வெகுஜனக் கூட்டங்கள் மற்றும் பஜன்-கீர்த்தனை நிகழ்ச்சிகள். எனவே எனது மகிமையிலும், வீழ்ச்சியிலும் பங்கு கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ஆனால் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நான் சொல்வதை நீங்கள் செய்ய வேண்டும். ஆயிரமாயிரம் வெகுஜன மக்கள் வந்து என் பாதங்களைத் தொட்டு பஜனைகள் மற்றும் கீர்த்தனைகளை நிகழ்த்தும் வேளையில் நீங்கள் மகிழ்ச்சியுடன் பங்கேற்கலாம். ஆனால் சில இடங்களில் எனக்கும் எனது பணிக்கும் எதிர்ப்பும் அவமானமும் ஏற்பட்டால், எனக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அதிலும் பங்குகொள்ள தயாராக இருங்கள்.**

**என்னுடன் நீண்ட காலம் இருப்பவர்கள்** (மண்டலி) **எனது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் குறிப்பாக, கவனமாக இருக்க வேண்டும்.**

அனைவரும் தத்தமது இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றதும், பாபா மண்டலிக்கு வெவ்வேறு கடமைகளை வழங்கினார். பெண்டு பயணத்தின் மேலாளராக நியமிக்கப்பட்டார்; சதாஷிவ், உணவு பொறுப்பாளர்; அலோபா,

பயணப் பெட்டி படுக்கைகளின் பொறுப்பாளர்; குமார், குழுவின் தளபதி; சகன், பாபாவின் உணவை சமைக்கவும், இரவு பாதுகாவலராகவும் இருக்க வேண்டும்; எரச், பாபாவின் தனிப்பட்ட உதவியாளர்; நானா கேர், கைக்கோபாத்தின் உதவியாளர்; ராம்ஜூ, தினசரி குறிப்புகளைக் கையாளுபவர்; மெஹர்ஜி, நரிமன், டாக்கே மூவரும், பாபாவின் தோழர்கள்; மேலும் விஷ்ணு, கணக்காளர். பூனாவிலிருந்து காடேக்கர், மதுசூதன், தாடே ஆகியோர் பாபாவுடன் செல்ல அழைக்கப்பட்டவர்கள்.

நவம்பர் 14 அன்று மெஹராஸாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா செய்த 'பணிகளில்' ஒன்று, உறுதியளித்தபடி, மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபி சாசனத்தில் கையெழுத்திடுவதாகும். ஒரு சந்தர்ப்பத்தில், சாசனம் தயாரிக்கப்படும் வேளையில், பாபா இந்தத் தொலைதந்தியை ஐவி டியூஸுக்கு அனுப்பினார்: "**எனது ஸூஃபி சாசனத்தில் எழுத்துப்பிழை அல்லது வாக்கிய அமைப்பைத் தவிர எதுவும் மாற்றப்படக்கூடாது**."

அமெரிக்காவில் நடந்த கார் விபத்துக்குப் பிறகு, பாபாவின் இடது கால் இன்னும் முழுமையாக குணமடையவில்லை. காலின் தனித்துவமான வார்ப்பு ஒன்று உருவாக்கப்பட்டது, ஆனால் அவர் அதைப் பயன்படுத்தவில்லை. பாபாவின் பொது உடல்நிலையும் சீராக இல்லை: அவர் தொண்டை வலியுடன் காய்ச்சலால் அவதிப்பட்டார், மேலும் அடிவயிற்றில் ஓர் அசௌகரியமான உணர்வு இருப்பதாக அடிக்கடி புகார் செய்தார். ஸரோஷ் அவரையும் டாக்டர் டானையும் மற்றுமொரு எக்ஸ்ரே எடுப்பதற்காக நவம்பர் 11 அன்று கேட்கர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். பூனாவிலிருந்து வந்த ஆதி ஜூனியர், ஸரோஷுடன் மெஹராஸாத்துக்குச் சென்றார்.

மனிதகுலத்தை நெருப்புப் பெருங்கடலில் மூழ்கடிக்கும் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர், அவரது உடல்நிலை குறித்த இந்த சுற்றறிக்கை இந்தியா முழுவதும் வெளியிடப்பட்டது:

'மூன்றாம் கீழ்' என்றழைக்கப்பட்ட எலும்பு முறிவு, குணமடைய நீண்ட நாட்கள் பிடிக்கும் என்பது அனைவரும் அறிந்ததே, மேலும் பாபாவின் காலில் ஏற்பட்ட முறிவு இந்த உண்மைக்கு விதிவிலக்கல்ல.

மெஹராஸாத், பிம்பல்காவ்ம், அஹமதுநகருக்குத் திரும்பி வந்ததிலிலிருந்து, காலில் தோல் காய்ப்பு மற்றும் எலும்பின் சீரான இணைப்பு ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கண்டறிய, பாபாவின் எக்ஸ்ரே அவ்வப்போது எடுக்கப்பட்டது. கடைசியாக எடுக்கப்பட்ட எக்ஸ்ரே, உடைந்த பகுதியில் முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையேயான எலும்பின் இணைப்பு சீரானதை வெளிப்படுத்தவில்லை. இந்த நிலை தொடர்ந்தால், மீண்டும் முழங்காலுக்குக் கீழே பிளாஸ்டர் தேவைப்படலாம் என்று மருத்துவர்

கூறுகிறார்; எனவே, இந்த விறுவிறுப்பான அனல் பறக்கும் வாழ்வின் நிகழ்ச்சிகளுக்கிடையே, நேரம் கிடைக்கும் போது, பாபா தனது காலில் உள்ள எலும்பின் முன்னேற்றம் குறித்து எக்ஸ்ரே மற்றும் ஆலோசனைகளுக்காக அஹமதுநகர் திரும்பி வருவார்.

பிம்பல்காவ்மிற்கு வந்தாலும், வராவிட்டாலும், ஏப்ரல் இறுதி வரை அவருடைய அனல் பறக்கும் வாழ்வின் பணி தொடரும் என்பதை அனைவரும் அறிய வேண்டும் என பாபா விரும்புகிறார்.

இந்தக் காலக்கட்டத்தில், குறிப்பாக அவர் பிம்பல்காவ்மில் இருக்கும்போது, தனிப்பட்ட குறைகளையோ, பிரச்சினைகளையோ அவர் முன் வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எவரும் அவரைத் தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டாம். அனல் பறக்கும் வாழ்வின் உச்சக்கட்டம் ஏப்ரல் மாதத்தில் இருக்கும் ஆதலால், திட்டமிட்டபடி பாபா தனது பணியைச் செய்ய சுதந்திரமாக இருக்க வேண்டும்.

# ஹமிர்பூர் தரிசனம்
**(Hamirpur Darshan)**

1952, **நவம்பர்** 14 வெள்ளிக்கிழமை நண்பகலில், மெஹர் பாபா மெஹராஸாத்திலிருந்து மெஹராபாத்தை நோக்கி பயணத்தைத் தொடங்கினார். ஸரோஷ் அவரை அழைத்துச் சென்றார்; பாபா, ஸரோஷ் மோட்டார்ஸில் சிறிது நேரம் நின்ற வேளையில், குல்மாய் அவரை அங்கு சந்தித்தார்.

அவருடன் 21 நபர்கள் பயணம் செய்ய, கிருஷ்ணாஜி குழுவுடன் ஸக்கோரியில் இணைய இருந்தார்.

மெஹராபாத்தில், 'பாபா உடல்நலம் குன்றி காணப்பட்டதாக' ராம்ஜூ குறிப்பிட்டார். காய்ச்சலைப் பற்றி பாபா கூட்டத்தில் கூறியபோது: "**காய்ச்சலின் காரணம் என்னவென்று மருத்துவர்களால் இந்தக் கட்டத்தில் சொல்ல முடியாது. அது எதுவாகவும் மாறக்கூடும்! எப்படியும், பயணத்தைத் தொடங்கி, ஏற்கனவே திட்டமிட்டபடி அனைத்தையும் செயல்படுத்த முயற்சிப்போம். ஒரு முழுமையான உடல் செயலிழப்பு ஏற்பட்டால் பிம்பல்காவ்மிற்கு மீண்டும் என்னைக் கொண்டு செல்வீர்கள். நான் உடலைத் துறந்துவிட்டால், என்னை மீண்டும் மெஹராபாத்துக்குக் கொண்டு வர மறந்துவிடாதீர்கள்.**"

மெஹராபாத்திலிருந்து எரச், பைதூல், ஜால்பாய் ஆகியோருடன் ஸரோஷின் காரில் பாபா புறப்பட்டார். இதர அன்பர்கள், இந்த நிகழ்ச்சிக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட அரசு போக்குவரத்துப் பேருந்தில் அவர்களுக்கு முன்னால் சென்றனர். சூரிய அஸ்தமன வேளையில் அவர்கள் ஸக்கோரியைச் சென்றடைந்தனர்; கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பிறகு, பாபா முதன்முறையாக விஜயம் செய்தார். **கோதாவரி மாய்** மற்றும் **உபாஸனி மஹாராஜின் ஆசிரம பக்தர்கள்** வாசலில் பாபாவை அன்புடனும் பக்தியுடனும் வரவேற்றனர். கோதாவரி மாய் பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்க வந்தபோது, பாபா அவரைத் தடுத்தார், ஏனெனில் அனல் பறக்கும் வாழ்வில் இது அனுமதிக்கப்படவில்லை. பாபாவுக்கு ஆரத்தி பூஜைகள் நிகழ்த்திய பின்னர் அவர் ஸக்கோரி ஆசிரமத்தைச் சுற்றி அழைத்துச் செல்லப்பட்டார். பாபா சென்ற ஒவ்வொரு இடத்திலும் தலைவணங்கினார்.

பாபா பின்னர் உபாஸனி மஹாராஜின் சமாதிக்குச் சென்று, அதில் அவர் தலைவணங்கி தன்னையே சுட்டிக்காட்டி, "**மஹாராஜ் இங்கே இருக்கிறார், அங்கே இல்லை**" என்று கூறினார். மண்டலியும், மஹாராஜின் சமாதியை வணங்கிய பின்பு, பாபா ஒரு சிறிய கட்டிடத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு முன்பு ஒரு வைக்கோல் குடிசை இருந்தது, அதில் அவரும் மஹாராஜும் இரவு வெகுநேரம் வரை ஒன்றாக அமர்ந்திருந்தனர். அங்கிருந்த வேளையில்

பாபா, "**ஒரு நாள் இரவு, மஹாராஜ் என்னை ஆதி சக்தி, அவதார புருஷர் என்று பறைசாற்றிய இடம்**" என்று வெளிப்படுத்தினார்.

சிற்றுண்டிக்குப் பிறகு, பாபாவும் குழுவினரும் ஷிர்டிக்குச் சென்றனர். பாபா, சாய்பாபாவின் பளிங்கு கல்லறையில், மண்டலியைப் போலவே தானும் தலைவணங்கினார். பின்னர் அனைவரும் சாய்பாபாவின் இருக்கையாக அமைந்த பழைய மசூதிக்குச் சென்றனர்; அங்கு அவர் தினமும் அரை மணி நேரம் குரான் வாசிப்பதைக் கேட்பது வழக்கம். சாய்பாபா அவரது தலையை சாய்த்து வைத்திருந்த செங்கல்லை பாபா சுட்டிக்காட்டினார். அவர் உடலைத் துறப்பதற்கு சற்று முன்பு அந்த செங்கல் இரண்டாக உடைந்தது.

சாய்பாபாவின் அறிவுறுத்தல்களின்படி உபாஸனி மஹாராஜ் கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் உணவின்றி அடைத்து வைக்கப்பட்டிருந்த கண்டோபா கோவிலுக்கு பாபா அடுத்ததாக விஜயம் செய்தார்; இதுவே பாபா அவரை முதன்முதலாகப் பார்த்த இடம். பாபா, கோவிலுக்குள் நுழைந்து, மஹாராஜின் உண்ணாவிரதத்தைப் பற்றி மண்டலியிடம் குறிப்பிட்டார், "**அந்த நாட்களில், சாய்பாபா நிறைய உணவு உண்டார், இருந்தும் அவர் மிகவும் பசியாக இருப்பதாக புகார் கூறினார்.**"

ஷிர்டியை விட்டு வெளியேறிய பிறகு, பாபா நள்ளிரவில் பூனாவில் பாபாஜான் சமாதிக்கு வந்தார். சமாதி மூடப்பட்டிருந்தாலும், அது அவருக்காகத் திறக்கப்பட்டது. பாபாஜான் சமாதியில் தலைவணங்கி, பின்னர் அவர், எரச், குஸ்தாஜி ஆகியோருடன் ஓய்வெடுக்க பிந்த்ரா இல்லத்திற்குச் சென்றார். மண்டலியின் பேருந்து (வழியில் சில இயந்திர கோளாறு காரணமாக) ஒரு மணி நேரம் தாமதமாக வந்தது. மண்டலி, பாபாஜான் சமாதியில் அஞ்சலி செலுத்திவிட்டு, தாதி கேரவாலா ஏற்பாடு செய்திருந்த கணேஷ்கிந்த் இல்லத்தில் ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். இவ்வாறு, தனது அனல் பறக்கும் சுதந்திர வாழ்வைத் தொடங்குவதற்கு முந்தைய நாள், பாபா, தனது இக்கால வருகையில் மிகவும் நேரடிப் பங்கு வகித்த மூன்று குருநாதர்களின் ஆலயங்களில் மரியாதை செலுத்தும் தனது எண்ணத்தை நிறைவேற்றினார்.

அதிகாலையில், பிந்த்ரா ஹவுஸில் காலை சிற்றுண்டிக்குப் பிறகு, குளிர்ச்சியாக உணர்ந்த பாபா கெய்மாயிடம் போர்த்திக்கொள்ள மேல் ஆடை ஏதேனும் இருக்கிறதா என்று கேட்டார். கெய்மாய் தனது அலமாரியில் தேடித் துருவி, ஜால் கேரவாலாவுக்காக சமீபத்தில் தைக்கப்பட்ட, நீண்ட காலர் கொண்ட இரண்டு கருப்பு கோட்டுகளை வெளியே எடுத்தார். ஜால் அவரது திடீர் மறைவு காரணமாக அவற்றை அணிய ஒருபோதும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பாபா ஒன்றை முயற்சித்து "**இது சரியாக பொருந்துகிறது**," என்று குறிப்பிட்டு, "**நான் ஜாலை என்னுடன் ஹமிர்பூர் மற்றும் ஆந்திராவிற்கு அழைத்துச் செல்கிறேன், அவர் என்னுடன் இல்லாததை மிகப்பெரிய இழப்பாகக்**

**கருதுகிறேன்**" என்றார். மேலும், பாபா தனது பயணத்தில் அந்தக் கோட்டுகளை அணிந்திருந்தார்.

கணேஷ்கிந்தில் பாபா மண்டலியைச் சந்தித்து, தொடர்ந்து நரிமனின் காரில் மும்பைக்குப் புறப்பட்ட வேளையில், ஸரோஷ் அஹமதுநகர் திரும்பினார். பேருந்தில் மண்டலி பின் தொடர்ந்தனர். பாபா, மும்பை வந்தடைந்ததும், பைதூலுடன் மஸ்துகளை தொடர்பு கொள்ளத் தொடங்கினார். நவம்பர் 15 மதியம், அவர் நான்கு மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, மதிய உணவுக்காக நரிமனின் இல்லத்திற்குச் (ஆஷியானா) சென்றார். மதிய உணவின் போது பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**மும்பையில் தற்போது பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மேல்நிலை மஸ்துகள் உள்ளனர். உமர் பாபா மற்றும் முங்ஸாஜி மஹாராஜ் இருவரும் மும்பையின் இன்றைய ஆன்மீக பொறுப்பாளர்கள்.**

**"ஒவ்வொரு மஸ்தும், அவர் எங்கிருந்தாலும், எனது உள்ளார்ந்த அறப்போரில் எனக்கு உதவுகிறார்கள். முன்னெப்போதும் நடக்காத சம்பவங்கள் நடக்கப் போவதை அவர்கள் அனைவரும் அறிவார்கள். எனது பட்டியலில் அடங்கிய பெயர்களில் ஏழு மஸ்துகளை நான் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களில் நால்வருடன் நான் ஏற்கனவே தொடர்பை முடித்துவிட்டேன்; இன்று, மீதமுள்ள மூவரைத் தொடர்புகொண்ட பின்பு, சிறிது நேரம் ஓய்வெடுத்து, பின்னர் ஹமிர்பூருக்குப் பயணத்தைத் தொடருவேன். நான் எனது அருளால் உலகை ஆசீர்வதிக்கும்போது, அது சாய்பாபா, பாபாஜான், உபாஸனி மஹாராஜ் ஆகியோரிடமிருந்து நான் அனுபவிக்கும் நித்திய ஆசீர்வாதத்தின் காரணமாக இருக்கும்.**"

அன்று மதியம் அமெரிக்காவிலிருந்து மும்பைக்கு வந்திருந்த ஐரீன் கோனிபியர் உட்பட சுமார் 300 மும்பை அன்பர்களுக்கு ஆஷியானாவில் பாபா தரிசனம் வழங்கினார். ஹமிர்பூரில் வெகுஜன தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக பாபா, ஐரீனை மெஹர்ஜியுடன் முதல் வகுப்பு ரயிலில் கான்பூருக்கு அனுப்பினார்.

மாலையில் பாபா மீண்டும் மஸ்துகளை தொடர்பு கொண்டபோது, அவர்களில் கடைசியாக உமர் பாபாவை சந்திக்க நேர்ந்தது. இந்தத் தொடர்பை தூரத்திலிருந்து பார்க்க அனைத்து மண்டலியும் அனுமதிக்கப்பட்டனர். மஸ்துகளுடனான பணி நிறைவடைந்ததும், பாபா மிக்க மகிழ்ச்சியடைந்து, உமர் பாபாவை தரிசனம் செய்யுமாறு மண்டலியிடம் கூறினார். பின்னர் அனைவரும் ஆஷியானாவிற்கு திரும்பி வந்தனர்.

1952, நவம்பர் 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு, நெரிசலான மூன்றாம் வகுப்புப் பெட்டியில், கான்பூருக்கு பாபா ரயிலில் புறப்பட்டார். வேடிக்கையாக, மண்டலியில் ஒவ்வொருவருக்கும், எதுகை மோனையுடன்

அமைந்த சிறந்த குறுகிய கவிதைகளை இயற்றுவதற்கு பாபா முதல் வரியை வழங்கினார். சிறப்பான செய்யுளுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன. ஜால்பாய், டாக்கே இருவரும் பாபாவுக்கு நகைச்சுவையான கதைகளை கூறி, அவரை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருந்தனர். கட்டுக்கதைகளை சுவாரஸ்யமான முறையில் எடுத்துரைப்பதில் வல்லவரான குமார், பாபாவை வெகுவாக மகிழச்செய்தார். ஒரு முழு நாள் மற்றும் இரண்டு இரவுகள் பயணம் செய்து, அவர்கள் 18ஆம் தேதி அதிகாலையில் கான்பூரை வந்தடைந்தனர்; அங்கு மெஹர்ஜி, ஐரீன் கோனிபியர் ஆகியோர் அவர்களுடன் இணைந்தனர்.

பாபாவின் தங்குமிடம் ஒரு மாஜிஸ்திரேட்டின் பெரிய பங்களாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, மண்டலி அனைவரும் பவானி பிரசாத் நிக்கமின் இல்லத்தில் தங்கினர். பவானி பிரசாத், கேஷவ், புக்கார், ஸ்ரீபத் ஸஹாய், லக்ஷ்மிசந்த் பாலிவால், ஷீத்தல் பிரசாத் நிக்கம் ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர், மேலும் ஹமிர்பூர் மாவட்ட அன்பர்கள் அனைவரும் பாபாவின் சேவையில் தங்களை அர்ப்பணித்தனர்.

கான்பூர் ரயில் நிலையத்திலிருந்து, அவர்கள் 60 மைல் கரடுமுரடான மண் சாலைகள் வழியாக பயணம் செய்து, காலை 10:00 மணிக்கு ஹமிர்பூரை வந்தடைந்தனர். ஐரீன் பாபாவுடன் அவரது காரில் சென்றார்; **"உண்மையான இந்தியாவை நீங்கள் காண்பீர்கள்"** என்று பாபா, அவரிடம் குறிப்பிட்டார். அன்றைய தினம் யமுனா நதி மீது ஒரு மிதவைப்பாலம் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டது, பாபாவின் கார் அதை முதலில் கடந்து சென்றது.

அடுத்த பத்து நாட்களுக்கு, நவம்பர் 18 முதல் 27 வரை, ஹமிர்பூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பாபா, மக்களுக்கு தரிசனம் வழங்கினார். அவர் சென்ற இடமெல்லாம் திரள்திரளாக மக்கள் கூடியிருந்தனர்; மனிதக் கடலைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியவில்லை.

காலம் இதைக்கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தது: அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில், மெஹர் பாபா வழங்கிய தரிசன நிகழ்ச்சிகளின் போது, ஹமிர்பூர் மக்களின் நிலை ‘உயிரையும் துச்சமாக மதித்து நெருப்பை நோக்கி வெறிபிடித்து விரைந்தோடும் விட்டிற் பூச்சி’களைப் போல் இருந்தது. கொழுந்துவிட்டு எரிந்த அன்பின் சுடரில், மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னெப்போதும் உணராத ஓர் இனிமையான ஆறுதலை அனுபவித்துக் கொண்டிருந்தனர்."

உண்மையில், கான்பூரில் முதல் தரிசனத்தைத் தொடங்கும் வேளையில், பாபா எழுத்துப்பலகையில், **"இந்த இடத்தின் ஆன்மீக சூழல் மிகவும் மேம்பட்டது"** என்று எடுத்துரைத்தார்.

இந்தப் பத்து நாட்களில், **ஹமிர்பூர்**, பர்வா, **ஸுமேர்பூர்**, **இங்கோட்டா**, **மௌதாஹா**, **மஹேவா**, **மஹோபா**, **குல்பஹர்**, **பன்வாரி**, **ரத்**, **நௌரங்கா**, **மஜ்குவான்**, **ஐராகர்**, **தக்வான்**, **அமர்புரா**, **கங்காரம்**, **தனவ்வுரி**, **பண்டா**,

**ஹர்பல்பூர்** ஆகிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தரிசன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒவ்வொரு இடத்திலும், முதல் நிகழ்ச்சியாக ஏழு ஆதரவற்றோர், ஊனமுற்றோர் மற்றும் வாழ்வின் அத்தியாவசிய தேவைகளை நாடும் ஆண், பெண்களுக்கு விழா நடத்தப்பட்டது. எவரையும் ஒரு சாதாரண, வெளிப்படையான பிச்சைக்காரர் என்று அழைக்க முடியாது, இருப்பினும் ஒவ்வொருவரும் ஒரு கடினமான வாழ்க்கையை எதிர்கொண்டதோடு, மிகவும் சிரமமான தேடலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் ஜாதி, மதம், பிரிவு பாராமல் தீர்மானிக்கப்பட்டு, பாபாவின் முன் அவரது விருந்தினர்களாக அழைத்துவரப்பட்டனர். பாபாவின் விருப்பப்படி, தரிசனம் வழங்கும் இடத்தில், ஒரு தற்காலிக அறை அமைத்து, அனைத்து பக்கங்களிலும் திரையால் மறைத்து, அதில் ஒரு சிறிய உயரமான மேடை அமைக்கப்பட்டது. வெந்நீர், சோப்பு மற்றும் துண்டுகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. 'விருந்தினர்கள்' பாபாவைப் பின்தொடர்ந்து அறைக்குள் அழைத்துவரப்பட்டனர். மண்டலி மற்றும் ஒரு சில சேவகர்களைத் தவிர, வேறு எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. பாபா ஏழு ஏழைகளின் கால்களைக் கழுவி, சுத்தம் செய்து, துடைத்த பின்னர் அவர்களின் கால்களில் தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் 51 ரூபாய் அன்பளிப்பாக வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, பாபா தரிசன விதானத்திற்குச் சென்றார். அவர் வருவதற்கு முன்னதாகவே, ஒலிபெருக்கிகள் ஒலித்தன: 'எவரும் மெஹர் பாபாவை வணங்கவோ அல்லது அவரது பாதங்களைத் தொடவோ கூடாது.' பாபா விதானத்தில் நுழைந்து, மேடையில் தனது இருக்கையில் அமர்ந்த வேளையில் முழுமையான அமைதி நிலவியது.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, கீழ்வரும் செய்தி வழங்கப்பட்டது:

**ஆன்மீகத்தைப் பொறுத்தவரை நாம் அனைவரும் ஒன்று, அனைவரும் சமம். ஒரே எல்லையில்லா ஏக இறைவன், தனிப்பட்ட, பிரிக்க முடியாத முறையில் நம் அனைவருள்ளும் வாழ்கிறார். மாறாத, நித்திய உண்மைப்பொருளின் பிரதிநிதிகளாக உங்களைக் கருதி, கூட்டாகவும் தனித்தனியாகவும் உங்களை வணங்குகிறேன்! நான் தலை தாழ்த்தி உங்களை வணங்கியது, நீங்கள் என்னை வணங்குவதற்கு சமமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. எனவே, உங்களை நான் வணங்கிய பின்னர், எவரும் என்னை வணங்க வேண்டிய தேவையில்லை!**

கூப்பிய கரங்களுடன், "சத்குரு மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்று திரும்பத் திரும்பக் கூக்குரலிடும் வேளையில் பாபா அனைவரையும் வணங்கினார்.

காலம் கூறியதற்கிணங்க, "இறைப்பெருங்கடல் கரையை மூழ்கடிக்க அலைகளை அனுப்பியது போலத் தோன்றியது, மேலும் அனைத்து உயிர்களும்

அதில் மூழ்கின. எல்லா கண்களும் மெஹர் பாபா எனும் இறைவனை ஒரே மாதிரியாகப் பார்த்தன, இருமைத்தன்மையின் பிணைப்புகள், ஒரு கணம், அறவே அகற்றப்பட்டது."

அதைத் தொடர்ந்து, மெஹர் பாபாவின் ‘அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு’ குறித்த விளக்கம் மக்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது:

**கடவுளின் விருப்பத்திற்கிணங்க நான் வகிக்கும் பாத்திரம், பல கட்டங்களை உள்ளடக்கியது. இறை உணர்வை அடையப்பெறுவதற்கு முந்தைய சாதாரண நிலை; இறை உணர்வை அடையப்பெற்ற பழைய வாழ்க்கை நிலை; மனோ நாஷின் மூலமாக, முழுமையான பணிவு மற்றும் தீவிர தன்மையுடன் கடவுளை உண்மையாகத் தேடும் புது வாழ்வு நிலை; மேலும் மனோ நாஷை அடைந்த பின்பு தோன்றிய மூன்று வகையான சுதந்திர வாழ்வு. இவை அனைத்தும் கடவுளின் விருப்பப்படி நடந்தது.**

**1952, ஜூலை 10ஆம் நாள், உச்சக்கட்டத்தை எட்டிய சுதந்திர வாழ்வின் முதல் பகுதியில், பிணைப்புகள் சுதந்திரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தின. இந்த முதல் பாகத்தில்தான், சில வருடங்களாக நான் கூறிவந்த தனிப்பட்ட பேரழிவு, அமெரிக்கக் கண்டத்தைக் கடக்கும் போது ஒரு வாகன விபத்தின் வடிவில் நிகழ்ந்தது; முகத்தில் காயங்கள், கால், கை முறிவு என என்னை உடலளவில் துன்பப்படுத்தியதோடு, மனதளவிலும் மிகவும் பாதித்தது. இது அமெரிக்காவில் நடக்க வேண்டிய கட்டாயம். கடவுள் அவ்வாறே விரும்பினார்.**

**இந்த சுதந்திர வாழ்வின் இரண்டாம் பகுதியில், சுதந்திரம், பிணைப்புகள் மீது ஆதிக்கம் செலுத்தியது. 1952, நவம்பர் 15ஆம் நாள் தொடங்கும் இந்த சுதந்திர வாழ்வின் மூன்றாம் பகுதியில், சுதந்திரம், பிணைப்புகள் இரண்டும் தெய்வீக அன்பின் நெருப்பில் நுகரப்படுகின்றன, இது மாயையின் இருமைத்தன்மையின் அடிப்படையையும் அதன் அனைத்து உபகரணங்களையும் அழிக்கிறது.**

**ஒரு தனிநபராக, தனிப்பட்ட நபர்களின் எதிர்வினைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. தனிப்பட்ட எண்ணப்போக்குகள் இருப்பதைப் போல் அவை பலவிதங்களில் இருக்கும். நவம்பர் 15 முதல் தொடங்கும் அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில் எனது ஒரே கவலை, எனது இறை உணர்வின் தெய்வீக உண்மையைப் பற்றியதாக இருக்கும், அதை நான் இறைவனைத் தேடுபவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் சிறப்பியல்பான சுதந்திரம் மற்றும் பிணைப்புகளை தன்வசப்படுத்திக் கொள்வது என்பது இறை-நிலை, மனித-நிலை ஆகியவற்றின் முழுமையான கலவையாகும், இதனால் ஒருவர்**

வேறொருவருக்கு எதிராக வாழவும், வேறொருவரின் எல்லைக்குள் அத்துமீறுவதற்கும் வாய்ப்பில்லாத சூழ்நிலை உருவாகும்.

ஆன்மீக சுதந்திரம் என்பது எல்லையற்ற தெய்வீகத்தை முழு உணர்வோடு அனுபவிக்கும் ஓர் ஆக்கபூர்வமான நிலை. எந்தப் பிணைப்புகளையும் தொடர்ந்து, கடந்து செல்வதன் மூலம் அது தன்னைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியதில்லை, ஏனென்றால் இவை ஆன்மாவின் பிணைப்புகள் அல்ல, அதன் சாராம்சத்தில், உடல் மற்றும் மனதின் தற்காலிக பிணைப்புகளாக உணரப்படுகின்றன; அவை எந்த வகையிலும், பேரின்பம், சக்தி மற்றும் உணர்வுப்பூர்வமான தெய்வீக நிலையைப் பற்றிய புரிதலைக் கட்டுப்படுத்த முடியாது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆன்மாவை உள்ளடக்கியதாகத் தோன்றும் பிணைப்புகள் அதன் உண்மையான சாராம்சத்தில் ஆன்மாவின் பிணைப்புகள் அல்ல. பிணைப்புகள் எப்போதும் மாயையாக மட்டுமே உணரப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட மனதை நிர்மூலமாக்கிய பின்னர், ஆன்மாவின் எல்லையற்ற உணர்வு, அதன் அனைத்து அறிவு, சக்தி மற்றும் பேரின்பத்துடன், இயற்கை விதிகளின் விளைவாக உடலில் விளையும் எந்த பலவீனங்கள் அல்லது நோய்களால் பாதிக்கப்படாமல் இருக்கும்.

நிலையான, முழு நிறை உண்மைப்பொருளை உணர்ந்த பின்னர், பௌதீக உணர்வையும் உடலையும் தக்கவைத்துக்கொள்ளும் பரிபூரண குருநாதர்கள், அனைத்து இருமைத்தன்மைகளையும் கடந்து, எல்லா புரிதலையும் மிஞ்சும் தெய்வீக அன்பில் நிரந்தரமாக வாழ்கிறார்கள். அவர்கள் நிலையான மற்றும் அசைக்க முடியாத அமைதியை அனுபவிக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் இறுதியாக படைப்பின் இறுதி இலக்கை அடையப்பெற்றவர்கள்.

எனக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை. எனக்கு அனைத்து மதங்களும் சமம், அனைத்து ஜாதி, மத, கொள்கை, கோட்பாடுகளும் எனக்குப் பிரியமானவை. ஆனால், அனைத்து 'இஸம்கள்', மத மற்றும் அரசியல் கட்சிகள் அடைய விரும்பும் பல நல்ல விஷயங்களை நான் பாராட்டினாலும், நான் இந்த 'இஸம்கள்', மத அல்லது அரசியல் கட்சிகளில் எதையும் சேர்ந்தவனல்ல. பரிபூரண உண்மைப்பொருள், அவற்றை சமமாக உள்ளடக்கியிருந்தாலும், அவை அனைத்தையும் கடந்து, தனித்தனி பிரிவுகளுக்கு இடமளிக்காது, அவை அனைத்தும் ஒன்றுக்கொன்று தவறானவை. எல்லா உயிர்களும் ஒருங்கிணைந்து, பிரிக்க முடியாத வகையில் ஒன்றாக இருப்பவை. அனைத்து கருத்தியல் வேறுபாடுகள்

இருந்தபோதிலும் அது அசைக்க முடியாததாகவும், மீற முடியாததாகவும் உள்ளது.

பெரியவர், சிறியவர் அனைவரும் சமமாக என்னை அணுகலாம்.
எழுந்தருளும் புனிதர்களுக்கும், வீழும் பாவிகளுக்கும்,
தெய்வீக அழைப்பை வழங்கும் பல்வேறு
பாதைகள் வழியாக என்னை அணுகலாம்!

நான் வணங்கும் துறவி, நான் ஆதரிக்கும் பாவி இருவரும்
ஒரே விதத்தில் சமமாக என்னை அணுகலாம்,
மற்றும் சமமாக, ஸூஃபிஸம், வேதாந்தம், கிறிஸ்தவம்,
அல்லது ஸொராஸ்ட்ரியனிஸம், பௌத்தம் போன்ற
பிற 'இஸம்கள்' எந்த வகையாயினும்,
நேரடியாக 'இஸ்ம்களின்' ஊடகம்
மூலமாகவும் என்னை அணுகலாம்!

நான் அமெரிக்காவில் இருந்தபோது, எனது மௌனத்தை எப்போது கலைப்பேன் என்று மக்கள் என்னிடம் கேட்டார்கள். நான் அவர்களிடம் கேட்டேன்: "என்னுடைய மௌனத்தால் பேச முடியவில்லை என்றால், நாவால் பேசப்படும் பேச்சுகளால் என்ன பலன்? எனது பேச்சு உலகளவில் கேட்கப்படும் என்று கடவுள் நினைக்கும் போது, அவர் எனது மௌனத்தைக் கலைக்கச் செய்வார்." இருப்பினும், மௌனம் அல்லது மௌனமின்மை எதுவாயினும், நான் எடுத்துக்கூறும் உண்மைப்பொருளை ஆழ்ந்து சிந்திப்பவன் இறுதியில் நித்திய வாழ்வில் அடியெடுத்து வைப்பான்.

அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் இதர செயல்பாடுகளுக்கு மத்தியில், என்னை எங்கு அழைத்துச் சென்றாலும் அந்த வாழ்வின் ஒரு நிலையான அம்சம் எப்போதும் இருக்கும். நான் மனம் கனிந்து பாராட்டும் மகான்களுக்கும், நான் வணங்கும் மஸ்துகளுக்கும், முழு மனதுடன் அர்ப்பணிக்கும் ஏழைகளுக்கும் நான் தலைவணங்குவேன்.

இந்த எல்லா வடிவங்களிலும் கடவுளை வணங்குவதற்கான வாய்ப்புகளைத் தவிர வேறு எதுவும் எனக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை. மக்கள் எனக்குத் தலை வணங்குவதை விட நான் அவர்களுக்குத் தலைவணங்குவதை விரும்புகிறேன். எங்கும் நிறை இறைவனுக்கு சேவை செய்வதும் அவனை வழிபடுவதும் என் இதயத்துக்கு மிகவும் நெருக்கமானது.

அனல் பறக்கும் சுதந்திர வாழ்வில், அகந்தை-வாழ்வின் அனைத்து பலவீனங்களும் முற்றிலும் நுகரப்படும்; அனைத்து ஆசைகள், விருப்பங்கள் மற்றும் சபலங்களிலிருந்தும் முழுமையான விடுதலை கிடைக்கும்; மேலும் இந்த அனல் பறக்கும் சுதந்தர வாழ்வின் விளைவு, மெஹர் பாபா மற்றும் அனைவரும் இறைவனுடன் ஒன்று என்பதை உலகிற்கு புரிய வைக்கும்.

இந்த செய்திக்குப் பிறகு, தரிசன நிகழ்ச்சி தொடங்க இருந்தது. மக்கள் ஒவ்வொருவராக வரிசையில் பாபாவிடம் செல்லும் வேளையில், பாபா அவர்களுக்கு மணிக்கணக்கில் பிரசாதம் வழங்கும் நோக்கத்தில், யஷ்வந்த் ராவ் ஒரு பக்கத்தில் அமர்ந்து பாபா, பழங்களை பிரசாதமாக விநியோகிக்கும் நோக்கத்தில் அவருடைய கைளில் வழங்கத் தயாராக இருந்தார். மேடையில் பூக்கள், தேங்காய்கள், வாழைப்பழங்கள் மற்றும் நாணயங்கள் குவிக்கப்பட்டிருந்தன, பாபா மாலைகளால் சூழப்பட்டிருந்தார். எரச் மலர் மாலைகளை அடிக்கடி கழற்றி, ஒதுக்கி வைத்த போது, பாபா ஓர் இயந்திரம் போல பிரசாதம் விநியோகித்தார். மக்கள் கூட்டம் அதிகரித்து, எளிதில் கையாள இயலாதபோது, தரிசனப் பந்தல் முழுவதும் அவரது இனிமையான புன்னகையுடன் இரு கைகளாலும் பிரசாதம் வழங்கினார்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், தனக்கும் மண்டலிக்கும் ஏற்படும் அனைத்து சிரமங்களையும், தனிப்பட்ட சோர்வையும் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் பாபாவின் கைகளிலிருந்து பிரசாதத்தையும், ஸ்பரிசத்தையும் பெற வேண்டும் என்பதே அவரது மனதில் மேலான எண்ணமாக இருந்தது. பாபா அடிக்கடி குறிப்பிட்டு வந்தார்: **"மக்கள் ஒரு கணம் மட்டும் என்னிடம் வருவதற்காக மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டியிருக்கும் போது, இந்த சிறிய துன்பத்தை நாம் பொறுத்துக் கொள்ளலாம் அல்லவா?"**

அனல் பறக்கும் சுதந்திர வாழ்வைப் பற்றிய அவரது விளக்கத்தைத் தவிர, மேலும் ஏழு செய்திகள் (அக்டோபர் மாதத்தில் மெஹராஸாத்தில் பாபாவால் எடுத்துரைக்கப்பட்டது) ஒரு சிறு புத்தகமாக வெவ்வேறு மொழிகளில் அச்சிடப்பட்டது, அவை ஒவ்வொரு இடத்திலும் கூடியிருந்த மக்களிடையே விநியோகிக்கப்பட்டன. ஒவ்வொரு இடத்திலும் நடந்த நிகழ்ச்சியில் ஒரு செய்தி மட்டுமே வாசிக்கப்பட்டது. இதுபோன்ற செய்திகளைத் தவிர, சில சமயங்களில் பாபா, கூட்டத்தினர் ஆர்வம் காட்டிய குறிப்பிட்ட தலைப்பினை எழுத்துப்பலகையில் எடுத்துரைக்க, அது ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்பட்டது.

மெஹர் பாபா ஏற்கனவே எடுத்துரைத்த செய்திகளில் ஒன்று '**வாழ்வின் நித்திய தன்மை**':

**ஆரம்பமும் முடிவும் இல்லாமல், பரிணாம உருவாக்கத்தின் சீருந்து வாகனம் அளவிறுதியற்ற முறையில் அணிவகுத்துச் செல்கிறது. வழியில் பயணிக்கும் பெரும்பாலான ஆத்மாக்கள், தற்காலிகமான உடனடி நிகழ்வில் சிக்கிக் கொண்டு, அவற்றின் உணர்வுப்பூர்வமான அல்லது உணர்வற்ற எதிர்வினைகளால் உருவமைப்பில் வளர்ச்சியைக் காண்கின்றன. சில ஆத்மாக்கள், தற்காலிகமான உடனடி நிகழ்விலிருந்து தங்களைப் பிரித்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களின் பற்றின்மை, அறிவுசார்ந்ததாக மட்டுமே**

இருப்பதால், கடந்த காலத்தைப் புரிந்துகொள்ள அல்லது எதிர்காலத்தை எதிர்பார்க்க முயற்சிக்கும் வரையறுக்கப்பட்ட அறிவுத்திறனின் எல்லைக்குள் மட்டுமே அவர்கள் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள்.

அவர்கள், வரலாற்றைப் பற்றிய அவர்களின் அறிவின் வெளிச்சத்திலும், வரவிருக்கும் எதிர்காலத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்த அவர்களின் நுண்ணறிவின் ஒளியூட்டத்திலும், நிகழ்காலத்தை வடிவமைக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் வரம்புக்குட்பட்ட புத்தியானது, ஆரம்பமும் முடிவும் இல்லாத அளவுகளைப் புரிந்து கொள்ளும் திறன் அல்லது தகுதியை அடையாததன் விளைவாக, முற்றிலும் அறிவார்ந்த முன்னோக்குப் பார்வை, எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும், தவிர்க்க முடியாமல், முழுமையற்ற, அரைகுறையான, மேலோட்டமான, சொல்லப்போனால் ஒரு அர்த்தத்தில், தவறாகவும் உள்ளது.

அறிவார்ந்த முன்னோக்குப் பார்வை, நடைமுறைக்கு உகந்ததும், திட்டமிட்ட செயலுக்கு இன்றியமையாததும் ஆகும். ஆனால் இதயத்தின் ஆழமான ஞானம் அல்லது தெளிவான உள்ளுணர்வு இல்லாத பட்சத்தில், அத்தகைய அறிவுசார்ந்த முன்னோக்குத் தன்மை நிச்சயமற்ற முத்திரையைத் தாங்கி நிற்கும் ஒப்பீட்டளவிலான உண்மையை மட்டுமே தருகிறது. புத்தியின் திட்டமிடப்பட்ட செயல் என்று அழைக்கப்படுவது, அதன் பின்னால் பல வலிமையான சக்திகளைக் கொண்டிருந்தாலும், அவை உள்ளுணர்வின் விளிம்பைக் கூட எட்டமுடிவதில்லை; மேலும் இது உண்மையில் திட்டமிடல் என்று அழைக்கப்படும் பார்வையின் வரம்பிற்கு அப்பாற்பட்ட பல மதிப்புமிக்க எதிர்பாராத முடிவுகளுக்கு வழிவகுக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அறிவார்ந்த திட்டமிடல் என்பது, பெரும்பாலும் பெயரளவில் மட்டுமே ஒரு திட்டமிடலாக மாறிவிடும், முழு விளையாட்டிலும் அவர்கள் உண்மையான பங்கைக் கொண்டிருப்பதாக உணரும் வீரர்களை நியாயப்படுத்தத் தேவையான உண்மையை மட்டுமே அதில் கொண்டிருக்கும்.

உண்மையில், பரிணாம படைப்பில் உள்ள அனைத்தும், திரைக்குப் பின்னால் இருந்து, கடவுளின் அளவிறுதியற்ற சக்தியால் மட்டுமே செய்யப்படுகின்றன - மேடையில் ஒளிரும் வெளிச்சத்தில் கடந்து செல்லும் பெரும்பாலான வீரர்களால் அறியப்படாத, உணரப்படாத மற்றும் சந்தேகத்திற்கு இடமளிக்காத விதத்தில் அவர் நித்திய மௌனத்தில் செயல்படுகிறார். சிலர், குருநாதர்களின் அல்லது கடவுளின் அருளால், தெய்வீக அன்பில் மறைந்திருக்கும் வசந்த கால நீரூற்றை, தங்கள் சொந்த முயற்சியால் அடைவதில் வெற்றி பெறுகிறார்கள்; இது எல்லையற்ற தெய்வீகத்தைப் பற்றிய வரம்பற்ற மற்றும் உறுதியான புரிதலை

வெளிப்படுத்துகிறது; இது, அதன் நித்தியத்தில் மட்டுமல்லாமல், தோற்றத்தில் ஆரம்பமற்ற கடந்த காலம், நிலையற்ற நிகழ்காலம் மற்றும் முடிவற்ற எதிர்காலத்தைக் குறித்த புரிதலையும் வெளிப்படுத்துகிறது.

காலத்தின் அளவிறுதியற்ற தோற்றம் இறுதியில் உண்மையற்றது; ஏன், காலமே இறுதியில் உண்மையற்றது. முழுமையான உண்மைப்பொருளை உணர்ந்து கொள்ள உதவும் இறுதியும், அறுதியுமான ஆன்மீக புரிதல், பரிபூரண இறை உணர்வுக்கு வழிவகுப்பதோடு, முடிவிலா காலச் செயல்பாட்டின் மாயத்தன்மை, அளவிறுதியற்ற கடவுளின் எல்லையற்ற வாழ்வின் உண்மையான நித்தியத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. கடவுளைப் பற்றிய எல்லையில்லா புரிதலில், உணர்வுபூர்வமாக நிலைநிறுத்தப்படும் இறை-மனிதர்கள், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அறிய முடியும். ஆனால் அவர்களைப் பொறுத்தவரை, நித்தியத்தின் மின்னல் வேகத்தில் மறையும் நிழல்களைப் பற்றிய இந்த அறிவு, ஆழங்காண முடியாத இறைவனுடன் ஐக்கியமாவது, எல்லையில்லா ஞானம் மற்றும் உண்மைப்பொருளை அடையப்பெறுவதை விட மிகக் குறைவான முக்கியத்துவம் வாய்ந்தது.

உண்மையில், விதிவிலக்கின்றி, ஒவ்வொருவரும் பரிபூரண உண்மைப்பொருளின் ஓர் அங்கமாக இருப்பதே உண்மை. ஆனால், அது மறைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷம் போன்றது; அது நம் கைவசம் இருந்தாலும், அறியப்படாத வரை, அது இல்லாதது போல் உள்ளது. பரிணாம சிருஷ்டியின் ஒரே நோக்கம், ஆன்மா, இந்த எல்லையற்ற பொக்கிஷத்தை உணர்வுபூர்வமாக தமது உடைமையாக்கி, அனுபவிப்பதே ஆகும். பரிபூரணமானவர்களில், கடவுள் இந்த இலக்கை நோக்கி உணர்வுபூர்வமாக செயல்படுகிறார். ஆனால், அதே வேளையில், அவர் ஒருவரே அனைவரின் மூலமாகவும் இதர எல்லாவற்றின் மூலமாகவும் செயல்படுகிறார்; மேலும், இந்தச் செயல்பாடு பெரும்பாலும் சாதாரண மனிதனுக்குத் தெரியாமல் நிகழ்ந்தாலும், அதுவும் அதே இறுதி இலக்கிற்கு வழிவகுக்கிறது.

சுவாசத்தின் ஒப்புமையை மேற்கோள் காட்டி இதை தெளிவுபடுத்தலாம். சுவாசம் என்பது வாழ்க்கையின் அடிப்படையாகும், மேலும் சுவாசத்தை நிறுத்துவது என்பது ஆன்மாவுக்கு எந்த பாதகமும் இல்லாமல் உடலைத் துறப்பதாகும். ஆனால் இந்த சுவாசம் பெரும்பாலும் நாம் அறியாமலேயே நிகழ்வது. மேலும் அசாதாரண முயற்சியால் மட்டுமே நாம் அதை உணர்ந்து கொள்கிறோம். அதே வழியில், பரிணாம செயல்முறைகள் மூலம் கடவுள் பணிபுரிவது பெரும்பாலும் நமக்குத்

**தெரியாமலும், அமைதியாகவும் நிகழ்கிறது, மேலும் இந்தப் பணியை நிறுத்துவது என்பது கடவுளின் அசல் நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் படைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதாகும் - அதாவது பிரளயம் என்று அர்த்தம். நித்திய வாழ்வில் கடவுளை சுயமாக அனுபவிக்கும் இறை-மனிதர்களின் அரிதான நிகழ்வுகளில் மட்டுமே கடவுள் தாம் செயல்படுவதை உணர்ந்து கொள்கிறார்.**

**யுகம் யுகமாக, கடவுள் தமது எல்லையற்ற மௌனத்தை அனுபவிப்பவர்களைத் தவிர, கவனிக்கப்படாமல், பார்க்கப்படாமல் அமைதியாக பணிபுரிந்து வருகிறார்.**

வெகுஜன நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல், பாபா தனிப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாகவும், அவரது நெருங்கிய அன்பர்களின் இல்லங்களுக்குச் செல்ல இருப்பதாகவும் அறிவித்தார். அவ்வாறு இல்லங்களுக்குச் செல்லும் வேளையில், காடேக்கர் ஒவ்வொரு இடத்திலும் ஆரத்தி நிகழ்ச்சிகளை நடத்துவதை வழக்கமாகக் கொண்டார். பாபா, தம்முடன் சென்றவர்கள், அவர் எங்குச் சென்றாலும் எப்போதும் உடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்திருந்தார்.

தரிசன வேளைகளில், குமார் (பாபாவின் 'குடை மனிதர்') ஒழுங்காகவும் அமைதியாகவும் வேண்டிய அனைத்தையும் ஏற்பாடு செய்து கூட்டத்தைக் கட்டுப்படுத்தினார். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாபா தலைவணங்கும் செய்தியும் அதன் அர்த்தமும் சத்தமாக ஒலிபரப்பப்பட்டது, மேலும் அவர் வெகுஜனங்களை வணங்கிய பின்னரே நிகழ்ச்சி நிரலில் அடங்கிய அனைத்து நிகழ்ச்சிகளும் தொடங்கின.

ஹமிர்பூர் தரிசனத்தின் போது, **ஷிவ நாராயண்** என்றழைக்கப்பட்ட ஒருவர் பாபாவிடம் வந்தார். அவர் உடல் முழுவதும் தூசியால் மூடப்பட்டிருந்தது. அங்கு வந்தவர் உடனடியாக பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தத் தொடங்கினார். பாபா அவரை மிகவும் அன்புடன் தழுவி, சில பழங்களை அவரிடம் கொடுத்து அங்கேயே அதை உண்ணுமாறு அறிவுறுத்தினார். பின்னர், அந்த நபர், பாபாவை தரிசனம் செய்வதற்காக, 27 மைல் தூரத்தை வெறும் வயிற்றில் கடந்து, சாலையில் ஒவ்வொரு அடியெடுத்து வைத்ததும் சாஷ்டாங்கமாக கீழே விழுந்து வணங்கினார் என்பதும் தெரிய வந்தது.

இந்த யாத்திரை முழுவதும், அவர் உள்ளளவில் பாபாவின் நாமத்தை திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்தார்; மேலும் அவரது தவம் அவருக்கு இறை-மனிதனிடமிருந்து இதயப்பூர்வமான அரவணைப்பைப் பெற வழிவகுத்தது.

ஹமிர்பூரில் **பவானி பிரசாத்**தின் இல்லத்தில் மண்டலி அனைவரும் தங்க வைக்கப்பட்டனர். இரவு உணவு நேரத்தில், பாபா அங்கு வந்து அவர்களுடன் தரையில் அமர்ந்து வினவினார், "**ஓ, நீங்கள் இன்னும் உங்கள் உணவை முடிக்கவில்லையா? பரவாயில்லை, மெதுவாக உண்ணுங்கள், ஆனால் சீக்கிரம் புறப்பட தயாராகுங்கள். உங்களுக்கு வேண்டிய நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் தாமதம் செய்யாதீர்கள்.**"

நானா கேரிடம், அவர் நடந்துகொண்டே உண்ணும் விதத்தைப் பார்த்து பாபா, "**நாளை வரை அவர் முடிக்க மாட்டார்!**" என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

பங்க்ராஜிற்கு அறிவுரை கூறும் விதத்தில், "**உணவை ஏன் இவ்வளவு அவசரமாகவும் வலுக்கட்டாயமாகவும் உங்கள் வாயில் திணிக்க வேண்டும்? குறைவாக உண்ணுங்கள், ஆனால் அடிக்கடி உண்ணுங்கள்**" என்று கூறினார். இவ்வாறு, பாபா தனது தலைசிறந்த முரண்பாட்டுத் தன்மையை வெளிப்படுத்தும் மனநிலையில் இருந்தார். அனைவருக்கும் அனைத்தும் பரிமாறப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார், அதே நேரத்தில் அவர்கள் உணவை விரைவில் முடிக்கும் அவசரத்தில் இருந்தார்.

இதைப் பார்த்து, உள்ளூர் மக்கள் சிரிக்கத் தொடங்கினர், பாபா கூறினார், "**நான் அவர்களின் உடல்களுக்கு உணவளிக்கிறேன், ஆனால் அவர்களின் மனங்களைப் பட்டினி போடுகிறேன்!**"

ஹமிர்பூரைக் குறிப்பிட்டு, ஒரு கட்டத்தில் பாபா வெளிப்படுத்தினார்: "**எனது முந்தைய அவதார காலகட்டங்களில் ஒன்றில், நான் இந்தப் பகுதியில் தங்கியிருந்தேன்.**"

ஹமிர்பூரில் புக்காரின் இல்லத்திற்கு பாபா சென்றபோது, அவர் மிகவும் தீவிரமான தோற்றத்தில், அமைதியாக நின்றார். அவரது மனநிலை சுற்றுப்புறத்தையும் அமைதியில் ஆழ்த்துவது போல் இருந்தது. அவரது விரல்கள் மட்டும் ஏதோ தீவிரமாகப் பணிபுரிவது போல் அசைந்தன. சிறிது நேரம் கழித்து, ஒரு பறவையின் சத்தம் திடீரென அந்த அமைதிக்கு முற்றுப்புள்ளி வைத்தது, பாபா தனது இயல்பு நிலைக்குத் திரும்பினார்.

ஹமிர்பூரில், **மாத்ரா தத்தா சாஸ்திரி** என்ற பண்டிதர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தார். அவர் ஒரு மரபுவழி பிராமணர், வேதங்களை நன்கு கற்றறிந்தவர். அவர் முதலில் பாபாவைக் கேலி செய்யும் நோக்கத்தில் வந்தவர், பாபாவைப் பார்த்ததும், அவரது இதயம் அதிசயமான மாற்றத்தைக் கண்டது, மேலும் அவர் பாபாவின் பாதங்களில் தலைவணங்கி என்றென்றும் முழு அர்ப்பணிப்புடன் இருந்தார்.

மற்றுமோர் ‘அறிஞர்’, பக்தர் ஆக்ராவைச் சேர்ந்த **மதன் மோகன் அகர்வால்** ஆவார். மனோ நாஷ் கட்டத்தின் போது, பாபா பயன்படுத்திய பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து மத மாதிரிகளைத் தயாரிக்க அவர் உதவினார்; இறுதியாக பாபாவை முதன்முறையாக ஹமிர்பூரில் சந்தித்தார். மதன், வால்மீகியின் ராமாயணத்தை முழுமையாகக் கற்றவர், ஆனால், பாபாவின் காலடியில், ராமர் அவதாரத்தைக் கண்டுபிடித்து அவரைப் பின்பற்றுவதன் மூலம் இந்த மாபெரும் காவியத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொண்டார்.

இந்த நேரத்தில் மெஹர் பாபாவின் மற்றுமொரு செய்தி ‘**அற்புதங்கள் மற்றும் ஆன்மீக பரிகாரம்**’ பற்றியது:

**மக்கள் உடல் ரீதியாக அல்லது மனரீதியாக, தனித்தனியாக அல்லது கூட்டாக பாதிக்கப்படும்போது, அந்தத் துன்பத்திலிருந்து உடனடி நிவாரணம் பெற விரும்புகிறார்கள். உலகம் முழுவதும், மனிதனின் அடிப்படை பிரச்சினைகள், துன்பம் மற்றும் இன்பத்தின் எதிர்நிலைகளுக்கு உட்பட்டது.**

**துன்பத்தைத் தவிர்க்கவும், அதே வேளையில் இன்பத்தை அடையவும் மனிதன் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கிறான். ஆனால் எப்போதும் துன்பத்தைத் தவிர்த்து இன்பத்தை மட்டும் அனுபவிப்பது முடியாத காரியம். துன்பமும் இன்பமும் பிரிக்க முடியாத இரட்டையர்கள், பல ஏக்கங்கள் மற்றும் ஆசைகளால் பிறந்தவர்கள். ஒன்று இருக்கும் இடத்தில், மற்றொன்றும் மாறாத, நிலையான துணையாக இருக்கும். இதன் விளைவாக, மனிதன் இந்த இரண்டுக்கும் இடையே இடைவிடாமல் சிக்கிக் கொள்கிறான், அவன் இந்த இரண்டின் மூல காரணத்திற்குச் சென்று தன்னைத்தானே நிலைநிறுத்தும் அறியாமையிலிருந்து விடுபடும் வரை, இது லட்சக்கணக்கான ஆசைகளை உருவாக்குகிறது.**

**ஆசைகள் நிறைவேறாததாலோ, அல்லது வேண்டாத நிகழ்வுகளின் தாக்குதலாலோ ஏற்பட்ட வலுவான வடுக்கள், பலதரப்பட்ட ஏக்கங்களின் காற்று வீசுவதால் மனம் அலைபாய்ந்து கொண்டிருக்கும் வரை, அகற்றப்படுவது கடினம். துன்பத்திலிருந்து பரிகாரம் தேடுவதற்கான வழக்கமான உலக வழிமுறைகள் முட்டுக்கட்டையாக இருக்கும்போது, மனிதன், பரிகாரம் மற்றும் இழப்பீட்டைத் தேடுவதற்கான அறியப்படாத சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளை நாடுகிறான். இதுவே அற்புதங்களின் சாம்ராஜ்யம்.**

**ஆனால், இந்த உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் மாயையைச் சார்ந்திருப்பதால், இறுதி ஆய்வில், அற்புதங்கள் கூட மாயையே. கடவுளால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட சக்திவாய்ந்த, எல்லையற்ற மாயையில் சில சிறிய போலி மாயைகளை உருவாக்குவதில் சிறப்பு அம்சம் எதுவும் இருக்க**

**முடியாது. மனிதனுக்குத் தெரிந்த சாதாரண இயற்கை வைத்தியம் மூலம் உடல் அல்லது மன துன்பத்தை குணப்படுத்துவது போல், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளின் மூலம் அடைய முடியும். ஆனால் அத்தகைய பரிகாரத்திற்கு, பொதுவாக, சிறப்பு ஆன்மீக முக்கியத்துவம் எதுவும் இல்லை. உண்மையான ஆன்மீக சிகிச்சையை விட இது மிகவும் குறைவான முக்கியத்துவம் வாய்ந்தது, உண்மையான ஆன்மீக சிகிச்சை, சாத்தியமான அனைத்து துன்பங்களின் விதைகளையும் மனதிலிருந்து அகற்றும்.**

**இறை உணர்வை நாடும் இறுதி இலக்கை நோக்கி, மனிதகுலத்தை பெரிய அளவில் வழிநடத்தும் நோக்கத்திற்காக நிகழ்த்தப்படும் வேளையில் மட்டுமே, அற்புதங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன; இல்லையெனில், அவை நிச்சயமாக இயற்கையான பரிணாம செயல்முறையில் குறுக்கீடாக இருக்கும். உண்மையில், மக்கள் உடல் மற்றும் மன துன்பங்களை, கடவுளின் வெகுமதிகளாக பார்க்க வேண்டும். இவை, கடந்து செல்லும் நிகழ்வுகளின் பயனற்ற தன்மை மற்றும் நித்தியத்தின் உள்ளார்ந்த மதிப்பைப் பற்றிய தங்கள் சொந்த பாடங்களைக் கொண்டு வரும். கனிவோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றின் மூல காரணத்தைப் புரிந்து கொள்ளும்போது, அவர்கள் ஆன்மாவைப் புனிதப்படுத்தி, சத்தியத்தின் நிலையான மகிழ்ச்சிக்கு அறிமுகப் படுத்தப் படுகிறார்கள்.**

ஹமிர்பூரில் இருந்தபோது, பாபா பெண்டுவை தொலைத்தந்தி அலுவலகத்திற்கு ஒரு முக்கியமான செய்தியை வழங்க அனுப்பினார். பெண்டு உள்ளே சென்று பார்த்தபோது அலுவலகம் திறந்திருந்த போதும் அங்கு ஒருவரும் இல்லை. அனைவரும் பாபாவின் தரிசனத்திற்காகச் சென்றிருந்தனர். பெண்டு ஒரு ஏவலாளைக் கண்டுபிடித்து, அவரிடம் தலைமை அதிகாரியின் பெயரைக் கேட்டறிந்து, மீண்டும் தரிசன இடத்திற்குச் சென்றார், அங்கு அந்த நபரை ஒலிப்பெருக்கியில் அழைத்தபோது, அந்த நபர் உடனடியாகத் தனது அலுவலகத்திற்குத் திரும்பிச் சென்றார்; தந்தி அனுப்பப்பட்டது.

பாபா ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குச் செல்லும் வேளையில், மக்கள் பயபக்தியுடன் சாலையோரத்தில் நின்றனர், பாபா அவர்களுக்கு தரிசனம் வழங்க காரிலிருந்து இறங்க வேண்டியதாக இருந்தது. அவர் இங்கோட்டாவுக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஸுமேர்பூர் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 500 ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அவரது வருகைக்காக மண் சாலையோரம் மணிக்கணக்கில் காத்திருந்தனர். பாபாவின் தரிசனத்திற்காக ஒரு சிறிய மேடையை எழுப்பியதை, பாபா அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

வெகுஜன தரிசனம் என்பது இரவும் பகலும் கொந்தளிப்பான, இடைவிடாத செயல்பாட்டின் நேரமாக இருந்தது, அது பல 'தீப்பந்தங்களை' தூண்டிவிட்டு, இறுதியில் முழு மாவட்டத்தையும் அன்பின் நெருப்பில்

எரியச்செய்தது. 1952, நவம்பர் 20ஆம் நாள் வியாழன் அன்று **இங்கோட்டா**வைச் சென்றடைந்த பின்னரே, பாபாவுடன் இருப்பவர்கள் ஓய்வெடுக்க முடியும்; அங்கு பாபா மற்றும் மண்டலிக்கு **லக்ஷ்மிசந்த் பாலிவாலின்** இல்லத்தில் தங்கும் வசதி செய்யப்பட்டிருந்தது. ஆனால் பாபாவைப் பொறுத்த வரையில், அவரது 'ஓய்வு' என்பது அசௌகரியங்களும் சிரமங்களும் மட்டுமே! **பிந்த்ர பிரசாத் நிக்கமின்** இல்லத்திற்கும் விஜயம் செய்ய பாபா ஒப்புக்கொண்டார், அங்கு அவரது குடும்பத்தினர் பாபாவின் ஆரத்தி மற்றும் பூஜைக்காக அனுமதி கோரினர். பாபா, அதற்கு இணக்கம் தெரிவித்ததும், வழிபாட்டு விழா தொடங்கிய அவ்வேளையில், அன்பின் ஒளிரும் கதிர்கள் அறைக்குள் ஊடுருவி, மொத்த கூட்டத்தையும் கண்கலங்கச் செய்தது. பாபாவின் கனிவான கருணையில், கண்ணீர் விழாவைத் தொடரவிடாமல், அவசரமாக வீட்டை விட்டு வெளியேறினார்.

அதன் பின்னர், ஏறக்குறைய ஒரு மணி நேரம் பாபா அமைதியின்றி காணப்பட்டார். பாலிவாலின் இல்லத்திற்கு எதிரே அவர் முன்னும் பின்னுமாக வேகமாக நடக்கத் தொடங்கினார். சில நேரங்களில், தூரத்தில் எதையோ நிலையாகப் பார்ப்பது போல, திடீரென நிற்பதும், அமைதியின்றி, அவ்வப்போது அவர் மண்ணில் தரையில் அமர்ந்து, தனது உள் பணியில் மூழ்கியது போலத் தோன்றினார். பாபா, சுற்றும் முற்றும் பார்க்காமல், சுற்றுப்புறத்தை மறந்தவராக இருந்தார். மக்கள் சிலைகளைப் போல் அமர்ந்து அமைதியாக அவரைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்தப் புனிதமான மனநிலையில் பாபாவின் வலது கை விரல்கள் வேகமாக நகர்ந்தன.

ஏறக்குறைய அரை மணி நேரத்திற்குப் பிறகு, சூரிய அஸ்தமன நேரத்தில், விவரிக்க முடியாத அமைதி நிலவிய இந்த நேரத்தில், 'பாபா!' என்று புக்கார் உரத்த குரலில் கூக்குரல் விடுத்தார். புக்கார் இது வரை பாபாவையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தவர், இப்போது அவரால் தன்னை அடக்கிக் கொள்ள முடியாத நிலையில், "பாபா, நான் சிறுவயதில் ஒருமுறை ராமபிரானைக் கனவில் கண்டேன். நான் இதே இடத்தில் ராமரை தரிசனம் செய்தேன்!" என்று கதறினார்.

பாபா, புக்காரைப் பார்த்து லேசாகச் சிரித்தது போலத் தோன்றியது. இன்னும், அவர் மிகவும் தொலைதூர பார்வையில் இருந்தது போலத் தோற்றமளித்தார், மேலும் அவரது கண்களில் ஒரு வெறுமையான தோற்றமும் தென்பட்டது. அனைத்தும் மீண்டும் அமைதியாக இருந்த சூழ்நிலையில், பாபா எழுந்து நின்று, சாவகாசமாக ஒரு பாதத்தை பக்கத்திலிருந்த படி விளிம்பில் ஊன்றினார். பலத்த சத்தம் கேட்ட அவ்வேளையில் சில நொடிகளில் புக்கார் தரையில் மயங்கி விழுந்தார்!

அவருக்குக் காயம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற கவலையில் பாபா, முதலில் புக்கார் பக்கம் வந்தார். ஒரு பெரிய, பருமனான நபர் என்பதால், புக்காருக்கு சிறிது காயம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, புக்கார் இவ்வாறு விளக்கினார்: "பாபா, அவருடைய பாதத்தை, பக்கத்திலிருந்த படி விளிம்பில் ஊன்றிய வேளையில், நான் ராமபிரானைக் குழந்தையாகக் கண்ட கனவை மிகவும் தத்ரூபமாக மறுவடிவமைத்து காட்சியளித்தார்."

**'மதமும் அரசியலும்'** (RELIGION AND POLITICS) என்ற தலைப்பில் பின்வரும் செய்தி பல தரிசன நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்டது:

**கடவுளின் ஆணைப்படி, நவம்பர் 15 முதல் ஆரம்பமான அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு, இருமைத்தன்மையின் மாயாஜாலத்தால் மட்டுப்படுத்தப்படவோ அல்லது வர்ணம் தீட்டவோ அனுமதிக்காமல், அனைவருக்கும் சத்தியத்தில் வாழும் வாழ்க்கையை வழிநடத்தும் எனது தெய்வீக பணியில் என்னை மூழ்கடிக்கச் செய்கிறது.**

**தெய்வீக ஜீவன், விலங்குகள் மற்றும் காய்கறி ராஜ்யங்களின் ஜீவராசிகள் உட்பட அனைவரும் ஒன்றாக இருப்பதை அரவணைப்பதால், மனோ நாஷ்** (வரையறுக்கப்பட்ட மனதை நிர்மூலமாக்குதல்) **அடையப்பெற்ற தருணத்திலிருந்து நான் அந்த அளவிட முடியாத, முழுமையான ஐக்கியத்தை அடைந்தேன்; மேலும் எல்லையில்லா தெய்வீக வாழ்க்கை, என்னை, எந்த சாதி, மதம், சமய கோட்பாடு அல்லது அரசியல் கட்சியுடன் அடையாளம் காட்டிக்கொள்ள முடியாது. எனது கண்ணோட்டத்தில் எல்லா மதங்களும் மேன்மையானவை; ஆனால் கடவுள் அவற்றையெல்லாம் விட மேன்மையானவர். அதேபோல், அனைத்து அரசியல் கட்சிகளும், தமது சொந்த வழியில், குறைந்தபட்சம் அவர்கள் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களில் உன்னதமானவை. ஆனால் பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத இறை வாழ்வின் கூற்றுக்கள் தவிர்க்கமுடியாத அளவிற்கு உயர்ந்தவை, மேலும், எந்தக் கட்சியினரும் எவ்வளவுதான் உன்னதமானதாக இருந்தாலும் அதை விடவும் மகத்தானவை.**

**எனவே, நான் எல்லா மதங்களையும் நேசிக்கிறேன், வணங்குகிறேன்; ஆனால் நான் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல. நான் வேறொரு மதத்தை நிறுவவோ அல்லது மனிதனுக்கு எதிராக மனிதனைப் பிரிக்கும் எண்ணற்ற மாயைகளை இணைக்கவோ முயலவில்லை. எந்த மதமும் உண்மைப்பொருளை அணுகும் நுழைவாயிலாக இருக்கும் ஒரே செயல் நோக்கமே தவிர வேறொன்றும் இல்லை; ஆனால் ஒவ்வொரு மதமும், காலப்போக்கில், ஒரு முகத்திரையாக மாற்றப்பட்டு, ஒரே**

**உண்மைப்பொருளைப் பற்றிய தெளிவான உணர்வுக்குத் தடையாக இருக்க வழிவகுக்கிறது.**

**நேரடியான உள்ளுணர்வின் ஆதாரமான உண்மைப்பொருள் அறிவுப்பூர்வமாகவும், வடிவமைக்கப்பட்ட ஒன்றாகவும் உருவெடுக்கும் வேளையில், அது மதங்கள் மற்றும் மதக்கோட்பாடுகளில் சிக்கிக் கொள்கிறது. இந்த (மத நம்பிக்கைகள் மற்றும் கோட்பாடுகள்) ஆன்மாவை விடுவிக்கும் முயற்சியில் அதைப் பிணைத்துவிடுகிறது. உண்மைப்பொருளை வெளிப்படுத்த முயலும் செயலிலேயே அவர்கள் உண்மைத் தன்மையை மறைத்துவிடுறார்கள். இந்த வேடிக்கையான சோகம், மனிதனுக்கு வழங்கப்பட்ட அனைத்து உலக மதங்களின் அறிவுபூர்வமான முற்கால பகுப்பாய்வில் தம்மைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஆனால், மனிதன் எப்பொழுதும் விழிப்புடன் இருந்து, வெளிப்படுத்த முடியாத, ஆனால் மாறாத ஆன்மீக உண்மையின் உள்ளார்ந்த கருத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருந்தால், அது தவிர்க்க முடியாதது அல்ல; அது தன்னைத் தானே, அனைத்தையும் தழுவிய வாழ்க்கை தெய்வீகமானது, ஒரே நேரத்தில் பிரிக்க முடியாதது மற்றும் வரம்பற்றது என்பதைத் தெளிவுறச் செய்யும்.**

இங்கோட்டாவில் பாபாவின் பொழுதுபோக்கிற்காக, லக்ஷ்மிசந்த் பாலிவால் ஒரு நாள் பணியாளர்களின் விளையாட்டை ஏற்பாடு செய்தார். இந்த விளையாட்டில், இரண்டு தரப்பினரும் நீண்ட குச்சிகளைக் கைகளில் ஏந்தி ஆட்டத்தைத் தொடங்கி, ஒருவரையொருவர் பலவந்தமாகத் தாக்கி, எதிர் தரப்பின் எல்லையை மீற முயற்சித்தனர். எந்தவொரு கவனக்குறைவான போட்டியாளருக்கும் கடுமையான காயம் விளைவிக்கும் அபாயத்தில் இது மிகவும் தீவிரமான விளையாட்டு.

1952, நவம்பர் 23 ஞாயிற்றுக்கிழமை அன்று, **மஹேவா**வுக்கு அருகிலமைந்த **மெஹரஸ்தானா**வுக்குச் செல்லும் வழியில், கேஷவ் நிக்கம் பாபாவிடம், "என்னுடைய ஒரு முஸ்லீம் நண்பர் அனாதை இல்லம் ஒன்றை நடத்தி வருகிறார். நீங்கள் விரும்பினால், அவருடைய நிறுவனத்திற்கு விஜயம் செய்யுமாறு வேண்டுகிறார்" என்று கூறினார்.

பாபா ஒரு நிபந்தனையை முன்வைத்து ஒப்புக்கொண்டார்: **"குழந்தைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, நான் அவர்களுக்குப் பிரசாதம் வழங்குவேன்; ஆனால் அவர்கள் முழு அமைதி காக்க வேண்டும், நான் அவர்களை தரிசனம் செய்யும்போது அசையாமல் இருக்க வேண்டும்."** கேஷவ் அதை ஏற்றுக்கொண்டு அனாதை இல்லத்தில் தேவையான ஏற்பாடுகளைச் செய்தார். பாபா வந்ததும் ஆறு அல்லது ஏழு சிறுவர்கள் அவர் முன்னிலையில் அழைத்து வரப்பட்டனர். பாபா முதல் சிறுவனின் கால்களைக்

கழுவி, கால்களை வணங்க முயன்றபோது, சிறுவன் திடீரென பின்வாங்கினான். பாபா கவனிக்கத்தக்க வகையில் கடுகடுப்பாகி, **"சிறுவன் தனது கால்களை பின்னுக்கு இழுக்கும் போது, என் தலை தரையில் பட்டிருந்தால், இந்த உலகம் நரகமாகியிருக்கும்"** என்று கூறினார். இருப்பினும், பாபா இதர குழந்தைகளின் கால்களில் தலை வைத்து அவர்களுக்கு தலா 20 ரூபாய் பிரசாதமாக வழங்கினார். பாபா முழுத் தொகையையும் அனாதை இல்லத மேலாளரிடம் கொடுத்தார், ஆனால் பேராசை மிக்க அந்த நபர், பணத்தை தனக்காக வைத்துக்கொண்டார்.

அவர்கள் அங்கிருந்து சென்ற போது, பாபா தனது பணி பயனற்றதாகி விட்டதாகவும், இனி மாவட்டத்தில் வேறு எந்த கிராமங்களுக்கும் செல்லப் போவதில்லை என்றும் கூறினார். புக்காரும், ஆதர்ஷ் கரேயும் அழத் தொடங்கினர். வழியில் பாபா காரை நிறுத்திவிட்டு இறங்கினார். புக்கார் தனது அங்கியை தரையில் விரித்ததும், பாபா ஒரு புளிய மரத்தின் கீழ் அமர்ந்தார். அவர் கேஷவ், புக்கார் இருவரிடமும், **"இங்கு நடந்தது விரும்பத்தக்கது அல்ல, இது அனாதை இல்லத்திற்கும் கிராமத்திற்கும் ஒரு துரதிர்ஷ்டமான நோயை வரவழைப்பதாக இருக்கும். அவர்களை இந்த துரதிர்ஷ்டத்திலிருந்து விடுவிக்க ஒரே தீர்வு நான் மெஹரஸ்தானாவை சென்றடையும் தருணத்தில், பதினான்கு வயதுக்குட்பட்ட பதினான்கு அழகான மற்றும் புத்திசாலி அனாதை சிறுவர்களின் கால்களைக் கழுவி தலைவணங்கி 14 ரூபாய் வழங்கவேண்டும்"** என்று கூறினார்.

400 பேர் மட்டுமே வாழும் மஹேவா போன்ற சிறிய கிராமத்தில் அந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் போதுமான சிறுவர்களைக் கண்டுபிடிப்பதில் புக்காருக்கு சந்தேகம் இருந்தாலும், கேஷவும் புக்காரும் ஒப்புக்கொண்டனர்.

மேலும், இடிந்து விழுந்த தற்காலிக பாலத்தால் அவர்களின் பயணம் தாமதமானது. பாலம் சீரமைக்கும் பணி நடந்து கொண்டிருந்த போது, பாபா ஒரு கிராமத்து இளைஞனைச் சுட்டிக்காட்டி, அவனிடம் பேச்சுக் கொடுக்குமாறு அறிவுறுத்தினார். அவனுடைய வயதைக் கேட்டதும், ‘பதினான்கு’ என்று பதிலளித்தான் சிறுவன். பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்து, **"இது ஒரு நல்ல சகுனம்"** என்று சைகையால் தெரிவித்து, அவர் சிறுவனை ஆசீர்வதித்தார், பின்னர், **"ஒரு நாள், அவர் ஒரு புனிதராக மாறுவார்!"** என்று கருத்து தெரிவித்தார். கேஷவ் மற்றும் சிலர் தேவையான சிறுவர்களின் எண்ணிக்கையைக் கண்டறிய தங்களால் இயன்றதைச் செய்தனர், இறுதியில் அந்த வயதில் பதினான்கு பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். இவ்வாறு, மெஹரஸ்தானாவிற்கு வந்ததும், பாபா செய்த முதல் செயல் இதுவாகும்.

கேஷவ் நிக்கமும் அவரது சகோதரர் முகுந்த்லாலும் மஹேவா கிராமத்திற்கு வெளியே மலை உச்சியில், சிறப்பாக ஒரு மண் குடிசையைக் கட்டியிருந்தனர்; அதற்கு **மெஹரஸ்தானா** (மெஹரின் நுழைவாயில்) என்று பெயர் சூட்டப்பட்டது. பாபா அந்த இடத்தையும், அதன் இயற்கை சூழலையும் மிகவும் விரும்பினார். அங்குதான், முதல்முறையாக, கேஷவ் பாபா முன்னிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இயற்றிய '**மெஹர் சாலிஸா**' என்ற நீண்ட கவிதையைப் படித்தார்.

அவருடைய பாராட்டு மொழிகள் பாபாவை மகிழ்வித்தது. இசைத்தொகுப்பு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது, அவர் அதை மீண்டும் மீண்டும் வாசிக்கச் செய்தார். பின்னர், **"இந்த வசனங்கள் என் இதயத்தை ஆழமாகத் தொட்டன"** என்று கருத்து தெரிவித்தார். கேஷவின் முழுக் குடும்பமும் பாபாவின் தொடர்பில் வந்தது; அவரது மனைவி சுதாதேவி மற்றும் மகள்கள், மெஹர் பிரபா, மெஹர் ஜோதி, மெஹர் மணி ஆகிய அனைவரும் பாபாவுடன் தனிப்பட்ட நேர்காணலில் பங்கெடுத்தனர்.

**பல்வீர் ஸிங்** உணவுக்கான சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார், உண்மையில், அவர்களின் ஹமிர்பூர் பயணம் முழுவதும், பாபா, மண்டலி அனைவருக்கும் சிறப்பான உணவு மற்றும் தங்கும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆனால், அனல் பறக்கும் வாழ்வில், பாபாவோடு இருந்தவர்களால், நிதானமாக இத்தகைய உணவை ரசித்து உண்ண முடியவில்லை.

'**கடவுளைச் சென்றடையும் நெடுஞ்சாலை**' (HIGHROADS TO GOD) என்ற தலைப்பில் ஒரு பொது விழாவில் கடவுளுக்கான பாதைகள் பற்றிய செய்தி வழங்கப்பட்டது:

**இதன் முக்கியமான அர்த்தத்தில் பார்த்தால், வாழ்க்கையின் அனைத்து நிலைகளும், அனைத்து பாதைகளும் இறுதியில் ஒரே இலக்கை நோக்கி, அதாவது இறைவனை நோக்கிச் செல்கின்றன. அனைத்து நதிகளும் வேறுவேறு திசைகளில் பாய்ந்து ஓடினாலும், அவற்றின் பாதைகளை வகைப்படுத்தும் பல வளைவுகளைக் கடந்து சென்றாலும், இறுதியில் கடலைச் சென்றடைகின்றன. இருப்பினும், யாத்ரீகரை அவரது தெய்வீக நிலைக்கு நேரடியாக அழைத்துச் செல்லும் சில நெடுஞ்சாலைகளும் உள்ளன. அவை மிகவும் இன்றியமையாதவை, ஏனென்றால் யாத்ரீகர் அடிக்கடி தேவையில்லாமல் சிக்கலான வழித்தடங்களின் வனாந்தரத்தில் சிக்கிக்கொண்டு நீண்ட நேரம் அலைந்து அல்லல் படுவதைத் தவிர்க்க முடிகிறது.**

**ஒழுங்கமைக்கப்பட்ட மதங்களின் சடங்கு சம்பிரதாயங்கள், இறை நாட்டம் மிக்க ஒருவரை, சில நெடுஞ்சாலைகளின் உண்மையான உள்**

பயணத்தின் நுழைவாசலுக்கு மட்டுமே அழைத்துச் செல்லும். இவை மிகவும் கணிசமான தூரத்திற்கு ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தாலும், இறுதியில் அவை அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்படுகின்றன. முந்தைய கட்டங்களில், தனிநபர்களின் மனப்படிவ சூழல்களின் பன்முகத்தன்மை மற்றும் அவர்களின் குணாதிசயங்களின் வேறுபாடுகள் காரணமாக அவை வேறுபடுகின்றன. எவ்வாறாயினும், சாலைகள் பலவாக இருந்தாலும், இலக்கு எப்போதும் ஒன்றாகவே இருக்கும் என்பது ஆரம்பத்திலிருந்தே தெளிவாக இருக்க வேண்டும்: அதாவது 'இறைவனுடன் ஐக்கியமாவது'.

இந்த நெடுஞ்சாலைகளில் மிகவும் துரிதமானது இறை-மனிதன் மூலம் பயணிப்பது, ஏனெனில் அவர் உண்மைப்பொருளுடன் உணர்வுபூர்வமாக ஒன்றிணைந்து இருக்கிறார். இறை-மனிதனில், இறைவன் தமது எல்லா மகிமையிலும், தமது எல்லையற்ற சக்தி, புரிந்துகொள்ள முடியாத அறிவு, விவரிக்க முடியாத பேரின்பம், நித்திய நிரந்தர வாழ்வு ஆகியவற்றுடன் தன்னை வெளிப்படுத்துகிறார். முழுமையான அர்ப்பணிப்பும் அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் அவரை அணுகும் அதிர்ஷ்டசாலிகளுக்கு மட்டுமே இறை-மனிதன் வழியாகச் செல்லும் இந்தப் பாதை சாத்தியம். இறை-மனிதனிடம் முழுமையான சரணடைதல் என்பது மிகவும் முன்னேறிய ஆர்வலர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். ஆனால் இது சாத்தியமில்லாத போது, இறுதியில் இறைவனின் அருளைப் பெறக்கூடிய இதர நெடுஞ்சாலைகள் பின்வருமாறு:

1. இறைவன் மீது அன்பும், அவரைக் காண வேண்டும், அவருடன் ஐக்கியமாக வேண்டும் என்ற தீவிர ஏக்கம்.
2. துறவிகள் மற்றும் இறை அன்பர்களின் சகவாசத்தில் தொடர்ந்து இருந்து, அவர்களுக்கு முழு மனதுடன் சேவை புரிவது.
3. காமம், பேராசை, கோபம், வெறுப்பு, அதிகாரம், புகழ் மற்றும் பிறரின் தவறுகளைக் கண்டறிதல் போன்றவற்றைத் தவிர்ப்பது.
4. எல்லோரையும், எல்லாவற்றையும் வெளியளவில் முற்றிலுமாகத் துறந்து, தனிமையில், உபவாசம், பிரார்த்தனை மற்றும் தியானத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வது.
5. வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாக பாவித்து, தூய்மையான இதயத்துடனும், அப்பழுக்கற்ற மனதுடனும், தீவிரமான செயல்பாட்டின் மத்தியிலும் பற்றற்ற நிலையிலேயே அனைத்து உலகக் கடமைகளையும் மேற்கொள்வது.
6. எந்தவிதமான ஆதாயம் அல்லது வெகுமதி பற்றிய சிந்தனையும் இல்லாமல், மனிதகுலத்திற்கு தன்னலமற்ற சேவை புரிவது.

மெஹரஸ்தானாவில் பாபாவின் குடிசையைக் கட்டுவதற்காக நியமிக்கப்பட்ட ஓர் ஏழை செருப்புத் தொழிலாளி, இரவும் பகலும் குளிரில் முழு மனதுடன் அயராமல் உழைத்தபோது, அவர் நோய்வாய்ப்பட்டார். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், பாபா வந்தபோது அந்த நபரால் தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியவில்லை.

அடுத்த நாள், அவருக்குப் பின்னால் ஒரு பெரிய கூட்டத்தை உடன் அழைத்துக்கொண்டு, பாபாவே அந்த ஏழையின் சிறிய, ஒரே அறை அமைந்த குடிசைக்கு வருகை தந்தார். மக்களின் ஆரவாரம் கேட்டு வெளியே வந்து, மெஹர் பாபாவைக் கண்ட அதிர்ச்சியில் அந்த நபர் மயங்கிய நிலையில், வெறிபிடித்தவர் போல் அவரிடம் ஓடி வந்து கால்களில் விழுந்து அழுதார். பாபாவும் மண்டலியும் அவரை எழுப்பி மீண்டும் படுக்கைக்கு அழைத்துச் சென்றனர். உடைந்த கட்டிலில் அவருக்கு அருகில் அமர்ந்திருந்த பாபா கண்ணீரைத் தம் கைகளால் துடைத்தார். "கடவுளே, என்னை மன்னியுங்கள்" என்று அந்த மனிதன் கதறினார். "என்னால் உங்களுக்கு எதையும் வழங்க முடியாது. பழம் இல்லை, பூ இல்லை, தேங்காய் இல்லை - இருந்தும் நீங்கள் ஒரு ஏழை செருப்புத் தொழிலாளியின் குடிசைக்குள் நுழையும் அளவுக்கு கருணை காட்டியுள்ளீர்கள்."

பாபா கனிவான கருணையுடன் பதிலளித்தார், "**உங்கள் அன்பே நீங்கள் வழங்கக்கூடிய மிகவும் மதிப்புமிக்க பிரசாதம்**."

ஹமிர்பூரில், பாபா இவ்வாறு நிபந்தனை விதித்திருந்தார்: "**நான் முதலில் ஒரு மஸ்துடன் பணிபுரிவேன், அதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு தரிசனம் வழங்குவேன்**." எனவே பைதூல் அந்தப் பகுதியில் வாழ்ந்த ஒரு மஸ்தைத் தேடி வெளியே சென்றார். அவருக்கு வழி காட்ட, கேஷவ், சுவாமிதீன் ஷர்மா என்ற நபரை அழைத்துச் செல்லும்படி பரிந்துரைத்தார், அந்த நபர் பாபாவின் மீது சிறிதும் நம்பிக்கை இல்லாதவராகவும், அதிருப்திகரமான வாழ்க்கை நடத்தி வந்ததாகவும் கூறப்பட்டது.

பைதூல் மஸ்துகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தபோது, ஷர்மா திடீரென மௌலானா ஸாஹேப் என்று அழைக்கப்பட்ட ஒருவரை நினைவுகூர்ந்து, பைதூலை அவரிடம் அழைத்துச் சென்ற வேளையில், மௌலானா, பாபாவிடம் செல்ல இணக்கம் தெரிவித்தார். பைதூல் மஸ்தை தரிசன பந்தலுக்கு அழைத்து வந்து, அங்கு, திரையால் மறைக்கப்பட்ட இடத்தில், பாபா அவரைத் தனியாகத் தொடர்பு கொண்டார். அவர்களின் தொடர்புக்குப் பிறகு, பந்தலுக்குத் திரும்பிச் செல்லும் வேளையில், மஸ்த், ஷர்மாவைக் கையால் பற்றிக்கொண்டு, பாபாவின் முன்னிலையில் அழைத்துச் சென்றார். மேடையில் பாபாவின் அருகில் ஒரு பெரிய கூட்டம் நின்றுகொண்டிருந்தது. மஸ்த் கீழ்வரும் பல்லவியைப் பாட, ஷர்மா, பாபாவின் தரிசனத்திற்காக முன்னோக்கிச் சென்றார்:

ஓ மெஹர் பாபா, உங்களுக்குத் தெரியாது,

உலகில் ஒரு பைத்தியக்காரன் அலைந்து திரிவது!"

ஹமிர்பூரில் பாபாவின் தரிசனத்தால் ஷர்மா அந்த அளவுக்கு ஈர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. மெஹரஸ்தானாவுக்குச் செல்ல அவருக்கு விருப்பம் இல்லாத போதும், கேஷவின் அறிவுறுத்தலின் பேரில் அவர் அங்கும் சென்றார். நவம்பர் 23 அன்று மாலை, அவர் மீண்டும் பாபாவின் தரிசனத்திற்காகச் சென்றார்; இந்த முறை தரிசனம் அவரில் ஓர் ஆழமான விளைவை ஏற்படுத்தியது.

அடுத்த நாள், ஷர்மா ஹமிர்பூருக்குத் திரும்ப வேண்டியிருந்தது; அன்று பாபா **மஹோபா**விற்கு செல்லவிருந்தார். ஷர்மா தனது நண்பர்களுடன், மெஹரஸ்தானாவிலிருந்து **கப்ராய்** கிராமத்திற்கு அதிகாலையில் புறப்பட்டு, அங்கிருந்து அவர் பேருந்தில் பயணம் செய்யவிருந்தார். முந்தைய நாள் மாலை பாபாவின் தரிசனம் அவரது இதயத்தைத் தொட்டது, மேலும் அவர் பாபாவை மீண்டும் ஒருமுறை பார்க்க ஆவலாய் இருந்தார். இந்த எண்ணம் அவரது மனதில் தோன்றிய அந்த நேரத்தில் பாபாவின் கார் அங்கு வந்து நின்றது. பாபா வெளியே வந்து பேருந்துக்காகக் காத்திருந்த அனைவரையும் அரவணைத்தார் - ஷர்மாவைத் தவிர!

அதைத் தொடர்ந்து பாபா மீண்டும் காரில் ஏறி புறப்பட இருந்தார். மனமுடைந்த ஷர்மா, "நான் பெரும் பாவி என்பதால் பாபா என்னைத் தழுவவில்லை" என்று நினைத்தார். ஆனால் கருணையுள்ள கடவுள் மீண்டும் காரை விட்டு இறங்கி, ஷர்மாவை நோக்கி நடந்துச் சென்று, அவரை அன்புடன் தழுவினார். ஷர்மாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அந்த நாள் அவர் வாழ்வில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர் தனது பழைய வழிகளை விட்டுவிட்டு, மெஹர் பாபாவின் சேவைக்காக தன்னை அர்ப்பணித்தார்.

1952, நவம்பர் 25ஆம் தேதி செவ்வாய்கிழமை அன்று **ரத்** நகரில், அனல் பறக்கும் வாழ்வின் மிகப்பெரிய தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. **கயா பிரசாத் கரே**, அவருடைய மகன் ஆதர்ஷ், அவரது முழுக் குடும்பம், அவர்களுடன் **கௌரி ஷங்கர் வைத்தியா** அனைவரும் இணைந்து திட்டமிட்ட இந்த நிகழ்ச்சியில் ஏறக்குறைய 20,000 பேர் கலந்து கொண்டனர். கயா பிரசாத் ஒரு பிரம்மாண்டமான பந்தல் அமைத்திருந்தார், மேலும் அனைத்து சிறந்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, அலங்கார தோரணங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. மனிதகுலத்தின் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது; பாபா நாள் முழுவதும் மாலை வரை இடைவிடாது பிரசாதத்தை விநியோகித்தார்.

வழக்கமான நடைமுறைப்படி, பாபாவின் அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு பற்றிய விளக்கத்திற்குப் பின்னர், ஏழு செய்திகளில் ஒன்று

வாசிக்கப்பட்டது - **‘நமது நோய்களும், பரிகாரங்களும்’** (OUR ILLS AND OUR REMEDIES) என்ற தலைப்பில் அமைந்தது:

**இன்றைய அனுமானங்களின்** (குருட்டு ஆதாயம் தேடும்) **உலகில், அது போல் அரசியல் செயல்பாடுகள் அல்லது தனிப்பட்ட முயற்சிகளில், மனிதர்கள், மனிதகுலத்தின் வாரிசாகத் திகழும் பல தீமைகளுக்குத் தீர்வு காண தீவிரமாக முயற்சிக்கின்றனர். நமது அனைத்து மத நம்பிக்கைகள் மற்றும் கோட்பாடுகள், அனைத்து கட்சிகள் மற்றும் ‘இஸம்கள்’ இந்த நோக்கத்திற்காக வழங்கப்படும் பல நடைமுறை பரிகாரங்கள். ஆனால், அவர்களின் நோக்கம், ஆரம்ப காலத்தில் நல்லதாக இருந்தாலும், அவை பெரும்பாலும் தீர்வுகளுக்கு பதிலாக குழப்பத்தை உருவாக்குகின்றன, ஏனென்றால் அவை தனிநபரின் உள் ஆன்மீக மாற்றத்தால் செயல்படுத்தப்படாவிட்டால், அனைத்து வெளியளவிலான அமைப்புகளும் தோல்வியை சந்திக்கும் என்ற தவிர்க்க முடியாத உண்மையின் பார்வையை அவர்கள் இழந்துவிடுகிறார்கள்.**

**ஆகவே, நான் கட்சிகள், மதங்கள் மற்றும் ‘இஸம்கள்’ பற்றி கவலைப்படவில்லை, ஆனால் மனிதகுலம் உண்மையிலேயே காப்பாற்றப்பட வேண்டுமானால், முழு மனதுடன் மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை முக்கியத்துவங்களைப் பற்றி மட்டுமே நான் கவலைப்படுகிறேன்.**

**துறவி -- பாவி, சிறியவர் -- பெரியவர், பணக்காரர் -- ஏழை, அறிவிலி -- புத்திசாலி, கிழக்கு -- மேற்கு ஆகியவற்றில் நான் சமமாக அக்கறை கொண்டுள்ளேன். அவர்கள் அனைவருக்கும், பரிந்துரைக்கப்படும் பரிகாரங்களின் ஒரே தீர்வு, ஆன்மீகத்தைப் புரிந்துகொள்வதாகும், இது ஒரே நேரத்தில் பிற எல்லா வகையான அறிவையும் உள்ளடக்கி மாற்றியமைக்கிறது. இது தவிர்க்க முடியாமல் கொள்கை, கோட்பாடு மற்றும் நடைமுறையின் கலவையை துரிதப்படுத்துகிறது, ஏனெனில் இது மனதைப் போலவே இதயத்தையும் சார்ந்துள்ளது. புரிந்துகொள்வது நமது விதிமுறையாக இருக்கும்போது, நம்மிடம் அழியாத அன்பும், ஆற்றல்மிக்க ஆக்கப்பூர்வமான செயலும் - சிக்கலற்ற அன்பும், முடிவுகளைச் சார்ந்திராத செயலும் உள்ளன. இறை வாழ்க்கையில் மனிதனின் இடத்தைப் பற்றிய உண்மையான புரிதல் - சில சமயங்களில் தவறான செயலின் மூலம் தானே விளைந்த, மேலும் பெரும்பாலும் கற்பனையின் மூலம் தானே உருவாக்கப்பட்ட மனிதனின் உடல் மற்றும் மனரீதியான துன்பங்களைத் தவிர்க்க உதவும்.**

**எல்லா மகிழ்ச்சியும், எவ்வளவுதான் கவர்ச்சி வாய்ந்ததாக இருந்தாலும், அது நித்திய சத்தியத்தின் வாழ்விலிருந்து துளிர் விடாத**

**வரையில் பனிபோல மறைந்துவிடும். வாழ்வின் துன்பங்களை மனமுவந்து ஏற்றுக்கொண்டு, அது உண்மையான மதிப்பு மிக்க மனநிலையை எழுச்சியுற செய்யும் வகையில் பயன்படுத்தாத வரை, அனைத்து துன்பங்களும் இதயத்தை கடினமாக்கும் அல்லது மன உளைச்சலுக்கு ஆளாக்கும். உடல் அல்லது அகங்கார மனதின் தவறான அடையாளத்தால் எழும் 'நாம் பிரிக்கப்பட்டவர்கள், தனித்துவமானவர்கள்' என்ற மாயத்தன்மையை நாம் கைவிடாத வரை, துன்பங்கள் எண்ணற்ற வழிகளில் நம்மை மீண்டும் மீண்டும் விடாமல் துரத்திக் கொண்டிருக்கும். இத்தகைய பிரிவினைகளை ஒப்புக்கொள்ளாத மற்றும் வரம்புகளை ஏற்காத நித்திய வாழ்வின் அழியாத ஆனந்தத்தில் உறுதியாக நிலை நிறுத்தப்படாவிட்டால், உண்மையான மகிழ்ச்சி மீண்டும் மீண்டும் நம்மைத் தவிர்த்துக் கொண்டே இருக்கும்.**

**எல்லாவற்றிலும் நித்தியமாக அதிரும் இந்த இறை வாழ்வின் சீடர்களாக இருங்கள்**!

ஒரு கட்டத்தில், ரத் கிராமத்தில் மிகப்பெரிய மக்கள் கூட்டம் கட்டுப்பாட்டை மீறியதால் பெருங் குழப்பம் நிலவியது; ஒரு பெண்மணி எரச்சை அணுகி, கூட்டத்தில் தன் மகனைத் தொலைத்துவிட்டதாகக் கூறினார். எனவே ஒலிப்பெருக்கியில் எரச் அறிவித்தார்: "ஒரு சிறுவன் தொலைந்துவிட்டான். அவனைக் கண்டுபிடித்ததும் மேடைக்கு அழைத்து வாருங்கள்."

சிறிது நேரத்தில், பாபாவின் அருகில் ஒரு சிறுவன், "அம்மா!" எனக் கதறினான், அவனே தொலைந்து போன குழந்தை; பாபாவின் அருகில் அமர்ந்து, அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். சிறுவன் பாபாவின் இனிப்புப் பிரசாதத்தைக் கையில் ஏந்திய வண்ணம் அதை சாப்பிட்டுக்கொண்டு அமர்ந்திருந்தான், அதை முடித்துவிட்டால், பாபா தனக்கு மீண்டும் பிரசாதம் கொடுப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால், அவனது திட்டத்தைக் கெடுத்து, அவனுடைய தாயார் வந்து அவனை அழைத்துச் சென்றார்.

ரத் கிராமத்தில் தங்கியிருந்தபோதுதான் மெஹர் பாபா மீண்டும் தனது அவமானத்தைப் பற்றி குறிப்பிட்டார், அவர் அவ்வப்போது, திரும்பத் திரும்ப எடுத்துரைக்கும் ஒரு முக்கியமான கருப்பொருள்: "**கடவுளுக்காக உயிரைத் துறந்தவர்களுக்காகவும், அவருக்காக வாழ்பவர்களுக்காகவும், கடவுளின் மகிமை தன்னிச்சையாக 100 சதவிகிதம் வெளிப்படுவதற்கு முன்பு, நான் அழைக்காத (எதிர்பாராத) 100 சதவிகிதம் அவமானத்தை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது**."

அவர் மேலும் கூறியதாவது: "**டெல்லியில், மிகவும் தேவையான இந்த அவமானத்திற்கு குறைந்தபட்சம் ஒரு சதவிகிதம் முன்னனுபவத்திற்கு வாய்ப்புள்ளது**."

பாபா மேலும் முன்னறிவிப்பாகத் தெரிவித்தார்: "**டெல்லியில் நீங்கள் என்னை இவ்வளவு மகிழ்ச்சியான மனநிலையில் காண மாட்டீர்கள். இருப்பினும், தலைநகரில் தங்கியிருக்கும் வேளையில் நான் மாபெரும் அறிவார்ந்த ஒரு நபரைத் தொடர்பு கொள்வேன்.**" அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று அப்போது எவருக்கும் தெரியாது.

**பாபு ராம்பிரசாத் நௌரங்கா**வில் பாபாவிற்கும் அவருடைய மண்டலிக்கும் அன்புடன் அனைத்தையும் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் பாபாவை எதிர்க்கும் ஒரு விரோதக் கும்பலும் அங்கே இருந்தது. இந்த நபர்கள் கால்வாய் பள்ளத்தை உடைக்கும் அளவுக்குச் சென்றனர். எல்லா இடங்களிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது, பாபாவால் நௌரங்காவில் நேரடியாக நுழைய முடியவில்லை. அவர் கிராமத்திற்கு வெளியே தரிசனம் வழங்கக் கட்டாயப்படுத்தப்பட்டார். ஆனால் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், பாபாவின் அனல் பறக்கும் வாழ்வின் போது இந்த எதிர்ப்பு சிறிது நேரத்தில் சாம்பலாக மாறியது, மேலும் இந்தக் குழப்பம் நடந்த இடம், இறுதியில், மெஹர் பாபாவின் வற்றாத நினைவுச்சின்னமாக மாறியது, '**மெஹர் தாம்**' என்று பெயரிடப்பட்டது.

நௌரங்காவில் ஒரு தரிசன நிகழ்ச்சியின் போது '**உண்மைப்பொருளானவர் கடவுள்**' (GOD AS TRUTH) என்ற தலைப்பில் பின்வரும் செய்தி வழங்கப்பட்டது.

**அடிப்படை நிலையில், அனைவரும் மற்றும் அனைத்தும் கடவுள், மேலும், அந்த உண்மைப்பொருளாகிய கடவுளை, சத்குரு அல்லது குருநாதர் மூலமாக உணர முடியும். பொதுவாக இந்திய தேசத்தில் வேதாந்தம், இந்த உச்ச நிலையில் ஏக இறைவனை வர்ணிக்கும் மொழியாக்கத்துடன் தொடர்புடையது. இப்போது, நான் வேதாந்தம் அல்லது ஸூஃபியிஸம் அல்லது வேறு எந்த 'இஸம்' பற்றியும் கவலைப்படவில்லை, ஆனால் கடவுளை மட்டுமே உண்மைப்பொருளாகக் கருதுகிறேன்; வரம்புக்குட்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட அகங்கார மனம் மறைந்த பின்னர் அவர் நம் அனுபவத்தில் வருகிறார்.**

**கடவுள் ஓர் அசைக்க முடியாத நித்திய உண்மைப்பொருள். அவர் பெயர், வடிவம், காலம், நேரம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட அவரது உருவமில்லா அம்சத்திலோ அல்லது அவரது தனிப்பட்ட மனித உருவிலோ, அவரை நேசிப்பவர்களுக்கும், அவரைத் தேடுபவர்களுக்கும், அவரிடம் சரணடைபவர்களுக்கும் தன்னை வெளிப்படுத்தி, அவர்களுடன் தொடர்பு கொள்கிறார். பெரும்பாலும் இருளில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மனித குலத்திற்கு ஒளியையும், உண்மைப்பொருளையும் வழங்க, எப்பொழுதும்**

மனித உருவில் அவதரிக்கும் இறை-மனிதர்கள் மூலமாக, சாதாரண மனிதனால் அவரை எளிதில் அணுக முடியும்.

கடவுளுடனான முழுமையான ஐக்கியத்தின் காரணமாக, இறை-மனிதன் என்றென்றும் 'நான் கடவுள்' எனும் நிலையை அனுபவிக்கிறார், இது வேதாந்தத்தில் 'அஹம் பிரம்மாஸ்மி', ஸுஃபி பாரம்பரியத்தில் 'அனல்-ஹக்' அல்லது கிறிஸ்து அறிவித்தது போல 'நானும் என் தந்தையும் ஒன்று' என அறியப்படுகிறது.

ஸுஃபிகளின் அனுபவத்தில், 'அனல்-ஹக்' அல்லது 'நான் கடவுள்' எனும் நிலை, 'ஹமா உஸ்த்' அதாவது அனைத்தும் கடவுள், அவரின்றி வேறொன்றும் இல்லை என்று அர்த்தம். இந்த அணுகுமுறையில் ஒரு நொடிப்பொழுதும் இடைவெளி இல்லாமல் கடவுள் மட்டுமே சிந்திக்கப்படுவதால், கடவுள் மீது அன்பு அல்லது கடவுள் மீதான ஏக்கத்திற்கு இடமில்லை. ஆன்மாவுக்கு, தான் கடவுள் என்ற அறிவுப்பூர்வமான நம்பிக்கை உள்ளது. ஆனால் உண்மையில் அந்த நிலையை அனுபவிப்பதற்காக, 'நான் உடல் அல்ல, நான் மனம் அல்ல; நான் இதுவும் இல்லை, அதுவும் இல்லை; நான் கடவுள்!' என்ற ஒருமுகப்படுத்தும் சிந்தனையும், தியானமும் இன்றியமையாதது. ஆன்மா தியானத்தின் மூலமாகத் தான் உணர்ந்ததை அனுபவிக்கிறது. ஆனால் கடவுளை அனுபவிக்கும் இந்த முறை கடினமானது மட்டுமின்றி, வறண்டு காணப்படுவதாகும்.

இந்த ஆன்மீக பாதை மிகவும் யதார்த்தமானது மற்றும் மகிழ்ச்சிகரமானது, அங்கு கடவுள் மீது அன்பும் பக்தியும் மிகையாக உள்ளது, இது கடவுளிடமிருந்து பிரிந்திருப்பது போன்ற தற்காலிக தோற்றத்தை முன்வைப்பது மட்டுமின்றி அவருடன் ஒன்றிணைவதற்காக ஏங்குகிறது. கடவுளிடமிருந்து பிரிந்திருப்பது போன்ற இத்தகைய தற்காலிக தோற்றத்தை ஆன்மா இரண்டு ஸுஃபி கருத்துகளில் உறுதிப்படுத்துகிறது; ஒன்று, 'ஹமா அஸ் உஸ்த்' அதாவது அனைத்தும் கடவுளிடமிருந்து வந்தவை, மற்றொன்று 'ஹமா டூஸ்த்' அதாவது அனைத்தும் அன்பான கடவுளுக்காக. இந்த இரண்டு கருத்தாக்கங்களிலும், ஆன்மா கடவுளிடமிருந்து பிரிந்திருப்பது தற்காலிக தோற்றம் என்பதை உணர வைக்கிறது, மேலும் அது அனைத்து இருமைத்தன்மைகளையும் உட்கொள்ளும் தீவிர அன்பின் மூலம், கடவுளிடமிருந்து இழந்ததுபோலத் தோன்றிய ஐக்கியத்தை மீட்டெடுக்க முயல்கிறது. இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே உள்ள ஒரே வித்தியாசம் என்னவென்றால், 'ஹமா டூஸ்ட்' நிலையில் உள்ள ஆன்மா, பிரியமானவராக கடவுளின் விருப்பத்தில் திருப்தி அடைகிறது; 'ஹமா அஸ்

**உஸ்த்' நிலையில், ஆன்மா, கடவுளுடன் ஒன்றிணைவதைத் தவிர வேறு எதற்கும் ஏங்குவதில்லை.**

**பிணைப்பு எனும் அடிமைத்தனத்தில் இருக்கும் ஆன்மாவை, தெய்வீக அன்பினால் மட்டுமே மீட்டெடுக்க முடியும் என்பதால், கடவுளுடன் முழுமையான ஐக்கியத்தை அடைந்து, அவரை மட்டுமே நிஜமாக அனுபவிக்கும் பரிபூரண குருநாதர்களும் கூட, பெரும்பாலும் இருமைத்தன்மையின் களத்தில் நுழைந்து, அன்பின் மொழியான இறை வழிபாடு, கடவுளின் சேவை என்ற வார்த்தைகளை, உருவமில்லா ஏக இறைவனாகவும், எண்ணற்ற வடிவங்களில் வெளிப்படும் கடவுள் மூலமாகவும் பேசுகிறார்கள்.**

**துக்காராம் போன்ற இந்து துறவிகள் பாடியது போலவும், அஸிஸியின் புனித பிரான்சிஸ் போன்ற கிறித்தவ மறை ஞானிகள் கற்பித்தது போலவும், அஸார் கைவன் போன்ற ஸொராஸ்ட்ரிய துறவிகளால் போதிக்கப்பட்டது போலவும், ஹபீஸ் போன்ற ஸுஃபி கவிஞர்களால் அழியாததாகவும் உருவாக்கப்பட்ட தெய்வீக காதல், சுயநலம் என்ற எண்ணத்திற்கு முற்றிலும் இடமளிப்பதில்லை. இருமைத்தன்மையின் அடிமைத்தனத்தையும் மாயையையும் வளர்க்கும் அனைத்து ஆசைகளையும் பலவீனங்களையும் அது விழுங்கிவிடுகிறது. இறுதியில், அது ஆன்மாவைக் கடவுளுடன் இணைக்கும் தருவாயில், சுய இறை ஞானம், நிலையான ஆனந்தம், அசைக்க முடியாத அமைதி, எல்லையற்ற புரிதல் மற்றும் வரம்பற்ற சக்தி அனைத்தையும் கொண்டுவருகிறது.**

**இறைவனைத் தேடும் அனைவரும் இந்த நித்திய இறை வாழ்வின் வாரிசுகளாக இருங்கள்!**

**ஜராக்கார்** கிராமத்தில், ஸ்ரீபத் ஸஹாய், பாபா மற்றும் மண்டலிக்கு ஒரு பள்ளிக்கூட கட்டிடத்தில் தனிப்பட்ட தங்குமிடங்களை ஏற்பாடு செய்திருந்தார். அங்குள்ள பள்ளிச் சிறுவர்கள் மரத்துப்பாக்கிகளைத் தோளில் ஏந்தி, தினசரி பயிற்சிகளைச் செய்து வந்தனர். 'தளபதி' குமார் அவர்கள் பாபாவுக்காக அணிவகுப்பு நடத்த நினைத்தார். பாபா தோன்றி, குமார் அவரது யோசனையை வெளிப்படுத்துவதற்கு முன்னரே, அணிவகுப்பைத் தொடங்குமாறு அறிவுறுத்தினார். குமார் இளைஞர்களை வழிநடத்தத் தொடங்கினார், குழந்தைகள் அவருக்கு வணக்கம் செலுத்தியபோது, பாபா புன்னகைத்து முகம் மலர்ந்தார். **"கடவுளின் படைவீரர்களாக இருங்கள்"** என்ற தலைப்பில் பாபாவிடமிருந்து இந்த செய்தி வழங்கப்பட்டது:

**கடவுளின் படைவீரர்களாக மாறுவோம். சத்தியத்திற்காக போராடுவோம். நமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்வோம். உண்மையைப் பேசுவோம், உண்மையாக சிந்திப்போம், உண்மையாகச் செயல்படுவோம்.**

**கடவுள் எல்லையற்ற நேர்மையுடையவர் என்பதால் நேர்மையாக இருப்போம். வெறுப்பை விதைப்பவர்களிடம் அன்பை வெளிப்படுத்தி, பிறரையும் வென்று கடவுளிடம் அழைத்துச் வெல்வோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நம் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான இறைவன் - உன்னதமான உண்மைப்பொருள் என்பதை உலகம் அறியட்டும். இந்த உண்மைப்பொருளை அடைய உங்களுக்கு எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

அணிவகுப்பு முடிந்ததும் மாணவர்கள் பாபாவை தரிசனம் செய்ய வந்தனர். ஒரு வரிசையில் நின்று ஒவ்வொரு குழந்தையும் தனித்தனியாக வந்து பாபாவிடமிருந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டனர். ஒரு சில குழந்தைகள் மட்டுமே எஞ்சியிருந்தபோது, அவர்களில் ஒரு சிறுவனின் கன்னத்தில் பாபா லேசாக வருடினார். இது இதர அனைத்து சிறுவர்களின் பொறாமைக்கு வழிவகுத்தது; அவர்கள் மீண்டும் ஒரு வரிசையை உருவாக்கினர். தொடர்ந்து வந்த சிறுவனின் கன்னத்தில், 'பாபா, வருடினால் ஒழிய வெளியேற மாட்டேன்' என மறுத்து அடம்பிடித்தான். இவ்வாறு பாபா அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி ஒவ்வொரு சிறுவனையும் அரவணைக்க வேண்டியதாயிற்று, அவர் அனைத்தையும் மிக்க மகிழ்ச்சியுடன் செய்தார்.

**தக்வான்** கிராமத்தில் விஷ்ணு ஷர்மா என்பவர் பாபாவின் முன்னிலையில் பாடினார், **நௌரங்கா**வின் ஹீராலால் லோதி விசித்திரமான முறையில் செயல்படத் தொடங்கினார். அவர் பாபாவின் குழுவில் உள்ளவர்களுடன் ஒட்டிக்கொண்டு, அவர்களின் சட்டைகள் அல்லது தொப்பிகளைக் கழற்றி, லேசாக அறைந்து அங்கும் இங்கும் தள்ளிவிட்டார். அவருடைய கோமாளித்தனங்கள் பாபாவை மிகவும் மகிழ்வித்தன.

**தக்வான்** கிராமத்தில், பாபா, ஃபதாலி என்ற பக்தரை சந்தித்தார். பாபா அந்த பக்தரின் மனைவியை தன்னிடம் அழைத்தார், ஆனால் அவர் மிகவும் வெட்கப்பட்டு, அருகில் வரவில்லை. தனது மனைவி பாபாவிற்கு கீழ்ப்படியாததால் வருத்தமடைந்த ஃபதாலி அவரை அறைந்தார். பாபா உடனடியாக அவரைக் கண்டித்து, இனி ஒருபோதும் அவ்வாறு செய்யக்கூடாது என்று கட்டளையிட்டார். ஹமிர்பூர் மாவட்டத்தில், பெண்கள் முக்காடு அணிவது வழக்கம், உறவினர்கள் அல்லாத எந்த ஆண்மகனையும் அவர்கள் எளிதில் அணுகுவதில்லை. ஆனால், இந்த சம்பவத்திற்குப் பிறகு அவர்கள் தாமாகவே பாபாவிடம் வரத் தொடங்கினர். பல இடங்களில் பாபா நடந்து செல்வதற்காக பெண்கள் தங்கள் விலையுயர்ந்த புடவைகளை மண் சாலைகளில் விரித்து பாதை அமைத்தனர்.

'**கடவுளின் பேரின்பம்**' (GOD AS BLISS) என்ற செய்தி பல இடங்களில் வழங்கப்பட்டது:

எல்லா இடங்களிலும், வாழ்க்கையின் ஒவ்வொரு வழியிலும், மனிதன், விதிவிலக்கின்றி, மகிழ்ச்சியை நாடி, தாகமாக இருக்கிறான். சிற்றின்ப வாழ்வின் பலவிதமான கவர்ச்சிகள், அகங்காரத்தை ஊட்டி, அகந்தையைக் குஷிப்படுத்தும் பல உடைமைகள் மற்றும் சாதனைகள், அறிவைத் தூண்டும், மனதைத் தூண்டும், இதயத்தை அமைதிப்படுத்தும் அல்லது உடல், ஆவி இரண்டையும் உற்சாகமூட்டும் எண்ணற்ற அனுபவங்கள் - இவை அனைத்திலிருந்தும் மனிதன் பல்வேறு வகையான மகிழ்ச்சியைத் தேடுகிறான். ஆனால் அவன் அதை உலகின் இருமைத்தன்மையிலும், மாயையின் மாயாவித்தனத்திலும் மறைந்திருக்கும் நிழல்களிலும் தேடுகிறான் - இதையே மனிதன் பிரபஞ்சம் என்று அழைக்கிறான். மேலும் அதிலிருந்து அடையப்பெறும் மகிழ்ச்சி மிகவும் நிலையற்றது என்பதை அவன் காண்கிறான், அதை அனுபவித்த அடுத்த கணமே கிட்டத்தட்ட மறைந்து விடுகிறது. அது மறைந்த பின்னர், எஞ்சியிருப்பது அடிமட்ட வெற்றிடமாகும், இது போன்ற அனுபவங்களின் மூலம் மனம் முழுமையாகத் திருப்தியடைய முடியாது.

தம்மை தைரியப் படுத்திக் கொண்டு, இருமைத்தன்மையின் மாயைகளில் தத்தளிக்கும் வேறு வேறு வடிவங்களின் மீதான அனைத்து பிணைப்பிலிருந்தும் விடுபட்டவனுக்கு மட்டுமே, உண்மையான பேரின்பம் சாத்தியம். அப்போதுதான் அவர், தனது சொந்த உடலாக கருதுவது உட்பட, அனைத்து வடிவங்களுக்கும் பின்னால் நிலைத்திருக்கும் நித்திய உண்மைப்பொருளான பிரியமான கடவுளுடன் ஐக்கியமாக முடியும்.

பேரின்பத்தின் அளவிறுதியற்ற, ஆழங்காணமுடியாத கடல் ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது. ஏதோவொரு வகையில், முற்றிலும் மகிழ்ச்சியற்ற தனிமனிதனாக எவரும் இல்லை, ஏனெனில், பேரின்பப் பெருங்கடலாக, கடவுளிடமிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்ட தனிமனிதன் எவரும் இல்லை. அவர் எப்போதேனும் அனுபவித்த எந்தவொரு வகையான இன்பமும், இறுதியில் பரம்பொருளின் பேரானந்தத்தின் ஒரு சிறிய பகுதியாக, போலித்தோற்றமாகப் பிரதிபலிப்பதாகும். ஆனால் அறியாமையில் தேடி அனுபவிக்கும் இன்பம், இறுதியில் ஆன்மாவை, அகங்காரத்தின் தவறான வாழ்க்கையின் முடிவில்லாத தொடர்ச்சியுடன் பிணைப்பதோடு, ஆன்மாவை அகங்கார வாழ்க்கையின் பல துன்பங்களுக்கு ஆளாக்குகிறது. மாயையான உலக இன்பங்களை, கடலில் வந்திணையும் கானல் நீரின் நதிகளோடு ஒப்பிடலாம். தெய்வீக பேரின்பம் எப்பொழுதும் புத்துணர்வுடன், என்றென்றும் நிலைத்திருப்பது, தொடர்ச்சியானது மற்றும் முடிவில்லாமல் இறைவனின் தன்னிறைவான, எல்லையற்ற மகிழ்ச்சியாக அனுபவிக்கப்படுகிறது.

**பேரின்பம் அல்லது பரமானந்தமான உங்கள் பிரியமான, உண்மையான இறைவனுடன் இணைந்திருங்கள்!**

**அமர்புரா**வில் தரிசன நிகழ்ச்சிகளின் ஏற்பாடுகளை வீரேந்திர ஸிங் செய்திருந்தார். கிராமத்திற்கு வெளியே, குடிசையில் ஒரு வயதான ஆணும் பெண்ணும் வாழ்ந்து வந்தனர். பாபா அங்கு வந்து தங்களுடைய ஏழ்மையான இருப்பிடத்தைப் புனிதப்படுத்த வேண்டும் என்று அவர்கள் முழு மனதுடன் ஏங்கினர், ஆனால் அவரிடம் கேட்கும் தைரியம் அவர்களுக்கு இல்லை. அன்றைய தினம், நிகழ்ச்சி நிறைவடைந்ததும், நேரடி பாதையில் செல்லாமல், வேறொரு பாதையில் காரை ஓட்டுமாறு பாபா கேட்டுக்கொண்டார்.

வயதான தம்பதிகளின் குடிசையின் அருகில் காரை நிறுத்தி, பாபா உள்ளே நுழைந்தார். இருவரும் உணர்ச்சிவசப்பட்டு அவருக்கு மாலை அணிவித்தனர். காடேக்கர் ஆரத்தி பாட, பாபா அவர்களைத் தழுவிய பின்பு வெளியேறினார்.

வேறொரு முறை, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக, பாபாவைப் பார்க்கக் காத்திருந்த ஒருவர், தரிசனம் நடக்கும் இடத்திற்குச் சென்றார். ஆனால் மெஹர் பாபா அந்த வேளையில்தான் புறப்பட்டுச் சென்றதாக அவருக்குத் தகவல் கிடைத்ததும், வயதானவராக இருந்தாலும், பாபாவின் காரைப் பின்தொடர்ந்து ஓடத் தொடங்கினார். அவரே நம்பமுடியாத அளவுக்கு பன்னிரண்டு மைல்கள் ஓடினார், இறுதியாக, அவரது ஆழ்ந்த, அசைக்க முடியாத நம்பிக்கையின் மூலம், குழுவைக் கண்டுகொள்ள முடிந்தது. பாபா காரை நிறுத்திவிட்டு மரத்தின் கீழ் அமர்ந்திருந்ததைப் பார்த்து, முதியவர், விரைவாக மூச்சுவாங்கி, அருகில் வந்து மிகுந்த சிரமத்துடன் கூறினார்: "மெஹர் பாபா எல்லாம் அறிந்தவர்! மெஹர் பாபா எல்லாம் அறிந்தவர்!" என்று கூறிய அவ்வேளையில் பாபா அவரை அன்புடன் அரவணைத்தார். அவர் நீண்ட காலம் காத்திருந்தது முடிவுக்கு வந்தது; இறுதியில் அவர் எல்லாம் அறிந்தவரின் கரங்களில் இருந்தார்.

பாபா '**தனௌரி**' என்ற கிராமத்தில் வெகுஜன தரிசனம் வழங்கிக் கொண்டிருந்த வேளையில், கண்பார்வையற்ற சிறுவன் ஒருவன் கூட்டத்தினூடாகத் தடுமாறிக்கொண்டே மேடைக்கு வந்தான். சிறுவனுக்கு வழிகாட்டி, சிலர் கைப்பிடித்து பாபாவிடம் அழைத்து வந்தபோது பாபா பிரசாதத்தை வழங்கினார். அங்கு தரிசனம் நிறைவடைந்ததும், பாபா, '**பண்டா**' கிராமத்தை நோக்கிச் சென்றார். வழியில் காரை நிறுத்திவிட்டு இறங்கி ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார். மண்டலி பாபாவைச் சுற்றி அமர்ந்த வேளையில் அவர், **"இன்று, கடவுள் என்னைக் காப்பாற்றினார்! கிட்டத்தட்ட ஒரு விரும்பத்தகாத சம்பவம் நிகழ்ந்தது. பார்வையற்ற சிறுவன் என்னிடம் வந்தபோது, அவனுடைய உதவியற்ற தன்மையைக் கண்டு - அவன் மிகவும் அழகாகவும்,**

**ஆற்றல் மிக்கவனாகவும், பிரகாசமாகவும் இருந்தான் - திடீரென எனக்கு ஒரு தற்போக்கெண்ணம், அவனுக்குப் பார்வையை வழங்கும் ஆசையாக உருவெடுத்தது! உண்மையில் இந்த வேட்கை இருந்திருக்கக் கூடாது. ஆனால் அந்த அழகான பையனுக்குக் கண்பார்வை கொடுக்காமல் கடவுள் என்னைக் காப்பாற்றினார், அது அவனுக்கு நன்றாக இருந்திருக்காது."**

இதைக் கேட்ட எரச் அடக்கமுடியாமல் சிரித்தார். பாபாவின் கேள்விக்கு, அவர் பதிலளித்தார், "அந்த இளைஞனைப் பார்த்ததும், நான் இயேசுவை நினைவுகூர்ந்தேன் - உயிரைத் துறந்த ஒருவரை உயிர்ப்பித்தது, பார்வையற்றவர்களுக்குப் பார்வை வழங்கியது, தொழுநோயாளிகளையும் ஊனமுற்றவர்களையும் குணப்படுத்தியது, இதோ நம் பாபா இங்கே, இந்த சிறுவன்மீது எந்த இரக்கமும் காட்டவில்லை!"

பாபா பதிலளித்தார், **"கடவுளின் அருளால் நான் காப்பாற்றப்பட்டது நல்லது; இல்லையெனில், அது சிறுவனுக்கு தீங்கு விளைவித்திருக்கும், அவருக்கு உதவியாக இருந்திருக்காது."**

பாபா தொடர்ந்தார், **"நான் கிருஷ்ணாவாக இருந்தபோது, அர்ஜுனனிடம் எனது உலகளாவிய அம்சத்தை வெளிப்படுத்தினேன். இது தவறு. நான் இதைச் செய்திருக்கக்கூடாது, ஏனென்றால் அன்பும் நம்பிக்கையும் மட்டுமே குருநாதரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். அர்ஜுனன் இதைச் செய்யவில்லை. அவருக்கு என் மீது நம்பிக்கையை ஏற்படுத்த, கிருஷ்ணாவாக இருந்த நான், எனது சுய ரூபத்தை வெளிப்படுத்தும் கட்டாயத்தில் இருந்தேன்."**

மெஹர் பாபாவின் சுற்றுப்பயணம் நிறைவடைந்த அந்தத் தருணத்தில், ஹமிர்பூர் மாவட்டம் முழுவதும் இறை அன்பின் நெருப்பால் எரிந்தது. இந்த ஏழ்மையான, கிராமப்புற பகுதி இப்போது தெய்வீக பொக்கிஷத்தைக் கொள்ளையடிக்கும் ஆர்வத்தில் இருந்தது! உலகப்பொருள் இல்லாவிடிலும், அதன் கிராமவாசிகள் பாபாவின் அன்பில் மிகையான பங்கைக் கோரினர். அதனால்தான் அவர் கூறியிருக்கிறார்: **"ஹமிர்பூர் என் இதயம்!"**

இந்தப் பத்து நாட்களின் தரிசனத்தின் போது ஏறக்குறைய 80,000 பேர் பாபாவின் ஸ்பரிசத்தைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றனர். ஹமிர்பூர் மாவட்டம் முழுவதும் ஒலித்தது: **"ஹரி (பகவான்) பாபா, ஹரி பாபா! மெஹர் பாபா ஹரி, ஹரி!"** இந்தத் தாரக மந்திரத்தை உருவாக்கியவர் **தக்வான்** கிராமத்தில் வாழ்ந்த **விஷ்ணு ஷர்மா**. பல நாட்களாக மக்கள் இந்தத் தாளத்தின் முழக்கத்தில் மெய்மறந்து வாழ்ந்தனர்.

ஹமிர்பூர் ஒரு தொலைக்கோடியான பகுதி, சில இடங்களில் குறுகிய நடைபாதைகள் மட்டுமே இருந்தன. ஆயினும், மக்கள் பாபாவின் வருகைக்காகவும், தங்குவதற்கும் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

அவர்கள் தங்கள் வயல்களில் மைல் தூரத்திற்கு சாலைகளை அமைத்தனர். சில இடங்களில், காடுகள் அழிக்கப்பட்டு, கால்வாய்களின் குறுக்கே மண் நிரப்பி, அவர்களின் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இவ்வாறு படைப்பின் இறைவன் வயல்வெளிகள், கால்வாய்கள், ஆறுகள், ஓடைகள், காடுகள் மற்றும் மலைகள் வழியாக இதுவரை எந்த வாகனமும் செல்லாத தொலைதூர கிராமங்களுக்குக் காரில் பயணம் செய்ய முடிந்தது. கிராமத்து சிறுவர்கள் பாபாவின் கார், பிரதான சாலையைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக அதைப் பின்தொடர்ந்து ஓடினர். பாபா, சிறுவர்கள் அவரைப் பின்தொடர்வதைத் தடுக்க முயன்றார், ஆனால் கூட்டத்தினர் அவரை அழைத்துச் செல்வதில் ஏற்படும் மகிழ்ச்சியை மறுக்க வேண்டாம் என வேண்டவே, பாபா அவர்களின் அன்பிற்கு அடிபணிய வேண்டிய கட்டாயம்.

'நெருப்பில்' அமிர்தம் கலந்தது போன்ற, ஒரு விசித்திரமான இறை போதை மாவட்டம் முழுவதும் பரவியது. ஹமிர்பூர் மக்களைக் குறித்து ராம்ஜூ இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபாவைப் பார்த்து அவரை அணுகிய அனைவரும் அதற்குப் பின்னர் அவர்களாகவே இல்லை. ஆண்கள் தங்கள் குடும்பப் பொறுப்புகள், அன்றாட பணிகள் மற்றும் வணிகங்களை மறந்துவிட்டனர். பெண்கள் தங்கள் வீட்டுக் கடமைகளையும் குழந்தைகளையும் கண்டுகொள்ளவில்லை; மேலும் இளைஞர்களும் குழந்தைகளும் பாபாவின் அருகில் இருக்கும் எண்ணத்தில் கல்லூரி, பள்ளிகளுக்குச் செல்லவில்லை. இந்த வெகுஜன பக்தியின் விளைவும் அதன் எதிர்வினையும் என்னவென்றால், பெரும்பாலும் அலுவலகங்கள் அன்றைய தினம் மூடப்படும் என்று அறிவிக்க வேண்டியதாயிற்று, மேலும் முதல்வர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் தங்கள் கல்லூரிகளையும் பள்ளிகளையும் இத்தனை பெரிய வாய்ப்புக்காக மூட வேண்டிய சூழ்நிலை.

பசியும் தாகமும் மறந்து போனது. பாபாவைச் சூழ்ந்திருக்கும் இந்தத் தீவிரமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் மனிதக் கடலின் தனிச்சிறப்புமிக்க காட்சியைக் கண்டவர்களுக்கு, அது ஆன்மாவைத் தூண்டும் நினைவாக இருந்தது.

அலோபா பின்பு கூறினார்: "மக்கள் எனக்கு அந்தக் காட்சிகளை விவரித்திருந்தால், நான் அதை என் கண்களால் பார்க்காமல் இருந்திருந்தால், நான் அதை நம்பியிருக்க மாட்டேன்."

மெஹர் பாபாவின் அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் அர்த்தத்தை ஹமிர்பூர் மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

பாபா உண்மையிலேயே நகரங்களையும் கிராமங்களையும் தெய்வீக அன்பின் நெருப்பில் 'கொழுந்து விட்டு எரியச் செய்தார்', அதில் உண்மையான

இறை நாட்டம் மிக்கவர் தன்னை எரிக்க விரும்புகிறார் - ஏனென்றால் அதில் எரிவதால் உருவாகும் வலியில் மகிழ்ச்சி இருந்தது. கண்ணீரும் புன்னகையும் மேலோங்கி இருந்தாலும் அவற்றில் எந்த வேறுபாடும் இல்லை. நெருப்பு இரண்டிலும் சமமாக இருந்தது. இது பாபாவின் அனல் பறக்கும் சுதந்தர வாழ்வின் பரிசு. நெருப்பு எரிகிறது, இருந்தாலும் கண்ணுக்கு தெரியாதது; அது மென்மையானது, இருந்தும் கடுமையானது.

மாவட்டம் முழுவதும் தெய்வீக அன்பின் அனல் பறப்பதை காலம் கண்டது, அதில் அனைவரும் சாம்பலாக மாறும் வரை அது எரிந்து கொண்டே இருக்கும், மேலும் சாம்பல் கடவுளுடன் ஐக்கியமாகும் பாடலைப் பாடத் தொடங்கும்!

பாபா தனது அன்பர்களிடமிருந்து விடைபெறும் நேரம் வந்தபோது, அவர்களின் இதயம் மேலும் அதிகமாகக் கதறியது. அவரே ஏற்றி வைத்த நெருப்பு அவரை விடாமல் தடுத்தது. காலம் அவர்களிடம் சொல்ல முயன்றது: "ஓ அன்பர்களே, அவர் எப்போதும் உங்கள் இதயத்தில் எரியும் நெருப்பில் இருக்கிறார். இதுவே அன்புக்குரியவர் வாழும் இடம்! அவர் ஹமிர்பூரில் தனது அனல் பிழம்புடன் என்றென்றும் வாழ்வார். எனவே, அதில் எரிந்து கொண்டே உங்களை நீங்களே நுகர்ந்து கொள்ளுங்கள்! பாபா உங்கள் மீது எவ்வளவு அருளைப் பொழிந்துள்ளார். அவர் உங்களை ஒரே நேரத்தில் சாகவும், சிரிக்கவும் செய்கிறார், எரிந்து எரிந்து சிரியுங்கள்! இது காலங்காலமான பிறவிகளுக்குப் பின்னரே எங்களுக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதம்!"

# டெல்லி தரிசனம்

(**Delhi Darshan**)

1952, **நவம்பர்** 28 வெள்ளியன்று, பாபாவும் மண்டலியும் ஹமிர்பூரிலிருந்து டெல்லிக்கு மானிக்பூர்-ஜான்சி விரைவு ரயிலில் புறப்பட்டனர். ஹமிர்பூரிலிருந்து பாபாவின் நெருங்கிய சீடர்கள் பத்து பேர் அவர்களுடன் சென்றனர். ரயிலில் சாமான்களை ஏற்பாடு செய்யும் போது அலோபா தவறிழைத்ததால், பாபா அவரைத் திட்டினார், "**நான் உள்ளுக்குள் எரிகிறேன்! உங்கள் கவனக்குறைவால் என்னை வெளியேயும் எரியவிட வேண்டாம்.**"

அவர்கள் **ஜான்சி** நகருக்கு வந்து, சமீபத்தில் அங்கு இடம்பெயர்ந்த அலகாபாத்தின் நீண்டகால பாபா அன்பர்களில் ஒருவரான **ஜி.எஸ்.ஸ்ரீவாஸ்தவா**வின் இல்லத்தில் ஓய்வெடுத்தனர். ஸ்ரீவாஸ்தவாவின் மனைவி, தாயார், மூன்று மகள்கள் மற்றும் பல மகன்கள் - குடும்பத்தில் அனைவரும் பாபாவை வரவேற்க ஓடி வந்தனர். ஸ்ரீவாஸ்தவா உருளை போல் சுழலும் உருவமாக, வேகமாக எங்கும் நகரமுடியாது என்பதால், இது ஒரு வேடிக்கையான காட்சியாக இருந்தது! ஸ்ரீவாஸ்தவா வெகுவாகப் பின்தங்கியதால், அவர் வரும் வரை பாபா காத்து நின்றார். அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்படவே, பாபா அவரை அன்புடன் தழுவி, "**நீங்கள் வேகமாக ஓடுகிறீர்கள்!**" என்று கேலி செய்தார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஸ்ரீவாஸ்தவா, பாபாவின் தரிசனத்திற்காக மெஹராபாத் வந்திருந்தபோது, பாபா அவரிடம் ஏன் தனது குடும்பத்தை அழைத்து வரவில்லை என்று கேட்டார். தனக்குப் பெரிய குடும்பம் இருப்பதாகவும், அவர்களை அழைத்து வர போதுமான பணம் இல்லை என்றும் ஸ்ரீவாத்ஸவா பதிலளித்தார். பாபா உடனே, '**பரவாயில்லை, ஒரு நாள் நான் அவர்களைப் பார்க்க உங்கள் வீட்டிற்கு வருவேன்**' என்றார். பாபா இப்போது தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்.

பாபா தீவிரமான தொனியில் குடும்பத்தாரை நோக்கி, "**நினைவில் கொள்ளுங்கள், உங்கள் மீதுள்ள என் அன்புதான் என்னை இவ்வளவு தூரத்திலிருந்து உங்களைப் பார்க்க வர வைத்தது. என் அன்பைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் யோசனை உள்ளதா? நான் உங்கள் இல்லத்திற்கு வந்ததால் நீங்கள் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். ஒரு நாள் அதை நீங்கள் உணர்வீர்கள்.**"

ஸ்ரீவாஸ்தவா சில நெருங்கிய நண்பர்களை பாபாவை சந்திக்க அழைத்திருந்தார், பாபா அவர்களின் தோட்டத்தில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்து பிரசாதம் விநியோகித்தார். ஸ்ரீவாஸ்தவாவின் மகன் இந்தர்ஜித், கேமராவை எடுத்துவரச் சென்றதால், அவருடைய பிரசாதத்தை தவறவிட்டார்.

அவர் திரும்பி வந்ததும், பாபா மீண்டும் அந்த மரத்தின் கீழ் அமர்ந்து அவருடைய பங்கை வழங்கினார். அவர் இந்தர்ஜித்தை சில புகைப்படங்கள் எடுக்கவும் அனுமதித்தார்.

பாபாவும் மண்டலியும் அன்று மாலை ஜான்சியிலிருந்து புறப்பட்டு 29ஆம் தேதி காலை **டெல்லி** சென்றடைந்தனர். **வாசு தேவ் கெய்ன்**, அவரது மனைவி பிரபா, **ஹர்ஜீவன் லால்**, அவரது குடும்பத்தினர், **கேக்கி தேசாய்**, **டி.என்.தர்**, **பி.என்.கஞ்சூ**, **கிஷன் ஸிங்**, **பிரகாஷ்வதி**, **கேக்கி நலவாலா**, டாக்டர் தேஷ்முக், அவரது மகள் சஞ்சீவனி மற்றும் பலர் ரயில் நிலையத்திற்கு பாபாவை வரவேற்க வந்திருந்தனர். எரச், சகன் மற்றும் சிதுவுடன் பாபா 16 பிரசிடெண்ட் எஸ்டேட்டில் அமைந்த கெய்னின் இல்லத்திலும், இதர குழுவினர் ஹர்ஜீவனின் மகன் வாழ்ந்த 10, தாகூர் சாலையில் தங்கியிருந்தனர். ஆனால் அந்த இடங்கள் வெகுதொலைவில் இருந்ததால், பாபா, எப்பொழுதும் மண்டலியை தனதருகில் விரும்புவதால், சிரமமாக இருந்தது. பெண்டு அனைத்து பயண ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்வதில் சிரமப்பட்டார், மேலும் போக்குவரத்து வசதிகள் எளிதில் கிடைக்காததால், அவர் விரும்பியபோது பாபாவிடம் செல்ல முடியவில்லை. பல்வேறு இடங்களிலிருந்தும் பாபாவின் குழுவில் பலர் தொடர்ந்து வந்து இணைந்துகொண்டனர்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்த சுற்றுப்பயணத்தின் போது, பாபா ஒரு புதிய இடத்திற்கு செல்லும் போதெல்லாம், ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் சேவை செய்வதே அவரது முதல் கடமையாகும். ஆனால், அவர் வாஸ் தேவ் கெய்னின் இல்லத்தில் வந்தபோது, ஏழைகள் அங்கு இல்லாததைக் கண்டு சீற்றமடைந்தார். 'அந்த நபர்கள் காத்திருக்க வேண்டுமா? அல்லது பாபாவின் வருகைக்குப் பின்னர் ஒன்று கூடுவார்களா?' என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று கெய்ன் விளக்கினார். சில நிமிட விவாதத்திற்குப் பின்னர், அறிவுறுத்தல்கள் தெளிவாக இல்லை என்று பாபா ஒப்புக்கொண்டார். அவர் பொறுமை இழந்ததற்கு மன்னிப்புக் கோரி, அதற்கு ஈடுகொடுக்க, அங்கிருந்த அனைவரின் பாதங்களையும் தொட விரும்புவதாகக் கூறி, அதைச் செய்தார்.

ஏழு ஏழைகள் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் பாபா விரும்பிய வகையைச் சார்ந்தவர்களாக இல்லாமல் இருந்தும், அவர்களின் கால்களைக் கழுவி ஒவ்வொருவருக்கும் ரூ 51 வழங்கினார்.

இதற்கிடையில், ஹர்ஜீவான் லால் இல்லத்தில் தங்கியிருந்த பெண்டுவும் இதர மண்டலியும் தாமதமாக கெய்னின் இல்லத்திற்கு வந்தனர். பாபா, மீண்டும் கலக்கமடைந்த வேளையில் பெண்டு விளக்கினார், "நாங்கள் என்ன செய்ய முடியும், பாபா? விரைவில் ஒரு பேருந்து எங்களுக்காக ஏற்பாடு

செய்யுமாறு ஹர்ஜீவனிடம் வலியுறுத்தினேன், ஆனால் அவரால் முடியவில்லை."

பாபா, ஹர்ஜீவன் லாலிடம், "**என்னை யார் என்று நினைத்தீர்கள்?**"

"பரமாத்மா" என்று பதிலளித்தார்.

**"என்னைக் கடவுளாக எடுத்துக் கொண்டாலும், நீங்கள் என் கட்டளைகளைப் பின்பற்றுவதில்லை, எனவே உங்கள் புரிதலால் என்ன பயன்?"**

"நாளை முதல் தாமதம் ஆகாது பாபா" என்று ஹர்ஜீவன் உறுதியளித்தார். "எல்லா ஏற்பாடுகளையும் நான் உறுதி செய்வேன்."

ஆனால் மறுநாள் அது மீண்டும் நடந்தது. பாபா, ஹர்ஜீவன் லாலைக் கண்டித்தார்: "**நீங்கள் நேற்று எனக்கு வாக்குறுதி அளித்தீர்கள். ஏன் உங்களால் அதைக் காப்பாற்ற முடியவில்லை? நான்தான் வாக்குறுதியை மீறுபவர் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன், ஆனால் நீங்கள் என்னையும் மிஞ்சிவிட்டீர்கள்!**"

29ஆம் தேதி ஏழைகளுக்கான சேவை நிறைவடைந்த பின்பு, பாபா, டெல்லியில் மஸ்த் தொடர்புக்காகப் புறப்பட்டார். பைதூல் ஹமிர்பூரிலிருந்து முன்கூட்டியே அனுப்பப்பட்டார், ஆனால் அவரால் பொருத்தமான பல மேல்நிலை மஸ்துகளைக் கண்டுகொள்ள முடியவில்லை, மேலும் பாபா மேற்கொண்ட மஸ்த் பணி அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை.

மதியம் இரண்டு மணிக்கு உள்ளூர் அன்பர்களுக்காக வாஸ் தேவ் இல்லத்தில் ஒரு தனிப்பட்ட விழா நடந்தது. பிரபா செய்ன் ஒரு கீர்த்தனையை மொழிந்தார்; பலர் பஜனை பாடினர். பாடல்களின் இடையே, பாபா எழுத்துப்பலகையில், "**உண்மையாக இருங்கள், உங்களுக்கும் கடவுளுக்கும் நேர்மையாக இருங்கள்**" என்று எடுத்துரைத்தார். பாபா இசை நிகழ்ச்சியை மிகவும் ரசித்தார், இறுதியில் லட்டுகளைப் பிரசாதமாக விநியோகித்தார்.

ஏழை நிகழ்ச்சிக்கு அன்று காலை மண்டலி தாமதமாக வந்ததால், பாபா அவர்களிடம், "**ஏழை நிகழ்ச்சியின் தாமதத்தை ஈடுசெய்ய, நான் குறிப்பாக ஒரு சிறுவனின் கால்களைக் கழுவி தலைவணங்க விரும்புகிறேன். அவன் பதினாறு மற்றும் பதினெட்டு வயதுக்கு இடைப்பட்டவனாக இருக்க வேண்டும். வயது, ஆன்மீக சிந்தனை, புத்திசாலி, விளையாட்டு வீரர், பெற்றோருக்குக் கீழ்ப்படிபவர், தூய்மையான உள்ளம் கொண்டவராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இளைஞன் ஒருவனை எவரேனும் என்னிடம் கொண்டு வர முடியுமா?**"

புக்கார், நானா கேருடன் இணைந்து இந்தப் பணியை மேற்கொள்ள முன்வந்தார்; அவர்கள் தௌலத் ஸிங், பாபாதாஸ் ஆகியோருடன் அத்தகைய இளைஞனைத் தேடி ஒரு கல்லூரிக்குச் சென்றனர். மாணவர்கள் அவர்களைக்

கேலி செய்தாலும், அவர்கள் தகுந்த நபரைப் பரிந்துரைத்த முதல்வரைத் தொடர்பு கொண்டனர். சிறுவன் தயாராக இருந்தாலும், மெஹர் பாபாவைப் போன்ற உயர்ந்த மனிதர் தனது மகனின் கால்களைக் கழுவி அவனை வணங்குவது, அவனுடைய தாயாருக்கு ஏற்புடையதாக இல்லை. பாபாவின் விருப்பத்திற்கு இணங்குமாறு புக்கார் அந்தப் பெண்மணியிடம் முறையிட்டும் அவர் பிடிவாதமாக இருந்தார். இறுதியாக, அவர்கள் நம்பிக்கையை கைவிட முற்பட்டபோது, வேறொரு இளைஞனை சாலையோரம் கண்டுபிடித்து, பாபாவிடம் கொண்டு வந்தனர். பாபா அந்த இளைஞனைப் பார்த்து மகிழ்ந்து, அவனுடைய பாதங்களில் பணிந்து, ரூ 51 வழங்கினார். சிறுவனின் தந்தை சாய்பாபாவின் பக்தர், மேலும் அவர் சில சமயங்களில் சாய்பாபாவை அவர்களின் வீட்டிற்கு அருகில் அமைந்த பூங்காவில் 'பார்த்ததாக' சிறுவனே கூறினான். இறுதியில் பாபா இந்த சிறுவனைத்தான் தொடர்பு கொள்ள விரும்பினார் என்பதை புக்கார் உணர்ந்தார்.

டெல்லியில் ஆறு இடங்களில் பொது ஜன தரிசனம் நடைபெற்றது. நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பு வழங்கப்பட்ட ஹர்ஜீவன் லால், 'லாஹோரி கேட்' அருகே அமைந்த தனது வீட்டை தயார் செய்தார். அவருடைய குடும்பம் முழுவதும் பாபாவிடம் முழு ஈடுபாடு கொண்டிருந்தது. அவரது மனைவி மற்றும் மகள் அங்குரி பெரிய குழுவிற்குத் தேவையான சிறந்த உணவு வகைகளை ஏற்பாடு செய்திருந்தனர்; மேலும் அவரது மகன்கள் சுகந்த், இந்தர் இருவரும் இதர வழிகளில் உதவியாக இருந்தனர். ஆனால் பாபா, ஹர்ஜீவனை அடிக்கடி கண்டித்து வந்தார், இது அவரது அன்பின் நெருப்பை விசித்திரமான முறையில் சேர்த்துக்கொண்டிருந்தது.

1952ஆம் ஆண்டு நவம்பர் 30 மற்றும் டிசம்பர் 1ஆம் தேதிகளில் டெல்லி, 10 தாகூர் சாலையில் நடைபெற்ற இரண்டு தரிசன நிகழ்ச்சிகளில் நகரத்தின் நடுத்தரக் குடும்பங்கள் கலந்துகொண்டன. உள்ளாட்சி மன்றங்களில் நடைபெற்ற ஒரு விழாவில், படித்த, பண்பட்ட நபர்களே அதிகம் பங்கெடுத்தனர்.

ஹர்ஜீவனின் இல்லத்திற்கு வெளியே ஒரு பெரிய அலங்கார விதானம் அமைக்கப்பட்டிருந்தது, பாபா, காலையிலும் மாலையிலும் அங்கு வந்தவர்களை சந்தித்தார்.

இந்தக் கூட்டங்களில் இரண்டு செய்திகள் வழங்கப்பட்டன. முதலாவது மத '**சடங்கு சம்பிரதாய முறைகள்**' (RITUALS AND CEREMONIES) என்ற தலைப்பில் அமைந்தது:

**வெவ்வேறு மதங்கள் மற்றும் வழிபாட்டு மரபுகளின் மாறுபட்ட சடங்கு சம்பிரதாய முறைகள், தெய்வீக அன்பை வெளிப்படுத்தும் நோக்குடன் இருந்தாலும், அவை ஆன்மாவை பெரும்பாலும் மீண்டும் மீண்டும் இயந்திரத்தனமாக இயக்கும் உணர்வுபூர்வமான உருவாக்கங்களுடன்**

**பிணைக்கின்றன. கடவுள் மீதான அன்பின் வெளிப்பாடுகளின் கடுமையான உருவாக்கங்களுடனான இணைப்பு, அன்பை மட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், ஒரு மதத்திற்கும் மற்றொரு மதத்திற்கும் இடையில் பிரிவினைகளை உருவாக்குகிறது. எனவே சடங்கு சம்பிரதாயங்கள் பெரும்பாலும் ஆன்மாவை, அறியாமை மற்றும் மாயையின் தனித்தன்மையுடன் பிணைத்து, உண்மையான வெளிச்சத்திற்கு ஒரு தடையாக மாறும்.**

**எனவே உண்மையான ஆன்மீக ஆர்வலர், உள் வாழ்க்கையைப் பற்றி மட்டுமே அதிக அக்கறை கொண்டவராக இருக்கிறார். உள்ளார்ந்த வாழ்க்கை, கடவுள் மீதான அன்பை அடிப்படையாகக் கொண்டது, இந்த அன்பே எல்லா ஆசைகளையும் அழித்து, அன்பான கடவுளுடன் ஐக்கியமாகும் ஒரே ஆசையையும் ஏக்கத்தையும் கொண்டிருக்கிறது. எந்த ஒரு தனிப்பட்ட உருவாக்கத்துடனும், தனது மரியாதையை வெளிப்படுத்தும் ஆவேசம் அவருக்கு இல்லை. முழு கவனத்தையும் தன்பால் ஆட்கொண்டிருக்கும் இத்தகைய தொல்லைகள், நிஜ வாழ்க்கையைத் திருப்பிவிடும். ஒரு சுதந்திரமான ஆன்மா, முற்றிலும் தேவையற்ற ஒன்றில் ஒருபோதும் சிக்கிக் கொள்ளாது, மேலும் சடங்கு சம்பிரதாயங்கள் மீதான பற்றுதலால் வெளிப்படும் பிரிவினைப் போக்குகள் தன்னை ஆட்கொள்ள அனுமதிக்காது.**

இரண்டாவது செய்தி '**கடவுளும் பிரபஞ்சமும்**' (GOD AND THE UNIVERSE) என்ற பொருளில் அமைந்தது:

**முழுப் பிரபஞ்சமும் கடவுள் அல்லது உண்மைப்பொருளின் நிழலைத் தவிர வேறொன்றுமில்லை என்றாலும், சாதாரண மனிதர்கள் பிரபஞ்சத்திலும் அதன் கவர்ச்சிகளிலும் சிக்கிக் கொள்கிறார்கள். குருநாதர்கள் எப்பொழுதும் கடவுளுடன் இணைந்த ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள், மாயையான பிரபஞ்சத்தின் பிரம்மைகளில் ஒருபோதும் சிக்கிக்கொள்ள முடியாது. எப்படி சாதாரணமாக நாங்கள் நிழல்களுக்கு கவனம் செலுத்துவதில்லையோ, அதுபோல மனிதகுலத்தின் கவனத்தை, நிழலிலிருந்து உண்மைப்பொருளை நோக்கித் திருப்புவதைத் தவிர, குருநாதர்கள் பிரபஞ்சத்தின் மீது கவனம் செலுத்துவதில்லை.**

தோடி ஸிங், 1950ஆம் ஆண்டு, மாஞ்ஜ்ரி மாஃபியில் புது வாழ்வின் போது பாபாவை சந்தித்த பின்னர், இன்னமும் ஒரு மஸ்த் போலவே நடந்து, அவரது குடும்பத்தில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்தார். அவர் தரிசன நிகழ்ச்சிகளுக்காக அலிகாரிலிருந்து டெல்லிக்கு வந்திருந்தார், அப்போது பாபா

அவரிடம் தனது தொழிலில் கவனமாக இருந்து, தனது பொறுப்புகளை புறக்கணிக்காமல் இருக்குமாறும் அறிவுறுத்தினார்.

1952 டிசம்பர் 2 செவ்வாய்க்கிழமை அன்று மற்றுமொரு தரிசன நிகழ்ச்சி தியோஸொபிக்கல் சொசைட்டியின் ஒரு மண்டபத்தில் நடந்தது, அதன் செய்தி இரண்டு நாட்களுக்குப் பிறகு 'டைம்ஸ் ஆ∴ப் இந்தியா' பத்திரிகையில் பாபாவின் புகைப்படத்துடன் வெளியானது. ஹமிர்பூரை சூழ்ந்துகொண்ட 'நெருப்பு' டெல்லியில் பரவவில்லை என்றாலும், ஒரு சில புதிய நபர்கள் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்து அவருடைய ஒளியின் அழகில் 'வெந்து' கொண்டிருந்தனர்.

ரத் நகரில் பாபா குறிப்பிட்டிருந்த 'மஹா அறிவுஜீவி' இருவர்களில் ஒருவர் **சர்தார் நிரஞ்சன் ஸிங்**, பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் 'கேம்ப் கல்லூரி'யின் முதல்வர். பாபா தரிசனம் வழங்கிய பல இடங்களில் நிரஞ்சன் ஸிங் பங்கெடுத்தார். ஒரு நாள், குருநானக்கின் தீவிரமான, மரபுவழியை பின்பற்றுபவராகவும், வேறு எந்த தெய்வீக பிறவியிலும் நம்பிக்கை இல்லாதவராகவும் இருந்த அவருடைய மனைவி, பாபாவை சந்திக்கச் செல்வதைத் தடுத்தார். மேலும், மெஹர் பாபாவில், நிரஞ்சன் தமது குருநானக்கை உண்மையில் பார்த்திருந்தார்! இந்த நிகழ்வு நடந்தபோது, அவர் மயக்கமடைந்த அவ்வேளையில், அவரது கண்களை அவரால் நம்ப முடியவில்லை. சில நேரங்களில் பாபாவை நானக்காகவும், சில நேரங்களில் பாபாவாகவும் பார்த்தார். இந்தக் காட்சி அவர் மீது, அதீத நம்பிக்கையை ஏற்படுத்தியது; அவர், தனது மனைவிக்கும் இதே அனுபவம் இருக்க வேண்டும் என்று விரும்பினார். அன்றிரவு, அவரது மனைவி மெஹர் பாபாவைக் கனவில் கண்டு, அவரது தரிசனத்திற்காக ஆவலுடன் இருந்தபோது அவருடைய ஆசை நிறைவேறியது. அன்றிலிருந்து அவர் அடிக்கடி பாபாவின் தரிசனத்திற்குச் சென்றது மட்டுமின்றி, படிப்படியாக பாபாவின் மீதான அன்பில் தனது கணவனையே மிஞ்சினார்!

மாணவர்களுக்கு தரிசனம் வழங்குவதற்காக நிரஞ்சன், பாபாவை தனது கல்லூரிக்கு அழைத்தார். இது அசல் திட்டத்தில் இல்லை ஆதலால், கடைசி நேரத்தில் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. அட்டவணையின்படி நேரம் இல்லை என்றாலும், பாபா அழைப்பை ஏற்று, அதை தனது அட்டவணையில் சேர்த்துக்கொண்டார். இது எல்லாவற்றிலும் சிறந்த நிகழ்ச்சியாக நிரூபிக்கப்பட்டது. பாபா டிசம்பர் 2ஆம் தேதி இரவு 7:30 மணிக்கு கல்லூரிக்குச் சென்றார். கல்லூரி பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட கிட்டத்தட்ட 3,000 பேர் கலந்து கொண்டனர். அவரது வருகையையொட்டி அவருக்கு நிரஞ்சன் ஸிங், பேராசிரியர் ஜகிந்தர் ஸிங் மற்றும் பலர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். நிரம்பி

வழியும் அரங்கிற்கு பாபா அழைத்துச் செல்லப்பட்டார்; நூற்றுக்கணக்கானோர் வெளியே நிற்க வேண்டியதாயிற்று, இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

பாபாவின் அனுமதியுடன் முதல்வர் சில வார்த்தைகளைச் சொல்ல எழுந்து நின்றார். அவர் எழுந்ததும் பார்வையாளர்களுக்கு மத்தியில் அமைதி நிலவியது. நிரஞ்சன் ஸிங் கூறியதாவது:

நான் கல்லூரி முதல்வர் என்று உங்களுக்குத் தெரியும். நான் தத்துவம் கற்பிக்கிறேன். நீங்கள் என்னை அந்தத் துறையில் நிபுணராக எடுத்துக்கொள்கிறீர்கள். ஆனாலும், உங்களைப் போலவே நானும் இன்னும் மாணவன்தான். இருந்தாலும், ஆன்மீகத்தைப் பற்றி எனக்கு மிகக் குறைவாகவே தெரியும். மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளை, ஒரு நண்பர் எனக்கு வழங்கியபோது, அவர் மீது முழு நம்பிக்கை ஏற்பட்டது. நான் எவ்வளவு அதிகமாக அவற்றைப் படிக்கிறேனோ, அவ்வளவு அதிகமாக நான் பார்த்திராத அவரிடம் ஈர்க்கப்பட்டேன். அவரை நேரில் சந்தித்து அவர் கூறிய சில விளக்கங்களைக் கேட்டபோது, எனக்கு ஒரு குருநாதர் கிடைத்துவிட்டதாக உணராமல் இருக்க முடியவில்லை.

ஆனால் நான் இக்கட்டான சூழ்நிலை ஒன்றில் மாட்டிக்கொண்டேன். எனது மனைவியையும் அவருடைய மத நம்பிக்கைகளையும் நீங்கள் அறிவீர்கள்.

நாங்கள் இருவரும் எங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகளுடன் வாழ்வது சாத்தியமில்லை. மெஹர் பாபாவை ஒரே ஒரு முறை பார்க்க வேண்டும் என்று நான் கூறினேன். நான் அவரை மூன்று முறை சந்தித்திருக்கிறேன், அதன் பின்னர் அவர் ஆறு முறை பார்த்திருக்கிறார்! இப்போது அனைவரின் முன்னிலையில் மெஹர் பாபாவிற்கு மாலை அணிவிக்குமாறு அவரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி நிரஞ்சன் ஸிங், பாபாவுக்கு மாலை அணிவித்தபோது மண்டபத்தில் பலத்த ஆரவாரம். அவருடைய இந்த எதிர்பாராத மாற்றத்தைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சியுடன் ஆச்சரியப்பட்டனர். பிற மத நூல்களைக்கூட தொடுவதில்லை. மெஹர் பாபாவை தனது குருநாதராக ஏற்றுக்கொள்வது உண்மையில் அசாதாரணமானது. பாபா அனைத்து மதங்களுக்கும் அப்பாற்பட்டவர், இதை நிரஞ்சன் ஸிங், அவரது மனைவி இருவரும் ஒப்புக்கொண்டனர். பேராசிரியர் ஜகிந்தர் ஸிங்கும் அவரது மனைவியும் பக்தியில் பாபாவின் அருகில் வந்தனர்.

ஒவ்வொரு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பும், பாபா அனைவரையும் தலை வணங்குவது பற்றிய செய்தி வாசிக்கப்பட்டு, பாபா அனைவரையும் வணங்கினார். 'கேம்ப் கல்லூரி'யில் '**கடவுளின் படைவீரர்கள்**' என்ற தலைப்பில் அமைந்த செய்தி மீண்டும் வாசிக்கப்பட்டது, மேலும் பாபாவிடமிருந்து '**ஆன்மீக சுதந்திரம்**' (SPIRITUAL FREEDOM) குறித்த பின்வரும் செய்தியும் வழங்கப்பட்டது:

நாம், நமது தேசிய சுதந்திரத்தைப் பெற்றுள்ளோம்; இப்போது நமது ஆன்மீக சுதந்திரத்தைப் பெற முயற்சிப்போம், அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு வகையான சுதந்திரமும் ஒரு பிணைப்பாகும். காமம், அதிகாரம், பேராசை, கோபம், வெறுப்பு, பொறாமை, தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றின் பிணைப்புகளால் ஆன்மீக சுதந்திரம் சிதைக்கப்படுகிறது. இந்தப் பிணைப்புகளின் சிறைச்சாலை சிதைந்து, சின்னாபின்னம் ஆகும்போது, எல்லையற்ற சக்தி, ஞானம், அமைதி, அன்பு, பேரின்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய சுதந்திரத்தின் பாரம்பரியம் அடையப்படுகிறது. இந்த சுதந்திரத்தை அடைய, அதன் ஆதாரமான கடவுளை நாம் உணர வேண்டும். கடவுளை உணர, நாம் அவரை நேசிக்க வேண்டும், அவருடைய எல்லையற்ற சுயத்தில் நம்மை இழக்க வேண்டும்.

அவருடன் ஒன்றிணையும் தீவிர ஏக்கத்தின் மூலம், நாம் கடவுளை நேசிக்க முடியும். கடவுளின் தனிப்பட்ட வெளிப்பாடான சத்குருவிடம் சரணடைவதன் மூலம் நாம் கடவுளை நேசிக்க முடியும். நம் சக மனிதர்களை நேசிப்பதன் மூலமும், நமது சொந்த மகிழ்ச்சியின் செலவில் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதன் மூலமும், நமது நலன்களை தியாகம் செய்வதன் மூலமும், தாழ்த்தப்பட்டவர்களுக்காக தன்னலமற்ற பணியின் பலிபீடத்தில் நமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதன் மூலமும் கடவுளை நேசிக்க முடியும். இந்த வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் நாம் கடவுளை தீவிரமாக நேசிக்கும்போது, இறுதியில் அவர் நம்முடைய சுயமாக இருப்பதை நாம் அறிவோம்.

நம்முள் இருக்கும் இறைவனை உணர்வதே வாழ்வின் நோக்கம். நமது உலகக் கடமைகளில் ஈடுபடும்போதும் இதைச் செய்யலாம். அன்றாட வாழ்க்கை வழிமுறையிலும், தீவிரமான செயல்பாடுகளுக்கு மத்தியிலும், நாம் பற்றற்றவராக உணர வேண்டும் மற்றும் அன்பான கடவுளுக்கு நம் செயல்கள் அனைத்தையும் அர்ப்பணிக்க வேண்டும்.

மக்களை 'இரை (உணவு) மனம் படைத்தவர்களாக' மாற்றுவதற்குப் போதுமான அனைத்தும் கூறப்பட்டுள்ளது. அவர்கள் இப்போது 'இறை மனம் கொண்டவர்களாக' மாற்றப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழை மக்களுக்கு, ஆன்மீக கண்ணோட்டத்தில், அவர்கள் எதிர்கொள்ளும் துரதிர்ஷ்டங்களும், துயரங்களும் உண்மைப்பொருளை அடைவதற்கான போராட்டத்தின் ஆயுதங்களாக இருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். துன்பங்களை, கடவுளின் அன்பளிப்பாக எடுத்துக்கொண்டு, தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் எதிர்கொண்டால், அவை நித்திய

**மகிழ்ச்சிக்கான நுழைவாயிலாக மாறும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.**

**நம்முள் சமமாக வாழும் எல்லையற்ற ஏக இறைவனைப் புரிந்துகொள்வதற்காக அனைவருக்கும் எனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்; அவரைத் தவிர இதர அனைத்தும் பொய்யும் போலியுமான மாயை என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.**

செய்திகள் வாசிக்கப்பட்ட பிறகு, பாபா மாணவர்களிடம் கூறினார்: **"உங்களில் ஒருவரைப் போலவே நானும் உங்களுடன் ஒன்றாக உணர்கிறேன். இப்போது வாசிக்கப்பட்ட இரண்டு செய்திகளையும் பின்பற்ற முயற்சித்தால் நான் இங்கு வந்ததன் நோக்கம் நிறைவேறியதாக எடுத்துக்கொள்வேன்"**

இந்த நேரத்தில் டெல்லியில் சீக்கிய துறவி '**ஸந்த் கிர்பால் ஸிங்**', 59, பாபாவை முதல் முறையாக சந்தித்தார். அவரை ஏற்கனவே அறிந்திருந்த ஹர்ஜீவன் லால், 1952 நவம்பர் 30 ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் துறவியின் இல்லத்தில் தரிசன நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார், ஏராளமான மக்கள் அங்கே கூடியிருந்தனர். ஆனால், அந்தத் தகவல் அறிந்ததும், மக்கள் ஸந்த் கிர்பால் ஸிங்கின் தரிசனத்திற்காகவா அல்லது பாபாவின் தரிசனத்திற்காகவா என குழப்பமடையலாம் என்று கருதி பாபா மறுத்தார்.

எனவே, அன்று மாலை 'மிண்டோ சாலை'யில் மையமாகத் திகழும் இடத்தில், பாபா தரிசனம் வழங்குவதை விரும்பினார் என்பதை ஸந்த் கிர்பால் ஸிங்கிற்குத் தெரியப்படுத்த கிஷன் ஸிங், தேஷ்முக் இருவரும் அறிவுறுத்தப்பட்டனர்; மேலும் துறவியும் அவரைப் பின்பற்றுபவர்களும் அங்கு வருமாறு அழைக்கப்பட்டனர். கிர்பால் ஸிங் வந்த வேளையில், அவர் அமர நாற்காலி இல்லாத நிலையில், பாபா அவரை போர்வை விரித்திருந்த பெரிய மரத்தடி மீது அமருமாறு கோரினார். பாபா அவரிடம், **"நீங்கள் வந்துள்ளீர்கள்; மிகவும் அடக்கமாக இருக்கிறீர்கள், மேலும் நீங்கள் வென்றுவிட்டீர்கள், நான் தோற்றுவிட்டேன்!"** என்றார்.

கிர்பால் ஸிங், "மெஹர் பாபா ஒரு மஹா புருஷ்!" என்று தெரிவித்தார்.

அவர் அந்த இடத்தை விட்டு வெளியேறும்போது, பாபா அவரை அன்புடன் அரவணைத்துக் கொண்டார், மேலும் பாபா தனது காரில் ஏறும் வேளையில், கிர்பால் ஸிங் மீண்டும் கிஷன் ஸிங்கிடம் பாபாவை தனது ஆசிரமத்திற்கு அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, துறவியையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் பதினைந்து நிமிடங்கள் மட்டும் சந்திப்பதாகக் கூறி, அதற்கான தேதியையும் நேரத்தையும் நிர்ணயித்தார்.

மிண்டோ சாலையில் பாபாவை தரிசனம் செய்ய வந்திருந்த பெண்மணிகளின் குழு, புதுடெல்லியில், ராஜீந்தர் நகரில் அமைந்த தமது இல்லத்தில் பாபாவின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள, அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய ஒப்புக்கொண்டனர். 1952, டிசம்பர் 3, புதன்கிழமை காலை பாபா அங்குச் சென்றார், ஆனால் அவர் வருவதற்கு சற்று முன்பு அந்தப் பெண்மணிகள் ஸந்த் கிர்பால் ஸிங்கின் சீடர்கள் என்றும், அவர்கள் தங்கள் வீட்டில் வழக்கமான கூட்டங்களை நடத்தி வந்தார்கள் எனவும், ஸந்த் கிர்பால் ஸிங்கும் அங்கு அழைக்கப்பட்டார் என்றும் தெரியவந்தது.

மெஹர் பாபாவுக்கு இணையான அந்தஸ்தை ஸந்த் கிர்பால் ஸிங்குக்கு வழங்குவதை உறுதி செய்யும் நோக்கத்தில், கூடாரத்தில் அமைக்கப்பட்ட மேடையில் இரண்டு நாற்காலிகளை அருகருகே வைக்கப்பட்டன - ஒன்று பாபாவுக்கும் மற்றொன்று துறவிக்கும். கிஷன் ஸிங், பிரகாஷ்வதி இருவரும் இரண்டாவது நாற்காலியை அகற்ற அவர்களிடம் முறையிட்டபோது, அந்தப் பெண்மணிகள் எதிர்த்தனர். ஹர்ஜீவன் லால் துறவியை நேரடியாக அணுகியதும், அவர் உடனடியாக அதற்கு ஒப்புக்கொண்டார், பந்தலுக்குள் நுழைந்த ஹர்ஜீவன் லால் நாற்காலியை மேடைக்குக் கீழே வைத்த அந்த தருணத்தில் பாபா வந்தார். தரிசனம் வழங்கிய பின்னர் எழுத்துப்பலகையில் பாபா **"பாசாங்குத்தனம் படைத்த ஒரு துறவியை விட பித்தலாட்ட போக்கிரி சிறந்தவர்"** என்று எடுத்துரைத்தார்.

(கிர்பால் ஸிங்கை அவரது ஆசிரமத்தில் சந்திப்பதாக பாபா உறுதியளித்திருந்தாலும், மேலும் அவரது சீடர்களையும் சந்திப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை பதினைந்து நிமிடங்கள் நீட்டித்தாலும், பாபா டெல்லியில் தங்கியிருந்த நாட்களைக் குறைத்துக்கொண்டு துறவியின் ஆசிரமத்திற்குச் செல்லாமலேயே அங்கிருந்து புறப்பட்டார். பாபா தரிசனம் வழங்க இயலாத நிலையை கிர்பால் ஸிங்கிடம் வருத்தத்துடன் தெரிவிக்க, பாபா, கிஷன் ஸிங்கை அனுப்பிவைத்தார். ஸந்த் கிருபால் ஸிங் ஏமாற்றமாக உணர்ந்தாலும், நிகழ்வுகளின் காலப்போக்கில் மெஹர் பாபாவுடனான துறவியின் தொடர்பு முடிவுக்கு வந்ததாக இல்லை.)

டெல்லி பல்கலைக்கழகத்தின் கலைத் துறை கட்டிடத்தில் 3ஆம் தேதி மாலை 5:00 மணிக்கு இறுதி தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. 20 நிமிடங்களுக்கு, பாபா காரில் அமர்ந்திருக்க வேண்டியதாயிற்று, ஏனென்றால் மண்டபம் இன்னமும் நிரம்பிக்கொண்டிருந்தது. அவர் கெய்ன், டாக்டர் தேஷ்முக் இருவரிடமும், "**இப்போது மக்கள் வருவார்கள் என நான் காத்திருக்கிறேன், அவர்கள் வரவில்லை. ஆனால் நான் போனதும்** (உடலைத் துறந்த பின்னர்), **அவர்கள் கூட்டங்கூட்டமாக வந்து கண்ணீர் சிந்துவார்கள்.**" பல புகழ்பெற்ற வெளிநாட்டினர் (அநேகமாக அரசியல் துறையைச் சார்ந்தவர்கள்)

பார்வையாளர்களாக அமர்ந்திருந்தனர். பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**வாழ்வின் நோக்கம் எல்லையில்லா இறைவனுடனான ஐக்கியத்தை உணர்வதே; அவர் மீதான அன்பின் மூலம் அதை அடைய முடியும். இறை அன்பு நமக்கும், பிற அனைவருக்கும் நாம் உண்மையாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது; ஏக இறைவனே எல்லையற்ற நேர்மையானவர் என்பதை புரிந்துகொண்டு நேர்மையாக வாழ வழி வகுக்கிறது.**

**இறை அன்பு ஒன்றுதான் நம் எல்லா இடர்பாடுகளுக்கும் தீர்வு. அது நம்மை எல்லா வகையான பிணைப்புகளிலிருந்தும் விடுவிக்கிறது. அது நம்மை உண்மையாகப் பேசவும், உண்மையாக சிந்திக்கவும், உண்மையாகச் செயல்படவும் வழிவகுக்கிறது. முழுப் பிரபஞ்சத்தோடும் ஒன்றாக இருப்பதை உணர வைக்கிறது. இறை அன்பு நம் இதயத்தைத் தூய்மைப்படுத்தி நம் வாழ்வை மகிமைப்படுத்துகிறது. நான் உங்களுக்கு என் அன்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன்.**

முதலில், டிசம்பர் 4ஆம் தேதி வரை டெல்லியில் தங்கியிருக்க பாபா திட்டமிட்டிருந்தார், ஆனால் 3ஆம் தேதி டெல்லி பல்கலைக்கழகத்தில் தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா, அவரது முடிவை மாற்றி, அன்று இரவு பத்து மணிக்கு அஹமதுநகருக்கு ரயிலில் புறப்பட முடிவு செய்தார். குமாரை மாஞ்ஜ்ரி மாஃபிக்கு அனுப்பி வைத்து, 14ஆம் தேதி குல்தாபாத் வரும்படி அறிவுறுத்தினார்.

ஜான்சியிலிருந்து, பாபாவுடன் டெல்லிக்குச் சென்ற ஹமிர்பூர் குழு அங்குத் திரும்பிச் சென்றது.

பாபா, அவரது அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் பயணத்தின் இந்தப் பகுதியை நிறைவு செய்து பின்னர், (அவர் கடுமையான சளியால் அவதிப்பட்டார்) 1952, டிசம்பர் 5 வெள்ளிக்கிழமை அன்று மெஹராஸாத் வந்து சேர்ந்தார், அங்கு அவர் பெண் மண்டலியான மெஹரா, மணி, கோஹெர், நாஜா, மெஹரு ரானோ - மேலும் காக்கா, டான், நீலு, கிருஷ்ணா ஆகியோரை சந்தித்தார்.

# அம்ராவதி, ஸாவ்னேர் & நாக்பூர்

**(Amraoti, Saoner & Nagpur)**

**மெஹர் பாபா**, அடுத்த ஆறு நாட்கள் மெஹராஸாத்தில் தங்கியிருந்து, அவருடைய எதிர்கால நிகழ்ச்சிகளுக்கான கடிதப் பரிமாற்றங்களில் மும்முரமாக இருந்தார். இந்தக் காலகட்டத்தில், மஸ்த் அலி ஷா மெஹராபாத்திலிருந்து 1952, டிசம்பர் 10 அன்று ஒரு நாளுக்காக அழைத்து வரப்பட்டார். பாபா அவருடன் பல மணி நேரம் பணிபுரிந்து, அதே நாளில் சிதுவுடன் மஸ்தைத் திருப்பி அனுப்பி வைத்தார்.

மருத்துவக் கண்ணோட்டத்தில், பாபாவின் செயல்பாட்டைக் கண்டு டாக்டர் டான் வியப்படைந்தார். பாபாவின் கால் இன்னும் முழுமையாக குணமடையாத நிலையில், பாபா தனது காலில் ஒரே ஒரு கட்டுடன், வழக்கமான வேகத்தில் நடந்து கொண்டிருந்தார். ஹமிர்பூருக்குப் பயணம் செய்தபோது, பாபா இரவும் பகலும் நடந்து, நெடு தூரம் கடந்து, செப்பனிடப்படாத கரடுமுரடான சாலைகளில் பயணம் செய்தார். அவருடைய கால் அவருக்கு வலியை ஏற்படுத்தினாலும், அந்த வலி நெருப்புக் கடலில் கலந்த நிலையில் அவர் மகிழ்ந்து அனுபவித்தது போலத் தோன்றியது!

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாபா தனது படுக்கையறையாக மெஹராஸாத் மேல்மாடியைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். ஒருமுறை, பாபா படிக்கட்டுகளில் கிருஷ்ணாவின் உதவியுடன் ஏறிக்கொண்டிருந்தபோது, கிருஷ்ணா ஒரு விஷப்பாம்பை படியில் கொன்றார்.

மெஹர் பாபா **ஆந்திர பிரதேசம்** மாநிலத்திற்கு அடுத்ததாகப் பயணம் செய்யவிருந்தார்; 1952, டிசம்பர் 7 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை, அவர் இவ்வாறு அறிவித்தார், **"முதன்முறையாக, ஆந்திரா அன்பர்களும், என்னுடன் வருபவர்களும் எனது தெய்வீக லீலையின் ருசியை அனுபவித்து, நேரடியாக ரசிக்கும் பாக்கியத்தைப் பெறுவார்கள். ஹமிர்பூரில் மனிதக் கடலுக்கு நான் அளித்த நிலையான அன்பின் ஓட்டமும், அடிக்கடி பொழிந்த கருணை மழையும் ஆந்திராவில் இருபது மடங்கு அதிகரிக்கப்படும்!"**

பாபா டிசம்பர் 25ஆம் நாள் நாக்பூருக்கும் செல்ல திட்டமிட்டிருந்தார், ஆனால் டிசம்பர் 11 அன்று, பாபாதாஸ் அனுப்பிய கடிதத்தின் காரணமாக, அவர் தனது பயணத்தை ரத்து செய்ய வேண்டியதாயிற்று - அதற்கான ஏற்பாடுகள் இன்னும் தொடங்கப்படவில்லை மற்றும் வேண்டிய நிதியும் கிடைக்கவில்லை. நாக்பூர் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஒரு மறைக்கப்பட்ட காரணமும் இருந்தது, அதைப் பின்பு பார்க்கலாம்.

டிசம்பர் 12 அன்று, ஆதி சீனியர் ஓட்டிச்சென்ற காரில், எரச், டாக்கே, சகன், வாமன் ஆகியோருடன், பாபா மெஹராஸாத்திலிருந்து ஔரங்காபாத் நகருக்கு வெளியே 20 மைல் தொலைவில் அமைந்த குல்தாபாத்திற்கு புறப்பட்டார். அலோபா, பைதூல், காடேக்கர், குஸ்தாஜி, ஜால்பாய், பெண்டு, ராம்ஜூ, சதாஷிவ், விஷ்ணு ஆகியோர் ஏற்கனவே புறப்பட்டுச் சென்றனர். பாபா அவர்களுடன் ஒரு சிறிய தண்ணீர் கொள்கலனை எடுத்துச் செல்ல விரும்பினார், ஆனால் எரச் பெரியதொரு கொள்கலனைக் கொண்டுவந்ததைப் பார்த்து அவர் மீது அதிருப்தி அடைந்த பாபா, காரை விட்டு இறங்கி, "**இது முதல் அபசகுணம்**" என்றார்.

**"நான் குறிப்பாக ஒரு சிறிய கொள்கலனைக் குறிப்பிடும்போது, ஏன் இத்தனை பெரிய கொள்கலனைக் கொண்டு வந்தீர்கள்?**" எரச் அமைதியாக இருந்தார், பாபா காரில் அமர்ந்த பின்னர் அவர்கள் சென்றனர்.

"**குமார் எப்போது குல்தாபாத் வருகிறார்?**" பாபா, எரச்சிடம் கேட்டார்.

"14ஆம் தேதி (டிசம்பர்) என்று நினைக்கிறேன்," என்று பதிலளித்தார்.

"**ஆனால் அவர் 12ஆம் தேதி அங்கு வருவதை நான் விரும்புகிறேன்! இந்தத் தவறான புரிதல் எப்படி ஏற்பட்டது?**" பாபா அதையே மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே சென்றார், '**இது இரண்டாவது கடினமான நிகழ்வு**' என்று கருத்து தெரிவித்து, ஆதியிடம் வேகமாகக் காரை ஓட்டக்கூறி பாபா வற்புறுத்தினார், ஆனால் சாலைகள் மோசமாக இருந்ததால் அவரால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

வழியில், அஹமதுநகரிலிருந்து சுமார் 40 மைல் தொலைவில், லோனி கிராமத்திற்கு அருகில், பெண்களின் குழு ஒன்று வலமிருந்து இடமாக சாலையைக் கடந்தது. திடீரென, ஒரு பெண் மீண்டும் சாலையின் குறுக்கே ஓடினார். அவரைத் தாக்காமல் இருக்க ஆதி வேகமாக பிரேக்கை அழுத்தினாலும், ஆதியின் கவனத்திற்கு வராமல் வேறு ஒரு பெண் எதிர்பாராதவிதமாக அவரைப் பின் தொடர்ந்தார். அவர் காரின் இடது முன் பக்கத்தால் தாக்கப்பட்டு சாலையின் வலது புறம், தூசி நிறைந்த தரையில் வீசி எறியப்பட்டார். ஆதி உடனே காரை நிறுத்த, பாபாவும் மண்டலியும் அந்த சிறுமியைப் பார்க்க வெளியே வந்தனர். சிறுமியின் மீது குளிர்ந்த நீர் தெளிக்கப்பட்டபோது சுயநினைவு திரும்பியது. அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு பாபா அறிவுறுத்தினார், மேலும் ஆதி, டாக்கே, வாமன் ஆகியோரின் உதவியுடன் அவரை அருகிலிருந்த சர்க்கரை ஆலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். எரச், சகன் இருவருடன் பாபா ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து காத்திருந்தார்.

சிறுமி ஒரு வாகன விபத்தில் காயப்பட்டது, தொழிற்சாலையுடன் எந்த சம்பந்தமும் இல்லாததால், மருத்துவர் அவருக்கு சிகிச்சை அளிக்க மறுத்து,

அரசு சிவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார். தொழிற்சாலையில் பணிபுரியும் தேசாய் என்ற நண்பருடன் டாக்கே ஆலோசனை நடத்தி, அவரைப் பரிசோதித்து, பலத்த காயங்கள் எதுவும் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்கும்படி மருத்துவரைக் கேட்டுக்கொண்டார். சிறுமிக்கு பெரிய காயம் எதுவும் இல்லாத பட்சத்தில், அவரது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்த பின்னர், ஆதி பாபாவிடம் திரும்பி வந்தார்; அமைதியாக அமர்ந்திருந்த அவர் கூறினார், "**ஐந்து தொடரில், இது மூன்றாவது விபத்து. இன்னும் இரண்டு வர உள்ளன! சிறுமி அதிர்ஷ்டசாலி (பாபா, உடன் இருந்ததால்) உயிர் தப்பினார்.**"

பின்னர் ஆதியைக் கடிந்து கொண்டார், "**நீங்கள் ஏன் வேகமாக ஓட்டவில்லை? நான் கூறியபடி ஓட்டியிருந்தால், அவர்கள் சாலையைக் கடக்கும் முன்பே நாம் கடந்து சென்றிருப்போம். கடவுளின் நிமித்தம், நான் சொன்னபடிச் செய்யுங்கள்!**"

பாபாவும் மண்டலியும் மதியம் 1 மணிக்கு குல்தாபாத் வந்தனர். பாபா, பெண்டு, விஷ்ணு இருவரிடமும் இரண்டு நபர்களை சாலையோரத்தில் நிறுத்தி அவர்களின் காருக்கு வழிகாட்டுமாறு அறிவுறுத்தியிருந்தார், ஆனால், அந்த நேரத்தில் எவரும் அங்கு இல்லை.

இது பாபாவை மேலும் அதிருப்தியடையச் செய்தது. அவர்கள் இறுதியாக நகரத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் அமைந்த ஒரு மசூதியின் விடுதியைச் சென்றடைந்தபோது, பாபா கூறினார், "**எனது மனநிலை சரியில்லாததால், இப்போது நான் இங்கே இருக்க விரும்பவில்லை. நாம் திரும்பிச் செல்ல வேண்டும்.**"

பாபாவின் அறிவுறுத்தலின்படி, அலோபா, காடேக்கர் இருவரிடமும் பெண்டு அங்கே நிற்குமாறு கூறியிருந்தார், ஆனால், தவறுதலாக அவர்கள் மறு பக்கத்தில் காத்திருந்தனர். பெண்டு பாபாவிடம் நிலைமையை விளக்கினார், ஆனால் அது பாபாவை வருந்தச் செய்ததால், அவர்கள் வாடகைக்கு எடுத்த சரக்கு வண்டியில் சாமான்களை மீண்டும் ஏற்றுமாறு பெண்டுவை அறிவுறுத்தினார். ஏழைகளுக்கு விநியோகம் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட புதிய துணியில் கட்டப்பட்ட தினை மூட்டைகள், மீண்டும் லாரியில் ஏற்றப்பட்டன. ஆனால் சிறிது நேரத்தில், பாபா அமைதியாகி, அனைவரையும் மன்னித்து, மீண்டும் அனைத்து மூட்டை முடிச்சுகளை இறக்குமாறு கேட்டுக் கொண்டதும், மண்டலி அவ்வாறே செய்தனர்.

ஆதியும் வாமனும் அஹமதுநகருக்குத் திரும்பிச் சென்றனர்.

1952, டிசம்பர் 13 சனிக்கிழமையன்று, காலை 7:00 முதல் 11:00 மணி வரை நான்கு மணி நேரம், பாபா குல்தாபாத்தைச் சுற்றி நடந்து, ஹஸ்ரத் ஸர்சாரி ஸர் பக்ஷ், புர்ஹானுதீன் மற்றும் ஸையத் ஜைனுதீன் ஷிராஸி (முஸ்லிம் ஆலயங்கள்) ஆகிய மூன்று சத்குருக்களின் தர்காக்களுக்குள் அமர்ந்தார். (மன்னர்

ஔரங்கசீப் மற்றும் இரண்டு வாலிகளின் கல்லறைகள் இங்கே உள்ளன). இதற்கு முன்பு, பாபா மண்டலியிடம் கேட்டார், "**கடவுளின் உண்மையான அன்பன் ஏன் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல வேண்டும்? கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கும் போது அவர் அவ்வாறு செய்ய வேண்டியதன் தேவை என்ன?**" பின்னர் அவரே பதிலளித்தார்: "**குறிப்பிட்ட சில வகையைச் சார்ந்த அன்பர்கள் கடவுளை அடைய, சில இடங்களை விரும்புகிறார்கள். கடவுளை அணுகுவதற்காக, குறிப்பிட்ட இடங்கள் அவர்களை வெகுவாக ஈர்க்கின்றன.**"

இந்தப் புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்துவிட்டு திரும்பியபோது, சமீபத்தில் வந்திருந்த குமாரை பாபா எச்சரித்தார், "**நீங்கள் மாஞ்ஜ்ரி மா**ஃ**பிக்கு திரும்பிச் செல்லும்போது, நான் இங்கு செய்ததைப் போல, தர்காக்களுக்கும் (இந்து துறவிகளின்) சமாதிகளுக்கும் செல்ல வேண்டாம்! நான் செய்ததைச் செய்ய முயற்சிக்காதீர்கள், ஆனால் நான் சொல்வதை எப்போதும் செய்யுங்கள். இந்த ஆலயங்களுக்குச் சென்றதன் மூலம், இந்நாட்களில் நான் செய்வதற்கும், சொல்வதற்கும் இந்த புனிதர்களை சாட்சிகளாக ஆக்கிவிட்டேன்.**"

ஒவ்வொரு மாலையும் குல்தாபாத்தில், பாபா மண்டலியுடன் ஒரு மணி நேரம் அமர்ந்து, கடவுளின் மனிதர்களைப் பற்றிய அவர்களின் கதைகளைக் கேட்டார். பொதுவாக, இவை குமார், டாக்கே, ராம்ஜூ, சதாஷிவ் பாட்டீல் ஆகியோரால் விவரிக்கப்பட்டது. அத்தகைய மகான்களை நினைவுகூரும் போது, பாபா, அவர்களுக்கு தங்கள் குருமார்கள் மீதான அன்பைப் புகழ்ந்தார். அவர் சில மண்டலியை அவரவர் மதத்தின்படி பிரார்த்தனையை மொழியச் செய்து, பின்னர் அவர்களை வணங்கினார். பிரார்த்தனை செய்வதற்கு முன்பு, மண்டலி அவர்களின் கால்களை சுத்தம் செய்ய வேண்டும், ஏனெனில் பாபா, அவர்கள் கால்களில் தலை வணங்குவதை வழக்கமாகக் கொண்டார்: "**எனது பணி ஏன், எதற்காக என்று யோசிக்க வேண்டாம்**" என்று பாபா அவர்களுக்கு அறிவுரை கூறினார். "**நான் கேட்பதைச் செய்யுங்கள். நான் உங்கள் காலடியில் எனது தலையை வைக்கும்போது, நீங்கள் வெறும் கற்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள்.**"

ஒவ்வொரு தர்காவிலும், சன்னதியிலும், அங்கு வாழந்த புனிதரின் மதத்திற்கேற்ப பிரார்த்தனைகள் வழங்கப்பட்டன, மேலும் மனம் வருந்தி வேண்டும் பிரார்த்தனையும் மொழியப்பட்டது. பிரார்த்தனைக்குப் பிறகு, பாபா கோவில்கள் அல்லது தர்காக்களை நெற்றியால் தொட்டு, சில ரூபாய் நோட்டுகளை அங்கேயே விட்டுவிட்டு, சமாதியிலிருந்து வெளியே திரும்பிச் சென்றார்.

16ஆம் நாள் காலை 40 முஸ்லிம்கள் புனித ஷா ராஜு கைத்தல் ஹுஸைனியின் தர்காவில் கூடியிருந்தனர். ஒவ்வொருவரின் கால்களையும்

கழுவி சுத்தம் செய்து, பாபா தனது நெற்றியால் கால்களைத் தொட்டு வணங்கி, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார். இதேபோல், அன்று மதியம் தர்க்கா விடுதியில், டாக்கே, யஷ்வந்த் ராவ் ஆகியோர் 25 இந்துக்களை அழைத்து வந்தனர், அவர்களையும் பாபா அடி வணங்கி, தலா ரூ 20 பிரசாதமாக வழங்கினார். மாலையில், பாபா மீண்டும் ஸர்ஸாரி ஸர் பக்ஷின் தர்காவில் இருந்தபோது, பரிதாபமான நிலையில் ஒரு முஸ்லீம் மனிதரைக் கண்டு அவருக்கும் பணத்தை அன்புடன் வழங்கினார்.

அடுத்த நாள், பாபா ஏழைகளுக்குத் தலைவணங்குவதைப் பற்றி விளக்கினார், "**நான் அதைச் செய்யும்போது, ஏதோ ஒரு வழக்கத்தையோ அல்லது வெறும் சம்பிரதாயத்தையோ கடைப்பிடிப்பதாக நினைத்து செய்யவில்லை. அவர்களைக் கடவுளாகக் கருதி, நான் வணக்குகிறேன். அது, கடவுளே கடவுளை வணங்குவது போன்றது.**"

உண்மையான உதவிக்கும் தற்காலிக பொருள் சார்ந்த நிவாரணத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் பாபா விளக்கினார்:

**தீராத நோய்களால் அவதிப்பட்டு, சாலையிலும் வீதியிலும் யாசிப்பவர்களைக் கண்டால், அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று இரக்கப்படுகிறோம். ஆனால் இது ஒரு வகையான தற்காலிக நிவாரணம் மட்டுமே. அப்படியானால் எப்படி உதவுவது? துன்பப்படுபவர்கள் என்றென்றும் குணமடையும் விதத்தில் உதவ வேண்டும். இவ்வுலகில் மனிதர்கள் துன்பப்படுவதற்கு அவரவர் கர்ம வினையே காரணம். ஆனால் இதுபோன்ற நோய்களுக்கும் துன்பங்களுக்கும் எவரும் அஞ்ச வேண்டாம், ஏனென்றால் அது உண்மையான மகிழ்ச்சியின் ஆரம்பம். ஆனால், அவர்களிடம் பூரண நம்பிக்கையை எழுச்சியுறச் செய்வதன் மூலம் மட்டுமே, இதை உணர முடியும். இந்த நம்பிக்கை ஒருவருக்கு பக்கபலமாக இருந்து பாதுகாக்கும். மேலும் அத்தகைய உதவியை இறைநிலையை அடைந்தவர்களால் மட்டுமே வழங்க முடியும்.**

**இதன் பொருள் என்னவெனில் நீங்கள் ஏழைகள் மீது பரிதாபப்படக்கூடாது, அவர்களுக்காக உணரக்கூடாது என்பதல்ல. உதவி, நிவாரணம் இரண்டும் அருகருகே செல்லட்டும். நீங்கள் எதையேனும் கொடுக்க விரும்பினால், அது எப்போதும் 'தன்னலமற்ற சேவையாக' இருக்கட்டும். இத்தகைய தன்னலமற்ற சேவை புரியும் தன்னார்வ ஊழியர்கள்** (தொண்டர்கள்) **மனித குலத்திற்குத் தேவை.**

அடுத்த இரண்டு நாட்களுக்கு, பாபா ஔரங்காபாத்தில் விடுதி ஒன்றில் மண்டலியுடன் தங்கினார். ஒரு சில மஸ்துகளைத் தொடர்புகொள்வதைத் தவிர, அவர் ஔரங்காபாத் மற்றும் தௌலதாபாத்தைச் சுற்றியுள்ள சமாதிகள், தர்காக்களுக்கு விஜயம் செய்தார்.

அவர் இருப்பதை அறிந்த அப்பகுதி மக்கள், அரசு அதிகாரிகள் உட்பட பலர், கடந்த 18ஆம் தேதி மாலை, பாபா தங்கியிருந்த விடுதிக்கு வந்தனர். பாபா அவர்களுக்கு தரிசனம் வழங்கினார், குறிப்பாக ஆதி சீனியரின் மைத்துனர் டாக்டர் ரானடே, பாபா, ஔரங்காபாத் வரும்போதெல்லாம் அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பாபாவை சந்திக்கும் எண்ணத்தில் குறிப்பாக குல்மாய் ஔரங்காபாத் வந்திருந்தார், பாபா, குல்மாய், மகள் பிரோஜா (டாக்டர் ரானடேயின் மனைவி) அனைவரையும் சந்தித்தார்.

மெஹர் பாபாவின் வருகை குறித்த செய்தி நகரம் முழுவதும் பரவியதால், ஔரங்காபாத்திலிருந்து அம்ராவதிக்குச் செல்லும் திட்டத்தை மாற்றி, ஒன்றரை நாட்களுக்கு முன்னதாகவே புறப்பட்டு, ஒரு நாளை மன்மாடில் கழிக்க முடிவு செய்தார். 1952, டிசம்பர் 19 வெள்ளிக்கிழமை அதிகாலையில் அவர்கள் ரயிலில் புறப்பட்டனர். ரயில் நிலையத்தில் நெரிசல் அதிகமாக இருந்ததால், மூன்றாம் வகுப்பிற்குப் பதிலாக இரண்டாம் வகுப்பில் பயணம் செய்ய பாபா வற்புறுத்தப்பட்டார். பாபா பெட்டிக்குள் நுழைந்தபோது, ஒரு மனிதர் ஏற்கனவே இருக்கையில் அமர இருப்பதைக் கண்டார். "**மன்மாட் வரை இந்த மனிதர் என் மார்பில் இருப்பார்!**" எரிச்சலுடன் பாபா எரச்சிடம் சைகையால் தெரிவித்தார். "**நான் நூறு பேருடன் மூன்றாம் வகுப்பில் பயணிப்பது நல்லது, ஏனெனில் அவர்களின் கவனம் நூறு பேரிடம் பிரிந்து சென்றுவிடும். இருப்பினும், அடுத்த ரயில் நிலையத்தில் பெட்டிகளை மாற்றும்படி அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள். அதற்குப் பிறகு நான் ஓய்வெடுக்க முடியும்.**"

ரயில் புறப்பட்டதும், அந்த மனிதர் இருக்கையிலிருந்து எழுந்து பாபாவின் பாதங்களில் தலை வைத்து வணங்கினார்! பல வருடங்களாக மெஹர் பாபாவைப் பார்க்கும் வாய்ப்புக்காகக் காத்திருந்தார். பாபா அவரை ஆசீர்வதித்தார், அந்த நபர் அடுத்த ரயில் நிலையத்தில் பெட்டிகளை மாற்ற ஒப்புக்கொண்டார்.

மன்மாடில், பாபா அரசாங்க பங்களாவில் தங்க விரும்பினார், ஆனால் அது ஏற்கனவே சில அரசு அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பங்களாவைக் கடந்து செல்லும் வேளையில், பாபா ஒரு தோட்டத்துடன் கூடிய அழகான வில்லாவைச் சுட்டிக்காட்டினார். "**என்ன அருமையான பங்களா,**" என்று அவர் குறிப்பிட்டார். "**ஒருவேளை இது மன்மாடில் அனைத்திலும் சிறந்ததாக இருக்கலாம்.**"

எரச் ரயில் நிலையத்திற்குச் சென்று, அரசாங்க பங்களாவை ஆக்கிரமிக்க அனுமதிக்குமாறு அதிகாரி ஒருவரை வற்புறுத்த முயன்றார்; அவர்கள் அந்த நாளை அதன் வராண்டாவில் கழிக்கத் தயாராக இருந்தபோதிலும் அவர் அனுமதி வழங்க மறுத்துவிட்டார். எனவே எரச், "நாங்கள் தங்குவதற்கு வேறு ஏதேனும் பங்களாவைக் கண்டுபிடிக்க முடியுமா?" என்று கேட்டார்.

"ஆமாம்," என்றார், அவர் பெயர் **சுனிலால்**. "நீங்கள் எனது பங்களாவின் வராண்டாவை ஆக்கிரமிக்கலாம்."

எரச் அவருக்கு நன்றி கூறினார், அவரது ஒப்புதலுக்கு தனது மூத்த சகோதரருடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கூறி, அவர் திரும்பி வந்து, பாபாவிடம் தெரிவித்து, பாபா அங்கு இருக்கும் வரை, வீட்டு உரிமையாளர் வேறு இடத்தில் தங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இணக்கம் தெரிவித்தார்.

எரச் ஆச்சரியப்படும் விதத்தில், சுனிலால் அதற்கும் ஒப்புக்கொண்டார்; பாபாவை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில், அது பாபா சுட்டிக்காட்டிய அதே வில்லாதான் என்பது தெரியவந்தது.

அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அந்த அதிகாரி விரைவில் வந்தார். அவரைப் பார்த்த பாபா, **"நான் வரும்போது நீங்கள் வெளியில் இருப்பதாக சம்மதம் தெரிவித்தீர்கள், இப்போது எப்படி இங்கே இருக்கிறீர்கள்?"** என்று கேட்டார்.

"நான் கதவுகளைத் திறக்க வந்தேன்," என்று அவர் விளக்கினார்.

**"அறைகளைத் திறப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நாங்கள் வராண்டாவை மட்டுமே பயன்படுத்துவோம். ஆனால் நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? மக்கள் என்னை மெஹர் பாபா என்று அழைக்கிறார்கள், நான் இங்கு சிறிது நேரம் தங்கியிருப்பது உங்கள் மாபெரும் அதிர்ஷ்டம்."**

சுனிலால் பாபாவிற்கும் அவரது குழுவிற்கும் உணவை வழங்க முன்வந்தபோது, பாபா, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பதிலளித்தார். இறுதியில், குறைந்தபட்சம் பாபா வீட்டிற்குள் காலடி வைத்து, அன்று மதியம் அவருடன் தேநீர் அருந்த வேண்டும் என அந்த அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு, பாபா ஒப்புக்கொண்டார்; அந்த நபர் தேநீர் நேரத்தில் திரும்பி வருவேன் என்று கூறி தனது அலுவலகத்திற்குப் புறப்பட்டார். பாபாவின் தேவைகளை கவனித்துக்கொள்ளும்படி ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அந்த மனிதர் மிகவும் அக்கறையுள்ளவராக இருந்ததால், பாபா மகிழ்ச்சியுடன், **"நான் ஜால் கேரவாலாவின் பங்களாவில் தங்கியிருப்பது போல் உணர்கிறேன்"** என்று கூறினார்.

மதியம் 12:30 மணிக்கு பாபாவுக்கு தேநீர் வேண்டும், ஆனால் தேயிலை அலமாரியில் பூட்டப்பட்டிருந்தது. சுனிலால் மதியம் 2:30 மணிக்குத் திரும்பிவந்த வேளையில், பாபா புன்னகையுடன் கூறினார், **"எங்கள் தேநீர் ஏற்கனவே உங்கள் சர்க்கரை மற்றும் எங்கள் தேயிலையுடன் தயாரிக்கப்பட்டது."**

சுனிலால் திகிலடைந்து, "ஆனால் பாபா, உங்களுக்கு இவ்வளவு சீக்கிரம் தேநீர் தேவை என்று நான் நினைக்கவே இல்லை" என்றார்.

**"உங்கள் அணுகுமுறையும், பழகும் விதமும் எனக்கு மிகவும் நெருங்கிய சீடரான, முதல் வகுப்பு அரசாங்க அதிகாரியாக இருந்த ஜால் டி. கேரவாலா, ஐ.ஏ.எஸ். என்பவரை நினைவுபடுத்தியது."**

சுனிலால் அவரது மனைவி டெல்லியிலிருந்து திரும்பும்போது பாபாவின் தரிசனத்தைப் பெற வேண்டும் என்று விரும்பினார், பாபா திரும்பி வரும் வேளையில் மீண்டும் அவரது பங்களாவிற்கு வருவதாக ஒப்புக்கொண்டார். சுனிலால் மாலை வரை பாபாவுடன் இருந்தார், அவர் சென்ற பிறகு, பாபா அவரைப் பற்றி கூறினார், **"ஒருவரின் வீட்டை, யார் என்று அறியாமலேயே ஆக்கிரமிக்க அனுமதிப்பதும், அதே வேளையில் அவரை வேறு எங்கேனும் தங்குமாறு கேட்டுக்கொள்வதும் மிகவும் அரிதான விஷயம்."**

அன்று மாலை மன்மாடை விட்டு வெளியேறி, பாபா 1952, டிசம்பர் 20 அன்று காலை '**பத்னேரா**'விற்கு வந்தார்; அங்கு அவரை பெண்டு, தேஷ்முக், மெஹர்ஜி ஆகியோர் சந்தித்தனர். பத்னேராவில் பாபா, ஏற்கனவே பலமுறை பணிபுரிந்த **காளி கம்ப்ளிவாலா** என்ற குறிப்பிடத்தக்க மஸ்தைத் தொடர்பு கொள்ள விரும்பினார். ஆனால் பாபாவின் கறுப்பு நிற கார் நெருங்கி வருவதைக் கண்ட மஸ்த் கடும் எரிச்சல் அடைந்தார். கருப்பாக எதைக் கண்டாலும் அவருக்கு மிகுந்த வெறுப்பு என்பது பின்பு தெரியவந்தது. கோபத்தில் அவர் கொந்தளித்தார், "நான் உங்கள் அனைவரையும் இயந்திர துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கி விடுவேன்!"

மெஹர்ஜி, பெண்டு இருவருடன் பாபா, மெதுவாக அவரை அணுகினார், அதற்குள் மஸ்தின் சீற்றம் தணிந்தது. பாபா ஒரு மணி நேரம் அவருடன் அமர்ந்து, கால்களை அழுத்திக் கொண்டிருந்தார். காளி கம்ப்லிவாலா கேட்டார், "நீங்கள் ஏன் இந்த சிவப்பு குறுங்காலுறை மற்றும் கருப்பு கோட் அணிந்திருக்கிறீர்கள்; ஒரு (வேறு நிற) மேலாடையைப் பயன்படுத்துங்கள். இந்த உடையைத் தூக்கி எறியுங்கள்."

**"இவற்றை நான் உங்களுக்குக் கொடுக்க வேண்டுமா?"** பாபா விசாரித்தார்.

"இல்லை."

**"ஏழைகளுக்கு?"**

"இல்லை. ஆனால் அவற்றை உங்களுடன் வைத்துக் கொள்ளாதீர்கள்; அவை உங்களுக்குத் தீங்கு விளைவிக்கலாம்." காளி கம்ப்லிவாலா எச்சரித்தார்.

பாபா, மெஹர்ஜியிடம் குறுங்காலுறை, கோட் ஆகியவற்றை மூட்டையாகக் கட்டி, வெகுஜன தரிசன நேரம் வரை எங்காவது வைக்கும்படி அறிவுறுத்தினார். பாபா, மஸ்திடம் சிறிது பணத்தைக் கொடுத்தபோது, அவர் வட்டமான வெள்ளி நான்கு அணா நாணயங்களைக் கேட்டார். பாபா அவருக்கு

பதினாறு நாணயங்களைக் கொடுத்தார். மேலும், அவருக்கு உலர்ந்த பழங்களும் வழங்கப்பட்டபோது, அவர் திராட்சையை மட்டுமே விரும்புவதாகத் தெரிவித்தார்.

இந்த மஸ்த் தொடர்புக்குப் பிறகு, பாபா மண்டலியுடன் ‘**அம்ராவதி**’க்குப் புறப்பட்டு, அதே நாளில் வந்து சேர்ந்தார். தேஷ்முக் குடும்பத்தினர், நானா கேரின் சகோதரர் வினூ மற்றும் அவரது மனைவி ஆஷா, நானாவின் மருமகன்கள் பால், ஆனந்த் சுபேதார் ஆகியோர், மேலும் நகரத்தின் சில உயர் அதிகாரிகள் அவருக்கு பிரமாண்டமான வரவேற்பளித்தனர். தேஷ்முக் அம்ராவதியில் ஒரு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்து கொண்டிருந்தார்; மேலும் பாபாவை அவரது வீட்டில் தங்கவும், மண்டலி அருகில் அமைந்த வினூ கேரின் இல்லத்தில் தங்கவும் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பாபா இந்த ஏற்பாடுகளை விரும்பாமல், தேஷ்முக்கை மண்டலியிடம் விமர்சித்தார், "**தேஷ்முக் ஒரு மாணிக்கக் கல், அவர் எனக்காக கடினமாக உழைக்கிறார், ஆனால் சில நேரங்களில் அவர் எனது உத்தரவுகளை உண்மையில் பின்பற்றுவதில்லை. நான் அம்ராவதியில் இருக்கும் போது, அவருடைய நன்மைக்காக இந்தப் பழக்கத்தை மாற்றுவேன்!**"

தேஷ்முக்கின் பங்களாவுக்கு வந்த பிறகு, பாபா, "**முதலில் நான் உணவை உண்பேன், பின்னர் இரண்டு மணி நேரம் ஓய்வெடுப்பேன், அதுவரை என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்**" என்று கூறினார். ஆனால் சிறிது நேரத்தில், தேஷ்முக், பாபாவின் அறைக்குள் நுழைந்து, ஏழைகள் ஏற்கனவே வந்துவிட்டதால், அவர்களுடனான பணியை முடிக்குமாறு கேட்டுக் கொண்டார். உள்ளளவில் கோபமாக இருந்தாலும், பாபா அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால், முந்தைய அறிவுறுத்தலுக்கு மாறாக, தேஷ்முக்கின் மாணவர்கள் சிலர் ஏழைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதைக் கண்டு அவர் மேலும் எரிச்சலடைந்தார். தேஷ்முக் தனது பல்கலைக்கழக மாணவர்களுக்கு பாபாவின் தொடர்பு வேண்டும் என்று விரும்பினார், அந்த நோக்கத்துடன் அவர்களை அழைத்து வந்தார். அதனால் மற்றுமொரு நடுத்தர வயது ஏழையை அழைத்து வந்து, பாபா அவரை வணங்கி, 100 ரூபாய் வழங்கினார்.

நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா விஷ்ணுவை அழைத்து, தேஷ்முக்கின் முன்னிலையில், "**எனது அறிவுறுத்தல்கள் சரியாகக் கவனிக்கப்படாததால், நான் உடனடியாக இந்த இடத்தை விட்டு வெளியேறுவது நல்லது**" என கண்டனம் தெரிவித்தார்.

தேஷ்முக் மிகவும் பதட்டமடைந்தார் - விரிவான ஏற்பாடுகள் மற்றும் தரிசன நிகழ்ச்சிக்கான விளம்பரம் வாரக்கணக்கில் நடந்து கொண்டிருந்தது - மேலும் அவர் தனது தவறுக்காக வருந்தினார். அன்றிலிருந்து அவர் பாபா கூறியபடி உண்மையாகக் கீழ்ப்படிந்தார்.

ஏழைகளுடனான தனது பணியைப் பற்றி, பாபா, தேஷ்முக்கிடம், "**நான் பணக்காரர்களில் பணக்காரன் என்றாலும், ஏழைகளில் நானும் ஏழைதான், மேலும் ஏழைகள், மஸ்துகள் மற்றும் வெகுஜனங்களைத் தொடர்புகொள்வதை நான் விரும்புகிறேன்**" என்று குறிப்பிட்டார்.

வினூ கேரின் வீட்டின் முன்னால் ஒரு பெரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது, 1952, டிசம்பர் 21 ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு பாபா அங்கு வந்தார். ஜெய்ராம் புவா ஸந்த் என்ற பாடகரின் கீர்த்தனையுடன் காலை தரிசனம் தொடங்கியது. கீர்த்தனையின் இடையே அவர் மறைமுகமாக பாபாவின் மௌனத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார். ஜெய்ராம் வினவியதை எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை, ஆனால் பாபா கவனித்தார், "**நான் அமைதியாக இருந்தாலும், அனைத்து உலகிலுள்ள மக்களின் நாவால் பேசுகிறேன்**" என்று கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை மதியம், ஜோஷி ஹாலில் நடைபெற்ற பொது தரிசன நிகழ்ச்சியில் வரவேற்புக் குழுவின் தலைவரும், ஓய்வுபெற்ற ஆட்சியாளருமான **ஸ்ரீயுதஸ் எம்.டி. ஸஹானே** வரவேற்புரை வழங்கி, பாபாவின் மௌனத்தைக் கலைத்து, பேசுமாறு உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். ஸஹானேயின் உரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

...மெஹர் பாபா, இந்தக் குழப்பமான உலகின் மகிழ்ச்சியற்ற மக்களாகிய நாங்கள், அமைதி, ஆனந்தம் மற்றும் ஒளியூட்டத்திற்காக நீண்ட நேரம் காத்திருந்தோம். நாங்கள் இப்போது சோர்வாக இருக்கிறோம், பொறுமையிழந்து விட்டோம். எங்களின் கடைசி நம்பிக்கை உங்களிடம் உள்ளது.

மெஹர் பாபா, நீங்கள் எங்களுக்கு வழங்கும் நிலையான பொக்கிஷத்தைப் பெற நாங்கள் ஆர்வமாக உள்ளோம், மேலும் பொற்காலத்தின் விடியலுக்காக, தெய்வீக நாடகத்தில் எங்களால் முடிந்த பணிவான சேவையைச் செய்ய நாங்கள் ஆர்வமாக உள்ளோம். எனவே உங்களது மௌனத்தை கலைத்து, பொதுஜனங்களிடையே உங்களை வெளிப்படுத்துமாறு வேண்டிக்கொள்கிறோம். அம்ராவதிக்கு இந்தத் தனிச்சிறப்பான, அனுகூலமான பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம்...

பாபா உரை தொடங்குவதற்கு முன்பே மண்டபத்தில் நிரம்பியிருந்த வெகுஜனங்களுக்கு பணிவான வணக்கத்தைத் தெரிவித்துவிட்டதால், அவர் இப்போது பின்வரும் பதிலை எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்தார்:

**என்னை நான் உலகிற்கு வெளிப்படுத்தி, எனது மௌனத்தை கைவிட வேண்டும் என்று நமது பிரியமான ஸஹானே ஆழ்ந்த அன்புடன் கேட்டுக் கொண்டார். அவரது அன்பான வேண்டுகோள், கடவுள் விரும்பினால், ஏப்ரல் இறுதிக்குள், அவர் என்னை அளவிறுதியற்றவராக**

**வெளிப்படுத்துவார் என்று அறிவிக்க என்னைத் தூண்டியது; கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை நாம் அனைவரும் நம்மில் கண்டுகொள்ள வேண்டும். கடவுளின் சித்தத்தால், இந்த வெளிப்பாடு, பேரின்பத்தின் உண்மையான, நித்திய பாரம்பரியம் நம்முடையது என்பதை உலகம் உணர வைக்கும்.**

**எனது மௌனத்தால் நானே சோர்ந்து போய் அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் பேசும்போது, உலகம் முழுவதும் அதற்கு செவிமடுக்கும்.**

வரவேற்புக்குழு உறுப்பினர்கள் பாபாவுக்கு மாலை அணிவித்தனர். பஜனைகளைத் தொடர்ந்து பிரசாதம் வழங்கப்பட்டது. மண்டபத்திற்கு வெளியே பலர் கூடியிருந்தனர், பாபா, காரில் செல்லும் போது, பெருங் கூட்டத்தால் கிட்டத்தட்ட நசுக்கப்பட்டார். தரிசனத்திற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கானோர் அமரும் அளவுக்கு மண்டபமும் பெரியதாக இல்லை.

தேஷ்முக், பாபாவை சந்திக்க செல்வாக்கு மிக்க, உயர் வகுப்பைச் சார்ந்த மக்களை, தன் இல்லத்திற்கு அழைத்தார். ஒருமுறை பெண்டு அவரிடம், "பாபா அனைவருக்கும் உரியவர், எனவே இவர்களை மட்டும் ஏன் அழைக்கிறீர்கள்?" என வினவினார்.

தேஷ்முக் பதிலளித்தார், "பணக்காரர்களுக்கு பாபாவின் சகவாசம் அதிகம் தேவை, ஏனென்றால் அவர்களை வறியவர்களாக்குவது அவர்களிடம் இல்லை!"

சிரித்துக்கொண்டே பாபா கூறினார், "**நமது தேஷ்முக் அதி புத்திசாலி.**"

மாலையில், தனது வாழ்வில் முதல்முறையாக, பாபாவே ஆரத்தியை நிகழ்த்தினார். இது தேஷ்முக்கின் வீட்டில் பாபாவின் உருவப்படத்திற்கு முன்பாக நடத்தப்பட்டது. "**என்னுடைய உண்மையான ஆரத்தியை என்னால் மட்டுமே செய்ய முடியும்**" என்று பாபா கூறினார். பின்னர் அவர் ஒவ்வொரு மண்டலியையும் வணங்கி, அங்கு வைக்கப்பட்ட புகைப்படத்தை தரிசனம் செய்யுமாறு கூறினார்.

அப்போது பாபா கூறியதாவது:

**நான் அவதார புருஷர் என்று மக்கள் கூறுகிறார்கள், ஆனால் ரிஷிகளும் முனிவர்களும் என்னைப் புரிந்து கொள்ள முடியாதபோது, அவர்கள் என்னை எப்படி அறிவார்கள்? பரிபூரண குருநாதர்களுக்கு மட்டுமே என்னைத் தெரியும். நான்தான் அந்த பழமையான ஆதிகால புருஷன் - ஸொராஸ்டர், ராமா, கிருஷ்ணா, புத்தா, இயேசு, முஹமது. ஆனால் நான் 'ஆதி சக்தி' என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? என்னை அறியும் பாக்கியம் பெற்றவர்கள் அரிது. எனவே ஒன்று செய்யுங்கள். என்னை புரிந்து கொள்ள**

**வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள். என்னை நேசியுங்கள், எனக்குக் கீழ்ப்படியுங்கள்; அவ்வளவுதான்.**

அப்போதைய மனநிலையை மாற்றி, பாபா கேலி செய்யும் விதத்தில் ஒரு விசித்திரமான கோரிக்கையை முன்வைத்தார்: "**பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் சந்திப்புகளைப் பற்றி எனக்கு நினைவூட்டுவதற்கு, சரியான நேரத்தில் கூவும் ஒரு சேவல் தேவை.**" இந்த வேண்டுகோளைக் கேட்டு அனைவரும் குழப்பமடைந்தனர், இறுதியில் பாபா புன்னகைத்து கூறினார், "**டாக்கே! இனிமேல், இதுவே உங்கள் வேலையாக இருக்கும். என் கவனத்தை ஈர்க்க நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் சேவலைப் போலக் கூவ வேண்டும். இது உங்களுக்கான எனது நிலையான உத்தரவு. நீங்கள் இப்போது என்னுடைய 'விழிப்புச் சேவல்!'**"

22ஆம் நாள் மதியம், **ஜனதா கல்லூரி** மகரிஷி மண்டபத்தில், மாலை, 4:15 மணிக்கு நிகழ்ச்சி நடந்தது. மத்திய அரசின் அமைச்சர் டாக்டர் பஞ்ஜாப் ராவ் எஸ். தேஷ்முக், முதல்வர் டாக்டர் ஜவாலா பிரசாத் மற்றும் பிற ஆசிரிய உறுப்பினர்கள் பாபாவை வரவேற்றனர். பாபாவுக்கு மாலை அணிவித்து, பஞ்ஜாப் ராவ் உரை நிகழ்த்தினார். பஜனை பாடல்களைத் தொடர்ந்து, பாபாவின் '**மதமும் அரசியலும்**' என்ற செய்தி வாசிக்கப்பட்டு, கல்லூரி மாணவர்களுக்கு, பிரசாதம் வழங்கப்பட்டது. டெல்லியைச் சேர்ந்த ஹர்ஜீவன் லால் அனுப்பிய பாபாவின் பெரிய புகைப்படத்தை டாக்டர் ராவிடம் ஸஹானே வழங்கினார்.

அதை மண்டபத்தில் வைத்தபோது, டாக்டர் ராவ், "இந்த மண்டபத்தின் சுவரை அலங்கரிக்கும் பாபாவின் புகைப்படம், நீங்கள் இங்கு வந்ததை எப்போதும் நினைவூட்டும்" என்றார். மண்டபத்திற்கு பெயரிடப்பட்ட புனித ரமண மகரிஷியின் உருவப்படத்தையும் பாபா திறந்து வைத்து, கல்லூரி வளாகத்தை சுற்றிப்பார்த்தார்.

அன்று மாலை 7:30 மணியளவில், பாபு ஸாஹேப் கபர்தே, அம்ராவதியில் அவரது இல்லத்தில் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். அவர் பாபாவை அழைத்தபோது, "பூனாவைச் சேர்ந்த ஹீராபாய் பரோடேகர் உங்களுக்காக இசைநிகழ்ச்சியை நடத்துவதற்காக இங்கே வந்துகொண்டிருக்கிறார். உங்கள் பிரசன்னத்தால் எங்கள் இல்லத்தை ஆசீர்வதியுங்கள்" என்றார்.

ஆனால் பாபா அங்குச் சென்றபோது, பாடகி ஹீராபாய் வரவில்லை. எனவே பாபா அரை மணி நேரம் கழித்து மண்டலியிடம் கூறினார், "**கபர்தே என்னை ஏமாற்றிவிட்டார், மக்கள் இத்தகைய தந்திரங்களால் பாழாகிவிடுகிறார்கள்! ஆனால் என்னுடன் அது வேறு விஷயம். அவர்**

**என்னை எப்படித்தான் நடத்தினாலும், கருணைக் கடலாகிய நான் அவரை மன்னித்துவிட்டேன்."**

நானா கேரின் மூத்த சகோதரியான **சுஷீலா சுபேதார்** மற்றும் அவரது மகன்கள் **பால்**, 23, **ஆனந்த்**, 18 ஆகியோரும் பாபாவைப் பார்க்க வந்தனர். ஆனந்த், முந்தைய நாள் இரவு பாபாவைக் கனவில் காண நேர்ந்தது, அவரை சந்திக்கும் அதீத ஆர்வத்துடன் இருந்தார். அவர், "பாபா, நான் உங்களுடன் இருக்கலாமா?" என வினவினார்.

பாபா, ஆனந்தை தன் அருகில் அமர வைத்து, **"நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?"** என்று கேட்டார்.

"நிச்சயமாக," ஆனந்த் பதிலளித்தார்.

பாபா, நானாவிடமும் அந்தக் கேள்வியை எழுப்பியபோது, அவரும் அதே பதிலை அளித்தார். நானாவின் சகோதரர் வினு, அவரது மனைவி ஆஷா மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். பாபா நானாவிடம், **"உங்கள் ஆடைகளைக் களைந்து, ஏழு வீடுகளில் யாசித்து, உணவை எடுத்து வாருங்கள்"** என்று அறிவுறுத்தினார். நானா ஆடைகளை அவிழ்க்க ஆயத்தமான அவ்வேளையில், பாபா அவரைத் தடுத்து, **"உண்மையில் நீங்கள் உங்கள் ஆடைகளைக் கழற்றப் போகிறீர்களா அல்லது வெறும் நாடகமா?"** என்று கேட்டார்.

நானா, "நிச்சயமாக நான் உங்கள் உத்தரவை நிறைவேற்றப் போகிறேன்" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, **"உங்களைப் போன்ற மனிதர்களுக்கு நான் தலை வணங்குகிறேன்!"** என்று கூறினார்.

ஆனந்திடம் பாபா, **"நீங்கள் இப்போது பள்ளிக்கூடம் சென்று பயில்வது நல்லது"** என்று கூறினார். அவரது சகோதரர் அமைதியாக அமர்ந்திருந்திருந்தாலும் அவர் உண்மையிலேயே பாபாவை நேசித்தார். அன்று முதல், இரண்டு இளைஞர்களும் மெஹர் பாபாவின் பாதங்களில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர்.

நானா கேரின் அண்ணி, பாபா அம்ராவதியில் இருந்தபோது அவருக்கு உணவு தயார் செய்து கொண்டிருந்தார்; ஒரு நாள் பாபா அவரிடம், **"ஆஷா, நீங்கள் சட்னி அருமையாகத் தயார் செய்கிறீர்கள். இது மிகவும் வித்தியாசமானது, நான் அதைப் பெரிதும் விரும்புகிறேன்"** என்று கூறினார்.

இதற்கிடையில், அடுத்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் ஓர் அழகான பதினாறு வயது சிறுவனைக் கண்டுபிடிக்குமாறு பாபா டாக்கேக்கு அறிவுறுத்தியதும், அவர் உடனடியாக தனது தேடலைத் தொடங்கினார்.

வெகுஜன தரிசன நிகழ்ச்சியின் அடுத்த இடம் **நாக்பூர்**. பாபாதாஸ் அங்கு இருந்தபோதிலும், அவருக்கு பதிலாக, காக்கா ஷெர்லேகருக்கு அனைத்து ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டதால் இருவருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

பாபாதாஸ் பொறாமையும் வருத்தமுமடைந்து, தீக்குளித்துக்கொள்வதாக அச்சுறுத்தினார்! பாபாதாஸை அம்ராவதிக்கு அழைத்து வருவதற்காக பாபா, பெண்டுவை நாக்பூருக்கு அனுப்பி, அவரைக் கடுமையாகக் கண்டித்து, சுற்றுப்பயணத்தின் போது தம்முடன் இருக்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

**தாய் மஹாராஜ்** என்ற நடுத்தர வயது பெண் துறவி அம்ராவதியில் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பெரும்பாலான ஆதரவாளர்கள் இருந்தனர், அவர் பாபாவைத் தனது சன்னிதானத்திற்கு அழைத்தார். 1952, டிசம்பர் 23 செவ்வாய்க்கிழமை, 500க்கும் மேற்பட்ட தனது பக்தர்கள் முன்னிலையில், கண்ணீருடன் பாபாவை வரவேற்று, "அவதார புருஷர் என்னிடம் வந்துவிட்டார்!" என்று அங்கிருந்த அனைவருக்கும் பறைசாற்றினார்.

அரை மணி நேர தரிசன நிகழ்ச்சியின் போது, தாய் மஹாராஜ் அவரை விட்டு விலகாமல், பாபாவின் பாதங்களுக்கு அருகிலேயே அமர்ந்திருந்தார். நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபாவை சன்னிதானத்திற்குள் வருமாறு அவர் கேட்டுக் கொண்டார். கிருஷ்ண பெருமானின் சிலை உள்ளே மிகவும் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது; தாய் மஹாராஜ் சிலையைப் பார்த்துவிட்டு பாபாவை நோக்கினார். சிலையைச் சுட்டிக்காட்டி, பாபா, "**நான் அங்கே இருக்கிறேன்!**" என்று குறிப்பிட்டு, "**தாய் மஹாராஜின் உள்ளுணர்வை நான் பாராட்டுகிறேன். பல துறவிகள் உள்ளனர், ஆனால் அவர் தன்னை முற்றிலும் மறந்துவிடும் உண்மையான துறவிகளில் ஒருவர்; மிகுந்த எளிமையும், அடக்கமுமானவர். என்னைப் பொறுத்தவரை, நான் கபட வேடதாரிகளை விட ஆங்காங்கே அலைந்து திரியும் புனிதர்களை விரும்புகிறேன்!**" என்றார்.

அம்ராவதியில் மூன்றாவது பொது தரிசன நிகழ்ச்சி விதர்பா பல்கலைக்கழகத்தில் அன்று நடைபெற்றது; அங்கு முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் பலர், பாபாவுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர். பாபா வளாகத்தைச் சுற்றிவந்து அனைவரையும் சந்தித்தார். **முதல்வர் திரு.நெருல்லா**, அவர் அவதார புருஷராகக் கருதிய கல்கத்தா ராமகிருஷ்ணரின் பக்தர். பாபா அவருக்கு விளக்கினார், "**நான் இக்கால அவதார புருஷர் என்று அதிகாரத்துடன் அறிவிக்கும்போது, அது அர்த்தமற்றது, அறிவற்றது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ராமகிருஷ்ணர் ஓர் அரிய வகை சத்குரு. அவர் இந்த அவதார யுகத்தின் அதிகாரபூர்வ தூதுவர். எனவே அவரைத் தொடர்ந்து நேசியுங்கள், ஒரு நாள் அவரில் நீங்கள் என்னைக் காண்பீர்கள்.**"

"இறைவுணர்வுக்கு முன்பு நான் இன்னும் எத்தனை பிறவிகள் எடுக்க வேண்டும்?" நெருல்லா பாபாவிடம் கேட்டார்.

**"உங்கள் இதயத்தின் பொறுமையை நன்கு வெளிப்படுத்தும் உங்கள் கேள்வியில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பலர் என்னிடம் வந்து உடனடியாக இறையுணர்வை அடைய வேண்டும் என்று கோருகிறார்கள். இப்போது நீங்கள் கேட்டீர்கள், நான் உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் என்னை ராமகிருஷ்ணரின் வடிவத்தில் உயிரைத் துறக்கும்போது காண்பீர்கள்."**

அன்று மாலை அம்ராவதியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் அமைந்த டாக்டர் பட்வர்தனின் தொழுநோயாளி காலனிக்கு பாபா அழைத்து செல்லப்பட்டார். அவர் அந்தப் புகலிடத்தைச் சுற்றி வந்து, நோயாளிகளுடன் அவர்களின் சிறிய பிரார்த்தனை கூடத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். பாபா தனது எழுத்துப்பலகை மூலமாக, பின்வரும் சிறப்புச் செய்தியை வலியுறுத்தி கூறினார்:

**கடவுள் அதீத துன்பம் அனுபவிப்பவர்களை அதிக அளவில் நேசிக்கிறார். வேண்டாத, எதிர்பாராத துன்பம், ஒளிந்து மறைந்திருக்கும் ஓர் ஆசீர்வாதமாகும், ஏனெனில் இன்பம், துன்பம் இரண்டும் இறுதியில் எதுவுமே இல்லை. தொழுநோயாளிகள் விரக்தியடைந்து தங்கள் தலைவிதியை சபிக்காமல், அந்த துன்பத்தை, கடவுள், அவருக்கு அருகில் வருவதற்காக வழங்கும் வாய்ப்பாகக் கருத வேண்டும். உடல் தொழுநோயால் பாதிக்கப்படும் சிலருடன் ஒப்பிடுகையில், இன்று உலகில் பலர், மனதின் தொழுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.**

இறுதியில், பாபா அறிவித்தார், **"உலகில் உள்ள அனைத்து வகையான தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஓர் உலகளாவிய ஆசிரமத்தை நிறுவ எனது சுய திட்டங்கள் உள்ளன."**

1952, டிசம்பர் 24 புதன்கிழமை காலை அம்ராவதியிலிருந்து பதினான்கு மைல் தொலைவில் அமைந்த **தேவர்காவ்ம்** என்ற கிராமத்திற்குச் சென்றதும், பாபா, '**வீர்பன் மஹாராஜ்**' என்றழைக்கப்பட்ட மஸ்தைத் தொடர்பு கொண்டார். பாபா அவரது கால்களை அழுத்திவிட ஆரம்பித்ததும், மஸ்த் அவரிடம், "எனக்காக ஏன் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்? நீங்கள் உலகத்திற்காக பெரிய வேலை செய்ய வேண்டும்!" என்று கூறினார்.

பாபா பதிலளித்தார், **"என்னை நேசிப்பவர்களுக்காக நான் இருக்கிறேன், என்னை நேசிப்பவர்களே எனக்கு குருநாதர்கள்."**

"நீங்கள் பிரபஞ்சத்தின் அதிபதி," மஸ்த் கூறினார். "நீங்கள் இங்கு இருப்பதால் இந்த கிராமம் ஆசீர்வதிக்கப்பட்டது." மண்டலியை நோக்கி வீர்பன்

மஹாராஜ், பகவத் கீதையிலிருந்து இந்த ஸ்லோகத்தை (வசனம்) மேற்கோள் காட்டினார்: "நீதியின் சுடர் மங்கலாக எரியும் போது, கடவுள் அவதார புருஷராக பூமியில் வருகிறார்."

பாபாவின் பிரசன்னம் வீர்பன் மஹாராஜை வியப்பில் ஆழ்த்தி, அன்பின் கண்ணீரை சிந்தச் செய்தது. "மெஹர் பாபா உண்மையான அவதார புருஷர்" என்று அவர் கூறினார். "அவருடைய நிஜ வடிவில் நான் அவரைப் பார்க்கிறேன். எனது பிறவி இறுதியில் பலனடைந்தது."

பிற்பகல் 3:30 முதல் 4:30 மணி வரை, பாபா ஒரு ஹரிஜன் காலனியில் தரிசனம் வழங்கினார். அன்று மாலை தேவர்காவ்மில் திறந்த வெளியில் பொது ஜன கூட்டம் நடந்தது. திரள்திரளாக மக்கள் வருகை தந்த காட்சி, ஹமிர்பூர் நிகழ்ச்சியை நினைவூட்டியது. ஜெய்ராம் புவாவும் தனது பக்தர்களுடன் வந்து காடேக்கர் நிகழ்த்திய 'குருநாதரின் ஆரத்தி'யில் (MASTER'S PRAYER) பங்கெடுத்தார். பாபாவை தனது புதிய காரில் அம்ராவதிக்கு அழைத்துச் செல்ல மும்பையிலிருந்து அக்பர் அலி எம். அன்வரலி என்பவர் வந்திருந்தார்.

வெகுஜன தரிசன நிகழ்ச்சியின் அட்டவணையின்படி, அம்ராவதியைத் தொடர்ந்து அடுத்ததாக 60 மைல் தொலைவில் அமைந்த ஸாவ்னேர் மற்றும் நாக்பூரில் நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அதற்கான காரணத்தை விளக்காமல், பாபா அந்த நிகழ்ச்சிகளை ஒத்திவைத்தார். அம்ராவதிக்கு அருகே 'கரஞ்சா' என்ற ஊரில் வாழும் எரச்சின் மாமா, பிலோ மாமா ஸட்டா, பாபாவின் தரிசனத்திற்காக அம்ராவதிக்கு வந்திருந்தார், பாபா அவருடன் மண்டலியை கரஞ்சாவுக்கு அனுப்பினார். எரச், சகன் இருவருடன் பாபா, 24ஆம் நாள், பத்னேரா வழியாக மெஹராஸாத்திற்குப் புறப்பட்டு, மறுநாள் காலை 9:45 மணிக்கு வந்து சேர்ந்தார்.

நாக்பூர் நிகழ்ச்சிகளை ஒத்திவைப்பதில் மறைந்திருந்த நோக்கம் அப்போது புலப்படவில்லை. அங்கு பாபாவின் வலையில் மீன் ஒன்றைச் சிக்க வைக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் அந்த **'மீன்'** நாக்பூரில் அப்போது இல்லை. எனவே பாபா 300 மைல் தூரம் மெஹராஸாத் பயணம் செய்து, நான்கு நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஸாவ்னேருக்குப் புறப்பட்டுச் சென்றார்!

இந்த மீன் யார் என்பதை அறிய வாசகர்கள் ஆர்வமாக இருக்கலாம். அது வேறு யாருமல்ல, **இந்த வரலாற்றுத் தொகுப்பின் ஆசிரியர் - வீர் ஸிங் (பாவ்) கல்சூரி**. 1927இல் பிறந்த பாவிற்கு 26 வயது, பொது நிர்வாகத்தில் முதுகலை மற்றும் சட்டம் ஆகியவற்றை ஒரே நேரத்தில் பயின்று, முதுகலை அறிவியல் பட்டத்திற்கான வேதியியலிலும் ஆராய்ச்சி செய்து வந்தார். அந்த நேரத்தில், அவருக்கு ஆன்மீகத்தில் சிறப்பு ஆர்வம் எதுவும் இல்லை, உண்மையில் அது என்னவென்று புரியாத நிலை. இருப்பினும், அவர் பக்தி நிறைந்த ஓர் ஆன்மாவாகத் திகழ்ந்தார்; இதையும் அவரது ஆய்வுப் போக்கையும் கருத்தில்

கொண்டு, அவரது சக ஊழியர்களும் பேராசிரியர்களும் அவருக்கு '**பண்டித்ஜி**' என்ற செல்லப்பெயரை, பட்டமாகச் சூட்டினர். தினமும் அவர் முழு மனதுடன் பிரார்த்தனைகளை மொழிந்தாலும், அதற்கு மேல் அவருக்கு எதுவும் தெரியாது.

இருப்பினும், மெஹர் பாபா, நாக்பூர் வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, பாவ் தனது கல்லூரி படிப்பில் ஆர்வத்தை இழந்தார். அவர் வார்தாவிற்கு அருகிலமைந்த 'ஸெகாவ்ம்' கிராமத்தில் மகாத்மா காந்தியின் ஆசிரமத்திற்குச் சென்றார், ஆனால் அங்கு அவர் மகிழ்ச்சியாக இல்லை. நாக்பூருக்குத் திரும்பிவந்த அவர், ராமகிருஷ்ணா ஆசிரமத்திற்குச் சென்றார், அங்கேயும் அவர் ஏமாற்றமடைந்தார். அவர் முழு வாழ்க்கையையும் துறந்து, இமயமலையில் வாழும் எண்ணத்தில், பாவ், ரிஷிகேஷில் வாழ்ந்த ஒரு ஸ்வாமிக்குக் கடிதம் எழுதினார்; ஸ்வாமி அவரை 1953, ஜனவரி 9 அன்று ரிஷிகேஷுக்கு வருமாறு அழைத்தார். பாவ் தனது குடும்பத்தினருக்குத் தெரிவிக்க முடிவு செய்து, ஸ்வாமியின் ஆசிரமத்தில் இணைவதற்கு முன்னர் உலக சுமைகள் அனைத்திலிருந்தும் விடுபட தீர்மானித்தார்.

இதற்கிடையில், மெஹர் பாபா நாக்பூருக்கு வர இருப்பதை அவர் செய்தித்தாள்கள் மூலம் தெரிந்துகொண்டார். மெஹர் பாபாவின் பெயரை, அவர், கேள்விப்பட்டதே இல்லை; அவருக்காகக் காத்திருப்பது பயனளிக்கும் என்றும் நினைக்கவில்லை. எனவே, டிசம்பர் 25 அன்று பாவ் நாக்பூரிலிருந்து 80 மைல் தொலைவில் வாழும் தனது குடும்பத்தை சந்திக்க புறப்பட்டார். தனது மனைவி மற்றும் மகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, பாவ் 30ஆம் தேதி நாக்பூருக்குத் திரும்பிய வேளையில், மீண்டும் செய்தித்தாள்கள் மூலமாக மெஹர் பாபா 31ஆம் நாள் ஸாவ்னேரில் தரிசனம் வழங்க இருப்பதை அறிந்தார். ஆனால் மெஹர் பாபா வருகை தந்து திரும்பிச் சென்றுவிட்டார் என்ற எண்ணத்தில் இருந்ததால், அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்; பாபாவின் நிகழ்ச்சிகள் தள்ளிப்போடப்பட்டது அவருக்குத் தெரியாது. எனவே, ரிஷிகேஷுக்குச் செல்வதற்கு இன்னும் சில நாட்கள் இருந்ததால், ஸாவ்னேரில் பாபாவை தரிசனம் செய்ய நினைத்தார். அவரது சகோதரி **நீரா கஹர்வார்** தனது கணவருடன் ஸாவ்னேரில் வாழ்ந்து வந்தார், மேலும் அங்கு வாழும் பலருக்குப் பரிச்சயமானவர்; பாவ், அவ்வப்போது அங்குச் சென்று வந்தார்.

பாவ் தனது மனைவி ரமா மற்றும் ஏழு மாத குழந்தை ஷீலாவையும் அழைத்துக்கொண்டு அடுத்த நாள் தரிசனத்திற்குச் செல்ல முடிவு செய்தார்.

இதற்கிடையில், 1952 டிசம்பர் 25 வியாழன் அன்று பிற்பகல், பாபாவின் திடீர் வேண்டுகோளிற்கிணங்க, மெஹராஸாத்தில், மாலை 4:00 மணிக்கு கவாலி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. ஆதி சீனியர், சிதுவுடன் அஹமதுநகர் பாடகர் ஒருவரை அழைத்து வந்தார். அடுத்த நாள் காக்கா, எரச், ஆதி சீனியர், டாக்டர்

டான் ஆகியோரை பாபா தலைவணங்கினார், அதே நேரத்தில் டாக்டர் டான் 'மனம் வருந்தி இரங்கும்' பிரார்த்தனையை மொழிந்தார்.

1952, டிசம்பர் 29 அன்று மதியம் 1:15 மணிக்கு பாபா, மெஹராஸாத்திலிருந்து **ஸாவ்னேருக்குப்** புறப்பட்டார். ஆதி, பாபாவை ஸரோஷின் காரில், எரச் மற்றும் சகனுடன் அழைத்துச்சென்று, மாலை 6:30 மணிக்கு மும்பை விக்டோரியா டெர்மினஸ் வந்தடைந்தார். அங்கு நரிமன், மெஹர்ஜி, ஜால்பாய், காடேக்கர் ஆகியோர் பாபாவை சந்தித்தனர். பாபா, ஸாவ்னேருக்கு ரயிலில் செல்ல இருந்ததால், ஆதி பின்னர் அஹமதுநகர் திரும்பி வந்தார். இதர மண்டலி கரஞ்சா ரயில் நிலையத்தில் பாபாவுடன் இணைந்தனர்; அனைவரும் மறுநாள் மாலை நாக்பூரிலிருந்து 26 மைல் தொலைவில் அமைந்த ஸாவ்னேரை சென்றடைந்தனர். முன்னர் அறிவுறுத்தியபடி, டாக்கே ஒரு சிறுவனைத் தேர்ந்தெடுத்து, அவனது தந்தையையும் உடன் அழைத்து வந்திருந்தார்.

அமெரிக்க திரைப்பட இயக்குனரான அலெக்ஸாண்டர் மார்கியும் ஸாவ்னேருக்கு வந்து நானா கேரின் மைத்துனரான பாஸ்கர் முகுந்த் ஸப்ரேயின் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டார். ஆல்வார் நகரில் தனது படப்பிடிப்பின் தொடக்க விழாவிற்கு பாபாவை அழைக்க மார்கி குறிப்பாக வந்திருந்தார், ஆனால் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக பாபாவால் கலந்து கொள்ள முடியவில்லை.

பாபாவின் வருகைக்காக, ஸாவ்னேர் நகரம் திருவிழாக் கோலம் பூண்டு காணப்பட்டது. ஒவ்வொரு மூலை முடுக்குகளும் வரவேற்பு அலங்காரங்கள் மற்றும் பூங்கொத்துகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சாலைகள் சுத்தம் செய்யப்பட்டு, அலங்கார வளைவுகளும், பெரிய பந்தல்களும் அமைக்கப்பட்டன. **போஃபலி ப்ளீடர்**, அவரது மகன்கள் மற்றும் அப்துல் மஜித் கான், நைப் தாசில்தார் (அரசு அதிகாரி), மேலும் அக்கம் பக்கத்து கிராமங்களான அஜன்காவ்ம், கெரி, அங்கேவாடா, பட்காகேடி, மாலேகாவ்ம், அஜ்னி போன்ற பல இடங்களைச் சேர்ந்த அன்பர்கள் ஸாவ்னேர் நகரின் இந்த அற்புதமான உருமாற்றத்திற்கு காரணமாக இருந்தனர்.

பாபா, ஸர்க்யூட் ஹவுஸிலும், மண்டலி, பவல்கர் பிளீடரின் இல்லத்திலும் தங்கியிருந்தனர். பவல்கரின் மகள் பசுமதி, பாபாவை மிகவும் நேசித்தார்; அவருடைய தீவிர பக்தியில் உணவு, தண்ணீர் உட்கொள்ளுவதை நிறுத்திவிட்டார். பாபா அம்ராவதியில் இருந்தபோது, பசுமதியை அவரிடம் அழைத்து வந்து, அவரே உணவூட்டினார்.

அப்துல் மஜித் கான், போபஃலி குடும்பத்தினரின் உதவியுடன், எதிர்பார்த்ததைவிட பாபாவுக்கு சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார். டிசம்பர் 31 அன்று ஏராளமான மக்கள் திரண்டனர் - குறைந்தது 20,000 பேர். காலம் இதை

இப்படி வர்ணித்தது: "மெஹர் பாபாவுக்கு 'ஜெய்'" முழக்கங்கள் வானில் எதிரொலித்தன, அவருடைய பிரசன்னத்தின் தெய்வீகக் கதிர்கள் எங்கும் பிரகாசித்தன!"

ஸாவ்னேர் ரயில் நிலையத்தில் இறங்கி நகருக்குள் நுழைந்த பாவ், இந்த அற்புதமான காட்சியைக் கண்டு, தனது சகோதரியின் இல்லத்திற்கும் செல்லாமல், மனைவி, குழந்தையுடன் நேராக தரிசன பந்தலுக்குச் சென்றார்.

பாபா அப்போதுதான் கூடாரத்திற்குள் நுழைந்தார். மக்கள் நீண்ட வரிசையில் தரையில் அமர்ந்து, தரிசனத்திற்காகக் காத்திருந்தனர். பாவ் அவர்கள் மத்தியில் அமர்ந்தார். அவரது செல்வாக்கு மிக்க உறவினர்களும் நண்பர்களும் அவரைப் பார்த்ததும், அவர் நேரடியாக மேடையை அணுகலாம் என்று அவரிடம் முறையிட்ட பின்னரும், பாவ் அங்கேயே அமர்ந்து, தூசி, வெப்பம் எதையும் பொருட்படுத்தாமல் தனது முறைக்காகக் காத்திருந்தார். தூரத்திலிருந்து மெஹர் பாபாவின் புன்னகையைப் பார்த்து முற்றிலும் தொலைந்து போனார்!

இதர இடங்களைப் போலவே, பாபா முதலில் ஏழு ஏழைகளுக்குத் தலைவணங்கி பிரசாதம் வழங்கினார், பின்னர் அவர் கூட்டத்தை வணங்குவது குறித்த செய்தி சத்தமாக வாசிக்கப்பட்டது; தொடர்ந்து பாபா சபையை வணங்கினார். இறை அன்பின் அலைகள் தெய்வீக கடலில் பெருக்கெடுத்து ஓடின, ஆனால் அவை வெப்பமும் குளிர்ச்சியும் மிக்க விசித்திரமான அனலாக இருந்தன.

**ஹர்கரே பிளீடர்** வரவேற்புரையை வாசித்து, மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாபா மையங்களில் செய்யப்பட்ட பணிகள் குறித்த சிறு அறிக்கை ஒன்றை வழங்கினார். அவர் உரை நிகழ்த்தும்போது அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, பாபா அவரைத் தழுவி, கூறினார், "**உடலைத் துறக்கும் முன் நீங்கள் என்னைக் காண்பீர்கள்.**"

வார்தாவின் மகாதேவ் புவா என்ற பாடகர் கீர்த்தனையை பாடினார், பாபா அவரை மிகவும் பாராட்டினார். ஒரு கட்டத்தில், பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**இறையுணர்வை அடைந்து அனைத்திலும் இறைவனைக் காண்பதே அனுபவத்தின் உச்சகட்ட நிலை. அதிசயங்கள் என்பது உயிர் துறந்தவர்களை உயிர்ப்பிப்பதில் இல்லை, ஆனால் படைப்பு, உலகம் எனும் தனிச் சிறப்பான மாயையில், அற்புதங்கள் என்பது சிறிய மாயைகள் ஆகும்.**

'**மனிதனின் தெய்வீகப் பாரம்பரியம்**' என்ற செய்தி வாசிக்கப்பட்டு தரிசனம் தொடங்கியது. தரையில் வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் பாபாவை நோக்கிச் செல்ல வேண்டும். அவர்கள் பாபாவின் முன்னிலையில் சென்றதும், பாபா சிலரைப் பார்த்து புன்னகைப்பதும், சிலரை முத்தமிடுவதும், சிலருடைய தலையில் கை வைத்து ஆசீர்வதிப்பதையும் தொடர்ந்து செய்துவந்தார். ஆனால்

பாவ் கல்சூரியின் முறை வந்த போது, பாபா வேறு எங்கோ பார்த்த வண்ணம், முகத்தையும் அவரை நோக்கித் திருப்பாமல், ஒரு வாழைப்பழத்தைப் பிரசாதமாக அவர் கையில் திணித்தார். மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததால், பாவ், உடனடியாக அவசரமாக வெளியேற்றப்பட்டார். பாபாவின் முன்னால் சில வினாடிகளுக்கு மேல் நிற்க முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

மெஹர் பாபா எல்லையில்லா குறும்புக்காரராக இருந்ததால், பாவ் கல்சூரியின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு விளையாடினார். முற்றிலும் அமைதியற்ற அவரது இதயம் பாபாவுடன் பேச விரும்பியது, ஆனால் பாபா அவரைப் பார்க்கவில்லை. பாவ் முழு வாழைப்பழத்தையும் தோலோடு உண்டார்! அது ஒரு வாழைப்பழம் அல்ல, தெய்வீக நெருப்பின் தீப்பொறி, அதை உண்ணும்போது அவரது உள்ளம் முழுவதும் உள்ளளவில் எரியத் தொடங்கியது!

மெஹர் பாபாவுடன் இருந்த அவரது மண்டலி யார் என்று பாவிற்குத் தெரியவில்லை, அவர் ஒவ்வொருவரிடமும், "நீங்கள் பாபாவுடன் இருக்கிறீர்களா?" என்று கேட்கத் தொடங்கினார்.

இறுதியில் பாவ் சில மண்டலியை சந்தித்தார், ஆனால் பாபாவுடன் ஒரு நேர்காணல் சாத்தியமில்லை என்று கூறப்பட்டது. ஸவக் கொத்வால் அஹமதுநகரில் ஆதியின் அலுவலகத்திற்கு கடிதம் எழுதுமாறு பரிந்துரைத்தார். ஆந்திராவைச் சேர்ந்த ரங்கா ராவ், அவரது மகன் மற்றும் ஏலூருவைச் சேர்ந்த டாக்டர் கனகதண்டி சூர்யநாராயணன் ஆகியோர் ஸாவ்னேருக்கு வந்திருந்தனர். பாவ் அவர்களை சந்தித்த வேளையில், அவர்களும் புதியவர்கள் என்றாலும், பாபாவுடன் ஒரு நேர்காணலை ஏற்பாடு செய்ய முடியும் என்று ரங்கா ராவ், பாவிற்கு உறுதியளித்தார். ஜீன் அட்ரியலின் 'அவதார்' புத்தகத்தைப் படிக்குமாறு பாவிற்கு காடேக்கர் அறிவுறுத்தினார், மேலும் இந்த நேரத்தில் ஒரு நேர்காணல் சாத்தியமற்றது என்பதை மீண்டும் வலியுறுத்தி கூறினார்.

தரிசன நிகழ்ச்சி மாலை வரை நீடித்தது, அது நிறைவடைந்ததும், பாபா, ஸர்க்யூட் ஹவுஸுக்குப் புறப்பட்டார், அங்கு பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இரவு வரை, பாவ் ஒரு குழப்பமான மனநிலையில் பங்களாவை வட்டமிட்டார். ரிஷிகேஷ் செல்வதற்கான அனைத்து சிந்தனைகளும் மங்கிப்போயின; தான் தேடிக் கொண்டிருந்தவரை கண்டுகொண்டதாக அவர் ஆழ் இதயத்தில் உணர்ந்தார்.

கவலை தோய்ந்த முகத்துடன் நள்ளிரவில் அவர் தனது சகோதரியின் வீட்டிற்கு சென்ற போது, அவர் என்ன விஷயம் என்று கேட்டார். ஆனால் அவரது அமைதியின்மைக்கான காரணத்தை பாவ் வெளிப்படுத்தவில்லை.

அன்று இரவு அவரால் தூங்க முடியவில்லை; அதிகாலை 4:00 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறத் தயாராக இருந்தவரிடம், அவரது

சகோதரி, அவர் இவ்வளவு சீக்கிரம் எங்கே செல்கிறார் என்று கேட்க, பாவ், 'நடக்கச் செல்கிறேன்' என்றார். சகோதரியும் அவருடன் செல்ல விரும்பியதால், பாவ், மெஹர் பாபாவின் பங்களாவுக்குச் செல்ல முடியாமலாயிற்று. இருவரும் திரும்பி வந்ததும், பாவின் மைத்துனர் **ராம்லால் ஸிங் கஹர்வார்** அவரிடம், "நீங்கள் ஏன் இத்தனை பரிதாபமாகத் தோன்றுகிறீர்கள்? நீங்கள் எங்கோ முழுமையாகத் தொலைந்துவிட்டதாகத் தெரிகிறது" என்று கேட்டார்.

"நான் நன்றாக இருக்கிறேன்," பாவ் முணுமுணுத்தார். "எனக்கு ஒன்றும் இல்லை. நான் சிறிது நேரம் வெளியே போகிறேன்."

பாவ் கல்சூரிக்குத் தெரியாத ஒரு விஷயம் என்னவென்றால், ராம்லாலின் தந்தை **மஹாராஜ் ஸிங்**, 1952, நவம்பர் மாதத்தில் நடந்த மெஹராபாத் கூட்டத்தில் கலந்துகொண்டு, பாபாவின் வருகைக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் குழுவில் ஒருவராக நியமிக்கப்பட்டார். ராம்லால், நீராதேவி (பாவ் கல்சூரியின் சகோதரி) ஆகியோரும் 1944இல் ஸாவ்னேரில் மெஹர் பாபாவை தரிசனம் செய்தனர், ஆனால் அவர்கள் அதைப் பற்றி பாவிடம் சொன்னதில்லை. பாபாவின் பெயரை செய்தித்தாள்களில் முதன்முறையாகப் பார்த்திருந்தாலும், தெய்வீக அன்பிற்குரியவருடனான அவரது முதல் சந்திப்பு அவரது இதயத்தைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

பாவ் மீண்டும் ஸர்க்யூட் ஹவுஸை நோக்கிச் சென்றார். ரங்கா ராவ், அவரது மகன் மற்றும் டாக்டர் கனகதண்டி ஆகியோர் ஆந்திராவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர், ஆனால் ரங்கா ராவின் மகன் அவர்கள் செல்வதற்கு முன்பு, பாபாவிடமிருந்து மலர் மாலை ஒன்றை அடைய விரும்பினார். பாபாவின் தரிசனத்திற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்று நினைத்த பாவ், ரங்கா ராவிடம் ஒரு குறிப்புச் சீட்டை வழங்கும்படி கேட்டு, பாபாவிடமிருந்து மாலையை வாங்கி வர, அதை ஸர்க்யூட் ஹவுஸுக்கு எடுத்துச் செல்ல முன்வந்தார். ரங்கா ராவ் எழுதிய குறிப்புடன் பாவ் பங்களாவுக்குச் சென்றார்.

வெளியில் கண்காணிப்புப் பணியில் இருந்த உள்ளூர் அன்பர் ஒருவர், பாவை உள்ளே அனுமதிக்காமல், அவரிடமிருந்து குறிப்புச் சீட்டை எடுத்துக்கொண்டு, உள்ளே சென்று சிறிது நேரத்தில் மாலையுடன் திரும்பி வந்தார். பாவ் மாலையைப் பெற்றுக் கொண்டாலும், பாபாவைப் பார்க்காமல் வெளியேறினார்; வழியில் சாலையில் விழுந்த தளர்வான இதழ்களை எடுத்து வாயிலிட்டுக் கொண்டார். "மெஹர் பாபா தரிசனம் வழங்க ஆந்திரா வர இருக்கிறார். அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நீங்கள் ஆந்திராவுக்கு வர வேண்டும். அங்கு, பாபாவுடனான நேர்காணலை கண்டிப்பாக ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறிய ரங்கா ராவிடம் மாலையைக் கொடுத்தார்.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தலின்படி மௌனம் கடைப்பிடித்து வந்த பாபாதாஸையும் பாவ் கல்சூரி சந்தித்தார். 'அவதார்' என்ற புத்தகத்தைத் திறந்து,

அதில் சில பகுதிகளைப் படிக்குமாறு கை சைகைகள் மூலம் பாவிற்குச் சொல்லிக்கொண்டே இருந்தார். ஆனால் பாபாதாஸுக்கு ஆங்கிலம் தெரியாததால், பாவ் புத்தகத்தைத் திறந்து படிக்கத் தொடங்கினார், பாபாதாஸ் பக்கத்தைப் புரட்டி ஆங்காங்கே படிக்கக் கூறினார். மீண்டும், பாவ் பத்தியை முடிப்பதற்குள், பாபாதாஸ் பக்கத்தைத் திருப்பி வேறொரு பகுதியைச் சுட்டிக்காட்டினார். இதர மண்டலி அனைவரும் தத்தமது பணியில் மும்முரமாக இருந்ததால் பாவால் அவர்களை சந்திக்க முடியவில்லை.

1953, ஜனவரி 1 வியாழன் அன்று நடைபெற்ற அடுத்த தரிசன நிகழ்ச்சியில் ஏறக்குறைய 20000 பேர் கூடியிருந்தனர். மெஹர் பாபா மையங்கள் நிறுவப்பட்ட இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான கிராம மக்கள் கடந்த சில நாட்களாக ஸாவ்னேரில் வந்து குவிந்தனர். ராகோ பட்டேல், மோதி ஜெகன் பட்டேல் மற்றும் பல்வேறு கிராமங்களின் தலைவர்கள் நூற்றுக்கணக்கான மக்களை இரண்டு நாட்கள் வெகுஜன தரிசனத்திற்காக அழைத்து வந்தனர். ஸாவ்னேர் நகரம் பாபாவின் தெய்வீக ஒளியில் ஒன்றோடு ஒன்றாக இணைந்தது. ஹமிர்பூர் மாவட்டம் முழுவதும் பொங்கி எழும் நெருப்பால் பரவி ஒவ்வொரு இதயத்தையும் பாதித்தது போல் இங்கும் பரவியது.

பாவ், தரிசன நிகழ்ச்சியின் போது பாபாவின் கவனத்தை ஈர்க்க மீண்டும் முயன்றார், ஆனால் அன்றும் பாபா அவரைப் பார்க்கவில்லை. "**ஆன்மீக ஏக்கத்தின் அணையா நெருப்பு**" (THE UNQUENCHING FIRE OF SPIRITUAL LONGING) என்ற பாபாவின் செய்தி வழங்கப்பட்டது, நிகழ்ச்சியின் முடிவில் பாபா கூறினார், "**போஃபலி பிளீடர் மற்றும் அப்துல் மஜித் கான் ஆகியோரின் அன்பான உழைப்பின் காரணமாக, ஸாவ்னேர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. நான் நாக்பூருக்கு நாளை புறப்படுகிறேன்.**"

மெஹர் பாபா பல குடும்பங்களை அவர்களது இல்லங்களுக்குச் சென்று பார்த்தார், ஆனால் தனிப்பட்ட குடும்ப நிகழ்வுகளாக இருந்ததால், பாவால் கலந்து கொள்ள முடியவில்லை. அப்துல் மஜித் கானின் இல்லத்தில் நடந்த கவாலி இசை நிகழ்ச்சியில், அலோபா மயக்கத்தில் இருப்பது போல நடனமாடத் தொடங்கினார். மண்டலி அவரைத் தடுத்து நிறுத்தி, பவல்கர் பிளீடரின் இல்லத்திற்குத் திருப்பி அனுப்பிவைத்தனர்.

பின்னர் அன்றைய தினம் மண்டலியுடனான உரையாடலின்போது, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு (1941 **அக்டோபர்** 17) தஹிகாவ்மில் நடந்த கடைசி சந்திப்பில், உபாஸனி மஹாராஜுக்கும் தனக்கும் இடையே பரிமாறப்பட்ட வார்த்தைகளின் ஒரு பகுதியை, மஹாராஜ் அவரது உடலைக் கைவிடுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, மெஹர் பாபா வெளிப்படுத்தினார்: "**உபாஸனி மஹாராஜ் என்னிடம் கூறினார்**, '**இப்போது**

**பேசுங்கள் - எதையும், ஏதாவது பேசுங்கள்! உங்களால் முடியும், அதனால் நீங்கள் என் முன்னிலையில் பேச வேண்டும்.'"** நான் பேசமாட்டேன், பேசக்கூடாது என்று அவருக்குத் தெரியும். நான் பேசாதபோது, எனக்கும், மஹாராஜுக்கும், அவர் தனது உடலை விரைவில் துறந்துவிடுவார் என்றும் தெரியும். அவர் இப்போது நாம் உரையாடுவதைக் கேட்கிறார், அதனால்தான் நான் உங்களிடம் இதைச் சொல்கிறேன்.

**"கடவுள் என்னை நேசிப்பதைப் போல், என்னை நேசிப்பவரை நான் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன்"** என்று பாபா மறைமுகமாகக் கூறினார்.

கிருஷ்ணாஜி, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஸாவ்னேருக்கு வந்திருந்த வேளையில், பாபா அவரை தனது பணி நிமித்தம் வட இந்தியாவுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார். அவர் அங்கு வாழும் விதம் (உணவுக்காக யாசித்து, எவரிடமிருந்தும் பணம் எதுவும் வாங்காமல் இருப்பது போன்ற அறிவுறுத்தல்கள்) மற்றும் அவர் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான குறிப்பிட்ட வழிமுறைகளையும் பாபா அவருக்கு வழங்கினார். பாபா, கிருஷ்ணாஜியிடம், **"நீங்கள் எங்கிருந்தாலும், என் அன்பைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நெருப்பைப் போல் அதைப் பரவச் செய்யுங்கள்! தேவைப்பட்டால், உங்கள் உயிரைப் பணயம் வைத்தேனும் உங்களுக்காக வரையப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்துங்கள்!"** என்று உபதேசம் வழங்கினார்.

மெஹர் பாபாவை, தனிப்பட்ட முறையில் சந்திக்கும் இயலாமை குறித்து பாவ் தொடர்ந்து வருந்தினார், அந்த இரவு ஆழ்ந்த கவலையுடன் காணப்பட்டார். ஜனவரி 2ஆம் நாள் மீண்டும் ஸர்க்யூட் ஹவுஸ் சென்ற வேளையில், பாபா நாக்பூர் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. காலை 7:30 மணியளவில் பாபா வெளியே வந்து, காரில் அமர்ந்து, புறப்பட்டுச் சென்றபோது, பாவ் அவரைப் பின் தொடர்ந்தார். சிவில் லைன் குறுக்கு சாலை சந்திப்பில் கார் நின்றது, பாபா காரிலிருந்து இறங்கி வந்து அமர்ந்தார். போஃபாலி, அப்துல் மஜித் கான் மற்றும் பலர் அவருக்காகக் காத்திருந்தனர். பாவும் அங்கு சென்றார். எரச், ஹனுமானின் கதையைச் சொல்லத் தொடங்கினார். அவர் அதை முடித்ததும், உரத்த ஆரவாரத்திற்கு மத்தியில், பாபா காரில் மீண்டும் நுழைந்து, ஸாவ்னேருக்கு அருகிலமைந்த **அங்கேவாடா** மையத்திற்கு விஜயம் செய்து, அங்கு தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும் நாக்பூர் புறப்பட்டுச் சென்றார். பாவ், ரமா, குழந்தை ஷீலாவுடன் நாக்பூரை நோக்கி விரைந்தார், ஆனால் பாபா தங்கியிருக்கும் இடம், தரிசனம் வழங்கும் விபரம் எதுவும் அவருக்குத் தெரியாது.

நாக்பூரில் மெஹர் பாபா, மேற்கு உயர்நீதிமன்ற சாலையில் அமைந்த **கோகுல்பேட்** பகுதியில் பாரிஸ்டர் ஒய்.பி.வர்மாவின் பங்களாவிலும், மண்டலி, **தரம்பேட்**டில் நானா கேரின் குடும்ப இல்லத்திலும் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நானாவின் பெற்றோரும் பாபாவிடம் பக்தி மிக்கவர்களாக இருந்தனர்.

டாக்டர் தேஷ்முக்கும் நாக்பூருக்கு வந்தார், அங்கு அவரது புதிய வீட்டின் கட்டிடப் பணி நடந்துகொண்டிருந்தது.

டாக்டர் தேஷ்முக் ஸாவ்னேர் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார். பங்க்ராஜ், அவரது மனைவி தாராபாய், பி.பி. காப்சே மற்றும் குடும்பத்தினர், ராம்தாஸ் சௌராசியா, அவரது மகன்கள் ஷங்கர்லால், கணேஷ்லால் ஆகியோர் பாபாவை வரவேற்க காத்திருந்தனர்.

1953, ஜனவரி 2 காலை 9:30 மணிக்கு நாக்பூரை வந்தடைந்ததும், வழக்கம் போல பாபாவின் நிகழ்ச்சி நிரலின் முதல் அம்சமாக ஏழைகளின் நிகழ்ச்சி நடைபெற்றது. புதிதாக கட்டப்பட்ட கீதா கோவிலின் பெரிய மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அதற்குப் பிறகு, பாபா தனது நெருங்கிய நாக்பூர் அன்பர்களை சந்தித்தார்.

அன்று மாலை ஐந்து மணியளவில், பாபா பார்சி தகன மயானத்திற்குச் சென்று, ஜால் கேரவலாவின் கல்லறையில் ரோஜா மலர் மாலையை வைத்தார். மண்டலியும் ரோஜா மலரை வைத்து தங்கள் மரியாதையை செலுத்தினர். பாபா, **"ஜால் எனக்காகவே வாழ்ந்து என்னில் மறைந்தார்"** என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து பாபா, தாஜுதீன் பாபாவின் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார். அவர், தாஜுதீன் பாபா, தனது இறுதி மூச்சை விட்ட இந்து மன்னர் ராஜா ரகுஜி ராவ் போஸ்லேயின் அரண்மனைக்கும் சென்றார். ராஜா போஸ்லே பாபாவை சம்பிரதாய முறையில் வரவேற்று, கலை நிகழ்ச்சிகளை நடத்தினார். பாபா அவரிடம், **"நான் இங்கு வருகை தந்தது நீங்கள் ஒரு ராஜாவாக இருப்பதால் அல்ல. தாஜுதீனுக்கு நீண்ட காலம் உண்மையாக சேவை செய்தீர்கள், உங்கள் சேவையின் பலனாக இப்போது என்னை இங்கு காண்கிறீர்கள். தாஜுதீன் மிகவும் சிறந்தவர், அவருடைய ஒரே உதையால் தூசிக்கு கூட இறையுணர்வை வழங்கக் கூடியவர்."**

தாஜுதீன் பாபாவின் பௌதீக உடல், சில மைல்கள் தொலைவில் அமைந்த **தாஜ் பாக்** எனும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது; ஆனால் அரண்மனை அவரது நிலையான இருப்பிடமாக இருந்ததால், ராஜா போஸ்லே அதை மாபெரும் சத்குருவின் நினைவகமாக பாதுகாத்து வந்தார். அரண்மனையை விட்டு வெளியே வந்த பாபா, தாஜுதீன் ஓய்வெடுத்த கல்லின் மீது அமர்ந்தார். பாபா அனைத்து மண்டலியையும் தாஜுதீன் சமாதியில் மரியாதை செலுத்துமாறு அறிவுறுத்தியதும், அதை அவர்கள் செய்தனர்.

இதற்கிடையில், ஐரீன் கோனிபியர், ஹமிர்பூரில் நடந்த தரிசன நிகழ்ச்சியில் ஒரு நாள் மட்டும் கலந்து கொண்ட பின்னர், உடல்நலக்குறைவு காரணமாக மெஹர்ஜியுடன் பூனாவுக்குச் சென்றார். அவருக்கு உடல்நிலை இன்னமும் சரியாகாதபோதும், தரிசன நிகழ்ச்சியில் பங்கேற்க நாக்பூருக்கு அவர் அழைக்கப்பட்டார். அலெக்சாண்டர் மார்கி ஸாவ்னேரில் பாபாவின் தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும் புறப்பட்டுச் சென்றார். அவர் ஒரு மறக்க முடியாத அனுபவத்தைப் பெற முடிந்தது; தெய்வீகச் சுடர் அருகே எண்ணற்ற பட்டாம்பூச்சிகள் நடனமாடுவதைக் கண்டு வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

1953, ஜனவரி 3 சனிக்கிழமையன்று, **கீதா** கோவிலில் குழந்தைகளுக்கான நிகழ்ச்சி நடைபெற்றது. ஷெர்லேக்கர் ஏற்பாடு செய்திருந்த அந்த நிகழ்ச்சியில், பன்னிரண்டு வயதுக்குட்பட்ட கிட்டத்தட்ட 1500 பள்ளி மாணவர்கள் பாபாவின் தரிசனத்தைப் பெற்றனர். தலை வணங்குவது பற்றிய பாபாவின் செய்தியை வழங்கி, அவர் அனைவரையும் வணங்க, குழந்தைகளுக்கான செய்தி வாசிக்கப்பட்டது. ஒரு குழந்தையைப் போலவே, பாபா ஒவ்வொரு குழுவிலும் இருந்த சிறிய குழந்தைகளுடன் சுதந்திரமாகக் கலந்தார்.

அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்; அவர் சிலரை வருடினார், சிலரை முத்தமிட்டார், சில குழந்தைகளைத் தழுவினார். பாபாவை மகிழ்விக்க குழந்தைகள் ஜிம்னாஸ்டிக் பயிற்சிகளை செய்தனர், மேலும் ஒரு குழு, பழங்கால துறவி நாரத் முனியைப் பற்றி ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. பாபா, அதில் நடித்த குழந்தைகளுக்கு முன்னால் தரையில் அமர்ந்து, நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த அனைவரையும் உற்சாகப்படுத்தினார்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் நீடித்த நாடகத்தைத் தொடர்ந்து, பாபா பிரசாதம் விநியோகிக்கத் தொடங்கினார். சின்னஞ்சிறு மழலை நடிகர்கள் தங்கள் அலங்கார உடையில், தத்தமது பங்கிற்காக பாபாவை அணுகினர், நாரதரின் முக்கிய பாத்திரத்தில் நடித்த சிறுவன் (முழுமையான போலி மீசையுடன்) பாபாவிடம் வந்து, அவரின் காதில் ஏதோ கிசுகிசுக்க விரும்புவதாகக் கூறினான். பாபா தலையைக் குனிந்து செவிசாய்ததும், "பாபா, இந்த பெரிய மீசைக்காரன் (தன்னையே குறிப்பிட்டு) உங்கள் சீடனாக விரும்புகிறான்!" பாபா அவனை அன்புடன் அணைத்துக் கொண்டார், சிறுவன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, சிறுவன் தனது போலி மீசையை முறுக்கி, பாபா தன்னை உண்மையாகவே தனது சீடனாக ஏற்றுக்கொண்டார் என்ற உறுதியுடன் வெளியேறினான்.

மதியம் கீதா கோவிலில் பெண்களுக்கான பிரத்யேக தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. இந்துமதி தேஷ்முக், அவரது மகள் சஞ்சீவனி, திருமதி ஷெர்லேக்கர் ஆகியோர் பாபாவின் செய்தியை வாசித்து, தரிசனத்தில்

கலந்துகொண்ட பல பெண்களுக்கு அவரது சைகைகளை விளக்கினர். இப்படி, பல்வேறு சந்தர்ப்பங்களில், பாபா குழந்தைகளில் குழந்தையாகவும், பெண்களில் பெண்ணாகவும், ஆண்களில் ஆணாகவும் இருந்தார்!

மாலையில் அதே கோவிலில் மாபெரும் பொது தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. இது இரவு வெகுநேரம் வரை நீடித்தது. பாபா, மிகுந்த சிரமத்துடன் கூட்டத்தினூடாக அழைத்துச் செல்லப்பட்டு, தனது இருப்பிடத்திற்குச் சென்றார். இந்த நிகழ்ச்சிக்கு எந்த முன்னறிவிப்பும் வழங்கப்படவில்லை, பத்திரிகைகளில் விளம்பரம் அறிவிப்புகளும் தரப்படவில்லை, கிட்டத்தட்ட 10,000 பேர் தரிசனத்திற்கு வந்திருந்தனர். ஷெர்லேக்கர் ஒரு சிலருக்கு மட்டுமே தகவல் தெரிவித்திருந்தார், ஆனால் அன்று காலை நடந்த குழந்தைகளுக்கான நிகழ்ச்சியை முன்னிட்டு, அக்கம் பக்கத்தினர் இரவில் கீதா கோவிலுக்கு தரிசனத்திற்காக குவிந்தனர். செய்தித்தாள்களில் முன்னறிவிப்பு வழங்கியிருந்தால், இன்னும் ஆயிரக்கணக்கானோர் வந்திருக்கக் கூடும்.

இதற்கிடையில், ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாவ் அவரது குடும்பத்தினருடன், நாக்பூருக்கு, பாபாவைப் பின்தொடர்ந்தார், ஆனால் பாபாவின் இருப்பிடம் அல்லது நிகழ்ச்சி பற்றிய விபரங்கள் எதுவும் அவருக்குத் தெரியாது. வெறிபிடித்தவர் போல் அவர் நகரத்தை சுற்றித் திரிந்து, தகவல்களைப் பெற முயன்றும் எதுவும் கிடைக்கவில்லை. ஜனவரி 4, ஞாயிற்றுக்கிழமை, கீதா கோவிலில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து 'நாக்பூர் டைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியைப் படிக்க முடிந்ததே தவிர, அன்றைய தினம் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அதிர்ஷ்டவசமாக, அன்று காலை பாபா மீண்டும் கோவிலில் தரிசனம் வழங்க இருந்தார். பாபா வந்து, கூட்டத்தினரை வணங்கிய பின்னர், ஒரு முக்கியமான உள்ளூர் சமூக சேவகர் **காமத்** என்பவர் பாபாவின் செய்தியைப் வாசித்தார். ராமகிருஷ்ண ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்வாமி பங்கரேஷ்வரரும், 'குட்டவாலா' என்ற மஸ்துடன் வந்து, பாபாவுக்கு எதிராக அமர்ந்தார். தரிசன நிகழ்ச்சி தொடங்கிய வேளையில், பாவ் வரிசையில் நின்றாலும், முன்பு போலவே, பாபாவுடன் உரையாட வாய்ப்பில்லாமல் போயிற்று, எனவே நேர்காணலுக்கான சாத்தியக்கூறுகள் பற்றி தொடர்ந்து விசாரித்தார்.

கடைசியாக, பாபாவின் செய்தியை இந்தியா முழுவதும் பரப்பிய ஆரம்பகால சீடரான விபூதியை சந்திக்க நேர்ந்தது. விபூதி, பாவின் உண்மையான விருப்பத்தைக் குறித்து பாபாவிடம் தெரிவித்த போது, பாபா அவரை அன்று மதியம் வர்மாவின் பங்களாவில் சந்திக்குமாறு கூறி அனுப்பினார். அப்போதுதான் பாபா தங்கியிருந்த இடத்தை பாவ் கண்டுபிடித்தார். இறுதியாக அவர் தனது இதயத்தின் ஒரே அன்பிற்குரியவரை நேருக்கு நேர் சந்திக்கவிருந்தார்.

அன்று மதியம் பாபாவின் இருப்பிடத்திற்கு பாவ் சென்றபோது, கவாலி இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. பாபா அவரிடம், **"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"** என வினவினார்.

"எனது முதுகலை பட்டத்திற்கான இறுதி தேர்வில் நான் தோன்ற உள்ளேன்" என்று பாவ் பதிலளித்தார்.

**"உங்களுக்கு என்ன வேண்டும்?"**

"உங்களுடன் வாழவேண்டும்."

**"நீங்கள் திருமணமானவரா அல்லது தனியாக இருக்கிறீர்களா?"**

"திருமணமானவர்."

**"உங்கள் மனைவி பெயர் என்ன?"**

"ரமா."

**"உங்களுக்கு குழந்தைகள் உள்ளனவா?"**

"ஷீலா என்ற பெண் குழந்தை."

**"என் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிவீர்களா?"**

"நான் அந்த ஆயத்தத்துடன் வந்திருக்கிறேன்."

பங்க்ராஜ் உடனிருந்து குறுக்கிட்டு, "பாபா, உங்களுக்குக் கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும்..."

**"உங்களை விட அவருக்கு நன்றாகத் தெரியும்!"** பாபா கடுமையாக பதிலளித்தார். **"அவர் எம். எஸ்சி**. (அறிவியலில் முதுகலை பட்டம் பெற்றவர்)."

பாபா தொடர்ந்தார், **"நான் உங்களிடம் நிர்வாணமாகச் சென்று உணவுக்காக யாசிக்கச் சொன்னால், நீங்கள் அதைச் செய்வீர்களா?"**

"ஆம்" என்றார் பாவ்.

**"எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நீங்கள் என்னுடன் இருக்க முடியுமா?"**

"அதுதான் எனது ஆசை."

**"உங்கள் தேர்வு எப்போது?"**

"மார்ச் மாதம்."

**"தேர்வு நிறைவடைந்ததும் நான் எங்கிருந்தாலும் என்னிடம் வாருங்கள்."**

அன்றே பாபாவுடன் சேர விரும்பினார் பாவ். ஆனால் அவர் பாபாவின் விருப்பத்தை ஏற்று, "நான் ஆந்திர தரிசனத்தில் கலந்து கொள்ளலாமா?" என்று கேட்டார்.

**"அது உங்கள் தேர்வுக்குத் தடையாக இல்லையென்றால், நீங்கள் வரலாம்"** என்று பாபா பதிலளித்தார்.

பாபாவின் கட்டளையைப் பெற்றுக்கொண்ட பாவ், தேர்வுக்குப் பின்னர் அவருடன் நிரந்தரமாக வந்திணையத் தீர்மானித்தார். அவரது மனைவி ரமா, 20,

ஸாவ்னேரில் இரண்டு முறை பாபாவின் தரிசனத்தைப் பெற்று, இப்போது, தனது கைக்குழந்தை ஷீலாவுடன் நாக்பூருக்கும் வந்திருந்தார். அவரது உறுதியான நம்பிக்கையின் காரணமாக, பாவின் தீர்மானத்தில் அவர் தலையிடவில்லை.

நாக்பூரில் தங்கியிருந்த வேளையில், பாபா மற்றும் மண்டலியின் உணவு நானா கேரின் இல்லத்திலிருந்து, பாபா தங்கியிருந்த இடத்திற்கு தினமும் கொண்டுவரப்பட்டது.

பாபா, யாருடைய வீட்டிலும் உண்ணவில்லை, ஆனால் அவர் ஒருமுறை கேர் குடும்பத்தை அவர்களது இல்லத்தில் பார்க்கச் சென்ற போது, மதிய உணவிற்காக பல உணவுகள் தயார் செய்யப்பட்டிருந்தன; பாபா, நானாவின் தாயார் கோதுபாயைப் பாராட்டினார், **"அவற்றைப் பார்த்தாலே என் வயிறு நிறைந்து விடுகிறது!"**

பின்னர், ஒவ்வொரு வகை உணவையும் நுணுக்கமாக ஆய்வு செய்து, **"ஏன் ஆஷா** (நானாவின் அண்ணி) **சட்னி தயார் செய்யவில்லை? அவர் எங்கே?"** என்று விசாரித்தார்.

கோதுபாய் விளக்கினார், "இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே அவர் அம்ராவதியிலிருந்து வந்தார், ஆனால் மாதவிடாய் காரணமாக, அவர் அழுதுகொண்டிருக்கிறார்." (இந்தியாவில், மாதவிடாய் காலத்தில் ஒரு பெண் தனிமையில் ஒதுங்கி வாழ்வதும், எவரையும் தொடாமல் இருப்பதும் பழங்கால பழக்கம்.)

பாபா, ஆஷாவை அழைத்து, **"என்னை என்னவாக எடுத்துக்கொள்கிறீர்கள்?"** என்று கேட்டார்.

“பரமாத்மா” என்றார் ஆஷா.

**"ஆம், நான் பரமாத்மா; நான், நல்லது, தீயது இரண்டையும் தன்னகப் படுத்திக்கொண்ட மாபெருங்கடல். அசுத்தம் வீசப்பட்டாலும் கடல் மாசுபடாது, சந்தனம் கலந்தாலும் நறுமணம் வீசாது. கடல் எல்லையற்றது. அது எப்பொழுதும் இருந்தது போலவே இருக்கும்.**

**"உங்களுடைய நல்லது தீயது இரண்டையும் எனக்குள்ளேயே அடக்கி, உங்களை சுத்தமாக வைத்திருக்கிறேன். நான் எல்லையில்லா பரிசுத்தமானவன், என் எல்லையற்ற பெருங்கடலில் உள்ள ஒவ்வோர் அழுக்குகளையும் சுத்திகரிக்கிறேன். ஆதலால், நல்லது தீயது இரண்டையும் எனக்கு அர்ப்பணித்து, ஒவ்வொருவரும் தூய்மையாக வேண்டும்.**

**"என்னைப் பொறுத்தவரை, நீங்கள் ஒருபோதும் அசுத்தமாக இல்லை. உள்ளே சென்று எனது சட்னியைத் தயார் செய்து எடுத்து வாருங்கள். நான் அதற்காகக் காத்திருக்கிறேன்."**

ஆஷாவிற்கு இது ஓர் அதிசயமான விஷயம், ஏனெனில் அவர் மரபுவழி, பாரம்பரிய முறையில் வளர்க்கப்பட்டார். பாபாவின் அன்பு அவர் இதயத்தில்

உறுதியாக வேரூன்றியது, மிகுந்த அன்புடன் சட்னியைத் தயார் செய்தார் - பாபா அதை ஆர்வத்துடன் உண்டு, அவரை எல்லா நேரத்திலும் புகழ்ந்தார்.

காக்கா ஷெர்லேக்கரும் பாபாவை உணவுக்காக அழைத்த போது, ஒரு நாள் பாபா அவரது வீட்டிற்கும் சென்றார். நாக்பூரில் வாழ்ந்த பாட்டியா, காப்ஸே, சௌராசியா, பங்க்ராஜ், ஸோலாவா, டாக்டர் தேஷ்முக் ஆகியோரின் இல்லங்களுக்கும் பாபா விஜயம் செய்தார். மதராஸில் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு முறை காப்ஸேயிடம் பாபா அவரது இல்லத்திற்கு விஜயம் செய்வதாக உறுதியளித்திருந்தார், அவருடைய வாக்குறுதி இறுதியாக நிறைவேறியது. தேஷ்முக் ஒரு பாதாள வழிபாட்டுத் தலத்தை அவர் இல்லத்தில் அமைத்து, அங்கு பாபாவின் ஆரத்தி அவரது முன்னிலையில் நிகழ்த்தப்பட்டது. நானா கேரின் இல்லத்தில் அமைந்துள்ள சிறிய அளவிலான அவதார் மெஹர் பாபா நாக்பூர் மையத்தையும் பாபா பார்வையிட்டார்.

வாஸ் தேவ் கெய்னின் மனைவி பிரபா, டெல்லியிலிருந்து நாக்பூருக்கு வந்திருந்த வேளையில், உடல்நலம் குன்றியதால் பாபா அவரை நானா கேரின் இல்லத்தில் தங்க வைத்தார், அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர், பாபாவின் குழுவுடன் செல்ல விரும்பினாலும், பயணத்தின் போது பாபாவின் அனுமதியின்றி எவரும் குழுவுடன் இணைய முடியாது, மேலும் பெண்கள் அனுமதிக்கப்படாததால், பிரபா 4ஆம் தேதி டெல்லிக்குத் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.

# இரகசிய பயணம் - அலஹாபாத் & மதராஸ்

**(Allahabad & Madras – Secret Travel)**

நாக்பூர் நகரிலிருந்து புறப்பட்ட பாபா, மாலை சுமார் 5:00 மணியளவில் **அலஹாபாத்**திற்குச் செல்லும் ரயிலில் ஏறினார். டிசம்பர் 4ஆம் தேதி, ரயில் நிலையத்தில் அவரைப் பார்க்க ஏராளமானோர் குவிந்தனர். அதே ரயிலில் பயணித்த இதர பயணிகளும் பாபாவின் தரிசனத்திற்காக ஓடோடி வந்தனர். உடனிருந்த பாவ் கல்சூரியிடம் பாபா, "**இன்று நடந்ததை** (அர்த்தம், அவருக்கு வழங்கப்பட்ட கட்டளைகளை) **நினைவில் கொள்ளுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். பாவின் மனைவி ரமா, குழந்தை ஷீலாவும் அவருடன் வந்திருந்தனர். பாபா குழந்தையைக் கிச்சுகிச்சு மூட்டி முத்தமிட்டார். பாபாவுக்கு எல்லாம் தெரியும், ஆரம்பம் முதல் இறுதி வரை பாவ், குடும்பத்தோடு தன்னுடன் இருக்கும் வழியை அமைத்துத் தந்தார்.

ரயில் நகரத் தொடங்கியது, இடி போன்ற முழக்கத்துடன் கூடிய ஆரவாரம் எழுந்தது. பலரின் கண்களில் கண்ணீர் ததும்பியது, சிலர் மயக்க உணர்வில் நின்றனர். பாபா தனது ரயில் பெட்டியின் நுழைவாயிலில் நின்று கொண்டு, மேடையில் இருந்த தனது அன்பர்களை நோக்கி கையசைத்தார். வெகுநேரம் ரயிலின் பின்னேயே பார்த்துக் கொண்டு நின்றவர்கள், வேறு எங்கும் திரும்பிப் பார்க்க முடியாத நிலையில், அவர்களின் இதயங்களும் அதனோடு விலகிப் போனது போலத் தோன்றியது.

பாபாவின் அலஹாபாத் பயணம் ரகசியமாக வைக்கப்பட்டது; அவர் எங்குச் செல்கிறார் என்பது எவருக்கும் தெரியாது. தங்குவதற்கு வசதியான வீடு மற்றும் மஸ்துகளைத் தேடுவதற்காக, பாபா, முன்கூட்டியே பைதூலை அனுப்பியிருந்தார். ஏறக்குறைய 36 மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, பாபாவும் குழுவினரும் 1953, ஜனவரி 6 செவ்வாய்க் கிழமை, அதிகாலை 1:00 மணிக்கு அலஹாபாத்தை வந்தடைந்தனர். பாபா தான் உட்பட ஒருவரையும் ரயிலில் தூங்க அனுமதிக்கவில்லை.

பைதூல் ஓர் அமைதியான இடத்தில் புதிதாக கட்டப்பட்ட வீட்டைக் கண்டுபிடித்து, அனைவரும் அங்குத் தங்கினர். அவர்களுக்கு ஹரிஷ்சந்தர் வர்மா என்ற அண்டை வீட்டுக்காரரின் கவனிப்பில் அனைத்து கடிதங்களும், தொலைத்தந்திகளும் அனுப்பப்பட்டன. அலஹாபாத்தில், பாபா, அங்கு இருப்பதை அறிந்த அவர் ஒருவர் மட்டுமே, பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். அலஹாபாத் நகரைச் சென்றடைந்ததும், பாபா நகரத்திலும், சுற்றுப்புற இடங்களிலும் வாழ்ந்த மஸ்துகளைத் தொடர்பு கொள்ளப் புறப்பட்டார். அவர் நகர்

மற்றும் அதைச் சூழ்ந்துள்ள பல்வேறு கோவில்கள், தர்காக்கள், கல்லறைகள் மற்றும் சமாதிகளுக்கு விஜயம் செய்தார்.

எரச், பெண்டு, பைதூல் மூவரும், முழு வீச்சில் நடந்துகொண்டிருந்த கும்பமேளாவிற்காக, சாதுக்கள் கூடும் வெவ்வேறு இடங்களிலிருந்து 100 சாதுக்களை ஒன்று சேர்த்தனர். ஜனவரி 9ஆம் நாள், பாபா ஒவ்வொரு சாதுவின் காலிலும் 50 முறை தலைவணங்கி ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் பிரசாதமாக வழங்கினார். பின்னர் அவர் இதர சாதுக்கள் அல்லது மகாத்மாக்களை தொடர்பு கொள்ள மண்டலியில் பத்து பேரை பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பினார். அவர்கள் புறப்படுவதற்கு முன்பு, பாபா, மண்டலி கால்களில் 50 முறை தலைவணங்கியதைத் தொடர்ந்து, மண்டலியில் ஒவ்வொரு உறுப்பினரும் 50 சாதுக்களைத் தலைவணங்க வேண்டும், இதனால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சாதுக்களைத் தொடர்பு கொள்ளும் பணி அவர்கள் மூலம் விரைவில் முடிவடையும்.

அதற்கிணங்க, பத்து ஆண் மண்டலி ஒவ்வொருவரும் 50 சாதுக்களைத் தொடர்பு கொண்டு அவர்களின் கால்களில் தலைவணங்கினர். பின்னர் அவர்கள் அனைவரும் பாபாவுடன் வீட்டிற்குத் திரும்பினர்.

பாபாதாஸ் தாடி வளர்த்து, வெள்ளை நிற மேலங்கி அணிந்து, ஒரு துறவியின் தோற்றத்தில், கள்ளம் கபடமற்ற மக்களை தவறான பாதையில் வழிநடத்திக் கொண்டிருந்தார். பாபா அவரை சதாஷிவ் பாட்டீலுடன் அருகிலிருந்த திரிவேணி சங்கமத்திற்கு அனுப்பி, தலை, தாடி மற்றும் உடலில் உள்ள அனைத்து முடியையும் மொட்டையடித்தார். அவருக்காக ஒரு மேல் மற்றும் கால்சட்டையை பாபா தயாராக வைத்திருந்தார்; அவற்றை அவரிடம் கொடுத்து, "**நான் உங்களுக்கு பாபா-தாஸ்** (பாபாவின் சேவகன்) **என்று பெயரிட்டுள்ளேன், எனவே என்னுடைய உண்மையான சேவகராக, பெயருக்குத் தகுதியுடையவராக இருக்க வேண்டும்!**" என்று அறிவுறுத்தினார்.

பாபா தனது திட்டங்களை மாற்றியமைத்தார். அவர் அலஹாபாத்தில் பத்து நாட்கள் தங்குவதற்குத் திட்டமிட்டிருந்தாலும், ஜனவரி 10 அன்று அவர் தனது பணியை முடித்ததால், வெகுஜன தரிசனம் வழங்குவதற்கு முன்னர் இதர இடங்களுக்குச் சென்று மஸ்துகளைத் தொடர்பு கொள்ள நினைத்தார். கல்கத்தா, ஹைதராபாத் போன்ற இடங்கள் பற்றி விவாதிக்கப்பட்டாலும், இறுதியில், மதராஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது. மண்டலி புறப்படுவதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தனர்.

அன்று மாலை, பாபா மண்டலியிடம், "**அலஹாபாத் இவ்வளவு பெரிய புனித ஸ்தலம், லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் இங்கு வருகின்றனர்; ஆனால் இங்கு வாழும் லட்சக்கணக்கானவர்களில், நான்கு உண்மையான மேம்பட்ட**

**ஆத்மாக்கள் மட்டுமே ஆன்மீக பாதையில் பயணிக்கின்றனர்"** என்று தெரிவித்தார்.

1953, ஜனவரி 11 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4:00 மணிக்கு, பாபாவும் மண்டலியும் தங்கியிருந்த வீட்டு வாயிலின் அருகே சுமார் ஒரு டஜன் டோங்காக்கள் வந்தன. சாமான்களை டோங்காக்களில் ஏற்றிய பின்னர், அனைவரும் ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டனர். மண்டலி வேகமாகத் தேடி, காலியான பெட்டியைக் கண்டுபிடித்து, அனைவரும் உள்ளே நுழைந்தனர். இதர பயணிகளும் அவரவர் சாமான்களுடன் விரைவில் பின்தொடர்ந்தனர்.

ரயில் புறப்படுவதற்கு முன்னர், ஒரு விற்பனையாளர், அவர்களின் பெட்டிக்குள் வந்த வேளையில், பாபா அவருடன் பேரம் பேசி, இறுதியில் சில பொருட்களை வாங்கியதைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருந்தது. இருவரும் ஒரு அணா (சுமார் ஐந்து பைசா) முன்னும் பின்னுமாக பேரம் பேசினர், இறுதியில் பாபா அந்த நபருக்கு அவர் விரும்பியதைக் கொடுக்கவில்லை. மௌனமாக இருந்த போதிலும், பாபா தனது வெளிப்பாடுகளில் மிகவும் இயல்பாக இருந்தார், அவர் மௌனம் கடைப்பிடிப்பதை ஒருவரும் கவனிக்கவில்லை. நிச்சயமாக, எரச்சும் இதர மண்டலியும் பாபாவின் எழுத்துப்பலகை மற்றும் சைகைகளை வாசிப்பதைப் பழக்கமாகக் கொண்டாலும், இருவரிடையே நடந்த ‘உரையாடல்’ முற்றிலும் இயற்கையாக இருந்தது.

எப்போதாவது, பாபா ரிக்ஷா அல்லது டோங்கா ஓட்டுனர்களுடன் ஒரு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட கட்டண வித்தியாசத்தில் பேரம் பேசுவது வழக்கம். அவர் எப்போதும் கட்டணத்தைக் குறைத்து பேரம் பேசத் தவறியதில்லை. இதற்கு நேர்மாறாக, பாத யாத்திரையின் போது, வழியில் சந்திக்கும் ஏழை எளியவர்களுக்கு, இரு கைகளாலும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாபா, அள்ளி வழங்குவதுண்டு. அவதார புருஷரின் முரண்பாடான தன்மை அப்படித்தான் இருந்தது.

பாபா மீண்டும் ரயிலில் மண்டலியில் எவரும் தூங்குவதைத் தடைசெய்து, அதற்கு பதிலாக, ஒரு நாடகத்தை நடத்துமாறு அவர்களிடம் கேட்டுக் கொண்டார். கடந்த ஐந்து நாட்களாக அவர்கள் சரியான உணவும், ஓய்வும் இல்லாமல் பரிதவித்துப் போயினர், மேலும் மண்டலி பாபாவின் கோரிக்கையைக் கேட்டதும், காதுகளை நம்பமுடியாமல் அவரை உற்றுப் பார்த்தபோது, பாபா, அவர்களைக் கடிந்துகொண்டார், **"நீங்கள் எனக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்டீர்கள். உங்களில் ஒருவர் கூட என் கட்டளையை நிறைவேற்றும் நினைப்பில் இல்லை."**

"அப்படி இல்லை பாபா!" அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். "இந்த நெரிசலான பெட்டியில் என்ன வகையான நாடகத்தை நடத்துவது என்று நாங்கள் யோசித்துக்கொண்டிருந்தோம்."

"சரி, சரி" என்று பாபா கூறினார். "**சிந்தித்து, உங்களிடையே விவாதித்து நாளை நிகழ்ச்சியை நடத்துங்கள்.**"

அவர்கள் இட்டார்சி ரயில் நிலையத்தை நள்ளிரவில் வந்தடைந்து, அங்கே ரயிலை மாற்ற வேண்டியிருந்தது. காத்திருப்பு அறைகள் நிரம்பியிருந்ததால், பாபாவும் மண்டலியும் ரயில் நடை மேடையில் ஒரு மூலையில் அமர்ந்திருந்தனர்.

அதிகாலை 4:00 மணிக்கு, பாபா, டாக்டர் கனியை நினைவு கூர்ந்தார்: "**ஒரு கஸலை இயற்றுவதற்கு, நான் அவருக்கு, சில குறிப்புகளைக் கொடுத்திருந்தேன், ஆனால் அவர் போய்விட்டார். கஸல் இப்போது எழுதப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**" ராம்ஜூ அதை எழுத முயன்றார், ஆனால் இடையே அவர்களது ரயில் வரவிருந்ததால் முடியவில்லை. 'டெல்லி-மதராஸ் கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ்' ரயிலில் தங்களுக்கென ஒரு பெட்டியைப் பத்திரப்படுத்திக் கொண்டனர்.

ரயிலில் பாபா, "**இன்று நாடகமும் கஸலும் தயாராக வேண்டும்**" என்று மண்டலியிடம் தெரிவித்தார். மாலைக்குள், ராம்ஜூ கஸலை எழுதி முடித்தார்; டாக்கே, பெண்டு மற்றும் பலர் நாடகத்தை நிகழ்த்தினர். இது ஒரு போலி கொலை வழக்கு, அதில் டாக்கே ஒரு வழக்கறிஞராக (அந்தப் பங்கை வகித்தாலும் அவர் உண்மையில் ஒரு வழக்கறிஞர்), குற்றம் சாட்டப்பட்டவருக்காக வாதாடினார். பாபா நாடகத்தை மிகவும் ரசித்தார். இது அவர்களின் நேரத்தை ஆக்கிரமித்ததோடு, அனைவரும் கண்விழித்திருக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது.

ஏற்கனவே அறிவுறுத்தியபடி, நானா கேர் நாக்பூர் ரயில் நிலையத்தில், ஜனவரி 12ஆம் தேதி மதிய உணவுடன் பாபாவை சந்தித்தார். பாபா-தாஸை நோக்கி ஒரு விரலைக் காட்டி, பாபா, நானாவிடம், "**யார் இந்தத் தோழர்?**" என்று கேட்டபோது, சுத்தமாக மொட்டையடிக்கப்பட்ட, நன்கு உடையணிந்த பாபா-தாஸை நானாவால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை, எனவே பாபா அவரிடம் அது யார் என்று கூறினார். பாபா, நானாவிடம், "**எங்களுடன் வாருங்கள்; பயணச்சீட்டைப் பற்றி பார்த்துக்கொள்ளலாம்**" என்று கூறினார். நானா அந்த வாய்ப்பில் மகிழ்ச்சியடைந்து உடன் செல்லத் தயாராக இருந்தார்; ஆனால், ரயில், அங்கிருந்து நகரத் தொடங்கியதும், பாபா தனது மனதை மாற்றிக்கொண்டு, நானாவிடம் இறங்குமாறு அறிவுறுத்தினார்.

ஜனவரி 13ஆம் நாள் மாலை, மதராஸ் வந்து சேர்ந்த அவர்கள், வசதியான ஒரு விடுதியில் தங்கினர். அனைவரும் மிகவும் களைப்பாக இருந்ததால் இரவு உணவு உண்ணாமலே உறங்கச் சென்றனர். ரயிலில் இருந்த வேளையில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**நான் மதராஸில் சில உள் வேலையைச் செய்வது வரை, நீங்கள் உணவையோ அல்லது நல்ல**

**தூக்கத்தையோ எதிர்பார்க்க வேண்டாம். நான் எனது சிறப்பு வேலைக்காக அங்குச் செல்கிறேன், சுற்றுலாவிற்கு அல்ல!"**

பாபா ஜனவரி 14 அன்று மதராஸில் வாழும் மஸ்துகளைத் தொடர்பு கொள்ள வெளியே, நீண்ட தூரம் நடந்து சென்றார். ஒரு சிறப்பான மேல்நிலை மஸ்த், இந்து ஒருவரின் இல்லத்திலும், மற்றுமொருவர் மசூதியிலும் வாழ்ந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மூன்றாவதாகத் தொடர்பு கொண்ட மஸ்த் 'மோத்தி பாபா', முந்தைய வருகையின் போது, மெஹர் பாபா அவருடன் பணிபுரிந்தார். பாபா இந்த மஸ்தைத் தொடர்பு கொள்ளச் சென்றபோது, ஆரம்பத்தில் அவரை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. மோத்தி பாபா கடற்கரை பகுதியில் ஒரு செல்வந்தர் முஸ்லீம் வீட்டில் வசித்து வந்தார்; மிகுந்த சிரமத்துடன் இறுதியாக, பாபா அவரை அணுக முடிந்தது. அவருடைய தொடர்பில் பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்து, வெளியே வந்து, **"உடனடியாக உள்ளே சென்று மோத்தி பாபாவைப் பாருங்கள். விரைந்து செல்லுங்கள். உங்களுக்கு இப்போது விருந்து காத்திருக்கிறது!"** என்று மண்டலியிடம் வலியுறுத்தி கூறினார்.

மெஹர் பாபா அந்த மஸ்தைத் தொடர்பு கொண்டபோது, "இப்போது, அவர்கள் (மண்டலி) சாப்பிடட்டும்; அவர்களுக்கு உணவு வழங்குங்கள்" என்று மோத்தி பாபா கூறியதாக பின்னர் அவர்கள் கண்டுபிடித்தனர். பாபா தனது பணி முடியும் வரை மண்டலி உண்ணவோ அருந்தவோ கூடாது என்று தடை விதித்திருந்தார்.

அன்றிரவு, பாபா, மீண்டும் தூங்குவதற்குத் தடை விதித்தார். அடுத்த 36 மணி நேரத்திற்கு, பத்து ஆண் மண்டலியும் தூங்க தடை விதிக்கப்பட்டது. அவர்கள் அடுத்த நாள் பாபாவுடன் மஸ்துகளைத் தேடி, பேருந்துகள் மற்றும் டிராம் கார்களில் பயணம் செய்தனர். மோத்தி பாபாவுடன் பணிபுரிந்த பிறகு, பாபா தனது வேகத்தை குறைத்துக்கொண்டார், மேலும் குறிப்பிடத்தக்க வகையில், அரப் ஷா என்று அழைக்கப்பட்ட மஸ்த் ஒருவரை மட்டுமே தொடர்பு கொண்டார். இதனால், மதராஸ் மஸ்த் பணி திடீரென முடிவுக்கு வந்தது. பாபா மதராஸில் இருப்பது ரகசியமாக வைக்கப்பட்டதால் உள்ளூர் பக்தர்களின் தொந்தரவு இல்லாமல் இருந்தது.

"அவதார் மெஹர் பாபா கி ஜெய்!" என்ற கோஷம், பாபா வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே, ஆந்திரா முழுவதும் எதிரொலித்தது, மேலும் மெஹர் பாபா, அவரை, அவதார புருஷர் என வெளிப்படையாக அறிவித்த முதல் இடமும் ஆந்திரா என்பதைப் பெருமையுடன் கூறலாம். இதுவரை, "சத்குரு மெஹர் பாபா கி ஜெய்," அல்லது "ஸ்ரீ மெஹர் பாபா கி ஜெய்" என்ற சொற்றொடர் ரயில் நிறுத்தப்படும் ஒவ்வொரு இடத்திலும் கூட்டத்தால் கோஷமிடப்படும் பொதுவான குரலாக இருந்தது. ஆந்திராவில் பலர் மெஹர்

பாபாவை அவதார புருஷராக ஏற்றுக்கொண்டதால், அவரை வெளிப்படையாகப் பாராட்டிய முதல் இடமும் இதுதான்.

ஆந்திராவில் அவதார புருஷரின் வரவேற்புக்கான விரிவான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த வேளையில், மதராஸில் பாபா, ஜனவரி 15 இரவு கொந்தளிப்பின் புயலை உருவாக்கினார். அன்றிரவு மண்டலி அனைவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர், ஆனால் பாபாவுக்கு ஓய்வு இல்லை. இருந்தும், அதிகாலையில் சிறிது நேரம் தூங்கியபோது, குழு அன்றைய தினம் ஆந்திராவுக்குப் பயணத்தை சீக்கிரமாகத் தொடங்க இருந்ததால், அவர்களின் ஓசையற்ற நகர்வுகள் அவரைத் தொந்தரவு செய்தன.

பாபா சீற்றமடைந்து, அனைவரையும் கண்டித்தார். **"உங்கள் செயல்பாடும், நடமாட்டமும் தேவை என்று எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் என்னைப் பற்றி சிறிதேனும் நினைவில் கொண்டிருந்தால், நீங்கள் இன்னும் எச்சரிக்கையாகவும், அதிக கவனத்துடனும், மிகவும் அமைதியாகவும், விழிப்புடனும் நகர்ந்திருப்பீர்கள்"** என்று அவர் கூறினார். பாபா அவர்களை மணிக்கணக்கில் திட்டி, மனதைக் காயப்படுத்தியதில் அவர்கள் தங்களை மறந்து போயினர். மேலும் அவர்களில் அதிகம் குரல் எழுப்ப தயங்குபவர்கள் கூட தம்மை அடக்கிக் கொள்ள முடியாமல் திண்டாடினர்.

அவருடைய சொந்த காரணங்களுக்காக, பாபா வேண்டுமென்றே விஷயங்களை கிளறி விட்டு, ஒரு காட்சியை ஏற்படுத்த விரும்பியதாகத் தோன்றியது. நாள் முழுவதும் இடைவிடாது வசை பாடிக் கொண்டே இருந்தார். ஒவ்வொருவரின் எண்ணங்களும் உணர்வுகளும் வெளிவரத் தொடங்கின; மேலும் சில மண்டலி கவலை தோய்ந்த தொனியில் குரல் கொடுக்கத் தொடங்கினர்: "உங்களுக்குக் கீழ்ப்படிவது சாத்தியமற்றது... உங்களைப் பின்பற்றுவது 'நடைமுறைக்கு ஒவ்வாத கீழ்ப்படிதல்!'... உங்களை அதிகமாக நேசிப்பதுதான் எங்களின் ஒரே தவறு!... நீங்கள் விரும்பும் அளவுக்கு நாங்கள் வளைந்து கொடுக்க இயலவில்லை... நாங்களும் மனிதர்களே! நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு சமர்ப்பணத்தின் உச்சியை எட்ட முடியாத நிலையில், நாங்கள் வெளியேறுவது நல்லது."

பாபா மணிக்கணக்கில் கோபத்தின் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருந்தாலும், சில நிமிடங்களில் அமைதியாகி கூறினார்:

**முடிவுகள் திருப்திகரமாக இருந்தாலும் சரி, மாறாக இருந்தாலும் சரி, உங்கள் முயற்சியில் நான் மிகவும் திருப்தி அடைகிறேன், ஏனென்றால், ஒவ்வொருவரும் அவரவர் திறனுக்கு ஏற்ப, அவற்றை உருவாக்குகின்றனர். நீங்கள் எனக்காக என்ன செய்கிறீர்களோ அதை, நானே என் குருநாதருக்குச் செய்திருக்க மாட்டேன். நீங்கள் விழித்திருக்கும் போதுதான் நான் தூங்க முடியும், எனவே நீங்கள் அனைவரும் விஜயவாடாவில் இரவு முழுவதும்**

**விழித்திருக்க வேண்டும், இதனால் ஆந்திராவில் செய்யவேண்டிய மாபெரும் பணிக்காக நான் ஓய்வெடுக்க முடியும்.**

தொடர்ந்து கூறினார்:

**உங்களுக்கு என்னைத் தெரியாது; நீங்கள் என்னைப் பார்த்ததில்லை. நீங்கள் பார்க்கும் இந்த உடல் நான் அல்ல. நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது எனது குரலும் அல்ல. கடவுள் என்பது பௌதீக வாழ்வும் அல்ல. கடவுள் எல்லாவற்றிலும், எல்லா இடங்களிலும் எப்பொழுதும் (என்றென்றும்) இருக்கிறார்.**

**நான் கடவுள், நீங்கள் இல்லை என்பது எப்படி சாத்தியமாகும்? எனக்குத் தெரியும் நான் கடவுள் என்று, உங்களுக்கு அது தெரியாது. நீங்கள் அனைவரும் உங்கள் உடல்கள் அல்ல. ஒரு கை அல்லது கால் துண்டிக்கப்பட்டாலும், உங்களை நீங்கள் தொடர்ந்து முழுமையாக உணர்வீர்கள். ஒரு குழந்தையிலிருந்து, நீங்கள் ஒரு சிறுவனாக வளர்ந்தீர்கள், ஒரு சிறுவனிலிருந்து ஒரு மனிதனாக மாறினீர்கள், மேலும் நீங்கள் வயதாகிக்கொண்டே இருப்பீர்கள். நீங்கள் மாறுகிறீர்கள், மாறிக்கொண்டே இருப்பீர்கள். அதே சமயம், நீங்கள் எப்போதும் ஏறக்குறைய உங்களைப் போலவே தொடர்ந்து இருப்பதையும் உணர்கிறீர்கள்.**

**உங்கள் வாழ்வும் மாறாமல், எப்போதும் ஒன்றுபோல் இருக்கும்.**

**எவ்வளவுதான் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாலும், நீங்கள் உயிரோடு இருப்பதை மீண்டும் உணரும் தருணத்தில், அதன் தொடர்ச்சியில் நீங்கள் எந்தவிதமான இடைவெளியையும் உணரவில்லை. காரணம், இறை வாழ்வு என்பது எல்லையற்றது, நித்தியமானது, மேலும் தொடர்ந்து 'ஒன்றாக' இருப்பது. அதனால்தான் நீங்கள் எப்போதும் இருந்ததைப் போலவே உணர்கிறீர்கள்.**

# ஆந்திர பிரதேஷ் தரிசனம்

**(Andrapradesh Darshan)**

**மெஹர் பாபா** 1953, **ஜனவரி** 16 வெள்ளிக்கிழமை அன்று மதராஸிலிருந்து **விஜயவாடா** நகருக்கு வந்தார். விஜயவாடா ரயில் நிலையத்தின் ஓய்வு அறையில் பாபா தங்கினார்; அங்கு பலர், ஆந்திரா பயணத்திற்காக அவருடன் வந்து இணைந்தனர். பாபா ஓய்வெடுக்கும் வேளையில் மண்டலி விழித்திருந்தனர். ஆனால் அது எந்த வகையான ஓய்வு? அவர் இரவு முழுவதும் 'விழித்திருந்தார்', அவரது உள் பணியில் மும்முரமாக இருந்தார். சில சமயங்களில், அவர் சில மண்டலியை அழைப்பதும், பிற மண்டலிக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதும் தொடர்ந்து நடந்து வந்தது. ஆனால், மண்டலி விழித்திருந்ததால், பாபா ஓய்வெடுத்ததை உணர்ந்து மிக்க மகிழ்ச்சியான, புத்துணர்ச்சியான மனநிலையில் இருந்தார்.

பாபாவுடன் இணைந்தவர்களில் மிகப்பெரிய குழு ஹமிர்பூரைச் சேர்ந்த 30 அன்பர்கள். டெல்லியிலிருந்து தர், கஞ்சூ, கிஷன் ஸிங் ஆகியோர் வந்திருந்தனர்; நாக்பூரிலிருந்து, நானா கேர், பங்க்ராஜ், பாவ் கல்சூரி, மற்றும் காப்ஸே; ஸாவ்னேரிலிருந்து, போ:ஃபலி பிளீடர்; மும்பையிலிருந்து, நரிமன் மற்றும் மெஹர்ஜி; அஹமதுநகரிலிருந்து காக்கா சின்சோர்கர், பண்டோபா; அம்ராவதியிலிருந்து, தேஷ்முக், அவரது மனைவி, மகள்; அலிகாரிலிருந்து, தோடி ஸிங் ஆகியோர்.

ஆயுர்வேத மருத்துவராக இருந்த ரத் நகரின் கௌரி ஷங்கர் வைத்யாவிடம் பாபா, **"எனது உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. எனது நாடித்துடிப்பை சற்று உணருங்கள்"** என்று கூறினார். மருத்துவர் சோதனை செய்யும் போதே, பாபா மேலும் கூறினார், **"நான் இப்போது உடல் தொற்று, காய்ச்சல், நிமோனியா, மலேரியா இவற்றால் ஒரே நேரத்தில் அவதிப்படுகிறேன். உங்களிடம் எனக்கென ஏதாவது மருந்து உள்ளதா?"**

ஸாகர் நகரைச் சேர்ந்த ராஜா பல்வந்த் ராவ் கேர் மற்றும் ஹமிர்பூரிலிருந்து சில பெண்மணிகள் பாபாவின் அனுமதியின்றி வந்திருந்தனர். பாபா, முதலில் அவர்களைக் கண்டித்து, பிறகு மன்னித்தார். ராஜா ஸாஹேப் கேர் நாக்பூரில் பாபாவை சந்தித்து, நானாவுடன் விஜயவாடா வந்திருந்தார். அவர் கம்பீரமான தோற்றத்துடன், ஒரு ராஜ குடும்பத்திலிருந்து வந்தவர் ஆகையால் பாபா அவருக்கு மஞ்சர் ஷா (ஒரு மன்னனின் பெயர்) என்ற செல்லப்பெயரைச் சூட்டினார்.

பாபா, கேசவ் நிக்கமிடம் அவரது அலுவலக வேலையைப் பற்றிக் கேட்டபோது, அவர் தனது முந்தைய வேலையைத் திரும்பப் பெறவில்லை என்று கூறியதும், ஏப்ரல் வரை வேறு வேலையைத் தேட வேண்டாம் என்று

பாபா அவருக்கு அறிவுறுத்தினார், மேலும் இந்த அறிவுறுத்தல் அவருக்கு வாழ்நாள் கட்டளையாக நிரூபிக்கப்பட்டது, ஏனெனில் அவர் அவதார புருஷரின் பணியில் முழுவதுமாக மூழ்கினார்.

பாவ் கல்சூரி, பாபாவுக்காக நாக்பூர் ஆரஞ்சு பழங்கள் நிரம்பிய கூடையைக் கொண்டு வந்திருந்தார்; அதை பாபா அங்குக் கூடியிருந்தவர்களுக்கு பந்து போல வீசினார். பாபா, ஒரு திசையில் நோக்கி, வேறொரு திசையில் பழங்களை வீசியபோது, அதைப் பிடிக்கத் தவறியவர்கள் மீண்டும் எறிய பாபாவிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். பந்தை பிடித்தவர்களுக்கு பாபாவின் பிரசாதம் வழங்கப்பட்டது.

விஜயவாடா தரிசனத்திற்காக எந்த நிகழ்ச்சியும் திட்டமிடப்படவில்லை, ஆனால் மக்கள், பாபா அங்கு இருப்பதை அறிந்து, கிட்டத்தட்ட 300 பேர் அவர் அருகில் கூடினர்.

காலம் இதை இவ்வாறு பதிவு செய்தது: 'அடுத்த இரண்டு வாரங்களுக்கு, ஆந்திர பிரதேசத்தின் இயற்கை வனப்பு மிக்க மண், ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டதோடு, இறைச்சுடரின் பாடல் மட்டுமே எங்கும் ஒலித்தது. மரங்கள், மலர், செடி, கொடிகள், காற்று - அனைத்தும் அதீத ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் அசைந்தன. உயிரற்ற ஜடப் பொருட்களும் உயிரூட்டம் பெறுவது போலத் தோன்றியது! தெய்வீக மதுபானத்தின் போதை அனைவரையும் ஆட்கொண்டதால் ஓர் அற்புதமான சூழல் நிலவியது.'

1947 முதல் ஐந்து நீண்ட நெடிய ஆண்டுகளாக, ஆந்திரா அன்பர்கள் மெஹர் பாபா, அவருடைய பௌதீக உடலில் வருகை தந்து, தங்கள் மண்ணை ஆசீர்வதிக்க வருமாறு அழைப்பு விடுத்தனர். அவர் வருவதற்கு முன்பு, மக்கள் வெவ்வேறு அனுபவங்களைப் பெற்றனர். சிலர் அவரைக் கனவிலும், சிலர் அவர் உடல் ரீதியாக தோன்றியதையும் கண்டதாகக் கூறினர். ஒட்டுமொத்த ஆந்திராவும் ஒருவித 'இறை போதை மயக்கத்தில்' காணப்பட்டது, இந்தத் திடீர் மாற்றத்தைக் கண்டு காலம் ஆச்சரியத்திற்குள்ளானது.

வாழை மரக்கன்றுகளால் அலங்கரிக்கப்பட்ட அழகான வளைவுகள், கூடாரங்கள், விதானங்கள், பந்தல்கள் மற்றும் அரங்குகள், வெவ்வேறு நகரங்களிலும் கிராமங்களிலும் அமைக்கப்பட்டன, நுழைவாயில்கள், மாலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன; மேலும் இறை மனிதன் அவரது பாதங்களைப் பதிக்க, விலையுயர்ந்த பட்டு மற்றும் பூவேலைகள் செய்யப்பட்ட புடவைகள் தரையில் விரிக்கப்பட்டன.

'ஆந்திரா, அவதார புருஷரை அவருக்கே உரித்தான விதத்தில் வரவேற்றது' என்று கூறி, காலம் தொடர்ந்தது. 'இறை கீதத்தின் சூரியன் அடிவானத்தில் உதித்துக்கொண்டிருந்தது, அதன் இசையை அந்த இதயங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆர்வமாக இருந்தது. அதன் கதிர்கள் ஒவ்வொரு இல்லத்திலும்

ஊடுருவி, தெய்வீக அன்பானவரின் புகழ் பாடத் தொடங்கியது. மக்கள் தேவ தேவதைகளின் அதிசயங்களைப் பற்றி பேசுகின்றனர்; ஆனால், அனல் பறக்கும் தெய்வீக மதுபானம் நிரம்பி வழியும் சாம்ராஜ்யத்தின் வசீகரம் மிகவும் அற்புதமானது, ஏனெனில் அதில் ஏக இறைவன், அவதார புருஷரின் உருவில் வருகை தந்தது அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது.

"1953, ஜனவரி மாதத்தின் இரண்டு வாரங்கள், ஆந்திரா முழுவதும் அனல் பறந்து கொண்டிருந்தது; அவரது இறை கீதத்தின் நெருப்பின் சாம்பலைத் தவிர வேறு எதுவும் இல்லை. மெஹர் பாபா ஆந்திராவை, உலகம் மற்றும் அதன் ஆசைகளின் குமுறல்களிலிருந்து விலக்கி வைத்து, அவரது பாடலின் மெல்லிசையின் இனிமையான ரீங்காரங்களை மட்டுமே கேட்கச் செய்தார்."

பெண்டு குழுவிற்காக ஒரு தனி ரயில் பெட்டியை ஏற்பாடு செய்து, 1953, ஜனவரி 17 அன்று மதியம், பாபாவும் அவரது 50 பேர் கொண்ட குழுவும் விஜயவாடாவிலிருந்து தாடேபள்ளிக்கூடம் என்ற இடத்தை நோக்கிச் சென்றனர். ரயிலில் பாபா தனது அன்பர்கள் கூறிய கதைகள் மற்றும் கேளிக்கைகளுக்கு செவிமடுத்த அதே வேளையில், ரயில் ஓடும் வேகத்தைப் பற்றி அடிக்கடி விசாரித்தார். ஜால்பாய், டாக்கே இருவரும் பாபாவை வேடிக்கையான துணுக்குகளால் மகிழ்வித்தனர்; குமார் தனது வாழ்க்கையின் அற்புதமான 'உண்மை' சம்பவங்களை விவரித்தார். ரயில், ஏலூருவைக் கடந்து சென்றபோது, அங்கே ரங்கா ராவ் ஒரு பெரிய பந்தல் கட்டுவதை மேற்பார்வையிடுவதைப் பார்த்து, அவரை நோக்கி கைகளை அசைக்க, அவரும் மகிழ்ச்சியில் கை அசைத்தார்.

அன்று மாலை 7:30 மணிக்கு **தாடேபள்ளிக்கூடம்** வந்தடைந்தனர். ரயில் நடைமேடையில் நூற்றுக்கணக்கானோர் பாபாவுக்காகக் காத்திருந்தனர். பூமியில் நடந்த இந்தக் காட்சியைக் கண்டு, தேவதைகளின் கண்களில் கண்ணீர் வழிந்து, மழை மேகங்களாக உருவெடுத்து, வானத்திலிருந்து மழைத்தூறல்கள் விழ ஆரம்பித்தன.

மெஹர் வரவேற்புக் குழு உறுப்பினர்கள் பாபாவை வாழ்த்த முன் வந்து, பாபா ரயிலிலிருந்து இறங்கியதும், டாக்டர் தனபதி ராவ் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து மேலும் பலர் ஏராளமான மாலைகளைச் சூட்டினர். திடீரெனப் பொழிந்த மழையால், ஐந்து நிமிடம் ரயில் நிலையத்திலேயே நின்றனர். முழு நேரமும் ஆதி புருஷரை வரவேற்கும் கோஷங்கள் தாடேபள்ளிக்கூடத்தில் முழங்கிக் கொண்டிருந்தன.

ஆயிரக்கணக்கான மலர்களால் அலங்கரிக்கப்பட்ட காரில், நரிமன், மெஹர்ஜி, எரச், தனபதி ராவ் ஆகியோருடன் பாபா தனது இருக்கையில் அமர்ந்தார். பிற அனைவரும் கார்கள் அல்லது பேருந்துக்ளில், பாபாவைப் பின்தொடர்ந்து நெடுநீள ஊர்வலமாக அணிவகுத்துச் சென்றனர். **'நமோ மெஹர்**

**பாபா, அவதார், நமோ தேவ தேவா**' என்ற இனிமையான பாடலைக் கூட்டத்தினர் பாடிக்கொண்டே, அவர்கள் அணிவகுப்புக் குழுவால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆந்திராவை இறை அன்பின் நெருப்பில் மூழ்க வைக்க வந்தவருக்கு இது ஓர் அற்புதமான, மனதை தொடும் ஊர்வலம். ஆனால் இந்த நெருப்பு எவரையும் அச்சுறுத்தாமல், அதற்கு மாறாக, தங்களைத் தாங்களே எரித்துக் கொள்ளும் விதத்தில் அதை நோக்கி விரைந்தனர். ஏனெனில் அதன் காந்தம் போன்ற சக்தியும், ஈர்ப்பும் அப்படி இருந்தது.

எட்டு மணிக்கு ஊர்வலம் பாபாவின் பங்களாவை சென்றடைந்தது. மண்டலியும் பிற அனைவரும் (உறைவிட வசதியுடன் கூடிய) உயர்நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டனர். உள்ளூர் வழக்கறிஞர் ஜோஸ்யுலா வெங்கடேஸ்வர ராவ் உணவு தயார் செய்வதை மேற்பார்வையிட்டார்.

ஜனவரி 18, ஞாயிற்றுக்கிழமை, பாபா, டாக்டர் தனபதியின் இல்லத்திற்குச் சென்றார், அங்கு அவர் முதன்முதலாக, ஏழை எளியவர்களுடனான தனது பணியை, காலை 9:00 முதல் 10:00 மணி வரை செய்தார்; வழக்கம் போல், ஏழு ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் ரூ 51 வழங்கினார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, அனல் பறக்கும் வாழ்வின் காலகட்டத்தில் ஒவ்வொரு திட்டத்திலும், இந்த நிகழ்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. (ஒவ்வொரு இடத்திலும் பாபா மஸ்துகளைத் தொடர்பு கொள்ள நடந்து சென்றார்.)

அதற்குப் பிறகு பாபா, பவிஸெட்டி முரளீதர் என்ற பதினேழு வயது சிறுவனின் கால்களைக் கழுவி, தலைவணங்கி பிரசாதமாக பதினான்கு ரூபாயை வழங்கினார். இரவு ஓய்வெடுக்கும் முன்பு, பாபாவின் பெயரை உச்சரிக்குமாறும், பொய் பேசாமல், தீய செயல்களில் ஈடுபடாமல் இருக்குமாறும் அந்த சிறுவனுக்கு அறிவுறுத்தினார். அந்த இளைஞன் பாபா மற்றும் குழுவினருடன் சுற்றுப்பயணத்தில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அடுத்ததாக, தனபதி ராவ் மற்றும் ஆந்திரா மெஹர் மையத்தின் செயலாளரும், துணைத் தலைவருமான ஐ.வி.சேஷகிரி ராவ் (58) ஆகியோரின் குடும்பத்தினரை பாபா சந்தித்தார்.

ராமபத்ர ராஜு பாலகோபாலா, 41, மற்றும் அவரது இளைய சகோதரர், பாஸ்கர ராஜு, 35, தனபதியின் மகள்களுக்கு பரதநாட்டியம் (ஒரு பழங்கால நடனம்) கற்பித்த வேளையில், மெஹர் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டனர். 1952, நவம்பர் மாதம் மெஹராபாத்தில் நடந்த கூட்டத்தில் '**நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா**' என்ற வரியின் வார்த்தைகளையும் மெல்லிசையையும் ராமபத்ர ராஜு இயற்றினார். இந்த நேரத்தில் பாபாவுக்கு முன்பாக பாஸ்கரா அதைப் பாடியபோது, பாபா குறுக்கிட்டு யார் இந்தப் பாடலை

எழுதியது என்று விசாரித்தார். பாடல் நிறைவடைந்ததும், பாபா, தனபதி மற்றும் ஹமிர்பூர் அன்பர்களிடம் இதைப் பிரார்த்தனை பாடலாக எழுதி மனப்பாடம் செய்யுமாறு அறிவுறுத்தினார். இந்த நிகழ்ச்சிகளின் போது ஆந்திரா முழுவதும் பாடப்பட்ட இந்த வரி இன்றும் மக்களின் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது.

காடேக்கர் பின்னர் ஆரத்தி நிகழ்த்தியதைத் தொடர்ந்து, பாபா திடீரென எழுந்து வீட்டை விட்டு வெளியேறி, சுமார் 50 அடி தூரம் நடந்து, பின்னர் ஒரு சிறிய வீட்டு வாசலின் கற்பாளத்தின் மீது அமர்ந்தார். அங்கு வசிப்பவர்களைப் பார்த்து புன்னகைத்துக்கொண்டே, பாபா சிறிது நேரம் அமர்ந்திருந்தது - அங்கிருந்தவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. பாபாவை அழைத்துச் செல்ல கார் அங்கே வந்ததும், பாபா அதன் உள்ளே அமர்ந்தார், ஆனால் மீண்டும் வெளியே வந்து அந்த வீட்டில் அனைவருக்கும் தனது அன்பைத் தெரிவித்து, காரில் ஏறி தமது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார்.

அந்த வீடு பன்றிகளை வளர்த்து, குடும்பம் நடத்தும் தாழ்த்தப்பட்ட ஹரிஜனுக்குச் சொந்தமானது என்பது பின்பு தெரியவந்தது. சாதியின் காரணமாக பாபாவின் தரிசனத்திற்கு வருமளவுக்குத் துணிச்சல் இல்லை. (அப்போது ஆந்திராவில், ஹரிஜனங்கள், உயர்சாதி இந்துக்களுடன் பழகுவது தடுக்கப்பட்டது.) அந்த வீட்டுத் தலைவர் இதை நினைத்து மிகவும் பரிதாபமாக உணர்ந்தார்: "நான் எவ்வளவு துரதிர்ஷ்டசாலி, கடவுள் இவ்வளவு அருகாமையில் இருக்கும்போது, என்னால் அவரது தரிசனத்தைப் பெற முடியவில்லை. சாதாரண மக்கள் மட்டுமல்ல, கடவுள் கூட நம்மை இகழ்கிறார்! அவர் ஆயிரக்கணக்கானோருக்கு தரிசனம் வழங்குகிறார், ஆனால் அவரை ஒரே ஒரு பார்வை கூட பார்க்கும் பாக்கியம் எனக்கு இல்லை, நான் உண்மையில் துரதிர்ஷ்டசாலி, மிகவும் துரதிர்ஷ்டசாலி - கடவுளும் என்னைக் கைவிட்டுவிட்டார். எங்கள் மீது அவருக்கு இரக்கமேயில்லை!"

இறை-மனிதன் அவராகவே அந்தக் குடிசையை நெருங்கியபோது, இத்தகைய எண்ணங்கள் அவர் மனதில் அலைபாய்ந்து கொண்டிருந்தன. பாபாவின் பார்வையில், அவர் தாழ்த்தப்பட்டவர் அல்ல, ஆனால் கதறிக் கொண்டிருந்த அந்த ஆத்மாவின் ஆழ் இதய குரலை பாபாவால் புறக்கணிக்க முடியவில்லை; பாபா அவரிடம் வந்தார், அந்த மனிதனின் இதயத்தில் நிகழ்ந்தது அவருக்கு மட்டுமே தெரியும்.

பாபாவின் பங்களாவில் மதியம் 2:00 முதல் 5:00 மணி வரை நடைபெற்ற கவாலி நிகழ்ச்சியை பாபா பெரிதும் ரசித்தார்.

டாக்டர் டான், பாபாவுடன் ஆந்திராவுக்குச் சென்றிருந்தார், மேலும் அவர் '**தி வேஃபேரர்ஸ்**' புத்தகத்தின் ஆசிரியராக இருந்ததால், அவர் ஒரு முக்கியமான நபராகக் கருதப்பட்டார். இது அவருக்கு வேடிக்கையாக இருந்தது, மேலும்

எவரேனும் அவருக்கு வணக்கம் செலுத்துவதற்கு முன்னர் (அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது தவறாமல் அவரை வணங்க முயற்சித்தது), அவர் முதலில் அவர்களுக்கு வணக்கம் செலுத்துவதை எப்பொழுதும் செய்தார்.

ஒரு நாள் இரவு, பாபா அதிகாலை 3 மணிக்கு எழுந்தார்; எழுந்ததும் நீராட விரும்பினார். தண்ணீர் சூடாக்க அங்கு எதுவும் இல்லாததை கவனித்த எரச், **பப்பிராஜு பந்தேலா** என்பவர் ஒரு வாளி வெந்நீரை எடுத்து வருவதைக் கண்டார். 46 வயதான **பப்பிராஜு**, பங்களாவுக்கு அருகில் தங்கியிருந்தார். அவருக்கு எப்படியோ விழிப்பு வந்ததாகவும், அந்த வேளையில் பாபா நீராட விரும்பலாம் என்ற எண்ணம் மனதில் ஓடியதாகவும் விளக்கினார். ஆறு வருடங்களுக்குப் பின்னர் 1959ஆம் ஆண்டில், '**அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை**'க்கான பத்திரம் தயார் செய்யும் வேளையில், பாபாவே இந்த சம்பவத்தை நினைவுகூர்ந்து, பயனாளிகளில் ஒருவராக பப்பிராஜுவின் பெயரையும் இணைத்தார்.

1953, ஜனவரி 19 திங்கட்கிழமை அன்று, காலை 8:30 மணிக்கு, வெகுஜன தரிசன நிகழ்ச்சி நடந்தது. தனபதியின் குடியிருப்புக்கு எதிரே ஒரு பெரிய பந்தல் எழுப்பப்பட்டிருந்தது. பாபாவின் வழக்கமான செய்தியும், அனல் பறக்கும் வாழ்வைப் பற்றிய விளக்கமும் வாசிக்கப்பட்டது. 'மெஹர் கம்மிட்டி', உள்ளூர் 'பார் அஸோஸியேஷன்' மற்றும் 'காந்தி சேவா' அமைப்பு ஆகியவற்றால் வரவேற்பு உரைகள் வழங்கப்பட்டன. பாபாவின் 'ஆன்மீக சுதந்திரம்' குறித்த செய்தியை டாக்கே வாசித்த போது, குடும்ப சாஸ்திரி அதை தெலுங்கில் மொழிபெயர்த்தார். அதற்குப் பிறகு, தரிசன திகழ்ச்சி தொடங்கியது. மதியம் 1:00 மணி வரை, பாபா கிட்டத்தட்ட 10,000 ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தரிசனம் அளித்து பிரசாதம் வழங்கினார். மதியம் 2:30 மணிக்கு மீண்டும் தொடங்கிய தரிசன நிகழ்ச்சி, அன்று மாலை வரை தொடர்ந்தது. ஏறக்குறைய 20,000 பேர் பாபாவின் ஸ்பரிசத்தைப் பெறும் பாக்கியம் பெற்றனர். விழாவின் போது பாஸ்கர ராஜு தொடர்ந்து பஜனை பாடினார், இடையில் பாபா சில விளக்கங்களையும் செய்திகளையும் வழங்கினார்.

மறுநாள் காலை, தாடேபள்ளிக்கூடத்தில் வாழும் தனது அன்பர்களின் இல்லங்களுக்கு பாபா விஜயம் செய்தார். ஒவ்வொரு இல்லத்திலும், காடேக்கர் மராட்டி மொழியில் ஆரத்தி நிகழ்த்தினார். பன்ஸிலாலின் இல்லத்திற்குச் சென்ற வேளையில், அவரது மனைவி பாபாவிடம் ஓர் ஆண் குழந்தையை வரமாக வேண்டிக் கெஞ்சினார். சூர்யசந்திரா என்பவரின் இல்லத்தில், அந்தத் தம்பதிகள் இன்றைய சகாப்தத்தின் அவதார புருஷரை வரவேற்க பண்டை கால வேதங்களை ஓதுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

பாபா, தனபதியின் இல்லத்திற்கு மதிய உணவுக்காகச் சென்றார்; அவருடைய இளம் பேத்திகள் பாபாவுக்காக நடனமாட, அவர் குழந்தைகளை முத்தமிட்டு அவர்களுடன் விளையாடினார்.

பாண்டிச்சேரியைச் சேர்ந்த 56 வயதான **சுத்தானந்த பாரதி** என்ற யோகி, பாபாவை தரிசனம் செய்வதற்காக தனபதியின் இல்லத்திற்கு வந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு, சுத்தானந்தா, சாயிபாபாவை சந்தித்தபோது, **சாய்** அவருக்கு இனிப்புகளை வழங்கி, "**உங்களின் அன்பிற்குரியவர் விரைவில் உங்களை ஆட்கொள்வார். அமைதியாக இருங்கள், இறைவனையே மையமாக வைத்துக்கொள்ளுங்கள். இனிமையான (ஆசிர்வதிக்கப்பட்ட) இதயம் இனிமையிலும் இனிமையானவருடன் (இறைவனுடன்) இணைக்கப்பட்டுள்ளது**" என்று கூறினார்.

உபாஸனி மஹாராஜ் ஒருமுறை சுத்தானந்தாவிடம், "**உங்கள் வாழ்வின் பிரியமான இறைவன் ஒரு நாள் உங்களை அரவணைப்பார்**" என்று கூறியிருந்தார். ஹுப்ளியின் மேல்நிலை துறவி ஒருவர், "**நீங்கள் ஒரு மௌன குருவை சந்திப்பீர்கள்**" என்றும் வாழ்த்தியிருந்தார். இப்போது, ரமண மகரிஷி, அரவிந்தர் போன்ற பிற ஆன்மீக ஒளியூட்டமிக்க ஞானிகளை சந்தித்த பிறகு, கடைசியாக அவர் மெஹர் பாபாவை எதிர்கொண்டார், உடனடியாக பாபா அவரை "**துறவிகளின் துறவி, மஹாத்மாக்களின் மஹாத்மா, எனது நீண்ட யாத்திரையின் குறிக்கோள்**" என்று அங்கீகரித்தார்.

பாபா அவரை மிகவும் அன்புடன் எதிர்கொண்ட போது, சுத்தானந்த பாரதி, பாபாவின் பாதங்களில் தலைவணங்கினார். பாபா அவருக்கு "**உள்ளளவிலான பணிவு பலமிக்கது, வெளிப்புற பணிவு பலவீனமானது**" என்ற தலைப்பில் ஒரு செய்தியை வழங்கினார்.

சிறுமிகள் பாபாவின் முன்னிலையில் நடனமாடியபோது, அவர் கூறினார்: "**நான் பாடிய முதல் பாடல், நான் ஆடிய முதல் நடனம் என்னை நித்தியமாகப் பிணைத்துவிட்டன. நான் எவ்வளவோ முயற்சி செய்தும் என்னால் என்னை விடுவிக்க முடியவில்லை.**

“**காலங்காலமாக, நான் மனித உருவில் இந்த உலகில் மீண்டும் மீண்டும் வருவதற்கு இதுவே காரணம். நான் பாடிய பாடலின் மூலம் பிரபஞ்சம் முழுவதும் என் கழுத்தைச் சுற்றிக் கொண்டது!**"

அவர் மேலும் கூறினார், "**முழுப் பிரபஞ்சமும் எல்லையில்லா இறைவனின் நிழல் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடிந்தால், இந்த நிரந்தரமற்ற விஷயங்களைப் பற்றி நீங்கள் ஒருபோதும் கவலைப்பட மாட்டீர்கள். நீங்கள் அனைவரும் எப்போதும் ஏக இறைவனில் இருந்தீர்கள், இருக்கிறீர்கள், இருப்பீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.**"

சம்பத் ஐயங்காரின் மகள் ஜானகி, தனது மகள் வசுமதியுடன் சென்னையிலிருந்து வந்திருந்தார். சேஷகிரி குடும்பத்தினரும் உடனிருந்தனர். பாபா ஒவ்வொருவரையும் அன்புடன் விசாரித்தார். சேஷகிரியின் மருமகன் எம்.வி.சுப்பா ராவிடம், **"என்னை நேசிக்கிறீர்களா?"** என்று கேட்டதற்கு, அவர் 'ஆம்' என்று பதிலளித்ததும், பாபா, **"உங்களுக்கு என்ன வேண்டும்?"** என்று கேட்டார்.

"இனி எனக்கு எதுவும் வேண்டாம் பாபா" என்று பதிலளித்தார்.

அவருடைய பதில் பாபாவை மகிழ்வித்தது.

அன்று மதியம் பாபாவின் பங்களாவில், முழுகுட்லா ராமலிங்க சாஸ்திரி (பாபா அவரை சாஸ்திரி என்ற செல்லப்பெயரால் அழைத்தார்) கபீர் மற்றும் மீராவின் சில பாடல்களை பாரம்பரிய முறையில், இலக்கிய நயத்துடன் பாடினார். கபீரின் '**முகத்திரையை அகற்று, நீ ராமனைக் காண்பாய்**' என்ற பாடல் பாபாவை விளக்கமளிக்கத் தூண்டியது:

**பல யுகங்களுக்கு முன்பு நீங்கள் இருந்தீர்கள், இப்போது இருக்கிறீர்கள், எப்போதும் இருப்பீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். அதன் பின்னர் என்ன கவலை? நீங்கள் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதை உங்கள் மனதில் பதிய வைக்க விரும்புகிறேன். நீங்கள் கடவுளுக்கும், உங்களுக்கும், பிற அனைவருக்கும் நேர்மையாக இருக்க வேண்டும். நீங்கள் கடவுளை நேர்மையாக நேசித்தால், நீங்கள் உங்களை மறந்து, எங்கும், எதிலும் என்னைக் காண்பீர்கள். கடவுள் போலித்தனத்தை விரும்புவதில்லை, சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தும் வெளியளவில் மட்டுமே இருக்கும். உங்கள் பக்தியை வெளியளவில் மட்டும் காட்டுவதானால், அது கடவுளை அவமதிக்கும் செயலாகும். கபீர், 'உங்கள் ஆசைகளில் களிப்புற வேண்டாம்' என்று சொல்வதன் அர்த்தம் இதுதான்.**

**சமாதி நிலையை அடையவோ, காற்றில் பறக்கவோ அல்லது தண்ணீரில் நடக்கவோ முடியும், இருந்தும் அன்பின் இலக்கணம் தெரியாத யோகிகள் பலர் உள்ளனர். இறை அன்பு என்பது நமது வரம்புக்குட்பட்ட ஆசைகள் அனைத்தையும் அழித்துவிடுகிறது; ஆனால் இந்த அன்பில் 'எரிவது' புகையற்றதாக இருக்க வேண்டும். கபீர் இதை ஒரு வரியில் வழங்குகிறார்: "ஏழு நிறங்களின் முகத்திரையை சிறிதளவு திறந்து பார்!" அவர் முகத்திரையை 'அகற்று' என்று கூறவில்லை, ஆனால் 'சற்று திற' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.**

**உண்மையில், இந்த முகத்திரை மிகவும் நுட்பமானது, மிகச் சிறந்த, உயர்ந்த சிந்தனை கூட அதைத் துளைக்கவோ அல்லது கிழிக்கவோ முடியாது. இந்த முகத்திரை ஏழு அடுக்குகளையும் ஏழு முடிச்சுகளையும் கொண்டுள்ளது. ஏழு அடுக்குகள் வெவ்வேறு நிறங்களையும், ஏழு முடிச்சுகள்**

வெவ்வேறு வகையான மனப்படிவங்களையும் குறிக்கின்றன. இந்த மனப்படிவங்கள் என்பதுதான் தனித்துவமான, அனுபவத்தின் மூலம் உணரக்கூடிய, மாயை எனும் வாழ்க்கை. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், ஐம்புலன்கள் மூலமாக நாம் பார்க்கும், கேட்கும், அனுபவிக்கும் இந்த உலகம் ஒரு மாயை, இது ஏழு பொய்யும், போலியுமான ஆசைகளை அடிப்படையாகக் கொண்டது.

இந்த ஏழு ஆசைகளின் அடிப்படையில் மொத்த வாழ்க்கையின் முழு செயல்பாடும் உள்ளது, அதனால்தான் ஆத்மாவின் 'இறக்கம்' மற்றும் 'ஏற்றம்' இரண்டும் ஏழு நிலைகளில் உள்ளன.

பிரம்மனின் உண்மையான இருக்கை தலையில் உள்ளது, எனவே இந்த மாயைகளுக்கு ஏழு கதவுகளை நீங்கள் காணலாம் - இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு மூக்குத் துவாரங்கள் மற்றும் ஒரு வாய். ஒரு மேல்நிலை ஆன்மா உள் கண்ணைத் திறந்து, ஆன்மீக பாதையில் நுழையும் போது, அவர் முதல் முடிச்சை 'திறக்கிறார்' ('அவிழ்க்கிறார்') என்று கூறப்படுகிறது. முதல் முடிச்சு திறந்தவுடன், ஏழு அடுக்குகளில் 'வாய்' எனும் கதவுக்கு ஒத்ததாக இருக்கும் முதல் அடுக்கு வீழ்ந்துவிடும். முதல் முடிச்சு திறக்கப்பட்டதும், யாத்ரீகர் ஆசைகளில் ஒன்றை அழிப்பதன் மூலம், முதல் ஆன்மீக தளத்தில் நுழைந்ததாகக் கூறப்படுகிறது.

வலது மூக்குத்துவாரத்திற்கு இணையான, இரண்டாவது முடிச்சு திறக்கப்படும்போது, இரண்டாவது அடுக்கு கீழே வீழ்கிறது; அது, யாத்ரீகர் இரண்டாவது ஆன்மீக தளத்தில் நுழைந்ததாகக் கருதப்படுகிறது. இங்கே அவர் அற்புதமான பல விஷயங்களைக் காண்கிறார். இவையெல்லாம் மாயை என்றாலும், அதில் தொலைந்து போனால், அவர் நிலை திண்டாட்டம்தான்! மூன்றாவது முடிச்சு இடது மூக்குத்துவாரம். இங்கே யாத்ரீகர் அதிக அளவிலான அற்புதங்களைக் காண்கிறார். அவர் இப்போது அனைவரின் எண்ணங்களையும் அறிய முடியும். இந்த மூன்றாவது முடிச்சுக்குப் பிறகு, யாத்ரீகர் ஏசுவால் அழைக்கப்படும் ஆன்மாவின் இருண்ட ஆன்மீக இரவுக்குள் நுழைகிறார்.

வலது மற்றும் இடது காதுகளுக்கு இணையான நான்காவது மற்றும் ஐந்தாவது முடிச்சுகள் ஒரே நேரத்தில் திறக்கப்படுகின்றன. இப்போது, ஆசைகள் அழிக்கப்பட்டு, யாத்ரீகர் நான்காவது ஆன்மீக தளத்தில் நுழையும் தருவாயில், அவர் அனைத்து சக்திகளுக்கும் உரிமையாளர் ஆகிறார். அவர் உயிரைத் துறந்தவர்களுக்கு உயிரூட்டம் அளிக்க முடியும்; ஆனால், அவர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் வேளையில், அவர் அதலபாதாளத்திற்குக் கூட தள்ளப்படுவார். அவர் தனது சக்திகளைப் பயன்படுத்துவதற்கான சோதனையைக் கடந்து சென்றால், இரண்டு

**கண்களுக்கும் இணையான ஆறாவது மற்றும் ஏழாவது முடிச்சுகளை ஒரே நேரத்தில் திறந்து, ஆறாவது மற்றும் ஏழாவது வகையான ஆசைகளை அழித்து, ஐந்தாவது ஆன்மீக தளத்தில் நுழைகிறார். ஆனால் முகத்திரை இன்னமும் திறக்கப்படாமல் இருப்பதால், கடவுளைக் காண முடியவில்லை. கடவுளின் அருள் அல்லது குருநாதரின் உதவி ஒன்றுதான் இந்த முகத்திரையை அகற்றவோ அல்லது கிழிக்கவோ முடியும். அதைத் தொடர்ந்து யாத்ரீகர் ஆறாவது ஆன்மீக தளத்தில் நுழைகிறார், இதுவே நெற்றியின் நடுவில் இருக்கும், அதாவது மூன்றாவது கண் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போது அவர் கடவுளை நேருக்கு நேர் எங்கும் காண்கிறார்.**

**யாத்ரீகர்களில் மிகச் சிலரே ஏழாவது ஆன்மீக தளத்திற்குள் நுழைய முடியும், இது தலையின் மேற்புறத்தால் குறிக்கப்படுகிறது. இங்கே ஒருவர் கடவுளாகிறார். ஆனால் இது குருநாதர் உதவியுடன் மட்டுமே செய்ய முடியும். அரிதான சிலர் மட்டுமே தலையின் உச்சியிலிருந்து இதயம் வரை இறங்குகின்றனர். குருநாதர், கண்ணிமைக்கும் நேரத்தில் அல்லது அதைவிட அதி வேகத்தில், இந்த முழு முகத்திரையையும் ஒரே நேரத்தில் அகற்ற முடியும், ஏனென்றால் அனைத்தும் மாயை.**

**இறுதியில், இதன் அர்த்தம் என்னவென்றால், கடவுள் மட்டுமே உண்மையானவர், இதர அனைத்தும் மாயை. நாம் அனைவரும் நம் பிரியமான கடவுளுக்குள் நிரந்தரமாக நிலைகொண்டிருக்கிறோம். எனவே நாம் அனைவரும் ஒன்று.**

பாபா, இவ்வாறு கூறி முடித்தார், "**எனது அனல் பறக்கும் வாழ்வில், நான் வழங்கும் முதல் நீண்ட சொற்பொழிவு இது, எந்தப் புத்தகத்திலும் இந்த விளக்கத்தை நீங்கள் காண முடியாது, ஏனெனில் இந்தக் கருப்பொருளைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம். ஆனால் சில ஆன்மாக்களுக்கு அத்தகைய விளக்கங்கள் தேவைப்படுவதால், அவற்றை அவர்கள் நன்றி உணர்வோடு தங்கள் நன்மைக்காக அடையப்பெறுகிறார்கள்.**"

மாலை 5.30 மணிக்கு இசை நிகழ்ச்சி நிறைவடைந்தது.

பாபாவின் அன்பான வழிமுறைகள், தாடேபள்ளிக்கூடத்தில் இறை அன்பின் நெருப்பாக, கட்டுக்கடங்காமல் மூண்டது. அதன் தீப்பிழம்புகள் சிலரை அழவும், சிலரை சிரிக்கவும் வைத்தன, சிலரை சோகமாகவும், சிலரை களிப்பாகவும், சிலரை அமைதியாகவும் இருக்கச் செய்தன. இது வெவ்வேறு நபர்களில் வேறு வேறு பிரதிபலிப்பைக் கொண்டிருந்தது: சிலர் பாடினர், சிலர் நடனமாடினர், சிலர் தீவிரமான ஆர்வத்துடன் இருந்தனர், சிலர் மயங்கிய உணர்வில் ஆழ்ந்தனர். ஆனால் அவருடைய தெய்வீக அன்பு பலவிதங்களில் வெளிப்பட்டாலும், அதன் போதை அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருந்தது.

ஆயிரக்கணக்கானோர் பேரின்பப் பெருங்கடலில் மூழ்கியதைப் போல் உணர்ந்தனர், தொடர்ந்து பல நாட்கள் அதே போதையில் இருந்தனர்.

சாலையில் செல்லும் குழந்தைகள் கூட 'நமோ மெஹர் பாபா, அவதார், நமோ தேவ தேவா!' என முணுமுணுத்துக்கொண்டே சென்றனர். இத்தகைய வெறித்தனமான காட்சியின் முழுமையான, துல்லியமான விளக்கத்தை எந்தப் பேனாவாலும் வரைவது சாத்தியமில்லை. இறைப்பெருங்கடலின் மொழியால் மட்டுமே அதை விவரிக்க முடியும், அந்த மொழிக்கு வார்த்தைகள் இல்லை. இந்த சொர்க்கத்தின் இணையான அமிர்தத்தை நெருப்பின் மூலம் நுகர ஆந்திர பிரதேசம் பாக்கியம் பெற்றது என்றால் மிகையாகாது.

1953, ஜனவரி 21 புதன் கிழமை அன்று, காலை 7:00 மணிக்கு, பாபா குழுவுடன் கார் மற்றும் பேருந்துகளில் புறப்பட்டார். தாடேபள்ளிக்கூடம் கண்கலங்கி அவருக்குப் பிரியாவிடை அளித்தது. பாபா அரை மணி நேரத்தில் **பெண்டபடு** கிராமத்தைச் சென்றடைந்தார், அங்கு அவருக்கு சுமார் 5,000 அன்பர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஐ. கங்காதரம் மற்றும் ஓர் ஆச்சார்யா (இந்து மதகுரு) வரவேற்பு உரையாற்ற, சில பாடல்களும் பாடப்பட்டன. பாபா வாழைப்பழம் மற்றும் கொய்யாப்பழத்தைப் பிரசாதமாகத் தொட்டு ஆசீர்வதித்து, அதை மக்களுக்கு விநியோகிக்குமாறு அங்கு கூடியிருந்த சேவகர்களுக்கு அறிவுறுத்தினார். காலை எட்டு மணிக்கு, அங்கு ஒன்றிணைந்த மாணவர்களுக்கு செய்தியை வழங்கி, பாபா, **பிப்பரா** கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

டாக்டர் ராவ், குடும்ப சாஸ்திரி, மல்லிகார்ஜுன ராவ் மேலும் சிலர் தாடேபள்ளிக்கூடத்தில் பாபாவுடன் இணைந்திருந்தனர். ஒவ்வோர் இடத்திலும் குடும்ப சாஸ்திரி, பாபாவின் செய்திகளை தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

காலை 8:30 மணியளவில் பாபா, பிப்பராவிற்கு வந்தபோது, போர்டு உயர்நிலைப் பள்ளியில் ஒரு விழா நடைபெற்றது. மாணவர்கள் உட்பட 5,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**"கடவுள் கடவுளுக்குத் தலைவணங்குகிறார்"** என்ற செய்தி கூட்டத்தில் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாபா கூறினார்:

**இன்று உங்கள் மத்தியில் இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.**

**காலங்காலமாக மற்றும் ஆரம்பம் இல்லாத நித்திய காலத்திலிருந்து 'அன்பு' ஒன்றுதான் எனது செய்தியாக இருந்து வருகிறது. கடவுள் மட்டுமே உண்மையானவர், அவரை அறிய நாம் அவரை நேசிக்க வேண்டும். கடவுள் நம் அனைவருள்ளும் சமமாக வாழ்கிறார், அவர் அமைதியான அன்பையே விரும்புகிறார். நமது சக மனிதர்களை நேசிப்பதன் மூலமும், நாம் அவரை நேசிக்க முடியும், மேலும் நாம் கடவுளை நேர்மையாக நேசித்தால், நம் சந்தேகங்கள், கவலைகள் மற்றும் அச்ச உணர்வுகள் அனைத்தும் அகன்றுவிடும்.**

**அன்பின் மூலம் நீங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடத்திலும் என்னைக் கண்டுகொள்ள எனது ஆசீர்வாதங்களை வழங்குகிறேன். உங்களில் ஒருவரேனும் இந்த ஆசீர்வாதத்திற்கு தகுதியானவராக இருந்தால் எனது வருகை மதிப்புக்குரியதாக இருக்கும்.**

**இப்போது நான் உங்களைத் தலை வணங்குகிறேன், அதாவது நீங்கள் அனைவரும் என்னை தலை வணங்குகிறீர்கள், எனவே நீங்கள் தனிப்பட்ட முறையில் மீண்டும் என்னை வணங்க வேண்டியதில்லை.**

கூட்டத்தினரை வணங்கிய பிறகு, பாபா, பிரசாதமாக விநியோகிக்கப்பட இருந்த மலர்களைத் தொட்டார். அவர் தும்மலப்பள்ளி வீரபத்ர ராவ் என்பவரின் இல்லத்திற்கு விஜயம் செய்து, ஒன்பது மணிக்கு பிப்பரா கிராமத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். வழியில், அவர் இரண்டு கிராமங்களில் ஐந்து நிமிடங்களுக்கும் குறைவாகவே நின்றார்; இந்தக் குறுகிய நேரத்திற்குள், ஆயிரக்கணக்கானோர் பாபாவைப் பார்த்தனர். அவரது இனிமையான புன்னகை, அனல் கதிர்களைப் பரவச்செய்து, ஒவ்வொரு இதயத்தையும் ஊடுருவியது.

காலை 11:30 மணியளவில் பாபா **பெனுகொண்டா** கிராமத்தில் நுழைந்தார், அங்கு மதியம் 2:30 மணிக்கு, கன்யகா பரமேஸ்வரி கோவிலில் தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. ஏறக்குறைய 8,000 பேர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவரது கைகளிலிருந்து பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். ஜவாடி லக்ஷ்மியா நாயுடு, பாபாவின் உள்ளூர் பஞ்சாயத்து (கிராம சபை) அலுவலகத்தில் தங்குவதற்கும், அவருடைய உணவுக்கும் ஏற்பாடு செய்திருந்தார். பாபா அவரது இல்லத்திற்கும், எதிரெதிரே அமைந்த நரசிம்ம மூர்த்தி மற்றும் நுலி லக்ஷ்மி நாராயணா ஆகியோரின் இல்லங்களுக்கும் விஜயம் செய்தார்.

1953, ஜனவரி 22 வியாழன் அன்று காலை 7:00 மணிக்கு பெனுகொண்டாவிலிருந்து புறப்பட்டு, **கப்பாவரம்** கிராமத்தில் நின்று, தரிசனத்தை நிறைவு செய்து 8:30 மணிக்கு **நிடாடவோலே** என்ற இடத்திற்கு வந்தார். இது குடும்ப சாஸ்திரிகள் மற்றும் மல்லிகார்ஜுனாவின் சொந்த ஊர். போர்டு உயர்நிலைப் பள்ளியில் தரிசனத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, சுமார் 5,000 பேர் கலந்து கொண்டனர். வழக்கமான செய்திகளை வாசித்து, மொழிமாற்றம் செய்து 9:50 மணிக்குள் மிக வேகமாக பிரசாதம் வழங்கி எல்லா நிகழ்ச்சிகளையும் நிறைவு செய்தார்.

குடும்ப சாஸ்திரிகள் பாபாவுடன் வந்த குழுவினருக்கு சிற்றுண்டி ஏற்பாடு செய்திருந்தார், பிரசாதம் விநியோகிக்கும் வேளையில், மண்டலி மற்றும் இதர அன்பர்கள் தேநீர் அருந்தத் தொடங்கினர். தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், தனது உத்தரவை மீறியதற்காக, பயண மேலாளராக இருந்த பெண்டுவை பாபா கடிந்து கொண்டார். உண்மை என்னவென்றால், பெண்டு,

பாபாவின் அருகில் நின்று கொண்டிருந்ததால், பிற மண்டலி சிற்றுண்டி உண்ணுவதை அவர் அறியவில்லை. ஆனால், புதிய நபர்களுக்குப் பாடம் புகட்டும் நோக்கத்தில், பாபா, பெண்டுவையும் பிற மண்டலியையும் கடுமையாகக் கண்டித்தார்; இதன் மூலம் அவருடைய அனுமதியின்றி எதையும் உட்கொள்ள கூடாது என்பதை அனைவரும் அறிந்து கொண்டனர்.

பயணத்தின் போது நிகழ்ந்த பிறரின் தவறுகளுக்கு, அறிவுரை கூறி, கண்டிக்கும் விதத்தில் பாபா, மண்டலியை இலக்காக வைத்து 'கூர் அம்புகளை' அவ்வப்போது ஏவிக்கொண்டிருந்தார். இத்தனை காலமாக பாபா, மண்டலியை கையாளும் நடைமுறை தாக்குதல்களைத் தொடர்ந்து, மண்டலி அவமானங்களுக்கு ஆளாகாமல், பாபாவின் முன்னால் அடக்கமாகவும் உதவியற்றவர்களாகவும் இருந்து, அவருடைய சகவாசத்தில் இருப்பதைத் தவிர வேறு மகிழ்ச்சியைக் கண்டதில்லை.

நிடாடவோலே கிராமத்தில் பாபா, சாஸ்திரி மற்றும் மல்லிகார்ஜுன ராவ் ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்று அவர்களது குடும்பத்தினரைச் சந்தித்தார். சாஸ்திரியின் மனைவி, மகன்கள் பாஸ்கர், கிருஷ்ணா ஆகியோரை, பாபா முதன்முதலாக இங்கு சந்தித்து, முழு குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். சாஸ்திரி பண நெருக்கடியில் இருந்த போதிலும் தரிசனத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார். பாபா அவருக்கு ரூ 500 பிரசாதமாக வழங்க விரும்பியதை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்ததால், பண விஷயத்தில் அவரது நெருக்கடி நிலைமை மேலும் மோசமானது. அந்தப் பிரசாதத்தை ஏற்காததில் தான் பெரும் தவறு செய்ததை உணர்ந்தபோது, தனது பெருமையை நினைத்து வெட்கப்பட்டார். பாபா, பின்னர் அவருக்கு அறிவுரை கூறினார், "**நான் எனது கைகளால் பிரசாதமாக வழங்கும்போது, அதை உடனடியாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும், ஏனென்றால் அவதார புருஷரின் கைகளிலிருந்து பிரசாதத்தைப் பெறுவது மாபெரும் அதிர்ஷ்டம்.**"

காலை பத்து மணியளவில் பாபா அங்கிருந்து **கொவ்வூர்** என்ற இடத்திற்குப் புறப்பட்டார், ஆனால் ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் அவர் காரை நிறுத்தினார். தனபதி ராவ் தனது குடும்பத்தினருடன் காரில் பின்தொடர்ந்து வந்தார். அவர்களுக்குப் பின்னால் மண்டலியையும் குழுவினரையும் ஏற்றிக்கொண்டு இரண்டு பேருந்துகள் வந்தன. காரிலிருந்து இறங்கிய பாபா, ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து, மண்டலி தன்னிடமிருந்து வெகு தூரத்தில் பிரிக்கப்பட்டதால், தனபதி, சாஸ்திரி, அர்ஜுனா ராவ் ஆகியோரை கடுமையாகக் கண்டித்தார்.

"**நெருப்புடன் விளையாடாதீர்கள்!**" பாபா, அவர்களை எச்சரித்தார். "**மண்டலி எப்பொழுதும் என்னுடன் இருக்க வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்தே சொல்லி வருகிறேன். என் அறிவுரைகளைப்**

**புறக்கணித்து, ஒழுங்காக ஏற்பாடு செய்யத் தவறிவிட்டீர்கள். ஆந்திரா பயணத்தில் எஞ்சிய அனைத்தையும் ரத்து செய்துவிட்டு இன்று மும்பைக்குப் புறப்படுகிறேன்!"**

தனபதி உண்மையாக பாபாவிடம் மன்னிப்புக் கோரினார், பாபாவும் அவர்களை மன்னித்தார். ஆனால் அவர் வாழ்நாள் முழுவதற்குமான பாடத்தைக் கற்றுக்கொண்டார்: நெருப்பின் சௌகரியத்திற்கு மத்தியில் அதன் தீவிரத்தன்மையும் உள்ளது. இந்தக் கடினத்தன்மையில் உண்மையான சௌகரியமும் உள்ளது, அது இல்லாமல் நெருப்பு ஒளிராது.

பேருந்துகள் இன்னும் பாபா இருந்த இடத்தை வந்தடையவில்லை, என்ன நடந்தது என்று பார்க்க தனபதி காரில் திரும்பிச் சென்றார். ஒரு பேருந்தில் எரிவாயு தீர்ந்துவிட்டதையும், மற்றொன்றில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதையும் அவர் கண்டுபிடித்தார்.

இரண்டு பேருந்துகளிலும் இருந்த பிரச்சினைகள் இறுதியில் தீர்க்கப்பட்டன, ஆனால் பாபா இருந்த இடத்தை மண்டலி வந்தடைவதற்கு மேலும் ஒரு மணி நேரம் ஆனது. அவர் அமைதியற்றவராகத் தோன்றினாலும், பாபா மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, கொவ்வூர் பயணம் மீண்டும் தொடங்கியது. கோடூரி கிருஷ்ணா ராவ், கொவ்வூரில் தொகுப்பாளராக இருந்தார், ஆனால் பாபா, அவரது இல்லத்திற்குச் செல்லாமல், நேராக ராமலிங்கேஸ்வர ராவ் இல்லத்திற்குச் சென்றார், அங்கு அவரது மகளின் திருமணம் நடந்துகொண்டிருந்தது. பேருந்துகள் சரியாக ஏற்பாடு செய்யாததற்கு பாபாவிடம் மன்னிப்புக் கோரி கோடூரி அங்கு வந்தார். பாபா அவரை மன்னித்து, பின்னர் அவரது இல்லத்திற்குச் சென்றார், அங்கு ஏழை மக்களின் குழு ஒன்று உணவில் பங்கெடுத்துக் கொண்டிருந்தது.

பிற்பகல் 3:30 மணியளவில், இரண்டாவது போர்டு உயர்நிலைப் பள்ளியில் நடந்த தரிசன நிகழ்ச்சியில் ஏறக்குறைய 5,000 பேர் பங்கெடுத்தனர். பாபா பழங்கள் நிரம்பிய கூடைகளைத் தொட்டு ஆசீர்வதித்து, அவற்றை அவர் வழங்கும் பிரசாதமாக விநியோகிக்க அறிவுறுத்தினார்.

கோடூரி கிருஷ்ணராவ் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்யும் பொறுப்பை வகித்தபோதிலும், பாபா அவரை சற்று தூரத்தில் இருக்கச் செய்தார். பாபா நல்ல மனநிலையில் இல்லாததுபோலத் தோன்றினாலும், கோடூரியை அவரது நெருக்கத்தில் கொண்டு வர, இதுவே அவரது வழி. அவரை வெகு தொலைவில் இருக்கச் செய்து பாபா அருகாமையில் கொணர்ந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு கொவ்வூரில் **மெஹர்ஸ்தான்** (மெஹரின் உறைவிடம்) என்ற மையத்தை நிறுவியவர் கோடூரி.

**ராஜமுந்திரி**யில் பாபாவின் விருந்தோம்புநராக இருந்த நித்திமி தர்மாராவ், 45, தனது காருடன் கொவ்வூருக்கு வந்திருந்தார். அவர் சாய்பாபா மற்றும் உபாஸனி மஹாராஜ் ஆகியோரின் பக்தர்களில் ஒருவராக இருந்தவர், 1952, நவம்பர் மாதத்தில் மெஹராபாத்தில் நடந்த கூட்டங்களில் பாபாவை சந்தித்தார். மாலை 4:30 மணிக்கு. தர்மாராவ், பாபாவை தௌலேஸ்வரத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு ஒரு பெரிய விழா திட்டமிடப்பட்டிருந்தது. எரச், மெஹர்ஜி, நரிமன் மற்றும் சாஸ்திரி மட்டுமே பாபாவுடன் சென்றனர்.

கோதாவரி நதியின் குறுக்கே படகில் பாபாவின் குழுவுடன் இதர உறுப்பினர்களும் தௌலேஸ்வரம் (கிழக்கு கோதாவரியில் அமைந்த) செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சூரிய அஸ்தமனத்தில் பாபாவின் கார் தௌலேஸ்வரத்தில் அணையைக் கடந்து சென்றபோது, பாபா காரை நிறுத்தும்படி சைகையால் தெரிவித்தார்; அவர் வெளியே வந்து, மேற்கு நோக்கி, தனது கை கால்களை நீரில் நனைத்தார்.

பாபா தங்குவதற்காக ராஜமுந்திரியில் உறைவிடப் பள்ளியின் மாணவர் விடுதியான நவ பாரதி குருகுலத்தை தர்மாராவ் ஏற்பாடு செய்திருந்தார். தௌலேஸ்வரத்தில் தரிசன நிகழ்ச்சியை நிறைவு செய்து பாபா வந்தபோது, மண்டலி அங்கு தென்படவில்லை. அவர்களை அழைத்து வர பேருந்துகள் இல்லாததால், கோதாவரி நதிக்கரையில் அனைவரும் காத்திருந்தனர். தனபதி, தர்மராவ், அர்ஜனா ராவ் ஆகியோர் மீது பாபா சீற்றமடைந்தார். விடுதி வளாகத்தில் மரத்தின்கீழ் அமர்ந்து, '**நெருப்புடன் விளையாட வேண்டாம் என்று சொன்னேன்! முழு நிகழ்ச்சியையும் ரத்து செய்துவிட்டு மும்பைக்குச் செல்கிறேன்**' என்று திரும்பத் திரும்ப கூறினார். தனபதி அடக்கமுடியாமல் அழுதுவிட்டார், பாபா அவரை மன்னித்தார், ஆனால் அவர் அன்று இரவு நாடக நிகழ்ச்சியை ரத்து செய்தார்.

ஜனவரி 23ஆம் நாள் காலை தனபதி, தர்மராவ், சாஸ்திரி, அர்ஜனா ராவ், எடித்தா சதிராஜு ஆகியோரை அழைத்து பாபா ஒரு சிறப்பு நிகழ்ச்சியை நடத்தினார். பாபா பூமியில் வாழும் 56 இறை உணர்வை அடைந்த ஆத்மாக்களின் 'பிரதிநிதிகளாக' 56 நபர்களின் கால்களில் தலைவணங்கினார். விழாவின் முடிவில் டாக்கேயால் மனம் வருத்தி மொழியும் 'இரங்கல் பிரார்த்தனை' வாசிக்கப்பட்டது.

டாக்டர் தேஷ்முக் ராஜமுந்திரியில் குழுவுடன் இணைந்தார். மேலும், பாபா சில தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்களை பயணத்தில் தன்னுடன் இணைந்திருக்கச் செய்தார். முரளீதர் என்ற சிறுவன், ஜகத் குமார் (கலெக்டர் வி. வி. நாராயண ராவின் மகன்), தனபதியின் இரண்டு மகன்கள், மேலும் புக்கார் ஹமிர்பூரிலிருந்து அழைத்த வந்த ஷர்மா, ஸிங் என்ற இரண்டு சிறுவர்கள் அனைவரும் குழுவுடன் ஒன்றாக இருந்தனர்.

ராஜமுந்திரியில் காலை 9.00 மணிக்கு 3,000க்கும் மேற்பட்டோர் தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். வழக்கம் போல, பாபாவின் பாதங்களைத் தொடக்கூடாது என்று கூட்டத்தில் அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டாலும், தரிசன வேளையில், ஒரு வாலிபச் சிறுவன், கண்களில் நீர் வழிய, அழுகையை அடக்க முடியாமல், பாபாவைப் பற்றிக்கொண்டான். சிறுவன், "உங்கள் பாதங்களைத் தொட என்னை அனுமதிக்காவிட்டால், உங்களிடமிருந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டேன்" என்றான். பாபா அவனைத் தனது பாதங்களுக்கு அருகில் அமரும்படி சைகையால் தெரிவித்து, பிரசாதத்தை அவன் வாயில் ஊட்டினார். பாபா, பிரசாதத்தை விநியோகிக்கும் வேளையில் சிறுவன் தொடர்ந்து அழவே, இறுதியாக, அவனை அழைத்துச் செல்லும்படி புக்காருக்கு சைகையால் தெரிவித்தார். அவர் ஒரு குழந்தையைப் போல் அவனைத் தூக்கி, தோளில் வைத்தாலும், சிறுவன் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தான். அலோபா, புக்காரிடம் அவனை விட்டுவிடுமாறி கூறி, பாபாவின் காலில் விழுந்தார். பாபா அவரை சிறிது நேரம் அணைத்துக்கொண்டார். சிறுவன் மிகவும் அழுதான், சம்பவ இடத்திலேயே உயிரைத் துறந்துவிடுவான் என நினைத்தார் புக்கார்!

இறுதியாக, புக்கார் சிறுவனை அழைத்துச் சென்று, அமைதிப்படுத்த லேசாக அவனது உடலை வருடத் தொடங்கினார். மாலையில் பாபா சிறுவனைப் பற்றிக் கேட்டபோது, அவன் நன்றாக இருப்பதாக புக்கார் கூறினார்.

**"அவனை என்ன செய்தீர்கள்?"** என்று பாபா கேட்டார்.

அதற்கு புக்கார், "நான் அவனை இதமாக வருடிய வேளையில், அவன் சுயநினைவுக்குத் திரும்பினான்" என்று பதிலளித்தார். பாபா, காடேக்கரை அழைத்து, புக்காரிடம் அதைச் செய்து காட்டுமாறு கூறினார். ஆனால் புக்கார் அதைச் செய்ய முயன்றபோது, மிகவும் கூச்ச சுபாவமுள்ள காடேக்கருக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. பாபாவே இதைப் பார்த்து சிரித்ததில், அவர் முகம் சிவந்தது.

ராஜமுந்திரியில் தர்மாராவ், ஜோதி பிரகாஷ், கவுதமை ஜீவக் அருங்கா மற்றும் குர்ரால கிருஷ்ணா ராவ் (தர்மராவின் மாமனார்) ஆகியோரின் இல்லங்களுக்கு பாபா விஜயம் செய்தார். தர்மராவ் இல்லத்தில் அவரது மகள்கள் பாபாவுக்காக நடன நிகழ்ச்சியை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து பாபா ஏலூருக்குச் செல்வதற்காக ரயில் நிலையம் சென்றார். 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்று முழக்கமிட்ட அன்பர்களின் கூட்டம் அங்கு நிரம்பி வழிந்தது.

மதியம் 3:30 மணிக்கு பாபா புறப்பட்டுச் சென்றார். அவரை ஒரு கணம் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த பல இடங்களில் ரயில், அதன் பாதையில் நிறுத்தப்பட்டது. ஒவ்வொரு நிலையத்திலும், கூட்டம் திருப்தி

அடையும் வரை, ரயில் சிறிது நேரம் தாமதமாகச் சென்றது. 'சில நாட்களில் ஆயிரக்கணக்கான அன்பர்களின் இதயங்களை அவர் ஆக்கிரமித்தார்!' என்று காலம் குறிப்பிட்டது. 'அவரது ஒரே பார்வை அவர்களின் இதயங்களில் நெருப்பை மூட்டவும், காலங்காலமான கேள்விகளுக்கு பதிலளிக்கவும் போதுமானது!'

1953, ஜனவரி 23 வெள்ளியன்று மாலை 6:30 மணிக்கு, பாபா, ஏலூருக்கு வந்தார். அவரை வரவேற்க ஏராளமான கூட்டம் ரயில் நிலையத்திற்கு வந்து 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று எழுப்பிய முழக்கம் ரயிலையே அதிரவைத்தது. மகிழ்ச்சி ஆரவாரம் செய்வது தெய்வீக மதுபானத்தின் குரல், அழுவதும் அதுவே, நடனமாடி பாடுவதும் அந்த மதுவே என்பதைக் காலம் அறிந்துகொண்டது!

ரங்காராவ், ஆர்.வி.ராமராவ் நாயுடு, பங்கிடிகூடம் மஹாராஜா, டாக்டர் கனகதாண்டி, கட்டா சுப்பா ராவ், கே.நாராயணராவ் ஆகியோர் பாபாவிற்கு மாலை அணிவித்தனர். பின்னர் அவர் அலங்கரிக்கப்பட்ட காருக்கு அழைத்துச் செல்லப்பட்டார், மேலும் பிரபஞ்சத்தின் இறைவனை ஏலூரு நகரம் முழுவதும் அவரது அனைத்து சிறப்பிலும் அணிவகுத்து, ஒரு நீண்ட ஊர்வலம் பின்தொடர்ந்தது. கட்டா சுப்பா ராவின் பெரிய தோட்டத்தில் பாபாவுடன் குழு தங்கியது. பாபாவுக்கு ஒரு சிறிய அறையும், இதர அனைவருக்கும் ஒரு கூடாரமும் அமைக்கப்பட்டிருந்தது. இயல்பிலேயே எளிமையான மனிதர் கட்டா சுப்பாராவ் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

மறுநாள் காலை, பாபா ஏழு ஏழைகளுக்கு சேவை செய்து, பூபதி ராவ் என்ற சிறுவனின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஏழு ரூபாயைப் பிரசாதமாக வழங்கினார்.

ஏலூருலிருந்து, பாபா சில வேலை நிமித்தம் டானை மீண்டும் மெஹராஸாத்துக்கு அனுப்பினார்; அதே நாளில், பால் நாத்து குழுவில் வந்திணைந்தார்.

அன்று காலை கோலி விளையாட பாபா விருப்பம் தெரிவித்ததும், மண்டலியில் பத்து அல்லது பன்னிரெண்டு பேர் அதில் கலந்து கொண்டனர்; பாபா ஏழு பளிங்கு கோலிகளை ஒரே வீச்சில் அடித்தார். அரை மணி நேரம் ஆட்டம் நீடித்தது. வரவேற்புக் குழு உறுப்பினர்கள், பாபா, பளிங்கு கோலிகளுடன் விளையாடுவதைக் கண்டு வியப்படைந்தனர்; ஆட்டம் முடிந்ததும் அவர் குறிப்பிட்டார்: **"பல ஆண்டுகளுக்குப் பிறகு, நான் மீண்டும் கோலி விளையாடினேன். ஆனால் உண்மையில், நான் பிரபஞ்சத்துடன் இந்த விளையாட்டை விளையாடி வருகிறேன்; ஒருமுறை கூட குறி தவறவில்லை!**

**"நான் சிறியவர்களில் சிறியவராகவும், பெரியவர்களில் பெரியவராகவும் இருக்கிறேன். இது எனது உண்மையான அனுபவம்.**

**முழுமையான தூய்மையை அடைந்த ஒருவர், நானே 'அனைவரும்' என்பதை அறிவார்.**

**"நாம் நேர்மையாக இருக்க வேண்டும் என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். குறைந்த அளவிலான பாசாங்குத்தனமும்** (உண்மையில்) **அளவிறுதியற்ற பாபாவை அடித்து துரத்துகிறது. எனவே, கடவுளை நேசிப்பதில் இத்தகைய நேர்மைக்கு எனது ஆசிகள்."**

அன்று மதியம் ஏலூரில் சர்.சி.ஆர்.ரெட்டி கல்லூரி மைதானத்தில் மிகப் பெரிய வெகுஜன தரிசனம் நடந்தது. அக்கம்பக்கத்தில் வாழும் கிராமவாசிகள் அதிக அளவில் வருகை தந்தனர்; இது ஸாவ்னேரில் நடந்த திருவிழா காட்சியை பாவ் கல்சூரிக்கு நினைவூட்டியது. பேருந்துகளிலும், நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிகளிலும் மக்கள் ஒன்று திரண்டனர். மக்கள் கூட்டம் ஏறக்குறைய 25,000 என மதிப்பிடப்பட்டது.

நான்கு மணியளவில் பாபா கூடாரத்திற்குள் நுழைந்ததும் அனைவரும் எழுந்து நின்று, மீண்டும் அமர்ந்ததும், பாபா இந்தச் செய்தியை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**உங்கள் அனைவரின் மத்தியிலும் இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்னையும் உங்களில் ஒருவனாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஏழைகளில் ஏழை மற்றும் பணக்காரர்களில் பணக்காரன். உங்கள் ஒவ்வொருவருக்கு உள்ளும் எல்லையற்ற சக்தி, ஞானம், ஆனந்தம், அமைதி ஆகியவற்றின் ஆதாரம் உள்ளது. உங்களுக்குள் எல்லையற்ற சக்தி இருந்தும், நீங்கள் உதவியற்றவர்களாக உணர்கிறீர்கள்; எல்லையற்ற ஆனந்தத்தை உங்களுக்குள் வைத்திருந்தும், நீங்கள் துன்பமாக உணர்கிறீர்கள் எனென்றால், அதற்கு அறியாமைதான் காரணம். மேலும் அறியாமையை அகற்ற, ஏக இறைவனை நேசிப்பதே ஒரே வழி. நீங்கள் உண்மையாகவும், நேர்மையாகவும், தீவிரமாகவும் நேசித்தால், நீங்கள் அவரை உங்களுக்குள் காண்பீர்கள்.**

**இந்த அன்பை தெய்வீகமாக அடைய எனது ஆசிகளை வழங்குகிறேன். உங்களில் ஒருவரேனும் கடவுளை நேசிக்க வேண்டிய அளவுக்கு அன்பு செலுத்தினால், நான் இங்கு வந்ததன் நோக்கம் நிறைவேறியதாக இருக்கும்.**

ஏலூரு வழக்கறிஞர் சங்க உறுப்பினர் வரவேற்புரை வழங்கினார். டாக்கே பாபாவின் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' மற்றும் 'ஆன்மீக சுதந்திரம்' பற்றிய செய்திகளை வாசித்ததைத் தொடர்ந்து தரிசனமும், பிரசாதம் விநியோகமும் தொடங்கியது. சுமார் மூன்று மணி நேர தரிசனத்திற்குப் பிறகு பாபா தனது இருப்பிடத்திற்குச் சென்றார்.

1953, ஜனவரி 25 ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு, குழுவினர் அறிவுறுத்தியபடி பாபாவின் அறையில் கூடினர். **"நேற்று இரவு எனக்கு தூக்கம் இல்லை,"** என்று அவர் கூறினார். பாபா ஏழைகளின் குடிசைகளுக்குச் செல்ல விரும்பினார், அவர்கள் அவரை அழைக்க விரும்பினர், ஆனால் அந்த அளவுக்கு தைரியம் இல்லை. இந்த விஷயத்தை உள்ளடக்கிய விவாதத்தின் முடிவில் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"நான் எனது தன்னடக்கத்தைக் காட்டுவதற்காக அங்குச் செல்லவில்லை. எல்லோரிலும், எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன், அனைவரின் இறுதி இலக்காகவும் இருக்கிறேன். அப்படியானால், இந்த வருகையின் அவசியம்தான் என்ன? நான் ஏழைகளை நேசிக்கும் ஒரே காரணத்தால்தான்; இது உண்மை, இதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நான் ஏழைகளுக்காக இருக்கிறேன்"** என்றார்.

ஆந்திர மக்கள் மெஹர் பாபாவை வெறித்தனமாக நேசிக்கிறார்கள் என்று குழுவில் ஒருவர் கூறியபோது, உருது கவிஞர் ஜிகரின் இந்த வரிகளை பாபா மேற்கோள் காட்டினார்:

இப்போது, 'அன்பு' என்ற வார்த்தையின் உச்சரிப்பு மட்டுமே
என் இதயத்தை அச்சுறுத்த போதுமானது!
கடவுளே, 'அன்பு' எவ்வளவு நிறைவான அழிவைக் கொண்டுவருகிறது!

இதை பாபா விளக்கிக் கூறினார், **"ஜிகரின் இந்த வரிகள் மிகவும் அர்த்தமுள்ளவை. ஜிகர் இறை நிலையை அடைந்த ஆன்மாவும் அல்ல, ஆனால் கவிதைகளின் கற்பனை நயம் காரணமாக, சில நேரங்களில் அவர் சிறந்த ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார் - நிச்சயமாக, அது ஓர் அதிர்ஷ்டப் பேறு. ஆனால் ஹபீஸ் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல, இறை உணர்வை அடைந்த ஆன்மா.**

**"என்னைப் பொறுத்தவரை, அந்த அன்புக்கு நான் அஞ்சவில்லை, ஏனென்றால் நானே அந்த 'அன்பு'; அந்த அன்பின் பொறுப்பில் நான் இருக்கிறேன். இப்போது அன்பிற்குரியவர் தனது அன்பர்களுக்கு அஞ்சும் நேரம் வந்துவிட்டது!"**

உரையாடலின் தலைப்பை மாற்றி பாபா, **"நான் அவதார புருஷன். இப்போது சொல்லுங்கள், நான் அவதார புருஷன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"**

கயா பிரசாத் கரே, ராமாயணத்திலிருந்து சில ஈரடிக் கவிதைகளை மேற்கோள் காட்டி, அவை, மெஹர் பாபா, அவதார புருஷர் என அவரை நம்ப வைக்க போதுமானது என்று கூறினார். பாபா பதிலளித்தார், **"ஆனால் கலியுகத்தில்** (தற்போதைய யுகத்தில்) **பலர் சத்குருக்களாகவும் அவதாரங்களாகவும் தோன்றுவார்கள் என்றும் கூறப்படுகிறது. நான்தான்**

**உண்மையானவன், பொய்யும் புரட்டும் செய்பவன் அல்ல என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"**

'பாபாவைப் போல் அதிகாரபூர்வமாக எவரும் தன்னை அவதார புருஷர் என அறிவிக்கவில்லை' என்று ஒருவர் கூறினார்; எனவே, பாபா, அவதார புருஷராக இருக்க வேண்டும். "**ஆனால் இதையெல்லாம் நான் தெரிந்தே சொல்கிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்?**" என்று பாபா கேட்டார். "**முந்தைய அவதார புருஷர்களைப் பற்றி கற்றறிந்த பின்பு, நான் அதே பாணியை பின்பற்றலாம். எனவே அதிகாரபூர்வமான முறையில் சொல்வதிலும் எந்த ஆதாரமும் இல்லை.**

"**இன்று உலகில், கிழக்கிலும் மேற்கிலும், கலியுகத்தின் அவதாரம் என்று பறைசாற்றும் ஏறக்குறைய 70 பேர் உள்ளனர் - அவர்கள் அனைவருக்கும் கடவுள் உதவுகிறார்! எனவே 'நானே அவதார புருஷர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்ற கேள்விக்கு இன்னும் பதிலளிக்கப்படவில்லை.**"

பாப்பிராஜு, அவரது பல அற்புதமான அனுபவங்களை எடுத்துரைத்து, அவை, மெஹர் பாபாவை அவதார புருஷராக ஏற்றுக் கொள்வதற்குப் போதுமான ஆதாரம் என்று கூறியபோது, பாபா விரிவாக விளக்கமளித்தார்:

**இதுபோன்ற அனுபவங்கள் அனைத்தும், உங்கள் அன்பு மற்றும் நம்பிக்கையின் காரணமாக இருக்கலாம்; மேலும் இவை, நான் அவதார புருஷர் என்பதை நிரூபிக்கும் அளவிற்கு துல்லியதன்மை படைத்ததாக இருக்காது. நிச்சயமாக, என்னைப் பொறுத்தவரை, நானே அவதார புருஷர் என்ற அனுபவம் எனக்கு உள்ளது. ஆனால், நீங்கள் அனைவரும் எவ்வளவுதான் சொன்னாலும், நான்தான் அவதார புருஷன் என்பது உங்களுக்குத் தெரியும் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இல்லை. என்னை அவதார புருஷனாக அறிய, நான் என்னவாக இருக்கிறேனோ அதை அறிய, நீங்கள், என்னைப்போல் ஆகவேண்டும்!**

**ஒரு நாள் உபாஸனி மஹராஜ், நாங்கள் இருவரும் அவருடைய குடிலில் தனியாக இருந்த வேளையில், கூப்பிய கரங்களுடன் என்னிடம், "நீயே ஆதி சக்தி, அவதார புருஷர்" என்று பறைசாற்றினார். இப்போது, அவதார புருஷர், கடவுள் மற்றும் நீங்கள் அனைவரும் ஒன்று என்பது உண்மை என்றாலும், நீங்கள் செய்ய வேண்டியதாக நான் விரும்புவது எல்லாம், என்னை நேசிப்பதும், முழு நம்பிக்கையுடன் எனக்குக் கீழ்ப்படிவதும்தான். ஹாஃபீஸ் கூறுவது போல்:**

**ஓ ஹபீஸ்! எதற்கும் கவலைப்படாதே.**
**உனது குருநாதரின் அங்கியை மட்டும் பற்றிக்கொண்டு**
**அவரை வணங்கு.**

**எந்த சூழ்நிலையிலும் உனது பிடியைத் தளர விடாதே!**

**இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்த, ஐந்து அல்லது ஆறு ரயில் பெட்டிகள், ரயில் எஞ்சினுடன் இணைக்கப் பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். சிலவற்றில் தங்கம், சில பெட்டிகளில் வெள்ளி மற்றும் சிலவற்றில் மாட்டு சாணமும் உள்ளன. ஆனால் எஞ்சினுடன் ரயில் பெட்டிகளின் இணைப்பை ஊர்ஜிதம் செய்யும் வரை, அனைத்தும் பாதுகாப்பாக இருந்து, ஒரே இலக்கைச் சென்றடையும். ஆனால் இணைப்பு துண்டிக்கப்பட்ட அடுத்த கணமே, ரயில் பெட்டிகள் ஆங்காங்கே சென்றுவிடும்.**

**எனவே, உங்கள் எண்ணங்கள் நல்லது, தீயது என்பதைப் பற்றி கவலைப்படாதீர்கள். எல்லா எண்ணங்களும் மாயை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அங்கியின் முந்தானையை உறுதியாகப் பற்றிக்கொள்வது மட்டுமே உண்மையானது.**

புக்கார் ஒரு தீவிர, உணர்வுப்பூர்வமான உரையை நிகழ்த்தினார்; பாபா அதைப் பாராட்டி எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**அவதார புருஷர், அவதார புருஷரே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவதார புருஷரைப் பொறுத்தவரை, கடவுள் மனித வடிவத்தை எடுக்கிறார் - அதாவது, கடவுள் மனித வடிவில் பூமியில் 'இறங்கி வருகிறார்'. ஒரு சத்குருவின் மகிமை அளவிட முடியாதது, அவர் விஷயத்தில் மனிதன் கடவுளாக மாறிவிட்டார். அவதார புருஷர் பூமியில் இறங்கி வரும் போது, அவரைத் தாங்கி நிற்கும் ஐந்து சத்குருக்களும் உலகில் இருக்கிறார்கள். சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், பாபாஜான், நாராயண் மஹாராஜ் மற்றும் தாஜுதீன் பாபா ஆகிய ஐந்து சத்குருக்களும் என்னை எப்போதும் ஆதரித்தனர்.**

**சாய்பாபா பரிபூரணமான மனிதர், சத்குருக்களிடையே மிகவும் அரிதான வகையைச் சார்ந்தவர். பாபாஜான், குறிப்பிடத்தக்க வகையில், சத்குருக்களின் மாமன்னராக (ஷஹேன்ஷா) இருந்தார்.**

**எனவே, முடிவில்லாத காலத்திலிருந்து என்னைத் தாங்கும் ஐந்து பரிபூரண குருநாதர்கள் உள்ளனர். ஒவ்வொரு யுகத்திலும், நான் வரும் வேளையில், அவர்கள் என்னைத் தாங்கிக் கொள்கின்றனர். சாய்பாபா என்னை, நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே ஆக்கினார்; நான் என்னவாக இருக்கிறேன் என்பதை பாபாஜான் என்னை உணர வைத்தார்; உபாஸனி மஹாராஜ் நான் என்ன என்பதை எனக்கு உணர்த்தினார், என்னை அறியவைத்தார். இவ்வாறு, நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே இருக்கிறேன்!**

**எனவே, இந்த மூன்று பரிபூரண குருநாதர்களுக்கும் நாம் இப்போது தலைவணங்குவோம்.**

அதைத் தொடர்ந்து பாபா வராண்டாவில் வைக்கப்பட்ட மூன்று சத்குருக்களின் புகைப்படங்களை வணங்கினார்.

அன்று காலை, கீழ்ப்படிதலைப் பற்றியும் பாபா விளக்கினார்:

**ஹ:ஃபீஸ் கூறுகிறார்: "அன்புக்கும், ஏக இறைவனுடனான ஐக்கியத்திற்கும் ஆசைப்படாதீர்கள், ஆனால் அன்பிற்குரியவரின் விருப்பத்தை மட்டுமே நாடுங்கள்."**

**உள்ளடக்கத்துடன் கீழ்ப்படிபவர்களிடம் தெய்வங்களும், தேவதைகளும் கூட மகிழ்ச்சி அடைகின்றனர். எனக்குக் கீழ்ப்படிந்து, என்னை ஒரு சத்குருவாகவோ அல்லது அவதார புருஷராகவோ கருதுவது, என்னை நேசிப்பதாகாது, ஆனால் ஒருவரின் சொந்த எதிர்பார்ப்புகளை நேசிப்பதாகும். வெகுமதியை எதிர்பாராமல் எனக்குக் கீழ்ப்படிபவர்கள் உண்மையிலேயே கீழ்ப்படிந்து என்னை நேசிக்கிறார்கள். மேலும், மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியுடனும் எனக்குக் கீழ்ப்படிந்து, விரும்பி களிப்படைபவர்கள், நானே அவர்களின் துதி பாடும் அளவிற்குத் தகுதியானவர்கள்!**

நிகழ்ச்சியின் இறுதியில், 1948ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட மகாத்மா காந்தியை பாபா பாராட்டினார்: "100 **சதவிகிதம் உண்மையுடனும் நேர்மையுடனும் வாழ்க்கையை நடத்திய ஒரே மனிதர் மகாத்மா காந்தி. அவர் ராஜபுத்னா என்ற நீராவி கப்பலில் என்னை சந்தித்தபோது அவரிடமிருந்து, 'இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் அவர் என்னிடம் வர வேண்டும்' என்ற வாக்குறுதியை நான் பெற்றுக்கொண்டேன். அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றி, என்னிடம் வந்தார்."**

பாபாவும் மண்டலியும் வெளியே வந்து வராண்டாவில் அமர்ந்தனர். மணி ஒன்பது ஆனது. மக்கள் உள்ளே வந்து தரிசனம் செய்ய, தோட்டக் கதவுகளை அகலத் திறக்க பாபா கட்டளையிட்டார். காடேக்கர் ஆரத்தியை நிகழ்த்த, பாபா, கேஷவ் நிக்கமிடம் மெஹர் சாலிஸா'வை மொழியுமாறு கூறினார். உள்ளூர் பஜனைக் குழுவைப் போலவே, பாஸ்கர ராஜு ஒரு சில பாடல்களைப் பாட, இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா கூறினார்:

**இப்போது நான் கடவுள் மீதான அன்பைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கடவுளை நேசிக்க வேண்டும், கற்று அறியக்கூடாது. கடவுளை நேசிக்க வேண்டும், விவாதம் செய்யக்கூடாது. கடவுள் அறிவுக்கு அப்பாற்பட்டவர், எனவே அறிவுத் திறனால் அவரைப் பார்க்கவோ புரிந்துகொள்ளவோ முடியாது. இதயம் மட்டுமே அன்பின் வாசலை நெருங்க**

**முடியும். ஆகவே, மிகவும் ஏழ்மையான மனிதர்கள் மற்றும் மிகவும் கல்வியறிவற்றவர்கள் கூட அன்பின் மூலம் கடவுளைத் தங்களுக்குள் காணலாம். இந்த அன்புக்கு செல்வம், அதிகாரம், புகழ், கற்றறிதல் மற்றும் விழாக்கள் எதுவும் தேவையில்லை. நாம் கடவுளை நம் அன்பிற்குரிவராக நேசிக்க வேண்டும், இந்த அன்பு மிகவும் தீவிரமாக இருக்க வேண்டும், காற்று இல்லாமல் நம்மால் வாழ முடியாது என்பது போல, கடவுள் இல்லாமல், கடவுளின் அன்பு இல்லாமல் நாம் வாழ முடியாது.**

**ஆகவே, அறிவார்ந்த மாமனிதர்களைப் போலவே, அன்பின் மூலம் கடவுளை அறிய, தங்களுக்கும் சம உரிமை உள்ளது என்பதை ஏழை எளியவர்களும், படிப்பறிவற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும், அன்றாட வாழ்விலும், கடவுளை நேசிக்க முடியும் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். நீங்கள் எல்லா உலகக் கடமைகளிலும் ஈடுபட்டு, உங்களை உலகிலிருந்து பற்றற்ற மனநிலையில் வைத்துக் கொண்டு, செயல்பாடுகளின் பலனைக் கடவுளுக்கு அர்ப்பணித்தால், நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள்.**

**நீங்கள் உலகப் பொருட்களைப் பார்ப்பது போலவே கடவுளையும் நேசிக்கவும் பார்க்கவும் முடியும். எனவே வாழ்க்கையில் நம்பிக்கையுடன் இருங்கள், ஏனென்றால் நாம் அனைவரும் கடவுளை நேசிக்க வேண்டும், அவரை நம்முள் காண வேண்டும். உங்களில் சிலர் கடவுளை நேசிப்பதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கத் தேவையான இந்த அன்பிற்காக எனது ஆசீர்வாதத்தை உங்களுக்கு வழங்குகிறேன். நாம் அனைவரும் ஒன்று என்பதை நான் வலியுறுத்தி கூறுகிறேன். துன்பம், வறுமை, உதவியற்ற நிலை எது இருந்தாலும், நாம் கடவுளில் இருக்கிறோம். உங்கள் அனைவருக்கும் என் அன்பைத் தருகிறேன்.**

இதற்குப் பிறகு, பாபா ஒரு ஏழையின் கால்களைக் கழுவ விரும்பினார். **"இப்போது, நான் எல்லாவற்றிலும் என்னைக் கண்டாலும், இந்த ஏழை ஒருவரின் கால்களைக் கழுவி, அவரைத் தலை வணங்குவேன்,"** என்று அவர் கூறினார். பாபா அவருக்கும் சிறிது பணம் கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து அனைவரும் மதிய உணவுக்காகச் சென்றனர். பிற்பகல் 2:00 மணிக்கு அவர்கள் மீண்டும் ஒன்றுகூடி, உரையாடிக் கொண்டிருந்த வேளையில் பாபா, **"நீங்கள் எப்போதும் மாயையைப் பார்த்து சிரிக்கவும், கடவுளின் அன்பிற்காக அழவும் வேண்டும். ஆனால் கடவுளுக்காக அழும்போது, உங்கள் கண்ணீரை வெளிப்படுத்தி அவரை அவமதிக்கக் கூடாது. உங்கள் ஏக்கம் அதன் உச்சத்தை அடையும் போது, நீங்கள் அவருடன் ஒன்றாகிவிடுவீர்கள்"** என்று கூறினார்.

ரெட்டி கல்லூரி மைதானத்தில் அன்று மதியம் மீண்டும் ஒரு வெகுஜன தரிசனம் நடைபெற்றது. வழியில், பாபா ஓர் அரிசி ஆலைக்குச் சென்று, அதன் தொழிலாளர்களுடன் தரையில் அமர்ந்தார். "**நான் தொழிலாளர்களையும் ஏழை எளியவர்களையும் நேசிக்கிறேன்; நான் வழங்கும் பிரசாதத்தை, அன்புடன் எடுத்துக் கொண்டால், அது அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவியாக இருக்கும்**" என்று கூறி முடித்தார்.

கல்லூரி விழாவில் "மதம் மற்றும் அரசியல்" என்ற தலைப்பில் பாபாவின் செய்தியை டாக்கே வாசித்தார், தொடர்ந்து பாபா அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார்.

பாஸ்கர ராஜு பணியின் விடுப்பு காலம் முடிவடைந்ததால், தாடேபள்ளிக்கூடம் திரும்ப வேண்டியிருந்தது. பாபாவிடம் அனுமதி கோரியபோது, அவர் அதற்கு இணக்கம் தெரிவித்து, ஆனால் அவரை மீண்டும் அழைத்து, "**ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள்: என்மீது உள்ள உங்கள் அன்பை நான் அறிவேன். உங்களைப் போலவே இதர மக்களையும் என்னை நேசிக்க வைப்பது உங்கள் வேலை**" என்று கூறினார்.

1953, ஜனவரி 26 திங்கட்கிழமை காலை, மண்டலி மற்றும் குழுவினர் அவரது அறையில் கூடியபோது, பாபா ஒவ்வொருவரிடமும் நலம் விசாரித்து, பின்னர் அவர்களிடம் கூறியதாவது:

**நேற்றைய இரவை நான் மிகவும் கடினமாகக் கழித்தேன்; அதைப் பற்றி எனக்கும் கடவுளுக்கும் மட்டுமே தெரியும். என்னை நம்புங்கள், அது ஒரு நரகம்! இந்த வகையில் இது மூன்றாவது இரவு; இருந்தாலும் நான் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கலந்து கொள்கிறேன்.**

**இப்போது, தீவிரமாக இருந்து, நான் உங்களுக்கு வழங்கும் வழிமுறைகளை 100 சதவிகிதம் செயல்படுத்தவும். நான் இப்போது சொல்லப் போவது மிகவும் முக்கியமானது, ஆனால் அதைப் பற்றி என்னிடம் எந்தக் கேள்வியும் எழுப்ப வேண்டாம்:**

1. **ஆந்திர பிரதேசத்தில் சிலுவையில் அறையப்பட்டு அவமானப்படுத்தப்படும் எனது லீலை, ஒரு சதவிகிதத்தையும் எட்டவில்லை, ஏப்ரல் மாதத்தில் அது வெறித்தனத்துடன் வெளிப்படும்.**
2. **இன்று அதிகாலையில், எனது உடலை ஏப்ரல் மாதத்தில் துறப்பேன் என்று 99½ சதவிகிதம் உறுதியாக உணர்ந்தேன்; ஆனால் அரை சதவிகிதம் இருந்தால், இந்த உடல் இன்னும் பல ஆண்டுகளுக்கு வீழாது.**
3. **இப்போது, நீங்கள் ஒவ்வொருவரும், முடிந்தால், ஏப்ரல் இறுதி வரை அனைத்து காமச் செயலிலிருந்தும் விலகியிருக்க வேண்டும் என்று**

**நான் விரும்புகிறேன். முயற்சி செய்யுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்.**

4. **இன்றிரவு, எவரும் விழித்திருக்க வேண்டியதில்லை. நாளை இரவு, நான்கு சிறுவர்களைத் தவிர, நீங்கள் அனைவரும் விழித்திருக்க வேண்டும். இரவில் நீங்கள் பஜனை, கீர்த்தனைகள் செய்யலாம், ஆன்மீக விஷயங்களைப் பற்றி விவாதிக்கலாம், என்னைப் பற்றி பேசலாம் அல்லது கடவுளின் நாமத்தை உச்சரிக்கலாம் - எந்த வகையிலும் உங்களை ஈடுபடுத்தலாம் - ஆனால் செஸ் விளையாடுவது, அரட்டை இரண்டும் வேண்டாம். நாளை இரவு தூங்குபவர் வருந்துவார்.**
5. **மேலும் 27ஆம் தேதி இரவுக்குப் பின்னர், 28ஆம் தேதி காலை எட்டு மணிக்கு, இறுதி வாக்குமூலம் அளிக்க வேண்டும், அதைத் தொடர்ந்து, உங்கள் அனைவருக்கும் தலைவணங்குவேன்.**

இந்த விஷயங்களை எடுத்துரைத்த பின்பு, பாபா நிம்மதியடைந்து, புத்துணர்ச்சியுடனும், பிரகாசத்துடனும் காணப்பட்டார்.

தேஷ்முக், அம்ராவதி தரிசன நிகழ்ச்சிகளை காணொலியில் படம்பிடித்து, ஆந்திரா வந்தபோது பாபாவுக்கு அதைக் காட்ட விரும்பினார்; ஆனால், பாபா தனது அட்டவணையில் நேரம் இல்லாததால் தயங்கினார். **"உண்மையாக,"** அவர் கூறினார், **"தேஷ்முக் எனது சிறந்த மனிதர்களில் ஒருவர் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆனால் சில சமயங்களில் அவர் என்னை எரிச்சலூட்டுகிறார்!"**

தேஷ்முக், வெகு நாட்களாக பாபாவைப் பின்தொடர்ந்து, காணொளி படத்தைத் திரையிடுவதற்கான கருவியை வாங்கும்படிக் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் பாபா குறிப்பிட்டார், **"எனது தற்போக்கு ஆசைகளால் எண்ணற்ற பிரபஞ்சங்கள் திரைப்படங்களைப் போல் உருவாக்கியுள்ளன; அது எவ்வளவு நீண்ட முக்கியமான படம்! நான் இப்போது பார்க்க, இதைவிட வேறு என்ன படம் இருக்கிறது?"**

மேலும், **"இனிமேல் 'திரைப்பட கருவி' என்ற வார்த்தைகளைக் கூறினால், உங்கள் ஆடைகளைக் களைந்து, பனிக்கட்டி போல குளிர்ந்த ஏழு வாளி தண்ணீரை உங்கள்மீது ஊற்றுவோம்!"** என்று வேடிக்கையாக, கேலி செய்யும் பாணியில் பாபா எச்சரித்தார்.

உடனே அலோபாவை நோக்கி அவரிடம், தேஷ்முக்கின் வாயிலிருந்து 'திரைப்பட கருவி' என்ற வார்த்தைகள் வந்த அடுத்த கணமே, அவரது ஆடைகளைக் களைந்து, குளிர்ந்த நீரை அவர் மீது ஊற்ற வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார். மீண்டும் தேஷ்முக்கின் பக்கம் திரும்பி, **"இப்போது, நான் அலோபாவுக்கு என்ன உத்தரவு வழங்கினேன்?"** என வினவினார்.

'திரைப்பட கருவி' என்ற சொற்களைக் குறிப்பிடாமல் தேஷ்முக், பாபாவின் அறிவுறுத்தலைத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்த போது பாபா கூறினார், "**நீங்கள் என்ன வகையான டாக்டர்? நான் வழங்கிய உத்தரவை வார்த்தைக்கு வார்த்தை தவறாமல் சொல்லுங்கள்.**"

"நான் அப்படிச் செய்தால், சிரமத்திற்குள்ளாவேன், அலோபா தண்ணீரைத் தயார் செய்ய வேண்டியது வரும்," என்று தேஷ்முக் பதிலளித்தார். இறுதியில், பாபா காணொளி திரைபடத்தைப் பார்க்க ஒப்புக்கொண்டார், அன்று காலை அந்தப் படம் திரையிடப்பட்டது.

பிற்பகலில் பாபா குழுவுடன் பல வீடுகளுக்கு விஜயம் செய்தார். ஒவ்வொரு வீட்டிலும், காடேக்கர் ஆரத்தியை நிகழ்த்திய போது, பாபா தரையில் அமர்ந்தார். பின்னர் அவர் விருந்தோம்புநர் அனைவருக்கும் பிரசாதமாக, பழங்களை வழங்கினார். ஆரத்தி நிறைவடைந்ததும், அனைவரும் கார் மற்றும் பேருந்துகளில் அவரவர் இருக்கைகளை மீண்டும் ஆக்கிரமித்தனர். பாபா பல்வேறு பகுதிகளில் அமைந்த அரை டஜன் ஏழைகளின் குடிசைகளுக்கும் விஜயம் செய்தார்.

சுப்ரமணியம் சாஸ்திரியின் இல்லத்தில், பாபாவின் கூட்டங்கள் தவறாமல் வழக்கமாக நடத்தப்பட்டு வந்த நிலையில், பாபா, நாற்காலி ஒன்றில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார், அந்த நாற்காலியில் அதுவரை அவரது புகைப்படம் மட்டுமே வைக்கப்பட்டிருந்தது. பாபா, அதற்கு இணங்கி நாற்காலியில் அமர்ந்ததும், சாஸ்திரியின் வீட்டுச் சுவரை அலங்கரித்த, ரங்கா ராவ் வரைந்த அவரது பெரிய உருவப்படத்திற்கு முன்பாக, தனது ஆர்த்தியை நிகழ்த்துமாறு பாபா, சாஸ்திரியிடம் கூறினார். பாபா, படத்திற்கு முன் கூப்பிய கைகளுடன் நின்று ஆரத்தியில் இணைந்தார்.

பாபாவை மகிழ்விக்கும் ஒரு சம்பவம் அங்கே நடந்தது. சுப்ரமணிய சாஸ்திரியிடம் பாபா, "**உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?**" என வினவினார்.

"ஏழு!" என அவர் பதிலளித்து, குழந்தைகளை பாபாவிடம் அழைத்து வந்து, ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தினார்; ஆனால், பாபாவால் மிகவும் ஆழமாக ஈர்க்கப்பட்ட சாஸ்திரி, அந்த நேரத்தில் குழந்தைகளின் பெயர்களைக் கேட்டபோது, அவரால் நினைவு கூர முடியாமல், ஒவ்வொரு முறையும் திரும்பி தனது மனைவியைக் கேட்க வேண்டியிருந்தது. இது பாபாவை சிரிப்புடன் மகிழச் செய்தது.

அன்று மாலை, சுமார் ஐந்து மணியளவில், பாபாவின் அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் கடந்த மூன்று மாதங்களில், மிகப்பெரிய வெகுஜன தரிசன நிகழ்ச்சி, ஏலூரில் 'ராம் கோட்டி' மைதானத்தில் நடந்தது. ஏறக்குறைய 60,000 பேர் என மதிப்பிடப்பட்ட மாபெரும் கூட்டம் ஒன்று கூடியிருந்தது. கண்ணுக்கு எட்டிய

தூரம் வரை, கடல் அலை போலத் தோன்றியது. ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாக அணிவகுத்து, கூட்டத்தை கட்டுக்குள் வைக்க போலீசார் முயன்றனர். பாபா ஓர் இயந்திரம் போல் இரு கைகளாலும் இரவு 7:30 மணி வரை தொடர்ந்து பலருக்குப் பிரசாதம் வழங்கினார். மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த போதிலும், வரிசைகளில் அமைதியான முறையில் சென்றதால், எந்தவித இடையூறும் ஏற்படவில்லை.

நிகழ்ச்சி நடந்த முழு நேரமும், ஹமிர்பூரைச் சேர்ந்த ராய்ஸாகேப் ராமஷங்கர் என்பவர் பாபாவுக்கு அருகில் நின்றுகொண்டு, பாபா பிரசாதம் வழங்குவதற்கு முன்பு, பக்தர்கள் கொண்டு வரும் பல்வேறு நிவேதனங்களை (பழம், தேங்காய், இனிப்புகள், பூக்கள் மற்றும் பரிசுகள்) சேகரிப்பதைப் பொறுப்பாக செய்து வந்தார். ஆனால் அந்த நாளின் முடிவில் அவரைக் கண்டுகொள்ள முடியவில்லை, அவர் அந்தப் பொருட்களால் சூழப்பட்டு முழுவதுமாக மூழ்கடிக்கப்பட்டிருந்தார். ராமஷங்கர் அன்றைய அனுபவத்தால் திக்குமுக்காடிப் போனார், அவர் யார் என்பதை அறிய முடியாத நிலையில், அவரை அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. பாபா அவரை ஆறுதல் படுத்தினார், ஆனால் அவர் பாபாவின் மீது கொண்ட அன்பால் சுயநினைவை இழந்து, இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆனது.

தரிசனம் நிறைவடைந்து சுப்பா ராவின் இல்லத்திற்குத் திரும்பிய பாபா, **"ஆன்மீக ரீதியில் வறண்டு போன நதிகளில், தெய்வீக அன்புக்கடலின் வெள்ளம், கரைபுரண்டு ஓட வேண்டிய நேரம் வந்துவிட்டது! ஆயிரக்கணக்கான மக்களுக்கு நான் தரிசனமும் பிரசாதமும் வழங்குவதை நீங்கள் பார்க்கும் போது, இது இயந்திரத்தனமானதாகவோ அர்த்தமற்றதாகவோ நடப்பதில்லை. இவைதான், எனது அன்பு, மனிதகுலத்தை நோக்கிப் பாயும் வற்றாத நதிகள்"** என்று எடுத்துரைத்தார்.

அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் தரிசன சுற்றுப்பயணம் முழுவதும், பாபா உடல்வலி மற்றும் தூக்கமின்மை பற்றி பலமுறை புகார் செய்தார். பத்து நாட்களுக்கு முன்பு, தாடேபள்ளிக்கூடம் வந்ததிலிருந்து, அவருக்கு சளி மற்றும் தொண்டை வலி இருந்ததால் இரவில் சரியாக ஓய்வெடுக்க முடியவில்லை.

ஜனவரி 27ஆம் நாள் காலை, அந்தக் குழுவினர் பாபா முன்னிலையில் கூடியபோது, **"என் இதயத்தில் கோடிக்கணக்கான துவாரங்கள் துளைக்கப்படுகின்றன" என்று பாபாஜான் அடிக்கடி கூறி வந்த அதே உணர்வு நேற்று இரவு எனக்கும் ஏற்பட்டது.**

**"எனது அனல் பறக்கும் சுதந்திர வாழ்வால் நான் உண்மையில் முற்றிலும் உள்வாங்கப்படுவேன் எனத் தோன்றுகிறது. அதாவது, ஏப்ரல் மாதத்தில், நான் உடலைக் கைவிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று நினைக்கிறேன். இந்த மாதத்தில், நான் எங்குச் சென்றாலும், அனைத்து**

**மண்டலியும் என்னுடன் இருப்பார்கள். மார்ச் மாதத்தில், நான் டெஹ்ரா டூன் அல்லது ஹைதராபாத்தில் தங்கி இருப்பேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் வேளையில், ஆன்மீக ரீதியில் வறண்டு போன நதிகளில் தெய்வீக அன்புக்கடலின் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்."**

பாபா முழுக் குழுவையும் அனுப்பிவிட்டு, ஏலூரு மெஹர் மையத்தின் சுமார் 20 தொழிலாளர்களைத் தனது அறைக்கு அழைத்து, அவர்களிடம், **"நான் கடவுள் என்று எனது தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன்"** என்றார்.

**"நான் கடவுள் என்று எனது தெய்வீக அதிகாரத்துடன் பறைசாற்றுகிறேன்"** என்று அவர் தனது அறிவிப்பை மீண்டும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

அதற்குப் பிறகு, **"நான் மனித உருவில் வந்த கடவுள், நான் மட்டுமே உண்மையானவன், இதர அனைத்தும் மாயை. உங்கள் ஆழ் இதயத்திலிருந்து என்னை நேசியுங்கள்"** எனக் கூறி முடித்தார்.

பாபா, பின்னர் அருகிலிருந்த இரண்டு கிராமங்களுக்கு தரிசனம் வழங்க, புறப்பட்டுச் சென்றார். வழியில், காரை நிறுத்திவிட்டு, குதிரையுடன் மர நிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வண்டிக்காரரை அணுகினார். இந்த நபர் பாபாவின் தரிசனத்திற்காக சுப்பா ராவின் தோட்டத்திற்கு அன்பர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்தார்; ஆனால் அவர் ஒரு முஸ்லீம் ஆகையால், ஒரு முறை பக்தர் ஒருவர் மெஹர் பாபா 'குதா' (கடவுளுக்கான பாரசீக பெயர்) என்று தெரிவித்தபோது அவர் சீற்றமடைந்தார். இப்போது பாபா அவர் முன் நின்று கொண்டிருந்தார்.

பாபா ஏற்கனவே காலை உணவை முடித்திருந்தாலும், அந்த மனிதரிடம் (எரச் மூலம்) அவர் பசியாக இருப்பதாகவும், அவருடைய சொற்பமான உணவில் பங்கெடுக்க விரும்புவதாகவும் கூறினார். அந்த மனிதனின் இதயம் புண்பட்டிருப்பதை அறிந்து, ஒரு கட்டத்தில் பாபா, அவரிடம் **'நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'** என்று கேட்டதற்கு, அந்த முஸ்லீம் பதிலளித்தார், "பாபா, உங்களைப் பின்பற்றுபவர்கள் உங்களை, 'குதா' (கடவுள்) என்று கூறுகிறார்கள்."

வார்த்தைகளால் விளையாடி, பாபா இந்தி மொழியில் பதிலளித்தார்: **"மே குதா ஹூம்; இஸ்லியே, மே கூத் ஆயா ஹூம்," (அதாவது, "நான் கடவுள்; அதனால்தான், நானாகவே உங்களிடம் வந்துள்ளேன்".)** அந்த மனிதர் மிகவும் மனம் நெகிழ்ந்து, தரையில் விழுந்து வணங்கி, பாபாவின் முன் சிறிது நேரம் அழுதார்.

அன்று பிற்பகலில், வட இந்தியாவிலிருந்து வந்த அன்பர்கள் திரும்பிச் செல்ல இருந்ததால், பாபா அவர்களுக்கு ஏலூரில் நேர்காணல்களை வழங்கினார். பலர் தங்கள் பிரிவை நினைத்து வருத்தமடைந்தனர். பாபா அவர்களுக்கு ஆறுதல் கூறினார், **"உங்களுக்கு என் மீது அன்பு இருந்தால், தொலைதூரமும், என்னிடமிருந்து விலகி இருப்பதும் ஒரு பொருட்டல்ல. நான் உங்களில் இருக்கிறேன், மேலும் எனது உலகளாவிய மனம் எவருக்கும், எந்த நேரத்திலும் எதையும் வழங்க முடியும். இந்த வழிமுறைகளை மட்டும் பின்பற்றுங்கள்: என்னை நேசியுங்கள்; எவரையும் ஏமாற்றாதீர்கள்; தவறு செய்யாதீர்கள். நான் உங்களுடன் இருப்பேன்."**

அன்றிரவு மண்டலி அனைவரிடம் முழு இரவும் விழித்திருக்குமாறு பாபா நினைவூட்டினார். **"ஜாக்கிரதையாக இருங்கள், தூங்கிவிடாதீர்கள்"** என்று சைகையால் தெரிவித்தார்.

நேர்காணலுக்குப் பிறகு, பாபா மேலும் பல வீடுகளுக்குச் சென்றார். மெஹர் பாபா விஜயம் செய்யவிருந்த நபர்களின் பெயர்களை ரங்கா ராவ் வாசித்தார். பாபா, புறப்படுவதற்காக எழுந்து நின்று, **"ஆரம்பத்தில், ஏலூரில் அதிகபட்சம், 19 வீடுகளுக்குச் செல்லப் போவதாகக் கூறப்பட்டது, ஆனால் இப்போது அந்த எண்ணிக்கை விரைவில் தொண்ணூறைத் தொட்டுவிடும் போலத் தெரிகிறது!"** என்று வேடிக்கையாகக் கூறினார்.

முதன்முதலில் மாவட்ட நீதிபதி கிருஷ்ணராவ் நாயுடுவின் பங்களாவுக்குச் சென்றபோது, பாபா 'நேர்மை' பற்றிய செய்தியை வழங்கினார்:

**நான் சமீபகாலமாக 'நேர்மை'யைக் குறித்து வலியுறுத்தி வருகிறேன். நாம் கடவுளை நேர்மையாக நேசித்தால், நாம் அவருடன் ஒன்றிணைவோம். நேர்மையின்மையும் போலித்தனமும் இன்று போல் உலகில் என்றும் நிலவியதில்லை. நமது சிந்தனைகளிலோ, சொற்களிலோ அல்லது செயலிலோ குறைந்தபட்ச பாசாங்குத்தனம் தவழ்ந்தால் கூட, நம் அனைவருக்குள்ளும் நிலைகொண்டிருக்கும் ஆன்மாவாகிய கடவுள், தன்னை மறைத்துக் கொள்கிறார்.**

**பாசாங்குத்தனம் என்பது லட்சக்கணக்கான தலைகள் கொண்ட நாகப்பாம்பு. துறவிகள் என்று அழைக்கப்படுபவர்களில் பலர் இன்று 'நேர்மையாக இருக்க வேண்டும், பொய்யும் புரட்டுமான பாசாங்குத்தனம் ஆகாது' என்று மக்களுக்குச் சொல்கிறார்கள், ஆனால் அவர்கள் தங்களுக்குள் நேர்மையற்றவர்களாக இருக்கிறார்கள். 'நான் உங்கள் அனைவரிலும் இருக்கிறேன்' என்று தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன், நீங்கள் கடவுளை நேர்மையாக நேசித்தால், அவரை எல்லா இடங்களிலும் காண்பீர்கள்.**

**மேலும் நினைவில் கொள்ளுங்கள், உங்களால் கடவுளை நேசிக்கவும், தூய்மையான வாழ்க்கையை வாழவும் முடியாவிட்டால், குறைந்த பட்சம் நீங்கள் கடவுளை நேசிப்பதைப் போல் ஒரு வெளித்தோற்றத்தை உருவாக்காதீர்கள், ஏனென்றால் பாசாங்குத்தனமான புனிதர்களை விட மோசமான அயோக்கியர்கள் சிறந்தவர்கள்!**

நீதிபதியின் வீட்டை விட்டு வெளியேறும் முன்பு, பாபா, விஜயம் புரியும் வீடுகளின் பட்டியலில் நீதிபதியின் பெயர் உள்ளதா என்று சாதாரணமாகக் கேட்டார். அது இல்லை என்று சொன்னதும், "**சரி, பரவாயில்லை. நீதிபதி என்னை நேசிக்கிறார்; என்னை நேசிப்பதுதான் முக்கியம், வீட்டுக்குச் செல்வது அல்ல**" என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பிறகு, சுப்பா ராவிடம் பாபா, ஓய்வெடுக்க விரும்புவதாகக் கூறினார். அவர்கள் தோட்டத்தை அடைந்த வேளையில், மாவட்ட ஆட்சியாளரும் அவரது குடும்பத்தினரும் பாபாவின் தரிசனத்திற்காகக் காத்திருந்தனர். ஆட்சியாளர் பாபாவுக்கு அன்புடன் மாலை அணிவித்தபோது, பாபா அவரைத் தழுவினார். பாபா உடனடியாக, தனது குழுவை மீண்டும் பேருந்துகளில் அழைத்துச் சென்று, இதர வீடுகளுக்கும் விஜயம் செய்தார்.

அவர்கள் திரும்பி வந்ததும், இரவு முழுவதும் விழித்திருக்கக் கூறி, குழுவை நினைவுபடுத்தினார். மண்டலி மற்றும் ஆந்திரா அன்பர்கள் தத்தமது கதைகளைப் பகிர்ந்த வண்ணம், அவரது அறிவுறுத்தல்களை நிறைவேற்ற முடிந்தது. குஸ்தாஜி, அவரது வாழ்க்கையின் சுவாரஸ்யமான கதைகளையும் சம்பவங்களையும் விவரிப்பதன் மூலம் அனைவருக்கும் பெரும் உதவியாக இருந்தார். குஸ்தாஜியின் கை சைகைகளையும் அடையாளங்களையும் பெண்டு விளக்கினார்.

மறுநாள் காலை ஆறு மணிக்கு அனைவரும் நீராடிய பிறகு, பாபாவின் அறையில் குழு கூடியது. ராஜமுந்திரியில் செய்தது போலவே, இறை உணர்வை அடைந்த 56 ஆண்களையும் பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 56 நபர்களின் கால்களைத் தொட்டு, தலைவணங்கினார்.

ராம்ஜூ காய்ச்சலால் அவதிப்பட்டதால், அவர் அங்கு வராதது, பாபாவை மிகவும் அதிருப்திக்குள்ளாக்கியது, "**இத்தனை ஆண்டுகள் என்னுடன் இருந்தீர்கள், இன்று நீங்கள் எனக்குக் கீழ்ப்படியவில்லை. என்னால் உங்களை மன்னிக்க முடியாது**" என்று அவர் கடிந்து கொண்டார். விழா நிகழ்ச்சிக்கான 56 நபர்களில், பாபா அவரை சேர்க்கவில்லை. மனம் வருந்தி இரங்கும் பிரார்த்தனையை மொழிந்த பின்பு, பாபா குழுவிடம் வினவினார், "**நான் அவதார புருஷர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?**"

ஒவ்வொருவரும் அவரவர் தனிப்பட்ட கருத்தை வெளிப்படுத்தினர், ஆனால் பாபா அவர்களுக்கு விளக்கினார், "**அவதார புருஷராக வருகை தந்த**

**ராமா, கிருஷ்ணா மற்றும் பிற அவதார புருஷர்களின் அடிப்படையில் நீங்கள் என்னை அறிய முடியாது. புத்தியின் மூலமாகவும், அவதார புருஷராக நீங்கள் அவரை அறிய முடியாது. ஆனால் நான் 'அவதார புருஷர்' என்று உங்களுக்குக் கூறும் அந்த அடிப்படை உறுதிப்பாடு ஒன்றே போதுமானது.**

**"என்னை சந்திப்பது உங்களுக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். அப்படி ஒரு வாய்ப்பு தெய்வங்களுக்கும், தேவதைகளுக்கும் கூடக் கிடைப்பதில்லை!"**

கட்டா சுப்பா ராவ் தனது தோட்டத்தில், ஒரு மையத்தை நிறுவ விரும்புவதாகக் கூறியதற்கு பாபா ஒப்புக்கொண்டார். எனவே சுப்பா ராவ் சில உள்ளூர் இந்து பண்டிதர்களை, வேத நூல்களிலிருந்து வரிகளை உச்சரித்து, அந்த இடத்தை புனிதப்படுத்த அழைத்தார். 'மாபெரும் பண்டிதர்கள்' என்று அழைக்கப்பட்டவர்கள் தங்கள் வழிபாட்டைத் தொடங்கும் வேளையில், பாபாவை தோட்டத்தில் அமர வைத்தனர். பாபா, எப்போதும் போலவே, பெருந்தன்மையுடன், சுப்பா ராவிடம் ஏமாற்றமடைந்தது போலக் காட்டிக்கொள்ளவோ அல்லது அவரது நம்பிக்கைகளை விமர்சிக்கவோ இல்லை, மாறாக, அனைத்தையும் ரசிப்பது போலத் தோன்றியது. சடங்குகள் முடியும் வரை, அவர் பொறுமையாக அங்கேயே அமர்ந்து, பின்னர் அவரது சிலை வடிவமைக்க வேண்டிய ஒரு கல்லைத் தொட்டார். மூலைக்கல்லில் மதிப்புமிக்க பொருள் ஒன்றை வைப்பது பாரம்பரிய பழக்கமாக இருந்ததால், கட்டா சுப்பா ராவ், பாபாவிடம் சில முத்துமணிகளை கொடுத்து, அவற்றை அங்கே வைத்தார்.

அன்று மாலை பாபா புறப்பட இருந்ததால், ஹமிர்பூர், நாக்பூர், ஸாவ்னேர், டெல்லி, டெஹ்ரா டூன் ஆகிய இடங்களிலிருந்து, அவருடைய அன்பர்கள் அன்று திரும்பிச் செல்ல இருந்தனர். ஆந்திரா ஊழியர்களின் கூட்டத்தில் பாபா கலந்துகொள்ள வேண்டி இருந்ததால், புறப்பட இருந்தவர்களிடம், **"எனக்கு நேரமில்லை, இப்போதே என்னிடமிருந்து விடைபெறுங்கள்"** என்று தெரிவித்தார்.

குமார் அனைவரையும் வரிசையாக நிற்க வைத்து, பாபா அவர்களைப் பார்க்க வந்தபோது, குமாரின் ஆலோசனையின்படி, அந்த அன்பர்கள் அனைவரும் படைவீரர்கள் பாணியில் மரியாதையையும், வணக்கத்தையும் தெரிவித்தனர். இவ்வாறு அனைவரும் பிரியாவிடை பெற்றுக்கொண்டனர். பாபா, குமாரை அரவணைத்து, குமார், கிஷன் ஸிங் இருவரிடம், 1953 பிப்ரவரியின் நடுப்பகுதிக்குப் பிறகு, டெஹ்ரா டூனில் பல மாதங்கள் தங்க விரும்புவதாகக் கூறி, அவருக்கும் மண்டலிக்கும் இரண்டு வீடுகளை வாடகைக்கு ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தினார்.

ஒரு கட்டத்தில், பாபா மீண்டும் பாவ் கல்சூரிக்கு நினைவூட்டினார், **"(நாக்பூரில் இருந்தபோது கூறியது போல்) எனது அறிவுரைகளை நினைவில் கொள்ளுங்கள்."**

தொழிலாளர்கள் கூட்டத்தில், மெஹர் பாபாவின் பெயரில் பணிபுரிவதில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வெளிப்பட்டன. பாபா, அவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும், சச்சரவுகளை அகற்றவும் முழு சுதந்திரம் வழங்கினார். ஆங்கிலம் தெரியாதவர்கள் தெலுங்கில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும்படி பாபா கேட்டுக் கொண்டார்; அதை குடும்ப சாஸ்திரி மொழிபெயர்த்தார். ஆனால் எதையும் மொழிபெயர்ப்பதற்கு முன்பு, பாபா அதன் அர்த்தத்தை அறிந்து, தனது பதிலை எடுத்துரைத்தார். ஒருமுறை, அவர் மொழிபெயர்த்தது சரியில்லை என்று சாஸ்திரி கூறியதைத் திருத்தினார்.

இதனால், தெலுங்கில் நடந்த விவாதம், பாபாவுக்கு அவர்களின் மொழி தெரியும் என்று அங்கிருந்த ஆந்திரா குழுவினரை நம்ப வைத்தது. இன்னும் அவதார புருஷரின் 'அறியும் முறை' எண்ணற்ற விதத்தில் வித்தியாசமானது. பல யுகங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை அவரால் நினைவுகூர முடியும்; காலச் சுழற்சிகளுக்குப் பின்னர் என்ன நடக்கும் என்பதையும் அவர் அறிவார். மனிதகுலம் பேசும் ஒவ்வொரு மொழிக்கும் அடிப்படையான சிந்தனையின் விதையை அவர் அறிவார், இதனால் ஒவ்வொருவரும் நினைக்கும் அனைத்தையும் அவர் அறிந்திருக்கிறார்.

இறுதியில், பாபா ஒரு குழுவை உருவாக்கி, ஆந்திராவில் தனது பணிக்கான ஒட்டுமொத்தப் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்தார். குழுவில் நான்கு உறுப்பினர்கள் இருந்தனர்: **குடும்ப சாஸ்திரி**, **தனபதி ராவ்**, **ரங்கா ராவ்** மற்றும் **மல்லிகார்ஜுனா** - எனவே பாபா அந்தச் செயற்குழுவிற்கு '**கே.டி.ஆர்.எம் சமிதி**' என்று பெயரிட்டார்.

1953, ஜனவரி 28 அன்று, பாபாவும் மண்டலியும் மெஹராஸாத்துக்குத் திரும்பிச் செல்லும் வால்டெயர்-பூனா பயணிகள் ரயிலில் புறப்பட்டனர். அவர்களுக்குப் பிரியாவிடை அளிக்க ஆயிரக்கணக்கானோர் ரயில் நிலைய நடைமேடையில் ஒன்று திரண்டனர், பலர் அழுது கொண்டிருந்தனர். குழு விஜயவாடாவை அடைந்தபோது, அங்கு சுமார் 300 பேர் பாபாவை சந்திக்க, அவரது ரயில் டோண்ட் நகரை நோக்கிப் புறப்படுவதற்கு முன்னர் ஒன்று திரண்டனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி, ரயிலின் ஜன்னல் வழியாக மட்டுமே அவரது தரிசனம் அனுமதிக்கப்பட்டது. கூடியிருந்த ஒவ்வொருவரும் அன்பானவரின் முன்னிலையில் சில கணங்கள் கோஷமிட்டனர். உதாரணமாக, ஒருவரின் மகளுக்கு இன்னும் திருமணமாகவில்லை, அல்லது ஒரு குடும்ப

உறுப்பினர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்று பலர் பாபாவின் உதவியை நாடினர்.

கல்கத்தாவைச் சேர்ந்த ஏ.வி. ராகவுலு, பாபா மற்றும் மண்டலியுடன் விஜயவாடாவுக்குப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டார்; நீண்ட காலமாக நோயால் அவதியுறும் தனது மனைவிக்கு ஆசிர்வாதத்தைக் கோரி, ஏலூரில் பாபாவின் தரிசனத்தைப் பெற்ற ஒரு பெரியவர் வந்திருப்பதாக தயக்கத்துடன் எரச்சிடம் கூறினார். பாபா எரிச்சலடைந்து, "**அவருடைய நோயைக் குணப்படுத்த என்னை ஏன் கேட்கிறார்கள்? நான் என்ன, மருத்துவரா?**" என்று கேட்டார்.

பாபா ராகவுலுவை அழைத்து எழுத்துப்பபலகையில் எடுத்துரைத்தார்: "**நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் சாதாரண மனிதன் அல்ல. நான் ஒரு மருத்துவரும் அல்ல, நான் அதிசயம் புரிபவனும் அல்ல. நான்தான் அந்த ஆதிகால புருஷன்!**"

உடனடியாக, பாபா சாந்தமான மனநிலையை வெளிப்படுத்தி, "**சரி, நான் அந்தப் பெண்மணியை மறக்கவில்லை என்று அவரிடம் கூறுங்கள். ஏப்ரல் (1953) வரை என் பெயரை ஒரு நாளைக்கு 101 முறை மகிழ்ச்சியுடன் திரும்பத்திரும்ப உச்சரிக்குமாறு சொல்லுங்கள்**" என்று கூறினார்.

அந்த ஆண்டு ஆந்திராவில் 150,000 பேர் மெஹர் பாபாவை தரிசனம் செய்தனர், மேலும் 50,000 பேர் நேரடியாகப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். காலம் இதை இப்படி விவரித்தது: "ஆந்திராவின் செயல்பாடுகள் இரண்டு வாரங்களுக்கு உலகில் அனைத்தையும் மறந்துவிடுமளவிற்கு அவர்களை ஆட்கொண்டன!" இந்த நெருப்பின் போதை தனித்துவமானது, அதை அனுபவிக்க மட்டுமே முடியும். இறைப்பெருங்கடலின் ஒரு துளியுடன் கூட அதை ஒப்பிட முடியாது; ஆதலால் கடலின் போதை என்னவாக இருக்க வேண்டும்? அது கருத்தில் கொள்ளமுடியாத அளவுக்கு அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்று!

ஆந்திரா நிகழ்ச்சிகளில், உண்மையில் பாபா மீது வாழைப்பழங்கள் மழை போலப் பொழிந்தன. அவர் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குச் செல்லும் போதெல்லாம், மக்கள் தரிசனத்திற்காக சாலையோரங்களில் நின்று, பாபா புறப்பட்டுச் செல்லும் வேளையில், அவரது காரின் மீது வாழைப்பழங்களைத் தூவினர்; குறைந்த பட்சம் அவர்கள் செலுத்தும் காணிக்கை ஏதோ ஒரு வகையில் அவருடன் தொடர்பை ஏற்படுத்தும் என்று நியாயப்படுத்தினர். இதேபோல, ஹமிர்பூரில், மக்கள் கோவிலில் தெய்வங்களை வழிபடும்போது செய்வது போல், அரிசி மற்றும் பூக்களை பாபா மீது மழையாகப் பொழிந்தனர். கட்டுக்கடங்கா மகிழ்ச்சியில், மக்கள், மெஹர் பாபா, மண்ணாலும் களிமண்ணாலும் செய்யப்பட்ட சிலை அல்ல, மனித உருவில் கடவுள் என்பதை மறந்துவிட்டனர்!

# மெஹராஸாத், டெஹ்ராடூன் & ரிஷிகேஷ்

(**Meherazad, Dehra Dun & Rishikesh**)

1953, **ஜனவரி** 30 வெள்ளிக்கிழமை காலை 8:00 மணிக்கு பாபா, டோண்ட் ரயில் நிலையம் வந்தபோது, அங்கு அவரை எதிர்நோக்கி நின்ற ஆதி சீனியர், பாபா, எரச் இருவரையும், காரில் மெஹராஸாத்துக்கு அழைத்துச் சென்றார். மெஹர்ஜியும் நரிமனும் தொடர்ந்து ரயிலில் மும்பைக்கும், இதர மண்டலி அனைவரும் அஹமதுநகருக்கும் சென்றனர். சிது மெஹராபாத்துக்குச் சென்ற அதே வேளையில், சகன், ராம்ஜூ இருவரும் அஹமதுநகரில் தங்கள் இல்லங்களுக்கும், சதாஷிவ் பாட்டீல் பூனாவுக்கும், யஷ்வந்த் ராவ் ஸக்கோரிக்கும், பிற ஆண் மண்டலி மெஹராஸாத்துக்கும் சென்றனர்.

டோண்ட் ரயில் நிலையத்திலிருந்து காரில் செல்லும்போது, ஆதி வழி தவறிச் சென்றதால் மாற்றுப்பாதை வழியாக 40 மைல் அதிக தூரத்தைக் கடக்க வேண்டியதாயிற்று. பாபா அடிக்கடி ஆதியிடம் வேகமாக ஓட்டும்படி சைகையால் தெரிவித்தார். உடல் ரீதியாக, ஆந்திரா பயணம், அதீத களைப்பை ஏற்படுத்தியதால், பாபா ஓய்வெடுக்கும் ஆர்வத்தில் இருந்தார். நிலைமையை மேலும் மோசமாக்கும் விதத்தில், மெஹராஸாத்தை நெருங்கும் வேளையில் காரின் சக்கரம் ஒன்று பழுதானதால், வந்து சேர தாமதமானது.

மெஹராஸாத் வந்து சேர்ந்த ஓரிரு நாட்களில், பாபா, எரச்சை ஆந்திராவுக்குத் திருப்பி அனுப்பினார்; பாபா, ஒரு குறிப்பிட்ட தம்பதியருக்கு, குழந்தைக்கான ஆசிகளை வழங்கியது தொடர்பான ஒரு செய்தியை வழங்குவதற்காக அனுப்பியது போலத் தோன்றியது: "**எரச் திரும்பிச் சென்று**, **எனது ஆசீர்வாதங்கள் உடனடியாக இல்லாமல் இருந்தாலும்**, **சில ஆண்டுகளுக்குப் பின்னர் அல்லது அவர்களின் அடுத்த வாழ்க்கையில் பலனளிக்கலாம் என்ற செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்**."

கடினமான பயணத்திற்குப் பின்னர், எரச் சோர்வாக இருந்தபோதிலும், அவர் கீழ்ப்படிந்தார். எரச் ஆந்திரா வந்தபோது அன்பர்கள் அவரிடம், "மெஹர் பாபா கைது செய்யப்பட்டது உண்மையா?" என்ற கேள்விகளை எழுப்பினர்; யாரோ ஒருவர் இப்படி பரவவிட்ட வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில் எரச்சை பாபா அனுப்பி வைத்த உண்மை அப்போதுதான் புலப்பட்டது.

பெண் மண்டலி, டாக்டர் டான், காக்கா, கிருஷ்ணா நாயர் ஆகியோரை சந்தித்த பிறகு, பாபா மெஹராஸாத்திலிருந்து பிப்ரவரி 4 அன்று பூனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார் - காலில் வலியை உணர்ந்ததால் எக்ஸ்ரே எடுக்க வேண்டியிருந்தது. மெஹரா, மணி, கோஹெர் ஆகியோர் உடன் சென்றனர்.

இந்தியாவின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் தொடர்ந்து 35 நாட்கள் கடுமையான சூழ்நிலைகளின் கீழ், இந்த வலியுடன் அவர் பயணம் செய்தார்.

ஆதி அவர்களை காரில் அழைத்துச் சென்று, அன்று மாலையில் அனைவரும் திரும்பி வந்தனர். ஆனால் நான்கு நாட்களுக்குப் பிறகு, ஞாயிற்றுக்கிழமை, பிப்ரவரி 8 அன்று, பாபா, பெண் மண்டலியுடன் அதே நோக்கத்திற்காக ஆதியால் மீண்டும் பூனாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதற்கு முன்பு, பிப்ரவரி 7ஆம் நாள், ஸக்கோரியிலிருந்த யஷ்வந்த் ராவுக்கு, ‘கோதாவரி மாய், 14ஆம் தேதி பாபாவை மெஹராஸாத்தில் சந்திக்குமாறு’ சிறப்புச் செய்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

1953, பிப்ரவரி 11 புதன்கிழமை அன்று, மெஹர் பாபாவின் 59ஆவது பிறந்தநாள் மெஹராஸாத்தில் கொண்டாடப்பட்டது. வெளி இடங்களிலிருந்து அன்பர்கள் எவரும் அழைக்கப்படவில்லை, ஆனால் அஹமதுநகரிலிருந்து ஆதி சீனியர், சகன், ராம்ஜூ, நஸர்வான் ஸட்டா, மெஹராபாத்திலிருந்து டான், சிது, பூனாவிலிருந்து ஆதி ஜூனியர், ஜால்பாய், பாபாதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். அன்று காலை, 7:30 மணிக்கு, பாபா, மெஹராஸாத்தில் 150 ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் இரண்டு ரூபாய் பிரசாதமாக வழங்கினார்.

கவாலி பாடகர் ஜாதவ், பிற்பகல் இரண்டு மணி நேரம் வழங்கிய சிறப்பான இசை நிகழ்ச்சி பாபாவைப் பெரிதும் மகிழ்வித்தது.

பூனாவிலிருந்து மெஹர்ஜியுடன் முந்தைய நாள் காலை வந்திருந்த ஐரீன் கோனிபியரும் நிகழ்ச்சியில் பங்கெடுத்தார். ஐரீன், ஓர் ஆர்வமிக்க அறிவுஜீவியாக இருந்ததால், மெஹராஸாத்தில் அவரைச் சுற்றி, பெரிய அளவில் மக்கள் கூட்டம் இல்லாத சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, பாபாவிடம் சில கேள்விகளைக் கேட்டார். "பாபா, ஆதாமின் வயது என்ன?" என்பது அவரது முதல் கேள்வி.

பாபா, சிரித்துக்கொண்டே பதிலளித்தார்:

**840 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர், இந்த பூமியில் முதல் மனிதன் வந்தான் என்று நான் பதிலளித்தால், உங்களைப் பொறுத்தவரை அதன் அர்த்தம் என்னவாக இருக்கும்? ஆனால் இது குறித்த முழு விளக்கமும், முதல் மனிதன் எப்படி, பரிணாம உலகில் உருவானான், இந்த முதல் மனிதன் எப்படி மீண்டும் மீண்டும், லட்சக்கணக்கான முறை, இந்த பூமியில் மட்டுமின்றி, லட்சக்கணக்கான பூமியில் தோன்றியிருக்கிறான், அதனால் அவன் வயதற்றவன், காலமற்றவன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இவை அனைத்தும் சரியான முறையில் விளக்கப்பட வேண்டும்.**

**நான் பேசுவதை நிறுத்துவதற்கு முன்னதாக, தனிப்பட்ட முறையில், ஒரே வருடத்தில் நான் எழுதிய புத்தகம், இப்போது, பாதுகாப்பாக வங்கியில் வைக்கப்பட்டு, நான் கட்டளையிடும் நேரத்தில் மட்டுமே கைக்கு எட்டும் வகையில் இருக்கும் புத்தகம், இந்த விஷயத்தைத் தெளிவாக விளக்குகிறது. உலகமும் விஞ்ஞானிகளும் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம், எனவே காலச்சுழற்சிகள், இறை உணர்வுக்கான பூமியின் நிலை, பூமியின் அழிவு மற்றும் அதே நேரத்தில், வேறு எந்த கிரகமும் அல்லாமல், மற்றுமொரு பூமியின் பரிணாம வளர்ச்சி பற்றி விளக்கினேன். முதல் மனிதன் எப்போது உருவானான், அவன் எப்போது இறை உணர்வை அடைந்தான், கோழி அல்லது முட்டை இரண்டில் எது முதலில் வந்தது? அனைத்தும் அந்தப் புத்தகத்தில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.**

அன்றைய தினம், ஐரீன் தனது, 'நாகரீகமா இல்லை குழப்பமா?' என்ற தலைப்பில் வெளிவரவிருக்கும் புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியைக் குறித்து ராம்ஜூவிடம் சில விஷயங்களை விவாதித்தார். இது 'பொது பாடநூல் அல்லது பாபாவின் பணிக்கான அறிமுகம்' என ஐரீன் கருதினார். அவரும் மெஹர்ஜியும் மறுநாள் காலையில் புறப்பட்டுச் சென்றனர்.

பிப்ரவரி 12ஆம் தேதி, மூன்று வேளை தேநீர் மட்டும் அருந்தி உபவாசம் இருக்குமாறு பாபா ஆண் மண்டலிக்குக் கட்டளையிட்டார். அன்று மதியம் மூன்று மணிக்கு, ஆதி சீனியர், வழக்கம் போல் எடுத்து வரும் தபால்களுடன், ஒரு கூடை ஜிலேபியும் (இனிப்பு) கொண்டு வந்தார். இனிப்புகளை என்ன செய்வது என்று பாபா மண்டலியிடம் கேட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காண, டாக்டர் நீலுவிடம், தனது எழுத்துப்பலகையை காற்றில் மெல்ல வீசி எறியுமாறு கூறினார். ஒரு குறிப்பிட்ட பக்கம் வந்தால் ஜிலேபி விநியோகிக்கப்படும் என்றும், மறு பக்கம் வந்தால் மாட்டாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இரண்டு முறை அதை விநியோகிக்க சாதகமான பக்கம் வந்ததால், பாபா, புன்னகைத்து, ஆண் மண்டலியை ஜிலேபியுடன் தேநீர் அருந்த அனுமதித்தார்.

1953, பிப்ரவரி 14 அன்று காலை, குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஒரு சிறிய தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. பாபா, டாக்டர் நீலு, எரச் ஆகியோருடன் ஆதியின் காரில் காலை 7:30 மணிக்கு வருகை தந்த வேளையில், ஏறக்குறைய 100 பேர் கூடியிருந்தனர். அவர்கள், பாபாவை அணுக அனுமதிக்கப்பட்டாலும், அவரது பாதங்களைத் தொடக்கூடாது என அறிவுறுத்தப்பட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில், பாபா அழைத்ததற்கு இணங்க, கோதாவரி மாய் ஸக்கோரியிலிருந்து காலை 9:30 மணிக்கு, யஷ்வந்த் ராவ் மற்றும் இரண்டு கன்யாக்களுடன் வருகை தந்தார். கோதாவரி மாயைப் பார்த்ததும் பாபா மகிழ்ச்சியடைந்து அவரிடம் விளக்கினார், **"ஒருவர் இறை உணர்வை**

**அடையாத நிலையில், அவருடைய பாதங்களைப் பிறர் தொட அனுமதிப்பதன் மூலம், மரியாதையைப் பெறுவது, கடுமையான பிணைப்பை உருவாக்கும்; உபாஸனி மஹாராஜ் உங்கள் மீது நம்பிக்கை வைத்து, முழுப் பொறுப்பையும் உங்களுக்கு வழங்கியதால், உங்கள் விஷயத்தில் இது முற்றிலும் வேறுபட்டது. மஹாராஜின் அறிவுரைகளைப் பின்பற்றுவது குறித்த உங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருங்கள். சிறந்தவை என நீங்கள் நேர்மையாகக் கருதும் அனைத்தையும் நீங்கள் செய்யலாம். பிறர் கூறுவதைச் செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவும் வேண்டாம்."**

கோதாவரி மாய் ரிஷிகேஷ் செல்ல இருப்பதால், அவ்வேளையில் பாபா டெஹ்ரா டூன் நகரில் இருக்க நேர்ந்தால், அங்கு அவரை மீண்டும் சந்திக்க முடியுமா என வினவினார். ஆதி சீனியருக்குக் கடிதம் எழுதி, தகுந்த தேதியை முடிவு செய்யலாம் என்றும் ஆனால் அங்கு நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாது எனக் கூறி பாபா விளக்கினார். "**எனது அனல் பறக்கும் வாழ்வு நிறைவுறும் தருவாயில், நான் கடினமாக உழைக்க வேண்டும்**," என்று அவர் கூறினார்.

இறுதியில், அவர் கோதாவரி மாயிடம், "**நான் எல்லா இடங்களிலும், எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருக்கிறேன்**" என்று கூறினார்.

பய்யா பாண்டே அவர்களின் புகைப்படத்தை எடுக்க ஆதி ஏற்பாடு செய்திருந்தார், அதற்கு பாபா ஒப்புக்கொண்டார். அதன் பின்பு நண்பகலில் பாபா, மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

கிஷன் ஸிங் ஆந்திராவிலிருந்து டெஹ்ரா டூன் திரும்பிச் சென்றதும், பாபா, கடிதம் மூலம் தொடர்புகொண்டு, பாபா மற்றும் மண்டலி தங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தினார். கிஷன் ஸிங் அனைத்து ஏற்பாடுகளையும் பொறுப்புடன் செய்தார்.

மெஹராஸாத்தில் இரண்டு வாரங்கள் தங்கிய பின்னர், 1953, பிப்ரவரி 15 ஞாயிற்றுக்கிழமை அன்று மெஹரா, மணி, மெஹரு, கோஹெர், நாஜா, ரானோ மற்றும் மண்டலியுடன் பாபா, இரண்டு கார்களில் புறப்பட்டார்; பாபா அமர்ந்திருந்த காரை எரச் ஓட்டிச் சென்றார். இந்த முறை, டெஹ்ரா டூன் பயணத்தில் எரச்சும் அவர்களுடன் இணைந்தார். செல்லும் வழியில், பாபா, அஹமதுநகர் 'ஸால்வேஷன் ஆர்மி எவாஞ்சலைன் பூத் மருத்துவமனை'யில் அனுமதிக்கப்பட்ட எரச்சின் சகோதரி மெஹரு தமானியாவைப் பார்க்கச் சென்றார். பல மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்து, சமீபத்தில் நடந்த பித்தப்பை அறுவை சிகிச்சையில் அவருக்குப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. பாபா, ஆறுதல் கூறி, அவரை நினைவு கூர்ந்து, அவருடைய பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார்.

ஆண் மண்டலியில் அலோபா, பைதூல், பாபா-தாஸ், குஸ்தாஜி, கைக்கோபாத், கிருஷ்ணா, டாக்டர் நீலு, பெண்டு ஆகியோர் பிப்ரவரி 15ஆம் தேதி டெஹ்ரா டூனுக்கு ரயிலில் புறப்பட்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் மேற்பார்வையிட விஷ்ணு நான்கு நாட்கள் முன்னதாகவே அங்கு அனுப்பப்பட்டார். மார்ச் மாத இறுதியில் பாபா அவருடைய பணியின் நிமித்தம் காஷ்மீர் செல்ல இருந்ததால், தேவையான அனுமதியைப் பெற்ற பின்பு, காஷ்மீர் செல்லுமாறு டான் அறிவுறுத்தப்பட்டார். காக்கா மெஹராஸாத்தில் தங்கி அதை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், பாதிரி, சிது, காளேமாமா, பாலா தம்பத், ஸவக் கொத்வால், ஜங்க்ளே மாஸ்டர் ஆகியோர் மெஹராபாத்திலும், மேல்மலையில் மன்ஸாரி மற்றும் கைகோபாத்தின் குடும்பத்தினரும் வாழ்ந்து வந்தனர். ஆதி சீனியர் தனது தாயார் குல்மாயுடன் தங்கியிருந்த குஷ்ரு குவார்ட்டர்ஸில், தத்து மெஹந்தர்கே மற்றும் வாமன் பணிபுரிந்த மெஹர் பப்ளிகேஷன்ஸ் அலுவலகமும் இருந்தது. ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா அக்பர் அச்சகத்திலும், சகன் தனது குடும்பத்துடன் பிங்கர் கிராமத்திலும் தங்கி இருந்தனர்.

பூனா, பிந்த்ரா ஹவுஸில் 15ஆம் தேதி ஓர் இரவைக் கழித்து, பாபா, பெண் மண்டலியுடன் மும்பை வழியாக டெஹ்ரா டூனுக்கு ரயிலில் புறப்பட்டு, 18ஆம் தேதிக்குள் அனைவரும் அங்கு வந்து சேர்ந்தனர். கிஷன் ஸிங் 107- ஏ, ராஜ்பூர் சாலையில் அமைந்த தனது பங்களாவில் ஆண் மண்டலியும், வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்ட, 103-ஏ, ராஜ்பூர் சாலை வில்லாவில் பாபா, பெண் மண்டலியுடன் தங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. பங்களாக்கள் அருகருகே இருந்ததால், பாபா ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு நடந்து செல்ல முடிந்தது. (கோஹெர் காலையில் அவருடன் வருவதும், அலோபா மதியம் 11:00 மணிக்கு அவரை திரும்ப அழைத்துச் செல்வதும் வழக்கமாக இருந்தது.) டெஹ்ரா டூனில் வாழும் சில நெருங்கிய அன்பர்களான எல்சா மிஸ்திரி, கேக்கி நலவாலா, புர்ஜர் சாச்சா, ஹெலன் ஆகியோர் பாபாவை சந்திக்கவும், கிஷன் ஸிங், குமார் இருவரும் மண்டலியுடன் தங்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, கிஷன் ஏழு ஏழைகளை மறுநாள் காலை மண்டலியின் பங்களாவிற்கு அழைத்து வந்தார். பாபா, ஏழு மணிக்கு அங்கு வந்து, அவர்களின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் ரூ 50 பிரசாதமாக வழங்கினார். ஏராளமான உள்ளூர்வாசிகள் தூரத்தில் நின்று, பாபா ஏழைகளுடன் பணிபுரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் உள்ளூர் மஸ்தானி ஒருவரும் பங்களாவிற்கு அழைத்து வரப்பட்டார்; பாபா அவரைத் தொடர்பு கொண்டு, பின்னர், '**அவர் டெஹ்ரா டூன் நகரின் ஆன்மீக பொறுப்பாளர்**' என்பதை வெளிப்படுத்தினார். மெஹர் பாபா

அப்பகுதிக்கு வந்ததும், மற்றுமொரு ஆதாரமற்ற வதந்தி பரவியது, எனவே பின்வரும் 'வாழ்க்கைச் சுற்றறிக்கை' 1953, பிப்ரவரி 22அன்று வெளியிடப்பட்டது:

**என்னைப் பற்றியும் எனது சீடர்களைப் பற்றியும் எழுந்த ஒரு குறிப்பிட்ட வதந்தி எனது காதுகளை எட்டியது. 1942இல் எனது சீடர்களுடன் நான் ரிஷிகேஷில் தங்கியிருந்த வேளையில், சில பொட்டலங்கள் ரயில் மூலம் எங்களுக்கு அனுப்பப்பட்டது. இந்தப் பொட்டலங்களில் சில, போக்குவரத்தின் போது சேதமடைந்து, மதுபானம் இருப்பது கண்டறியப்பட்டது, மேலும் ஒரு மோசமான சூழ்நிலையின் சங்கடத்திலிருந்து நம்மைக் காப்பாற்றும் எண்ணத்தில் நானும் என் சீடர்களும் உடனடியாக ரிஷிகேஷை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.**

**இது போன்ற தவறான வதந்திகளைப் பரப்புவதற்கு காரணமானவர்களின் இந்த செயலை நான் பாராட்டுகிறேன், ஏனெனில் இது, எனது பணிக்கு சிறந்த சேவையை வழங்குவதாக உணர்கிறேன். ஆன்மீக பணியில், எதிர்ப்பு, வதந்திகள் மற்றும் விமர்சனங்களைப் போல வேறு எதுவும் உதவாது. உண்மைப்பொருளுடன் ஒன்றான பரிபூரணமானவர்கள், உண்மையை மறைக்கவும் திரிக்கவும் முயற்சிக்கும் இத்தகைய வழிகளையும் முறைகளையும் அறிந்து ஆசீர்வதிப்பார்கள்.**

**துறவிகள், சாதுக்கள், மற்றும் பாவிகள், ஏழைகள் என்று அழைக்கப்படுபவர்களுக்கும் தலைவணங்குவதுதான் இத்தனை வருடங்களாக எனது பணியின் முக்கிய பகுதியாக இருந்து வந்தது. இப்போது, ரிஷிகேஷ், ஹரித்வார் போன்ற இடங்களுக்குச் செல்லும்போது, வதந்தியைப் பரப்புவதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும், அதை நம்பிய அனைவருக்கும் தலைவணங்குவேன். அவர்களுக்கு அடிபணிந்து வணங்குவது, எனது எந்த விதமான அகங்கார மனப்பான்மையாலும் தூண்டப்பட்ட முரண்பாடான செயல் அல்ல, அல்லது அவர்கள் மீதான எந்த அதிருப்தியினாலும் ஏற்பட்டதும் அல்ல; ஆனால் அது, என்னுடைய மாபெரும் ஆன்மீக பணியில் அவர்கள் செய்த உதவிக்காக, என் ஆழ் இதயத்திலிருந்து வெளியான அன்பின் அடையாளம் என்பதை அனைவரும் தெளிவாக புரிந்து கொள்ள விரும்புகிறேன்.**

**ஆரம்பமில்லா ஆரம்பம் முதல் இன்று வரை, பாராட்டுக்கள் அல்லது உலகளாவிய எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், நான் என்னவாக இருக்கிறேனோ, அப்படியே முடிவில்லா முடிவு வரை இருப்பேன்.**

1953, பிப்ரவரி 27 அன்று, பாபா எழுதிய கடிதத்தில், ஐரீன் கோனிபியரின் 'நாகரீகமா அல்லது குழப்பமா?' என்ற புத்தகத்திற்காக அவர் அளித்த கருத்துக்கள் மற்றும் விளக்கத்தின் ஒரு பகுதி பின்வருமாறு:

**அவதார புருஷர், சத்குரு இவர்களின் உணர்வு நிலை அல்லது பரிபூரணத்துவத்தில் எந்த வேறுபாடும் இல்லை... இருவரும் கடவுளோடு ஒன்றிணைந்தவர்கள். இருவரும் எல்லையற்ற சக்தி, அறிவு மற்றும் பேரின்பத்தை அனுபவிக்கிறார்கள், மேலும் இருவரும் சத்-சித்-ஆனந்தத்தின் இந்த அம்சங்களை பிரபஞ்சத்திற்காகப் பயன்படுத்துகின்றனர். வேறுபாடு என்பது அவர்களின் செயல்பாட்டை உள்ளடக்கிய நோக்கத்தில் உள்ளது. ஒரு பரிபூரண குருநாதர் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு, அவரால் தீர்மானிக்கப்பட்ட வழியிலும், பிரபஞ்சத்திற்கு ஒரு பொதுவான வழியிலும் பணிபுரிகிறார். அவதார புருஷர் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு, குறிப்பிடத்தக்க சிறப்பான முறையிலும், பிரபஞ்சத்திற்கு அவரால் தீர்மானிக்கப்பட்ட சிறப்பு வழியிலும் செயல்படுகிறார். எனவே இருவரும் பிரபஞ்சத்திற்காகப் பணிபுரிந்தாலும், அவர்கள் பணிபுரியும் களத்தின் எல்லை வரையறுக்கப்படவில்லை என்றாலும், அவர்களின் பணியின் செயல்பாட்டு நோக்கம் வேறுபட்டது.**

இதற்கு முன்னதாக, 23ஆம் நாள், ரிஷிகேஷில் வாழும் **சுவாமி சிவானந்தா**வுக்கு பாபாவிடமிருந்து ஒரு செய்தியை வழங்கி, அவருடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ய எரச், பெண்டு இருவரும் அனுப்பப்பட்டனர். அதன்படி, மார்ச் 2ஆம் தேதி, மெஹர் பாபா, சிவானந்தாவை சந்திக்கும் நாள் குறிக்கப்பட்டது. சிவானந்தாவிற்கு பாபாவின் செய்தி: "**முடிவிலா காலத்திலிருந்து, மெஹர் பாபா எல்லோரிடமும் இருப்பதால், மஸ்துகள், சாதுக்கள் மற்றும் ஏழைகளுக்குத் தலைவணங்கி வருகிறார்.**"

குருதுவாடியிலிருந்து, பால் நாத்து, டெஹ்ரா டூனுக்கு வரவழைக்கப்பட்டார்; 1953, மார்ச் 1 ஞாயிற்றுக்கிழமை அன்று, பிற்பகல் 2:00 மணிக்கு, பால் நாத்து, அலோபா, பைதூல், எல்சா, எரச், குஸ்தாஜி, ஹெலன், கிஷன் ஸிங், குமார், பெண்டு ஆகியோருடன் பாபா ரிஷிகேஷுக்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில், 2ஆம் தேதிக்கு பதிலாக, அன்று மாலையே சிவானந்தாவைச் சந்திப்பதாக பாபா முடிவு செய்தார்.

பிற்பகல் 3:30 மணிக்கு ரிஷிகேஷை சென்றடைந்த அவர்கள், 'கோகல் காட்'டில் அமைந்த ஷாந்தி கோட்டியில் தங்கினர். அன்று மாலை 5:30 மணிக்கு, சந்திப்பிற்கான நேரத்தை ஊர்ஜிதம் செய்ய எரச், கிஷன் இருவரையும் சிவானந்தாவின் ஆசிரமத்திற்கு, பாபா அனுப்பி வைத்தார்; ஆனால் அவர்கள் ஆசிரமத்திற்கு வந்தபோது சிவானந்தாவின் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதை அறிந்தனர்; இருந்தாலும், சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சிவானந்தாவின் செயலாளர் (பல வருடங்களுக்கு முன்பு பாபாவை தரிசனம் செய்தவர்) முதலில் மெஹர் பாபா ஆசிரம வாசிகளை சந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பாபா, சிவானந்தாவை நேரடியாகப் பார்க்க விரும்பினார்,

ஆனால் மெஹர் பாபா போன்ற ஒரு மேன்மைமிகு நபரை சரியான முறையில் வரவேற்க வேண்டும் என்பதால், இதற்கு ஒப்புக்கொள்ள முடியாது என்று கூறப்பட்டது.

பாபா சரியாக மாலை 5:30 மணிக்கு சிவானந்தாவின் ஆசிரமத்திற்கு வந்தபோது, அங்கு அவர் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். எந்தவிதமான முறைசார்ந்த சிறப்பு நிகழ்ச்சியும் வேண்டாம் என ஆசிரமத்தின் பொறுப்பாளர்களிடம் பாபா தெரிவித்திருந்த போதும், அவர்களின் வழக்கப்படி, அது செய்யப்பட்டது. செயலாளர் பாபாவின் பாதங்களில் தலைவணங்கி மரியாதை செலுத்தினார், பாபாவும் அவ்வாறே வாழ்த்தினார். பாபாவின் பாதங்களைத் தொடுவது தடைசெய்யப்பட்டது என்பதை எரச் அழுத்தம் திருத்தமாக முன்கூட்டியே சுட்டிக்காட்டியிருந்தார், ஆனால் பாபாவின் அறிவுரைகள் அன்றைய தினம் கடைப்பிடிக்கப்படாததை விட வேண்டுமென்றே மீறப்பட்டதாகத் தோன்றியது.

செயலாளர் பாபாவை பஜனை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்த ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். பாபாவிற்கு மாலை அணிவித்து, 'ஜெய்' என கோஷமிட்டது முழு கட்டிடமும் எதிரொலித்தது. பாபாவை நாற்காலியில் அமர வைத்தாலும், அவர் உடனடியாக அதை விட்டுவிட்டு தரையில் அமர்ந்தார்.

அப்போது அவர் இந்த அறிக்கையை வாசிக்குமாறு எரச்சிடம் சைகையால் தெரிவித்தார் (இந்த அறிக்கை 23ஆம் நாள் டெஹ்ரா டூனில் எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்து, பின்னர் ஒரு சுற்றறிக்கை வடிவத்தில் வெளியிடப்பட்டது):

**கற்றறிதல், படித்தல், கற்பித்தல், தர்க்க ரீதியாக அறிதல், போதித்தல் இவை எதுவுமே நமக்கு இறை உணர்வை (முக்தியை) அளிக்காது என்பதை அறுதியும் இறுதியுமாக புரிந்து கொள்ள வேண்டும். வேதாந்த வெளிப்பாடுகள், ஸூஃபி போதனைகள், ஆன்மீகம் தொடர்பான வார்த்தைகள், தத்துவ அறிக்கைகள் போன்ற எதுவுமே நம்மை ஆன்மீக ரீதியில் எங்கும் அழைத்துச் செல்லாது. சமய மாநாடுகள், ஆன்மீக இயக்கங்கள், உலகளாவிய சகோதரத்துவம் என்று அழைக்கப்படும் அனைத்தும் ஆன்மாவை விடுவிப்பதற்கு பதிலாக பிணைக்கத் தக்கது.**

**அறிவுத்திறனைக் கடந்து, அன்பு எனும் எல்லைக்குள் நுழையும் போதுதான், நாம் இறை நிலையை அடைய முடியும். கடவுள் மீதான அன்பு அதன் உச்சத்தை அடையும் போதுதான், நாம் அன்பான கடவுளில் நம்மை இழந்து, நித்திய இறை உணர்வை அடைகிறோம். இறை நிலையை அடைந்த ஆன்மாக்கள் அனைத்து மாயையின் பிணைப்புகளிலிருந்து விடுபடுகிறார்கள். நல்லதும் தீயதும், நல்லொழுக்கமும் தீமையும் உண்மைப்பொருளான இறைப்பெருங்கடலை மாசுபடுத்த முடியாது.**

பரிபூரணம் என்பது மாயையின் சட்டதிட்டத்திலிருந்து தப்பிப்பது மட்டுமல்ல, மனிதன் பரிபூரண கடவுளாக மாறுவது. ஆனால் மனிதன், உணர்வுபூர்வமாக கடவுளாக மாறிய பிறகு, மனிதனாக பௌதீக உணர்வு நிலைக்கு திரும்பும்போது, அவன் உன்னதமான பரிபூரணத்தை அடைந்துவிடுகிறான். அத்தகைய பரிபூரணமானவர் கடவுள் மட்டுமல்லாமல், கடவுளின் வாழ்க்கையை மனிதனாக வாழ்கிறார். அவர் மாயையிலும் அதே நேரத்தில் அதற்கு அப்பாற்பட்ட நிலையிலும் இருக்கிறார். அவர் கர்மாவின் சட்டதிட்டத்தின் மத்தியில் இருக்கிறார், ஆனால் அதற்குக் கட்டுப்பட தேவையில்லை. அவருடைய செயல்கள் எதுவாக இருந்தாலும், அவை செயலற்ற தன்மை படைத்தவை, ஏனென்றால் சாதாரண மனிதனைப் பிணைக்கும் செயல்கள் ஒரு பரிபூரணமானவரால் செய்யப்படும்போது, அவை, கட்டுப்பாடற்றவை மட்டுமின்றி, மாயையின் அறியாமையிலிருந்து மனிதகுலத்தை விடுவிக்கும் அவரது உலகளாவிய ஆன்மீக பணிக்கான பாதைகளாக மாறுகின்றன. பரிபூரணமானவர்கள் தெய்வீக சுதந்திரத்திலிருந்தும் விடுபட்டவர்களாக இருப்பதால், அவர்கள் தங்கள் உலகளாவிய பணிக்காகச் செய்யும் செயல்களிலிருந்தும் விடுபட்டவர்களாக இருக்கிறார்கள்.

என்னை நேசிப்பவர்களுக்கும், இயல்பாகவே என் செயல்பாடுகளைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும், என் அகவாழ்க்கை மற்றும் உள்ளளவிலான செயல்பாடுகளைப் பொறுத்த வரையில், கடவுளும் கடவுளோடு ஐக்கியமானவர்களும் மட்டுமே அறிந்து புரிந்து கொள்ள முடியும் என்றுதான் நான் சொல்ல முடியும். எனது வெளியளவிலான செயல்பாடுகளைப் பொறுத்த வரையில், இறை போதையில் இருக்கும் (மஸ்துகள்) துறவிகள், சாதுக்கள் மற்றும் ஏழைகளுடன் நான் பணிபுரிவது, அவர்களுடன் தொடர்புகொள்வது, அவர்களுக்கு சேவை செய்வது, முழு மனதுடன் பணிந்து தலைவணங்குவது, இவை அனைத்தும் என்னுடைய சீடர் ஒருவரால் 'தி வேஃபேரர்ஸ்' என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது.

நான் விளையாட்டுகளை ரசிக்கிறேன், முக்கியமாக கிரிக்கெட், கோலி விளையாடுவது, பட்டம் பறக்கவிடுவது, இசையைக் கேட்டு மகிழ்வது போன்றவற்றை அரிதான சந்தர்ப்பங்களில் நான் அனுபவித்திருக்கிறேன். நினைவுக்கு எட்டா பழங்காலத்திலிருந்து இன்று வரை, நான் மாயை எனும் பிரபஞ்சத்துடன் விளையாடி வருகிறேன், இந்த விளையாட்டின் இன்பம் இன்னும் என்னை ஒட்டிக்கொண்டிருக்கிறது.

'சுவர்க' ஆசிரமத்தில் மது அருந்துவதாக, என்னையும் எனது அன்பர்களையும் குறித்து பரவிய வதந்தி, முற்றிலும் தவறானது; உண்மை என்னவென்றால், எப்போதேனும் ஒரு முறை, நான் என் அன்பர்களுக்கு

மதுவை அருந்தக் கொடுப்பது, திராட்சை ரசத்தின் மதுவல்ல, ஆனால் இறை போதையை வழங்கி இறைவனுடன் ஐக்கியமாக உதவும் உண்மையான அன்பெனும் மது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்கிறேன்.

சைவ உணவு உண்பவர்கள் தங்கள் உணவு பழக்கத்தைப் பின்பற்றவும், அசைவம் உண்பவர்கள் மாமிசம், மீன், முட்டை போன்ற பலவற்றை உண்ணவும் நான் அனுமதிக்கிறேன். நான் எந்த மதத்திலும் தலையிடாமல், அனைவரும் தத்தமது சொந்த மதங்களை தடையின்றி பின்பற்ற அனுமதிக்கிறேன். கடவுள் மீதான அன்பை எதிர்கொள்ளும் போது, இந்த வெளிப்புற சடங்கு சம்பிரதாயங்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. இந்த வெளியளவிலான பழக்கவழக்கங்களை அன்பர்கள் பின்பற்றினாலும் அல்லது கைவிட்டாலும், கடவுள் மீதான அன்பு தானாக, இயற்கையாகவே சுய மறுப்பு, மனக் கட்டுப்பாடு மற்றும் அகந்தையை நிர்மூலமாக்க வழிவகுக்கும்.

நான் சில நேரங்களில் திரைப்படங்களைப் பார்க்கிறேன் (பெரும்பாலும் நகைச்சுவையானவை), மேலும் பிரபஞ்சம் என்று அழைக்கப்படும் பரந்த, என்றென்றும் மாறாத, முடிவில்லாத திரைப்படத்தின் நித்திய தயாரிப்பாளராக எனது உண்மையான நிலையை நான் அனுபவிக்கிறேன். எல்லையற்ற சக்திக்கும் மகிமைக்கும் ஆதாரமான ஆன்மாவின் அம்சமாகத் திகழும் நகைச்சுவையைக் குறித்து, எப்பொழுதும் விழிப்புடன் இருந்து, இருமைத்தன்மையின் பல்வேறு வடிவங்களின் நகைச்சுவையான கதைகளைக் கேட்பதில் நான் ஆர்வமாக இருக்கிறேன்.

எப்போதாவது, நான் மக்களுக்கு தரிசனம் மற்றும் அன்பின் பிரசாதத்தை வழங்குகிறேன், ஒவ்வொரு நபரும் அவரவர் (ஏற்றுக்கொள்ளும்) திறனுக்கு ஏற்ப பயனடைகிறார்கள். பரிபூரண குருநாதர்களிடம் சரணடைந்தவர்களுக்கு நான் உபதேசத்தின் உருவில் அறிவுரைகளை வழங்குகிறேன், மேலும் உண்மைப்பொருளுக்காக ஏங்கும் ஒரு சிலருக்கு பொதுவான அறிவுரை வடிவில் உதவி வழங்குகிறேன். இவை அனைத்தும், நிச்சயமாக, அதை அடையப்பெறும் நபரின் தகுதிக்கு ஏற்றார் போல பயனுள்ளதாக இருக்கும்.

பரிபூரணமானவர்கள் இறை ஞானம், இறை அன்பு போன்றவற்றை வழங்க முடியும், மேலும் ஒரு கடைக்கண் பார்வை, ஸ்பரிசம் அல்லது ஒரே ஒரு தெய்வீக சிந்தனையால் கடவுளுடன் ஐக்கியமாகும் அருளைப் பொழிய முடியும்.

நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன், அனைவருக்கும் எனது அன்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன். எனது மனப்பூர்வமான

**அன்பளிப்பு உங்கள் அனைவராலும் புரிந்து கொள்ளப்பட்டால், நான் இன்று இங்கு வந்ததன் நோக்கம் நிறைவேறியதாக எடுத்துக்கொள்வேன்.**

அதற்குப் பிறகு பாபா ஆசிரமவாசிகளுக்கு வணக்கம் செலுத்தி, **"இப்போது நீங்கள் என்னை வணங்க வேண்டிய தேவையில்லை, ஏனென்றால் நான் உங்களிடமும் எல்லோரிடமும் இருக்கிறேன், மேலும் நான் உங்களுக்குள் நிலைகொண்டு, எனக்கு நானே வணக்கம் செலுத்துகிறேன்"** என்று கூறினார்.

செயலாளர் பாபாவிடம் சில வார்த்தைகளைக் கூற அனுமதி கோரி, அதைப் பெற்றுக்கொண்டார்: "1942ஆம் ஆண்டு, பாபா தங்கியிருந்த 'சுவர்க' ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள், பொய்யான வதந்தியைப் பரப்பியதற்குக் காரணமானவர்கள், குறிப்பாக ஒரு விரும்பத்தகாத குணம் படைத்த சுவாமி அப்யான் ஆனந்தா. சுவாமி சிவானந்தாவைப் பற்றியும் இது போன்ற வெறுப்பூட்டும் வதந்திகளை பரப்பியுள்ளார்."

மேலும் கூறினார், "சம்பத் ஐயங்கார் இல்லத்தில் உங்களை தரிசனம் செய்த நாளிலிருந்து, உங்களை எனது குருநாதராகவும், என்னை உங்களின் சீடராகவும் பாவித்துக் கொண்டேன். அந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் சென்னையில் வழங்கிய அறிவுறுத்தல்படி, நான் இந்த ஆசிரமத்தில் சேவை செய்து வருகிறேன். சுவாமிஜி (சிவானந்தா) உங்கள் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டவர், நீங்கள் இத்தனை சிரமங்களையும் தாங்கி இங்கு வந்திருப்பது எங்கள் அதிர்ஷ்டம்."

ஆனால், உண்மையில், செயலாளர் கூறியதற்கு மாறாக, வதந்தியை அப்யான் ஆனந்தா பரப்பவில்லை, சுவாமி சிவானந்தாவால் தொடங்கப்பட்டது! பாபா புது வாழ்வில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு, பாபாவின் தரிசனத்திற்காக மௌனி புவா மெஹராபாத் வந்திருந்தார். பாபாவின் கட்டளையை அவர் பின்பற்றுவாரா என்று கேட்டதற்கு அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் பாபா அவரை மாமிசம் உண்ணவும், மது அருந்தவும் அறிவுறுத்தியபோது அவர் அதிர்ச்சியடைந்தார். எனவே பாபா அவரை ரிஷிகேஷிற்குச் செல்லும்படி கேட்டுக் கொண்டபோது, அவர் அதை விருப்பத்துடன் செய்தார்.

புது வாழ்வில், பாபா, பெனாரஸிலிருந்து மாஞ்ஜ்ரி மா:ஃபிக்கு செல்லவிருந்தார், மேலும் ரிஷிகேஷில் அப்போது இருந்த பல சாதுக்களை தொடர்பு கொள்ள இருந்தார். ஆனால் அவரது சொந்த காரணங்களுக்காக, பாபா மௌனி புவாவைப் பார்க்க விரும்பவில்லை, எனவே, பால் நாத்து ரிஷிகேஷுக்குச் சென்று, மௌனி புவாவை அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு கூறினார். பாபாவின் விருப்பத்தை மௌனி புவாவிடம் தெரிவித்த வேளையில், அவர் அவ்வாறே செய்தார்.

அதற்குப் பிறகு, பால் நாத்து, சுவாமி சிவானந்தாவை சந்தித்த போது, 1942ஆம் ஆண்டில் மதுபான புட்டிகள் அடங்கிய பெட்டிகள் கடத்தப்பட்டதில் ஏற்பட்ட சேதம் குறித்தும், தற்செயலாக, பாபா அந்த இடத்தை விட்டு அவசரமாகப் புறப்பட்டுச் சென்றது பற்றியும் அவரிடமிருந்து தெரிந்துகொண்டார். மெஹர் பாபா மீதான பால் நாத்துவின் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கண்டு, சிவானந்தா, அத்தகைய நம்பிக்கைக்கும் பக்திக்கும் 'பாபாவின் மாய மந்திர சக்தியால் வசியப்படுத்தியதே காரணம்' என்று முறையிட்டார். இந்தப் பொய்யான வதந்தி ரிஷிகேஷ் முழுவதும் பரவியது. இதுவே, பழங்கால ரிஷி முனிவர்களின் தேசத்தில், அவதார புருஷருக்கு அளிக்கப்பட்ட மதிப்பும், மரியாதையும்!

பாபாவின் முன்னிலையில் நடந்த நிகழ்வை ஆசிரமவாசிகளிடம் பால் நாத்து விவரித்தார்; அதைத் தொடர்ந்து பாபா, செயலாளரிடம் கூறினார்: **"இதுவரை முழு உலகிலும், நான் உண்மையான சீடர் ஒருவரைக் கூட கண்டதில்லை. அப்படி ஒருவரைக் கண்டுகொண்டால் அவர் எனது தெய்வீகத்தன்மையைப் புரிந்திருப்பார். முழு உலகிலும் நான் மட்டுமே உண்மையான சீடன், பிற அனைவரும் எனது குருநாதர்கள். நான் ஆதிகாலத்தவனாக இருந்தாலும் எனது குருக்கள் அனைவரும் இங்கு அமர்ந்திருக்கிறார்கள்."**

பின்னர் அவர் ஆசிரமவாசிகளிடன் பேசினார்: **"சிவானந்தாவை உறுதியாகப் பற்றிக் கொள்ளவும், அவருடைய அறிவுறுத்தல்களை 100 சதவிகிதம் நிறைவேற்றவும் நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். நீங்கள் அவரை உங்கள் குருநாதராக ஏற்றுக்கொண்டீர்கள், எனவே நீங்கள் அவரை முழு மனதுடன் பற்றிக்கொள்ள வேண்டும்."**

பாபா மேலும் கூறினார், **"நாம் கடவுளை அவருடைய முழு மகிமையில் அறிந்துகொள்ள விரும்பினால், நாமும் அவரைப் போலவே நேர்மையாக இருக்க வேண்டும். நம் இதயத்தில் தவழும் பாசாங்குத்தனம் அவரை விலக்கி வைக்கும். எனவே நேர்மையாக இருப்போம். எனது எல்லா ஆசிகளையும் அன்பையும் நான் உங்களுக்கு வழங்குகிறேன்."**

பாபா எழுந்து நின்று, அவரை சிவானந்தாவிடம் அழைத்துச் செல்லும்படி செயலாளரிடம் சைகையால் தெரிவித்தார். சிவானந்தாவின் அறைக்குள் எரச், பால் நாத்து இருவருடன் பாபா நுழைந்தார். சிவானந்தா மூட்டு வலியால் அவதிப்பட்டு படுக்கையிலிருந்து எழ முடியாமல் இருந்தார். பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, எரச் ஆசிரமவாசிகள் முன்பு சொல்லப்பட்ட அனைத்தையும் அவருக்கு விளக்கினார். பின்னர் எரச் பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்ததைப் படித்தார்: **"நீங்கள் தனிப்பட்ட முறையில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பொய்யான வதந்தியைப் பரப்பியிருந்தாலும்,**

**அல்லது உங்கள் பெயரில் பிறர் அவ்வாறு செய்திருந்தாலும், நீங்கள் எனக்கு உலகளாவிய ஆன்மீக பணியில் உதவும் கருவியாக இருந்ததற்காக, நான் உங்களை அன்புடன் வணங்குகிறேன்."**

பாபா, சிவானந்தாவின் கால்களில் தலைவணங்கி, படுக்கையில் அமர்ந்து, கால்களை அழுத்தத் தொடங்கினார். வெளியே மண்டபத்தில் வழங்கப்பட்ட செய்தியை மீண்டும் எடுத்துரைக்குமாறு பாபா, எரச்சிடம் சைகையால் தெரிவித்தபோது, அது மீண்டும் வாசிக்கப்பட்டது. **"எதற்கும் கவலைப்படாதீர்கள்"** என்று சிவானந்தாவுக்கு பாபா உறுதியளித்தார்.

கூப்பிய கரங்களுடன், சிவானந்தா பதிலளித்தார், "நான் ரிஷிகேஷுக்கு வந்தபோது, இங்கு வாழும் சாதுக்கள் உட்பட மக்கள் என்னைப் பற்றியும் கேவலமான கதைகளைப் பரப்பத் தொடங்கினர். இதுபோன்ற ஆதாரமற்ற வதந்திகளைக் குறித்து கவலைப்படாமல் இருப்போம்."

1949ஆம் ஆண்டு, ஒரு நாள் இரவு யாருடன் அவர் பேசினாரோ, யாரிடம் வதந்தியை திரும்பத் திரும்ப எடுத்துரைத்தாரோ, அவரை (பால் நாத்துவை) நீங்கள் அடையாளம் கண்டுகொண்டீர்களா என்று சிவானந்தாவிடம் பாபா கேட்டார். பால் நாத்து அன்று நிகழ்ந்த சந்திப்பைப் பற்றி விளக்கினார்; சிவானந்தா வேதனையான அந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார். மீண்டும் கூப்பிய கரங்களுடன் பாபாவிடம், "பாபா, நான் எறும்பு முதல் யானை வரை, யாரைப் பற்றியும் எதுவும் தவறாகப் பேசுவதில்லை, ஆனால் அன்று அந்தக் கருத்தைச் சொன்னதில் எனது நாக்கு தவறிழைத்து விட்டதற்காக நான் வருந்துகிறேன்" என்று கூறினார்.

பாபா எழுத்துப்பலகை வழியாக, **"அது நடக்க இருந்தது, நடந்தது; இல்லையெனில், நான் உங்களுக்கு இந்த செய்தியை அனுப்பியிருக்க மாட்டேன், உங்கள் ஆசிரமத்திற்கும் வந்திருக்கமாட்டேன் அல்லது அனைத்து ஆசிரம வாசிகளுக்கும் எனது நமஸ்காரத்தையும் தெரிவித்திருக்க மாட்டேன்"** என்று பதிலளித்தார்.

அவர் மேலும் கூறினார், **"கடவுள் நேர்மையின் மொத்த உருவம், எனவே நாம் அனைவரும் நேர்மையாக இருப்போம். நம்மிடையே அன்பின் பிணைப்பு மட்டும் இருக்கட்டும்."**

இதற்கு முன்னதாக ஒரு சந்தர்ப்பத்தில், எரச், பெண்டு இருவரும் சிவானந்தாவுக்கு, பாபாவின் 'நேர்மை' பற்றிய செய்தியை (ஏலூரில் முதன்முதலில் வழங்கிய செய்தி) வழங்கியதும், அவர் பாபாவிடம், "'நேர்மை' பற்றிய உங்கள் செய்தியை நான் படித்தேன்" என்று கூறினார்.

பாபா மீண்டும் அறிவுறுத்தினார், **"அன்பின் பிணைப்பு பாதுகாக்கப்படட்டும்."**

பாபா அறையை விட்டு வெளியே வரும்போது, சிவானந்தா, பாபாவின் நினைவாக ஒரு சமஸ்கிருத பிரார்த்தனையை ஓதினார், அதை அவரது பக்தர்கள் திரும்பத் திரும்ப மொழிந்தனர். அது முடிந்ததும், பாபா தன்னைச் சுட்டிக்காட்டி எழுத்துப்பலகையில், **"நான் ஆதிகால புருஷன்"** என்று எடுத்துரைத்தார்.

இதைக் கேட்ட சிவானந்தா படுக்கையிலிருந்து எழுவதற்குப் போராடினார், ஆனால் அவரால் முடியவில்லை, அவர் உரத்த குரலில் கூறினார், "நான் ஆதிகால புருஷரைத் தலைவணங்குகிறேன்!"

பாபா அவருக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் கூறினார், **"கவலைப்படாதீர்கள். நீங்கள் எனக்குப் பிரியமானவராக இருப்பதால்தான் இன்று நான் உங்களிடம் வந்திருக்கிறேன்."** அவர் மீண்டும் செயலாளர் மற்றும் சீடர்களுக்கு அறிவுறுத்தினார், **"நீங்கள் முழு மனதுடன் சுவாமி சிவானந்தாவை கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்கள்."**

அவர் புறப்படும்போது, ஆசிரமவாசிகள், "சத்குரு மெஹர் பாபா கி ஜெய்!" எனக் குரல் எழுப்பினர்.

மெஹர் பாபாவின் தெய்வீக அதிகாரமும், அன்பும், அவர் நடந்துகொண்ட விதமும் மனதைத் தொடும் காட்சியாக இருந்தது; மேலும் இது சுவாமி சிவானந்தாவின் பணிவையும் நிரூபித்தது. பாபாவின் அன்புதான் அவரைத் தனது ஆசிரமத்திற்கு அழைத்து வந்து, கால்களை அழுத்தவும், அன்புடன் முத்தமிடவும், அவரை மன்னிக்கும் விதத்தில் நடந்து கொள்ளவும், அதே சமயம் உண்மை மற்றும் நேர்மையின் சாரத்தை அவர் உள்வாங்கவும் செய்தது.

மண்டபத்தின் வெளியே அமைந்த வராண்டாவில் சிற்றுண்டி பரிமாறப்பட்டது, பாபா அதில் பங்கு கொள்ள வேண்டும் என்பது சிவானந்தாவின் விருப்பம் என்று பாபாவிடம் செயலாளர் தெரிவித்தபோது, பாபா சில உலர் பழங்களை எடுத்து செயலாளரிடம் பிரசாதமாக வழங்கினார். ஆசிரமவாசிகளுக்கு விநியோகிக்குமாறு அறிவுறுத்தி, மேசையில் இருந்த அனைத்து உணவையும் அவரது கைகளால் தொட்டு ஆசீர்வதித்து, பாபா அங்கிருந்து வெளியேறினார்.

போகும் பாதையில் பாபா அந்த மண்டலியிடம், **"சிவானந்தாவின் அன்பு என் ஆழ் இதயத்தைத் தொட்டது, அவர் பூரண குணமடைய வாழ்த்துகிறேன்"** என்று குறிப்பிட்டார்.

பொய்யான வதந்தி, அச்சிடப்பட்டு பரவலாக விநியோகிக்கப்படவிருந்த செய்தியில் அவரது பெயர் நீக்கப்பட வேண்டும் என்று கூறி, பாபா, மீண்டும் எரச்சை சிவானந்தாவிடம் அனுப்பி, ஆசிரமத்திற்குத் தெரிவித்தார். பாபா ரிஷிகேஷில் மஸ்துகள் மற்றும் சாதுக்களைத் தொடர்பு கொள்ளும் பணிக்காகத் தங்கியிருந்தபோது, அவர் தொடர்ந்து சிவானந்தாவின் உடல்நிலை குறித்து

விசாரித்தார். சில நாட்களில், சிவானந்தாவின் உடல்நிலை சீரானது, பாபாவின் அன்பின் சான்றாக அமைந்தது.

1953, மார்ச் 2ஆம் தேதி திங்கட்கிழமை காலை ஏழு மணிக்கு, ரிஷிகேஷ் முழுவதும் தங்கியிருந்த மஸ்துகள், துறவிகள் மற்றும் சாதுக்களைத் தொடர்பு கொள்ள பாபா புறப்பட்டுச் சென்றார். பாபா சுட்டிக்காட்டியவர்களின் கால்களை, மண்டலி தொட்டு வணங்க வேண்டும் என்று அவர் விரும்பினார்; இல்லையேல், அவர்கள் கூப்பிய கைகளுடன் மட்டுமே வணக்கம் செலுத்த வேண்டும் என்று அவர் கூறினார். பாபா முதலில் சுவாமி பிரம்மாஜியைத் தொடர்பு கொண்டார்; அதைத் தொடர்ந்து, சுவாமி பிரம்ம பிரகாஷ் என்று அழைக்கப்படும் ஒரு மேல்நிலை ஆன்மாவைத் தொடர்புகொள்வதற்கு முன்னர், அவரை தலைவணங்கும்படி மண்டலியிடம் சைகையால் தெரிவித்தார்.

சில சாதுக்களுடனான தொடர்பை நிறைவு செய்து பின்னர் அவர், சுவாமி ராம் கிருஷ்ணாவைத் தொடர்புகொள்வதற்காக, பாபா, **ஷேஷ்தாரா**வின் நீரோட்டப் பகுதியைச் சென்றடைந்தார்.

பாபா அவரைத் தொடர்புகொள்ள மிகுந்த ஆர்வத்துடன் காணப்பட்டார். சுவாமி ராம் கிருஷ்ணாவின் ஆசிரமத்திற்கு செல்லும் பாதை மிகவும் கரடுமுரடானதாகவும், செங்குத்தாகவும் இருந்ததால், அவர்கள் மிக்க சிரமத்துடன் தொலைதூர இடத்தைச் சென்றடைந்தனர். ஆனால், மூடப்பட்டிருந்த நுழைவாயிலில், "மார்ச் 10ஆம் தேதி வரை சுவாமிஜி எவருக்கும் தரிசனம் வழங்கமாட்டார்" என்ற அறிவிப்புப் பலகை தொங்கவிடப்பட்டிருந்தது. வழக்கமாக, தினமும் சுவாமி தரிசனம் வழங்கும் வேளையில், சமய சொற்பொழிவு நடந்து வந்த நிலையில், சில காரணங்களுக்காக அது 10ஆம் தேதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஆசிரமத்தின் ஒரு புறத்தில் ஆசிரமவாசி ஒருவர் பணிபுரிந்து கொண்டிருந்தார், எரச் அவரை சைகையால் அழைத்து, ராம கிருஷ்ணாவை தரிசனம் செய்ய அவரை வேண்டுமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார். அந்த மனிதர் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். எரச் வற்புறுத்தி எவ்வளவோ முயன்றபோதிலும், அவரது தரிசனத்திற்காக மக்கள் வாயிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்ததை சுவாமிக்கு தெரியப்படுத்தக் கூட அவர் தயாராக இல்லை. இறுதியாக, சுவாமியின் நெருங்கிய சீடர்களில் ஒருவரையாவது அனுப்புமாறு எரச் அவரிடம் இறைஞ்சினார். அவர் தயக்கத்துடன், கூட்டத்தைக் கலைக்கும் நோக்கத்தில் அனுப்பிவைத்த ஒரு நபர், அவர்களின் கோரிக்கையை நாகரீகமாக நிராகரித்தார். எரச் அவரிடம், "சுவாமிஜியின் தரிசனத்திற்காக நாங்கள் வெகு தொலைவிலிருந்து வந்துள்ளோம் என்பதைத் தெரிவிக்கவும், அவர் மறுத்தால், நாங்கள் சென்றுவிடுவோம்" என்று மன்றாடினார்.

"அவருக்கு எந்த செய்தியையும் கொண்டு செல்ல எங்களுக்கு அனுமதி இல்லை" என்று அந்த நபர் கூறினார்.

"சரி, பரவாயில்லை, செய்தியை அவருக்குத் தெரிவிக்காதீர்கள். ஆனால் எங்களில் ஒருவர் ஜன்னலில் தோன்றி தூரத்திலிருந்து அவரை தரிசனம் செய்ய அனுமதியுங்கள்" என்றார்.

"அப்படி எதையும் நாங்கள் அனுமதிக்க முடியாது என்று நான் உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்," என்று அந்த நபர் கடுமையாக பதிலளித்தார். "இன்னும் நீங்கள் அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்!"

"தயவுசெய்து எங்களுக்கு ஒரு வழியைக் காட்டி உதவுங்கள்" என்று எரச் கெஞ்சினார்.

"எந்த வழியும் இல்லை. தரிசனம் வேண்டுமானால் 10ஆம் தேதி வாருங்கள்."

"எங்களுக்கு வேறு முக்கியமான வேலை இருக்கிறது, திரும்பிவர முடியாது. எங்களிடம் கருணை காட்டுங்கள்" எரச் மன்றாடி கேட்டுக்கொண்டார்.

"தரிசனத்தை நாடி வந்தவருக்கு வேறு எந்த முக்கிய வேலையும் இருக்க முடியாது. அதெல்லாம் வெறும் சாக்குப்போக்கு!" அந்த மனிதர் பதிலளித்தார்.

எரச் அவரை இணங்கச் செய்ய தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார், ஆனால் முடியவில்லை. இருவருக்கும் இடையே நடந்த உரையாடலைக் கேட்டு, பாபா புன்னகைத்து, கிஷன் ஸிங்கிடம், "**இதுதான் கீழ்ப்படிதல் என்று அழைக்கப்படுகிறது! நீங்கள் எந்த நாளிலும், எந்த நேரத்திலும், எனது விருப்பத்திற்கு மாறாக என் தரிசனத்திற்கு வருகிறீர்கள்! இது உங்களுக்கு ஒரு நல்ல பாடம்**" என்று கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் உள்ள முரண்பாட்டை காலம் இவ்வாறு குறிப்பிட்டது: "கடவுளே சுவாமியின் தரிசனத்திற்காகச் சென்றிருந்தார், ஆனால் அவர் திருப்பி அனுப்பப்பட்டார். கஷ்டங்கள், மன அழுத்தம் மற்றும் மன உளைச்சல் ஆகியவற்றைச் சகித்துக்கொண்டு, இரவும் பகலும் கடவுளை நினைத்து ஏகாந்தவாசம் மேற்கொண்ட ஒருவரைத் தொடர்புகொள்ள, மெஹர் பாபா குறுகிய பாறைகள் நிறைந்த சாலையில் தொலைதூரம் கடந்து சென்றார்; ஆனால் அவரது வாயில் மூடியே இருந்தது, எவ்வளவோ வேண்டுதல்களுக்குப் பின்னரும் வாசல் திறந்தபாடில்லை. இறை-மனிதன் என்ன செய்ய முடியும்? வெளியளவில் எந்தத் தொடர்பையும் மேற்கொள்ளாமல் அவர் வெளியேற வேண்டியிருந்தது."

கிஷன் ஸிங் டெஹ்ரா டூனில் பாபாவின் தரிசனத்திற்காக பலரை அழைத்து வருவதால், மார்ச் 23 வரை 'தரிசனம் அனுமதிக்கப்பட மாட்டாது' என்று பாபா அவர்களின் இல்லத்தில், இதே போன்ற பலகையைத் தொங்கவிட உத்தரவிட்டார். பாபா, உண்மை நிலைமையை மிகவும் ரசித்து கிஷனிடம்

கூறினார், "**நான் கடவுள் என்றாலும், சுவாமியின் வாசலிலிருந்து தரிசனம் செய்யாமல் திரும்பி வருகிறேன் - நான் மக்களுக்கு தரிசனம் வழங்கவில்லை என்றால், அவர்களின் மனதைப் புண்படுத்துவதாக நீங்கள் என்னிடம் கூறுகிறீர்கள்!**"

அங்கிருந்து, சுமார் 10:30 மணியளவில், பாபா, 'காலி கம்லிவாலா'வின் ஆசிரமத்திற்குச் சென்றார், ஆனால் பல சாதுக்களை அவர் தலைவணங்கினாலும், மகிழ்ச்சியாகவோ திருப்தி அடைந்ததாகவோ தோன்றவில்லை, ஏனெனில், ஆசிரமத்தின் மேலாளர் அவரை அடையாளம் கண்டுகொண்டு, மாலை அணிவித்ததால், பாபா மறைமுகமாகச் செய்ய விரும்பிய வேலையைச் செய்ய முடியாமலாயிற்று. பாபா மேலும் பல சாதுக்களைத் தலைவணங்க விரும்பினார், ஆனால் 'மெஹர் பாபா வந்துள்ளார்' என்ற தகவல் எங்கும் பரவியது. பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**அங்கு எனது பணி பாழாய்ப்போனது, எனக்கு வழங்கப்பட்ட வரவேற்பால் நான் செய்ய விரும்பியதைச் செய்ய முடியாமலானது.**"

நீல்கண்ட் காடுகளில் ஆழமாக ஓடிய ஒரு நீர்வீழ்ச்சிக்கு அருகில், மேல்நிலை மஸ்த் ஒருவர் வாழ்ந்து வந்ததால், அவருக்கு 'நீல்கண்ட்வாலா' என்று பெயர். இவர் ஆறாவது ஆன்மீக தளத்தில், முற்றிலும் நிர்வாண நிலையில், மிகவும் வலுவான, உயரமான மஸ்தாக இருந்தார். மக்கள் அவரை 'நங்கா பாபா' (நிர்வாண நிலையில் இருப்பவர்) என்றும் அழைத்தனர். காலி கம்லிவாலாவின் ஆசிரமத்தை விட்டு வெளியேறிய பிறகு, பாபா, நீல்கண்ட்வாலாவைத் தொடர்பு கொண்டதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பாபா தொடர்ந்து கேஷவ் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்த பல சாதுக்களையும், அதன் அருகில் 'நங்கா பாபா' என்று அழைக்கப்பட்ட மற்றுமொரு மஸ்தையும் தொடர்பு கொண்டார்.

மதிய உணவுக்குப் பிறகு, ஷாந்தி கோட்டியில் சிறிது ஓய்வெடுத்து, பாபா தனது பணியைத் தொடர மண்டலியுடன் புறப்பட்டார். அவர்கள் கங்கை நதியின் குறுக்கே, படகு ஒன்றில் சவாரி செய்து, பாபா 'சுவர்க்' ஆசிரமத்தில் பெரும்பாலான சாதுக்களைத் தொடர்பு கொண்டார். பகவத் கீதையின் சாராம்சம், தடித்த எழுத்துக்களால் சுவர்களில் வரையப்பட்ட 'கீதா பவன்' என்ற கட்டிடத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். அன்றைய தினம், பொழுது சாய்வதற்குள், பாபா 500 தொடர்புகளை மேற்கொண்டார். திரும்பி வரும் வழியில், அவர்கள் சுவாமி சிவானந்தாவின் ஆசிரமத்தில் சிறிது நேரம் நின்ற வேளையில், பாபாவிடமிருந்து ஒரு செய்தி எரச் மூலமாக அவருக்கு வழங்கப்பட்டது.

ரிஷிகேஷில் தனது பணியை முடித்துவிட்டு, அடுத்த நாள், 1953 மார்ச் 3, செவ்வாய்க்கிழமை, காலை 10:00 மணிக்கு, பாபாவும் மண்டலியும்

ஹரித்வாருக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஹெலன், பாபாவை கிஷன் ஸிங்கின் காரிலும், எல்சா மிஸ்திரி மண்டலியை திறந்த ஜீப்பிலும் அழைத்துச் சென்றனர்.

குமார் மோட்டார் சைக்கிளில் அவர்களைப் பின்தொடர்ந்தார். ஹரித்வாரில் பல சாதுக்களைத் தொடர்பு கொண்ட பின்பு, கிஷன் ஸிங், கங்கை நதியில் குதித்து தற்கொலை செய்து கொள்ள நினைத்த அந்த இடத்தில், பாபா காரை நிறுத்தினார். கிஷன் ஸிங் அந்த இடத்தை நினைவு கூர்ந்து, 1941ஆம் ஆண்டு பாபாவின் தரிசனம் கிடைக்காததால், மிகவும் மனமுடைந்து பரிதாபமான நிலையில் உயிரைத் துறக்கும் நோக்கத்தில், ஹரித்வாருக்குச் சென்றதாகவும், நதியில் குதிக்கவிருந்த அந்த கணத்தில், பாபா தனக்கு முன்னால் நிற்பதைக் கண்டதாகவும் அவரிடம் எடுத்துரைத்தார்.

எரச் அப்போது நினைவு கூர்ந்தார், "நாங்களும் 1950ஆம் ஆண்டில் புது வாழ்வு காலகட்டத்தில் கூண்டுவண்டியில் இந்த இடத்தில் நின்றோம்."

அங்கு அமர்ந்திருந்த சாதுவிடம் ஒரு ரூபாய் வழங்குமாறு பாபா கிஷனிடம் கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து, பாபா, சாதுவை அணுகி, அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

சைத்தன்தாஸ் ஆசிரமம் அருகே, பாபா, மற்றுமொரு சாதுவைத் தொடர்பு கொண்டு, மண்டலியுடன், செப்பனிடப்படாத சாலையைக் கடந்து, சிறிது தூரம் சென்று, அங்கு அவர் முற்றிலும் நிர்வாணமாக இருந்த ஒரு துறவியை சந்தித்தார். எரச், பைதூல் இருவரும் பாபாவின் அருகாமையில் இருந்த அவ்வேளையில், இந்தத் தொடர்புக்குப் பிறகு, பாபா மண்டலியிடம் சற்று தூரத்தில் நின்று, கூப்பிய கைகளுடன் துறவியின் தரிசனத்தைப் பெறுமாறு அறிவுறுத்தினார். பாபா புறப்படும்போது, துறவி அவர், எங்கிருந்து வந்தார் என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தார். பெரும்பாலான மண்டலி பூனாவிலிருந்தும், சிலர் டெஹ்ரா டூனிலிருந்தும் வந்ததாக அவரிடம் கூறப்பட்டது.

இதற்குப் பிறகு, பாபா குருநானக் ஆசிரமத்திற்கு விஜயம் செய்தார்; அங்கு மற்றுமொரு சீக்கிய துறவி, பாபாவைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர் அன்புடன் பாபாவுக்குப் பிரசாதமாக வழங்கிய சூடான, இனிப்பு அரிசி பாயாசத்தை அவர் மகிழ்ச்சியுடன் உண்டார், மண்டலியும் அதில் பங்கெடுத்தனர்.

பாபா பின்னர் அங்கிருந்து கன்கலுக்குப் புறப்பட்டார், அங்கு நதிக்கரையில் அவர் ஜலாலி வகையைச் சேர்ந்த ஒரு மஸ்தைக் காண நேர்ந்தது. எல்சா கவனக்குறைவாக ஜீப்பை அவரருகே ஓட்டிச் சென்றது, மஸ்தை மிகவும் எரிச்சலுக்குள்ளாக்கியது; அவர், எல்சாவை அறைவது போல் ஓர் உளியை கையில் எடுத்தார். எல்சா கூப்பிய கைகளுடன் அவரிடம் மன்னிப்புக் கோரினார்; ஆனால் இது மஸ்தை மேலும் சீற்றமடையச் செய்ததில், அவர் மற்றுமோர் உளியை கையில் எடுத்தார். எல்சா பயந்து போனார். பாபா உடனடியாக மஸ்தை நோக்கிச் சென்றபோது, அவர் பாபாவைப் பார்த்து புன்னகைத்து,

உளிகளைக் கீழே எறிந்தார். பாபாவின் பிரசன்னம் அவரை சாந்தப்படுத்தியது: ஆனால் அவர் இரண்டு வாகனங்களின் எண் பலகையை ஒரு கல் மற்றும் கரித்துண்டால் வரைந்து, கிறுக்கி அலங்கோலப்படுத்தினார். மஸ்த் பொறுமை இழந்துவிட்டதால், பாபா அவரை தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளாமல் ஹரித்வாருக்குத் திரும்பிச் சென்றார்.

1953, மார்ச் 4 அன்று அதிகாலையில், பாபா குழுவுடன் ஹரித்வாரிலிருந்து நஜிபாபாத்திற்குப் புறப்பட்டார்.

நஜிபாபாத் செல்லும் சாலையைக் குறித்து முன்னதாக விசாரித்ததில், அது சீராக உள்ளதாகவும், வனத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவந்தது. ஆனால் சிறிது தூரம் பயணம் செய்த பிறகு, சாலை மிகவும் மோசமான நிலையில், தூசியும் மேடு பள்ளங்களும் நிறைந்து காணப்பட்டது. ஜீப்பும் காரும் மேலும் கீழுமாகத் தூக்கி எறியப்பட்டதில் தலை கூரையுடன் மோதியது; இரண்டு வாகனங்களும் மிக மெதுவாகச் சென்றன, சாலையில் பல திருப்பங்கள் இருந்ததால் ஓட்டுவதும் கடினமாக இருந்தது. எல்சா ஓட்டிச்சென்ற திறந்த ஜீப்பில், பெண்டு, அலோபா, குஸ்தாஜி, கிஷன் ஸிங் ஆகியோர் தலை முதல் கால் வரை தூசியால் மூடப்பட்டனர். பாதி வழியில், நடுக்காட்டில், பாபா இரு வாகனங்களையும் நிறுத்திவிட்டு பிஸ்கட்களை விநியோகித்தார். கைகளை சுத்தம் செய்ய காட்டில் தண்ணீர் கூட இல்லாத நிலையில், தூசி படிந்த கைகளால் பிஸ்கெட்டை மென்று சாப்பிட்டது வேடிக்கையான காட்சியாக இருந்தது. குறிப்பாக ஹெலன் ஓட்டிய காரில் பாபா பயணித்ததால் கிஷன் ஸிங் எரிச்சலடைந்தார். இயல்பாகவே கிஷன், காரில் அமர விரும்பினாலும், பாபா அவரை மீண்டும் ஜீப்பில் பயணிக்குமாறு அறிவுறுத்தினார்.

மதியம் 1:30 மணியளவில் கோட்துவாரா அரசு விடுதியில் உணவுக்காக நின்று ஹரித்வாரிலிருந்து கொண்டு வந்த உணவை உண்டனர். அதற்கு முன்னதாக, குஸ்தாஜியைத் தவிர ஆண்கள் அனைவரும் தங்கள் கை கால்களைக் கழுவினர்; குஸ்தாஜி, மீண்டும் பயணம் தொடங்கியதும் அவர் தூசியால் மறுபடியும் மூடப்படுவார் என நியாயப்படுத்தினார். ஆனால், இந்த சாலை மிகவும் சிறப்பாக இருந்ததால், எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அங்கு வந்து சேர்ந்தனர்.

மாலை சுமார் 5:00 மணியளவில் நஜிபாபாத்தை வந்தடைந்த பாபா, மஜ்ஜூப் நிலையில் இருந்த ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார் (உடல் மற்றும் சுற்றுப்புற சூழல் குறித்த உணர்வில்லாத நிலை); இந்தத் தொடர்பில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

அதைத் தொடர்ந்து நஜிபாபாத்தில் 'நங்கா மஸ்த்' என்று அழைக்கப்பட்ட வேறொரு மஸ்தைத் தேடும் முயற்சியில் அனைவரும் ஈடுபட்டனர். சிறிது நேரத்தில், ஓர் ஓடை அருகே மஸ்த் அமர்ந்திருப்பதாக தகவல் கிடைத்ததும்,

பாபா, குழுவுடன் அங்கு வந்தபோது, அவர் வெகு தொலைவில் ஒரு குறிப்பிட்ட கிராமத்துக்குச் சென்றிருப்பது தெரியவந்தது. பாபா அங்குச் செல்ல முடிவுசெய்து புறப்பட்ட போது, சாலையோரம் மஸ்த் அமர்ந்திருந்ததைக் கண்டுகொண்டனர். காரில் அமர அவர் இணங்காததால், பாபா ஒரு மரத்தின் கீழ் அவருடன் பணிபுரிந்தார்.

மஸ்தைத் தேடி கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், ஜீப்பில் இயந்திரக் கோளாறு காரணமாக அதைப் பின்னால் விட்டுவிட்டு, பாபா காரில் சென்றார். சிறிது நேரத்தில் பிரச்சினை சரி செய்யப்பட்டது, ஆனால் எல்சா ஜீப்பை தவறான திசையில் ஓட்டிச் சென்று, இரண்டு மடங்கு தூரத்தைக் கடந்து, பின்னர் அவர்கள் சரியான பாதையில் சென்றபோது நங்கா மஸ்த் சாலையில் அகப்பட்டார். பாபா மஸ்தைத் தொடர்பு கொண்டிருக்க மாட்டார் என்று நினைத்து, அவரைத் தடுத்து நிறுத்த, அலோபா ஜீப்பை விட்டு இறங்கிச் சென்றார்.

ஆனால் மஸ்த், அவரை எவரும் தொந்தரவு செய்வதை விரும்பாமல், அவரது வழியில் சென்று கொண்டிருந்தார். பார்வையிலிருந்து அவர் தவறிவிடக் கூடாது என்பதற்காக, அலோபா அவர் அருகிலேயே நடந்து சென்றார்; அதே வேளையில் ஜீப்பிலிருந்த மண்டலி அனைவரும், பாபாவுக்கு இதைத் தெரிவிக்கும் நோக்கத்தில், கிராமத்தை நோக்கி விரைந்தனர். அங்குச் சென்றதும், பாபா ஏற்கனவே அவரைத் தொடர்பு கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டதால், அவர்கள் திரும்பிச் சென்றனர். அலோபா மஸ்துடன் வேகமாகச் செல்வதைக் கண்ட பாபா, காரை நிறுத்தி, சாலையோரம் இரண்டாவது முறையாக மஸ்தைத் தொடர்பு கொண்டார்.

பின்னர் அவர்கள் முஸாஃபர்நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஜீப் மிகுந்த சிரமத்தைக் கொடுத்ததால், பாபா, எல்சாவுடன் காரில் முன்னால் சென்றார். ஜீப்பில், எஞ்சினை குளிரூட்டும் மின் விசிறி உடைந்து ரேடியேட்டர் பழுதானது. பாபாவின் காரிலும் ஒரு சில பிரச்சினைகள் இருந்ததால், அதையும் உடனடியாக கவனிக்காவிடில், ஏதேனும் அசம்பாவிதம் நடக்கும் என்று ஹெலன் நினைத்தார். அவர் அதை சரிசெய்ய முயன்றார், ஆனால் முடியவில்லை. கடைசியாக, டெஹ்ரா டூன் தூரத்தை கார் கடந்துவிடும் என்ற நம்பிக்கையில், அவர் காரை ஓட்டிச்சென்றார். ஜீப்பைக் கடந்து செல்லுமாறு பாபா, ஹெலனுக்கு அறிவுறுத்திய போது அவர் அவ்வாறே செய்தார். ஆனால் பாபாவின் கார் ஒரு பாலத்தில் நின்றதால், மண்டலி வெளியே வந்து மறுபுறம் தள்ள வேண்டியிருந்தது. முஸாஃபர்நகரிலிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில், ஜீப் மீண்டும் பழுதடைந்தது. அரசு பங்களாவில் ஜீப்பை நிறுத்திவிட்டு பாபா, நேரடியாக ஊருக்குச் செல்ல முடிவு செய்தார். அதே நேரத்தில், முஸாஃபர்நகரில் அமைந்த ஓய்வு இல்லத்திற்கு ஜீப்பை இழுத்துச் செல்ல பைதூல் ஒரு சரக்கு வண்டியைத் தேடிச் சென்றார்.

முஸா:ஃபர்நகருக்குச் சென்ற பாபாவிடம் இதைத் தெரிவிக்க, அலோபா கால் நடையாகப் புறப்பட்டுச் சென்றார். முஸா:ஃபர்நகருக்கு ஜீப்பை இழுத்துச் செல்ல ஒரு டிரக் டிரைவரிடம் கேட்டபோது, அவர் எதிர் திசையில் சென்றுகொண்டிருந்ததால், அதற்கு இணங்கவில்லை. ஜீப்பை இழுத்துச் செல்ல, எந்த சரக்கு லாரியும் கிடைக்காத பட்சத்தில், பெண்டு, கிஷன் ஸிங் இருவரும் மாட்டு வண்டியைத் தேடி அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்றனர். அவர்களால் ஒன்றைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இறுதியாக ஒரு கிராமவாசி முஸா:ஃபர்நகரிலிருந்து மாட்டுவண்டி திரும்பி வந்ததும் அதை வழங்க ஒப்புக்கொண்டார்.

அனைத்து சிரமங்களுக்கும் மத்தியில், எல்சா, பாபா மற்றும் மண்டலிக்கு உணவு ஏற்பாடு செய்வதற்காக ஒரு சரக்கு வண்டியில் முஸா:ஃபர்நகருக்குப் புறப்பட்டார், ஆதலால் பெண்டு, குஸ்தாஜி, கிஷன் ஸிங் ஆகியோர் சாலையோரத்தில் உதவியற்றவர்களாக நிற்க வேண்டியதாயிற்று. சிறிது நேரத்தில் பைதூலும் அலோபாவும் சரக்கு வண்டியுடன் வருவதைக் கண்டதும் அவர்கள் நிம்மதியடைந்தனர்.

அன்று இரவு பத்து மணியளவில் முஸா:ஃபர்நகரை சென்றடைந்த சரக்கு வண்டியுடன் ஜீப் இணைக்கப்பட்டது. இந்த அனைத்து விபத்துகள் மற்றும் சிரமங்களால், கிஷன் ஸிங் மிகவும் களைத்துப்போய் மனச்சோர்வுடனும் காணப்பட்டார். பாபா அவரை அழைத்து, "**நான் மஸ்த் பணிக்காகப் பயணம் செல்லும் போதெல்லாம், எனது பயணம் எப்போதும் சிரமங்களால் சூழப்பட்டிருக்கும், நீங்கள் 'தி வே:ஃபேரர்ஸ்' புத்தகத்தைப் படித்திருக்க வேண்டும். உங்கள் முகத்தைக் கழுவி விட்டு, இரவு உணவை உண்ணுங்கள், அதைப் பற்றி சிந்திக்க வேண்டாம்.**"

ஜீப்பை சரக்கு வண்டியுடன் டெஹ்ரா டூனுக்கு இழுத்துச் செல்வதா அல்லது முஸா:ஃபர்நகருக்கு பழுதுபார்ப்பதற்காக எடுத்துச் செல்வதா என்ற விவாதம் நடந்தது. பைதூல் அனைத்து ஏற்பாடுகளையும் தனது கையில் எடுத்துக்கொண்டு, நள்ளிரவில் ஒரு பெரிய டிராக்டரைக் கொண்டு வந்தார். மண்டலி அதற்கான செலவைப் பற்றி விசாரித்தபோது, பைதூல் கிசுகிசுத்தார், "எதுவும் சொல்லாதீர்கள்; அந்த மனிதர் வெறும் பத்து ரூபாய்க்கு ஒப்புக்கொண்டார்!"

"பத்து ரூபாய், அதுவும் டெஹ்ரா டூனுக்கு, ஈ கூட பறக்காது!" என்று குமார் கேலி செய்தார்.

குமார் டிராக்டர் உரிமையாளரை அணுகவிருந்தபோது, பைதூல் அவரைத் தடுத்து, "தலையிட வேண்டாம், நீங்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்; மிகவும் சிரமப்பட்டு நான் அதை இத்தனை மலிவாகப்

பெற்றுக்கொண்டேன், எனவே அது விஷயத்தில் பிரச்சினையை உருவாக்க வேண்டாம்" என்று கூறினார். எரச்சும் பெண்டுவும் பைதுலைப் பாராட்டினர்,

எல்சா அதை நம்ப முடியாமல் டிராக்டர் உரிமையாளரை அணுக முயன்றபோது, பைதூல் அவரைத் தடுத்தார். ஹெலன் இடையே குறுக்கிட்டு, "இங்கிருந்து டெஹ்ரா டூனுக்கு காரை இழுத்துச் செல்ல 200 ரூபாய்க்கும் குறைவாக எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்றார்.

"அந்த மனிதனின் காதில் விழுந்தால் எல்லாம் தலைகீழாகி விடும்!" எரிச்சலடைந்தார் பைதூல்,

பைதூல், டிராக்டர் உரிமையாளரிடம் எவரும் பேசுவதைத் தடைசெய்தார், ஆனால் ஹெலன் அமைதியாக அவரை அணுகி, அவரது கட்டணத்தைப் பற்றி கேட்டார். அதற்கு அந்த நபர் ரூ 200 என்று பதிலளித்தார். "ஆனால், நீங்கள், எமது நண்பரிடம் பத்து ரூபாய் என்றுதானே சொன்னீர்கள்!" ஹெலன் ஆச்சரியத்தில் கேட்டார்.

"என்ன? உனக்கு பைத்தியமா?" அந்த நபர் டிராக்டரை எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானார்.

"தம்பி, நான் சொல்வதைக் கேளுங்கள்..." ஹெலன் அவரை அழைத்தார்.

"நான் ஏன் பைத்தியங்களுக்கு செவி சாய்க்க வேண்டும்?" என்று கேட்டுவிட்டு விரைந்தோடினார்.

பைதூல், ஹெலன் செய்ததை நினைத்து மிகவும் வருத்தமடைந்தார், "நீங்கள் அனைத்தையும் கெடுத்துவிட்டீர்கள், உங்களுக்கு ஏதேனும் புத்தி இருக்கிறதா?" பைதூலின் அசாத்தியமான வழிமுறைகளைப் பார்த்து மண்டலி நன்றாக சிரித்தனர்.

இரவு வெகுநேரம் கழித்து முஸாஃபர்நகரில் உள்ள ஒரு வாகனம் பழுதுபார்க்கும் கடைக்கு ஜீப் கொண்டு செல்லப்பட்டது. மறுநாள் மதியத்திற்குள் சரி செய்து தருவதாக பணியாள் உறுதியளித்தார், ஆனால் அன்று மாலை வரை அது தயாராகவில்லை. பெண்டு, அலோபா, எல்சா, குஸ்தாஜி ஆகியோர் அங்கேயே இருந்தனர்; பாபா 5ஆம் தேதி காலை எரச், ஹெலன், கிஷன், பைதூல், குமார் ஆகியோருடன் ஸஹாரன்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஸஹாரன்பூரில், 'கத்ரிவாலா' என்று அழைக்கப்படும் ஒரு மஸ்தைக் கண்டுபிடிக்கும்படி பாபா, பைதூலுக்கு வழிகாட்டினார். பைதூல் மஸ்தைத் தேடிப் புறப்பட்டு, தவறுதலாக வேறு வழியில் சென்றாலும், அவர் ஒரு தையல் கடையில் வேவு பார்த்து, அந்த மஸ்தைக் கண்டுகொண்டது வெற்றிகரமாக முடிந்தது. எனவே பைதூல் திரும்பி வந்து பாபாவுக்குத் தெரிவித்ததும், அவர் தையல் கடைக்குச் சென்று, அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பைதூல், மஸ்தைக் காரில் அமருமாறு வற்புறுத்தினார். பாபாவின் அழைப்பை ஏற்று, சவாரி செல்வதில் மஸ்த் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

பாபா அவரை அழைத்துச் சென்று, நகரின் புறநகர்ப் பகுதியில் தனிமையில் தொடர்பு கொண்டு, பின்னர் அவரை தையல் கடையில் கொண்டு சேர்த்தார். இந்தத் தொடர்பில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். பாபாவின் உத்தரவின் பேரில், பைதூல் வாங்கி வந்த இனிப்புகளையும் ரொட்டிகளையும் பாபா மஸ்திடம் கொடுத்தார். மஸ்த் இனிமையான மனநிலையில் இருந்தது, அவர் பிரசாதத்திற்கு நியாயம் செய்ததுபோலத் தோன்றியது. ஒரு மஸ்த், தொடர்பு கொள்வதற்கு உகந்த மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பது பாபாவுக்கு மிக முக்கியமானதாக இருந்தது; அது இல்லாமல், அவருடைய பணியின் பலன் அவருக்கு திருப்தி அளிக்காது. எனவே, பாபா எப்பொழுதும் மஸ்தின் மனநிலையைப் பொறுத்தவரையில் கவனமாக இருந்ததோடு, அவர்களின் ஒவ்வொரு விருப்பத்திற்கும் இணங்கி, பாபா அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கத் தேவையான அனைத்தையும் செய்தார்.

கத்ரிவாலாவுடனான தொடர்புக்குப் பிறகு, பாபா ஒரு வயதான மௌலானாவை (கற்றறிந்த முஸ்லிம்) தொடர்பு கொள்ள, ஷா ஸெராய் என்ற இடத்தை நோக்கிச் சென்றார். இந்த மஸ்த் மௌலானாவைத் தேடுகையில், பைதூல், மௌலானா என்று அழைக்கப்பட்ட மற்றுமொரு மஸ்தைக் கண்டுகொண்டார். அவர் மத நம்பிக்கை மிக்கவராகவும், கடவுளின் சேவகராகவும் பெயர் பெற்றவர், ஏனெனில் அவர் கையில் எப்போதும் குரானின் நகலை வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். பாபா அவரைத் தொடர்பு கொண்டு, தலைவணங்கி, பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்த போது, எந்தப் பாக்கெட்டில் நோட்டை வைக்க வேண்டும் என்று முடிவெடுக்காத பட்சத்தில், மௌலானா சிரித்துக் கொண்டே தனது கோட் பாக்கெட்டுகளைப் பார்த்தார். அவர் அதை ஒரு பாக்கெட்டில் வைத்து, சிறிது யோசனைக்குப் பின்னர், அதை இன்னொரு பாக்கெட்டிற்கு மாற்றினார். ரூபாய் நோட்டை எங்கு வைப்பது என்பது குறித்த எந்த உறுதியான முடிவுக்கும் வராமல், பலமுறை இதை மாறி மாறி செய்தது, பாபாவை மகிழ்வித்தது.

**"அவர் ஒரு குழந்தையைப் போன்றவர்"** பாபா குறிப்பிட்டார், மேலும் '**அவர் எப்போது டெஹ்ரா டூனுக்கு வர விரும்புகிறார்**' என்று கேட்க பைதூலை அனுப்பி வைத்தார். பைதூல் அவரிடம் கேட்டபோது, மௌலானா வர மறுத்துவிட்டார். டெஹ்ரா டூனில் அவர் மிகவும் சிறப்பான உணவு மற்றும் புத்தாடைகளுடன் வசதியாக இருக்க முடியும் என்று கூறி அவருடைய ஆர்வத்தைத் தூண்ட முயன்றும், மௌலானா அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

அதற்குப் பிறகு, பாபா, 'பாவ்லா ஹக்கீம்' (யுனானி பாரம்பரிய மருத்துவம் அறிந்தவர்) என்ற மஸ்தைத் தொடர்பு கொள்ளச் சென்றார்; அவர் தன்னிடம் வரும் நோய்வாய்ப்பட்ட நபர்களுக்கு மருந்துச் சீட்டுகளை எழுதிக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டார். எரச், பைதூல் இருவருடன் பாபா

அவரைத் தொடர்பு கொண்டு, பின்னர் அந்த மேல்நிலை மஸ்தைப் பார்க்க அவர், இதர மண்டலியையும் அனுப்பி வைத்தார்.

அதைத் தொடர்ந்து பாபா, ஒரு கல்லறையில் வாழ்ந்த, 'பேஷ்வரி' என்று அழைக்கப்பட்ட, உயரமான, வலுவான உடலமைப்பும் நல்ல நிறமும் கொண்ட மஸ்தைத் தேடத் தொடங்கினார். அவரது முகம் அசாதாரணமாக பளிச்சென்று இருந்தது. அவரது வழக்கமான இருப்பிடத்தில் இல்லாமல், திறந்தவெளியில் ஒரு மண் சாலையில் அமர்ந்திருந்ததை மண்டலி கண்டுகொண்டனர்.

மஸ்த் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் காரை நிறுத்திவிட்டு, பாபா இறங்கி அவரை நோக்கி நடக்கத் தொடங்கினார். அவர் வருவதைக் கண்ட மஸ்த் எழுந்து நின்று பாபாவிடம் ஏதோ கிசுகிசுக்கப் போவது போல நகர்ந்து சென்றார். ஆனால் பாபா அவரை நெருங்கியதும், அவர் விலகிச் சென்று, வேகமாக நடந்து கல்லறையில் அமைந்த ஓர் அறைக்கு அருகில் அமர்ந்தார். ஏதோ இனம் புரியாத காரணங்களுக்காக, மஸ்தின் மனநிலை சரியாக இல்லை.

பாபா அவரைப் பின்தொடர்ந்த போது, அவர் வருவதைப் பார்த்த மஸ்த் எழுந்து அருகிலிருந்த கிணற்றை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினார். எரச், பைதூல் இருவருடன் பாபா மீண்டும் அவரை அணுகியபோது, மஸ்த் அவர்களுக்கு அருந்த தண்ணீர் கொடுத்தார், ஆனால் அவர் அதை பாபாவுக்கு வழங்கவில்லை. பின்னர் அவர் மீண்டும் வேகமாக, கல்லறைக்குள் சென்றார். மஸ்தின் மனநிலை முற்றிலும் கெட்டுப்போய், ஏதோ சிக்கல்களில் மாட்டிக்கொண்டவர் போலக் காணப்பட்டார்.

இந்த முறை பாபா அவரைத் தனியாகப் பின்தொடர்ந்தார், ஆனால் மஸ்த் மீண்டும் அவரைத் தவிர்க்க முயற்சித்து, முன்னர் அமர்ந்திருந்த திறந்தவெளி சாலைக்குத் திரும்பிச் சென்றார். இறுதியாக, பாபா அவரை அணுகி, மஸ்தின் கால்களைத் தொட்டு தலைவணங்க முடிந்தது; இந்த எளிய நிகழ்வின் மூலம் எத்தனை நபர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை அந்த மஸ்த் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது என்பது யாருக்கும் தெரியாது - பாபாவைத் தவிர்ப்பதன் மூலம் மஸ்த் இந்தப் பொறுப்பைத் தவிர்க்க நினைத்தார்! அவர் மேற்கொண்ட பணியில் மகிழ்ச்சியடைந்த பாபா, மஸ்திடமிருந்து திரும்பி வந்து, இந்தத் தொடர்பில் தனது திருப்தியை வெளிப்படுத்தினார். அவர் காரைச் சென்றடைந்தபோது பாபாவின் முகம் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தது, ஏனெனில் பேஷ்வரி ஒரு மேல்நிலை மஸ்த், மற்றும் அவருடனான பாபாவின் பணி வெற்றிகரமாக முடிந்தது.

அதற்குப் பிறகு, பாபா 'ஷம்ஷான் காட்' என்று அழைக்கப்படும் தகன மைதானத்திற்குச் சென்றார்; அங்கு, அழகான முகத்தோற்றமுடைய 'ரக்பீர்' என்ற மஸ்த் தங்கியிருந்ததைக் கண்டார். பைதூல் முதன்முதலில் அவரிடம் சென்ற

வேளையில், மஸ்தின் அருகில் ஒரு சீக்கியர் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரைத் தொடர்பு கொள்ள பாபா மஸ்தை அணுகியபோதும், அந்த சீக்கியர் அங்கேயே அமர்ந்திருந்து, பின்னர் அவர் தானாகவே வெளியேறினார். பாபா திருப்திகரமாக மஸ்தைத் தொடர்பு கொண்டு பத்து ரூபாய் நோட்டை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து பாபா மீன் பஜாருக்குச் சென்றார், அங்கு அடையாளம் தெரியாத ஒரு மஸ்த் அட்டைப்பெட்டிகளால் செய்யப்பட்ட ஒரு குடிலில் தங்கியிருந்தார். பாபா அவருடன் கலந்துரையாடி நிகழ்த்திய தொடர்பில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

டெஹ்ரா டூனுக்குத் திரும்பும் வழியில், பாபா பழைய மஸ்த் மௌலானாவை இரண்டு முறை தொடர்பு கொள்ள முடிந்தது. டெஹ்ரா டூனுக்கு வர முடியுமா என்று அவரிடம் மீண்டும் கேட்கப்பட்டது, ஆனால் மஸ்த் அதை விரும்பவில்லை. பாபா, "**அவர் மிகவும் புத்திசாலியான குழந்தை**" என்று குறிப்பிட்டார்.

திரும்பி வரும் வழியில், ஒரு காலில் ஷூவும் மறுகாலில் செருப்பும் அணிந்த மஸ்த் ஒருவரை சாலையோரம் சந்தித்து, பாபா அவருடன் கலந்துரையாடி, மேற்கொண்ட தொடர்பில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

ஸஹாரன்பூரில் மஸ்த் பயணம் நிறைவடைந்ததும், பாபாவும் குழுவும் அன்று மதியம் டெஹ்ரா டூனுக்குத் திரும்பி வந்தனர். பெண்டுவுடன் இதர மண்டலி முஸாஃபர்நகரிலிருந்து வந்திணைந்தனர். 1924 முதல் யு.எஸ்.எஸ்.ஆர். அதிபராக இருந்த, ரஷ்ய சர்வாதிகாரி ஜோஸப் ஸ்டாலின் மார்ச் 7ஆம் நாள் மாஸ்கோவில் தற்செயலாகக் காலமானார்.

பாபா தனது பணியின் நிமித்தம் காஷ்மீருக்கும் செல்ல நினைத்தாலும், அவர் இப்போது 'காலவரையின்றி' அங்குச் செல்வதை ஒத்திவைத்தார். டாக்டர் டான் காஷ்மீர் செல்வதற்கான அனுமதி கோரி அஹமதுநகர் காவல்துறையிடம் விண்ணப்பித்திருந்தார், ஆனால் இப்போது அவர் டெஹ்ரா டூன் குழுவுடன் இணைந்தார்.

டெஹ்ரா டூனில், ஒரு நாள் மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், பாபா கிஷன் ஸிங்கிற்கு ரயிலின் ஒப்புமையைப் பயன்படுத்தி விளக்கினார்: "**சரக்கு ரயிலில் பல பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் தங்கம் போன்ற நல்ல பொருட்களும், சிலவற்றில் இரும்பு, தாமிரம், எண்ணெய், கழிவுப் பொருட்கள் போன்ற மதிப்பு குறைந்த பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அது நல்ல பொருளாக இருந்தாலும் சரி, கெட்டதாகவோ, மதிப்பு குறைந்ததாக இருந்தாலும் சரி, எஞ்சினுடன் இணைக்கப்பட்டால், பெட்டிகள் எஞ்சின் செல்லும் இடத்திற்குச் செல்கின்றன, என்ஜின் கெட்டதை விட்டுவிட்டு நல்லதை மட்டுமே கொண்டு**

**செல்வதில்லை. நான் எஞ்சின் போன்றவன், என்னுடன் இணைந்திருப்பவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக இருந்தாலும் அல்லது தீயவர்களாக இருந்தாலும் அவர்களின் இறுதி இலக்கை அடைவது திண்ணம்."**

"ஆனால் நாங்கள் எப்படி உங்களுடன் இணைந்திருப்போம்?" கேக்கி நலவாலா வினவினார்.

**"என்னுடன் இணைந்திருப்பதன் அர்த்தம், என் விருப்பங்களைப் பின்பற்றுவது, என்னை நினைவில் கொள்வது மற்றும் உங்களை மறந்துவிடுவது"** என்று பாபா பதிலளித்தார்.

குமார் உடனே, "இது முடியாத காரியம் பாபா! இவ்வண்ணம் இணைந்திருப்பது உங்கள் அருளைப் பொறுத்தது" என்றார்.

அதற்கு பாபா, **"நீங்கள் முயற்சி செய்தால் என் அருளுக்குத் தகுதியானவராக மாறுவீர்கள். நான் அளவற்ற கருணைக் கடல், கருணையைப் பொழிவதே என் இயல்பு. கடலில் சந்தனத்தையோ, அசுத்தத்தையோ எறிந்தால், அதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா?"**

"இல்லை" என்றார் குமார்.

**"ஏன் இல்லை?"**

"கடலில் ஏராளமான நன்னீர் உள்ளது, அதில் ரோஜாக்களை வீசினாலும் வாசனை வராது, குப்பையைக் கொட்டினாலும் துர்நாற்றமும் வீசாது" என்று குமார் பதிலளித்தார்.

பாபா கூறினார், **"சமுத்திரம் சந்தனக் குவியல்களையும், குப்பைகளையும், நல்லவை, தீயவை அனைத்தையும், வரம்பற்றதாக உள்வாங்கிக் கொள்கிறது. அதேபோல், உங்கள் நல்ல, தீய செயல்கள் அனைத்தையும் என் மீது 'வீசி எறிய', அவற்றை நான் உள்வாங்கிக்கொண்டு, உங்களை எல்லா பிணைப்புகளிலிருந்தும் விடுவிப்பேன். ஆனால் 'வீசி எறிவது' அல்லது எனக்கு அர்ப்பணிப்பது என்பதன் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் அத்தகைய செயல்களில் ஈடுபடுவதை முற்றிலும் மறந்துவிட வேண்டும், ஏனென்றால் அவற்றை நினைவில் கொள்வது உண்மையான அர்ப்பணிப்பு ஆகாது."**

1953, மார்ச் 13 அன்று, மாயையின் கேலிக்கூத்து மற்றும் எதிர் மாறானவற்றின் பரிணாமத்தைப் பற்றி பாபா விளக்கினார்:

**பரிணாம வளர்ச்சியின் தன்மை எதிர் மாறானது. இதற்கு முன்னதாக உலகம் இரண்டு பாகங்களாக ஒருபோதும் பிரிக்கப்படவில்லை - அமெரிக்கா அதன் நட்பு நாடுகளுடன் ஒருபுறம், ரஷ்யா அதன் துணைக்கோள்களுடன் மறுபுறம். இதைத்தான் குருநாதர்கள் திட்டமிட்டு செய்திருக்கிறார்கள். அதை எப்படி செய்வது என்று அவர்களுக்குத் தெரியும்.**

பரிணாமம் எப்பொழுதும் எதிர் மாறானவைகளைக் கொண்டுள்ளது. இன்று துணிச்சலான மனிதன் அடுத்த பிறவியில் முதல் தர கோழையாக இருப்பான் அல்லது கடந்த பிறவியில் கோழையாக இருந்திருப்பான்.

நிகழ்கால வாழ்க்கையும் கூட எதிர்மாறான ஒன்றாகும். ஒரு குழந்தை பால் அருந்தி வாழ்கிறது மற்றும் முற்றிலும் காமத்திலிருந்து விடுபட்டிருக்கிறது; ஆனால் குழந்தை வளரும் பருவத்தில், தனது உணவை திரவத்திலிருந்து திடப்பொருளாக மாற்றும் வேளையில், அவர் காமத்தை அறிந்து கொள்கிறார். அவர் வளர வளர, அவர் முதுமையை அனுபவிக்கிறார் மற்றும் வாழ்க்கையின் பார்வை மீண்டும் மாறுகிறது. அவர் பிறந்தார், இப்போது அவர் இறக்கிறார் - அனைத்தும் எதிர் மாறானது. ஒரு வாழ்க்கையில் பல எதிர் புள்ளிகள் இருந்தால், முழு பரிணாம செயல்பாட்டிலும் இன்னும் எத்தனை எதிரெதிர் இயல்புகள் இருக்கும்?

21ஆம் தேதி காலையில், பாபா மண்டலி மற்றும் பிற சீடர்களுக்கு, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட பொருள் சார்ந்த அடிமைத்தனத்தின் முடிவும், ஆன்மீக சுதந்திரத்தின் ஆரம்பமும், நெருங்கி வருவதாக பலமுறை வலியுறுத்தி வந்ததார்; 1953, ஏப்ரல் இறுதிக்குள் வரும் என்பதை வெளிப்படுத்தினார், அல்லது வேறு சில சமயங்களில், அவர் இறுதியாக தனது உடலைக் கைவிடுவதற்கு முன்பு, கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட நான்கு சம்பவங்கள் நடக்க வேண்டும். அவர் அதை இவ்வாறு விளக்கினார்:

**எனது உடலைக் கைவிடுவதற்கு முன்பு, நான் உலகளாவிய அவமானத்தையும், வெளியளவில் தோன்றும் உலகளாவிய தோல்வியையும், வன்முறை மரணத்தையும் சந்திக்க வேண்டியிருக்கும், இது உலகளாவிய தெய்வீக மகிமையில் உச்சக்கட்டத்தை அடையும் என்பது முற்றிலும் உறுதியானது. 'வன்முறை மரணம்' என்பதன் மூலம், தெய்வீக சத்தியத்தின் புகழ்பெற்ற வெற்றிக்கு முன், நான் பெரும் உடல் ரீதியான உபாதைகளை அனுபவிப்பேன் என்றும், என் உடலால் தாங்கப்படும் இந்த வன்முறை இறுதியில் பௌதீக உடலைத் துறப்பதற்குக் காரணமாக இருக்கும் என்றும் நான் கூறுகிறேன். தெய்வீக உண்மைப்பொருளின் வெளிப்பாடு எனது மௌனத்தைக் கலைப்பதோடு கைகோர்த்துச் செல்லும்.**

**இன்று என்னுடன் இங்கு அமர்ந்திருப்பவர்களும், இந்த நேரத்தில் என்னை விட்டு விலகி இருப்பவர்களும் ஜாக்கிரதையாகவும் தயாராகவும் இருக்க வேண்டும். நேரம் நெருங்கிவிட்டது - உங்களின் நேர்மையும், உங்கள் குருநாதரிடம் நீங்கள் முழுமையாக சரணடைவதும் தீவிர சோதனைக்கு உள்ளாகும் தருணமும் வெகுதொலைவில் இல்லை. தனிப்பட்ட முறையில் நான் அல்ல, ஆனால் சூழ்நிலைகள் உங்கள் குருநாதரான என்னிடம், உங்கள் சுய அர்ப்பணிப்பின் உண்மைத்தன்மையை சோதிக்கும்.**

பாபாவை உறுதியாகக் கடைப்பிடித்தவர்களும், தற்போது அவருடன் இருப்பவர்களும், தேவையான அவமானங்களுக்கும், வெளியளவில் தோன்றும் முழுமையான தோல்விக்கும், உடல் ரீதியான வன்முறைக்கும் தங்கள் உயிரை விலையாகக் கொடுக்கவேண்டி இருந்தாலும், முற்றிலும் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் குழுவிடம் மேலும் விளக்கினார்.

மாறாக, என்னுடன் தொடர்பில் இருக்கும் அனைவருக்கும் அவமானம், தோல்வி மற்றும் உடல் ரீதியான வன்முறை போன்றவற்றிற்கான தேவை இராது.

இந்தத் தாக்குதல்களை தயக்கமின்றி, துணிச்சலுடன் எதிர்கொண்டு, அவர்களின் சோதனைகளைத் தயங்காமல் தாங்கிக்கொள்பவர்கள், இறுதியில் தெய்வீக மகிமையின் இணைப் பங்காளர்களாகவும், வாரிசுகளாகவும் இருப்பார்கள். இந்த வெளியளவில் தோன்றும், ஆனால் கட்டாயமான பேரழிவுகளிலிருந்து தப்பித்துக் கொள்பவர்களைப் பொறுத்த வரையில், தங்கள் அர்ப்பணம், நேர்மையாகவும் முழு மனதுடனும் இருந்ததா அல்லது சுயநல நோக்கங்களால் வடிவமைக்கப்பட்டதா என்பதற்கு, தங்கள் சொந்த செயல்களே சாட்சியமாக இருக்கும்.

ஒருவரின் உடைமைகள், உடல் மற்றும் மனம் - அனைத்தையும் முழுமையாக அர்ப்பணிப்பதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி மக்கள் பொதுவாக, மேலோட்டமான புரிதலைக் கொண்டுள்ளனர். ஒரு குருநாதரிடம், தான் முழுவதுமாக சரணடைந்தேன் என்ற ஒரு சீடனின் சுய திருப்தியுடனான நம்பிக்கை, அறியாமை மற்றும் பாசாங்குத்தனத்தின் காரணமாகும். ஏனென்றால், வார்த்தைகளின் முக்கியத்துவத்தை உண்மையில் எடைபோட்டு, ஆழமாக சிந்தித்துப் பார்த்தால், ஒருவரின் உடைமைகள், உடல் மற்றும் மனம் - ஒருவருடைய வாழ்வின் அடிப்படை - முழுவதுமாக குருநாதரிடம் சமர்ப்பிக்கப்படும் தருணத்தில், சுயத்தைப் பற்றிய எந்த சிந்தனைக்கும் இடமில்லை; மனம் இப்போது குருநாதருக்கு சொந்தமானது.

நகர்வதும், சுவாசம் விடுவதும் கூட பாசாங்குத்தனம், ஏனென்றால் உடல் அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த முழுமையான, சாத்தியமற்ற சரணாகதியை குருநாதர் தனது சீடர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. ஒரு சீடனிடம் கோரப்படுவது, அது எவ்வளவுதான் சீடனின் மனோபாவத்தின் தூண்டுதல்களுக்கு மாறாக இருந்தாலும், எவ்வளவுதான் அவனது இயல்பான விருப்பங்கள் அல்லது நம்பிக்கைகளுக்கு ஒவ்வாததாக இருந்தாலும், எவ்வளவுதான் கட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள் ஏற்றுக்கொள்வது கடினமாக இருந்தாலும்,

குருநாதரின் விருப்பத்திற்கு அவன் முழுமையாக சரணடைதல் மட்டுமே ஆகும்.

மண்டலியில் ஒருவரை பாபா உதாரணமாகச் சுட்டிக்காட்டினார்:

**நாளை உங்களை ஒரு பேரரசனாகவும், மறுநாளே உங்களை ஒரு துப்புரவு செய்பவனின் நிலைக்குக் கொண்டு வருவதாகவும் இருந்தால், எனது தீர்ப்பில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நீங்கள் எதிர் எதிரான நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் குருநாதரின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் மட்டுமே அக்கறை கொண்டு, எந்த நேரத்திலும், கொடுக்கப்பட்ட எந்த விதமான பாத்திரத்திலும் பொருந்துவதற்கு ஏற்ப, நீங்கள் எப்பொழுதும் தடையில்லா சமநிலையுடன் இருக்க முயற்சிக்க வேண்டும்.**

பிற அனைவரையும் நோக்கி பாபா தொடர்ந்தார்:

**ஒரு சீடரைப் பொறுத்தவரை கீழ்ப்படிவது ஒன்றே போதுமானது. ஒரு சீடராக, உங்கள் சுயத்தை குருநாதருக்கு முழுமையாகவும் உண்மையாகவும் அர்ப்பணித்திருக்கும் வேளையில், உங்கள் கடமை என்னவெனில், நீங்கள் உங்கள் சுய சிந்தனைக்கு இடந்தராமல் கீழ்ப்படிவதாகும், உங்கள் வரையறுக்கப்பட்ட அறிவுத்திறனையோ அல்லது உங்கள் குருநாதரின் விருப்பத்திற்கு எதிராக உங்கள் பகுத்தறிவையோ ஒருபோதும் உபயோகித்து, ஒப்பிட முயற்சிக்காதீர்கள். குருநாதர் சொல்லும் அல்லது செய்யும் எதையும் நீங்கள் தன்னிச்சையாக ஏற்றுக்கொள்வதும், அவருக்கு நீங்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் கீழ்ப்படிவதும், நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடிகள் என்று அழைக்கப்படுபவற்றிலிருந்து உங்களைப் பாதுகாப்பாக வழிநடத்தும்.**

**எனவே தைரியமாக இருங்கள், உங்களுக்கு நீங்களே நேர்மையாக இருங்கள். குருநாதருக்குக் கீழ்ப்படிந்து, அவர் உங்களிடம் கேட்கும் அனைத்தையும் மனமுவந்து வழங்குங்கள். கடவுளால் விதிக்கப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றி, உங்களுடைய பங்கை ஆற்றுவது போல், அனைத்தையும் செவ்வனே செய்யுங்கள். ஏப்ரல் மாத இறுதிக்குள் நான் நிறைவேற்றினாலும் சரி, அல்லது வேறு எந்த வருடத்தின் இறுதிக்குள்ளாயினும் சரி, அது அனைத்தும் கடவுளின் விருப்பத்தைச் சார்ந்தது. மேலும், நிகழவிருக்கும் எதுவும் உங்கள் கைகளில் இல்லாதபோது, அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், நான் உங்களுக்கு இதை மட்டும் சொல்கிறேன், அது இந்த ஏப்ரல் இறுதியில் இல்லையென்றால், எதிர்வரும் எந்த ஆண்டும் ஜூலை 11 முதல் அக்டோபர் 16 வரைக்குள் இருக்கும்.**

எனது அனல் பறக்கும் சுதந்திர வாழ்வின் தொடக்கத்தில், 1953, ஏப்ரல் இறுதிக்குள் உச்சக்கட்டத்தை கொண்டு வர விரும்புவதாக நான் கூறியிருந்தேன். ஆனால் உங்கள் அனைவருடனும் நேர்மையாக இருக்கும் பட்சத்தில், இன்றைய சூழ்நிலையில், நான் அதைச் சொல்லியாக வேண்டும். என்னால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பணியில் 50 சதவிகிதம் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எஞ்சியுள்ள 50 சதவிகிதத்துடன், மார்ச் 24 தொடங்கி 21 நாட்கள் தீவிரமாகப் பணிபுரிவதன் மூலம், சிறப்பான தருணத்தை விரைவுபடுத்த முயற்சிப்பேன். இந்தக் காலகட்டத்தில், நான் திட்டமிட்டபடி உச்சக்கட்டத்தை எட்ட, நான் மீண்டும் மீண்டும் எனது அன்பர்களுக்கு கடந்த சில மாதங்களாக அறிவித்ததற்கு இணங்க, ஒருமுகப்படுத்தப்பட்ட தீவிரத்துடன் முயற்சிப்பேன். இறைவன் சித்தத்தால் எனது பணி முழு திருப்தியுடன் நிறைவேறினால், ஏப்ரல் மாத இறுதியில் அனைத்து குழப்பங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதையோ அல்லது அனைவருக்கும் நன்மை பயக்கும் முன்னேற்றத்தின் ஆரம்பத்தையோ நீங்கள் காண்பீர்கள்.

ஆனால், மாறாக, ஏப்ரல் இறுதிக்குள், விரும்பிய முடிவுகள் வராவிட்டால், அதற்கான சரியான தருணம் இன்னும் வரவில்லை என்பதையும், நீங்களும் மனிதகுலமும் உங்கள் சகிப்புத்தன்மைக்கு அதிகபட்ச இடமளிக்க வேண்டும் என்பதையும் என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்; மேலும், இந்த யுகத்தின் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு உங்கள் பொறுமையை இன்னும் சிறிது காலம் சோதிப்பதாயினும், இது திடீரென, எதிர்பாராமல் வரும்.

ஆகவே, நான் அடிக்கடி தள்ளிப்போடுவதைக் கண்டு விரக்தியடையவோ, நம்பிக்கையை இழக்கவோ வேண்டாம் என்றும் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், மேலும் தெய்வீக சத்தியத்தின் நித்திய வெற்றியில் நம்பிக்கையுடன் இருந்து, அவமானங்களையும் சிரமங்களையும் சந்திக்கத் தயாராக இருக்கும் வேளையில், விழிப்புடனும் கவனமாகவும் இருக்குமாறு உங்களை எச்சரிக்கிறேன்.

பாபா மேலும் மண்டலியிடம் கூறினார்:

எல்லா நேர்மையுடனும், கடவுளின் பெயரால், உங்களில் எவரையும் விட இந்தக் காலகட்டத்திற்காக நான் ஏங்குகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள், தைரியமாக இருங்கள், கஷ்டங்களை மன உறுதியுடன் எதிர்கொள்ளுங்கள். இதைச் செய்வதன் மூலம், நீங்கள் எனக்கு உதவுவீர்கள். உங்கள் அனைவருக்கும் நான் சொல்லிக் கொண்டிருந்ததை, கடவுள் அதை வார்த்தைக்கு வார்த்தை நிறைவேற்றுவார் என்பதில்

**சந்தேகமில்லை. ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், நான் என் வேலையை மிகவும் தீவிரமாகச் செய்வேன்**.

இந்த அறிவிப்புக்குப் பிறகு, கேஷவ் நிக்கமுடன் பாபா நிகழ்த்திய நேர்காணலில், ஹமிர்பூர் மாவட்ட மக்கள், பாபா மீது கொண்டுள்ள அன்பைப் பற்றி அவர் பேசினார். பாபா, கேஷவிடம் அவரது பணியைத் தொடருமாறு கூறி, அவரை நியமனம் செய்து, "**அந்த வேலையில் நீங்கள் கேலி செய்யப்படலாம், அவமானப்படுத்தப்படலாம் மற்றும் உங்கள் உயிரையும் இழக்கலாம்**" என்று எச்சரித்தார். பொறுப்பை ஏற்க, கேஷவ் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார். கேஷவ் ஹமிர்பூரிலிருந்து அழைத்து வந்த மஸ்த் ஷா ஸாஹேபுடன் பாபா, சில நாட்கள் பணிபுரிந்தார். இதற்கிடையில், பாபா கேஷவை டெஹ்ரா டூனில் சில நாட்கள் தங்க அனுமதித்தார்.

மார்ச் 21 ஈரானி புத்தாண்டாக கொண்டாடப்பட்டது, மேலும் பாபாவுடன் அந்த நாளைக் கழிக்க கேக்கி நலவாலாவின் குடும்பத்தினர் அழைக்கப்பட்டனர்.

டெஹ்ரா டூனில், எந்த இடையூறும் இல்லாமல் பணிபுரிய விரும்பியதால், தரிசனம் அல்லது நேர்காணல் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று பாபா, கிஷன் ஸிங்கிடம் கூறியிருந்தாலும், அவர் வந்த பிறகு மக்கள் அடிக்கடி தரிசனம் வேண்டி வந்தனர். கடந்த டிசம்பர் மாதத்தில் டெல்லியில் பாபாவை சந்தித்த ஹரிசந்த் கோச்சார் என்ற வழக்கறிஞர், பாபாவின் பங்களா முன்னால், காலை முதல் மாலை வரை அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். பாபா அடிக்கடி கிஷன் ஸிங்கை அனுப்பி அவரை அங்கிருந்து போகுமாறு அறிவுறுத்தினார். இருப்பினும், ஒரு கட்டத்தில், பாபா அவருக்கு ஆறுதல் கூற அவரது இல்லத்திற்கு ஒரு முறை விஜயம் செய்தார்.

பலர் பொருள் ஈட்டும் நோக்கத்துடன் வந்தனர், பலர் மெஹர் பாபாவின் தரிசனத்தை உண்மையாக விரும்பினர். பாபாவின் குடியிருப்புக்கு எதிரே 38 வயதான பால் கிஸன் பக்ஷியும், பாபாவை மிகவும் நேசித்த அவரது மனைவி மெஹர் காந்தா (33) என்பவரும் வசித்து வந்தனர். அவர்கள் ஒருமுறைகூட பாபாவின் பங்களாவுக்கு அருகில் வரவோ, தரிசனத்துக்கான கோரிக்கையை முன்வைக்கவோ முயன்றதில்லை, எந்த விஷயத்திலும் தடையாக இருந்ததுமில்லை.

இதற்கிடையில் பாபாவின் தரிசனத்தை விரும்பியவர்கள் பலர் இருந்ததால், 1953, மார்ச் 23 திங்கட்கிழமை (ராம நவமி பொது விடுமுறை நாளன்று) தரிசனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டு, செய்தித்தாள்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டது; ஆனால் பாபா சிறப்பு விதானம் அமைப்பதைத் தடைசெய்து, மண்டலியின் பங்களாவின் மண்டபத்தில் தரிசன நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்தார். தரிசனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரம் காலை 8:00

முதல் 11:00 மணி வரை, மற்றும் மதியம் 2:00 முதல் மாலை 6:00 வரை. அதிகாலையிலிருந்தே திரள் திரளாக மக்கள் வந்து தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். பாபாவிடம் எதையும் கேட்பது அல்லது அவரது பாதங்களைத் தொடுவது தடைசெய்யப்பட்டது. பாபா ஒவ்வொருவருக்கும் பிரசாதம் வழங்க, அவர்கள் அவருக்கு வணக்கம் செலுத்தும் வேளையில், பாபா, அவரது கையால் அவரது நெற்றியைத் தொட்டு, தரிசனம் செய்தவருக்கு மரியாதை செலுத்தினார். மக்கள் தரிசனம் செய்தவுடன் வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பாபா சிலரை ஐந்து நிமிடங்களுக்கு அருகில் அமர அனுமதித்தார்; தொடர்ந்து பிறரும் பாபாவின் சகவாசத்தில் இன்னும் சில நிமிடங்களை செலவிடுவதற்காக இடங்களைப் பிடித்துக்கொண்டனர்.

காஷ்மீரைச் சேர்ந்த ஜெகதீஷ் என்ற இளைஞர் ஒருவர், பாபாவின் பாதங்களைத் தொட வேண்டும் என மன்றாடினார். “எந்த சூழ்நிலையிலும் நான் பாதங்களைத் தொடுவேன்” என்று கதறிய வேளையில், அவர் தடுத்து நிறுத்தப்பட்டார்; ஆனால் "பூமியில் எந்த ஒரு சக்தியும் அதைச் செய்வதிலிருந்து என்னைத் தடுக்காது!" என்று கூச்சலிட்டார்.

எரச் சிறுவனுக்கு ஆறுதல் கூற முயன்றார், "பாபாவின் பாதங்களைத் தொடுவது அவரது வெளிப்படையான விருப்பத்திற்கு எதிரானது."

அதற்கு ஜெகதீஷ், “இந்த அறிவுறுத்தலுக்கு நான் கீழ்ப்படியப் போவதில்லை” என்றார்.

குமார், கிஷன் ஸிங் இருவரும் ஜெகதீஷை அழைத்துச் செல்லவிருந்தனர், ஆனால் பாபா, **"அவர் எனது பாதங்களைத் தொடட்டும்"** என்று கூறினார். அவர் உடனடியாக அதைச் செய்து கதறி அழுதார். பாபா அவரை அன்புடன் ஆறுதல்படுத்தி, **"நான் எவரையும் எனது பாதங்களைத் தொடவோ, வணங்கவோ அனுமதிக்கவில்லை. நீங்கள் அன்புடன் செய்தீர்கள், அது நல்லது, இப்போது அதை, பெரும் பேறாகக் கருதி, என்னை எப்பொழுதும் உங்கள் இதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எனது உணர்வு நிலையை அடையும் வரை, மேலும் மேலும் என்னை நேசித்துக்கொண்டே இருங்கள்! நீங்கள் அதைச் செய்வீர்களா?"**

"நிச்சயமாக, பாபா."

**"உங்களால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இப்போது, எனது மனசாட்சி உங்கள் கால்களைத் தொடச் சொல்கிறது. நான் அதைச் செய்கிறேன்!"** பாபா, அந்த இளைஞரின் கால்களைத் தொட்டபோது அவர் அழுதுகொண்டே இருந்தார். பாபா, அவருக்குச் செலுத்திய மரியாதைக்கு ஈடு செய்யும் வகையில், மண்டலியில் ஏழு பேரின் கால்களையும் தொட்டு வணங்கினார். பின்னர் அந்த இளைஞர் வெளி வராந்தாவுக்கு அழைத்துச்

செல்லப்பட்டார், மிகவும் துயரமடைந்த நிலையில், அங்கே அழுதுகொண்டிருந்தார்.

இந்து, முஸ்லீம், பார்சி, கிறிஸ்தவர், சீக்கியர்கள் என அனைத்து மதத்தினரும் பாபாவை தரிசனம் செய்ய வந்தனர். சில சீக்கியர்கள் அவர் முன் நின்றபோது, பாபா அவர்களிடம் குருநானக்கின் ஈரடி வசனங்களைத் திரும்பத் திரும்ப மொழியுமாறு கூறினார். அவர்கள் அதைப் பாராயணம் செய்த வேளையில், சத்குரு நானக் போதித்ததை தங்கள் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார்:

**நாம் வளரும்போது, குழந்தைகளைப் போல் ஆகிவிடுகிறோம் - குழந்தைகளைப் போல், ஆனால் குழந்தைத்தனமாக அல்ல - அப்போது நாம் கடவுளை நேசிக்க முடியும், ஏனென்றால் கடவுளை நேசிப்பதற்கு நாம் ஆசையற்றவர்களாக இருக்க வேண்டும். ஒரே ஒரு ஆசை மட்டும் இருக்க வேண்டும்: கடவுளோடு ஐக்கியமாக வேண்டும் என்ற ஏக்கம். எனவே நாம் வளர்ந்து, குழந்தைகளைப் போல மாறும்போது, நாம் கடவுளை நேர்மையாக நேசிக்க முடியும். நாம் கடவுளை எங்கும் காண்கிறோம். அந்த நிரந்தர மகிழ்ச்சியை எதுவும் அசைக்கவோ, மாற்றவோ அல்லது தடுக்கவோ முடியாது, ஆனால் நாம் நேர்மையுடன் கடவுளைத் தேடுபவர்களாக இருக்க வேண்டும். தற்பெருமை இல்லாமல், நாம் நினைப்பது போல செயல்பட வேண்டும் என்று மேன்மையான குருநாதர்கள் கற்றுக் கொடுத்துள்ளனர். கடவுளின் ஆளுமையைக் கொண்ட குருநானக், எப்போதும் நானக் தாஸாக (சேவகனாக) செயல்பட்டார். எனது அனைத்து ஆசிகளையும் உங்களுக்கு வழங்குகிறேன்.**

அம்ராவதியைச் சேர்ந்த திரு. ஸகானேயின் புதல்வன் டெஹ்ரா டூன் தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயிற்சி படைவீரராக இருந்தார். ராணுவ சீருடை அணிந்து பாபாவிடம் வந்த அவர், பாபாவின் அம்ராவதி நிகழ்ச்சிகள் குறித்து தனது தந்தையிடமிருந்து கடிதம் வந்ததாகவும், அதில் கலந்து கொள்ள முடியாமல் போனதற்கு வருந்துவதாகக் கூறி, மேலும் சில கருத்துக்களுக்குப் பின்னர் அவர் பாபாவிடம், **"உங்கள் மௌனத்தை எப்போது கைவிடுவீர்கள்?"** என வினவினார்.

பாபாவின் பதிலை எரச் எடுத்துரைத்தார்:

**ஒன்று மட்டும் உறுதி. நான், என் உடலைக் கைவிடுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே நான் பேசுவேன். எனது மௌனத்தைக் கைவிடுவதும், கடவுளின் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மௌனம் கலைக்கப்படுவதும் ஒரே நேரத்தில் நிகழும். நீங்கள் அனைவரும் பேசுவதாகக் கூறப்படுவதும், நான் முன்பு பேசியதாக எடுத்துக்கொள்ளப்படும் இந்தப் பேச்சின்**

**வார்த்தைகளால் எந்த பயனும் ஏற்படாது; அப்போது எனது மௌனத்திற்கு அர்த்தம் இருக்காது. அனைவரின் இதயத்தையும் அசைத்து, கடவுள் மட்டுமே உண்மையானவர் என்பதை உணர வைக்கும் 'இறை வார்த்தை' ஒன்றுதான், உச்சரிக்கப்படும் ஒரே வார்த்தையாக இருக்க வேண்டும்; அந்த 'இறை வார்த்தை' அதன் பின்னால் எல்லையற்ற சக்தியைக் கொண்டிருக்கும்.**

**எனவே கடவுள் அந்த வார்த்தையை விரைவில் உச்சரிக்க வைப்பார் என்று நம்புவோம். நான் இப்போது பேசினால், என்னைச் சுற்றி, மக்கள் கூட்டம் அலைமோதும். ஆனால் அது தத்துவவாதிகளின் பேச்சாகவே இருக்கும். 100 சதவிகிதம் நம் மனதிலும், ஆழ் இதயத்திலும் நேர்மையாக இருக்க வேண்டும்; இந்த நேர்மையானது, கடவுள் விரும்புவது நடக்கும் என்பதை நமக்குத் தெரியப்படுத்தும். எனவே நான் விரைவில் பேசி, அனைவருக்கும் அந்த 'இறை வார்த்தை'யைத் தெரிவிப்பேன்.**

கிஷன் ஸிங் விமானப்படை கணக்கு பிரிவில் முக்கிய அதிகாரியாகப் பணிபுரிந்தார். அவருடைய அலுவலக ஊழியர்கள் சிலர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது, பாபா அவர்களுக்கு விளக்கினார்:

**நம் எண்ணங்களிலும் செயல்களிலும் நேர்மையாக இருக்க வேண்டும். நாம் முற்றிலும் நேர்மையாக இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். கடவுளை நேசிப்பவராகக் காட்டிக்கொள்வதை விட, கடவுளை நம்பாமல் இருப்பது நல்லது. நாம் நேர்மையாக இருந்தால் மட்டுமே, நம் கடமைகளைச் செய்யும்போது கூட, கடவுளைக் காண முடியும், ஏனென்றால் நாம் உலகில் ஈடுபாடு இல்லாதவர்களாக உணர்கிறோம். எனவே இந்த நேர்மையை அடைய உங்களுக்கு எனது அன்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன்.**

கேஷவ் நிக்கமின் சகோதரர் தேவேந்திரன், ஹரித்வார் ஆயுர்வேத கல்லூரியில் பயிலும் ஒரு தொகுதி மாணவர்களை அழைத்து வந்தார். தேவேந்திரன் பாபாவிடம், "நான் கடவுளைக் காண விரும்புகிறேன்!" என்று கூறியதற்கு பதில் அளிக்கும் விதமாக, பாபா இந்த வரிகளை கவிதை வடிவில் எடுத்துரைத்தார்:

**சிலர் பணத்தைத் தேடுகின்றனர், சிலர் பெயரைத் தேடுகின்றனர்.**
**சிலர் அதிகாரத்தைத் தேடுகையில், சிலர் புகழைத் தேடுகின்றனர்.**
**சிலர் குழந்தைகளை விரும்பும் வேளையில்,**
**சிலர் கடவுளை விரும்புகின்றனர்.**
**வாழ்க்கை ஒரு நகைச்சுவை,**
**அனைத்தும் ஒரு விளையாட்டு என்கின்றனர்.**

பாபா கவிதையில் 'தேடு' என்ற வார்த்தையின் பயன்பாட்டை விளக்கி, எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**'தேடு' என்ற சொல் இங்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒருவன் முழு மனதுடன் தேடினால், அவன் தேடுவதை அடைகிறான். நீங்கள் தேடியும் கண்டுகொள்ளவில்லை என்று நீங்கள் கூறினால், தேட வேண்டிய அளவுக்கான தீவிரத்தன்மையுடன் நீங்கள் தேடவில்லை என்று அர்த்தம். தேடினால் கடவுளையே கண்டுகொள்ள முடியுமானால், முழு மனதுடன் தேடி, சாதாரண பொருட்களை நாம் ஏன் அடைய முடியாது?**

**இப்போது, கடவுளைத் தேடுவது எப்படி? ஹபீஸ் உறுதிப்படத் தெரிவிக்கிறார்:**

**'உங்கள் வாழ்க்கையை உங்கள் கைகளில் சுமந்தால் மட்டுமே நீங்கள் தெய்வீக அன்பின் பாதையில் நுழைய முடியும்.'**

**'நான் கடவுளைக் காண விரும்புகிறேன்' அல்லது 'நான் கடவுளை உணர விரும்புகிறேன்' என்று சொல்வது 'நான் யானையாக மாற விரும்புகிறேன்!' என்று எறும்பு சொல்வதைப் போன்றது. வெறும் வார்த்தைகளில் எதுவும் இல்லை. கடவுளைத் தேட இதய தாகம் தேவை!**

எல்லா நம்பிக்கைகளையும் கொண்டவர்கள் பாபாவிடம் அறிமுகப்படுத்தப்பட்டனர். குமார் ஒரு நாத்திகரை அழைத்து வந்தார், அவரிடம் பாபா கூறினார்:

**உண்மையான அனுபவத்தால் கடவுளைக் கண்டுகொள்ளும் வரை அனைவரும் நாத்திகர்களே. கடவுளை நேசிப்பவராகப் பாசாங்கு செய்து, நேர்மையற்ற வாழ்க்கையை வாழ்வதை விட நாத்திகராக இருந்து, சொல்லிலும் செயலிலும் நேர்மையாக இருப்பது நல்லது. கடவுள் முற்றிலும் சுதந்திரமானவர். அவருக்கு வழிபாடு தேவையில்லை. நாம் நேர்மையாக இருக்க வேண்டும் என்று மட்டுமே அவர் விரும்புகிறார்.**

தடை செய்யப்பட்டிருந்தாலும் சிலர் கேள்விகள் கேட்பதற்காகவே வந்திருந்தனர். ஒரு நபர் சற்றே ஆணவத்துடன், "கடவுள் ஏன் பிரபஞ்சத்தைப் படைத்தார்?" என்று கேட்டதற்கு பாபா, சிரித்துக்கொண்டே பதிலளித்தார்:

**கடவுள் உலகைப் படைத்தார் என்று யார் கூறுகிறார்கள்? நாம் அதை நம் கற்பனையால் உருவாக்கினோம். கடவுள் உயர்ந்தவர், சுதந்திரமானவர். அவர் இந்த மாயையை உருவாக்கினார் என்று நாம் கூறும்போது, அவரையும் அவரது அளவிறுதியற்ற தன்மையையும் தாழ்த்துகிறோம். அவர் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர், நாம் அவரை நம்மிலும், நம் அன்றாட வாழ்விலும் கண்டுகொண்டால் மட்டுமே, நம் சந்தேகங்கள் அனைத்தும் நீங்கும். அப்போது நாம் அவரைப் பற்றி நினைக்க வேண்டிய தேவையும்**

இராது; நாம் தன்னிச்சையான ஞானத்தைப் பெறுவோம்; நாம் அவ்வாறே ஆகிவிடுகிறோம்.

நீங்கள் இப்போது ஆணாக இருக்கும் வேளையில், ஆணா, பெண்ணா என்று கூட நினைக்க வேண்டியதில்லை. நீங்கள் ஓர் ஆணா அல்லது பெண்ணா என்று எப்போதாவது உங்களை நீங்களே கேட்பதுண்டா? ஆணாக நீங்கள் மாறிவிட்டதால், இல்லை என்பதே உங்கள் பதில். எனவே நாம் கடவுளாக மாறும்போது, நம்முடைய சந்தேகங்கள் அனைத்தும் மறைந்துவிடும். இல்லையேல், அது வெறும் பேச்சு, தர்க்க ரீதியான அறிவு, பகுத்தறிவு சிந்தனை மற்றும் கருத்தியல் கோட்பாடு. உங்கள் அனைவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.

"கடவுளை நாம் எப்படி நேசிக்க முடியும்?" ஒரு பார்வையாளர் கேட்டார்.

கடவுளை எப்படி நேசிப்பது? நீங்கள் எதையும் எப்படி நேசிக்கிறீர்கள்? அழகான பெண்ணின் காதல் வலையில் வீழ்ந்தால் என்ன நடக்கும்? அத்தகைய மனிதனுக்கு எந்த விதிமுறையின் அமைப்பு அல்லது கொள்கையும் இல்லை. அவர் கேலிக்கும் அஞ்சமாட்டார். மக்கள் அவரை பைத்தியம் என்று அழைத்தாலும் கவலைப்படுவதில்லை. எந்த வழியிலாவது பிரியமானவரைக் கண்டுகொள்ள, தன்னை இழப்பதுதான் முக்கிய விஷயம். எனவே, உங்கள் உயிரையும், உலகத்தின் கேலியையும் விலையாகக் கொடுத்து, எந்த வழியிலாவது கடவுளுடன் ஐக்கியமாக உங்கள் ஆழ் இதயத்தில் நீங்கள் தயாராகும் போது, ஒருவேளை நீங்கள் இறை அன்பின் பாதையில் நுழைந்ததாகக் கூறலாம்.

நாம் கடவுளை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நேசிக்க வேண்டும். தொடக்கமற்ற தொடக்கத்தில், படைப்புக்கு முன், கற்பனையானது நிஜப்பொருளுக்கு ஒரு திருப்பத்தைக் கொடுத்ததால், நிழற்பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, மாயையின் பிரமையில் நிஜப்பொருளின் மதிப்பு இழக்கப்பட்டது. எனவே, நித்திய சுதந்திரமாக இருந்த நாம், இந்த மாயையால் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம், மேலும் இந்த இயற்கைக்கு மாறான, திசை திருப்பப்பட்ட நிலையில் நமது ‘முதன்மையான, அசல் சுயத்தை’ இழந்தோம். அப்போது எல்லையற்ற பேரின்பத்தைப் பெற்றிருந்தும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது; கவலைகள், சந்தேகங்கள், தோல்விகள் மற்றும் உதவியற்ற தன்மை ஆகியவை இப்போது நமது அன்றாட வாழ்வின் அனுபவமாக உள்ளது.

ஒரே நொடியில், நாம் இதுவல்ல அந்த எல்லையற்றவர் என்ற உண்மையான இறை அறிவை அடையப்பெற்றால், எல்லா கவலைகளும் மறைந்துவிடும் அல்லது அகன்றுவிடும். ஏனெனில் உண்மையில் இன்ப துன்பங்கள் எதுவுமே இல்லை. மேலும் அறியாமை நீடிப்பதால், அதிலிருந்து

விடுபடவும், நிஜப்பொருளின் உண்மையான மதிப்பை அறியவும், நாம் கடவுளை அனுபவிக்க வேண்டும். நம் வாழ்வின் மூச்சாகவும் உயிராகவும் இருக்கும் இறைவனை நேர்மையான அன்பினால் மட்டுமே அனுபவிக்க முடியும்.

**நம் அன்றாட வாழ்வில் கூட நாம் அவரை அமைதியாகவும் நேர்மையாகவும் நேசிக்க வேண்டும். நம்முடைய அன்பின் மிகக் குறைவான வெளிப்பாடு, கடவுளை மறைத்து வைக்கிறது. உண்ணும்போதும், அருந்தும்போதும், பேசும்போதும், நம் கடமைகளைச் செய்யும்போதும், எவருக்கும் தெரியாமல் தொடர்ந்து கடவுளை நேசிக்க முடியும். கடவுளைக் கண்டுகொள்ளும் போது, அடையப்பெறும் எல்லையற்ற அமைதியும் பேரின்பமும் என்னவென்று உங்களுக்குத் தெரியாது. எனவே, என் அன்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன், அதனால் ஒரு நாள் நீங்கள் கடவுளை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நேசிக்க முடியும்.**

பிற பார்வையாளர்கள் தொடர்ந்து கடவுளை நேசிக்கும் துறவிகள் மற்றும் மஸ்துகளின் மனநிலையைப் பற்றி விசாரித்தனர். பாபா இவ்வாறு விளக்கினார்:

**அன்பின் வாசலை எட்டியவர்களுக்கு அது ஒரு சித்திரவதை. பிரியமான கடவுளிடமிருந்து பிரிந்திருப்பதால் விளையும் வலி மிகவும் தீவிரமானது, வீரர்கள் மட்டுமே அதைத் தாங்கிக்கொண்டு அனுபவிக்க முடியும்; இருந்தும், அவர்கள் வலியைத் தணிக்கும் எந்த நிவாரணத்தையும் தேடுவதில்லை. ஏக்கத்தின் வலியால் அவதிப்படுபவர் மட்டுமே அதை அறிய முடியும், அது, அதன் உச்சத்தை எட்டும்போது, பிரியமானவருடன் ஐக்கியம் சாத்தியமாகிறது.**

**கடவுளை நேசிப்பவர்கள் 'மர்த்-இ-குதா' என்று அழைக்கப்படுகிறார்கள். ஒருவர் கடவுளை நேசிக்கும் வேளையில், கடவுளுடன் ஐக்கியமாகும் ஒரே ஏக்கமும், தணியாத தாகமும் மட்டுமே இருக்கும். "நான் உன்னைப் பார்க்க விரும்புகிறேன், என் அன்பிற்குரியவரே" என்பதே இந்தப் பைத்தியக்கார அன்பனின் நிலையான அழுகையாக இருக்கும். சூழ்நிலைகள் இந்த அன்பனை பாதிப்பதில்லை. எதுவும் அவனை வருந்த வைப்பதுமில்லை. மக்கள் அவனைப் பைத்தியக்காரன் என்று அழைக்கலாம், தாங்கொணாத் துன்பங்களைச் சந்திக்கச் செய்யலாம், ஆனால் அவனுடைய வாழ்க்கையின் நோக்கு கடவுளைப் பார்ப்பது ஒன்றுதான். வெப்பம், குளிர், நோய், சிரமங்கள் எதையும் அவர் நினைத்துக்கூட பார்ப்பதில்லை.**

**ஆனால், இரவும் பகலும் தங்கள் அன்றாட கடமைகளைச் செய்து கொண்டே, இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் இவ்வுலகின்**

**அன்பு, கடவுளை நேசிக்கும் ஒருவரின் அன்பை விட மேலானது! அப்படிப்பட்டவர்கள் எதற்கும் கட்டுண்டவர்களாக இருப்பதில்லை. அவர்கள் எல்லாவற்றையும் செய்கிறார்கள், இருந்தும் அதே நேரத்தில் எதுவும் செய்யாமலும் இருக்கிறார்கள்!**

அன்று மதியம் சில விமானப்படை அதிகாரிகள் தங்கள் மனைவிகளுடன் பாபாவை தரிசனம் செய்ய வந்தனர். ஒரு சிலர் பாபாவின் சொற்பொழிவுகளைப் படித்துவிட்டு அஹமதுநகருக்கு வந்து தரிசனம் செய்ய கடிதம் எழுதினர். பாபா அவர்களுக்கு அறிவித்தார்:

**உங்களைப் பார்த்து என் அன்பையும் ஆசிகளையும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் உங்களை இங்கே அமருமாறு கேட்டிருப்பேன், ஆனால் தரிசனத்திற்காக வெளியே காத்திருக்கும் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால், மேலும் அவர்களை அமர வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால், இது நியாயமாக இருக்காது. காலையில் நான் மக்களை இங்கு அமர அனுமதித்து, சொற்பொழிவு வழங்கும் மனநிலையில் இருந்தேன். எப்படியிருந்தாலும், நான் உங்கள் அனைவருக்கும் என் அன்பை வழங்குகிறேன், ஏனென்றால் அது ஒன்றுதான் முக்கியமானது. வாழ்வதற்கும், உயிரைத் துறப்பதற்கும் சிறந்ததும், தகுந்ததுமான ஒன்று அன்பு. கடவுள் மீதான நம் அன்பு, அவரைப் போலவே நேர்மையானது என்றால், அத்தகைய அன்பு அவர் அனைத்திலும் அனைவரிடத்திலும் இருக்கிறார் என்ற அறிவை நமக்குத் தருகிறது. உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

பால் கிஸனும் அவரது மனைவி மெஹர் காந்தாவும் அன்று காலையிலிருந்து காத்திருந்தனர், ஆனால் பாபாவைப் பார்க்க வாய்ப்பு கிடைக்கவில்லை. பாபா அவர்களை அழைத்து, **"உங்களுக்கு என்ன வேண்டும்?"** என வினவினார்.

மெஹர் காந்தா கண் இமைகளைத் தாழ்த்தி, வெட்கத்துடன், "உங்கள் அன்பைத் தவிர வேறு எதையும் நான் விரும்பவில்லை" என்று பதிலளித்தார்.

**"என் அன்பை உங்களுக்குத் தருகிறேன்"** என்று பாபா உறுதியளித்தார்.

பாபா, பால் கிஸனிடம் அதே கேள்வியை கேட்ட போது, அவர், "உங்களிடம் அனைத்தும் உள்ளது, நான் எதையும் கேட்கத் தகுதியற்றவன். நீங்கள் அதை எனக்குக் கொடுக்கலாம் அல்லது கொடுக்காமல் இருக்கலாம், ஆனால் என்னை என்றென்றும் உங்களுடையவனாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று பதிலளித்தார்.

**"உங்கள் இருவராலும் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; நீங்கள் இருவரும் எனக்குரியவர்கள்"** என்று பாபா பதிலளித்தார். இந்தத் தம்பதியினர்

டெஹ்ரா டூனில் '**மெஹர் தாம்**' என்ற மையத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள், மேலும் பாபா உண்மையிலேயே அவர்களுக்கு அன்பு எனும் பரிசை வழங்கினார்.

வீரேந்திர பாண்டேயும் அவரது மனைவியும் அன்று பாபாவை சந்தித்தனர்.

தரிசனம் நாடும் சிலர் தங்கள் உடல் மற்றும் மன உளைச்சல்களை பாபாவின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். பாபா அவர்களுக்குத் தனித்தனியாக அறிவுரைகளை வழங்கி, அதே நேரத்தில் '**அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றும், எந்த சூழ்நிலையிலும் அதை அலட்சியப்படுத்த வேண்டாம்**' என்றும் எச்சரித்தார்.

டாக்டர் ஆர். பி. குப்தா தனது மனவளர்ச்சி குன்றிய எட்டு வயது மகளை பாபாவிடம் அழைத்து வந்தார், பாபா அந்த சிறுமிக்கு உதவுவதாகக் கூறினார். ஒரு டம்ளர் தண்ணீரைக் கையில் எடுத்து, கடவுளின் பெயரை 101 முறை உச்சரித்து, சிறுமிக்கு அதை அருந்தக் கொடுத்து, சிறிது நேரத்திற்கு பின்னர் அவளை பாபாவிடம் அழைத்து வருமாறு டாக்டர் குப்தாவுக்கு அறிவுறுத்தினார்.

திரு. ஸேகல் என்ற உள்ளூர்வாசி, மனநிலை சரியில்லாத தனது மனைவியை அழைத்து வந்தார். 21 நாட்கள் பாபாவின் நாமத்தை மனைவியின் முன் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு பாபா அறிவுறுத்தினார். அதற்குப் பிறகு, பாபா, கிஷன் ஸிங்கை ஸேகலிடம் அனுப்பி, பாபாவின் அறிவுரைகளை நிறைவேற்றுமாறு நினைவுபடுத்தினார். டாக்டர் நீலுவும் இதே காரணத்திற்காக பலமுறை அனுப்பப்பட்டார், ஆனால் பாபாவின் அறிவுரையை அவர் புறக்கணித்து, தனது மனைவியை ஏதேனும் அதிசயங்கள் மூலம் பாபா குணப்படுத்த வேண்டும் என்று விரும்பினார்.

ஊதா நிற மேலங்கி அணிந்து, டெஹ்ரா டூனுக்கு அருகில் அமைந்த ஒரு கோவிலில் வாழ்ந்த இளம் சாது ஒருவர், அன்று காலையில் தரிசனத்திற்காக வந்தவரை பாபா தனதருகில் அமர வைத்தார். அவர் மீண்டும் அன்று மதியம் வந்து பாபாவிடம் எதையோ கேட்க விரும்பிய போது, எரச் அவரைத் தடுக்க முயன்றார், ஆனால் பாபா அவரைத் தன் மனம் திறந்து பேச அனுமதித்தார். அவர்களிடையே நிகழ்ந்த உரையாடல் கீழ்வருமாறு:

அந்த இளம் சாது பாபாவிடம், "எனது சாதனா (ஆன்மீக பயிற்சி) தொடர்கிறது, ஆனால் நீங்கள் வழங்கக்கூடிய எந்தவிதமான உள் ஆன்மீக உதவிக்காகவும் நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

**"உங்களுடைய தூங்கும் முறை என்ன?"** என்று பாபா கேட்டார்.

"நான் அமர்ந்த நிலையில் தூங்குகிறேன். எனக்கு முன்னால் ஒரு மேஜையை வைத்து ஐந்து மணி நேரம் தூங்குகிறேன்."

**"எத்தனை முறை உணவு உண்கிறீர்கள்?"**

"ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே."

**"நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள், உங்களுக்கு உணவு எங்கிருந்து கிடைக்கிறது?"**

"நான் ஒரு கோவிலில் வசிக்கிறேன்; மக்கள் எதைக் கொடுத்தாலும் நான் அதை உண்கிறேன்."

**"உங்களுக்கு ஏதேனும் பிணைப்புகள், பற்றுகள் உள்ளதா?"**

"எனக்கு சிலருடன் சில தொடர்புகள் உள்ளன, ஒரு குருநாதர்-சீடர் என்ற முறையில் அல்ல, ஆனால் பக்தியின் காரணமாக."

**"மக்கள் உங்கள் கால்களைத் தொடுவதுண்டா?"**

"ஆம்."

**"நீங்கள் கடவுளைப் பற்றி தீவிரமாக இருக்கிறீர்களா?"**

"ஆமாம், அதற்கான ஒரு தீவிர ஆசையும் ஏக்கமும் உள்ளது."

**"உங்கள் மனதில் நல்ல அல்லது தீய எண்ணங்கள் வருவதுண்டா?"**

“24 மணி நேரமும் எனக்கு நல்ல எண்ணங்கள் இருப்பதில்லை. சில எண்ணங்கள் சாதாரணமானவை, சில தீவிரமானவை. ஆனால் உடலால் கஷ்டங்களைத் தாங்க முடிவதில்லை. நான் தியானம் செய்யும்போதோ, கடவுளை நினைக்கும்போதோ எனக்கு தலைவலி ஏற்படுகிறது. மற்றும் இது போன்ற சில."

பாபா பதிலளித்தார், **"இன்று எந்த நேர்காணலும் அனுமதிக்கப்படவில்லை என்றாலும், ஆன்மீக பாதையில் உங்களுக்கு உதவி தேவை என்று எரச் என்னிடம் சில முறை கூறினார். உங்களுக்கு உண்மையில் எனது உதவி தேவைப்பட்டால், இரண்டு விஷயங்களைச் செய்யுங்கள், கடவுள் உங்களுக்கு உதவுவார். இவை:**

**"முதலாவது: உங்கள் கால்களில் எவரும் தலைவணங்க அனுமதிக்காதீர்கள்; மாறாக, நீங்கள் அவர்களை வணங்க வேண்டும்.**

**"இரண்டாவது: இன்றிலிருந்து, சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு, 'பரபிரம்ம பரமாத்மா' என்று உரத்த குரலில் ஒரே ஒரு முறை கதறுங்கள்; கடவுள் காது கேளாதவர் போல நினைத்து கதறவும். ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், ஒரே ஒரு முறை உரத்த குரலில், பாபா காது கேளாதவர் என்ற எண்ணத்தில் 'பாபா' என்று கதறுங்கள்.**

**"நான் உங்களிடம் கூறிய இந்த இரண்டு அறிவுறுத்தல்களும் எல்லா சாதனாக்களிலும் சிறந்தவை, ஆனாலும் மிகவும் கடினமானவை. ரிஷி, முனிகளால் கூட செய்ய முடிவதில்லை. இந்த இரண்டு விஷயங்களிலும் அனைத்தும் உள்ளன. இன்றிலிருந்து தொடங்குங்கள்; நீங்கள் கடவுளைப் பற்றி தீவிரமாக இருக்கிறீர்கள் என்பதை அவர் உணரட்டும். இதற்கும் நீங்கள் உறங்குவதற்கும் உண்ணுவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை, இதை நீங்கள்**

**விரும்பும் விதத்தில் செய்யலாம். ஒருவர் கூட உங்கள் கால்களில் தலைவணங்கினால், அது அனைத்தையும் கெடுத்துவிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த உத்தரவு பதினொரு மாதங்களுக்கு மட்டுமே; அதன் பிறகு கடவுள் என்ன செய்கிறார் என்று பார்ப்போம்."**

அந்த நாள் இரவிலிருந்தே பாபாவின் அறிவுரைகளை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்த சாது மகிழ்ச்சியுடன் வெளியேறினார்.

அன்று, ஹரிசந்த் கோச்சார் பாபாவை தரிசனம் செய்ய அவர் முன் வந்தார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஹரிசந்த், ஒரு நேரத்தில் பாபாவின் பங்களாவின் வெளியே மணிக்கணக்கில் அமர்ந்திருந்ததை வழக்கமாகக் கொண்டார்; அதன் விளைவாக அவரது மன மற்றும் பொருளாதார நிலை மோசமடைந்தது. பாபா, "**நீங்கள் எதைச் சொல்ல விரும்புகிறீர்களோ அதை ஐந்தே நிமிடத்தில், நேர்மையாகச் சொல்லுங்கள்**" என்று கூறினார்.

"எனது மனக் கவலைகளிலிருந்து என்னை விடுவித்து, உங்களுடன் இருக்க என்னை அனுமதியுங்கள்" என்று ஹரிசந்த் வேண்டுகோள் விடுத்தார். “இந்த உலகம் ஓர் ஏமாற்று உலகம், நான் அதில் வாழ விரும்பவில்லை. எனது எளிமையைக் கண்டு மக்கள் என்னை ஏளனம் செய்கிறார்கள், நான் ஒரு நாள் உயிரைத் துறந்துவிடுவேன். நீங்கள் மண்டலிக்கு சொற்பொழிவு வழங்கும்போது, தினமும் இங்கு உங்களுடன் இருக்க என்னை அனுமதியுங்கள்."

அதற்கு பாபா, "**சொற்பொழிவுகளைக் கேட்க அழைக்கப்பட்டவர்கள் நாளை முதல் வர மாட்டார்கள். பணிக்காக வரும் என் அன்பர்களும் இங்கு வராமல் தடை செய்யப்படுவார்கள்**" என்றார்.

ஹரிசந்தை கேலியும் கிண்டலும் செய்யும் நபர்களைப் பற்றி பாபா மேலும் கூறினார்: "**கடவுளையும் ஆன்மீக பாதையைப் பற்றியும் உங்களுக்குத் தெரியாது. மக்கள் நம்மிடம் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டாலும், மக்கள் நமக்கு சிரமங்களைத் தந்தாலும், நம்மை ஏமாற்றினால், நாம் நேர்மையாக இருக்க வேண்டும். உண்மையில், நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள், ஏனென்றால் இந்த ஏமாற்றுக்காரர்கள், நமது எதிரிகள் என்று அழைக்கப்படுபவர்கள், நமது நண்பர்கள், அவர்கள் நமது பலவீனங்களையும், பாவங்களையும் கழுவி, கடவுளை நோக்கிச் செல்லும் நம் பாதையை தூய்மைப்படுத்துகிறார்கள்; அவர்கள் நம்மை ஏமாற்றுவதில்லை, மாறாக நமக்கு உதவுகிறார்கள், தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.**"

அதைத் தொடர்ந்து பாபா, ஹரிசந்துக்கு இந்த அறிவுரைகளை வழங்கினார்:

**"முதலாவது: எல்லா சூழ்நிலையிலும் நேர்மையாக இருங்கள்.**

**"இரண்டாவது: வணிகத் தகராறுகளில், அறிவுரைகளின்படி, தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுத்து, உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், ஆனால் மனதில் கசப்புணர்வு வேண்டாம். நான் உங்களுக்கு உள்ளளவில் உதவுவேன்.**

**"மூன்றாவது: என்னை மேலும் மேலும் நேசிக்கவும்."**

ஹரிசந்த், பாபாவிடம் இந்தக் கட்டளைகளைப் பின்பற்றுவதற்கான பலத்தை அளிக்குமாறு வேண்டிக்கொண்டார், மேலும் பாபா, **"நான் யாருக்கு அறிவுரைகளை வழங்குகிறேனோ, அதே சமயம் அதை நிறைவேற்றும் பலத்தையும் அவருக்கு வழங்குகிறேன்"** என்று குறிப்பிட்டார்.

ஹரிசந்த் தனது மனச் சுமையின் பெரும் பகுதியைக் குறைத்துக் கொண்டு வெளியேறினார்; ஆனால் பாபா டெஹ்ரா டூனில் தங்கியிருந்த போது, அவர் பாபாவைத் தனியாக விட்டபாடில்லை; எப்போதாவது அவரிடம் வர அனுமதிக்கப்பட்டார்.

டெஹ்ரா டூனில் உள்ள கண்பார்வையற்றோருக்கான புகலிடத்திலிருந்து பலர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். மெஹர் பாபாவின் பௌதீக உடலை அவர்களால் பார்க்க முடியாவிடிலும், அவரது அன்பை உணர்ந்து பாராட்ட முடிந்தது. பாபா அவர்களுக்கு ஆறுதல் கூறினார்: **"முழு உலகமும் குருடானது, ஏனென்றால் அது கடவுளை உண்மையாகப் பார்க்க முடியாது, அது பார்ப்பது அனைத்தும் பொய்யும், போலியுமாகும். அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், மாயையில் மூழ்கியவர்களை விட நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்."**

ஒரு கல்லூரிப் பேராசிரியர் பாபாவிடம், "வாழ்க்கை என்றால் என்ன?" என வினவினார்.

பாபா புன்னகைத்து, அவரைப் பார்த்து பதிலளித்தார்: **"வாழ்க்கை ஒரு பெரிய நகைச்சுவை! இதை அறிந்தவர்களைப் பிறரால் புரிந்து கொள்ள முடியாது. அதை அறியாதவர் மாயையின் பொய்த்தன்மையில் தன்னை உணர்கிறார். அவர் இந்த பிரச்சினையை இரவும் பகலும் சிந்தித்தாலும் அதை அறியும் திறனற்றவராக தன்னைக் காண்கிறார்.**

**"ஏன்? மக்கள் வாழ்க்கையைத் தீவிரமாகவும், கடவுளை இலகுவாகவும், லேசாகவும் எடுத்துக்கொள்கிறார்கள், அதேசமயம் நாம் கடவுளைத் தீவிரமாகவும், வாழ்க்கையை இலகுவாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு நாம் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்தோம், எப்போதும் மாறாமல் இருப்போம் - அதாவது இந்த நகைச்சுவை நாடகத்தின் தயாரிப்பாளர் என்று நமக்குத் தெரியும்! இந்த அறிவு பகுத்தறிவால் அடையப்பெற்றதல்ல, அனுபவத்தால் பிறந்தது."**

இவ்வாறு, டெஹ்ரா டூனில் நடந்த விழா, மிகுந்த மகிழ்ச்சிக்கு மத்தியில் நிறைவுக்கு வந்தது, மறுநாள் பாபா தரிசனம் வழங்குவதை நிறுத்தினார்.

கிட்டத்தட்ட 2,500 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மார்ச் 24 அன்று, கேஷவ் நிக்கம் தான் அழைத்து வந்த மஸ்துடன் ஹமிர்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார். மெஹர்ஜி ஐந்து நாட்கள் தங்குவதற்காக மும்பையிலிருந்து 25ஆம் தேதி வந்தார்.

தென்கிழக்கில் 45 மைல் தொலைவில் அமைந்த ஒரு பெரிய பிராந்திய நகரமான ஸஹாரன்பூரில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு, பாபா, தனது அன்புப் பரிசை வழங்க விரும்பினார்; பெண்டு, எரச் இருவரும் வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினர். அவர்கள் 'கம்பெனி பாக்' (தோட்டம்) ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர், அதில், பாபா அமர்ந்து குடும்பங்களுக்குப் பிரசாதம் வழங்குவதற்கு வசதியான ஒரு மண்டபம் இருந்தது.

தோட்டத்தை மேற்பார்வையிட்ட குழுவின் தலைவரை அணுகி, அனுமதி பெறுவது நல்லது என்று எரச் நினைத்தார், ஆனால் பைதூல் அது தேவையில்லை என்று கூறினாலும், எரச் அந்த மனிதரை அணுகியபோது, அவர் மனமுவந்து அதற்கு இணக்கம் தெரிவித்தார். எரச் அதை எழுத்துப்பூர்வமாகக் கேட்டதற்கு, தலைவர், "அது முக்கியமல்ல, அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை? ஆனால் நீங்கள் வற்புறுத்தினால், நாளை வந்து எங்கள் அலுவலகத்திலிருந்து அதிகாரக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார். அதன்படி, மறுநாள் அந்தக் கடிதம் பெறப்பட்டது; பின்னர் 1,001 நுழைவுச் சீட்டுகள் அச்சிடப்பட்டு, ஸஹாரன்பூரில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்த வேலையை முடித்து, எரச், பெண்டு இருவரும் டெஹ்ரா டூனுக்குத் திரும்பிச் சென்றனர்.

விழா நடைபெறுவதற்கு முந்தைய நாள் மாலை, பாபாவின் அனுமதியுடன் எரச் ஸஹாரன்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் மண்டபம் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, தலைவரிடம் சென்றபோது அவர், "நான் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன், தயவுசெய்து உங்கள் நிகழ்ச்சியை வேறு இடத்தில் ஏற்பாடு செய்யுங்கள்; இதை, இந்தத் தோட்டத்தில் நடத்த முடியாது" என்றார்.

"எனக்கு அனுமதி கடிதம் கொடுத்திருக்கிறீர்கள்" என்று எரச் எதிர்ப்பு தெரிவித்தார். "தயவுசெய்து இப்போது உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளாதீர்கள். நாங்கள் ஏற்கனவே 1,001 குடும்பங்களை நாளை இங்கு அழைத்துள்ளோம்; இந்த தாமதமான நேரத்தில் ஒரு மாற்றத்தை அவர்களுக்குத் தெரிவிப்பது என்பது இயலாத காரியம்; தவிர, ஏன் இந்தத் திடீர் மாற்றம்?"

"பதினைந்து நாட்களுக்கு முன்னர், இங்கு இந்து, முஸ்லிம்களுக்கு இடையே கலவரம் ஏற்பட்டது," என்று தலைவர் கூறினார், "மேலும் இதுபோன்ற நிகழ்ச்சியின் போது, குடும்பங்களை மண்டபத்திற்கு அழைப்பதானால், வதந்திகள் பரவக்கூடும் என்று குழு உறுப்பினர்கள் அஞ்சுகிறார்கள். நீங்கள் ஏழைகளுக்கு

உதவ விரும்பினால், அனைவருக்கும் முன்பாக ஏன் திறந்த வெளியில் விழாவை நடத்தக்கூடாது? இதற்கு ஏன் மண்டபம் தேவை? என்பது குழுவின் கருத்து."

அவர்களின் தவறான புரிதலால் காலம் வருத்தமடைந்தது. மாயா மீண்டும் தனது கைவண்ணத்தைக் காட்ட ஆரம்பித்துவிட்டாள். அவதார புருஷர் எப்பொழுதும் பல தடைகளுக்கு மத்தியில், தனது பணியை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம். சில நேரங்களில் அவருடைய அன்புப் பரிசைப் பெறுபவர்கள், வழங்குபவரின் நம்பகத்தன்மையை சந்தேகிக்கும் சூழ்நிலைகள் எழுந்தன; இதனால் அவர்களுக்கு விளக்கிக் கூறி, இணங்க வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சில நேரங்களில் பாபா, ஏழைகளின் பாதங்களைக் கழுவி, தலைவணங்கி, அவர்களுக்கு பிரசாதம் வழங்குவதையும் சந்தேகிக்கிறார்கள், ஏனெனில் இதுபோன்ற விஷயங்கள் உலகில் ஒருபோதும் நடந்ததில்லை. "இதிலுள்ள மர்மம் என்ன?" என்பதை அவர்கள் அறிய விரும்பினர். அப்படிப்பட்ட மேன்மைமிகு ஒருவர் தலைவணங்குவதை அனுமதித்தது, அவர்களின் மதத்திற்கு எதிரானது. எதுவாயினும் இது கடவுளிடமிருந்து அடையப்பெற்ற பரிசு, இது போன்ற விஷயங்கள் எப்படி மதக் கொள்கைகளுக்கு இணங்கி இருக்க முடியும்?

எரச் தலைவருக்கு விஷயங்களை விளக்குவதற்கு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார், உரையாடல் மாலை வரைத் தொடர்ந்தது. கடைசியாக அந்த மனிதர், "மெஹர் பாபா தனது பணியைச் செய்ய, அதீத விவேகத்துடன் நம்மிடையே வருவது எங்கள் அதிர்ஷ்டம் என்பதால், எனது சொந்த பொறுப்பில் மண்டபத்தை உங்கள் வசம் ஒப்படைக்கிறேன்" என்றார்.

மறுநாள் காலை பெண்டு, குஸ்தாஜி, எல்சா, கிஷன் ஸிங், குமார், ஹெலன் ஆகியோருடன் பாபா அங்குச் சென்றார். ஒன்பது மணிக்கு பணி தொடங்கியது. வழமையான சம்பிரதாய முறையில் ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கிய பின்னர், ஒவ்வொருவருக்கும் பாபாவின் அன்புப் பரிசாக ரூ 21 வழங்கப்பட்டது. பாபா டெஹ்ரா டூனுக்குப் புறப்பட்டுச் சென்ற பிறகு, குழு உறுப்பினர்களும், தலைவரும் அவரது அடையாளத்தை அறிந்துகொண்டு, தங்கள் முட்டாள்தனத்திற்காக பெரிதும் வருந்தினர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவல் துறையினர் நேரில் ஆஜராகுமாறும், நடவடிக்கைகளை நோட்டமிடுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தனர்.

1953, மார்ச் 27 அன்று பாபா, முழு நாள் உபவாசம் கடைப்பிடித்தார் (அன்று மகாவீர் பிறந்தநாள்) அடுத்த நாள் தொடங்கி, ஏப்ரல் 10ஆம் தேதி வரை, ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு என்ற இடைப்பட்ட உபவாசத்தைத் தொடங்கினார். 10ஆம் தேதி வரை, பெண் மண்டலியும் அவருடன் காலை, மதிய உணவு மட்டும் உண்டு உபவாசத்தில் பங்கெடுத்தனர்.

டெஹ்ரா டூனில் இருந்தபோது, உத்தரபிரதேசத்தில் வாழ்ந்த மற்றுமோர் இறை நாட்டம் மிக்க **சுவாமி பிரேமானந்தா** என்று அழைக்கப்பட்டவர், எதிர்பாராத விதமாக, பாபாவுடன் ஒரு நேர்காணலைக் கோரினார். இதற்கு முன்னர், ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்த அவர், கடவுளைக் கண்டுகொள்ளும் நோக்கத்தில், தனது பதவியைத் துறந்து வாழ்க்கையை அர்ப்பணித்தார். பாபா அவரை உள்ளே வர அனுமதித்தபோது, பிரேமானந்தா பாபாவை தலைதாழ்த்தி வணங்கினார்.

பாபா, "**நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?**" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த பிரேமானந்தா, "உத்தர காசிக்குச் சென்றபோது, நான் உங்களைப் பற்றி கேள்விப்பட்டேன், உங்களை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. உலகப் பற்றுக்கள் அனைத்தையும் துறந்து, உங்கள் ஆன்மீக வழிகாட்டுதலின் கீழ் வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்துள்ளேன்" என்றார்.

"**இங்கேயும், ரிஷிகேஷிலும் பல குருநாதர்களும், ஆசிரியர்களும் உள்ளனர்**" என்று பாபா சுட்டிக்காட்டி, "**என்னிடம் உங்களை வர வைத்தது எது?**" என்று கேட்டார்.

"நீங்கள், என்னை, இறுதி இலக்கை நோக்கி அழைத்துச் செல்ல முடியும் என்று நான் உணர்கிறேன்," என அவர் பதிலளித்தார்.

**"பொருள் ஆதாயம், உடல் துன்பங்களிலிருந்து விடுபட, பொருத்தமான மனைவி அல்லது கணவன் வேண்டும் என்று பலர் என்னிடம் வருகிறார்கள். நீங்கள் ஆன்மீக வழிகாட்டுதலுக்காக மட்டுமே வந்துள்ளீர்கள் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."**

பாபா தொடர்ந்தார், "**நீங்கள் என்னுடன் இருக்க விரும்புகிறீர்கள், ஆனால் அது எளிதானது அல்ல - அதற்கு மிகுந்த தைரியம் தேவை. மேலும் என்னுடன் இருப்பவர்கள் எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும்.**"

"நான் உங்களுக்குக் கீழ்ப்படியத் தயாராக இருக்கிறேன்" என்று ஸ்வாமி பிரேமானந்தா பதிலளித்தார்.

அறைக்கு வெளியே பதினைந்து நிமிடங்கள் அமர்ந்து, பாபா கூறியதை மறுபரிசீலனை செய்யுமாறு அறிவுறுத்தினார். பிரேமானந்தா அவ்வாறு செய்து, அவர் திரும்பி வந்ததும், "உங்களுக்குக் கீழ்ப்படிவதற்கான எனது முடிவில் எந்த மாற்றமும் இல்லை" என்றார்.

பாபா மிகவும் தீவிரமாக அவரை உற்றுநோக்கி, "**ஒரு விஷயத்தை மட்டும் கவனமாக நினைவில் கொள்ளுங்கள். என்னுடன் வாழ்ந்து, முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படிவதை விட, இமயமலையின் பனி படர்ந்த சிகரத்தில் நிர்வாணமாக அமர்ந்து தியானம், ஜபம், தபம் (கடவுளின் நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது) செய்வது எளிது!**" என்றார்.

தொடர்ந்து பாபா கூறினார், "**கவனமாகக் கேளுங்கள். நீங்கள் பின்பற்ற வேண்டிய மூன்று கட்டளைகளை வழங்குகிறேன்: தற்போதைக்கு நீங்கள் எங்கு வேண்டுமானாலும் திரும்பிச் செல்லுங்கள், ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு, தவறாமல் என்னைப் பார்க்க வாருங்கள். இந்த ஒரு மாத காலத்தில் எனது புத்தகங்களையும், செய்திகளையும் படியுங்கள். மேலும் எந்தப் பெண்ணையும் தொடாதீர்கள். செய்வீர்களா?**"

பிரேமானந்தா 'ஆம்' என்றார். "**இன்னுமொரு விஷயம்,**" பாபா மேலும் கூறினார். "**ஒரு மாதம் கழித்து திரும்பி வரும்போது, நீங்கள் தனியாக வாருங்கள்; உங்களுடன் வேறு எவரையும் அழைத்து வர வேண்டாம்.**"

பிரேமானந்தா சம்மதித்து மகிழ்ச்சியுடன் வெளியேறினார். இந்த மூன்று எளிய கட்டளைகளுக்கும் பிரேமானந்தா எந்த அளவுக்குக் கீழ்ப்படிந்தார் என்பதை, பின்பு பார்க்கலாம்.

இந்தக் காலகட்டத்தில், பாபா-தாஸ் நாக்பூருக்குத் திரும்பிச்செல்ல சில நாட்கள் விடுப்புக் கோரினார், மேலும் அவர் 12 நாட்களுக்குப் பிறகு டெஹ்ரா டூனுக்குத் திரும்பி வரவேண்டும் என்ற நிபந்தனையுடன், பாபா அவருக்கு அனுமதி வழங்கினார். 1953, மார்ச் 28 அன்று வெளியேறிய பாபா-தாஸ் துரதிர்ஷ்டவசமாக ஒருபோதும் திரும்பவில்லை. பாபா அவரை இனி ஒரு துறவியாகக் காட்டக் கூடாது என்று விரும்பியதால், அவரது தலை மொட்டையடிக்கப்பட்டு தாடியும் வெட்டப்பட்டது.

அன்றைய தினம், பாபா விரைவில் சந்திக்க இருந்த அவமானத்தைக் குறிப்பிட்டு கூறினார்:

**இந்த அவமானம் வரவேண்டியது அவசியம். என்னை அடித்து, அறைந்து, உதைப்பது போல மண்டலியும் அவற்றை எதிர்கொள்வார்கள். இந்தக் காயங்களின் விளைவாக நான் பின்னர் உயிரைத் துறந்துவிடுவேன். அதைத் தொடர்ந்து இரண்டு விஷயங்கள் நடக்கும்: தோல்வி மற்றும் தயக்கம். என்னை நேசிப்பவர்களின் இதயங்கள் தடுமாறும், ஆனால் நான் எனது மௌனத்தைக் கைவிடும்போது எல்லாம் மாறும். கடவுளின் ஆணைப்படி அவர் அனைத்தையும் செய்வார். இன்று நான் 100 சதவிகிதம் உறுதியாக உணர்கிறேன். கடவுளின் பணியை கடவுளே செய்வார்.**

அன்பைப் பற்றி பேசுகையில், பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**அன்பு கடவுளால் மனிதனுக்கு வழங்கப்பட்ட பரிசு, இந்தப் பரிசு வழங்கப்பட்டால் அது அன்பனைக் கொன்றுவிடுகிறது - உலகைப் பொறுத்தவரை அவர் உயிரைத் துறந்தவர் போலாகி, அவர் தனது அன்பிற்குரியவரில் என்றென்றும் வாழ்கிறார். ஆனால் ஓர் அன்பனைத் தவிர வேறு எவரும் கடந்து செல்ல முடியாத பயங்கரமான பிரிவை அவர்**

**அனுபவிக்கிறார். இந்த அன்பில் ஒருவன் எரிந்தாக வேண்டும். ஆனால் அவனது அவல நிலை பிறருக்குத் தெரிய வந்தால் அது அன்பிற்குரியவரை அவமானத்திற்கு உள்ளாக்கும்.**

சில மாதங்களுக்கு முன்பு, பாபா, கிருஷ்ணாஜியை ஸாவ்னேரிலிருந்து உத்தர் காஷிக்கு அனுப்பி வைத்தார். ஏற்கனவே குறிப்பிட்டது போல், ஆரம்பத்தில் அவர் 'கிருஷ்ண சுவாமி' என்று அழைக்கப்பட்டாலும், பாபாவின் தொடர்பில் வந்த பின்னர் அவர் கிருஷ்ணாஜி என்று அழைக்கப்பட்டார். 1953 மார்ச் இறுதியில், கிருஷ்ணாஜி, பாபாவை சந்திக்க டெஹ்ரா டூனுக்கு வந்தார். மார்ச் 29, ஞாயிற்றுக்கிழமை அவருடன் அனைத்து விஷயங்களையும் விவாதித்த பின்பு பாபா கூறினார்:

**மௌனம் கடைப்பிடிப்பதில் அர்த்தம் எதுவுமில்லை. நான் மௌனம் கடைப்பிடிப்பது எந்த ஒரு மறைமுக நோக்கத்திற்காகவும் அல்ல, மாறாக எனது வெளிப்பாட்டிற்காக. கடவுள் இதை 'உண்மையின் போதனை'யாக அறிந்திருப்பதால் நான் இதைச் சொல்கிறேன். எனது மௌனம் முழு உலகத்துக்கானது. நான் பேசும்போது கடவுள் பேசுவார்; இல்லையெனில், ஆன்மீக சாதனா என்ற முறையில், மௌனத்திற்கு பெரிய மதிப்பு எதுவுமில்லை. மனதை அமைதிப்படுத்த மௌனம் கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். தற்கொலைக்கான எண்ணமும் வேண்டாம். நாம் உயிரைத் துறந்து விட்டோமானால், இறந்து விட்டோம் என்று அர்த்தமாகாது; இந்தப் பௌதீக தளத்திலிருந்து தப்பிப்பதன் மூலம், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் நாம் தப்பிக்க முடியாது.**

**அன்புள்ள கிருஷ்ணா, நாம் காலங்காலமாக என்றென்றும் இருந்தோம், என்றும் அவ்வாறே இருப்போம். எப்படி வாழ வேண்டும், எப்படி இறக்க வேண்டும் என்பதை இன்று நான் உங்களுக்குக் காட்டுகிறேன். நான் இந்த சொற்பொழிவை உங்களுக்கு வழங்குகிறேன், ஏனென்றால் நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன், மேலும் எனது ஆலோசனையை 100 சதவிகிதம் நீங்கள் பின்பற்றினால் மட்டுமே, கடவுளின் அருளால் நீங்கள் விடுதலை அடைவீர்கள். எனவே, கவலைப்பட வேண்டாம். நீங்கள் உலக வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.**

**உலக எண்ணங்கள் இன்னும் ஒருவேளை உங்களைத் தாக்கினாலும், நீங்கள் என் கட்டளைகளை நிறைவேற்றினால், உலக விஷயங்கள் உங்களைத் தொடாது.**

**இந்த நேரத்தில் கயிற்றின் ஒரு முனை என் கையிலும், மறு முனை உங்கள் கையிலும், மூன்றாவது மாயையின் கையிலும் உள்ளது. இந்த சூழ்நிலையில், நீங்கள் ஒன்றைச் செய்ய வேண்டும். ஒரு முனை என் கையில் இருப்பது உங்களுக்குத் தெரிந்ததால், உங்களை நோக்கி கயிற்றை**

இழுக்க முயற்சிக்காதீர்கள். மாறாக, நான் இழுக்கும்போது அதைத் தடுக்காமல் இருப்பது உங்கள் கடமை. நீங்கள் அதை எளிதாக விடுவித்தால் மாயா உங்களை இழுக்கும். நீங்கள் என் பக்கம் திரும்பினால் உங்களை நான் இழுப்பேன். இதன் பொருள் என்னவென்றால் எண்ணங்கள் வரட்டும், ஆனால் கடவுளுக்காகவும், எனக்காகவும், நேர்மைக்காகவும் மட்டுமே இருக்கட்டும், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டாம். அது ஆன்மீக ரீதியில் மிகவும் ஆபத்தானது. ஆனால் கவலைப்பட வேண்டாம், ஏனென்றால் கடவுள் உங்களுக்கு உதவுவார் என்று எனக்குத் தெரியும்.

இந்த மனச்சோர்வு, விரக்தி மற்றும் மாயையின் ஆதிக்கத்தால் விளையும் துன்புறுத்தும் எண்ணங்கள் அனைத்தும் ஆன்மீக கண்ணோட்டத்தில் மிகவும் நல்லது. இது ஒரு திருப்புமுனையாக இருக்கலாம். 'முட்டாள்கள் கோபப்பட மாட்டார்கள், புத்திசாலிகள் கோபப்படுவார்கள், ஆனால் கோபத்தை வெளிப்படுத்த மாட்டார்கள்; திருநங்கைகளுக்கு பாலியல் எண்ணங்கள் வருவதில்லை, துணிச்சலான மனிதர்களுக்கு அத்தகைய எண்ணங்கள் வந்தாலும், அவற்றைச் செயல்படுத்த மாட்டார்கள்' என்று புத்தகங்களில் கூறப்பட்டுள்ளது. உங்களுக்கு அத்தகைய எண்ணங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்; அவற்றை, நீங்கள் தடுக்க முயற்சிக்கக் கூடாது. அவற்றைத் தடுக்க முயன்றால், இருமடங்கு பலத்துடன் மீண்டும் தாக்கும். எனவே அத்தகைய எண்ணங்கள் வந்து விரயமாகட்டும்.

எண்ணங்கள் வருவதை நீங்கள் தடுக்க வேண்டிய தேவையில்லை, ஆனால் அவை செயல்படுத்தப்படக்கூடாது. அப்படியானால் என்னதான் வழி? அவற்றை, செயல்படுத்த வேண்டாம் என்று மட்டும் சொன்னால் போதுமா? நடைமுறை தீர்வுதான் என்ன? சிலர் மீண்டும் மீண்டும் 'நான் கடவுள், நான் பரமாத்மா' என்ற சிந்தனையைத் தூண்டுகின்றனர். ஆனால் இந்த சிந்தனை எவரையும் விடுவிக்க முடியாது. நீங்கள் கடவுளை அனுபவிக்கும் போது மட்டுமே, உங்களை எதுவும் பிணைக்காது; இல்லையெனில், தர்க்கரீதியான வேதாந்த சிந்தனைகள் உங்களை விடுவிக்க முடியாது. எனவே என்ன நடக்கும்? இத்தகைய எண்ணங்களைக் கொண்டவர்கள் மாயையில் மூழ்கி, எதற்கும் கவலைப்படுவதில்லை. அவர்கள் தங்கள் தீய எண்ணங்களை, நடைமுறை செயல்களாக விளைவதற்கு அனுமதித்து, உலக வாழ்க்கை முறையை அனுபவிக்கிறார்கள். ஆனால், பின்னர், இந்த மனப்படிவங்களைச் செலவழிப்பதன் மூலம், புதிய மனப்படிவங்கள் உருவாகின்றன. இதுதான் உலக வழி. வேதாந்திகள் இத்தகைய எண்ணங்களை அலட்சியப்படுத்துவதும், கடவுள் மட்டுமே உண்மையானவர் என்றும், நாம் எதைச் செய்தாலும் அது இறைவனின் விருப்பப்படியே நடக்கும் என்றும்

எண்ணுவதுதான் இதுபோன்ற நிகழ்வுகளுக்குக் காரணம். கடவுளின் விருப்பமின்றி எதுவும் நடக்காது என்பதை நீங்கள் தொடர்ந்து நம்பினால், அது நல்லது. ஆனால் அனுபவம் இல்லாமல் அத்தகைய உறுதியான நம்பிக்கை சாத்தியமில்லை.

எனவே என்னதான் செய்வது? இரண்டு வழிமுறைகள் உள்ளன: முதலில், உங்கள் செயல்களின் அனைத்து விளைவுகளையும் உங்கள் குருநாதரின் பாதங்களில் அர்ப்பணிக்கவும். எண்ணங்கள் செயல்களாக மாறும் தறுவாயில், அதனால் ஏற்படும் விளைவுகளை, குருநாதருக்கு அர்ப்பணிப்பதன் மூலம், நீங்கள் சுதந்திரமாக இருக்க முடியும். நீங்கள் ஆன்மீக ரீதியில் சுதந்திரமாக இருப்பீர்கள். ஆனால் இதுவும் சாத்தியமற்றது அல்லது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அதற்காக நாம் முற்றிலும் நேர்மையாக இருக்க வேண்டும். ஆகவே, இப்போது வேறு ஒரு வழி மட்டுமே உள்ளது, அதுதான் குருநாதரின் கட்டளைகளை 100 சதவிகிதம் பின்பற்றி, மனதில் தோன்றும் எண்ணங்கள் - நல்லது, தீயது எதுவாயினும் அவற்றை செயல்களாக மட்டும் மாற்ற அனுமதிக்காதீர்கள், இதர எண்ணங்களை மனதில் அலைபாயச் செய்வதன் மூலம் அவற்றின் தாக்கத்தைத் தணிவுறச் செய்யுங்கள். குருநாதரையும் அவரது கட்டளைகளையும் நினைத்துப் பாருங்கள். இதுவும் கடினமானது, ஏனென்றால் நீங்கள் உங்கள் சிந்தனையில் மூழ்கியிருக்கும் அந்த நேரத்தில், குருநாதர் மற்றும் அவரது கட்டளைகளைப் பற்றி எண்ணுவது கடினம்.

அப்படியானால் இதற்குப் பரிகாரம்தான் என்ன? ஒன்று செய்யுங்கள்: உங்கள் மனதில் பாலியல் எண்ணங்கள் எழும்போது, அதில் பதிந்திருக்கும் பெண்ணின் சித்திரத்தை அலை போல் ஓட விடாதீர்கள். அதை உற்றுநோக்கி, ‘என்ன அழகான உடல், என்ன அழகான முகம்’ என்று நினைத்துப் பாருங்கள். ஆனால் அந்த உடலின் உள்ளே எவ்வளவு அசுத்தமும் அழுக்கும் உள்ளது - சிறுநீர், மலம், இரத்தம், சீழ், அனைத்து வகையான அசுத்தங்கள்! அவ்வாறு, எவ்வளவுக்கு அதிகமாக நினைக்கிறீர்களோ, அவ்வளவுக்கு அந்தப் பெண்ணின் அழகைப் பற்றிய பழைய எண்ணங்கள் விலகிப் போகின்றன. இந்த அசுத்தங்களைப் பற்றிய எண்ணங்கள் தோன்றும் அடுத்த கணமே, குருநாதரின் நாமத்தை நினைவுகூருங்கள். அவர் உண்மையான குருநாதரானால், நிச்சயமாக உங்களுக்கு உதவுவார்.

அதனால் அதை பற்றி எல்லாம் கவலைப்பட வேண்டாம். காமம், கோபம், பேராசை குறித்த எண்ணங்கள் வரட்டும். அவை வரவேண்டும். நெருப்பு அதன் உச்சத்தை எட்ட வேண்டும், பின்னர் அது படிப்படியாக குறையும். ‘இப்போது, கிருஷ்ணா, இன்னும் சில மாதங்களுக்கு, என்

**அறிவுரைகளை முழுமையாக நிறைவேற்ற நீங்கள் தயாரா?' என்று சொல்லுங்கள்.**

"நான் தயாராக இருக்கிறேன்" என்றார் கிருஷ்ணாஜி.

**நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே இருந்தால், நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். நீங்கள் என்னை யாராக எடுத்துக் கொள்கிறீர்களோ, அவ்வாறு நான் இல்லையென்றாலும், நீங்கள் இன்னும் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்! கடவுள் அதைப் பார்த்துக் கொள்வார். நீங்கள், முழு நம்பிக்கையுடன், என்னை பரிபூரண குருநாதராக ஏற்றுக்கொண்டு, என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், பொறுப்பு உங்களது என்பதற்கு இடமில்லை. எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். ஆனால் என் விருப்பத்தை 100 சதவிகிதம் பின்பற்றுங்கள்.**

**நீங்கள் எனக்கு 100 சதவிகிதம் அல்ல 75 சதவிகிதம் கீழ்ப்படிந்தீர்கள் என்று நான் உணர்கிறேன். எனவே 75 அல்லது 90 சதவிகிதம் அல்ல, 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிவதில் உறுதியாக இருங்கள். 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பது என்பது, எனது அறிவுறுத்தல்களை வார்த்தைக்கு வார்த்தை பின்பற்ற முயற்சிப்பதாகும், அப்போது நீங்கள் முற்றிலும் பாதுகாப்பாக இருப்பீர்கள். நீங்கள் அவற்றைப் பின்பற்றுவீர்களா?**

"ஆம், பாபா." கிருஷ்ணாஜி பதிலளித்தார்.

**"சாது சன்னியாசிகளின் கால்களைத் தொட்டு தலைவணங்கினீர்களா?"**

"அனைவருக்கும் இல்லை, ஆனால் சிலருக்கு."

**"எவராவது உங்கள் கால்களைத் தொட்டார்களா?"**

"நான் விஷ்ணு தத் திகம்பருடைய கால்களைத் தொட்டு வணங்கியபோது, அவரும் எனது கால்களைத் தொட்டு வணங்கினார்."

**நீங்கள் மிகவும் நேர்மையானவர் என்பதால் நான் மிக்க மகிழ்ச்சியாக உணர்கிறேன். நீங்கள் இப்போது சொன்னது எல்லாம், எனக்குத் தெரியும், இதற்காகத்தான் நீங்கள் உத்தர காசிக்கு அனுப்பப்பட்டீர்கள். இப்போது கேளுங்கள், அன்புள்ள குழந்தாய், நான் இப்போதெல்லாம் திரும்பத் திரும்ப எடுத்துரைப்பது போல: நேர்மை ஒன்றுதான் முக்கியமாகக் கருதப்படுகிறது. நீங்கள் மனதளவில் அனுபவித்ததை என்னிடம் நேர்மையாகச் சொன்னீர்கள். ஆனால், பிரியமான குழந்தாய், இதுதான் இருண்ட ஆன்மீக இரவு என்று அழைக்கப்படுகிறது. அந்த நிலையில்தான் இறைவனைத் தேடும் தீவிரம் முற்றிலும் தணிந்து, அவர் ஆன்மீக பாதையில் சோர்வடைந்து, மனச்சோர்வு, ஆர்வமின்மை மற்றும் தோல்விக்கு இரையாக மாறும் நிலை உருவாகிறது.**

நடப்பது என்னவென்றால், நாம், உண்மையில் குருநாதரால் இறையுணர்வை நோக்கி வழிநடத்தப்படும்போது, ஆழ் மனதில் செயலற்ற நிலையில் படிந்திருக்கும் கடந்த கால மனப்பதிவுகள் அனைத்தும் வெளிவருகின்றன. அவை, தம்மை விரயமாக்க அல்லது செலவழிக்கத் துடிக்கும் அந்த நேரமே ஆன்மீக நெருக்கடியின் தருணம். உங்களின் ஜபம், தவம், தியானம் அல்லது மத நடைமுறைகள் எதுவும் அந்தக் கட்டத்தைக் கடக்க உதவாது. குருநாதரின் உதவியும், உங்கள் சுய நேர்மையும் மட்டுமே உங்களை வெற்றிப்பாதையை நோக்கிச் செல்ல வழிவகுக்கும். உங்கள் இடத்தில் இருக்கும் உங்களைப் போன்ற பலர், மிகவும் விரக்தி அல்லது மனச்சோர்வடைந்த நிலையில், எந்த அக்கறையும் இல்லாமல், என்னையும் என் பெயரையும், உங்கள் இலக்கையும் கண்டுகொள்ளாமல் ஆன்மீக அறிவுஜீவிகளாகக் காட்டிக் கொள்கின்றனர். அது ஒரு பயங்கரமான வீழ்ச்சியைக் கொண்டுவரும். இத்தகைய உணர்வு வரும்போது, ஒருவர் ஏதேனும் ஒரு வழியில் தன்னை நடத்தி, முழுமையான மோசடித்தனத்தை கையாள வேண்டிய நிலை உருவாகும்.

உங்களுக்காக மூன்று வழிகள் திறந்திருக்கும்: ஒன்று மாயையில் மூழ்கி, அதன் பலவீனங்களுக்கு சரணடைவது - அதாவது திருமணம் செய்து, சந்ததியைப் பெற்று, நீங்கள் விரும்பியபடி வாழ்வது. மற்றொன்று மனதை முழுமையாக நிர்மூலமாக்குவது. மூன்றாவது பாசாங்குத்தனத்துடன் ஆன்மீக பேர்வழியாக போலி வேடமிட்டு மாயையில் மூழ்கி இருப்பது!

"நான் இரண்டாவது வழியை விரும்புகிறேன்," கிருஷ்ணாஜி கூறினார்.

இதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் நீங்கள் உலக ஈர்ப்புகளுக்கு அடிபணியக்கூடாது. நீங்கள் அவற்றிலிருந்து தப்பிக்க முடியும் என்று நான் அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் நீங்கள் அவற்றைத் தவிர்க்க வேண்டும். அவற்றைக் கண்டு அஞ்சி ஓடி ஒளியக்கூடாது, பதட்டப்படக்கூடாது, அவற்றைக் கடந்து வெல்ல வேண்டும்.

மேலும், எண்ணங்கள் வருவதைத் தடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதே இதன் பொருள். இது மிகவும் முக்கியமான விஷயம். எந்தப் புத்தகத்திலும் இது குறிப்பிடப்படவில்லை. இந்த ஆன்மீக இருளின் ரகசியத்தை என் அன்பர்களுக்காகத்தான் இன்று சுட்டிக் காட்டுகிறேன். நல்ல, தீய அல்லது காம எண்ணங்களைத் தடுக்கக் கூடாது. அந்த எண்ணங்கள் வரட்டும்; மாறாக, அவை வருவதை ஊக்குவிக்க வேண்டும்! பதட்டம் அல்லது மனச்சோர்வடைய வேண்டாம், ஆனால் எண்ணங்களை, செயல்களில் வெளிப்படுத்த மட்டும் அனுமதிக்காதீர்கள்.

அதன் பின்னர் என்ன நடக்கும்? மனதை சுத்தம் செய்ய இந்த மனப்படிவங்களை எந்த விதத்திலாவது செலவிட வேண்டும். இந்தப்

**பிறவியில் அவற்றைச் செலவிடாவிட்டால் அடுத்த பிறவியில் செலவிட வேண்டியிருக்கும். எனவே அவை எண்ணங்களால் மட்டுமே செலவிடப்பட வேண்டும். நாம் ஏற்கனவே கூறியது போல், உடல் செயல்பாடுகள் மூலம் அவற்றைச் செலவழிப்பதானால், புதிய மனப்படிங்கள் உருவாகின்றன. எனவே அவை மனதளவில் மட்டுமே செலவிடப்பட வேண்டும். அவற்றின் தீவிரத்தன்மை விரயமாகும்போது, நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள்.**

**எனவே கவலைப்பட வேண்டாம். நான் உங்களை நேசிக்கிறேன், கடவுள் சித்தத்தால், இந்த சோதனையைக் கடந்து செல்லும் வழியை நான் உங்களுக்காகக் கண்டுகொள்வேன், ஏனென்றால், அது எனக்குத் தெரியும். எனக்குத் தெரியாவிட்டால், நான் உங்களிடம் சொன்னாலும் அல்லது நீங்கள் என்னைப் பின்தொடர்ந்தாலும் உங்களுக்கு எந்த நன்மையும் பயக்காது. எனக்குத் தெரிந்திருந்தால், உங்களை எதிர்கொள்ள வைப்பது எப்படி என்பதும் எனக்குத் தெரியும். அதனால் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்னை 100 சதவிகிதம் பின்பற்றினால் மட்டுமே நீங்கள் சுதந்திரமாக இருப்பீர்கள். மேல்நிலை ஆத்மாக்கள் கூட இதையெல்லாம் கடந்து செல்ல வேண்டியிருந்தது.**

**இப்போது, ஏன் இந்த எண்ணங்கள் வருகின்றன? அவை எங்கிருந்து வருகின்றன? அவை இரவல் வாங்கப்பட்டவை அல்ல, அதே வேளையில் வெளியே எங்கிருந்தோ வந்தவையும் அல்ல. அவை உங்களுக்குள் ஆழமாகப் பதிந்திருந்தவை. இப்போது வெளிவரவில்லை என்றால், வேறு சில வேளைகளில் வெளிப்படும். எனவே நான் மீண்டும் சொல்கிறேன், கவலைப்பட வேண்டாம், நீங்கள் என்னை 100 சதவிகிதம் பின்பற்றினால் சுதந்திரமாக இருப்பீர்கள்.**

பாபா, கிருஷ்ணாஜிக்கு சில அறிவுரைகளை வழங்கி, சில மாதங்களுக்காக, காஷ்மீருக்கு அனுப்பி வைத்தார். கிருஷ்ணாஜி புறப்படுவதற்கு முன்பு, பாபா, அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும் என்று எச்சரித்தார்.

1953, ஏப்ரல் 5ஆம் தேதி சுவாமி சிவானந்தாவைப் பார்க்க கிஷன் ஸிங்கை ரிஷிகேஷிற்கு ஹெலனுடன் காரில் செல்லுமாறு அறிவுறுத்தினார். ஆந்திராவில் பாபாவைச் சந்தித்த யோகி சுத்தானந்த பாரதி தலைமையில் சிவானந்தாவின் ஆசிரமத்தில் 'சமய பாராளுமன்றம்' மாநாடு நடந்து கொண்டிருந்தது. மறுநாளும், பாரதிக்கு கீழ்வரும் செய்தியுடன் பாபா மீண்டும் கிஷனை அனுப்பி வைத்தார்:

**மெஹர் பாபா தனது அன்பையும் ஆசிகளையும் உங்களுக்கு வழங்குகிறார்.**

**இந்த மாநாடுகள், சங்கங்கள் மற்றும் செயல்பாடுகள் ஆன்மீகத்தைக் கொலை செய்கின்றன என்றும், தாடேபள்ளிக்கூடத்தில் கூறியது போல், எப்போதும் உங்களுடன் இருப்பேன் என்று பாபா மேலும் கூறுகிறார்.**

யோகி மீண்டும் பாபாவை சந்திக்கத் துடித்தார். பாபாவின் அனுமதியுடன், கிஷன் 6ஆம் நாள் டெஹ்ரா டூனுக்குத் திரும்பியபோது, பாரதியைத் தன்னுடன் அழைத்து வந்தார். பாபா அவரிடம் சில நிமிடங்கள் ஆலோசனை நடத்தினார். மாநாடு ஒரு 'கேலிக்கூத்து' என்று யோகி ஒப்புக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த பாபா, "**மாநாடுகளால் மனிதகுலத்தை ஒன்றிணைக்க முடியாது; இதயத்தின் விழிப்புணர்வினால் மட்டுமே அதை சாதிக்க முடியும். நான் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல; எல்லா மதங்களும் எனக்குச் சொந்தமானது. வாய்மொழிகள் தோல்வியடைந்துவிட்டன; நான் ஒவ்வொருவருக்கும் அமைதியாக விழிப்புணர்வை அளிப்பவன்.**"

யோகி பாரதி, தம்முடன் சுவிட்சர்லாந்திற்கு வருமாறு பாபாவை அழைத்தார், மேலும், பாபா அவரிடம் அதைப் பற்றி பின்னர் எழுதுமாறும், கோரிக்கையை பரிசீலிப்பதாகவும் கூறினார்.

பாபா, தனது பங்களாவிற்கு மதிய உணவிற்காகச் செல்லவிருந்த வேளையில், சுத்தானந்த பாரதி, பாபாவின் அறையில் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்யலாமா என்று கேட்டார். பாபா அவரை மண்டலியுடன் உரையாடும் அறையில் அமர அனுமதித்தார்.

அவரது தியானத்திற்குப் பிறகு, யோகி, டாக்டர் நீலுவிடம், "பாபா மிகப் பெரிய புனிதர்" என்று கூறினார்.

"மெஹர் பாபா ஒரு புனிதர் அல்ல" என்று டாக்டர் நீலு அவரைத் திருத்தினார். "அவர் எல்லா புனிதர்களுக்கும் மேலானவர்!"

"மெஹர் பாபா என்ன ஆன்மீக பயிற்சிகளைச் செய்கிறார்?" பாரதி விசாரித்தார்.

"அவர் எந்த சாதனாவும் செய்ய வேண்டிய தேவை இல்லை."

"என்ன சொல்கிறீர்கள்?"

டாக்டர் நீலு விளக்கினார், "மெஹர் பாபா அனைத்து அறிவுக்கும் ஆதாரமானவர். அவரிடமிருந்து அனைத்து அறிவும் வெளிப்படுவதால், அவர் அடைய அல்லது அறிவதற்கு எதுவும் இல்லை. இறைவனைத் தேடுபவர்கள் மட்டுமே சாதனாவில் ஈடுபடுகிறார்கள், இறையுணர்வை அடைந்தவர் அல்ல." பாரதிக்கு பாலும் பழமும் வழங்கப்பட்டது. அவர் அன்று மதியம் 2:15 மணிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மாநாட்டின் பிரதிநிதிகளில் ஒருவர் 'ஜி.எஸ்.என்.மூர்த்தி'. கல்கத்தாவில் தத்துவத்தில் டாக்டர் பட்டத்திற்காகப் பயின்று வந்த வேளையில், அவர், டாக்டர் தேஷ்முக்கை சந்தித்தார்; டாக்டர் தேஷ்முக், பாபாவை தரிசனம் செய்யுமாறு மூர்த்தியை ஊக்குவித்தார். பாபாவைச் சந்திக்க பாரதி டெஹ்ரா டூனுக்குச் செல்ல இருந்ததைக் கேள்விப்பட்ட மூர்த்தி, அவருடன் செல்ல முடியுமா என்று கேட்டார். பாரதிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, ஆனால் பாரதியை மட்டும் அழைத்து வரும்படி பாபா சொன்னதாக கிஷன் ஸிங் எச்சரித்தார்.

பாபாவை சந்திக்க பாரதி உள்ளே சென்றபோது, டெஹ்ரா டூனில் மூர்த்தி காரில் காத்திருந்தார். வேறு ஒருவரையும் உடன் அழைத்து வந்ததில் பாபா மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. அவர் மூர்த்தியை உள்ளே அனுமதிக்காமல், இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார், "**அவர் என்னை உண்மையிலேயே நேசிக்கிறார் என்றால், நான் அவரை வேறு எப்போதேனும் அழைக்கிறேன், ஆனால் இப்போது அவர் இங்கிருந்து சென்றாக வேண்டும்**."

இந்தக் காலகட்டத்தில் மெஹர் பாபா போலீசாரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைத்ததாக ஆந்திராவில் வதந்தி பரவியது. அங்குள்ள பாபாவின் அன்பர்கள் மிகுந்த கவலைக்குள்ளாயினர், அவர்களிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. அவர்களின் கவலையைத் தணிக்கவும், அனைத்தும் நன்றாக இருக்கிறது என்று அவர்களுக்கு உறுதியளிக்கும் நோக்கத்தில், பாபா, 1953 ஏப்ரல் தொடக்கத்தில் பதினைந்து நாட்களுக்காக எரச், பெண்டு இருவரையும் ஆந்திராவுக்கு அனுப்பினார்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஆந்திராவிலிருந்து திரும்பி வரும் வழியில் நாக்பூரில் பாபா-தாஸை எரச்சும் பெண்டுவும் சந்தித்தனர். பாபா, அவர் டெஹ்ரா டூனுக்குத் திரும்பி வருவதை விரும்புவதாகத் தெரியப்படுத்தினர்; ஆனால் பாபாதாஸ் மறுத்துவிட்டார். அவரது கீழ்ப்படியாமை மற்றும் பாபாவின் கட்டளையைப் புறக்கணித்ததன் காரணமாக, பாபா அவருடனான அனைத்து வெளியளவிலான தொடர்புகளையும் துண்டித்துவிட்டார், மேலும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டது. பாபா-தாஸ் அப்பாவிகளை ஏமாற்றி, பாபாவின் அனுமதியின்றி மெஹர் பாபாவின் பெயரில் கடன்களை வசூலித்துள்ளார்; இருப்பினும், மெஹர் பாபா, பின்பு பாபா-தாஸால் ஏமாற்றப்பட்டவர்களுக்கு அனைத்து பணத்தையும் திருப்பிச் செலுத்த ஒப்புக்கொண்டார்.



கடவுளைத்
தவிர வேறு
எதுவும்
உண்மை
அல்ல!

கடவுள் மீதான
அன்பைத்
தவிர வேறு
எதுவும்
முக்கியம்
அல்ல!



-அவதார் மெஹர் பாபா